வெளியீடு 30-6-99 Issued 30-6-99

172
2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

C

சனிக்கிழமை, மே 30, 1998 - தொகுதி 59 - எண் 1

Saturday the 30th May, 1998—Volume 59 - No. 1

பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V211,31'N98
N98.59.1
220158

| | பக்கங்கள் |
|---|---|
| 5. விதி 110-ன்கீழ் அறிக்கை-- | |
| (அ) பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் கடந்த ஆட்சியில் ஏற்பட்ட குறைபாடுகள் குறித்து மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரின் அறிக்கை | 9-12 |
| (ஆ) அரசுத் துறைகளிலும் போக்குவரத்துத் துறையிலும் வேலை வாங்கித் தருவதாகக் கூறி முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் புகைப்படங்களோடு விண்ணப்பங்கள் அச்சடித்து தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீதான நடவடிக்கை குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் அறிக்கை | 93-95 |
| 6. கவன ஈர்ப்பு-- | |
| விதி 55-இன்கீழ் அனுமதிக்கப்பெற்று கூட்டத் தொடர் இறுதி நாளன்று அவைமுன் வைக்கப்பெற்ற கவன ஈர்ப்பு அறிக்கைகள் (1 முதல் 56 வரை) | 14 |
| 7. அறிவிப்புகள்-- | |
| (அ) தமிழ்நாடு பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.) | 14 |
| (ஆ) இந்தியக் குற்றவியல் சட்டத்திற்கான திருத்தச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.) | 101 |
| (இ) பத்தாவது காமன்வெல்த் நாடாளுமன்ற சங்க மாநாட்டில் கலந்துகொண்டு பேரவைத் தலைவர் ஆற்றிய கருத்துரைக்குக் கிடைத்த பாராட்டு | 116 |
| 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-- | |
| (அ) தமிழ்நாடு பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமுன்வடிவு, 1998 | 14-93 |
| *மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 14,72-84 |


220158




| | பக்கங்கள் |
|---|---|
| 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--தொடர்ச்சி | |
| (அ) தமிழ்நாடு பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமுன்வடிவு, 1998 --தொடர்ச்சி | |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 15-22,23, 38,50,52, 55,56 |
| திரு. சி. ஞானசேகரன் | 22-28,41-42 |
| *திரு. கே. சுப்பராயன் | 28-36 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 31,53-56 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 37-40,42-44 |
| மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 41 |
| திரு. பி. வெங்கடசாமி | 45-46 |
| திரு. டி. மணி | 46-49 |
| திரு. லா. சந்தானம் | 49-51 |
| திரு. ஐ. கணேசன் | 57-58 |
| திரு. இரா. தாமரைக்கனி | 58-60 |
| திரு. ம. அப்துல் லத்திப் | 61-71 |
| (ஆ) சென்னை மாநகரக் காவற்படை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 95-97 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 95-96 |
| (இ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் நுழையும் இயக்கூர்திகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 97-98 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 97,98 |
| (ஈ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 99-100 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 99-100 |

| | பக்கங்கள் |
|---|---|
| 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--தொடர்ச்சி | |
| (உ) இந்தியக் குற்றவியல் சட்டத்திற்கான திருத்தச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1998 | 101-103 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 101-102 |
| (ஊ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 103,104 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 103,104 |
| (எ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 105-106 |
| மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 105,106 |
| (ஏ) தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 107-108 |
| மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 107,108 |
| (ஐ) தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 | 109-112 |
| மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 109,110,111 |
| திரு. நா. பெரியசாமி | 109-110 |
| (ஒ) தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 | 112-113 |
| மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 112,113 |
| (ஓ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 114-115 |
| மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் | 114,115 |
| 9. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்-- | 116-124 |
| 10. அரசினர் தீர்மானம்-- | |
| பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் | 124 |
| 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 125-126 |




## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :**
பொது. பொது நிருவாகம். இந்திய ஆட்சிப் பணி. மாவட்ட வருவாய் அதிகாரிகள். உள் துறை. நிதி. திட்டம். தொழில்கள். மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை. சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :**
தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி. சட்டமன்றம். தேர்தல்கள். மின்னணு வியல். அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல். விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :**
வருவாய். வருவாய் வாரியம். மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :**
நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. துரைமுருகன் :**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. பகம்பொன் தா. கிருட்டிணன் :**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கா. நா. நேரு :**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :**
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :**
வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம்.

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :**
கால்நடைப் பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**
Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi :**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:**
Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:**
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation.** .. **The Hon. Thiru K.N. Nehru:**
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:**
Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:**
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:**
Handlooms, Textiles and Environmental Pollution Control.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest and Printing** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**
Forest, Cinchona, Stationery and Printing and Government Press.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:**
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:**
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru V. Mullaivendan:**
Information and Publicity, Film Technology and Cinematography Act.

21. **Minister for Animal Husbandry** .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:**
Animal Husbandry.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:**
Social Welfare including Women's and Children's Welfare. Beggars Home. Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme.

23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:**
Adi-Dravidar Welfare. Hill Tribes and Bonded Labour.

24. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**
Tourism and Tourism Development Corporation.

25. **Minister for Khadi** .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:**
Khadi Board. Bhoodan and Gramdan.

26. **Minister for Fisheries** .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:**
Fisheries and Fisheries Development Corporation.



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்
மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

பேரவைத் துணைத் தலைவர்
மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. ரா. சேதுநாதன்
திரு. கு. மனோகரன்
திரு. வ. வேலுசாமி
திரு. சி. ஞானசேகரன்
திரு. நா. பெரியசாமி
திரு. முகம்மது கோதர் மைதீன்

செயலாளர்
திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. இ. சாமிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வி. நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. | திரு. க. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

| | | |
|---|---|---|
| 17. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 18. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 19. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 20. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 21. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 23. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 24. | திரு. க. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 25. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 26. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 28. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 30. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| 31. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| 32. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| 33. | திரு. ர. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 35. | திருமதி இ. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 36. | திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. வி. | .. கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. நத்தம் |
| 19. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |

| | | |
|---|---|---|
| 21. ஆல்பன், டாக்டர் வே. | .. | திருவட்டாறு |
| 22. ஆவுடையப்பன், திரு. இரா. | .. | அம்பாசமுத்திரம் |
| 23. ஆறுமுகம், திரு. தி.ப. | .. | திருச்செங்கோடு |
| 24. ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 25. ஆனந்தன், திரு. பால. | .. | வந்தவாசி (செ.வ.) |
| 26. இரகுமான்கான், திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 27. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. | மேலூர் |
| 28. இராசமாணிக்கம், திரு. பி. | .. | ஒரத்தநாடு |
| 29. இராசன், திரு. வி. பி. | .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 30. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | .. | ஆண்டிமடம் |
| 31. இராமசாமி, டாக்டர் வை. | .. | பண்ருட்டி |
| 32. இராமசாமி, திரு. கே.ஆர். | .. | திருவாடனை |
| 33. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | .. | கம்பம் |
| 34. இராமச்சந்திரன், திரு. சி.இரா. | .. | தொண்டாமுத்தூர் |
| 35. இராமச்சந்திரன், திரு. மா. | .. | திருவோணம் |
| 36. இராமலிங்கம், திரு. ஏ. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 37. இராமலிங்கம், திரு. செ. | .. | திருவிடைமருதூர் |
| 38. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். | .. | பள்ளிப்பட்டு |
| 39. இராமஜெயம், திரு. ந.பூ. | .. | மயிலாப்பூர் |
| 40. இராஜரெட்டி, திரு. ச. | .. | தளி |
| 41. இராஜேந்தர், திரு. டி. | .. | பூங்கா நகர் |
| 42. இளங்கோ, திரு. கோ. | .. | அவினாசி (செ.வ.) |
| 43. ஈஸ்வரன், திரு. ரா. | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 44. உதயசூரியன், திரு. தா. | .. | சங்கராபுரம் |
| 45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. | தஞ்சாவூர் |
| 46. கணேசன், திரு. ஐ. | .. | எடப்பாடி |
| 47. கணேசன், திரு. கே. சி. | .. | ஜெயங்கொண்டம் |
| 48. கருணாநிதி, கலைஞர் மு. | .. | சேப்பாக்கம் |
| 49. கருப்பசாமி, திரு. சொ. | .. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 50. கருப்பண்ண உடையார், திரு. ந. | .. | பாபநாசம் |
| 51. கருப்புசாமி, திரு. டி. | .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 52. கன்னையன், திரு. க. | .. | தொட்டியம் |
| 53. காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. | கிருஷ்ணகிரி |
| 54. காந்தி, திரு. ஆர். | .. | இராணிப்பேட்டை |
| 55. கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 56. கிருஷ்ணன், திரு. எஸ். வி. | .. | நாங்குநேரி |
| 57. கிருஷ்ணன், திரு. சீ. வெ. | .. | வேடசந்தூர் |
| 58. குண்டன், திரு. டி. | .. | உதகமண்டலம் |
| 59. குத்தாலம் பி. கல்யாணம், திரு. | .. | குத்தாலம் |
| 60. குமாரதாஸ், டாக்டர் தே. | .. | கிள்ளியூர் |
| 61. குழந்தை தமிழரசன், திரு. | .. | விருத்தாசலம் |
| 62. கோதண்டம், திரு. ஏ | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 63. கோபால், திரு. பா. | .. | மேட்டூர் |
| 64. கோபு, திரு. சி. | .. | அணைக்கட்டு |
| 65. கோமதி சீனிவாசன், திருமதி | .. | வலங்கைமான் (செ.வ.) |
| 66. கோவிந்தன், திரு. ப. | .. | தாரமங்கலம் |

67. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
68. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
69. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
70. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
71. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
80. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. க. .. ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
87. சின்னப்பா, திரு. வெ. .. திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



89. சுலைமான், திரு. இ.ஜி. .. பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சிகாமணி, திரு. சி. .. திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.வெ. .. திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி ஜெகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
103. செல்லை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
109. சேதுராமன், திரு. ரா. .. திண்டிவனம்
110. சைதை சா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. வெ.த. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ.ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கு.ர.கோ. .. சேலம்-1
126. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
131. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி



135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
136. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
137. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
138. நடராஜன், திரு. த. .. செஞ்சி
139. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
140. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
141. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
145. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
146. பசும்பொன் தா. கிருட்டினன், திரு. .. சிவகங்கை
147. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
148. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
149. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
154. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
157. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
160. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
164. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
166. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
167. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
172. மகேந்திரன், திரு. இரா. .. நாட்றாம்பள்ளி
173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பென்னாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



180. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
181. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
182. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
183. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
184. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
185. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
186. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். அரவக்குறிச்சி
188. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
189. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
190. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
191. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
192. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
193. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
194. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
195. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
196. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
197. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
198. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
199. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
200. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
201. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
202. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

| | | |
|---|---|---|
| 203. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 204. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 205. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 206. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 207. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 208. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 211. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 212. வல்லரசு, திரு. பி.என். | .. | உசிலம்பட்டி |
| 213. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 214. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 215. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 217. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 218. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 221. வெங்கடேசன், திரு. ச. க. | .. | மதுராந்தகம் |
| 222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 223. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 225. வேணு, திரு. இ. | .. | கும்மிடிப்பூண்டி |
| 226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 227. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 228. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 229. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 230. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 231. வைத்தியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 234. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வைகாசி 16, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2029

## 1998 மே 30, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

*"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்*
*களைகட் டதனொடு நேர்."*

கொலை முதலிய கொடுமைகள் புரிவோரை, ஓர் அரசு தண்டனைக்குள்ளாக்குவது பயிரின் செழிப்புக்காகக் களை எடுப்பது போன்றதாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்

விதி 51-ன் கீழ் உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாதவையாக மாற்றப்பெற்று அவைமுன் வைக்கப்பெற்றவை@ [பட்டியல்கள் பன்னிரெண்டாவது முதல் பத்தொன்பதாவது வரை]

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

## 2. தகவல் கோரல்

**(அ) தமிழக முதல்வர் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளித்த விருந்தில் பா.ம.க.-1 புறக்கணிப்பு எனத் தவறாகச் செய்தி வெளியிட்ட பத்திரிகைமீது நடவடிக்கை கோருதல்**

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

---

@ 127 முதல் 868 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

(திரு. சி. ஞானசேகரன், திரு. ஜி. பழனிச்சாமி மற்றும் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் எழுந்து நின்றனர்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்கள் ஏதோ சொல்ல விரும்புகிறார்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விருந்து அளித்தபோது, பாட்டாளி மக்கள் கட்சி-I என்ற முறையிலே, நாங்கள் 3 சட்டமன்ற உறுப்பினர்களும் அந்த விருந்தில் கலந்துகொண்டோம். ஆனால் ஒருசில பத்திரிகைகள் நாங்கள் புறக்கணித்ததாகச் செய்தி வெளியிட்டிருக்கின்றன. அந்தப் பத்திரிகைகள்மீது உரிமைப் பிரச்சினை எழுப்ப வேண்டும். அத்துடன் இதுபோல சில தவறான தகவல்களை, நல்ல தலைசிறந்த பத்திரிகைகள் போடுவது சரியா? எங்களுடைய உணர்வுகளை இந்த மாமன்றம் மதித்து இதற்குத் தகுந்த நீதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய கணேசன் அவர்கள் எழுப்பியதைவிட பெரிய உரிமைப் பிரச்சினையை நான் எழுப்ப வேண்டியிருக்கிறது. ஏனென்றால், நேற்றையதினம் விருந்து அளித்தது நான். ஆனால் ஒரு பத்திரிகையில் கவர்னர் எனக்கும் உறுப்பினர்களுக்கும் விருந்து அளித்ததாக வெளியிட்டிருக்கிறார்கள். அதே பத்திரிகையிலேதான் நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சி-I கலந்துகொள்ளவில்லை என்றும் வெளியிட்டிருக்கிறார்கள். இதெல்லாம் பத்திரிகைச் சுதந்திரம் என்று விட்டுவிட வேண்டியதுதான்.

## 3. உரிமைப் பிரச்சினை

**உரிமைக் குழுவிற்கு விடப்பட்ட பிரச்சினையில் தனக்கு ஆதரவாகச் செயல்படவில்லை என்று ஒரு சட்டமன்ற உறுப்பினர் உரிமைக் குழுவில் உறுப்பினராகவுள்ள மற்றோர் உறுப்பினரை அச்சுறுத்தியது**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே புதிய தமிழகத்தினுடைய தலைவர், கயத்தாறு ஊராட்சி ஒன்றியத்தில் மனு வாங்கப் போனபோது அவர்களுக்கு அந்த ஊராட்சி ஒன்றியத்திலே அனுமதி இல்லை என்று மறுக்கப்பட்டதாக ஓர் உரிமைப் பிரச்சினையைத் தங்களிடம் கொடுத்தார். அது உரிமைக் குழுவிற்கு விடப்பட்டு, குழு விசாரித்துச்





சில ஆதாரங்களுடன் நேற்று அறிக்கை சட்டமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் நம்முடைய சட்டமன்றப் பேரவைத் தலைவருடைய அறையிலே மாண்புமிகு உறுப்பினராக இருக்கக்கூடிய திரு. நா. பெரியசாமி அவர்களை அச்சுறுத்துவது போன்றும், மிரட்டுவது போன்றும், தனக்குச் சாதகமாகப் பேசவில்லை, கருத்துக்கள் சொல்லவில்லை என்பதால் தகாத வார்த்தைகளால் ஏசியிருக்கிறார். எங்கள் உறுப்பினர் உரிமைக் குழுவில் உறுப்பினராக இருப்பதால், உரிமைக் குழுவிற்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லி தன்னுடைய கடமையைச் செய்திருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, அந்த உரிமைப் பிரச்சினைபற்றி, முழுமையாகப் படித்தார்கள். ஒவ்வோர் உறுப்பினரும் ஒவ்வொரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தகாத வார்த்தையிலே, மிரட்டுகின்ற வகையிலே, இன்னும் சொல்லப்போனால், அவர் ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற தகுதிக்கு மாறாகப் பேசக்கூடிய அளவில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்னுடைய அறையில் இருந்தபோது நானே சொன்னேன், கண்டித்துச் சொல்லியிருக்கிறேன்; இதுமாதிரி நீங்கள் நடந்துகொள்ளக்கூடாது என்று கண்டித்திருக்கிறேன். எனவே இதைப் பெரிதுபடுத்த வேண்டாம், அப்படியே விட்டுவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அப்போதே, அங்கேயே சொல்லிவிட்டேன். சக உறுப்பினரிடம் இப்படி நடந்து கொள்ளக்கூடாது என்று கண்டித்து இருக்கிறேன். இதோடு விட்டுவிடுங்கள், டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கயத்தாறு ஒன்றியத்தில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதைப் பற்றிப் பேசுகிறீர்கள்?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் எழுப்பிய பிரச்சினை பற்றி....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையைப் பெரிதுபடுத்த வேண்டாமெனச் சொல்லிவிட்டேன். எனவே உட்காருங்கள்.

(உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி நின்று கொண்டிருந்தார்.)

## 4. விதி 111—ன்கீழ் அறிக்கை

### 20-3-1998 ஆம் தேதியன்று துணை வினாவிற்கு அளித்த விடைக்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் திருத்த அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 111-ன்கீழ் திருத்த அறிக்கை, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 111-ன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றைத் தங்கள் அனுமதியோடு பேரவைமுன் வைக்கிறேன்.

*முற்பகல் 9-35*

*20-3-1998* ஆம் நாளன்று திரு. உ. திசைவீரன் அவர்களது வினா எண் 6434-க்கான துணை வினாக்களுக்கு, சட்டமன்றப் பேரவையில் விடையளிக்கும்போது, 'இந்த ஆண்டு ஏறத்தாழ 40,000 வீடுகளுக்கு மேல் கட்டக்கூடாது என்ற அளவுக்கு அவர்கள் ஒதுக்கீட்டைக் குறைத்திருக்கிறார்கள்; இதன்னியில், ஏற்கெனவே கட்டப்பட்ட வீடுகள் பழுதடைந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்தபோது, அவர்களுக்குச் சொந்தமாகக் கொடுத்துவிட்டபிறகு அதிலே மீண்டும் அரசு தலையிடக்கூடாது என்ற அளவுக்கு மத்தியிலிருந்து ஒரு தகவல் வந்தது' என விடையளித்திருந்தேன்.

மேற்காணும் வரிகளுக்குப் பதிலாக, "இந்த ஆண்டு (1997-98) இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் மாநில அரசு எடுத்துக் கொண்ட வீடுகளின் எண்ணிக்கை 56,234. இந்த ஆண்டில் (1997-98) மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கட்டக்கூடிய வீடுகள் எண்ணிக்கை 49,454 ஆகும். கூடுதலான வீடுகள் கட்டுவதற்கான கூடுதல் தொகை மத்திய அரசிடமிருந்து கோரப்பட்டுள்ளது." எனும் வரிகள் இடம் பெறலாம் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஓர் அமைச்சர் பேரவை விதி 111-ன்கீழ் திருத்த அறிக்கை அளித்துக் கொண்டிருக்கும்போது உறுப்பினர் நின்றுகொண்டு இடையூறு கொடுக்கக்கூடாது. முதலில் சபையில் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று தெரிந்து கொள்ளுங்கள், உட்காருங்கள்.



## 3 உரிமைப் பிரச்சினை - தொடர்ச்சி

### உரிமைக் குழுவிற்கு விடப்பட்ட பிரச்சினையில் தனக்கு ஆதரவாகச் செயல்படவில்லை என்று ஒரு சட்டமன்ற உறுப்பினர் உரிமைக் குழுவில் உறுப்பினராகவுள்ள மற்றோர் உறுப்பினரை அச்சுறுத்தியது—தொடர்ச்சி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** Point of order. அவையில் நேற்று வைக்கப்பட்டிருக்கிற உரிமைக் குழுவின் முடிவு பற்றி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பழனிசாமி பேசும்போது நான் சொல்லிவிட்டேன். எனது அறையில் நான் அவர்கள் இரண்டு பேரையும் சமாதானப்படுத்திவிட்டேன். பிரச்சினையைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்றும், அதோடு விட்டுவிடுங்கள் என்றும் நான் சொல்லிவிட்ட பிறகும், நீங்கள் மேலும் இதில் விவாதம் செய்வது நல்லதல்ல, உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் அதைப்பற்றி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் என்ன Ruling கொடுத்தேன் என்று பாருங்கள். நான் தீர்ப்பு சொன்ன பிறகு, டாக்டர் கிருஷ்ணசாமி இதோடு அந்தப் பிரச்சினையை விட்டுவிடுவதுதான் நல்லது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள், தங்கள் அறையில் ஏற்பட்ட ஒரு பிரச்சினையை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்றும் சொன்னார். அதன்மீது நீங்கள் தீர்ப்பு வழங்கிவிட்டீர்கள். தாங்கள் தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகு மீண்டும் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் இதை எழுப்புவதற்கு இந்த அவையில் அவருக்கு உரிமையில்லை; அது சரியுமல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள், உங்கள் உரிமை மீறல் பற்றி எப்படிச் சொல்கிறீர்களோ அப்படி எனக்கும் இதில் ஓர் உரிமைப் பிரச்சினை இருக்கிறது. நான் இந்த இருக்கையில் உட்கார்ந்து ஒரு தீர்ப்பளித்துவிட்ட பிறகு அதன்மீது நீங்கள் விவாதம் நடத்தினால் அது என் உரிமையை மீறுவது மாதிரி இருக்கும். உட்காருங்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, இப்போது கிருஷ்ணசாமி எழுப்ப விரும்புவது நம்முடைய பழனிசாமி

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மே 30]

அவர்கள் பேசிய பிரச்சினை பற்றியது அல்ல என்று நான் கருதுகின்றேன். அது தங்களுடைய அறையில் நடந்தது. அதுபற்றி இங்கே பேசப்பட்டு, முடிவுற்று இருப்பதாகக் கருதுகின்றேன். வேறு ஏதாவது பிரச்சினை, அதாவது ஏற்கெனவே இங்கே தரப்பட்ட உரிமைப் பிரச்சினை பற்றிய குழுவின் அறிக்கை மீது, ஏதாவது அவர் பேச விரும்பினால், அதை அவர் பேசுவதற்கு, அவையில் மரபு உண்டென்றால், தாங்கள் அனுமதிக்கலாம். என்ன பேசுகிறார் என்பதை அறிந்துகொண்டு, அவர் பேசியது முறையற்றது, தேவையற்றது என்று தாங்கள் கருதினால், பிறகு அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடலாம். அப்படியில்லாமல், தேவையில்லாமல் இருவரும் நீண்டநேரம் விவாதம் செய்து கொண்டிருப்பது அவையின் நேரத்தைத்தான் வீணாக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுவும் கூட, பேரவை விதி 229-ன்படி அவர் ஓர் அறிவிப்புக் கொடுத்து, அதற்குப் பிறகுதான் எடுத்துக் கொள்ளமுடியும். அதையும் அவர் தரவில்லை. (குறுக்கீடு) என்ன சொல்ல வருகிறீர்கள்? சொல்லுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** முதலிலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பழனிசாமி, காலையில் அறையில் நடந்த விஷயத்தைப் பற்றி—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள்? திரு பழனிசாமி பேசியது பற்றிய விஷயம் அல்லாத வேறு ஏதாவது பேசினால் அனுமதிக்கலாம். அதுவும்கூடச் சரியாக இல்லையென்றால் நீக்கிவிடுங்கள் என்றுதானே சொன்னார்கள். நீங்கள் அதையே பேசுகிறீர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் வேறு ஒன்றும் சொல்லவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரிடமிருந்து சில அடிப்படையான விஷயங்களை எதிர்பார்த்தேன். அந்த நம்பிக்கையிலேதான் கேட்டேனே தவிர, வேறு ஒன்றும் அல்ல. வேறு ஏதாவது கட்சி உறுப்பினராக இருந்தால் அது வேறு பிரச்சினை. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி என்பது சமுதாய நீதிக்காக இருக்கக்கூடிய கட்சி என்ற அடிப்படையில் பெரியசாமி அவர்களிடத்தில் கருத்தை எதிர்பார்த்தேன்; அதை இன்னும் வலுவாக எதிர்பார்த்தேன். வேறு ஒன்றும் இல்லை. வேறு யாரிடமிருந்து எதிர்பார்க்க முடியும்? அடுத்தது இந்த உரிமைக் குழுவில் நான்தான் complaint கொடுத்திருக்கிறேன்.



[1998 மே 30]

**திரு. நீ. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் எதிர்பார்ப்பது என்பது வேறு. குழுவில் உண்மையைச் சொல்வது என்பது வேறு. சட்டமன்ற உறுப்பினர் கொடுத்த புகாரின் அடிப்படையில், தாங்கள் குழுவிற்கு அனுப்புகிறீர்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், குழு உறுப்பினர்களாக இருக்கும்போது அவர்கள் தார்மீகமான முறையில், அதிலே தங்களுடைய கடமையை ஆற்ற வேண்டும். அப்படி ஆற்றினால்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் குழுவில் இருப்பதற்குப் பொருத்தமாக இருக்கும் என்பதோடு, பயமின்றிச் செயல்படுவதற்கும் ஒரு வாய்ப்பை உருவாக்கும். அந்த வகையில்தான் மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி செயல்பட்டிருக்கிறார். அதிலே தனது கருத்துக்களையும் வழங்கியிருக்கிறார். அப்படி கருத்துக்களைச் சொல்லும்போது அதில் பிரச்சினை வந்தால் தாங்கள்தான் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அவர் சொல்வது என்ன? ஒரு மனிதன் வேட்டி கட்டிக்கொள்வதைப் பற்றி, சட்டை போட்டுக் கொள்வதைப் பற்றி, துண்டு போட்டுக்கொள்வதைப் பற்றியெல்லாம் கொச்சைப்படுத்திப் பேசுவது என்பது உண்மையிலேயே இதை உரிமைக் குழுவுக்கு அனுப்பவேண்டிய அவசியத்தை ஏற்படுத்திவிட்டது. இதை உரிமைக் குழுவிற்குத் தாங்கள் அனுப்ப வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இது எங்களைப் பெரிதும் பாதித்திருக்கிறது; எங்கள் கட்சியை பாதித்திருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையை உரிமைப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் மீண்டும் தங்களை வலியுறுத்துகிறேன்.

முற்பகல் 9-10

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினரான நான் பாதிக்கப்பட்டு இருக்கிறேன் என்று உரிமைக் குழுவுக்கு ஒரு புகார் செய்திருக்கிறேன். அதில் என்னைக்கூட விசாரிக்காமல் ஓர் ஆணையத்தின்—மாணிக்கம் கமிஷன் என்ற அந்த ஆணையத்தினுடைய கருத்துக்களை மட்டும் ஏற்றுக்கொண்டு, ஏதோ அந்தப் பஞ்சாயத்து அலுவலகத்தினுடைய பூட்டை உடைக்க நான்தான் முற்பட்டேன் என்று ஆணையம் சொன்ன கருத்துக்களையே நீங்களும் அப்படியே திருப்பி எழுதி, அது பத்திரிகையில் டாக்டர் கிருஷ்ணசாமி பூட்டை உடைக்க முற்பட்டார் என்பதுபோல ஒரு சித்தரிப்பு வந்திருக்கிறது. அது என்னை மீண்டும் ஒரு குற்றவாளி ஆக்குவதுபோன்ற ஒரு தோற்றத்தை அளித்திருக்கிறது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. ஏன் என்னை விசாரிக்க அழைக்கவில்லை?

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு பிரச்சினையை அவை உரிமைக் குழு எடுத்துக்கொள்ள நேரிட்டாலும், ஏற்கெனவே உள்ள விவரங்களை வைத்து, குறிப்புகளை வைத்து, ஆதாரங்களை வைத்து, எந்தவகையான ஒரு முடிவு எடுக்கப்படுமானாலும் அது யாரையும் பாதிக்காது என்ற அடிப்படையிலேயும், வேறு யாரேனும் பாதிக்கப்பட்டு இருந்தாலும் அந்தப் பாதிப்புக்கு என்ன பரிகாரம் என்ற முறையிலேயும் ஆலோசனை வழங்குவதுதான் அவை உரிமைக் குழு மேற்கொள்கிற முறை. எப்பொழுதேனும் சட்டமன்ற உறுப்பினருடைய உரிமை, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் பாதிக்கப்பட்டுவிடுமானால், அந்தப் பிரச்சினைதான் அவை உரிமைக் குழுவால் மிகத் தீவிரமாகக் கருதப்படும். மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்துக்களுக்கு முழு உடன்பாடு இல்லாத, மாறான பல கருத்துக்கள் மற்றத் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டு, ஒரு விசாரணைக் கமிஷன் அறிக்கையும் கிடைத்து ஏறத்தாழ அந்த அறிக்கையிலே சட்டமன்ற உரிமைக் குழு மாறுபடுவதற்கு வாய்ப்பில்லை. நேரடி விசாரணை நடத்துகிற குழு அல்ல, அவை உரிமைக் குழு. இது அவையின் நடவடிக்கையைப் பொறுத்ததாக இருக்குமானால் நேரடி விசாரணைகூட நடத்தலாம். இது வெளியிலே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைப் பற்றி சட்ட அடிப்படையில் எந்த நியாயம் வழங்குவது என்பது பற்றிக் கருதப்பட்டு, அந்தக் கமிஷன் அறிக்கை ஒரு விவரத்திற்காகத் தரப்பட்டிருக்கிறதே தவிர, அந்தக் குழு அறிக்கையை ஆதரித்து எந்த முடிவையும் இந்த அவை உரிமைக் குழு எடுக்கவில்லை. டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொல்லக்கூடிய பிரச்சினையில் சற்று ஏற்றத்தாழ்வுகள் இருக்கலாம். அதுபற்றியெல்லாம் ஆய்வு செய்யக்கூடிய வாய்ப்பு அவை உரிமைக் குழுவிற்குக் கிடையாது. டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொல்வதையும் முழு உண்மை என்று எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமையும் அவை உரிமைக் குழுவிற்குக் கிடையாது. இருக்கிற பிரச்சினையில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒன்றிய அலுவலர்களுக்குமிடையில் ஒரு நல்ல உறவை ஏற்படுத்துவதற்கு என்ன விதிமுறைகளைக் கொண்டுவரலாம் என்பது பற்றி அரசு ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகத்தான் இந்த அவை உரிமைக் குழு கருத்துத் தெரிவித்திருக்கிறது. யாரையும் குற்றம் சாட்டவில்லை. டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களையும் நான் குற்றம் சாட்டவில்லை. மற்றவர்களையும் குற்றம் சாட்ட அவசியமில்லை.





உரிமைக் குழுவிலே இடம் பெறுகிற உறுப்பினர்கள் கட்சி அடிப்படையிலே பேசிக்கொண்டிருப்பது என்பது அவை உரிமைக் குழுவிற்குப் பொருந்தாது. பொது நியாயங்களுக்குக் கட்டுப்பட்டுத்தான், எந்தக் கட்சி உறுப்பினராக இருந்தாலும் பங்கெடுத்துக்கொள்ள முடியும். அங்கேபோய், தி.மு.க., அ.தி.மு.க. அல்லது இன்னொரு கட்சி என்ற அடிப்படையில் வாதம் செய்வதற்கு அந்த இடத்தை நாம் பயன்படுத்த முடியாது. எதிர்க்கட்சித் தலைவரும், மற்ற உறுப்பினர்களும் எல்லோருமாக நிலைமையை ஆராய்ந்து ஒரு முடிவிற்கு வந்து தெரிவிக்கப்பட்ட கருத்து இது. இதிலே டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களை குற்றம் சாட்டுகிற கருத்து அவை உரிமைக் குழுவால் தெரிவிக்கப்படவில்லை என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னவர் அவர்கள் போதிய விளக்கம் அளித்துவிட்ட காரணத்தால், மேலும் இது குறித்து நான் எதுவும் சொல்வதற்கில்லை. திரு. ஜி. பழனிசாமி அவர்கள், டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்மீது கொடுத்த அந்த உரிமை மீறல் பிரச்சினையை வலியுறுத்துகிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதை வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களின் கோரிக்கையை ஏற்று, இந்தப் பிரச்சினை உரிமைக் குழுவிற்கு விடப்படுகிறது.

## 5. விதி 110-ன் கீழ் அறிக்கை

**(அ) பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் கடந்த ஆட்சியில் ஏற்பட்ட குறைபாடுகள் குறித்து மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரின் அறிக்கை**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை விதி 110-ன் கீழ் அறிக்கை ஒன்றை அவையில் அளிப்பதற்கு மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

[1998 மே 30

*மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 110-ன்கீழ் கீழ்க்கண்ட விவர அறிக்கையை அவைக்கு அளிக்கின்றேன்:

**விவர அறிக்கை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக அரசு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் பயன் இரண்டு பெண் குழந்தைகளுக்கும் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் 1997-98 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் திருத்திய முறையில் செயல்படுத்தப்படவும், வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள பெண் குழந்தைகளும் பயன்பெற மானியக் கோரிக்கையின்போது அறிவித்தபடி சிறப்பாக இப்புதுத் திட்ட அம்சங்கள் 1997-98 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படவும், அரசாணை (நிலை) எண் 166, நாள் 11-5-1997-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-45)

முந்தைய அரசின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்படி 1992 முதல் ஏப்ரல் 1996 வரை திட்டத்தில் சேரத் தகுதி வாய்ந்த 22,886 பயனாளிகளைக் கண்டறிந்த பின்னர், அரசுக் கணக்கிலேயே இதற்கெனத் தோற்றுவிக்கப்பட்ட நிதியத்தில் கீழே குறிப்பிட்டபடி பணம் முதலீடு செய்யப்பட்டு பாஸ் புத்தகம் வழங்கப்பட்டது. ஆனால் பாஸ் புத்தகத்தில் வரிசை எண் குறிப்பிடப்படவில்லை. எந்தத் தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலும் ரூ.5,000/- முதலீடு செய்யப்படவில்லை. 5,000 ரூபாய் டெபாசிட் செய்ததற்கான எந்தவித ஆதாரமும் அந்த பாஸ் புத்தகத்தில் இல்லை. ஆனால் தற்போது தமிழ்நாடு போக்குவரத்து நிதி நிறுவனம் மூலம் வழங்கப்பட்டு வரும் வைப்புத் தொகை ரசீது அதாவது 1992-98 வரை பதிவு செய்துள்ள 53,379 பெண் குழந்தைகளுக்கும், டெபாசிட் செய்யப்பட்ட அனைத்து விவரங்களும் உள்ளன. மேலும், இத்திட்டத்தின்கீழ் கடந்த ஆட்சியில் பின்வருமாறு பற்று வைக்கப்பட்டுள்ளது:

1993-94 ஆம் ஆண்டு, கணக்குத் தலைப்பு எண் "8342-120-பிசி", கணக்குத் தலைப்பு பெயர் - பெண் குழந்தை சிறப்பு நிதிக் கணக்கு பற்று வைக்கப்பட்ட தொகை ரூ.3,44,30,000/- ஆகும். 1994-95 ஆண்டுக்குக் கணக்குத் தலைப்பு எண் "8342-102-பிஜி", கணக்குத் தலைப்புப் பெயர்-பெண் குழந்தை நலத் திட்டம், பற்று வைக்கப்பட்ட தொகை, 4 கோடி ரூபாய். இது தவறுதலாக வேறு கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. 1995-96 ஆம் ஆண்டுக்குக் கணக்குத் தலைப்பு எண் "8342-103-சிஎக்ஸ்";





கணக்குத் தலைப்புப் பெயர்-பெண் குழந்தை நலத் திட்டம்; பற்று வைக்கப்பட்ட தொகை 1 கோடி ரூபாய். இது தவறுதலாக வேறு கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. அதாவது, இத்தொகைகள் வேறு கணக்கில் தவறுதலாக வைக்கப்பட்டிருக்கின்றன. இத்தொகை எந்தக் கணக்கில் உள்ளது என்றும், அதைச் சீர் செய்து "8342-120-பி.சி" என்ற கணக்குத் தலைப்பிற்கு மாற்றக் கோரி, இயக்குநர், சமூக நலன் அவர்கள் தனது கடிதம் எண் 24099/சிடபுள்யூ 2/97, நாள் 12-5-1998-ன் மூலம் Accountant General-க்கு எழுதி உள்ளார். 11-11-1993 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 309 மூலம் பெண் குழந்தையின் முதல் பிறந்த நாள் அல்லது திட்டத்தில் சேர்ந்தபிறகு வரும் பிறந்த நாள் பரிசாக 800 ரூபாய்ப் பெறுமானமுள்ள தங்கமோதிரம் வழங்க ஆணையிடப்பட்டது. தங்கநகை செய்யும் வியாபாரிகள் மூலம் அதைச் செய்வது, மற்றும் அதற்கான தொகையை அவர்களுக்கு வழங்குவது ஆகியவை சமூக நல இயக்குநர் மூலம் அமல்படுத்தப்பட்டுள்ளன. அரசாணை எண் 9, நாள் 25-1-1996-ன்படி வட்டித் தொகையிலிருந்துதான் மோதிரம் வாங்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் வட்டித்தொகை வரவு வைக்கப்படாததால் பெண் குழந்தை சிறப்பு நிதியிலிருந்து 1,79,69,200 முன் செலவு செய்யப்பட்டிருக்கிறது. மோதிரம் வாங்காமல் இருந்த தொகையான 29,40,800 ரூபாயைத் திரும்ப அரசுக் கணக்கில் செலுத்துமாறு தற்போதைய அரசு, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மொத்தம் 20,183 மோதிரங்கள் வாங்கப்பட்டு 19,437 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது போக, மீதி 746 மோதிரங்களைச் சமூக நல இயக்குநர் ஒப்பந்தப்புள்ளி கோரி அதைப் பெறுவதற்கான கடைசி நாளான 26-6-1997 அன்று 3 மணி வரை ஒப்பந்தப்புள்ளி பெறப்படாததாலும், மறு ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கு ஆறு மாத காலம் ஆகும் என்ற சூழ்நிலையில் அதுவரை மேற்படி மோதிரங்களை திருவல்லிக்கேணி சார்நிலைக் கருவூலத்தில் பாதுகாப்பாக வைக்குமாறு இயக்குநருக்கு 20-8-1997 அரசு வாலாயம் மூலம் ஆணையிடப்பட்டது.

மோதிரங்கள் வாங்கியதில் தமிழ்நாடு நிதி விதிகள் பின்பற்றப்படவில்லை. பின்வருமாறு மோதிரங்கள் வாங்கப்பட்டன:

1993-94 ஆம் ஆண்டில், 19.112 இலட்ச ரூபாய்க்கு மகாலட்சுமி ஜுவெல்லர்ஸ்-ல் வாங்கப்பட்டிருக்கிறது. 1994-95 ஆம் ஆண்டு, 78.30 இலட்ச ரூபாய்க்கு அரிஹரன்ட் ஜுவெல்லர்ஸ்-ல் வாங்கப்பட்டிருக்கிறது. 1995-96 ஆம் ஆண்டு, 64.04 இலட்சம் ரூபாய்க்கு ஜெயின், சுமங்கல் ஜிதேந்திர, சுந்தர், ரங்கர், அசோக் ஆகிய ஜுவெல்லர்ஸ்களிடமிருந்து வாங்கப்பட்டிருக்கின்றன. குழந்தைகளுக்கு 2 கிராம் தங்க மோதிரம்

800 ரூபாய் விலையில் வாங்கி வழங்கப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. 17 மாதிரித் தங்க நகைகளை மதிப்பீடு செய்து பார்த்தபோது, அவை 1.2 கிராம் முதல் 1.6 கிராம் வரைதான் இருந்தன என்றும், அதன் மதிப்பு 475 ரூபாய் முதல் 600 வரை இருந்தது என்றும், அவை தரமுள்ள 22 கேரட் நகைகள் அல்ல என்றும் இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் தங்கமோதிரம் திறந்தவெளிப் புள்ளி கோராமல் நேரடியாக வாங்கப்பட்டிருக்கிறது. இந்தியக் கணக்குத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை 1995-96-ல் (சிவில்) மேற்படி திட்டச் செயல்பாடுகளில் நடந்த தவறுகளைச் சுட்டிக்காட்டி உள்ளார்கள்.

முற்பகல் 9-50

இன்றைய அரசானது, 1997-98 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தை மாற்றியமைத்து, இரண்டு பெண் குழந்தைகளுக்கும் பயன் கிடைக்கும் வகையில், பதிவு செய்யப்படும் 2 பெண் குழந்தைகளுக்குமே தலா ரூ.1,500/-ம், ஒரே பெண் குழந்தையாக இருந்தால், ரூ.3 ஆயிரத்திற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்து நிதி நிறுவனத்தின் 5 ஆண்டுகாலம் வரை வைப்புத் தொகை செலுத்தப்பட்டு குழந்தையின் பெயரிலேயே ரசீது வழங்கப்படுகிறது. இந்த வைப்புத் தொகை தமிழ்நாடு அரசு போக்குவரத்து நிதி நிறுவனத்தில் ஒவ்வொரு 5 ஆண்டிலும் புதுப்பிக்கப்பட்டு, அந்தப் பெண் குழந்தை 20 ஆண்டுகள் நிறைவு அடையும்போது, இந்த வைப்புத் தொகை ஒரு குழந்தையாக இருந்தால் 58 ஆயிரம் ரூபாயும், 2 குழந்தைகளாக இருப்பின் தலா 29 ஆயிரமும், என மாறும் வட்டி விகிதத்திற்கு ஏற்ப அந்த நிதி நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று அரசு உத்தரவிட்டு அதன்படி நடைபெற்று வருகின்றது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடத்திலே, கடந்தகால ஆட்சியில் வழங்கப்பட்ட பாஸ் புத்தகத்தின் ஒரு மாதிரியையும், இப்போது அரசு வழங்குகின்ற நிதி நிறுவனத்தினுடைய ரசீதின் மாதிரியையும் ஒப்படைக்கின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடத்தில் பாஸ் புத்தகத்தின் மாதிரியையும், ரசீதின் மாதிரியையும் அமைச்சர் வழங்கினார்)*

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விதி 110-ன்கீழ் அளிக்கப்படும் அறிக்கையில் விளக்கம் எதுவும் கேட்க முடியாது.





## 2. தகவல் கோரல் - தொடர்ச்சி

### (ஆ) கவன ஈர்ப்புகளுக்கான அறிக்கைகளை அவையில் வைத்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 3 தினங்களுக்கு முன்னர், தாங்கள் இந்த அவையிலே உறுப்பினர்கள் கொடுத்திருக்கக்கூடிய கவன ஈர்ப்பு அறிவிக்கைகளுக்கு 28 ஆம் தேதிக்குள், எல்லாத் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளும் பதில் அளிக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தீர்கள். ஆனால், நான், உடுமலைப்பேட்டை கொங்குராத் டெக்ஸ்டைல்ஸ், சட்டவிரோதமாக, கதவடைப்பு செய்யப்பட்டு 700 தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளது குறித்து, கடந்த 5 ஆம் தேதியன்று ஒரு கவன ஈர்ப்புக்கு அறிவிப்புக் கொடுத்திருந்தேன். 7 நாட்களுக்குள் விதிமுறைகளின்படி கொடுக்க வேண்டிய பதில் இன்றைக்கு 25 நாட்கள் கழித்தும்கூட வரவில்லை. அந்தத் தொழிலாளர்களின் பிரச்சினை அப்படியே இருக்கிறது. இன்று பேரவைக் கூட்டம் முடிய இருக்கிறது. எந்த வகையிலும் எழுப்ப வழியில்லாத ஒரு நிலை, இந்த அதிகாரிகளுடைய நடவடிக்கையால் ஏற்பட்டு இருக்கிறது. நான் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புவது, இந்த அவையில் தாங்களே கட்டளையிட்டீர்கள், 28 ஆம் தேதிக்குள் எல்லா அதிகாரிகளும் உரிய பதிலை இந்த அவைக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று. தங்கள் கட்டளைக்கு அதிகாரிகள் கீழ்ப்படிய மறுக்கிறார்களா? அந்தப் பதில் வந்திருக்கிறதா என்கிற விவரத்தைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே இதுகுறித்து, 28 ஆம் தேதி ஒரு மணிக்குள் துறை சார்ந்த அதிகாரிகள் எல்லாம் அவற்றுக்கான விளக்கங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்று அவையிலே தெரிவித்திருந்தேன். தொடர்ந்து ஒவ்வொரு துறையிலிருந்தும் பதில் வந்து கொண்டு இருக்கிறது. ஆனால் ஒரு சில துறைகளிடமிருந்து இன்னும் விளக்கமும் பதிலும் வரவில்லை. அப்படி அனுப்பி வைக்காத துறைகளை அனுப்பி வைக்க வேண்டும் என்று வலியுறுத்துவதோடு, சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களும், அந்த அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Zero Hour-லே—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Zero Hour முடிந்து, அடுத்த அலுவலுக்கு வந்துவிட்டோம். என்ன விஷயம் என்று நீங்கள் சொல்லவில்லையே!

[1998 மே 30

**திரு. சி. ஞானசேகரன்:** வீரப்பனால் சிறைபிடிக்கப்பட்ட......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நாம் அடுத்த அலுவலுக்கு வந்தாகிவிட்டது. உட்காருங்கள்.

## 6. கவன ஈர்ப்பு

விதி 55இன்கீழ் அனுமதிக்கப்பெற்று கூட்டத்தொடர் இறுதி நாளன்று அவைமுன் வைக்கப் பெற்ற கவன ஈர்ப்பு அறிக்கைகள் @@ (1 முதல் 56 வரை)

## 7. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்ட முன்வடிவு, 1998 (ஆ.மே.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1998) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் [illegible]) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@26-5-1998-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

@@ 869 முதல் 947 வரையிலான பக்கங்களில் இணைப்பு 2 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



1998 மே 30]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமுன்வடிவு பற்றி புதிய தமிழகத்தினுடைய கருத்துக்களை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முதற்கண் இந்த பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் ஒரு கறுப்புச் சட்டம் என்று நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய ஆளுங்கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம், 1976 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட மிசா சட்டத்தை எதிர்த்ததாகச் சொல்லிக் கொள்ளக்கூடிய கட்சி; அதேபோல் மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட தடா சட்டத்தை எதிர்த்து குரல் கொடுத்த கட்சி இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இப்போது அதைவிட படுபயங்கரமான பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தைக் கொண்டுவர இன்று முயற்சி செய்வது ஏன்?

(முற்பகல் 9-55

இந்த பயங்கரவாத தடுப்புச் சட்டம் உண்மையிலேயே பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்டது அல்ல. இந்தச் சட்டம் ஏற்கெனவே ஒடுக்குபவர்களுக்குக் கருவியாகப் பயன்படக்கூடிய வகையில், போலீஸ் கையிலே கிடைக்கின்றபோது, ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட, இஸ்லாமிய சிறுபான்மை மக்களை ஒடுக்குவதற்காகத்தான் பயன்படுமே தவிர, இந்தச் சட்டம் எந்தக் காரணத்தைக் கொண்டும், உண்மையான பயங்கரவாதிகளை வேரறுக்கப் பயன்படாது. இந்தச் சட்டத்தில் பயங்கரவாதிகளைப் பற்றி விவரிக்கின்றபோது யார் பயங்கரவாதிகள் என்பதைப் பற்றி ஒரு தெளிவான விளக்கம் கொடுக்காததே ஒரு முன் உதாரணம் என்று சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். பயங்கரவாதச் செயல் என்று சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள், இந்த பயங்கரவாதச் செயல் என்பதிலே ஒரு தெளிவான விளக்கம் இல்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு ஜனநாயக நாட்டிலே, இதுபோன்ற பயங்கரவாதம் அல்லது தீவிரவாதங்களை கருத்துப் பிரச்சாரத்தின் மூலமாகத்தான் எதிர்கொள்ள வேண்டுமே தவிர, அரசு பயங்கரவாதியாகச் செயல்பட்டு, அரசு பயங்கரவாதச் சட்டத்தைக் கொண்டு வந்து, நிச்சயமாகத் தீர்வு காண முடியாது என்பதற்குக் கடந்த காலத்திலே தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியாவிலே கொண்டுவரப்பட்ட மிசா சட்டமானாலும், தடா சட்டமானாலும், அவைகள் எல்லாம் செயல்படுத்தப்படாமல் போனதன்

காரணங்கள். அவை எல்லாம் முன் உதாரணங்கள் என்பதை நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டத்தைக் கூட, நீங்கள் உண்மையிலேயே ஒரு நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று நான் சொல்ல விரும்பவில்லை. அதாவது மனதார நீங்கள் விரும்பவில்லை என்று நான் கருதுகின்றேன். யாருடைய பயமுறுத்தலுக்கோ, யாருடைய தூண்டுதலுக்கோ, வற்புறுத்தலுக்கோ பயந்துகொண்டுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்றே கூட நான் கருதுகிறேன். 20 ஆண்டுக் காலத்திற்கு முன்பாக 'மிசா' சட்டத்தை எதிர்த்த ஒரு கட்சி, 10 ஆண்டுகளுக்கு முன்பாகக் கொண்டுவரப்பட்ட 'தடா' சட்டத்தை எதிர்த்த ஒரு கட்சி, இன்று தமிழ்நாட்டிலே ஒரு பயங்கரவாதச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமானால், ஏதோ ஆட்சி போய்விடுமோ அல்லது கலைக்கப்படுமோ என்று பயந்துகொண்டு செய்வதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. எனவே, ஜனநாயக அடிப்படையில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய அரசு நிச்சயமாக இந்தச் சட்டத்தைக் கொண்டுவரக்கூடாது என்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீங்கள் குண்டர் சட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். அதேபோல் Bootleggers சட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். ஆனால் அந்தச் சட்டங்கள் எல்லாம் யாருக்கு எதிராகப் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன? சாதாரண ஏழையெளிய மக்களை ஒடுக்குவதற்காகத்தான் இந்த Bootleggars சட்டமும், குண்டர் சட்டமும் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பது தெரியாதா? அப்படியெல்லாம் இருக்கின்றபோது நீங்கள் மீண்டும் ஒரு பயங்கரவாதச் சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலமாக, சாதாரண வெடி மருந்துகளை கிணறு வெட்டுவதற்கு வைத்திருந்தாலும், 'நீ தீவிரவாதியோடு தொடர்பு கொண்டிருக்கிறாய்' என்று அதைப் பயன்படுத்தி சாதாரண மக்களுடைய, இந்த நாட்டிலே ஜாதி மத வேறுபாடுகள் ஓங்கியிருக்கக்கூடிய, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஓங்கியிருக்கக்கூடிய இந்த நாட்டில், எழுந்து போராட்டம் நடத்தக்கூடிய சாதாரண மக்கள் மீதெல்லாம் பொய் வழக்கு போட்டு அவர்களை எலலாம் இந்தப் பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் உள்ளே தள்ளுவதற்கு வாய்ப்பாக இருக்கும். இது நாளை உங்களுக்கு எதிராக - திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராகக் கூடப் பயன்படலாம். இங்கே இருக்கக் கூடிய அனைத்து எதிர்க் கட்சிகளுக்கும் எதிராகக்கூடப் பயன்படுத்தப்படலாம். எனவே இந்தச் சட்டம் யாருக்கு எதிராக வேண்டுமென்றாலும் பயன்படுத்தப்படலாம் என்று இந்தநேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதோடு இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு **என்ற ஒரு கருத்தையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அது என்னவென்றால் Karsar Singh Vs....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உங்களுடைய கருத்தைக் சொல்லுங்கள். ** என்று ** நீங்கள் ** பேசுவது நன்றாக இருக்காது. எனவே அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள். ** என்றால் ** என்று ஆகும். அதைத் திரும்ப வாங்கிக்கொள்ளுங்கள். உங்களுக்குத் திரும்ப வாங்க மனம் இல்லையென்றால், அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** Karsar Singh Vs. State of Punjab-என்ற அந்த வழக்கில் சுப்ரீம் கோர்ட்டில் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய அந்தத் தீர்ப்பில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், State Legislature-க்கு இதுபோன்ற பயங்கரவாதச் சட்டங்களைக் கொண்டுவருவதற்குத் தகுதி கிடையாது என்று சொல்லப்பட்டிருக்கிறது என்பதை இந்தநேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. உச்சநீதி மன்றத்தில் தடா சட்டத்தை அங்கீகரித்துத்தான் அந்தத் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தடா சட்டத்தில் 22-வது பிரிவு செல்லத்தக்கது அல்ல என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, இதுபோன்ற சட்டத்தை மாநில அரசுகள் கொண்டு வரக் கூடாது என்பது அல்ல. இங்கு கிரிமினல் சட்டமாக இருந்தாலும் சரி, சிவில் சட்டமாக இருந்தாலும் சரி, மத்திய, மாநில அரசுகளுக்குச் சட்டம் இயற்ற அதிகாரம் இருக்கிறது.

முற்பகல் 10-00

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** திரு. கண்ணபிரான் அவர்கள் மனித உரிமைகள் சம்மேளனத்தினுடைய தலைவர். அவர் இன்று பத்திரிகையிலே கொடுத்திருக்கக்கூடிய ஓர் அறிக்கையிலேயிருந்து அந்தக் கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவர்கூட இன்று காலையிலே நேரடியாக என்னிடத்திலே போனிலே பேசினார். அதேபோல

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

திரு. கிருஷ்ணய்யர் அவர்களை, நேற்று நான் நேரடியாகச் சந்தித்தபோதும் இதே கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். எனவே, மக்களுக்குப் பயன்படாத, ஏழையெளிய மக்களை ஒடுக்குவதற்காக அல்லது தவறாகப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கக்கூடிய இந்தச் சட்டத்தை அரசு வாபஸ் பெற வேண்டும் என்பதுதான் இந்த மாமன்றத்திலே நான் வைக்கக்கூடிய கருத்து. இந்தச் சட்டம் எதை நினைவூட்டுகிறது என்றால்...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு மீண்டும் தெளிவுபடுத்துகிறேன். அரசமைப்புச் சட்டத்தினுடைய ஏழாவது அட்டவணையில் மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் பொதுவான Concurrent list-ல் முதல் இட்டமாகவே "Criminal Law including all matters included in the Indian Penal Code at the commencement of this Constitution, but excluding offences against laws with respect to any of the matters specified in List I or List II and excluding the use of naval, military or air forces or any other armed forces of the Union" in aid of the Civil Power" இதிலிருந்து நீங்கலாக மற்ற எல்லாவற்றையும் Criminal-லேயும் Civil-லேயும் கிரிமினல் சம்பந்தப்பட்ட சட்டங்களைக் கொண்டுவருவதற்கு நமக்கு அதிகாரம் இருக்கிறது. எனவே, ** என்ற அடிப்படையில் வாதங்களை வைக்க வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மரண தண்டனை விதிக்கக்கூடிய அளவிற்கு இந்தச் சட்டத்திலே இடமளித்திருக்கிறீர்கள். அப்படி...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொலை செய்தால்தான் மரண தண்டனையே தவிர மற்றவற்றுக்கு மரண தண்டனை கிடையாது. மாண்புமிகு உறுப்பினர், அதைப் படித்துப் பார்க்க வேண்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் நிலையங்களிலே போலீஸ்காரர்கள் சாதாரண கைதிகளைக்கூட அழைத்துச் சென்று, கொன்றுவிடுகிறார்களே, இது அதற்கும் பொருந்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது விசாரணைக்குரியது. அதை ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை வைத்துத்தான் நாம் சொல்ல முடியுமே தவிர, மற்றபடி மாண்புமிகு உறுப்பினர் பொத்தாம் பொதுவாகச் சொன்னால், அதற்குப் பதில் சொல்ல முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குற்றம், குற்றத்தினுடைய தன்மையின் அளவைப் பொறுத்துத்தான் தண்டனை. நீங்கள் சீக்கிரமாகப் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பயங்கரவாதம் என்பது தெளிவுபடுத்தப்படவில்லை என்பதுதான். நாளைக்கு இது ஆர்.எஸ்.எஸ்.க்கும் பொருந்தும், இந்து முன்னணிக்கும் பொருந்தும். எல்லோரும் உணர்ந்திருக்கிறார்களா என்பது இப்போது எனக்குத் தெரியவில்லை...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதிலளிக்கும்போது அதிக நேரம் எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதற்காகவும், இதே பிரச்சினைக்கு மாண்புமிகு உறுப்பினர்களும் அதிக நேரம் எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதற்காகவும் What is Terrorrist Act என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.

"With intent to strike terror in the people or any section of the people or to adversely affect the harmony amongst different sections of the people using bombs, dynamite or other explosive substances or inflammable substances or fire arms or other lethal weapons or poisons or noxious gases or other chemicals or by any other substances of a hazardous nature in such a manner as to cause or as is likely to cause death of, or injuries to any person or persons or loss or damage to or destruction of any property." என்று மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே பிரச்சினை என்னவென்றால், இதுபோன்ற பயங்கரவாத தடுப்புச் சட்டங்களைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பிருக்கிறது என்பதுதான் நம்முடைய கருத்து. இதுவரையிலும் சாதாரண சட்டங்களைக்கூட இந்தக் காவல் துறை சரியாகப் பயன்படுத்தவில்லை. நீங்கள் குண்டர் சட்டம், Bootleggers சட்டம் கொண்டுவந்தாலும்கூட, போலீஸ்காரர்களுக்கு விருப்பம் இல்லை.

அவர்களுக்கு வெறுப்பு இருக்கிறது என்றால், அவர்கள் சாதாரண மக்களைத்தான் உள்ளே தள்ளியிருக்கிறார்களே, தவிர வசதி படைத்தவர்களைத் தள்ளவில்லை. எத்தனையோ கள்ளச் சாராய வியாபாரிகளை, பேரல், பேரலாக உற்பத்தி பண்ணக்கூடியவர்களை குண்டர் சட்டத்திலே போடவில்லை, Bootleggers சட்டத்திலே போடவில்லை. 10 ரூபாய், 15 ரூபாய் கூலிக்காக விற்கக் கூடியவர்களைத்தான் குண்டர் சட்டத்திலே, அதேபோல Bootleggers சட்டத்திலே போடுகிறார்கள். ஆகவே, இப்போது என்ன ஆகும் என்றால், இந்த பயங்கரவாத தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு, ஜனநாயக உரிமைகளுக்காக, அடிப்படை உரிமைகளுக்காக, வேலை இல்லை, வேலை கொடு என்று போராடினாலோ அல்லது ஜாதிக் கொடுமைகளை எதிர்த்துப் போராடினாலோ அல்லது தீண்டாமைக் கொடுமையை எதிர்த்துப் போராடினாலோ அவர்கள் மீதுகூட காவல் துறை இதுபோன்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதுபோலவே, இந்த சட்டத்தைக் காட்டி பயமுறுத்தி அவர்களை ஒடுக்குவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. ஏனென்றால், இன்றைக்கு அப்படி குண்டர் சட்டத்தைக் காட்டி அவர்கள் பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல், இந்த பயங்கரவாத தடுப்புச் சட்டம் வந்தது என்றால், அதை Police misuse பண்ணும். அதேபோல, ஒரு Investigation Officer, property-யை attach பண்ணலாம் என்றிருக்கிறது. ஒரு Investigation Officer--ஐப் பார்த்து property attach பண்ணலாம் என்று அந்த Investigation Officer-க்கே வந்து...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான வாதத்தை அடிக்கடி வற்புறுத்திக் கொண்டிருக்கிறார். குண்டர் சட்டத்தை இந்த அரசாங்கம் தவறாகப் பயன்படுத்துகிறது என்று நிச்சயமாகச் சொல்கிறார். நான் சொல்கிறேன் குண்டர் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தவில்லை என்று-ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் குறிப்பிடுவதைப்போல, பெரிய சாராய வியாபாரிகள் சிலபேர் தப்பித்திருக்கலாம். அவர்களுடைய பட்டியலை எங்களுக்குத் தந்தால் அவர்கள்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால், நாங்கள் தவறாகச் செயல்படுகிறோம் என்று மட்டும் மாண்புமிகு உறுப்பினர் குற்றஞ் சாட்ட வேண்டாம் என்று அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.



(முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து திரு. சி. ஞானசேகரன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேசி முடித்து விடுகிறேன் சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, 10 நிமிடத்திற்கு மேல் ஆகிவிட்டது. சரி, ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் தவறான தகவல் கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். அது உண்மை அல்ல. எத்தனையோ பேர் மீது, ஒரே ஒரு சாதாரண வழக்கிலே உள்ளே சென்றவர்கள் மேல் எல்லாம் பொய் வழக்குகள், 3 பொய் வழக்குகள், 4 பொய் வழக்குகள் என்று போட்டு இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்களே. அந்தப் பட்டியலை நீங்கள் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லிவிட்டார்கள் ஆகவே, நீங்கள் உட்காருங்கள், திரு. சி. ஞானசேகரன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. உட்காருங்கள். இன்னும் 10 உறுப்பினர்கள் இதில் பேச வேண்டும்

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன், சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரொம்ப முக்கியமானது. எங்களைப் போன்றவர்கள்தான் கருத்துச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் ஒருவரால்தான் கருத்துச் சொல்ல முடியும் என்று நினைக்கிறீர்களா? எல்லோரும் பேச வேண்டும். இன்னும் 10 பேர் இதில் பேசவேண்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுங்கள். இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு எல்லா வாய்ப்புகளும் இருக்கின்றன என்ற காரணத்தால் ஜனநாயகக் கருத்துக்குக் குரல் கொடுத்து இருக்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டுவரக்கூடாது; வாபஸ் பெற வேண்டும் என்று வலியுறுத்தி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது கொலைக் குற்றம் புரிந்தவர்களுக்குத்தான் மரண தண்டனை என்று இந்தச் சட்டமுன்வடிவில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். கொலைக் குற்றம் புரிந்தவர்களுக்கு நீதிமன்றம் மரண தண்டனை அளிப்பதற்கு ஏற்கெனவே இந்திய அரசமைப்புச் சட்டத்திலே வழி இருக்கிறது. அதன் பிறகு இதற்கு ஒரு தனிச் சட்டமுன்வடிவு எதற்கு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பயங்கரவாதத்தில் ஈடுபடுகிறவர்கள் கொலைக் குற்றத்தில் ஈடுபட்டால் அவர்களுக்கு மரண தண்டனை இருக்கிறது. எனவே கிரிமினல் சட்டம் இருந்தாலும், ஐபிசியிலும் அதுபோன்ற செக்ஷன்கள் இருக்கும். அது போதாது என்பதற்காகத்தான் இதுபோன்ற சட்டங்கள் விரிவாக்கத்தோடும், ஆழத்தோடும், சிறந்த சிந்தனையோடும் சூழ்நிலைக்கு ஏற்ப கொண்டுவரப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமுன்வடிவை, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே எனக்கு முன்னால் பேசிய வணக்கத்திற்குரிய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் இந்தச் சட்டத்தை ஒரு கறுப்புச் சட்டம் என்றே அழைத்து, இது தமிழகத்து மக்களை நசுக்கக்கூடிய, ஒடுக்கக்கூடிய ஒரு சட்டமாக இருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். நாடாளுமன்றத் தேர்தலின்போது தமிழக மக்கள்



எப்படி எல்லாம் மதக் கலவரத்திற்கு ஆட்படுத்தப்பட்டு தமிழகத்தில் பீதி உருவானது, நாம் எப்படித் தேர்தலில் தோல்விக் களத்தைச் சந்தித்தோம் என்பதை எல்லாம் அவர் எண்ணிப் பார்க்க வேண்டும். அமைதியாக இருந்த தமிழகத்தில் சில பேர் மதத்தின் பெயராலோ, அல்லது மொழியின் பெயராலோ அல்லது இனத்தின் பெயராலோ அல்லது ஜாதியின் பெயராலோ கலவரத்தைக் கட்டவிழ்த்துவிட்டு இங்கே அவர்கள் என்ன ஆட்டம் போட்டாலும் அரசு அதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது நிச்சயமாக ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்று அல்ல என்பதை நான் இங்கே ஆணித்தரமாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதிலே மரண தண்டனை என்பது புதிதாக வந்தது என்று சொல்லுகிறார்கள். சாதாரண கொலை வழக்கு என்றாலே கூட அதிலே rarest of rare cases மரண தண்டனை கொடுக்கலாம். ஒரு குடும்பத்திலே யாராவது ஒருவர் பயங்கரவாதத்தைத் தமிழகத்திலே ஊடுருவவிட்டு—கோவையிலே மட்டும் கிட்டத்தட்ட 60 பேர் அங்கே... (மணியடிக்கப்பெற்றது)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of order. சமீபத்தில் கோவையில் நடந்த கலவரம்கூட, அயோத்தியில் நடந்த பாபர் மசூதி இடிப்பினுடைய விளைவுகள்தான் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூடச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். எனவே, இது திட்டமிட்டு நடந்த பயங்கரவாதச் செயல் அல்ல. பயங்கரவாதம் என்பது — ஒரு நோக்கத்தோடு செயல்படக்கூடிய அமைப்புகளின் அணுகு முறைதான் பயங்கரவாதம் என்று சொல்லப்படும். It is a reaction என்று வெள்ளை அறிக்கையில்கூடச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட வேலூரில் நடந்த தேர்தல் நேரப் பொதுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். தஞ்சை கோவில்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது நீங்கள், அவர் பேசியதில்தானே Point of order எழுப்பினீர்கள்? அதை விட்டுவிட்டு வேறு எங்கோ போய்க் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சொக்கர்.

[1998 மே 30

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போது எங்களுக்கு அந்தக் கருத்தோடு உடன்பாடு இருந்தாலும் அல்லது மாறுபட்ட கருத்து இருந்தாலும்கூட அவர் பேசி முடிக்கும் வரையிலும் எங்களுடைய கட்சியின் சார்பில் யாரும் குறுக்கிடவில்லை. அவர் பேசி முடித்த பிறகுதான், அது கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன ஒரு விளக்கத்தின்மீது எங்கள் கட்சி உறுப்பினர் திரு. அழகிரி விளக்கம் கேட்டார். அதுபோல அவருக்கு Point of order-ஓ அல்லது Clarification-ஓ கேட்பதற்கு உரிமையிருக்கிறது. அருள்கூர்ந்து எங்களுடைய உறுப்பினர் பேசி முடிக்கும் வரையில் அவருக்கு வாய்ப்புக் கொடுத்து, அதற்குப் பிறகு மற்றவர்களுக்கு விளக்கம் கேட்கவோ அல்லது Point of order ரெயிஸ் பண்ணவோ நீங்கள், அந்த அளவில், அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் உட்கார்ந்ததால்தான் அவரை அனுமதித்தேன். அவர் உட்காரவில்லை என்றால் அவரை அனுமதித்திருக்க மாட்டேன். நீங்கள் பேசி முடியுங்கள், உங்கள் நேரத்திற்குள்ளே.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, Point of order கேட்ட பிறகுதான் நான் உட்கார்ந்தேன். பல சட்டங்கள் இங்கே தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறபொழுது, இந்திய தண்டனைச் சட்டம், குற்றமுறை விசாரணைச் சட்டம் அல்லது Criminal Law Amendment Act என்று இருக்கக்கூடிய சட்டங்களை வைத்தே நாம் இந்த நிர்வாகத்தை நடத்த முடியாதா, இப்படி திடீரென்று ஒரு சட்டம் தேவையா என்கிற ஒரு கேள்விக் குறியையும் இங்கே எழுப்புகிறார்கள். இதை ஒரு கறுப்புச் சட்டம் என்றும் சொல்கிறார்கள்.

இவ்வளவு சட்டங்களும் தமிழகத்திலே இருந்தன. இருந்தும்கூட, இங்கே பெருந்தலைவர் காமராசர், மாற்றான் வீட்டுத் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று சொன்ன அண்ணா, பிறகு நம்முடைய முதல்வர், புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். போன்றவர்கள் எல்லாம் இந்த நாட்டிலே, தமிழகத்திலே பல்வேறு சீர்திருத்தக் கருத்துக்களைச் சொன்னார்கள். அப்படிச்



சொன்ன பிறகும்கூட, ஜாதியின் பெயராலும், மதத்தின் பெயராலும் இன்னும்கூட கலவரங்கள் வரும் என்று சொன்னால் ஏற்கெனவே இருந்த சட்டங்கள் போதாமல் போன காரணத்தினாலேதான் ஒரு புதிய சட்டத்தை உருவாக்க வேண்டிய ஒரு தர்மசங்கடமான நிலையிலே தமிழகம் இருந்து கொண்டிருக்கிறது.

இதை வைத்துக்கொண்டே சிலபேர், டெல்லியிலே இருக்கிற மகாராஜாக்கள் எப்பொழுது நம்முடைய கழுத்தின் மீது கத்தியை வைக்கலாம் என்று அல்லவா காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏதாவது ஒரு வெடி வெடிக்காதா, வெடி வெடித்தவுடனே இங்கே நாட்டிலே சட்டம்-ஒழுங்கு சரியில்லை என்று சொல்லலாம் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள்; பிறகு ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று சொல்வார்கள் என்பதைப் பற்றியெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதிலே பயங்கரவாதம் என்று சொல்கிறபொழுது அது ஒரு மதத்திற்கு மட்டும் உரியது அல்ல. நிச்சயமாக அது ஜாதிக்கும் உண்டு. அல்லது யாராவது சில ரௌடிகள் சேர்ந்து கொண்டால் அவர்களுக்கும் அது உண்டு. அல்லது வேறு யாராவது மொழிப் பற்றாலே சில பேர் சொன்னால் அவர்களுக்கும் உண்டு, விடுதலைப் புலிகளுக்கும் உண்டு. ஆகவே, சமுதாயத்தைச் சீரழிக்கக் கூடிய எந்தவொரு இயக்கமாக இருந்தாலும் அத்தனை இயக்கங்களும் இந்த இடத்திலே நசுக்கப்பட வேண்டும், அது ஒழிக்கப்பட வேண்டும், வேர் அறுக்கப்பட வேண்டும் என்பதற்காகக் கொண்டு வரப்படக் கூடிய சட்டமாகத்தான் இதைக் கருத வேண்டுமே ஒழிய ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு எதிரானது அல்லது ஒரு குறிப்பிட்ட ஜாதிக்கு எதிராக கொண்டு வரப்பட்டதாக நாம் யாருமே தயவுசெய்து எண்ணிவிடக் கூடாது. அப்படி எண்ணினால் நிச்சயமாக அது தவறான ஒரு பாதைக்குத்தான் நம்மை அழைத்துச் சென்றுவிடும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே எத்தனையோ சட்டங்கள் இருக்கின்றன. "All laws are in existence. Inspite of the fact that we are not able to implement it properly, we are not able to maintain peace" (குறுக்கீடு) தமிழிலேயே பேசிவிடுகிறேன். உண்மையிலேயே சொல்லப்போனால் "தமிழகத்திலே அமைதியை நிலைநாட்ட வந்த சட்டம்" என்றுகூட நாம் மிக அழகாக இதை அழைக்கலாம். நாம் அப்படித்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

[திரு. சி. ஞானசேகரன்] [1998 மே 30

இதிலே சில பாதுகாப்புகள். ஒவ்வொரு சட்டம் இயற்றுகிற பொழுதும் சட்ட நிபுணர்களானாலும் சரி, சட்டத்தை இயற்றக்கூடிய மேதைகளானாலும் சரி, இதிலே பாதுகாப்புகள் - வேண்டுமென்று கூறலாம். அதிலே நமக்கு எல்லா உரிமையும் இருக்கிறது.

இந்தச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படக் கூடாது என்பதிலே அரசு மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஏதோ ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு எதிராகவோ, ஜாதிக்கு எதிராகவோ சில காவல் துறை அதிகாரிகள் நினைத்தால் இதை அவர்கள் சாதித்து விட முடியும்; அவர்கள் எதை நினைத்தாலும் எவர் மீதும் ஒரு வழக்கைப் போட்டு விட முடியும் என்ற ஒரு நிலை இருப்பதைத் தவிர்ப்பதற்காக, அப்படி ஏதாவது ஒரு புகார் வருமேயானால் அதற்காக ஒரு மேல் மட்ட, உயர் மட்டக் குழுவைக்கூட மாண்புமிகு முதல்வரவர்கள் அறிவித்து—அதிலேகூட ஏதாவது பிரச்சினை இருக்கும் என்று சொன்னால், அதிலேகூட—இந்த அரசு ஒரு உயர் மட்டக் குழுவின் மூலமாக அதில் ஒரு தீர்வு காணலாம். அதில் யாராவது ஒரு பொய் வழக்குப் போட அல்லது வேண்டுமென்றே ஏதாவது செய்து அவர்களை ஒடுக்கப் பார்க்கிறார்கள் என்று சொல்கிறபொழுது அதற்கும் நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்களும், இந்த அரசும் நிச்சயமாக பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அதனுடைய கடமையும் ஆகும்.

ஏனென்றால், இந்த சட்டத்தைக் கொண்டு வருகிறபொழுதே இது Draconian Act என்று சொல்லக்கூடிய அளவிற்கு இது மிக மோசமான சட்டம் என்று எல்லோருமே இப்பொழுது சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கறுப்புச் சட்டம் என்றும் சொல்கிறார்கள். அப்படிச் சொல்வதற்கு ஒரு இலக்கணத்தை நம்முடைய காவல் துறை வகுத்து விடக்கூடாது. அதிலே மிகவும் கவனமாக, இது ஒரு சர்க்கஸ்காரன் கம்பி மேலே நடப்பது போல, அவன் எவ்வளவு உஷாராக நடக்க வேண்டுமோ, கீழே விழாமல் எப்படி நடக்க வேண்டுமோ, அப்படி மிகக் கவனமாக நடந்து இந்த நாட்டில் அமைதியை நிலைநாட்ட வேண்டுமென்பது நிச்சயமாக இந்தக் காலத்தில் மிகமிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது. Evidence Act-லே இருப்பதைப் பார்த்தீர்கள் என்றால் ``Any statement to a Police Officer is not admissible in Law". அதை confession ஆக எடுத்துக்கொள்ள முடியாது என்பது சட்டப்படி அனுமதிக்கக் கூடிய ஒன்றாக இருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்திலே ஏதாவது ஒரு போலீஸ் ஆபீசர் முன்னால் ஒரு வாக்குமூலத்தைக் கொடுத்தால் அந்த வாக்குமூலம் It is admissible



1998 மே 30] [திரு. சி. ஞானசேகரன்]

in law என்று இப்பொழுது நீங்கள் கொண்டு வருகிறீர்கள். இதிலேகூட கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். ஒரு வேண்டாத காவல் துறை அதிகாரி, இவர் சொன்ன வாக்கு மூலம்தான் இவை என்று எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, - ஏன் என்றால், Evidence Act 27-வது பிரிவுப்படி ஏதாவது ஒரு பொருளை நாம் கைப்பற்ற வேண்டும், ஒளித்து வைத்திருக்கக்கூடிய பொருளை அவர் மூலமாகப் பெற வேண்டும் என்பதற்காக மட்டுமே-For the purpose of recovery என்பதற்கு மட்டும், அந்த Confession statement, குற்றவாளி கொடுக்கக்கூடிய அந்த ஒப்புதல் வாக்குமூலம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மற்றவற்றிற்கு ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

முற்பகல் 10-15

அந்த வகையிலே, அதே சட்டம்கூடப் போதும். இதுபோன்று பயங்கரவாதத்தை ஒருவர் அதிகமாக, இந்த இடத்திலே பரப்பி, நாட்டிலே சட்டம்-ஒழுங்கைக் கெடுக்கிறார்கள், பல பேர் உயிரை எடுக்கிறார்கள், சமுதாயத்தில் அமைதியைக் குலைக்கிறார்கள் என்றால், அதிலே நிச்சயமாக வேறு சான்றுகள் நமக்கு நிறைய கிடைக்க வாய்ப்புண்டு. (மணியடிக்கப்பெற்றது) அப்படியிருக்கிறபோது, போலீசார் முன்னாலே கொடுக்கக்கூடிய வாக்குமூலத்தை, நாம் ஒப்புதல் வாக்குமூலமாக சட்டத்திலே அனுமதிக்கக்கூடிய ஒன்றாக ஏற்றுக்கொள்வது என்பது நிச்சயமாகத் தேவையில்லாத ஒன்று. அதை வேண்டுமானால் அரசு பரிசீலித்து அதை மட்டும் தவிர்த்து, மற்றவற்றை அப்படியே ஏற்றுக்கொண்டுகூட தமிழகத்திலே அமைதியை நிலைநாட்டுவதற்கு இந்த அரசு கொண்டு வருகின்ற இந்தச் சட்டத்தை வரவேற்பதோடு, கொஞ்சம் பாதுகாப்பையும், - ஏனென்றால் சிறுபான்மைப் பிரிவினர் இதிலே நசுக்கப்பட்டுவிடக்கூடாது, சில தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லது வேறு உயர் ஜாதிக்காரர்களோ இதில் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது. சமுதாயத்திலே இருக்கக்கூடிய எல்லா அனைவருக்கும் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டியது இந்த அரசினுடைய கடமை.

மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி என்று சொல்வார்கள். அதுபோல அரசுக்கு அப்படிப் போனால், கறுப்புச் சட்டம் என்று சொல்வார்கள், இப்படிப் போனால், கவர்ன்மெண்ட் ஒன்றுமே கண்டுகொள்ளவில்லை, இது பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டது என்று சொல்வார்கள். இப்படி இரண்டு பக்கமும் இடிபடக்கூடிய

[திரு. சி. ஞானசேகரன்] [1998 மே 30

அரசாங்கம் மிகவும் கவனமாக இதிலே தன்னுடைய பலத்தை மேற்கொண்டு நீதியை நிலைநாட்டி வேண்டும். சட்டத்தை இந்த இடத்திலே காப்பதற்கு அவர்கள் நடவடிக்கை எடுத்து, அமைதியைத் தமிழகத்திலே நிலைநாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடைப்படுத்த வேண்டும், சமுதாயத்திலிருந்து அதைக் களைய வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமில்லை. பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும், அவற்றை எதிர்த்துச் சமாளிப்பதற்கும் ஒரு வகைமுறை உருவாக்குவதற்காக இந்தச் சட்டம் வருவதாகச் சொல்லப்படுகிறது. நான் மாநில அரசாங்கத்தினுடைய நோக்கத்தின்மீது பழுது சொல்லவில்லை. குறை காணவில்லை. ஆனால், உணர்ச்சி நிலையிலிருந்து மட்டுமே முடிவு எடுப்பது அறிவு நிலைக்குப் பொருத்தமாக அமைந்துவிடுவதில்லை என்பதை மட்டும் நான் மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும், ஒடுக்க வேண்டும் என்ற கொள்கை நிலை நியாயமானதுதான். ஆனால், இங்கே விவாதத்திலேயிருக்கின்ற இந்தச் சட்டம், மாநில அரசின் அந்த நோக்கத்தை நிறைவேற்றப் பயன் தராது என்பதை நான் உறுதிபடத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த பயங்கரவாதம் சமூக வாழ்வில் ஏன் வளர்ந்தது? இன்றைக்கு இந்தத் தீய விளைவுகளை ஏற்படுத்துவதற்கான காரணங்கள் என்ன என்பதைப் பற்றியெல்லாம் விரிவாகப் பரிசீலித்து, அந்தப் பரிசீலனையின் அடிப்படையில் இந்தச் சட்டமுன்வடிவு முன்மொழியப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால், ஒவ்வொரு விளைவும் எதிர்விளைவைத் தோற்றுவிக்கிறது. இது ஒரு எதிர் விளைவு. இந்த எதிர்விளைவை தோற்றுவித்த விளைவு எது என்பதைக் காண இந்தச் சட்டமுன்வடிவு தவறிவிட்டது என்று நான் கருதுகிறேன். அதனால்தான், விளைவுகளைத் தோற்றுவித்தவர்கள் வெகுவேகமாக இந்தச் சட்டத்தை வரவேற்கிறார்கள். இராமகோபாலனிலிருந்து இல. கணேசன் வரை எல்லோரும் வரவேற்கிறார்கள். இவர்கள்தான், விளைவுகளைத் தோற்றுவித்த கர்த்தாக்கள். இவர்கள்தான் தீவிரவாதம்



1998 மே 30] [திரு. கே. சுப்பராயன்]

இந்த மண்ணில் தோன்றுவதற்குரிய களத்தைப் பண்படுத்தி உருவாக்கிய சூற்றவாளிகள். அவர்கள் இன்றைக்கு இவற்றை வரவேற்பதிலிருந்து நாம் பல்வேறு ஆழமான சந்தேகங்களைக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதனால் பயங்கரவாதத்தை எதிர்க்கிற இந்தச் சட்டத்தைப் பற்றி நான் ஒரே வரியில் சொல்ல வேண்டுமானால், இந்தச் சட்டம் அரசியல் ரீதியில் தவறானது; நடைமுறை ரீதியில் அபாயகரமானது. இந்த ஒரு வரியைத்தான் இந்தச் சட்டத்தின்மீது நான் விமர்சனமாகச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் என்ன விளைவுகளை ஏற்படுத்தும்? இந்தச் சட்டத்தின் மூலம் பயங்கரவாதம் தற்போதைய வடிவை மாற்றிக் கொள்ளும். இந்தச் சட்டம் உண்மையில் என்ன விளைவை தமிழ்நாட்டில் ஏற்படுத்துமென்றால், பயங்கரவாதம் இன்றைக்கு என்ன வடிவம் எடுத்திருக்கிறதோ இந்த வடிவத்திலிருந்து அடுத்த கட்டமாக இளக்கமற்ற, இறுகிப்போன ஒரு தீவிர வடிவை எடுக்கவே இந்தச் சட்டம் துணை செய்யும். இது என்னுடைய ஆழமான கருத்து.

என்றைக்குமே வெறும் மறச் சட்டங்களால் மட்டும் அறநெறிகளை நிலைநிறுத்திவிட்டதாக வரலாறு இல்லை. அறச்சட்டங்களும், அறநெறிகளும்தான் மனித சமூகத்தைப் பண்படுத்தியிருக்கிறது. எனவே, மறச்சட்டம் மட்டுமே சமூக வாழ்வை ஒழுங்கமைக்கும், நிலை நிறுத்தும் என்ற கருத்தில் இருந்துதான் இந்தச் சட்டமுன்வடிவு முன்மொழியப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன்.

(முற்பகல் 10-20)

இன்னொரு விஷயத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்து அடிப்படைவாதிகளின் ஆத்திரமூட்டுகிற, மாற்று மத மக்களுடைய மனதில் குரோத, விரோதத்தைத் தோற்றுவிக்கின்ற, தொடர்ச்சியான எதிர்மறைச் செயல்பாடுகளைக் கறாராக ஒடுக்குவதற்குரிய உத்தரவாதம் ஏற்படாதவரை, தீவிரவாதம் இந்த மண்ணில் ஒருபோதும் தோற்றுவிடாது. அதற்குரிய நடைமுறை வேண்டும். அதுபற்றி இந்தச் சட்டமுன்வடிவு அக்கறையோடு கவனித்ததாக எனக்குத் தெரியவில்லை.

அதற்கு அடுத்ததைப் பார்த்தால் பயங்கரவாதம். எது பயங்கரவாதம்? இந்த பயங்கரவாதத்தைப் பற்றி நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்கூட சட்டமுன்வடிவில் இருக்கிற விஷயத்தைச் சொன்னார்கள். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால்,

என்னுடைய கருத்தெல்லாம், பகுதி 1-ல் 'உடந்தை இருத்தல்' என்னும் பிரிவில் செய்தித் தொடர்பு கொண்டிருப்பதை, கூட்டு வைத்திருப்பதை உறுதிப்படுத்தினால் அவர் பயங்கரவாதத்திற்குத் தொடர்பு உள்ளவர். எது செய்தி? யார் உறுதிப்படுத்துவது? தீவிரவாதி போல ஒருவர் ஒரு கடிதம் எழுதினால்கூட, கடிதம் எழுதி எனக்கு போஸ்ட் பண்ணியிருந்தால், அதுகூட, நான் பயங்கரவாதத்திற்கு உடந்தையாக இருந்ததாகச் செய்தி வந்துவிடும். அத்தகைய தவறான முறையில் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு வழி இருக்கிறது. இன்னொரு மிக முக்கியமான விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன்...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் Communication என்று இருப்பதன் அடிப்படையில் சொல்கிறார் என்று கருதுகிறேன். அந்த வார்த்தையை நாங்கள் இப்போது நீக்கிவிடுகிறோம். அதற்கான திருத்தத்தை முன்மொழியவிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வார்த்தையை நீக்குவதற்கு நன்றி. சட்டமே வாபஸ் பெறப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். மாநில அரசு யாரையும் ஒடுக்குவதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததாக நான் கருதவில்லை. ஆனால், விஷயம் என்னவென்று சொன்னால் இன்றைக்கு நம்முடைய Government machinery எப்படியிருக்கிறது? அரசு இயந்திரம், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள், ஜாதிகள், மதங்கள் அடிப்படையில் செயல்படுபவர்களாக இருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைக் கையாளுகிறவர்கள் யார்? ஐ.பி.எஸ்., ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள்தான். இந்த ஐ.பி.எஸ்., ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் ஜாதிச் சிறைகளிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளவேயில்லை. ஜாதியரீதியாக செயல்படுகிற இயல்புக்கு ஆளாகிவிட்ட இந்த அதிகாரிகள் இந்தச் சட்டத்தை நேர்மையாகப் பயன்படுத்தமாட்டார்கள் என்பது முடிந்த முடிவு. ஆகவே, இவர்கள் நேர்மையாகப் பயன்படுத்தமாட்டார்கள், விபரீதம்தான் ஏற்படும். அதனால்தான் இந்த விஷயத்தில் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துகொள்ளக் விரும்புவது, பித்தளைப் பாத்திரத்தில் ஈயம் பூசாமல் மோர்





ஊற்றிவைத்தால் அந்த மோர் கெட்டுப்போகும். நீங்கள், இந்தச் சட்டத்தைக் கையாளக் கொடுக்கிறீர்களே, இந்த அதிகாரிகள், ஈயம் பூசாத பித்தளைப் பாத்திரங்கள். இதை நம்பி நீங்கள் மோரை ஊற்றிவைத்தால் அது கெட்டு விஷமாகிவிடும். ஆகவே, அவர்கள் கையில் இத்தகைய வரம்பற்ற அதிகாரத்தை வழங்கக்கூடாது. வழங்குகிற வாய்ப்பு தவிர்க்கப்பட வேண்டும். அப்போதுதான்...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் பித்தளைப் பாத்திரங்கள் என்றால் அதிலே, இந்தச் சட்டத்தை மாத்திரம் ஊற்றிவைத்தால் அது கெட்டுவிடுமா? ஏற்கனவே இருக்கின்ற சட்டங்கள் எல்லாம்கூட அப்படித்தான் கெட்டுப்போயிருக்கின்றனவா?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லாச் சட்டங்களையும் கெடுக்கின்ற பித்தளைப் பாத்திரம் தான் அதிகாரிகள். அதாவது ஈயம் பூசாத பித்தளைப் பாத்திரங்களாக இருக்கிறார்கள் என்பதை அனுபவத்திலிருந்துதான் நான் சொல்கிறேன். அதிக அதிகாரம் கொடுக்கிற இந்தச் சட்டம், அதிக அளவிற்கு பாதித்துவிடும். இதுவரையிலே ஓரளவு குறைவாக பாதிப்புகள் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன; இனி அதிகமாகும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நேரக் குறைவு கருதி மற்ற விஷயத்திற்குப் போக விரும்பவில்லை. மிக முக்கியமான விஷயத்தைப் பற்றி நான் தெரிந்துகொள்ள விரும்புவது, இந்தச் சட்டம் மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை, 10 இலட்சம் ரூபாய் வரை அபராதம் என்று சொல்கிறது. மூன்று ஆண்டுகள் குறைந்தபட்சத் தண்டனை, அதிக பட்சம் மரண தண்டனை. இதில், பயங்கரவாதிகளை ஒளித்து வைப்பது மட்டுமல்லாமல், ஒளித்து வைக்க முயற்சி செய்கிற செயலே குற்றம் என்று சொல்கிறது. நான் மாநில அரசிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புவது, ஒளித்து வைக்க நான் முயன்றேன் என்று தீர்மானிப்பது யார்? போலீஸ் அதிகாரி. ஒரு மைனாரிட்டி மதத்தைப் பிடிக்காத போலீஸ் அதிகாரி, இவர் அவரை ஒளித்து வைக்க முயன்றார் என்று எழுத்துபூர்வமான அறிக்கை கொடுத்தால், அவர் இந்தத் தண்டனைக்கு உள்ளாகிவிடுவார். மிக எளிதில் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்ற இடங்களில் இதுவும் ஒன்று.

[திரு. கே. சுப்பராயன்] [1998 மே 30

முற்பகல் 10-25

அதேமாதிரி, புலனாய்வு அதிகாரி ஒருவர் (மணியடிக்கப் பெற்றது) ஒரு நிமிடம். சட்டத்தை அவ்வளவு எளிதில், விவாதமே செய்யாமல் நாம் நிறைவேற்றுவது தவறு. அதுவும், மிகவும் முக்கியமானதொரு சட்டத்தில் விவாதம் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, தாங்கள் இன்னும் சிறிது நேரம் ஒதுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். புலனாய்வு அதிகாரி ஒருவர், அதாவது, புலனாய்வு அதிகாரியே சொத்துக்களைப் பறிமுதல் செய்யலாம்; சொத்துக்களை ஜப்தி செய்யலாம் என்றால், இது என்ன நடைமுறை என்று எனக்குத் தெரியவில்லை. நீதிமன்றத்தின் அதிகாரத்தை ஒரு போலீஸ் அதிகாரி எடுத்துக் கொள்கிறார். இது அவ்வளவு நல்லதல்ல. அதேமாதிரி, தண்டனை அடைந்தவரின் சொத்து தண்டமாக இழக்கப்பட்டுவிடும். ஒரு குற்றத்திற்கு இரண்டு தண்டனையா? குற்றம் என்ற முறையில் அவர் ஆயுள் தண்டனை அனுபவிக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள் அவருடைய சொத்து முழுவதும் தண்டமாக இழக்கப்பட்டுவிடும் என்றால், ஒரு குற்றத்திற்கு இரட்டைத் தண்டனை வழங்க சட்டத்தில் அடிப்படை சாரம் இடம் தருகிறதா என்பதை நாம் தயவுசெய்து சிந்திக்க வேண்டும்.

அடுத்து, குற்றம் செய்திருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டவருடைய சொத்துக்களை ஜப்தி செய்ய ஆணை பிறப்பிக்கின்ற உரிமை தனி அதிகாரிக்கும் நீதிமன்றத்திற்கும் உண்டு. இது எப்படி இருக்கிறது என்றால், விசாரணை தொடங்குவதற்கு முன்னரே தீர்ப்பு எழுதிக் கொண்டது மாதிரி இருக்கிறது. இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால், தீர்ப்பு எழுதிக் கொண்டே விசாரணையைத் தொடங்க இந்தச் சட்டம் வடிவை ஏற்படுத்துகிறது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதுவும் காவல் துறை அதிகாரி எழுத்து மூலமாக அறிக்கை தாக்கல் செய்த உடன், நீதிமன்றம் ஒரு குறிப்பிட்ட நபரைச் சரணடையுமாறு அறிக்கை விடலாம். அப்படி அறிக்கை விட்டவுடன், அவருடைய சொத்துக்கள் முழுவதும் ஜப்தி செய்யப்பட்டுவிடும். நான் கேட்க விரும்புகிறேன், தவறான முறையில் ஒரு நபர் மீது, இவர் இப்படிச் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று அறிக்கை விடச் சொல்லி, அவருடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்து கொள்கிற அளவிற்கு இந்தச் சட்டம் வாய்ப்பளிக்கிறது.



1998 மே 30] [திரு. கே. சுப்பராயன்]

இன்னும் ஒரு விஷயம். அதாவது 12(2)-இல், "சுருக்க முறை விசாரணை ஒன்றில் தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்படுவது எதனையும் பொறுத்தவரையில், தனி நீதிமன்றமொன்று இரண்டாண்டுக் காலத்திற்கு மேற்படாத ஒரு கால அளவிற்கு சிறைத்தண்டனை விதிப்பது சட்டப்படியானதாகும்" என்று ஒரு பிரிவு சொல்கிறது. ஆனால், இது முன்னுக்குப் பின் முரண்பாடாகத் தோன்றுகிறது. முன்னர் என்ன சொல்லப்படுகிறது என்றால், மூன்றாண்டு கால குறைந்தபட்சத் தண்டனையாக - அதிக பட்சம் மரண தண்டனை என்று சொல்லப்படுகிறது. ஆனால், 12(2)-இல் என்ன சொல்லப்படுகிறது என்றால், இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத தண்டனை வழங்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரே சட்டத்தில் இருவேறு முரண்பட்ட கருத்துக்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதை சட்டத் துறை ஏன் கவனிக்காமல் விட்டது என்று எனக்குத் தெரியவில்லை.

அடுத்து, ஒரு கடினமான விபரீதம் பாருங்கள்; ஒலிப்பேழை ஒன்றை வைத்துக் கொண்டு ஒரு நபரைக் குற்றவாளி என்று தீர்மானித்து விடலாம். என்னை மாதிரியே ஒருவர் பேசி, கேசட்டிலே பதிவு செய்து கொண்டு, அந்தக் கேசட்டை கோர்ட்டில் நீதிபதி முன்னால் போட்டுக் காண்பித்து, அதையே ஆதாரமாக எடுத்துக் கொண்டு எனக்கு மரண தண்டனை கொடுத்து விடலாம். இப்படி ஒரு நிலையை அனுமதிக்கலாமா என்பதைத் தயவு செய்து யோசித்துப் பாருங்கள்.

அதேமாதிரி, இன்னொரு மிக முக்கியமான விஷயம். இந்தச் சட்டத்தில், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் அதைக் குறித்துக் கொள்ள வேண்டும். அதாவது, சாட்சிகள் யார், என்ன சாட்சியம் சொன்னார் என்னைப் பற்றி என்று உலகிற்கு அறிவிக்கப்படவே மாட்டாது. நீதிபதி தன் தீர்ப்பில்கூட, தான் ஏன் இப்படி ஒரு தீர்ப்பிற்கு வந்தோம்; அதற்கு எந்த சாட்சியம் ஆதாரமாயிற்று என்று அவர் பெயரையோ, அடையாளத்தையோ, முகவரியையோ சொல்லக்கூடாதாம்; சொல்ல வேண்டியதில்லை என்று இந்தச் சட்டம் சொல்கிறது. இது இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இருக்கக்கூடிய Article-14 வழங்கி இருக்கிற உரிமையைப் பறிப்பதாக அமைகிறது.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லா வழக்குகளையும் அதே மாதிரி நடத்த

வேண்டுமென்ற அவசியம் இல்லை. எல்லாச் சாட்சியங்களையுமே இரகசியமாக எடுக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. நீதிமன்றம் எதைக் கருதுகிறதோ, எது தேவையென்று நினைக்கிறதோ அதை மட்டும்தான் செய்யலாமே தவிர, எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் எதைச் செய்யலாம் என்றால் அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையில்தான் எந்த ஒன்றையும் செய்ய வேண்டும். நீதிபதி மட்டுமல்ல; சட்டமன்றம் மட்டுமல்ல; நாடாளுமன்றமும் அரசமைப்புச் சட்டம் வழங்கியிருக்கிற உரிமைகளில் கை வைப்பதை அனுமதிக்க முடியாது. நான் தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம், அரசமைப்புச் சட்டத்தினுடைய Article-14 மிகத் தெளிவாகச் சொல்கிறது. "அரசு, இந்திய ஆட்சி நிலவரைக்குள், சட்டத்தின் முன்னர் சமன்மையையும், சட்டங்கள் அளிக்கும் பாதுகாப்பில் சமன்மையையும் எவர் ஒருவருக்கும் மறுத்தல் ஆகாது." இவ்வாறு, Article-14-இல் சொல்லப்பட்டிருக்கிறது. அரசமைப்புச் சட்டம் Article 14-னுடைய சாரத்திற்கு இந்தச் சட்டமுன்வடிவில் சாட்சி யார்? என்ன சொன்னார்? என்று தெரிந்து கொள்கின்ற உரிமை மறுக்கப்படுவது என்பது, சட்டம் வழங்கியிருக்கின்ற சமத்துவத்தை மறுக்கிற முறையில் இந்தச் சட்டம் அமைந்திருப்பதால் இந்தச் சட்டம்

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, equality before law; equal protection of law. இந்தப் பிரச்சினை பற்றி 300 பக்கங்களுக்கு மேல் திரு. பாசு அவர்கள் விமர்சனம் எழுதியிருக்கிறார்கள். ஐந்து நிமிடங்கள் பேசி அதற்கெல்லாம் விடை கண்டுவிட முடியாது. ஏகப்பட்ட விமர்சனங்கள் எல்லாம் இதைப்பற்றி இருக்கிறது. ஏற்கெனவே உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கு உட்பட்டுதான் இவை எல்லாம் இந்தச் சட்டத்திலே இடம் பெற்றிருக்கின்றன. ஏற்கெனவே தடா சட்டத்தில் இதுபோன்ற விதிகள் இருக்கின்றன. அதை உச்சநீதி மன்றம் அங்கீகரித்திருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிறைய விமர்சனங்கள் இருக்கின்றன. ஆனால் விமர்சனங்களின் சாராம்சத்தை எடுத்துக்கொள்ளாமலேயே சட்டம் இயற்றப்பட்டுவிடுகிறது என்பதுதான் வேதனை.



அடுத்து மிக முக்கியமான விஷயம். இதுவரையில் குற்றம் சாட்டுகிறவர்கள்தான் குற்றத்தை நிரூபிக்க வேண்டும். இந்தச் சட்டத்தில் என்ன இருக்கிறது தெரியுமா? குற்றவாளிதான், தான் நிரபராதி என்று நியாயத்தை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும் என்று சொல்வது உண்மையிலேயே அவனுடைய உரிமைகளை மறுப்பதாக அமைந்துவிடுகிறது. யார் குற்றம் சாட்டுகிறார்களோ, போலீஸ் அதிகாரிகள் பார்த்துச் சொல்கிற ஒரு குற்றச்சாட்டு நின்றுவிடும். அதை மறுத்து, அது பொய் என்று நிரூபிக்க வேண்டிய கடமை குற்றச்சாட்டிற்கு ஆளானவருடையதே தவிர, குற்றம் சொன்னவர்கள் குற்றத்தை நிரூபிக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் இதில் விடுபட்டுப் போய்விடுகிறது. குற்றச்சாட்டிற்கு ஆளானவர்தான் நிரூபிக்க வேண்டும் என்பது முன்கூட்டியே தண்டனைக்குத் தீர்மானித்துவிடவே இது வழி செய்கிறது என்பதைத் தெரிவித்து, ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன்.

இப்போது தமிழ்நாடு அமைதியாகத்தானே இருக்கிறது? யார் மறுக்கிறார்கள்? சட்ட அமைச்சர் மறுக்கிறாரா? தமிழகம் மிக அமைதியாக இருக்கிறது. பயங்கரவாதச் சட்டம் இல்லாமலேயே அமைதியாகத்தான் இருக்கிறது. பயங்கரவாதச் சட்டம் ஒன்றைப் பயன்படுத்தாமலேயே தமிழ்நாடு அமைதியாக இருக்கின்ற இன்றைய நிலையே, இப்படி ஒரு சட்டம் அவசியமே இல்லை என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

அதுமட்டுமல்ல. ஐ.பி.சி.-யில் பிரிவுகள் 147, 149, 505, 120-பி, 395-ஏ, 297, [illegible], 338, 153-ஏ, 153-பி, 295-ஏ போன்ற பல செக்ஷன்களின்கீழ்தான் மதக் குரோத, விரோத கலகத்தைத் தொடங்கி வைத்த திரு. அத்வானி, உமாபாரதி, திரு. முரளிமனோகர் ஜோஷி ஆகியோர் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. பாபர் மசூதியை இடித்தவர்கள் மீது இதே சட்டங்கள் போடப்பட்டிருக்கிற வாய்ப்பு இருக்கிறபோது இப்படி ஒரு சட்டம் எதற்கு? அவசியம் இல்லை. நிறைவாக, பாரதியார் சொன்ன வரிகளைச் சொல்லிவிடுகிறேன்.

'தாளம், தாளம், தாளம்-தாளத்திற்கோர்
தடையுண்டாயின் கூளம், கூளம், கூளம்,
நாதம், நாதம், நாதம்-நாதத்திற்கோர்
நலிவுண்டாயின் சேதம், சேதம், சேதம்.
பண்ணே, பண்ணே, பண்ணே-பண்ணிற்கோர்
பழுதுண்டாயின் மண்ணே, மண்ணே, மண்ணே.'

[திரு. கே. சுப்பராயன்] [1998 மே 30

எனவே, இந்தச் சட்டம் கொண்டு வரப்படுமானால் தமிழகம் கொடுமையான தீய விளைவைச் சந்திக்க வேண்டிவரும் என்பதால் இச்சட்டத்தை மாநில அரசு வாபஸ் பெற வேண்டும் என்று, உள்ளங்காலிலிருந்து உச்சந்தலைவரை ஒவ்வொரு மயிர்க்கால்களிலும் உணர்ச்சி பொங்க நான் வலியுறுத்துகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு clarification. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் பேசுகின்றபோது இந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்படி நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகிறபோது சாட்சியினுடைய அந்தச் சாட்சியத்தைக்கூட சொல்லாமல் தீர்ப்பு எழுதலாம் என்று சட்டத்திலே இருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்குப் பதில் சொன்னார்கள். ஏற்கெனவே நீதிமன்றத்தின் முன்னால் சாட்சி சொன்ன அந்த சாட்சி உண்மையிலேயே பயங்கரவாதிகளுக்குப் பயப்படுவாரேயானால் அவருடைய பெயர், அடையாளம் போன்றவை எல்லாம் தெரியுமேயானால் நாளைக்கு அவர் உயிரோடு இருக்கமுடியாது. அவர் உயிருக்கு யார் பாதுகாப்பு? நாளை நானே பஸ்ஸில் போகிறேன் என்று சொன்னால் ஆக்ஸிடெண்ட் கேஸ் ஆகிவிட்டால்கூட சாட்சி சொல்வதற்கு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே இதற்குத் தெளிவாக பதில் சொல்லிவிட்டார்கள். எல்லா வழக்குகளுக்கும் இது பொருந்தாது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தச் சாட்சி நீதிமன்றத்தின் முன்னால் "என்னுடைய பெயரோ, அடையாளமோ நாட்டுக்குத் தெரிய வேண்டாம், எனக்குப் பாதுகாப்பு வேண்டும்" என்று எழுதிக்கொடுத்தால்தான் தீர்ப்பிலே சொல்லாமல் விடலாம். இல்லையென்றால் அதில் சொல்லலாம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாட்சியின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற சந்துபொந்துகளுக்குள் புகுந்துகொண்டு அரசமைப்புச் சட்டம் தனி மனிதனுக்கு வழங்கியிருக்கின்ற உரிமையைப் பறிக்க திரு. ஞானசேகரன் அவர்களுக்கோ, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கோ, தமிழக அரசிற்கோ உரிமை இல்லை.

(முற்பகல் 10-35)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.



1998 மே 30]

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், 1998-ன்கீழ், என்னுடைய கருத்துக்களை இங்கே, நான் முன்வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்த அரசானது, மத தீவிரவாதத்தை ஒடுக்குவதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதாக அறிவித்திருந்தாலும், இந்தச் சட்டத்தைப் பொறுத்தளவிலே, நீங்கள் என்ன நோக்கத்திற்காக இதைக் கொண்டு வருகிறீர்களோ, அந்த நோக்கத்தை, இது ஈடேற்றுமா என்பதை, என்னைப் பொறுத்தளவிலே, ஒரு சந்தேகத்திற்கு இடமாகவே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் என்னவென்று சொன்னால், ஏற்கெனவே விடுதலை பெற்ற காலத்திலேயிருந்து இன்றுவரையிலே, ஏராளமான தனிச் சட்டங்கள், அடக்குமுறைச் சட்டங்கள் போடப்பட்டு வந்திருக்கின்றன. ஆனாலுங்கூட, மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, இத்தகையச் சட்டங்களை மட்டுமே நம்பிக்கொண்டு செயல்படுகிற காரணத்தினாலே, எந்தவொரு சட்டத்தினாலும், அமைதியை நிலைநாட்ட முடியவில்லை என்பதுதான் யதார்த்தமான, இந்திய வரலாற்றைப் புரட்டிப் பார்க்கிறபோது கிடைக்கின்ற உண்மையாகும். ஆகவேதான், இன்றைக்கு இந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது, ஏற்கெனவே கொண்டுவரப்பட்ட தடா சட்டத்தினுடைய ஒரு மறுபதிப்பாக, அல்லது ஒரு மறுபிரதியாகத்தான் என்னைப் போன்றவர்களாலே பார்க்க முடிகிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. கு. மனோகரன் தலைமை)

நோக்கம், மத தீவிரவாதத்தை ஒடுக்குவதற்காக, ஐந்தாண்டுக் காலத்திற்காக மட்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும்கூட, நடைமுறையில் இந்தச் சட்டம், ஏற்கெனவே உள்ள கறுப்புச் சட்டங்கள் எப்படிப் பயன்படுத்தப்பட்டனவோ, அதேபோல் பயன்படுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள், வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்திற்கு நாங்கள் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். உதாரணத்திற்காக, நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்: குண்டர் தடுப்புச் சட்டம், N.S.A. சட்டம் போன்றவை எல்லாம் தவறாகப் பயன்படுத்தப்படவில்லை என்று சொன்னார்கள். நான் இந்த மன்றத்திலேயே, காவல் துறை மானியக் கோரிக்கை விவாதத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதை மீண்டும் இங்கே

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1998 மே 30

நினைவுபடுத்துகிறேன். சுருக்கமாக, பத்தாண்டு காலமாக குருடராக இருப்பவர்மீது, 85 அல்லது 90 மீட்டர் தூரம் அளவுக்குச் சென்று, அரசினுடைய பஸ்ஸின்மீது வெடிகுண்டை வீசியதாக, பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த காவல் துறை எஸ்.பி. அவர்கள் பரிந்துரை செய்ய, அந்த மாவட்டத்திற்கு அன்றைக்கு ஆட்சித் தலைவராக இருந்தவர், இயந்திரகதியிலே கண்ணை மூடிக் கொண்டு, கையெழுத்துப் போட்டு, அந்த அப்பாவியை அதற்கு பலிகடாவாக்கி, இன்றைக்கும் அவர் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார். ஆகவே, பாயவில்லை என்று சொல்வதெல்லாம் சரியல்ல என்பது எனது பணிவான கருத்து.

அதேபோல், நெல்லை மாவட்டத்திலுள்ள அரசுப் பேருந்துகளை அடித்தவர்கள் யார் யாரோ...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற குற்றச்சாட்டு உண்மையாக இருந்திருக்குமேயானால், குண்டர் தடுப்புச் சட்டத்திலே கைது செயயப்பட்ட.வர்களைப் பற்றி விசாரிக்கும் Advisory Board இருக்கிறது; அவர் சொல்கிற கூற்று நியாயம் என்று சொன்னால், அவரே அவ்வாறு கைது செய்தது தவறு என்று சொல்லியிருப்பார்; அரசும் விடுதலை செய்திருக்கும். ஆனால் அவர் சொன்ன வாதத்தை அந்த Advisory Board ஏற்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் உணர வேண்டும்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, Advisory Board என்பது என்ன? அவர்களும், இந்த அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிறார்கள். நான் ஒரு சட்டமன்ற உறுப்பினராக...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதை அவர் தவறாகச் சொல்லக் கூடாது. நீதிபதிகள் அதிலே இருக்கிறார்கள். நாம் அவ்வளவு கேவலமாக Advisory Board-ஐக் கணிக்கக் கூடாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுக் காலத்திலே, குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு, அந்த Advisory Board-க்குச் சென்று, எத்தனை பேர் விடுதலையாகி இருக்கிறார்கள் என்கிற தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுக்க முடியுமா?



1998 மே 30]

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சரியான புள்ளிவிவரங்கள் என்னிடத்திலே இல்லை. சிலர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். Habitual offenders என்ற வகையில், தொடர்ந்து குற்றம் செய்பவர்களைப் குண்டர் தடுப்புச் சட்டத்திலே பிடிக்க வேண்டும்; மற்றவர்களை பிடிக்கக்கூடாது என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் சிலர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த விவரத்தைத் தனியாக மாண்புமிகு உறுப்பினருக்கு நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. மனோகரன்):** டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். இன்னொரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். விவரத்தைத் தருகிறேன் என்று அமைச்சர் சொல்கிறார். அந்த விவரம் தற்போது அமைச்சருடைய கையிலே இல்லை.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இது தவறான குற்றச்சாட்டு. அது அவைக் குறிப்பில் இடம்பெறக் கூடாது. ஏனென்றால், இது நீதிபதிகள் தொடர்புடைய பிரச்சினையாகும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. மனோகரன்):** அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

முற்பகல் 10-40

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். Habitual offenders, குற்றம் செய்வதையே தொழிலாகக் கொண்டவர்கள் மீது மட்டும்தான் இந்தச் சட்டம் பாயும் என்று சொன்னார்கள். ஆனால், இப்போது அதுவும் மாற்றப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒரே ஒரு குற்றச்சாட்டு இருந்தால்கூட அவர்கள் மீது இத்தகைய சட்டங்கள் இன்றைக்குப் பாய்ந்து கொண்டிருக்கின்றன.

---

**மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஆ. இராமச்சந்திரன் என்கிற தீரன்] [1998 மே 30

என்னால் ஏராளமான எடுத்துக்காட்டுக்களைச் சொல்ல முடியும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொன்னதுபோல, அண்மையில் நெல்லையிலே பேருந்து அடிக்கப்பட்டது. அந்தப் பேருந்துகளை அடித்தவர்களை எல்லாம் விட்டுவிட்டு, அப்பாவித்தனமாக, தெருவிலே சென்றவர்களை, குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் ஒரு பள்ளிக்கூட மாணவனை, எலக்ட்ரானிக்ஸ் பொருள்கள் கடை வைத்துக் கொண்டிருக்கக்கூடியவர்களை எல்லாம் கைது செய்தார்கள்.

இன்னும் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மத தீவிரவாதத்தையொட்டி வெடிமருந்துப் பொருட்களை எல்லாம் ஆய்வு செய்யுமாறு ஆணை பிறப்பித்தார்கள். ஆனால் எங்களுடைய விழுப்புரம் மாவட்டத்தில், குறிப்பாக செஞ்சி வட்டத்திலே, கிணறு வெட்டுவதற்காக எடுத்துச் செல்லப்பட்ட, ஜெலட்டின் குச்சிகளை வைத்திருந்தவர்களை தீவிரவாதிகள் என்று சொல்லி கைது செய்திருக்கிறார்கள் மணிவண்ணன் என்று சொல்லக்கூடிய ஒருவர் மீதும், அவரோடு சேர்ந்த 3 பேர்கள் மீதும் வழக்குப் போட்டிருக்கிறார்கள். எங்கள் பகுதியிலே கிணறுகளைக்கூட ஆழப்படுத்தமுடியாத நிலை இதனால் ஏற்பட்டிருக்கிறது. எங்கள் பகுதி மலைப்பாங்கான பகுதியாகும். அங்கே இருப்பவர்கள் தங்களுடைய கிணறுகளை ஆழப்படுத்த முடியாத அளவுக்குக் காவல் துறையினர் இந்தச் சட்டங்களைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியது எங்களுடைய கடமை என்பதற்காக இதை நான் சுட்டிக்காட்டுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இங்கே, ஏற்கெனவே பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதுபோல, இரண்டாவது சுதந்திரப் போராட்டம் என்று அழைக்கப்படுகின்ற, அந்த நெருக்கடி நிலை, மிசா சட்டத்தை எதிர்த்து பல கொடுமைகளுக்கு ஆளான நீங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள், இன்றைக்கு இருட்டிலே கடுக்கன் கழட்டுவதைப்போல சந்தடி சாக்கிலே மொழிப் பற்றால் யார் வன்முறை செய்தாலும் அவர்களும் இந்த பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் போன்றவர்கள் சொல்ல அதற்கு மேசையொலி எழுப்புவது, நாம் அந்த அளவுக்கு மொழி உணர்விலேகூட குறைந்து விட்டோமா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.



1998 மே 30]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு வேறுவிதமான கருத்துக்களை இந்த அவையிலே எடுத்துவைத்து அதிலே நியாயம் இருப்பதாகக் காட்ட முற்படுவது நியாயமல்ல. பயங்கரவாத ஒடுக்கச் சட்டம் என்ற இந்தச் சட்டம் பயங்கரவாதத்தை ஓர் இயக்கமாக நடத்துகின்ற யாராக இருந்தாலும், அதனுடைய விளைவுகள் யாரைப் பாதிக்கின்றன என்பதைப்பற்றிக் கவலைப்படாமல், பயங்கரவாதத்தை ஓர் இலட்சியமாக வைத்துக் கொண்டு அதை மேற்கொள்கின்றவர்கள் யாராக இருந்தாலும், அது தொடரக்கூடாது, ஒடுக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டமே தவிர, ஒருவேளை மொழிப்பற்று காரணமாக, பயங்கரவாதம் என்று சொல்லி, அந்த மொழி சாராத மக்களைக் கொடுமைக்கு ஆளாக்கக்கூடிய ஓர் இயக்கம் வருமானால் இந்தச் சட்டத்தின் மூலமாக அவர்களை அடக்கத்தான் வேண்டும். தாய் மொழிப் பற்று வேறு; பயங்கரவாதம் வேறு. அதைப்போல மதப்பற்று வேறு, மதத்தின் அடிப்படையிலான பயங்கரவாதம் வேறு. சாதி உணர்வுகள் வேறு; மற்ற சாதிகளை அழிக்கின்ற கொடுமை வேறு.

மாண்புமிகு டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களுக்குக்கூட நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களைக் கொடுமைப்படுத்தக்கூடிய அக்கிரமத்தைத் தொடர்ந்து செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுமானால், அப்படிச் செய்யக்கூடியவர்கள் மீதுகூட நிச்சயமாக நடவடிக்கை எடுப்பதற்கு இந்தச் சட்டம் பயன்படும்.

அடுத்து, உத்தரப்பிரதேசத்தில் நடைபெற்ற பாபர் மசூதி இடிப்பு காரணமாக ஏற்பட்ட உணர்வுதான் இப்படியெல்லாம் நடப்பதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. எந்த உணர்வு காரணமாக இருந்தாலும் எந்தச் சூழ்நிலை காரணமாக இருந்தாலும், பயங்கரவாதம் யார் மூலமாக ஏற்பட்டாலும், அதை ஒடுக்குவதற்கு இப்படிப்பட்ட ஒரு கருவி தேவைப்படுகிறது. அதை ஆழ்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் தீரன் அவர்கள் பேசுகின்றபோது, மொழிப்பற்று காரணமாக ஏதாவது கலவரம் வந்தால், இச்சட்டத்தைப் பயன்படுத்தலாம் என்று உறுப்பினர் ஞானசேகரன் சொல்ல, அதற்கு அவையினர் மேசையைத் தட்டினார்கள் என்ற வார்த்தையைச் சொன்னார்கள். மொழிப்பற்று என்று சொல்வது,

மொழிவெறியாக மாறிவிடக்கூடாது. விடுதலைப் புலிகள், தமிழ், தமிழ் என்று சொல்லிக்கொண்டு ராஜீவ் காந்தியின் கொலைக்குக் காரணமான 21 பேர்களின் வழக்கை நடத்துவதற்காக சுப்ரீம் கோர்ட் நிதி என்று சொல்லி இப்போதுகூட 5 இலட்சம் ரூபாயை சென்னையிலே திரட்டியிருக்கிறார்கள். இப்படி மொழி என்ற ஆயுதத்தை வைத்துக்கொண்டு சிலபேர் இந்த நாட்டிலே அமைதியைக் கெடுப்பதை எப்படி நாம் அனுமதிக்க முடியும்?

பேராசிரியர் சொன்னதுபோல மொழிப்பற்று வேறு, அதை வெறியாக்கி அதில் பிழைப்பு தேடக்கூடிய அளவுக்கு, வேறுவிதமாக, பயங்கரவாதம் என்று சொல்லி இங்கே அமைதியைக் கெடுப்பது என்று சொன்னால், அது மொழியின் பெயரிலே இருந்தாலும் சரி, இனத்தின் பெயரிலே இருந்தாலும் சரி, சாதியின் பெயரிலே இருந்தாலும் சரி, மதத்தின் பெயரிலே இருந்தாலும் சரி, அவற்றை நிச்சயமாக ஒடுக்க வேண்டியது அரசினுடைய கடமை என்பதைத்தான் நான் இந்த இடத்திலே மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டினேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது தமிழிலே பெயர்ப் பலகைகள் மாற்றப்பட வேண்டும் என்று சொல்லி நாங்கள் ஒரு போராட்டம் நடத்தினோம். அந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட ஆணை அனுப்பாதீர்கள், ஆணை அனுப்புகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் இன்று வரையிலே அந்தப் பெயர்ப் பலகைகள் தமிழிலே மாறி இருக்கின்றனவா என்றால் இல்லை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே சில பேர், அந்தத் தமிழ் மாற்றம் வேண்டும் என்று கருதுகின்ற அமைப்பினர் சென்று அந்தப் பெயர்ப் பலகைகளை அழிக்கின்ற நேரத்திலே, அந்த மாதிரியான ஒரு சூழ்நிலையில், காவல் துறை நினைத்தால் அந்த இயக்கத்தினர்மீது கூட நடவடிக்கை எடுக்கலாம். இந்தச் சட்டத்திலே கொடுக்கப்பட்டு இருக்கின்ற அந்த விதிமுறைகளின்படி காவல் துறையைச் சார்ந்தவர்கள் என்ன செய்தியைச் சொல்லுகிறார்களோ, என்ன குற்றச்சாட்டைச் சொல்லுகிறார்களோ, அதை அப்படியே ஏற்றுக்கொள்கிற வகையிலேதான் அந்தச் சட்டம் இருக்கிறது. அவர்களைப்



பொறுத்தவரையில் தங்களுக்கான தலைவலி குறைந்தால் போதும் என்ற அடிப்படையிலேதான் பல இடங்களில் இத்தகைய சட்டங்களை அவர்கள் வசதிக்கு ஏற்ப பயன்படுத்திக்கொள்கிறார்கள். அப்படி அவர்கள் பயன்படுத்தும்போது இத்தகைய அமைப்பினர்மீது இந்தச் சட்டம் பாயலாம் என்றுதான் சொல்லுகிறோமே தவிர...

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான முறையில் விளக்கம் அளிப்பது பொருத்தமாக இருக்காது என்று நான் கருதுகிறேன். விளம்பரப் பலகை குறித்து ஏற்கெனவே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, ஒருவேளை கடை உரிமையாளர், மேலே தமிழிலும், அதற்கு அடுத்து ஆங்கிலத்திலும் எழுதிவைக்கத் தவறினால் அதற்குத் தண்டனை உண்டு; தண்டிக்கப்படுகிறார்கள்; அதன்படி பலபேர் தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதையும் மறந்துவிடக்கூடாது. இன்றைக்கு எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாகப் பல விளம்பரப் பலகைகள் மாற்றி எழுதப்பட்டிருப்பதை நீங்கள் கண்கூடாகக் காண்கிறீர்கள். எனவே, அந்த நிலையில் முறைப்படி அரசாணை செயல்பட்டு வருகிறபோது, அதற்கும், நீங்கள் சொல்கிற இந்த பயங்கரவாதச் சட்டத்திற்கும் தொடர்பே கிடையாது. இதை யாரும் தவறாகக் கையாள முடியாது. எடுத்து வலியுறுத்துவதற்கு உங்களுக்கு உரிமையுண்டு. இன்னும் சொல்லப்போனால் அவர்கள்மீது தொழிலாளர் நலத் துறை ஆணையர் அவர்களே நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்கெனவே வழிவகை இருக்கிறது. அதனால், இதைப்போய் பயங்கரவாதத்திலே திணிப்பதற்கோ அல்லது வேறுவகையிலே கையாளுவதற்கோ எந்த இடமும் இல்லை. இது நேரிடையாகக் காவல் துறைக்குப் போகிற பிரச்சினையுமல்ல.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திலே நீதிமன்றத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய அளவிற்குச் சில விதிமுறைகள் இருப்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே காவல் துறையினுடைய நடவடிக்கைகளை, அதாவது ஒரு எஸ்.பி. லெவலில் இருக்கக்கூடிய அதிகாரியிடம் கொடுக்கக்கூடிய அந்த வாக்குமூலத்தைத்தான் அப்படியே ஏற்று அங்கீகரிக்கக்கூடிய அளவிற்கு நீதிமன்றத்தினுடைய சுயேட்சைத் தன்மை, தனித் தன்மை அதிலே

[திரு. ஆ இராசேந்திரன், என்கிற தீரன்] [1998 மே 30

பாதிக்கப்படாமல் அரசு பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதேபோல, இன்றைக்குச் சொத்துக்களை விசாரணை செய்கிற காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகளே பறிமுதல் செய்யலாம் என்று இருக்கிறது. அண்மையிலே கோவை குண்டு வெடிப்பில்கூட, எத்தனையோ, சிறுபான்மையின மக்கள், வசதிபடைத்தவர்கள் மிரட்டப்பட்டு பணம் பறிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆக, நான் அரசுக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால், காவல் துறையினுடைய கருத்துக்களை மட்டுமே வைத்துக்கொண்டு, நீதிமன்றத்திலே பாதிக்கப்பட்டவர்கள், குற்றம் சுமத்தப்பட்டவர்கள் வாக்குமூலம் ஏற்றுக் கொள்ளப்படும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், அதேநேரத்திலே போலீஸ் துறையில் கண்காணிப்பாளர் குறைவில்லாத அதிகாரியால் வாக்குமூலம் பதிவு செய்யப்பட வேண்டும் என்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, நமது தமிழக அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இது ஜனநாயக ரீதியில் போராடுகிறவர்கள்மீதோ அல்லது தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடுகின்ற தொழிலாளர்கள்மீதோ, அரசியல் கட்சிகளின் மீதோ, எந்தக் காரணத்தைக்கொண்டும் எந்த நிலையிலும் பயன்படுத்தப்படல் கூடாது. உள்நோக்கத்தோடு செயல்படுத்த எந்த அதிகாரிக்கும் உரிமை கிடையாது, என்ற சில திருத்தங்களோடு நீங்கள் இதை. இந்த நாட்டு மக்களுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தளவிலே இந்தச் சட்டம் தேவையில்லாதது. ஏற்கெனவே உள்ள சட்டங்களை வைத்துக்கொண்டே நாம் நடைமுறைப்படுத்தி நடவடிக்கை எடுத்தாலே போதுமானது. சட்டங்களால் மட்டும் அமைதியை நிலைநாட்ட முடியாது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, தயவுசெய்து இந்தச் சட்டத்தை இன்னும்கூட ஆழ்ந்து பரிசீலிப்பதற்கும் கால அவகாசத்தை எடுத்துக்கொண்டு, நீங்கள் இதை Select Committee-க்குக்கூட விடலாம். நீங்கள் இன்னும் பரிசீலித்து பொறுமையாக ஒரு முடிவு எடுக்கலாம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு இந்தச் சட்டத்தைத் திரும்பப்பெற வேண்டுமென்பதை பாட்டாளி மக்கள் கட்சி-2-ன் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன், வணக்கம்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பி. வெங்கடசாமி.**



1998 மே 30]

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir. on behalf of the Janata Dal, I wholeheartedly support the Tamil Nadu Prevention of Terrorist Activities Bill introduced by the Honourable Chief Minister. Even in British Parliament they have enacted a similar Law on 28th June. 1976 and provocation was there when a distinguished person like Lord Mount Batte'n who was responsible for transfer of power to India was assassinated by a bomb blast when he was travelling in a boat. Even in Kalisthan Movement they have introduced terrorism. Whenever there is a disturbance. it is the duty of the Government to see that it is prevented. Some of our friends are telling that this Prevention of Terrorist Bill is not necessary. Then, how are you going to prevent the bomb blast and other things? Precious lives like Indira Gandhiji was also lost. So many precious lives have been lost. How are you going to prevent them? You must tell the remedy for that. Is it not the Government's policy and duty to see that poor people and innocent people are protected from the terrorists. I came to know that terrorist people are getting money from foreign countries.They want to create trouble in India. Does it mean that Indian people must sit and see those things? Does it mean that when they are killing our people. we will have to sit simply?

I am very happy that Tamil Nadu has provided this Terrorist Act after the Coimbatore blasts. I have also given an amendment. That is. in Clause 1. in sub-Clause (3). *for* the words "*to a* period of five years from the date of its commencement" *substitute* the words. "till the date of its expiry is notified".

In Clause 2. in sub-clause (a). *after* item (iii). *add* the following as item (iv):

"(iv) any other method or means adopted. but not contemplated in this Act."

In Clause 2. in sub-clause (9). in item (1) *after* the words 'Strike terror'. *add* the words "And creat fear of life and liberty."

In Clause 3. in sub-clause (2). *after* item (iv). *add* the following as item (v):

"(v) Any person attempting or may attempt and cause to believe that his entry into the State may promote terrorism."

[Thiru B. Venkatasamy] [1998 மே 30

So. Sir, Clause 1 says that the period will be 5 years. I state that instead of this, expiry date will be notified by the Government itself if the normal conditions are prevailed within a year or two. Why should we give 5 years life to this Law? Whenever the condition is calm, we can revoke this Law also.

A similar Act was adopted in the House of Commons. I hope that it will come into Bill now. I wish the Government to revoke the terrorism as early as possible. But, I caution the Government that necessary safeguard must be there, otherwise the Police can use this weapon to curb the political parties which are against the ruling party. So, I caution the Government that safeguard measures should be included in this Bill to check whether the innocent people are getting harrassed by the Police in any form of terrorism.

முற்பகல் 10-55

The Government has accepted my suggestion made on the debate on the "White Paper", few days back that the property of those who are involved in terrorist activities should be confiscated. But, I want further to say that the compensation to victims of such terrorist activities should be met from the confiscated estate, property etc. I wish that the Chief Minister will accept this suggestion. In the Bill itself, it has been clearly stated that action will be taken against those responsible for terrorist activities. I welcome this Bill Sir. Thank you very much.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் சம்பந்தமான இந்த விவாதத்திலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தீவிரவாதம் என்பது நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் கடந்த 6, 7 வருடங்களுக்கு முன்னால், மதவெறியின் காரணமாக அது எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, மதவெறி என்பது ஊட்டப்பட்டது. குறிப்பாகச் சொல்வோமேயானால், இந்து மதத்திலிருந்துதான் அந்த வெறி பயங்கரமாக ஊட்டப்பட்டதன் பின்விளைவுதான் இந்த குண்டுவெடிப்புகளானாலும் சரி, கொலையானாலும், சரி, கொள்ளையானாலும் சரி, இந்த நிலைமைகளுக்கு இன்று ஆளாக்கப்பட்டிருக்கிறோம்.

இந்த வகுப்புவாதத் தீவிரவாதத்தை சட்டத்தினால் மட்டும் தடுத்துவிட முடியும் என்ற கருத்து எங்களுக்கு இல்லை. நீண்டநாளாக



1998 மே 30] [திரு. டி. மணி]

இந்த நாட்டில் செயல்படுகிற எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றாக இணைந்து இதற்கு எதிரான, கடுமையான பிரச்சாரத்தைச் செய்வதன் மூலமாகத்தான், இதை நாம் தடுத்து நிறுத்த முடியும். வெறும் சட்டத்தாலே மட்டும் அதைத் தடுத்து நிறுத்த முடியும் என்ற கருத்து எங்களுக்கு இல்லை.

அதுபோல, இந்தச் சட்டமுன்வடிவில் உள்ள பல ஷரத்துக்கள் மனித உரிமைகளைப் பறிக்கக்கூடியதாக இருக்கின்றன. அவற்றை எல்லாம் தளர்த்திடவேண்டும் அல்லது அவை குறித்து தீவிரமாக ஆய்வு செய்யவேண்டும். குறிப்பாக, இதற்கு முன்னால் இருந்த மிசா சட்டம். அந்த மிசா சட்டம் வருகிறபோது நம்முடைய ஆளுங்கட்சியினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட அன்றைக்குச் சில கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள். எங்களுடைய இயக்கத்தை, எங்களை நசுக்குவதற்காகத்தான் இதைப்பயன்படுத்துவார்கள் என்ற வகையிலே நல்ல கருத்துக்களை எல்லாம் அன்றைக்குச் சொன்னார்கள். அது நடக்கவும் செய்தது.

இன்னும், இதற்குள்ளே இருப்பது இன்னொன்று. காவல் துறையினுடைய அதிகாரி. அந்த அதிகாரிக்கு என்னிடம் ஏதோ விரோதம் இருக்குமானால், என்னை இந்தச் சட்டத்திற்குள்ளே கொண்டு வரலாம். கடந்தகால பல நிகழ்வுகளை நான் சொல்ல முடியும். என்னுடைய மாவட்டத்தில் ஓர் இன்ஸ்பெக்டர் ஒரு பெண்ணிடம் தவறாக நடந்துகொண்ட பிரச்சினையை -அந்தப் பெண் பிறகு கொலை செய்யப்பட்டார்-நான் எடுத்துச் சொன்னதாலேயே, அதன் விளைவு, எமர்ஜென்சி வந்தபோது, எந்தக் குற்றமும் செய்யாத என்னைக் கைது செய்வதற்கு, தினந்தோறும் இரவு 12-00 மணிக்கு என்னுடைய வீட்டுக் கதவைத்தட்டி பல தொந்தரவுகளைத் தந்திருக்கிறார்கள். இவையெல்லாம், இந்தச் சட்டத்தினால் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆக, இந்தச் சட்டம், தடா சட்டத்தினுடைய மறு வடிவமாக இருக்கிறது என்ற ஓர் எண்ணம் பொதுவாக இருக்கிறது. அதற்குக் காரணம், ஒரு மனிதன், காவல் துறையால் கைது செய்யப்படுகிறான் என்றால் ஓர் ஆண்டுக்காலம் சிறை, அதாவது நீதி மன்றத்திற்கு அனுப்பவேண்டியதில்லை; அவரைப்பற்றி விசாரணையும் தேவை இல்லை; நீதிமன்றத்திற்கு அனுப்பாமல், விசாரணை இல்லாமல் ஓர் ஆண்டுக்காலம் சிறையிலே வைப்பதற்கு இடம் தருகிறது இந்தச் சட்டம். ஆகவே, தனி மனிதனுடைய உரிமையைப் பறிக்கின்றது என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் தேவையில்லை. விசாரணை இல்லாமல், குற்றப்பத்திரிகை இல்லாமல், நீதிமன்றம் செல்லாமல்

குற்றவாளியை ஒரு வருடம் சிறையிலே வைக்கலாம் என்பது அதில் இருக்கக்கூடிய விதி. பிறகு காவல் துறை அதிகாரிகள், ஒருவர் ஓர் ஒட்டுதலைக் கொடுத்தால், என்னை நீதிமன்றத்திலே நிறுத்தலாம், அதுதான் அதற்கு ஆதாரம். அந்த ஆதாரம் மனித உரிமைகளைப் பறிப்பதாகும்.

முற்பகல் 11-00

இதுபோன்று ஒரு நபரை அல்லது என்னை, ஒரு போலீஸ் அதிகாரி குற்றவாளி என்று சொன்னால், குற்றவாளி அல்ல என்று தெளிவுபடுதத வேண்டியது அந்த நபரை அல்லது என்னைச் சார்ந்தது என்ற வகையில் ஒரு விதி செய்யப்பட்டிருக்கிறது. அது ஏற்புடையது அல்ல. இந்த அடிப்படையிலே குற்றம் சாட்டப்படுபவரோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவருக்கு உதவி செய்பவர்களோ, தாங்கள் குற்றம் செய்யவில்லை என்று நிரூபிக்கவேண்டும் என்று சொல்வதும் சரியல்ல. இப்போது இருக்கக்கூடிய குற்றவியல் சட்டத்தை வைத்தே அது மதத் தீவிரவாதிகளானாலும் சரி, அல்லது குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டவர்களானாலும் சரி, அல்லது வேறு அநியாயங்களைச் செய்பவர்களானாலும் சரி, அப்படிப்பட்டவர்களை ஒடுக்குவதற்கும், அப்படிப்பட்ட இயக்கங்களைத் தடை செய்வதற்கும் சாத்தியமான எல்லாச் சட்டங்களும் இப்போதே நம்மிடம் இருக்கின்றன. ஒரு விசேஷமான சட்டம் என்று சொல்கிறபோது அரசியல் சம்பந்தமான சூழ்நிலை மாறுகிறபோது, அந்த நிலையில் யாரை எப்படியெல்லாம் இந்தச் சட்டம் பாதிக்கும் என்பதைப் பின்னாலேதான். அனுபவரீதியாகத்தான் நாம் அறியமுடியும். ஆகவே, இந்தச் சட்டத்தை, அந்த அடிப்படையிலே ஒரு தெளிவான முறையில் ஆய்வு செய்ய வேண்டும்.

இப்படி, ஜனநாயக ரீதியில் உள்ள உரிமைகளை, மனித உரிமைகளைப் பறிக்கின்ற ரீதியில் இருக்கிற அந்த அம்சங்களை இதிலேயிருந்து எடுத்துவிட்டு வேறுவகையில் எப்படிக் கொண்டுவரவேண்டும் என்பது குறித்து அரசு ஒரு சரியான ஆய்வை நடத்தவேண்டும். பொதுவாகச் சொன்னால், கடந்தகால நிகழ்வுகளை நாம் பார்க்கிறபோது, இப்போதுகூட இன்ஸ்பெக்டர் ஒருவரைப்பற்றிச் சொன்னேன். அவருக்குக் கடுமையான கோபம் என்மீது. இந்தச் சட்டம் பாஸாகி அவர் கையில் அதிகாரத்தைக் கொடுத்தால், எந்த நேரத்தில் வேண்டுமானாலும் இப்படிப்பட்ட ஓர் அநியாயக் குற்றத்தைச் சாட்டி என்னையேகூட அவர் கைது செய்கிற ஓர் உரிமையை நாமே அவருக்கு வழங்கியதாகிவிடும். நம்மையே இப்படி நடத்தினால், சாதாரண மக்களை அவர்கள் என்ன பாடுபடுத்துவார்கள் என்பதைப்





பார்க்க வேண்டும். ஆகவேதான் இந்தச் சட்டம் சாதாரண தமிழ்நாட்டு மக்களிடத்தில் ஓர் அச்சத்தை, பீதியை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த பயங்கரவாதம் இருக்கிறதே, இந்த பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கு இந்தச் சட்டம் அந்த அளவுக்குப் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதவில்லை. ஏனென்றால் இந்தியாவில் பயங்கரவாதம் என்பது பல மாநிலங்களிலும் எப்படியெல்லாம் வளர்ந்து வருகிறது என்பதை தினந்தோறும் நாம் பத்திரிகைகளில் பார்க்கிறோம். எத்தனையோ கடுமையான சட்டங்கள் கொண்டு வந்தும், இவற்றை முழுமையாகத் தடுக்க முடிந்ததா என்பதை ஆராயவேண்டும். ஆகவே, இதை மறுபரிசீலனை செய்வதும், இதுபோன்ற சில திருத்தங்களைக் கொண்டுவருவதும் நல்லது. ஒட்டுமொத்தமாகச் சொன்னால், இந்தச் சட்டத்தை அரசு வாபஸ் வாங்கவேண்டுமென்பது எங்களுடைய கருத்தாகும் என்று சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த அவையின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டிருக்கிற தீவிரவாதத் தடைச் சட்டம் என்பது இன்றைய சூழ்நிலையிலே பல்வேறு மதக் கலவரங்கள், இனக் கலவரங்கள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்ற நிலையில், தமிழகத்திற்கு மிகவும் அவசியமான சட்டம என்று சொன்னாலும்கூட, இந்தச் சட்டத்தைப்பற்றிக் கூறுகின்றபோது பல குற்றவாளிகள் தப்பித்துக்கொண்டாலும் ஒரு நிரபராதிகூட தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதுதான் சட்டத்தினுடைய கருத்து. எனவே இன்றைக்கு இந்தச் சட்டத்தின் மூலமாக நிரபராதிகள் தண்டிக்கப்படுகின்ற நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதை இந்த அரசு மிகக் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். சகோதரர் சுப்பராயன் அவர்கள் சொன்னதைப் போல, இந்தச் சட்டத்தைச் செயல்படுத்துகிற காவல் துறை அதிகாரிகளும் மற்றவர்களும் தங்களுக்குள்ள காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில் இந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதில் அரசு மிகுந்த கவனமாக இருக்க வேண்டும் என்பதை நான் என்னுடைய இயக்கத்தின் சார்பிலே சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே, இந்த அவையிலே பேசியவர்கள் கறுப்புச் சட்டம் என்று சொன்னார்கள். அப்படிச் பேசியவர்கள் கறுப்புச் சட்டம் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்வதற்குப் பலவித காரணங்கள் உண்டு. ஏனென்றால் அவர்களை நேரடியாகப் பாதிக்கின்ற அளவிற்குச் சில செய்கைகள் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றன.

முற்பகல் 11-05

நமது போலீஸ் டி.ஜி.பி. அவர்களே, ஒரு பத்திரிகைப் பேட்டியிலே கூறியிருக்கிறார்கள். தூத்துக்குடி போலீசார் திறமையான முறையிலே செயல்பட்டு ஒரு கொலைக் குற்றத்தைக் கண்டுபிடித்துள்ளனர். ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த ராம்குமார் கொலை செய்யப்பட்டதற்குப் பழிக்குப் பழி வாங்கும் வகையில், நாரைக்கிணறு உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்த தேவர் வகுப்பைச் சேர்ந்த முத்துக்கிருஷ்ணன் கொலை செய்யப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். தலைமை ஆசிரியர் கொலை வழக்குத் தொடர்பாக 2 பேர் தேடப்பட்டு வந்தனர். அவர்களில் ஒருவர் சுரேஷ். அவர், சென்னையில் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களின் அறை 132-ல் தங்கியிருந்தார். தமிழக சட்டமன்றச் செயலாளர்—

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, point of order.

**திரு. லா. சந்தானம்:** No point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் என்னைப் பார்த்துத்தான் பேச வேண்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** It is a point of order.

**திரு. லா. சந்தானம்:** நான் பேசி முடித்த பிறகு, you can raise your point of order. இது ஒரு D.G.P. கொடுத்த....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசுகிறவர்கள் யாராக இருந்தாலும் என்னைப் பார்த்துத்தான் பேச வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சந்தானம் அவர்கள் பேசி முடித்த பிறகு டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தமது ஆட்சேபணையைத் தெரிவிக்கலாம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே நமது மாநில உயர் போலீஸ் அதிகாரி அவர்கள் கொடுத்த பேட்டியைத்தான் இங்கு நான் வாசிக்கிறேனே தவிர, இதில் உரிமைப் பிரச்சினை என்ன இருக்கிறது? இதில் point of order என்ன இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. நான்





இதைச் சொல்லவில்லை. தமிழக சட்டமன்றச் செயலாளர் அவர்களின் அனுமதிபெற்று கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அவர்களின் அறையை போலீசார் சோதனையிட்டனர். அப்போது, கிருஷ்ணசாமியின் அறையில் தங்கியிருந்த சுரேஷை போலீசார் கைது செய்தனர். போலீசார் அவரிடம் விசாரணை நடத்தியபோது, கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ.-வின் தூண்டுதலின்பேரில்தான் தலைமை ஆசிரியரைக் கொலை செய்ததாக சுரேஷ் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். எனவே, கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ.-விற்கு எந்த அளவு தொடர்புள்ளது என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது என்று தமிழக போலீஸ் டி.ஜி.பி. சர்மா அவர்கள் கூறினார்கள் என்பது பத்திரிகைச் செய்தி. 'மடியிலே கனம் இல்லையென்றால், வழியிலே பயம் இல்லை' என்று சொல்வார்கள். இன்றைக்கு நமக்கெல்லாம் நேர்மையாக ஓர் அரசு நடக்க வேண்டும். எந்தவித இடர்ப்பாடும் இல்லாமல் ஓர் அரசு நடக்க வேண்டும். இன்றைக்கு கோவையிலே குண்டு வெடித்தது என்று சொன்னால், அந்தத் தீவிரவாதத்தின் பெயரால் எத்தனை அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்? அதைப்போல, இந்த இனக் கலவரத்தின் மூலமாக எத்தனை அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத்தான் நாம் இன்றைக்குப் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்றைக்கு, தென் பகுதியிலே இருக்கின்ற மக்களெல்லாம் கொஞ்சம் உணர்ச்சிவசப்படுபவர்கள் என்கின்ற காரணத்தினால் தன்னுடைய அரசியல் செல்வாக்கைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு அங்கு இந்தக் கலவரங்களெல்லாம் தூண்டி விடப்படுகின்றன. மற்ற பகுதிகளிலெல்லாம் அவை நடைபெறவில்லை. எனவேதான், அதன்மூலமாக தங்களுக்குச் சில ஆபத்தான நிலை வருமே என்பதை உணர்ந்து அவர்கள் இந்தச் சட்டத்தையெல்லாம் மறுக்கிறார்கள். ஆனால், தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். அதற்குச் சட்டம் வேண்டும். அதைத்தான் நான்கூட இங்கு சுட்டிக்காட்டினேன். ஆயிரம் குற்றவாளிகள் தப்பித்துவிட்டாலும்கூட ஒரு நிரபராதிகூடத் தண்டிக்கப்படக் கூடாது என்பதுதான் சட்டத்தினுடைய கடமையாக இருக்க வேண்டும். பலர் எடுத்துச் சொல்லியதைப் போல, குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்கின்ற நோக்கத்தோடுதான், தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தட்டிக் கேட்கப்பட வேண்டும் என்கின்ற எண்ணத்தோடுதான் இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்தச் சட்டத்தை, என்னுடைய இயக்கத்தின் சார்பாக நான் வரவேற்று அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள், தமிழ்நாடு காவல் துறைத் தலைவர் சர்மா அவர்கள் சில மாதங்களுக்கு முன்பு உண்மைக்கு மாறான குற்றச்சாட்டை என்மீது பத்திரிகையின் வாயிலாகச் சொன்னதை இப்போது சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். ஏதோ ஒரு ஆசிரியர் படுகொலையிலே சம்பந்தப்பட்ட சுரேஷ் என்பவர் என்னுடைய அறையிலே கைது செய்யப்பட்டதாக, அந்தக் காவல் துறைத் தலைவர் அவர்கள் பத்திரிகையாளர்களுக்குச் சொன்ன செய்தியை நான் அன்றே கடுமையாக மறுத்திருக்கிறேன். என்றைக்கு அந்த சுரேஷ் என்பவர் என்னுடைய அறையிலே கைது செய்யப்பட்டார் என்று சொன்னார்களோ அந்த நாளில், தமிழ்நாடு இல்லத்தில், டெல்லியிலே புதிய தமிழகத்தைப் பதிவு செய்வதற்காகத் தங்கியிருந்தேன் என்பதற்கான ஆதாரங்கள் அத்தனையையும் நான் கொடுக்க முடியும் என்பதை நான் இந்தநேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுபோன்ற தவறான தகவல்களின் அடிப்படையில் ஒரு சட்டமன்ற உறுப்பினர்மீது சொல்லக்கூடிய புகாரை, உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டு, திரு. சந்தானம் மீதும், திரு சர்மா மீதும்....

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தப் பிரச்சினை சம்பந்தப்பட்ட சுரேஷ் என்பவர் உங்கள் அறையிலிருந்து கைது செய்யப்பட்டார். எனவே, இதுசம்பந்தமாக உங்களுக்குத் தொடர்பு இருக்குமா என்று விசாரித்துக் கொண்டு இருக்கிறோம் என்றுதான் டி.ஜி.பி. சொல்லியிருக்கிறார். ஆகவே, அதிலே ஒன்றும் உரிமைப் பிரச்சினை கிடையாது. உட்காருங்கள். திரு. ஐ. கணேசன்,

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படிப் பேசினால் தேவையில்லாத பிரச்சினை எல்லாம் வரும். டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசியது எதுவும் அவைக்குறிப்பில் இடம் பெறாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



(திரு. லா. சந்தானம், திரு. பி.என். வல்லரசு, டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகிய மூவரும் எழுந்து நின்றனர்)

மூன்று உறுப்பினர்களும் தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. லா. சந்தானம்:** **

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**திரு. பி.என். வல்லரசு:** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் மூவர் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சந்தானம் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டது; அவர் சான்றாக எடுத்துக்காட்டியது; காவல் துறையினுடைய தலைவர் திரு. சர்மா அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியிலே சுட்டிக்காட்டியிருப்பது, டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களை நேரடியாகக் குற்றம் சாட்டுகின்ற ஒன்று அல்ல. திரு. கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, சுரேஷ் என்பவர் அன்றைக்கு, எம்.எல்.ஏ-க்களுடைய விடுதியிலே அவருடைய அறையிலேயிருந்து கைது செய்யப்பட்டபோது கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே இல்லை, டெல்லியிலே இருந்தார் என்ற அவருடைய வாதத்தை, அவருடைய கருத்தை, அவருடைய கூற்றை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அதிலே எந்தவிதமான மாறுபாடும் இல்லை. அதற்காக அவருடைய அறையிலே இருந்து கைது செய்யப்படவே இல்லை என்று கூற முடியாது. சட்டமன்றச் செயலகத்திடம் காவல் துறையினர் அனுமதிபெற்ற பிறகுதான் எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் உறுப்பினருடைய அறையிலேயிருந்து சுரேஷ் கைது செய்யப்பட்டு இருக்கிறார். கிருஷ்ணசாமிதான் தூண்டினார் என்று சுரேஷ் சொன்னதை, காவல் துறைத் தலைவர் சர்மா அவர்கள் அப்படியே நம்பிக்கொண்டு திரு. கிருஷ்ணசாமி மீது குற்றம் சாட்டிவிடவில்லை. அப்படிச் சொல்லியிருக்கிறார். யார் வேண்டுமானாலும், யார்மீது வேண்டுமானாலும் குற்றம் சுமத்தலாம். தாங்கள் தப்பித்துக் கொள்வதற்காக, ஒரு முக்கியமானவர்மீது குற்றத்தைச் சாட்டிவிட்டுத்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

தாங்கள் தப்பித்துக்கொள்ள முனையலாம். இது விசாரிக்கப்படும் என்றுதான் சொல்லி இருக்கிறாரே தவிர, சுரேஷ் சொன்னதிலேயிருந்து திரு. கிருஷ்ணசாமிதான் குற்றவாளி என்று போலீஸ் தலைவர் சர்மா அவர்கள் சொல்லவில்லை. எனவே இதிலே கிருஷ்ணசாமி அவர்கள், சர்மாமீது உரிமைப் பிரச்சினை கொண்டு வருவதற்கு எந்தவிதமான முகாந்திரமும் கிடையாது. அந்தச் செய்தியைப்படித்துக் காட்டிய திரு. சந்தானம் அவர்கள்மீதும் உரிமைப் பிரச்சினை கொணர்வதற்கு எந்த முகாந்திரமும் கிடையாது.

இந்த வாதம் ஒருபுறம் இருந்தாலும்கூட, இன்று சட்டமன்றக் கூட்டத் தொடரின் கடைசி நாள். எல்லோரும் அமைதியாக, ஜனநாயக மரபில் பல செய்திகளைப்பற்றி விவாதித்தோம். நல்ல முடிவுகளை எடுத்தோம் என்ற அளவிலே இன்றைக்குக் கலைந்து செல்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

இந்தச் சட்டமே எதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்றால், இனக் கலவரம், மதக் கலவரம், இவை மூளாமல் இருக்க, அதைத் தடுப்பதற்காகக் கொண்டுவரப்படுகின்ற சட்டம்தான்; யாரையும் பழிவாங்குவதற்காக அல்ல.

இங்கே சில பேர் சிறுபான்மையினர், சிறுபான்மையினர் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இது சிறுபான்மைச் சமுதாயத்தின்மீது தொடுக்கப்படுகின்ற தாக்குதலும் அல்ல. இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், யாராக இருந்தாலும், எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், அவர்கள் தீவிரவாதிகளாக இருப்பார்களேயானால், அந்தத் தீவிரவாதச் செயல்கள் நாட்டில் தலையெடுக்கக்கூடாது என்பதற்காகத்தான்.

முற்பகல் 11-15

இன்றைக்குத் தமிழகம் அமைதியாக இருக்கிறது. நாளைக்கு இந்த அமைதியைக் கெடுப்பதற்குச் சில பேர், அமைதி கெட்டால்தான் தமிழ்நாட்டிலே அரசை மாற்ற முடியும் என்று எண்ணுகின்ற சில பேர்கூட அமைதிக்குப் புறம்பான காரியங்களில் ஈடுபடும்போது, மதவெறிகளை, வகுப்பு வெறிகளைத் தூண்டிவிட்டு, ஏற்கெனவே நடைபெற்றதைப் போன்று, தென்பாண்டிச் சீமையிலே நடைபெற்ற வகுப்புக் கலவரம், கோவைப் பகுதியில் நடைபெற்ற மதக் கலவரம் போன்ற கலவரங்கள் நடைபெறாமல் தடுக்க வேண்டும் என்ற நல்ல



நோக்கத்தோடுதான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகின்றது. தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் காட்டியிருப்பதைப்போல, தவறான முறையிலே இதைப் பயன்படுத்துகின்ற அரசு அல்ல இந்த அரசு. இப்போதே எத்தனையோ சட்டங்கள் பயங்கரமான சட்டங்கள், இருந்தாலும்கூட அவற்றைத் தவறான முறையிலே இந்த அரசு பயன்படுத்தவில்லை என்பதை இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். எனவே, திரு. சந்தானம் அவர்கள் பேசியதைத் தொடர்ந்து திரு. கிருஷ்ணசாமி அவர்கள் பேசினார்கள். அதிலே சில உண்மைகள் இங்கே விளக்கப்பட்டு விட்டன. அதைத் தொகுத்து நானும், இதுதான் உண்மை, நேரடியாக திரு. கிருஷ்ணசாமி அந்தக் குற்றச்சாட்டிலே குற்றவாளியாகச் சுட்டிக்காட்டப்படவில்லை என்பதையும் தெரிவித்து விட்டேன். அதற்கு மேலாக இருவருக்குமிடையே ** என்று குறிப்பிட்டேனே, அதிலிருந்து நான் சொல்லுகின்ற இந்தப் பகுதிகள் எல்லாம் அவைக்குறிப்பிலே இடம்பெற்று, பத்திரிகையிலே வெளிவருமானால், எதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறதோ, அந்த நோக்கம் நிறைவேறாமல், வெளியிலே ஒரு புகைச்சலை, ஒரு பூதாகரமான புயலைக் கிளப்புவதற்கு அது காரணமாக ஆகிவிடும் என்ற காரணத்தினால், அவற்றை மாத்திரம் அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, அவைக்குறிப்பிலிருந்து அந்தப் பகுதி நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) இன்று இந்தக் கூட்டத் தொடரினுடைய இறுதி நாள். (குறுக்கீடுகள்) இன்று இந்தக் கூட்டத் தொடரினுடைய இறுதி நாள். இங்கே நாம் எல்லாம் சகோதரத்துவத்தோடு பழகுகிறோம். இங்கே நாம் நடந்து கொள்கின்ற விதம் வெளியிலே மற்றவர்கள் பாராட்டக்கூடிய வகையிலே இருக்க வேண்டும். இங்கே நாம் நடந்து கொள்கின்ற இந்த விதத்தின் மூலமாக வெளியிலே வேறு தவறான விளைவுகள் ஏற்பட்டுவிடக் கூடாது. எனவே, நீங்கள் மூவரும் அமைதியாக உட்காருங்கள். நீங்கள் பேசியது எதுவும் அவைக்குறிப்பிலே ஏறாது. மாண்புமிகு முதலமைச்சர்

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று அவர் குறிப்பிட்ட அந்தச் சொற்றொடர் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. தயவுசெய்து அமைதி காக்கவும் This is my ruling. உட்காருங்கள். (குறுக்கீடு)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** திரு. சந்தானம் சொன்னதை ரிமூவ் செய்யுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லாவற்றையும் சேர்த்துத்தான் சொன்னேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** என்மேல் குற்றம் சாட்டி இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. ஐ. கணேசன் அவர்களைப் பேசுமாறு அழைக்கின்றேன். (குறுக்கீடு)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** எதற்காக இந்த விவாதம்? பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தைப்பற்றி விவாதிப்பதற்காக, இதிலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நானும் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லிவிட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். உங்களைச் சம்பந்தப்படுத்திச் சொல்லவில்லை. இந்தப் பிரச்சினையிலே சம்பந்தப்பட்ட சுரேஷ் உங்கள் அறையிலேயிருந்து கைது செய்யப்பட்டார் என்றுதான் சொல்லி இருக்கிறார்களே தவிர, உங்களைச் சம்பந்தப்படுத்தவில்லை. உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சந்தானம் அவர்கள் சொல்லி, அதற்குப் பிறகு நான் தந்திருக்கின்ற விளக்கம் எல்லாம், திரு. கிருஷ்ணசாமி அவர்களுக்கு எதிர்காலத்திலே, ஏன் நாளைக்கேகூடப் பயன்படக்கூடிய விஷயங்கள் என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது. திரு. சந்தானம் இங்கே சொன்னதை அவைக்குறிப்பிலேயிருந்து எடுத்துவிட்டால், என்ன நிலை? நாளைக்கு ஒரு மேடையிலே திரு. சந்தானம் இதையே சொல்வாரானால், அப்போது அதற்குப் பதில் அளிக்க நான் இங்கே வைத்த வாதங்களையே திரு. கிருஷ்ணசாமி பயன்படுத்திக்கொள்ளலாம். அதற்கான நல்ல ஆயுதத்தைத்தான் நான் அவர்களுக்குத் தந்திருக்கிறேன். அதைப் புரிந்து கொள்ளாமல், அனைத்தையும் எடுத்துவிடுங்கள் என்று கூறுவது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.





**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமுன்வடிவின்மீது பாட்டாளி மக்கள் கட்சி 1-ன் சார்பாக என்னைப் பேச அழைத்த தங்களுக்கு என்னுடைய நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன். இந்தச் சட்டம் பொதுமக்களுக்கு விரோதமான சட்டம் என்றும் தனக்கு வேண்டாதவர்கள் வீட்டில் ஆயுதங்களை அவர்கள் அறியாமல் வைத்திருந்தால், அவர்களை பயங்கரவாதிகளாக ஆக்க, இந்தச் சட்டத்தில் இடம் உண்டு. அதேபோல், பிடிபட்டவர், ஓராண்டு வரை விசாரணையின்றி காவலில் இருந்தால், அவர் குற்றவாளி இல்லை என்று எப்படி நிரூபிக்க முடியும் என்பதையும் சிந்திக்க வேண்டுகிறேன். இந்த பயங்கரவாத புதிய சட்டம், ஜாமீன் மறுப்பு, போலீசாரின் சித்திரவதையால் கொடுக்கப்படும் வாக்குமூலம், அப்படியே நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளுதல், போலீஸ் காவலில் நீண்டகாலம் வைத்திருத்தல், கிரிமினல் சட்டத்தின் ஆணிவேரையே அறுப்பதோடு மக்களாட்சித் தத்துவத்திற்கு எதிராகவும் உள்ளது. ஆகவே எல்லாவிதமான வன்முறைகளையும் கட்டுப்படுத்த இப்போதுள்ள சட்டங்கள் போதுமானதாக இருக்கும்போது இந்த பயங்கரவாதச் சட்டம் தேவைதானா என்பதனை முதல்வர் அவர்கள் சிந்திக்க வேண்டும்.

முற்பகல் 11-20

இப்போது இருக்கக்கூடிய சட்டத்தின் அடிப்படையிலேயே பெண்ணாகரத்திலே சட்டக் கல்லூரி மாணவர் செல்வன் என்பவர் கைது செய்யப்பட்டு நீண்ட நாட்களாக வெளியே விடப்படவில்லை. அதேபோல் இந்தச் சட்டமன்றத்தில் அடிக்கடி பேசப்படுகிற, வீரப்பன் வழக்கிலே கைது செய்யப்பட்டவர்கள் கர்நாடகத்தில் 4-1/2 ஆண்டு காலமாக சிறையில் இருக்கிறார்கள். அவர்களும் விடுதலை செய்யப்படவில்லை. அவ்வளவு கடுமையான சட்டம் இப்போது இருக்கிறது. அதைவிட்டு, விட்டு இந்தச் சட்டம் தேவைதானா என்பதனை இந்த அரசு சிந்திக்க வேண்டும். மிசா, தடா போன்ற மிகக் கடுமையான சட்டங்கள், தி.மு.க. எதிர்க்கட்சியாக இருக்கிற காலத்தில் மட்டுமே எதிர்த்துள்ளது. தனது பெயரில்கூட இந்த மிசாவை கௌரவப் பட்டமாகச் சூட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதே தி.மு.க. ஆட்சி, அதிகாரத்திற்கு வரும்போது, 'பழைய குருடி, கதவைத் திறடி' என்பதுபோல இந்தச் சட்டம் வருகிறது. பழைய சட்டம் பேயாக இருந்தால் இந்தச் சட்டம் பிசாசாக இருக்கிறது என்று

சொல்லி, இந்தக் கடுமையான சட்டத்தை இந்த அவையிலே கொண்டு வந்திருப்பது தற்போது இந்த வாதம் முடிந்த பிறகு சில திருத்தங்களோடு நிச்சயமாக நிறைவேற்றப்படும். ஆகையினாலே என்னுடைய பாட்டாளி மக்கள் கட்சி-1. என்ற முறையிலே போய்விடுகிறோம். நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம் என்று சொல்லி, விடைபெறுகிறேன்.

(பாட்டாளி மக்கள் கட்சி-1 உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடுக்க சட்டமுன்வடிவு கொண்டு வந்திருக்கிறீர்கள். இந்தச் சட்டமுன்வடிவை ஒரு நாட்டுப் பற்று கருதி, நாட்டிலே அமைதி நிலவ வேண்டும், அந்நியர்கள் நம் நாட்டிற்குள் புகுதல் கூடாது, தீவிரவாதிகளுடைய ஆதிக்கம் குறைய வேண்டும், வன்முறையினுடைய ஆதிக்கம் குறைய வேண்டும் என்ற நாட்டுப் பற்றுடன் நாம் வரவேற்றாலும், இந்திய அளவிலே இந்தச் சட்டம் கொண்டு வந்தால் மிகவும் நல்லதாக இருக்கும். ஆனால், தமிழ்நாட்டு அளவில் நீங்கள் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளீர்கள்.

இங்கே ஏற்கெனவே தடா சட்டம், தேசிய பாதுகாப்புச் சட்டம் போன்ற சட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. அந்தச் சட்டங்களைப் பயன்படுத்தி, தீவிரவாதிகளை, பயங்கரவாதிகளை, ஜாதிக் கலவரத்தைத் தூண்டுகிறவர்களை, மதக் கலவரத்தைத் தூண்டுகிறவர்களை ஏன் இதுவரைக்கும் நீங்கள் பிடிக்கவில்லை; ஒடுக்கவில்லை? இப்போது ஏன் கொண்டு வருகிறீர்கள்? தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டுப் போய்விட்டது. தீவிரவாதிகளின் ஆதிக்கம் வந்துவிட்டது. பாகிஸ்தான் உளவாளிகள் வந்துவிட்டார்கள். அதனாலே பாரதீய ஜனதாவினுடைய ஆட்சியில் இந்த ஆட்சியின்மீது நடவடிக்கை எடுத்துவிடுவார்கள் என்று பயந்துதான் அரசியல் ரீதியாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களே தவிர, நீங்கள் உண்மையிலேயே இந்த பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் கொண்டுவரவில்லை. இன்றைக்கு உங்களுடைய கூட்டணியிலே உள்ளவர்கள் அதாவது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினர் இந்தச் சட்டத்தை ஆதரிக்கிறார்கள்; பார்வர்டு பிளாக் கட்சியினர் இந்தச் சட்டத்தை ஆதரிக்கிறார்கள்; மற்ற தோழமைக் கட்சியினர் எல்லாம் இந்தச் சட்டத்தை எதிர்க்கிறார்கள் என்றால், இதிலேயே உங்களுக்குள்





ஒற்றுமை இல்லாத ஒரு நிலை இருக்கிறது. அப்படியென்றால், இந்தத் தீவிரவாதத்தை ஆதரிக்கக்கூடியவர்களுடன் நீங்கள் ஏன் கூட்டு சேருகிறீர்கள்? ஆகவே இதையெல்லாம் அரசியல் பண்ணுவதற்காக ஏதோ— தீவிரவாதத்தை வளர்த்து விடுவதே யார்? மதக் கலவரத்தையும் ஜாதிக் கலவரத்தையும் ஓட்டிற்காக தமிழ்நாட்டிலே வளர்த்து விட்டதே இந்த அரசுதான். ஆனால்—இந்த அரசுக்கு ஏதோ நாட்டுப் பற்று இருக்கிற மாதிரி, இனக் கலவரத்தைத் தூண்டுகிறவர்களை, மதக் கலவரத்தைத் தூண்டுகிறவர்களை ஒழிக்கிற மாதிரி, ஒரு சட்டத்தைக் கொண்டுவருவது என்பது Eye wash அது' மாதிரிதான் இந்தச் சட்டம் இருக்கிறது.

சரி, நீங்கள் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களே, இந்தச் சட்டத்தில் எத்தனை ஓட்டை உடைசல்கள் இருக்கின்றன. ஏற்கெனவே தடா சட்டம் இருந்தது. இந்தத் தடா சட்டத்தை சுப்ரீம் கோர்ட்டில் உடைத்தார்கள். இப்போது வெள்ளைக்காரர்கள் போட்டிருக்கிற சட்டத்தையே நம்மால் முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை. ஓட்டை உடைசல்கள் நிறைய இருக்கின்றன. நீங்கள் அவசரத்திலே கொண்டு வந்த சட்டத்திலே எவ்வளவு ஓட்டை உடைசல்கள் இருக்கப்போகிறதோ தெரியவில்லை. இந்தச் சட்டத்தின் ஆயுட்காலம் 5 வருடம் என்று சொல்கிறீர்கள். 5 வருடத்திற்குள் நீங்கள் இந்த பயங்கரவாதத்தை ஒழித்து விடுவீர்களா? நிரந்தரமில்லாத ஒரு சட்டத்தாலே நிரந்தரமாகத் தீவிரவாதிகளை ஒழித்து விடுவீர்களா என்று அறிய விரும்புகிறேன். 'அற்ப ஆயுள் குன்ற மாதக் குழந்தையாக' இருக்கிறது இந்தச் சட்டம். அரக்க குணம் உடைய பயங்கரவாதத்தை இந்தச் சட்டத்தால் ஒழிக்க முடியும் என்று எந்த ஜோதிடர் நம்முடைய அரசுக்குச் சொன்னார்கள் என்று எனக்கே தெரியவில்லை. (குறுக்கீடுகள்) ஏன் இடையூறு பண்ணிக்கொண்டே இருக்கிறீர்கள். பேசுவதைக் கேளுங்கள்.

முற்பகல் 11-25

இந்தச் சட்டமானது வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்றிருக்க வேண்டும். இந்தச் சட்டம் பயங்கரவாதத்தோடு காம்ப்ரமைஸ் பண்ணுகிற அளவிலேதான், ஒத்துப்போகிற மாதிரிதான் இருக்கிறதே தவிர, இந்தச் சட்டத்திலே பயங்கரவாதிகளுடைய சொத்துக்களை அபகரிப்போம் என்றிருக்கிறது. அது இந்தச் சட்டத்திலே உள்ளது. இந்த பயங்கரவாதிகளுடைய முன்னோர்கள் சம்பாதித்த சொத்தை எப்படி நீங்கள் அபகரிக்க முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே கேட்க ஆசைப்படுகிறேன்.

[திரு. இரா. தாமரைக்கனி] [1998 மே 30

மாண்புமிகு அமைச்சர் ஆலடி அருணா அவர்கள், இந்தச் சட்டம் அரசியல் கட்சிகளையோ அல்லது வேண்டாதவர்களையோ பழிவாங்குவதற்காகக் கொண்டுவரவில்லை என்று சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1989-90-ல் முதலமைச்சராக இருந்தபோது, சொன்னார்கள் குண்டர் தடுப்புச் சட்டம், சாராய வியாபாரி, மரம் கடத்துகிறவன் போன்றவர்கள் மீதுதான் பாயும் என்று சொன்னார்கள். ஆனால் அன்றையதினம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளராக இருந்த என்னை, அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, இதே முதலமைச்சர் குண்டர் சட்டத்திலே கைது பண்ணினார்கள். எங்களுடைய தலைவி, புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள் சுப்ரீம் கோர்ட்டிலே அதற்கு அப்பீல் பண்ணி விடுதலையாகி, சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி அந்த கவர்ன்மெண்ட்டையே கண்டிக்கிற அளவிலே இருந்தது. ஆகவே, அரசியல் கட்சிகளைப் பழி வாங்குவதற்காக அல்லாமல், உண்மையான குற்றவாளிகளை, தேசத் துரோகிகளைப் பழிவாங்குவதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். ஏற்கெனவே, நிறைய சட்டங்கள் இருக்கின்றன. ஆனால், நீங்கள் இதுவரை மௌனமாக இருந்துவிட்டு, இப்போது ஏதோ பயங்கரவாதிகளை ஒழிக்கப் போகிறோம் என்று சொலவது — பயங்கரவாதத்தை உண்டு பண்ணியது யார்? திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், அவர்களுடைய கட்சிக்காரர்களுக்கு ஆணையிட்டாலே இந்த நாட்டிலே பயங்கரவாதம் ஒழிந்து விடும். அதேமாதிரி எங்களுடைய கட்சியை நாங்கள் கட்டுப்பாடு பண்ணுகிறோம். அதேமாதிரி, மற்ற எல்லா அரசியல் கட்சிகளையும் நீங்கள் கட்டுப்படுத்துங்கள். அதேமாதிரி எல்லா மதத் தலைவர்களும் இங்கே உள்ளவர்களைக் கட்டுப்படுத்தினாலே பயங்கரவாதம் ஒழிந்துவிடும். ஆனால், இங்கே சட்டசபையில் பேசுவது ஒன்று, அங்கே போய் எல்லோரும் தூண்டிவிட்டால் எப்படிப் பயங்கரவாதம் ஒழியும்? இதை அரசியல் பண்ணுவதற்காகவே, வாஜ்பாயுடன், மத்திய அரசுடன் அரசியல் பண்ணுவதற்காகவே, இந்தச் சட்டம் இன்றைய தினம் கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர, உண்மையான தீவிரவாதத்தை ஒழிப்பதற்காக இந்த அரசு கொண்டுவரவில்லை. மதத் தீவிரவாதத்தையும் ஜாதி தீவிரவாதத்தையும் பாலூட்டி வளர்ப்பது இந்த அரசுதான். ஆகவே, அரசியல் உக்கிரம் கொண்டது இந்தச் சட்டம் என்று சொல்லி என்னுடைய கருத்தைக்கூறி, விடைபெறுகின்றேன்.



1998 மே 30]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்திப்.

**திரு. ம. அப்துல் லத்திப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகக் கனத்த இதயத்தோடு, மிகுந்த வேதனையோடு, அதே நேரத்திலே மிகுந்த தயக்கத்தோடு இந்தச் சட்ட முன்வடிவு குறித்து ஒருசில கருத்துக்களை நான் அவையில் வைக்கிறேன். இந்தச் சட்டம், அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது; அரசமைப்புச் சட்டத்தின் சில விதிமுறைகளை மீறக் கூடியது. எனவே, சட்ட ஆய்வுகள், இதனுடைய சட்டத் தன்மை, அரசமைப்புச் சட்டத் தன்மை இவை ஆய்வு செய்யப்படும்போது, இது வரம்புமீறி இயற்றப்பட்டிருக்கிற ஒரு சட்டம் என்று உரிய நீதிமன்றத்திலேயே தீர்ப்பு வழங்கப்படும் என்ற நிலையிலே ஊனமுள்ள ஒரு சட்டமாக, அரசமைப்புச் சட்டத்திற்கு ஏற்புடையதல்ல என்று தெரிந்தும் கொண்டுவரப்பட்டிருக்கிற ஒரு சட்டமாகும். சமூகத்திலே பரஸ்பரம் ஐயப்பாடுகளையும், குழப்பங்களையும் ஏற்படுத்துவதற்காகவே இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருப்பதாக நான் கருதுகிறேன்.

முற்பகல் 11-30

அதேநேரத்தில், அரசியல்ரீதியாக இது மிகவும் சிக்கலை உண்டாக்கக்கூடிய ஒன்று. இருக்கக்கூடிய அரசியல் அடிப்படையையே ஊனம் ஏற்படுத்தக்கூடிய வகையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

பொதுவாக, எந்தச் சூழ்நிலையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றால் தமிழ்நாட்டிலே இப்போது சரியாகவோ, தவறாகவோ, திட்டமிடப்பட்டு ஓர் உணர்வு பரப்பப்பட்டிருக்கிறது. தீவிரவாதிகள் என்று சொன்னால், பயங்கரவாதிகள் என்று சொன்னால் அவர்கள் இன்னார்கள்தான் என்ற ஓர் உணர்வு தமிழ்நாட்டிலே பரப்பப்பட்டிருக்கிறது. அது கீழ்மட்டத்திலிருந்து மேல்மட்டம் வரையிலே, குறிப்பாக அதிகார வட்டாரத்திலே வேரூன்றிருக்கிறது. குறுகிய காலத்தில். ஒரு குறுகிய காலத்தில், தோன்றிய குறுமதியாளர்களால் இந்த நிலை தமிழகத்திலே உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் பயங்கரவாதச் சட்டத்தை தமிழக அரசு சட்டமன்றத்திலே கொண்டு வந்திருக்கிறது என்று சொல்லும்போதே நாடு முழுவதும் இன்றைக்கு யாரோ குறிப்பிட்டவர்களைத் தண்டிப்பதற்காக, அவர்களுடைய சுதந்திரத்தைப் பறிப்பதற்காக, அவர்கள் தன்னிச்சையாக தங்களுடைய பாரம்பரியத்திற்கு ஏற்ப கலாச்சாரத்தைப் பேணி, பண்பாட்டைப்

பேணி, அவர்கள் நடக்கக் கூடாது என்று யாரோ நினைக்கிறார்களே ஒருசிலர், அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு இருப்பதாக இன்று நாடு முழுவதும் பேசப்படுகிறது; எண்ணப்படுகிறது. எனவே, இந்த ஆட்சியின்மீதும் இந்த ஆட்சியின் தலைவர்மீதும், இந்த ஆட்சியில் இடம் பெற்று இருக்கக்கூடிய அனைவர்மீதும், ஆளுங்கட்சியாக இருக்கின்ற அந்த கட்சியின் மீதும் இயற்கையாகவே பாரம்பரியமாக அன்பும், பற்றும் நீக்கமறா ஒரு பிடிப்பும் கொண்டு இருக்கக்கூடிய என்னைப் போன்றவர்கள் இப்படிப் பேசக்கூடிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டதே என்று அலமலர்ந்து நிற்கின்றேன், ஆதங்கத்தோடு நிற்கின்றேன். இதை எப்படியாவது தடுக்க முடியுமா என்று எண்ணி, எண்ணிப் பார்த்தேன். தடுப்பதற்கான சூழ்நிலை இல்லை என்றும் பத்திரிகையில் வருகிற செய்திகள் எனக்கு உணர்த்துவதாக இருக்கிறது அந்தச் செய்திகள் எல்லாம் வராமல் இருந்தாலும் நாட்டுக்குத் தேவையான ஒரு சட்டத்தை ஒரு நெருக்கடியான நேரத்தில் அரசு கொண்டு வந்தது. தன்னுடைய கடமையைச் செய்தது என்று ஒருவேளை அது ஏற்றுக்கொள்ளப்படலாம். ஆனால் சில செய்திகள், இன்றைக்குக் காலையில் ஒரு செய்தி, அது இன்றைக்கே ஆக வேண்டும். இன்றைக்கே ஆக வேண்டும் என்று ஒருவர் சொல்கிறார். அவர் சொல்வதினுடைய அடிப்படையில் இந்தச் சூழ்நிலையில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் அதனுடைய பொருள் எல்லாம் என்ன ஆகும்? விபரீதங்கள் ஆகுமே என்றுதான் நான் மிகுந்த அலமலர்ந்து இங்கே நிற்கின்றேன்.

1973-74-ல் நான் நீண்ட நாட்களாக இருக்கிற சட்டசபையில் இந்த சட்டசபை வாழ்க்கையிலே ஒரே ஒரு தடவை திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்த ஒரு சட்டத்தை எதிர்த்து இருக்கிறேன். இப்போது இரண்டாவது தடவையாக இவ்வளவு நாட்களுக்குப் பிறகு இப்படி ஒரு சட்டத்தை எதிர்க்கக்கூடிய துர்பாக்கிய நிலை எங்களுக்கு ஏற்பட்டு இருக்கிறதே என்றுதான் நான் மிகுந்த வேதனையோடு இங்கே நின்று கொண்டிருக்கிறேன்.

இந்தச் சட்டம் தனிப்பட்டவர் உரிமையைப் பறிக்கிறது. வழக்கு மன்றத்தில் குற்றவியல் சட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது அதிலே பாரம்பரியமான சட்டத்தின் அடிப்படையிலே வழங்கப்பட்டு இருக்கிற அடிப்படை உரிமையை இது பறிக்கிறது. உதாரணமாக, பொதுச் சட்டத்திலே, burden of proof, சாட்சியங்களை நிருபிக்கக்கூடிய பொறுப்பு, It is the prime responsibility of the prosecution. பிராசிகியூஷன்தான் அதைப்





புரூவ் செய்ய வேண்டும். ஆனால், இதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? குற்றவாளிகள், தான் குற்றவாளி இல்லை என்பதற்கான புரூஃபை, அதற்கான அத்தாட்சியைக் கொடுக்க வேண்டும் என்று மாற்றிச் சொல்லியிருக்கிறார்கள். உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற அடிப்படை என்ன?

"An accused is innocent unless it is otherwise proved by the prosecution." அதுதான் உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற குற்றவியல் நடைமுறைச் சட்டத்தினுடைய அடிப்படை——

முற்பகல் 11-35

**திரு. சி.டி. தண்டபாணி:** பிரெஞ்ச் அரசமைப்புச் சட்டத்திலே, burden of proof is vested on the accused.

**THIRU M. ABDUL LATHEEF:** Hon. Deputy Speaker Sir, I am talking of countries where democracy prevails. I do not want any controlled democracy, any guided democracy and I am proud to say that Indian democracy is a free democracy. In this free democracy whether such restrictions can take away the individual liberty and the general principles which are being followed by all the Criminal Courts during the course of their criminal dispensation, is the question. I am saying other things being equal, this is the general principle in all the free democratic countries. You are talking of controlled democracy, guided democracy, regimented democracy. I am not taking that one into my consideration.

**HON. THIRU ALADI ARUNA:** Hon. Deputy Speaker Sir, French Government is not under guided democracy or controlled democracy. It is a free and fair democracy.

**THIRU C.T. DHANDAPANI:** Hon. Deputy Speaker Sir, Indonesia is a controlled democracy.

**THIRU M. ABDUL LATHEEF:** Hon Deputy Speaker Sir, I am not worried about Indonesia or any other such country. I know the intention of the Hon. Member. The insinuation and aspersion behind your observation is well known to me. It is very quite clear. Why do you point out Indonesia? We are far away from Indonesia. Don't talk about Indonesia. What is the

general principle followed in this country? That is the point I would like to impress upon. இப்பொழுது இதிலே burden of proof எடுத்து விட்டீர்கள். அதுமட்டுமில்லை. Benefit of doubt—சந்தேகம் இருந்தால் அந்தச் சந்தேகத்தினுடைய பலன் குற்றவாளிகளுக்குப் போய்ச் சேர வேண்டும். ஆனால், இதிலே என்ன தெரியுமா? சந்தேகம் வந்தால் பலன் குற்றவாளிக்கு இல்லை. எவன் வழக்கைத் தொடுக்கிறானோ அந்த அதிகாரிக்குப் போய்ச் சேர வேண்டுமென்றெல்லாம் இதிலே நீங்கள் இடம் அளித்திருப்பது எந்த அளவுக்கு இந்த நாட்டினுடைய ஜனநாயகப் பண்புகளுக்கு சட்டத்தினுடைய இறையாண்மையை மதிக்கக்கூடிய நம்முடைய மக்களுக்கு ஏற்புடையதாக இருக்கும், நீதிக்கு வழி வகுக்கும், நீதியை நிலைநிறுத்தும் என்பதைத்தான் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இதிலே இன்னொன்று என்னவென்றால் double jeopardy என்று சொல்லுவார்கள். ஒருவனுக்குத் தூக்குத் தண்டனை கொடுக்கிறீர்கள். தூக்குத் தண்டனை கொடுத்தபிறகு அவன் சொத்தையும் ஜப்தி செய்கிறீர்கள். அப்படிச் சொத்தை ஜப்தி செய்தால், ஒரு மனிதன் தூக்குத் தண்டனை கொடுக்கப்பெற்று மரணம் அடைந்து விட்டால் அவனுடைய சொத்துக்களெல்லாம் அவனுடைய வாரிசுகளுக்குத்தான். வாரிசு....

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாகக் குற்றவியல் சட்டத்தின்கீழ் நீதிமன்றம் தண்டனை வழங்கும்பொழுதே சிறைத் தண்டனையும் வழங்குகிறது. அபராதத்தையும் சேர்த்து வழங்குகிறது. It does not amount to double punishment. It is a single punishment. You are aware of the fact.

**THIRU M. ABDUL LATHEEF:** Hon. Deputy Speaker Sir, It is all a matter of interpretation.

**HON. THIRU ALADI ARUNA:** Hon. Deputy Speaker Sir, it is an accepted law and settled law. The Hon. Member is quite aware of it.

**THIRU M. ABDUL LATHEEF:** Hon. Deputy Speaker, Sir, all accepted laws are not *ipso facto* accepted, unless it is otherwise interpreted by the competent Court. That is why while I began my speech I told that many of the provisons incorporated in this Bill are constitutionally bad and not sustainable.



**HON. THIRU ALADI ARUNA:** Hon. Deputy Speaker Sir, I will give in my reply, whether it is sustainable or not, whether it has been proved in the Court of Law, in the Supreme Court. I will putforth my argument elaborately in my reply.

**THIRU M. ABDUL LATHEEF:** Hon. Deputy Speaker Sir, in every point of law, if there is an argument there would be a counter arugument. Therefore, arguments and counter arguments are the foundation of criminal dispensation and even in the Civil Court that is the case. I do not want to discuss this. I wanted to bring forth certain points to the consideration of the Hon. Minister. The Minister must consider delve deep into this question and then come to a conclusion whether it is sustainable, whether it will pave way for social justice; and whether it will sustain the individual liberty. That is the question.

*முற்பகல் 11 40*

**HON. THIRU ALADI ARUNA:** Hon. Deputy Speaker Sir, let the Hon. Member convince this House in what way this violates the social justice and social principle.

**THIRU M. ABDUL LATHEEF:** Hon. Deputy Speaker Sir, I would say afterwards, provided the Hon. Deputy Speaker permits me to elaborate my point. Every minute I am under the impression that the bell will be rung. If the bell is rung, then I will have to sit down. That is the difficulty. Therefore, what I say is, we will discuss as lawyers. Hon. Minister for Law is my friend also. We also began our career together. We will discuss. இந்த நேரத்தில் குறிப்பிட்ட மக்களுக்காக நான் குரல் கொடுக்கிறேன். நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். என்ன அக்கிரமமாக இருக்கிறது? டேப் எடுத்தாலும் அதைக் கொண்டு வந்து போடலாம். எவன் வீட்டிலாவது ஒரு முடி கிடைத்தால், அந்த முடியை எடுத்து வந்து, இவன்தான் அங்கே வந்தான், இவன்தான் குற்றவாளி, குற்றம் செய்தவன் என்று முடியைக் காட்டிக்கூட அவன் முடிவை எடுத்துவிடலாமென்று ஒரு சட்டம் இருக்கிறது என்று சொன்னால், இதை நாமே எப்படி ஏற்றுக் கொள்வோம்? தயவுசெய்து, சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1998 மே 30

நம்முடைய மரியாதைக்குரிய அன்புச் சகோதரர் மாண்புமிகு தாமரைக்கனி சொன்னார். என்ன சொன்னார்? நமக்குள்ளே ஏதோ, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைத் தவிர்த்து, நம்முடைய திரு. சந்தானத்தைத் தவிர்த்து, ஜனதா தளத்தைத் தவிர்த்து, மற்றவர்களெல்லாம் ஒரு பக்கம் பார்க்கிறார்கள், மற்றவர்கள் இன்னொரு பக்கம் பார்க்கிறார்கள் என்று சொன்னார். அப்படியென்றால் நீங்கள் ஏன் கூட்டு வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டார். அது எந்த அடிப்படையில் என்று சொன்னால் - உங்கள் கட்சியில், என்னுடைய அன்புத் தம்பி வை.கோ. எந்த அளவிற்குக் கூட்டு வைத்திருக்கிறார்கள்? இன்றைக்குப் பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்த்தால், உங்கள் கட்சித் தலைவி கட்டளையே இட்டுவிட்டார்கள். என்னவென்றால், வை.கோ.வைப் பார்க்கக்கூடாது, வை.கோ.விடம் பேசக்கூடாது என்றெல்லாம் கட்டளையிட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அவ்வளவு எதற்கு? இந்தியாவையே ஆளுகின்ற......

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே வந்த செய்தியையெல்லாம் வைத்து யூகம் பண்ணி, அதுதான் உண்மையென்று சொல்லி, மாண்புமிகு முஸ்லீம் லீக் தலைவர் லத்தீப் பாய் அவர்கள் பேசக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பல நேரங்களில் 'சொல்லப்படுகிறது, பேசப்படுகிறது' என்று சொல்கிறீர்கள். உங்களுக்கு ஒரு நியாயம். அவருக்கு ஒரு நியாயமா? .

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாமரைக்கனியைக் கேட்கிறேன், நீங்கள் எதை வைத்துக் கொண்டு பேசினீர்கள்? நானாவது பத்திரிகைச் செய்தியை வைத்துப் பேசினேன். நீங்கள் ஒன்றுமே இல்லாது அந்தரத்திலே பேசுகிறீர்களே. அதற்கு நான் என்ன செய்வது? நீங்கள் எதை வைத்துக் கொண்டு பேசினீர்கள், எங்களுக்குள் ஏதோ இருக்கிறது என்று. அவனவனுக்கு வீடு உள்ளது; அவனவனுக்கு வாயும் உள்ளது. வயிறும் உள்ளது. வாய் வேறு; வயிறு வேறு; எல்லாம் வேறு; குடும்பமும் வேறு. ஆனால், தலைவர்கள் ஒன்றுபட்டிருக்கிறார்கள். காவியத்திலே இடம் பெறப் போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களைப் பிரித்துவிட யாருமே நினைக்காதீர்கள் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் பேசலாம். இதை ஏன் கொண்டு வந்து நடுவில் போட்டீர்கள்? அதனால்தான் சொன்னேன். இல்லையென்றால் நான் சொல்ல மாட்டேன். இதுவரை ஏதாவது பேசினேனா?



1998 மே 30]

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பயங்கரவாதத் தன்மையை ஒழிப்பதில் எந்த ஆட்சேபணையும் இடையாது. நாட்டின் நலன் கருதி இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்போது நீங்கள், தோழமைக் கட்சிகளாக இருக்கின்றவர்கள் அதை ஒட்டுமொத்தமாக ஆதரிக்க வேண்டுமேயல்லாமல், பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு எதிர்ப்பாக அல்லவா இருக்கிறீர்கள்? அந்தத் தீவிரவாதத்தை ஆதரிப்பதால்தான் தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு கெடுவதற்கு உங்களுடைய தோழமைக் கட்சியே காரணமாக இருக்கிறது, இந்த ஆட்சியும் காரணமாக இருக்கிறது என்று சொன்னால், அது ஒன்றும் தவறு இல்லையே? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி சொன்னபோது கூட்டணிக் கட்சிகள் ஆதரிக்க வேண்டாமா என்று கேட்டார்கள். ஆக்கபூர்வமான எதிர்க்கட்சிகளாக இருக்கிறோம். சிலவற்றை ஆதரிக்கிறோம், சிலவற்றை எதிர்க்கிறோம். நேற்றையதினம், உள்ளாட்சித் தலைவர்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர வகை செய்யும் சட்டமுன்வடிவைக் கொண்டுவரும்போதுகூட அதை நாங்கள் ஆதரித்திருக்கிறோம். அதில் சில நியாயங்கள் இருக்கின்றன. இன்றையதினம், இவர்கள் ஏன் இதை ஆதரிக்கிறார்கள்? அவர்கள் இங்கே இருக்கும்போது, விவாதமே நடப்பது கிடையாது. ஒரு விவாதத்திற்கு இடமில்லாத அளவிற்கு 5 ஆண்டுக்காலம் ஆட்சி நடத்தியவர்கள் பேசுவது நியாயம் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-45

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நேற்றே கேட்டேன்: நீங்கள் இதை ஆதரிக்கிறீர்களா என்று, தி.மு.க. ஆட்சி கொண்டு வந்தாலும், இதை நீங்கள் ஆதரித்துத்தான் ஆக வேண்டும். எனக்குத் தெரியும், அவர் பேசாமல் இருந்தார். அதற்குமேல் நீங்கள் இதை எதிர்த்துப் பாருங்களேன். தி.மு.க அரசுதானே கொண்டு வந்திருக்கிறது என்று இதை எதிர்த்துப் பாருங்களேன்? என்ன ஆகும் என்று எதிர்த்துப் பாருங்களேன்?

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் கொண்டுவருவது தி.மு.க. அரசு, இந்த

ஆட்சியை மத்திய அரசு டிஸ்மிஸ் பண்ணிவிடுவார்களோ என்று, தற்காப்புக்காகக் கொண்டு வந்ததுதானே தவிர, வேறில்லை. இருக்கிற சட்டத்தின் மூலமாகவே தீவிரவாதத்தை ஒழித்திருக்கலாம். அதை வளரவிட்டதே நீங்கள்தான்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை திரு. தாமரைக்கனி சொல்கிறாரா? அல்லது அவருடைய கட்சி சொல்கிறதா என்று தெளிவுபடுத்த வேண்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் இப்போது சொல்வதெல்லாம் என்ன? நீங்கள் சொல்கிறீர்களா அல்லது உங்கள் கட்சி சொல்கிறதா? அந்த மாதிரிதான் எனக்கும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்சியிலேதான் நாங்கள் முடிவு எடுக்கிறோம்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்களாகவே தேர்ந்தெடுத்து, நீங்களாகவே அழைத்து, இந்தியாவினுடைய பிரதமராக இன்னார்தான் இருப்பதற்கு எல்லா வகையிலும் தகுதியானவர் என்று ஊர்தோறும், நாடுதோறும், நகரம்தோறும் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தீர்கள். நீங்கள் போய் அடிக்கடி அவர்களிடத்திலே சொல்கிறீர்கள். இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். ஏன் கலைக்கவில்லை? ஏன் அவர்கள் கலைக்கவில்லை? நீங்கள் அந்தத் தோழமையை முறித்துக் கொள்ளுங்களேன்? உங்களுக்கு மானம் இருந்தால் அந்தத் தோழமையை முறித்துக் கொள்ளுங்களேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொறுத்திருந்து பாருங்கள். என்ன நடக்கப்போகிறது என்று பாருங்கள். சட்டசபைக் கூட்டத்தொடர் முடியட்டும். பார்லியமெண்ட் கூட்டத் தொடர் முடியட்டும். இந்த ஆட்சியை டிஸ்மிஸ் பண்ணுகிறார்களா, பண்ணவில்லையா என்று பொறுத்திருந்து பாருங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொறுத்திருந்து எதைப் பார்ப்பது? பாரதீய ஜனதா, அண்ணா தி.மு.க. கூட்டணி பிளந்து போவதைப் பார்ப்பதா? (மேசையைத் தட்டும் ஒலி)





**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் பொறுத்துப் பொறுத்துப் பார்க்கக்கூடியவர்கள், 'பொறுத்தார் பூமி ஆள்வார்' என்ற கொள்கையின்படி பொறுத்துப் பொறுத்துப் பார்த்துத்தான் இன்றைக்கு பூமியை ஆண்டு கொண்டிருக்கிறோம். மேற்கொண்டும் ஆளுவோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. கலைப்போம் என்று சொல்லுகிறீர்களே, கலைத்துப் பாருங்கள்.

It is a constitutional terrorism. If anybody asks for dismissal - the unconstitutional dismissal of a Government which enjoys the brutal majority in this House, if anybody, because of the pressure given by some undesirable elements in Tamil Nadu (thumping of desks).....

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தமிழிலேதான் பேசினேன். ஆங்கிலத்திலே ஏதாவது நான் பேச வேண்டும் என்று விரும்பினால், அப்புறம் நான் எங்கள் பக்கத்து பாஷையிலே ஏதாவது ஒன்றைப் பேசிவிடுவேன். அவருக்கு அது புரியாது. எனவே, தமிழிலேயே சொல்லுங்கள். நான் பதில் சொல்லிவிடுகிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவருக்குப் புரியாமல் இல்லை. புரிந்தும், புரியாதது மாதிரி இருக்கக்கூடிய கட்சியிலே இருக்கக்கூடிய காரணத்தால்தான் அப்படிச் சொல்கிறார். இந்த ஆட்சியைக் கலைத்துவிட முடியாது என்று எல்லோருக்கும் தெரியும். அவாளுக்கும் தெரியும்; அவாளோட அவாளுக்கும் தெரியும். (சிரிப்பு) ஆகையினாலே, ஆட்சியைக் கலையுங்கள் என்று சொன்னால், எப்படிக் கலைப்பது? இதிலே இரண்டு இருக்கின்றன. நான் தெளிவாகச் சொல்கிறேன். Dismissal of the Government மட்டுமல்ல dissolution of the House என்பதும் இருக்கின்றது. அரசமைப்புச் சட்டத்திலே 356 என்று சொன்னால், Dismissal of the Government; how can? நீங்கள் எப்படிச் சட்டசபையைக் கலைக்க முடியும்? சட்டசபை இருக்கிறவரையிலும் ஆட்சி இருந்துகொண்டுதான் இருக்கும். இன்றைக்கு இருக்கிற நிலைமையிலே, நீங்கள் சட்டசபையைக் கலைப்பதற்கு, ஓர் பெரும்பான்மையாக இருக்கிற ஆட்சியைக் கலைப்பதற்கு மத்திய அரசுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? மத்திய அரசாங்கமும் ஒரு Constitutional creation; அதுகூட அரசமைப்புச் சட்[illegible]தான்; அவர்களுக்கும் மக்கள் ஓட்டுப் போட்[illegible]. இது ஒரு தனி Constitutional creation, அரசமைப்புச்

சட்டம் இதை உருவாக்கியிருக்கிறது. இதற்கும் மக்கள் ஓட்டுப் போட்டிருக்கிறார்கள். யாரோ போய்க் கலைக்க வேண்டும் என்று சொன்னால், யாருக்கோ ஏற்பட்ட அரிப்பின் காரணமாக, அவசரத்தின் காரணமாகக் 'கலையுங்கள், கலையுங்கள்' என்று சொன்னால், அவர்கள் என்ன mid-wifery பிரிவையா வைத்திருக்கிறார்கள். நான் உங்களைக் கேட்கிறேன். தயவுசெய்து அதையெல்லாம் பேசக்கூடாது. ஆகையினாலே நான் உங்களுக்கும் சொல்லிக்கொள்வது, கலையுங்கள் என்றால் கலைக்க முடியாது. இப்போது, நான் பேசுவதிலிருந்து டைவர்ட் பண்ண வேண்டும் என்றே பேசி, என்னை டைவர்ட் பண்ணியிருக்கிறார்கள். அவர்களுக்கு இதே வேலை.

நான் கேட்டுக்கொள்வது, இந்தச் சட்டம் பல வகைகளிலே பாதிப்பை ஏற்படுத்தும். அதில் எனக்கு இருக்கிற மிக வேதனையானது என்னவென்றால், இப்போது சொன்னார்கள் இல்லையா? அவர்களுடைய உள்ளத்திலே என்ன இருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால், நாங்களும் ஒரு முக்கியமான காரணத்திற்காக நாட்டிலே நிலவுகிற நிலைமைகளை அனுசரித்து நாங்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறோம். இது எங்கள் கொள்கை. ஆனால், எப்படிச் சொல்கிறார் பார்த்தீர்களா, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்? தீவிரவாதிகளை ஆதரிக்கின்றீர்களா? தீவிரவாதிகளை ஆதரிக்கின்றீர்களா என்று. இதுதான். இதைச் சொல்லி குளிர் காயலாம் என்று நினைக்கிறார்கள். நான் சொல்கிறேன், இது எங்களுடைய கொள்கை. மதுவை எப்படி எதிர்த்தோமோ அந்த வகையிலே இதை எதிர்க்கிறோம்.

*முற்பகல் 11-50*

நம்முடைய தலைவர் அந்தக் காலத்திலே மதுவிலக்கைக் கொஞ்சம் ஒத்திவைத்தார்கள். நீக்கக்கூட இல்லை. நெருப்பு வளையத்திற்கு மத்தியிலே தமிழகத்தை மட்டும் எப்படித் தனிமைப்படுத்த முடியும் என்று கேட்டார்கள். இருந்தாலும் அதை நாங்கள் எதிர்த்தோம். அது எல்லோருக்கும் தெரியும். இன்றைக்கும் எதிர்க்கிறோம். அன்றைக்கு எதிர்த்ததனாலே என்ன, உறவு முறிந்தா போய்விட்டது. முறிவதற்கு என்ன, நீங்கள் நினைக்கிறீர்களே அப்படி ஒரு சின்னக் கயிறா? நாவலர் பேசுகின்ற மாதிரி பேசவேண்டும் என்று சொன்னால், 'இது என்ன'? எப்படி முறியும்' என்று பேசுவார். ஆகையினாலே, இன்றைக்கு லத்தீப், எதிர்த்தார் என்று சொன்னால், ஆட்சியை எதிர்க்கவில்லை.





இன்றைக்கு வந்திருக்கிற இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் நல்ல நோக்கம். இது எந்த நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தெரியும்.

I don't want to question the bonafide of this Government. Government-உடைய bonafide-ஐ நான் question பண்ணவில்லை. ஆனால், situation - exigencies அதிலே இருக்கின்ற காரணத்தினாலே, இதைக் கொண்டுவரக்கூடிய கட்டாயம் இருக்கிறது. ஆனால், சூழ்ச்சி நடக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இந்தச் சூழ்ச்சியில் நீங்கள் சிக்கக்கூடாது. உங்களுக்குச் சொல்ல வேண்டிய முழு உரிமையும், கடமையும் உடைய நாங்கள் சொல்கிறோம். இந்தச் சூழ்ச்சியை ஏன் செய்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகையினாலே, இந்தச் சூழ்ச்சியை நாம் புரிந்துகொண்டு, அதற்குத் தடை போட வேண்டும். எடைபோட்டுத் தப்பித்துக் கொள்ளவேண்டும். ஆகையினாலே, இதைத் தற்போது செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும். சூடாக இருக்கிறது. அதை சாசரிலே ஊற்றி கொஞ்சம் ஆற்ற வேண்டும், என்னதான் விஷயம் என்று. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பல விஷயங்களைச் சொன்னார்கள். இதனுடைய ஆழம் என்ன; சட்ட நுணுக்கங்கள் என்ன என்பதைத் தெரிந்து கொண்டு, ஆற அமர நாம் செய்ய வேண்டுமானால், தயவுசெய்து செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும். செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, அதற்குப் பிறகு இதுபற்றி நாம் ஆய்வு செய்யலாம். அப்படிச் செய்வது எல்லா வகையிலும் பொருத்தமாக இருக்கும், எல்லா வகையிலும் ஏற்புடையதாக இருக்கும் என்பதை நான் வற்புறுத்தி, செலக்ட் கமிட்டிக்கு அனுப்பித்தான் ஆகவேண்டும்; அதுதான் நமக்கு இருக்கின்ற ஒரே வழி, அவசரக் கோலத்தில் இன்றைக்கு நிறைவேற்றுவது பல வகையிலே மற்றவர்களுடைய ஆசையை நிறைவேற்றுவதற்கு வழி வகுத்துவிடும்.

அவர்களுடைய ஆசையை, தகாத ஆசையை நிறைவேற்றுவதற்காக இந்தச் சட்டசபையிலே இந்தச் சட்டத்தை நிறைவேற்றாதீர்கள் என்று அன்போடும், எனக்கு இருக்கின்ற அக்கறையோடும், உங்களிடத்திலே இருக்கின்ற நீக்கமறாப் பற்றின் காரணமாகவும் நான் வேண்டிக் கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர். (குறுக்கீடு).

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்குப் போதிய நேரம் கொடுக்கப்பட்டுவிட்டது. உங்களுடைய கருத்துக்களையெல்லாம் சொல்லிவிட்டீர்கள். இப்போது அமைச்சருடைய பதிலுரை.

***மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழ்நாடு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்மீது நடந்த விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. சி. ஞானசேகரன், திரு. கே. சுப்பராயன், பேராசிரியர் தீரன், திரு. பி. வெங்கடசாமி, திரு. டி. மணி, திரு. லா. சந்தானம், திரு. ஐ. கணேசன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. ம. அப்துல் லத்தீப் ஆகியவர்கள் நல்ல பல கருத்துக்களை இந்த அவையின் மேலான கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள்.

இன்றையதினம், இந்த அவையில் காரசாரமாக, விரிவாக விவாதம் நடத்தப்பட்டிருக்கிறது. இந்த அவையில் இருக்கின்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, நாட்டு மக்களுக்கும் நல்லமுறையில் விவரங்கள் தருகின்ற வகையிலும் இந்த விவாதம் நடந்ததற்காகவும், இந்த விவாதத்தில் பங்கு கொண்டதற்காகவும் எல்லா உறுப்பினர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டமுன்வடிவைப் பற்றி கருத்துக்களைச் சொல்லும்போது, சில மாண்புமிகு உறுப்பினர்கள் இதைத் திரும்பப்பெற வேண்டுமென்று சொன்னார்கள்; அல்லது, பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள்; அல்லது, இந்தச் சட்டத்திலே சில மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்ற கருத்துக்களையும் சொன்னார்கள். இன்னும் சிலர் பேசும்போது, இந்த அரசாங்கம் யாருக்கோ பயந்து இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதாகச் சொன்னார்கள். அப்படிச் சொல்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன், கலைஞர் அவர்கள் பிறக்கும்போதே அச்சம் செத்துவிட்டது; பயம் பதுங்கிக் கொண்டது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அவர் என்றைக்கும், எதற்கும் அச்சப்படுவதில்லை; பயப்படுவதில்லை. தனக்கு எது நியாயமென்று கருதுகிறாரோ, நாட்டிற்கு எது தேவை என்று கருதுகின்றாரோ, அதைத் துணிந்து செய்வார்; தூய உள்ளத்தோடு செய்வார்; நாட்டின் நன்மைக்காகச் செய்வார் என்பதை இந்தநேரத்திலே சுட்டிக்காட்ட வேண்டியது என்னுடைய தலையாய கடமையாகும்.



(முற்பகல் 11-55

உண்மையில், இன்றைக்குச் சமுதாயத்தில் எத்தனையோ மாற்றங்கள் முன்னேற்றங்கள், வளர்ச்சிகள், மலர்ச்சிகள், அரசியல் சிந்தனைகள் எல்லாம் மாறுபட்டு வருகின்றன. ஆனால், அதேநேரத்திலே, புதுப்புதுக் குற்றங்களும் வடிவம் எடுக்கின்றன என்பதை மறந்துவிடக் கூடாது. குற்றத்தில் ஈடுபடுகின்றவர்கள் புதுப்புது உத்திகளைக் கையாண்டு, சட்டத்தின் பிடியிலேயிருந்து தப்பித்துக்கொள்வதற்கான முறைகளைக் கையாள்கிறார்கள் என்ற உண்மையையும், நம்முடைய மனதிலே கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் தீவிரவாதம், பயங்கரவாதம் தமிழ்நாட்டிலே மட்டுமல்ல; இந்தியாவில் எல்லையோரப் பகுதிகளிலே மட்டுமல்ல; உலகத்தின் பல பகுதிகளிலும் அதிகமான அளவிலே இருக்கின்றன. அப்படிப்பட்ட அந்த அறைகூவலை மற்ற மாநிலங்கள் எப்படிச் சமாளிக்கின்றன என்பதைவிட, நாம் அவற்றை எப்படி வெற்றிகரமாகச் சமாளிக்கப் போகிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். ஏனென்றால், தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக இருந்தது. இப்போதும் அமைதிப் பூங்காவாக இருக்கிறது. எதிர்காலத்திலும், இதிலே எந்தவிதக் குந்தகமும் வந்துவிடக்கூடாது என்று பொறுப்புணர்ச்சியோடும், நியாய உணர்வோடும்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம். தமிழ்நாடு அரசாங்கத்தைப் பொறுத்தளவிலே, இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதால், அரசு பெருமைப்படுகிறது; மகிழ்ச்சிகொள்கிறது என்று யாரும் கருதத் தேவையில்லை. கனத்த உள்ளத்தோடுதான் இதைக் கொண்டு வருகிறோம். ஆனால், கடமை உணர்வோடு கொண்டு வருகிறோம். எதிர்காலத்திலும், இப்போது இருக்கின்ற அமைதி இருக்க வேண்டும் என்ற ஆசையில்தான் கொண்டு வருகிறோமே தவிர, யாரையும் பழி வாங்க வேண்டும்; எவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவில்லை என்பதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு, காஷ்மீரைப் போன்றோ, அஸ்ஸாமைப் போன்றோ, பஞ்சாபைப் போன்றோ அல்லது நாகாலாந்தைப் போன்றோ பயங்கரவாதிகள் அதிகமாக இருக்கின்ற மாநிலமே அல்ல. இது நூற்றுக்கு நூறு உண்மை. ஆனால், பயங்கரவாதம், சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னாலேதான் தலைதூக்க ஆரம்பித்தது என்கிற உண்மையையும் நாம் மறந்துவிடக் கூடாது. பெருமதிப்பிற்குரிய டாக்டர் எம்.ஜி.ஆர்.

அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், மெல்ல, மெல்ல வெடிகுண்டுக் கலாச்சாரம் தலை தூக்க ஆரம்பித்தது. 2-8-1984-ல் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வெடிகுண்டு வெடித்தது. சுமார் 30 பேர் செத்தார்கள்; கொல்லப்பட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். செல்வி ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் முந்நூறுக்கும் மேற்பட்ட வெடிகுண்டுச் சம்பவங்கள் நடந்தன. இன்னும் சொல்லப்போனால், சென்னை மாநகரத்திலே ஆர்.எஸ்.எஸ். அலுவலகம் தகர்க்கப்பட்டு, தரைமட்டமாக்கப்பட்டு, 12 பேர் கொல்லப்பட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயும் எதிர்பாராதவிதமாக, கோவையிலே இரண்டுமுறை வெடிகுண்டுச் சம்பவங்கள் நடந்துவிட்டன. இத்தனைக்குப் பிறகும், தீவிரவாதத்தை ஒடுக்காவிட்டால், அவர்களை அடக்காவிட்டால், அவர்களுடைய செயலுக்கு நாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்காவிட்டால், நாட்டில் சட்டம்-ஒழுங்கு கெடும் என்பது மட்டுமல்ல; ஜனநாயகமே கேள்விக்குறியாக மாறிவிடும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

நம்முடைய உரிமைகள் எல்லாம் பாதிக்கப்படுகின்றன; எனவே, இது நம் உரிமைகளுக்கே எதிரானது என்ற வாதத்தை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களும் மற்ற நண்பர்களும் நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அரசியல் சட்டத்தின் 19-வது பிரிவில் நமக்குப் பல அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பேச்சுரிமை, எழுத்துரிமை, கூடுகின்ற உரிமை, சில சங்கங்கள் அமைக்கின்ற உரிமை, நாடெங்கும் உலவுகின்ற உரிமை, ஓரிடத்திலே போய் இருக்கின்ற உரிமை என்று இவையெல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. அப்படி வழங்கப்பட்டதற்குப் பிறகு, அடுத்த இரண்டாவது clause-லே சொல்லப்பட்டிருக்கிறது:

"Nothing in sub-clause (a) of clause (1) shall affect the operation of any existing law, or prevent the State from making any law, insofar as such law imposes reasonable restrictions on the exercise of the right conferred by the said sub-clause in the interests of the sovereignty and integrity of India, the security of the State, friendly relations with foreign States, public order, decency or morality, or in relation to contempt of Court, defamation or incitement to an offence" என்று மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு மாநிலத்தின் பாதுகாப்பு போன்றவற்றையெல்லாம் மையமாகக் கொண்டு, நம்முடைய சுதந்திரத்திலே சில கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு





அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை அரசியல் சட்டம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. நான் இந்த அவையின் மேலான கவனத்திற்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். இங்கிலாந்திலே சிறந்த பாராளுமன்ற உறுப்பினர் என்று கருதப்பட்ட, இப்போதும் மதிக்கப்படுகிற திரு எட்மண்ட் பெர்க் என்பவர் ஓர் அற்புதமான கருத்தைச் சொன்னார். "The only liberty I mean, is a liberty connected with order....."- ஒரு ஒழுங்குக்குக் கட்டுப்பட்ட சுதந்திரத்தைத்தான் சுதந்திரம் என்று சொல்கிறார்.

"....that not only exists along with order and virtue, but which cannot exist at all without them". எனவேதான் கட்டுப்பாட்டுக்கும், உயர்ந்த தன்மைக்கும் இல்லாத சுதந்திரம் நிலைக்கவே செய்யாது. அந்த அடிப்படையிலேதான்—

நண்பகல் 12-00

**THIRU M. ABDUL LATHEEF:** Hon. Deputy Speaker Sir, order requires for an orderly society and....

**HON. THIRU ALADI ARUNA:** Hon. Deputy Speaker Sir, what is orderly society will be decided by the party in power.

**THIRU M. ABDUL LATHEEF:** Hon. Deputy Speaker Sir, order requires for an orderly society. It is not a duty imposed upon the citizens alone. It is imposed basically upon the authorities concerned. If there is no order on the authorities, then there will not be any order in the society.

**HON. THIRU ALADI ARUNA:** Hon. Deputy Speaker Sir, No, No. Whether there is order and discipline in the society or not, it will be decided by the party in power or the Government. That is my answer. எனவே, கட்டுப்பாடும், நன்மதிப்பும் இன்றி உரிமையை நிலைநாட்ட முடியாது. எனவே, உரிமையை, ஜனநாயகத்தைக் காப்பாற்றுகிற அடிப்படையில்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். கொலைகாரர்களை, கொடியவர்களை, சமூக விரோதிகளை, குண்டர்களை எல்லாம் தண்டிப்பதற்கு எத்தனையோ கிரிமினல் சட்டங்கள் இருக்கின்றன. 1860 ஆம் ஆண்டு இண்டியன் பீனல் கோடு உருவாக்கப்பட்டது. 1984 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட Explosives Act; 1908 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட Criminal Law

Amendment Act; 1908 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட Explosive Substances Act; 1919 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட Preventive Detention Act; 1959 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட Arms Act; 1967 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட Unlawful Activities (Prevention) Act; 1980 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட National Security Act; 1982 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட Tamil Nadu Prevention of Dangerous Activities of Bootleggers, Drug Offenders, Goondas, Immoral Traffic Offenders, Forest Offenders and Slum Crabbers Act போன்ற சட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனால், இந்தச் சட்டங்கள் இருந்தும் பயங்கரவாதிகளை முழுமையாக நாம் எதிர்பார்த்த அளவுக்கு அடக்க முடியவில்லை. அந்தப் பயங்கரவாதிகளுடைய குற்றங்கள் புதிய வடிவம் எடுத்துவிட்டன. எனவே, ஓர் அசாதாரணமான சூழ்நிலையில், ஓர் அசாதாரணமான சட்டத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியமும், நிர்ப்பந்தமும் அரசுக்கு ஏற்படுகிறது.

இன்றைக்கு அவையைத் தொடங்கும்போது நமது மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வான்புகழ் கொண்ட தேன்மொழி ஆசான் வள்ளுவர் பெருந்தகை குறிப்பிட்ட

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்"

என்றார். களை எடுக்க வேண்டுமென்று சொன்னார்; காட்டில் அல்ல; பயிர்களுக்கு இடையில். அந்தப் பணியைத்தான் இப்போது நாம் செய்கிறோம். அந்த நல்ல செயலைத்தான் இன்றைக்கு நாம் செய்துகொண்டிருக்கிறோம். களையெடுக்கிற பணியைத்தான் செய்கிறோமே தவிர, பயிர்களுக்குச் சேதம் விளைவிக்க வேண்டும் என்பதற்கு அல்ல.

பயங்கரவாதத்தை எந்தச் சூழ்நிலையிலும், எவ்வளவு பெரிய ஜனநாயக அரசாங்கமும் அனுமதிக்கக்கூடாது; அனுமதிக்க முடியாது என்பதுபற்றி அமெரிக்காவின் உள்நாட்டுக் கலகத்தை வெற்றிகரமாகச் சமாளித்த ஆபிரகாம் லிங்கன் சொல்லும்போது குறிப்பிட்டார்:

"No Government, however democratic and liberal could be expected to stand by and see itself destroyed by lawless who place no restriction on their own violence", "தன்னுடைய பலாத்காரச் செயல்களைக் கட்டுப்படுத்தாதவர்கள், சட்டத்திற்கு விரோதமாக நடப்பவர்கள் இந்த



அரசைத் தாக்கும்போது எவ்வளவு பெரிய ஜனநாயக அரசாங்கமாக இருந்தாலும் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது" என்று ஆபிரகாம் லிங்கன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த மையமான கருத்துக்களை எல்லாம் மனதிலே கொண்டுதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. பயங்கரவாதிகள் மீண்டும் தலைதூக்கி விடக்கூடாது, கொடுங்கரங்களை தூக்கிவிடக்கூடாது என்ற நல்ல நோக்கத்தோடுதான் இது கொண்டு வரப்படுகிறதேதவிர, இது எந்த மதத்திற்கும் எதிரானதல்ல; எந்த சாதிக்கும் எதிரானதல்ல; எந்த வட்டாரத்திற்கும் எதிரானதல்ல; எந்தப் பகுதிக்கும் எதிரானதல்ல. பயங்கரவாதத்தில் யார் ஈடுபட்டாலும் அவர்கள்மீது இந்தச் சட்டம் பாயும், அவ்வளவுதான். சமூக அடிப்படையிலோ, மத அடிப்படையிலோ, சாதி அடிப்படையிலோ, மொழி அடிப்படையிலோ, வட்டார அடிப்படையிலோ நிச்சயமாக இந்தச் சட்டம் பாயாது என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டத்தை இன்றையதினம் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பாராட்டியதற்கும், வரவேற்றதற்கும் நான் உண்மையிலேயே அவர்களுக்கெல்லாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எதற்காக நான் சொல்கிறேன் என்றால் அவர்கள் பாராட்டியதற்காக மட்டுமல்ல. அவர்களுடைய பாரம்பரியத்தை அவர்கள் காப்பாற்றிவிட்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். நாட்டிற்குச் சுதந்திரததை எப்படிப்பெற வேண்டும் என்பதில் அண்ணல் காந்தியார் முழுக்க முழுக்க பயங்கரவாதத்திற்கு எதிராக, தீவிரவாதத்திற்கு எதிராக அகிம்சை அடிப்படையிலேதான் சுதந்திரத்தை அடைய வேண்டும் என்று ஆசைப்பட்டாரேதவிர ஆயுதத்தைத் தாங்கி பயங்கரவாதத்தில் ஈடுபட்டு சுதந்திரம் பெற வேண்டுமென்று அண்ணல் காந்தியார் விரும்பியதும் இல்லை, அதை ஊக்குவித்ததும் இல்லை.

**Dr. K. KRISHNASAMY:** Please remember Mahatma Gandhi's great words. He said "when the Government policy is satanic, it seduces my religion".

பிற்பகல் 12-05

**HON. THIRU ALADI ARUNA:** It is true when the policy is satanic. But here the policy is godly, virtuous; that I is what want to remind. எனவே, அண்ணல் காந்தியார் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து,

சுதந்திரத்தைக்கூட அகிம்சையின் மூலமாகத்தான் பெறவேண்டும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, இந்தச் சட்டத்தை வரவேற்றதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காங்கிரஸ்காரர்கள் தங்களுடைய பாரம்பரியத்திற்கு ஏற்ப பயங்கரவாதத்தைத் தடுக்கும் இந்தச் சட்டத்தை வரவேற்று இருக்கிறார்கள் என்று கூறினார்கள். நாங்கள் பல்வேறு காரணங்களால் அதை எதிர்க்கிறோம். அப்படியென்றால் நாங்கள் பயங்கரவாதத்தை ஆதரிக்கக்கூடியவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** ஒரு பெண் அழகாக இருக்கிறாள் என்று சொன்னால், அடுத்தவள் அசிங்கமாக இருக்கிறாள் என்று பொருள் அல்ல. நீங்களும் நல்லவர்கள்தான், நீங்களும் உயர்ந்தவர்கள்தான், நீங்களும் வரவேற்கத்தக்கவர்கள்தான். அதிலே எங்களுக்கு ஒன்றும் மாறுபட்ட கருத்து இல்லை. இரு நிலைகளில் இங்கே எடுக்கப்படுகின்ற முடிவுகளைப் பொறுத்து இருக்கிறது. நான் எடுத்துச் சொல்ல விரும்புவதெல்லாம், காங்கிரஸ் கட்சி, ஒரு பாரம்பரியத்திற்கு, ஓர் அடிப்படைக் கொள்கைக்குச் சொந்தமாக இருந்தது.

அடுத்து, இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த லார்ட் கர்சனை, லண்டன் மாநகரில் மண்டன்லா டிங்ரா என்பவன் கொன்றான். அப்படி அவன் கொன்றதைப் பலர் பாராட்டினார்கள். ஏனென்றால் வங்காளத்தினுடைய பிரிவினைக்கு அவர் காரணமாக இருந்தார். அதைப்பற்றி அண்ணல் காந்தியார் குறிப்பிட்டுச் சொல்லுகிறபோது ``I must say that those who believe and argue that such murders may do good to India are ignorant men indeed". கொலைகள் மூலமாக இந்தியாவிற்கு நன்மை செய்ய முடியுமென்று யாராவது கருதினால் அவர்கள் அறியாமையில் இருப்பவர்கள். ``No act of treachery can ever profit a nation. Even should the British leave in consequence of such murderous acts. எனவே, எந்தக் கொடுஞ்செயலும் நாட்டுக்கு நன்மை பயக்காது. கொலைகாரச் செயல்களால் வெள்ளையனே இந்த நாட்டை விட்டுப் போனாலும் who will then rule in their place? அவர்கள் இடத்தில் யார் இருப்பார்கள்? The only answer is murderers. கொலைகாரர்கள்தான் அந்த இடத்திலே இருப்பார்கள். — India can gain nothing from the rule of murderers - no matter whether they are black or white". கொலைகாரர்கள் ஆட்சியிலே எந்த நன்மையும் பெறமுடியாது. அவர்கள் கறுப்பர்களா அல்லது வெள்ளையர்களா என்பது பற்றிக் கவலை இல்லை" என்று மிகவும் துணிந்து சொன்னார்கள். மிக உரக்கச் சொன்னார்கள்.



அதுமட்டுமல்ல, உங்களுக்கெல்லாம் தெரியும். சட்ட மறுப்பு இயக்கத்தை அண்ணல் காந்தியார் நடத்தி அதில் வெற்றி பெற இருந்த நேரத்தில் எதிர்பாராதவிதமாக சௌரி சௌரா சம்பவம் நடந்து 23 போலீஸ்காரர்கள் அதில் எரித்துக் கொல்லப்பட்டார்கள். அதைக் கேட்டு காந்தியடிகள் அதிர்ச்சி அடைந்தார்கள். அந்தச் சட்ட மறுப்பு இயக்கத்தை ஒத்திவைத்தார்கள்.

சௌரி சௌராவில் நடந்த சம்பவங்கள் நியாயம்தானா, ஏற்றுக்கொள்ளக்கூடியவைதானா என்று காங்கிரஸ் கட்சியின் செயற்குழுவில் பேச்சு எழுந்தபோது, பெரும்பாலான உறுப்பினர்கள் — நான் படித்த புத்தகத்திலிருந்து சொல்லுகிறேன் — சௌரி சௌராவிலே போலீஸ்காரர்களை எரித்தது நியாயம்தான் என்று சொன்னார்கள். உடனே, காந்தியார் கண்ணீர்விட்டு அழுதார். "பலாத்காரத்தையும், பயங்கரவாதத்தையும் எப்படி ஆதரிக்கின்றீர்கள்? நான் எப்படிக் கட்சியை நடத்த முடியும்?" என்று சொன்னார். அந்த அளவுக்கு பலாத்காரத்திற்கு எதிராக, பயங்கரவாதத்திற்கு எதிராக காந்தியார் குரல் கொடுத்தார். அப்படி, அகிம்சை வழியில் விடுதலை பெற்ற இந்த நாட்டில் பயங்கரவாதத்திற்குத் துளியும் இடம் கிடையாது. இடம் கொடுக்க மாட்டோம் என்பதை இந்த அவையிலே திட்டவட்டமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தில், இந்தச் சட்டம் தடா சட்டத்தைப் போன்றது, தடா சட்டத்தின் மறு பிறவி, இது கறுப்புச் சட்டம் என்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் இதை Black Act, கறுப்புச் சட்டம் என்று சொன்னார்கள். ஆனால், இது கறுப்புச் சட்டம் அல்ல. கரும்புள்ளியை அகற்றுகின்ற சட்டம். இந்த நாட்டின் மானத்தை, மரியாதையைக் காப்பாற்றுகின்ற சட்டம். இந்த நாட்டின் அமைதியைக் காப்பாற்றுகின்ற சட்டம். இது கறுப்புச் சட்டம் அல்ல, கரும்புள்ளியை அகற்றுகின்ற சட்டம் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஆலடி அருணா] [1998 மே 30

தடா சட்டத்திற்கும் இந்தச் சட்டத்திற்கும் பல மாறுபாடுகள் இருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்திற்குச் சொல்ல வேண்டியது என்னுடைய தலையாய கடமையாகும். தடா சட்டத்திற்கும் இதற்கும் 5 வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1987 ஆம் ஆண்டு தடா சட்டம் பயங்கரவாதம் மற்றும் இடையூறு விளைவிக்கும் செயல்களைத் தடுக்கும் சட்டமாக, terrorist and disruptive activities-ஐ தடுக்கும் சட்டமாக இருந்தது. அதில் disruptive activities என்ற விவரங்களை எல்லாம் இதில் எடுத்துவிட்டோம். அது தொடர்பான எந்த விதிகளையும் இந்தச் சட்டத்திலே இணைக்கவில்லை. பயங்கரவாதம் என்பதை மட்டுமே அதில் வைத்திருக்கிறோம். terrorist and disruptive activities என்பதில் Terrorist மட்டும் இதில் இருக்கிறது. Disruptive activities என்பதை அறவே எடுத்துவிட்டோம்.

பிற்பகல் 12-10

தடா சட்டத்தில் `to overawe the Government as by law established, 'சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட அரசை அச்சுறுத்தி தூக்கி எறிவதற்கு என்றிருந்த அந்தப் பகுதியை நீக்கிவிட்டோம். The provision where 'a person detains any person or threatens to kill or injure such person in order to compel the Government or any other person to do or abstain from doing any act' என்று தடா சட்டத்தில் இருந்த சொற்றொடரில் 'to compel the Government' என்பதை நீக்கி விட்டு authority என்று நாங்கள் போட்டு இருக்கிறோம்.

தடா சட்டத்தில் கொலையில்லாப் பிற குற்றங்களுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அதை மூன்று ஆண்டுகளாகக் குறைத்து இருக்கின்றோம். தடா சட்டத்திற்கும் இதற்கும் உள்ள 5-வது வித்தியாசம் என்னவென்றால், தடா சட்டத்தின் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்ய முடியாது. உச்ச நீதிமன்றத்திலேதான் முறையீடு செய்ய முடியும். ஆனால் இந்தச் சட்டத்தில் `Designated Court' ஒரு தீர்ப்பு அளிக்குமானால் அதை எதிர்த்து சென்னையில் இருக்கின்ற உயர்நீதிமன்றத்தில் அவர்கள் மேல்முறையீடு செய்யலாம். உச்ச நீதிமன்றத்திற்குத்தான் போக வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. இன்றையதினம் சில கடுமையான விதிகள் இதிலே இருக்கின்றன என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால்,



1998 மே 30] [திரு. ஆலடி அருணா]

நடைமுறையிலே கிரிமினல் வழக்குகளை விசாரிப்பதில் எவ்வளவு சிரமங்கள், எவ்வளவு சிக்கல்கள், நிரூபிக்க முடியாத நிலைகள் எல்லாம் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நல்லமுறையிலே உணர்வார்கள்.

இங்கே காவல் துறை மானியக் கோரிக்கையிலே உறுப்பினர்கள் பேசும்போது இத்தனை கொலைகள்தானே நிரூபிக்கப்பட்டிருக்கின்றன மற்றவை ஏன் நிரூபிக்கப்படவில்லை, ஏன் கண்டுபிடிக்கப்படவில்லை என்று பேசினார்கள். அரசாங்கம் கொலைக் குற்றவாளிகளைப் பிடிக்கக்கூடாது, அவர்களை விட்டுவிட வேண்டும் என்ற நோக்கத்தோடு தாராளமாக நடந்துகொள்கிறது என்பதல்ல. கொலைக்கு எதிராக சாட்சி சொல்லவே வர மறுக்கிறார்கள். தாதாக்கள், கிரிமினல் பேர்வழிகள் மற்றும் சமூகவிரோதிகள், இவர்களுக்கு எதிராக சாட்சியம் சொல்ல மறுக்கிறார்கள். சாட்சி சொல்ல பயப்படுகிறார்கள். ஏனென்றால் சாட்சி சொன்னால் மறுநாளே அவர்களைக் கொன்று விடுவார்கள். இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. எனவே, இந்த நிலை இருக்கின்ற காரணத்தினால்தான், தடா குற்றங்களைச் செய்தவர்களுக்கு நாம் தனியாக அல்லது கடுமையான விதிகளை விதிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டதே தவிர, அதுவேறு எந்த அடிப்படையிலும் அல்ல. எல்லா விசாரணைகளுமே ரகசியமாக நடக்கவேண்டுமென்ற கட்டாயம் அல்ல. அது ரகசியம் என்று கருதினால் மட்டும், அது அபாயத்தை விளைவிக்கும் என்று கருதினால் மட்டும், அது சாட்சிக்கு ஊறு விளைவிக்கும் என்று கருதினால் மட்டும், அத்தகைய வழக்குகளில் மட்டும்தான் ரகசியமாக நடக்க வேண்டுமே தவிர, அதுவும் ஒரு வழக்கில் முழுமையாக விசாரணை நடக்க வேண்டும் என்றல்ல; ஒரு பகுதியாகக்கூட நடக்கலாம். சாட்சி சொல்பவர்கள், சாட்சி சொல்ல அச்சப்படுகின்றவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான் இது சொல்லப்படுகிறது. போலீசார் முன்பு ஒப்புதல் அளிக்கின்ற வாக்குமூலத்தை ஒரு சாட்சியமாக எடுத்துக் கொள்ளலாமா, இது ஏற்கெனவே உள்ள சாட்சியச் சட்டத்திற்கு எதிரானது அல்லவா என்ற வாதத்தை நான் மறுக்கவில்லை. ஆனால் நாம் ஒன்றை மறந்துவிடக் கூடாது. அப்படிப்பட்ட ஒரு கடுமையான விதி இல்லாவிட்டால்—அதனை எல்லாச் சூழ்நிலைகளிலும் செய்ய வேண்டுமென்பதல்ல, இரண்டு சூழ்நிலைகளில் அதைச் செய்ய வேண்டுமென்றும்கூட நாங்கள் சொல்லி இருக்கிறோம் — அப்படி ஒரு விதி இல்லாவிட்டால் நிரூபிக்கவே முடியாது. எனவே, விதியினுடைய பிரிவு 20-லே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றோம்.

(a) that the materials or substances specified in clause (g) of section 2 were recovered from the possession of the accused and there is reason to believe that such materials or substances of a similar nature, were used in the commission of such offence; or

(b) that by the evidence of an expert, the finger prints or foot prints or hair of the accused were found at the site of the offence or on anything including vehicles used in connection with the commission of such offence;

The Designated Court shall presume, unless the contrary is proved, that the accused had committed such offence.

என்ற இந்தச் சூழ்நிலைக்கு மட்டும்தான் இது பொருந்துமே தவிர, மொத்தமாக எல்லாக் குற்றச்சாட்டுகளையும் accused தான் நிரூபிக்க வேண்டுமென்பதல்ல. இவர்மீது அடிப்படைக் குற்றம் prima-facie இருக்கின்றது என்பதை நிரூபிக்கின்ற பொறுப்பு போலீசாருக்கு இருக்கிறது என்பது இந்தச் சட்டத்திலே இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக இந்த மாமன்றத்திற்கு நான் சொல்ல ஆசைப்படுவதெல்லாம் இந்த அரசு சார்பில் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். எந்த அரசியல் லாபத்திற்காகவும் இந்தச் சட்டம் பயன்படுத்தப்படமாட்டாது. எந்தக் காரணத்தைக் கொண்டும், எந்த மதத்தை எதிர்த்தும், எந்த ஜாதியை எதிர்த்தும் நிச்சயமாகப் பயன்படுத்தப்படமாட்டாது. இன்னும் சொல்லப்போனால் இந்தச் சட்டம் உறைக்குள்ளே கிடக்கின்ற வாளாகத்தான் இருக்குமே தவிர, உருவி கையிலே எடுத்து ஓங்கி வீசுகின்ற வாளாக இருக்காது என்பதையும் இந்த அவையிலே தெரிவிப்பது என்னுடைய தலையாய கடமையாகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. சுப்பராயன்.**

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எப்படிச் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இது துஷ்பிரயோகம் செய்யப்படமாட்டாது என்பதை எவ்வளவு உறுதியாகச் சொல்கிறார்களோ, இதேபோலத்தான் அரசியல் சாசனத்தை உருவாக்கியபோது அரசியல் சாசனத்தில் பிரிவு 356 எப்போதும் உறை வாளாகவே இருக்கும், உபயோகப்படுத்தப்படமாட்டாது என்றுதான் சொல்லப்பட்டது. ஆனால், சொல்லுகிறவர்களின் அரசியல்





நோக்கத்திற்குத் தக்கபடி அதிகாரிகள் இல்லாததால் விபத்து நிகழ்ந்து விடுகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தச் சட்டமாக இருந்தாலும், தவறாகப் பயன்படுத்துகிற நிலைமை என்ற ஒன்று இருக்கிறது. அது, ஆட்சியிலே இருப்பவர்களுடைய தகுதி, திறமை, பண்பைப் பொறுத்து இருக்கிறது. அதனாலே, சட்டமே தேவையில்லை என்று சொல்லிவிட முடியாது. சட்டமே தேவையில்லை என்ற அடிப்படையிலேகூட சில மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே பேசினார்கள்.

வரலாற்றில் பெரிய மோதல் என்னவென்றால், 'மன்னன் பெரியவனா, இல்லை சட்டம் பெரிதா' என்பதே. 'The rex above the lex or, the lex above the rex' இதுதான் மோதல். இந்த மோதலிலே, மன்னன், 'நான் சொன்னதுதான் சட்டம்' என்று சொன்னான். இல்லை, 'நாங்கள் வகுப்பதுதான் சட்டம்' என்று பின்னர் சொல்லப்பட்டது. சமுதாயத்தில் சட்டம் இல்லாமல் ஒன்றுமே இல்லை. மன்னனைவிட, சட்டம் உயர்ந்தது என்று சொல்லப்பட்டது. பல நூற்றாண்டு கால மோதல்களின்பேரில், ரத்த வெள்ளத்தின்பேரில், ஆயிரக்கணக்கானவர்கள் கொலை செய்யப்பட்டதன்பேரில்தான் சட்டத்தின் ஆளுகையே, rule of law நிலைநாட்டப்பட்டிருக்கிறது. எனவே, சட்டமே கொண்டுவரக்கூடாது என்ற அடிப்படையில் சொல்லக்கூடாது. இதுவரை உள்ள சட்டத்தை வைத்து, இந்த பயங்கரவாதத்தை நம்மாலே அடக்க முடியவில்லை, ஓரளவுக்குத்தான் அடக்க முடிந்திருக்கிறது. எதிர்பார்த்த அளவுக்கு நம்மாலே அடக்க முடியவில்லை என்ற காரணத்தினால்தான், இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதேதவிர, தனிப்பட்ட முறையிலே யார் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காக அல்ல என்பதை எடுத்துச்சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே, இந்தச் சட்டத்திற்குத் திருத்தம் கொடுத்திருப்பவர்கள், இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்று திருத்தம் கொடுத்திருப்பவர்கள் எல்லாம், இந்தச் சட்டத்தை ஒருமனதாக நிறைவேற்றுகின்ற வகையில் — தமிழ்நாடு, பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதில் ஓர் அணியில் நிற்கிறது; கலைஞர் தலைமையிலே அணி

வகுக்கிறது; பயங்கரவாதத்திற்குத் துளியும் இடம் கொடுக்காது என்பதை நிலைநாட்டுகின்ற வகையிலும், வடக்கே இருப்பவர்களுக்குச் சொல்லுகின்ற வகையிலும், நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்துகின்ற வகையிலும் — நீங்கள் எல்லாம் ஒத்துழைப்பு தந்து, இதை ஒருமனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது......

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிந்து, அமைச்சர் பதில் சொல்லிவிட்டார்கள். இதற்கு மேலும் உங்களை நான் பேச அனுமதிக்க முடியாது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருந்தேன். அதைப்பற்றிச் சொல்லவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது அடுத்து வருகிறது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை எதிர்த்து நான் walk-out செய்ய வேண்டும். அதைச் சொல்வதற்கு எனக்கு 'மைக்' கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படி நீங்கள் கேட்கும்போதெல்லாம் நான் 'மைக்' கொடுக்க முடியாது. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய தமிழகம் உட்பட பல்வேறு அரசியல் கட்சிகள், தமிழ்நாடு பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தை வாபஸ்பெற வேண்டுமென்று வற்புறுத்தியும்கூட, தமிழ்நாடு அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகிறது. எனவே, அதை எதிர்த்து நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**THIRU M. ABDUL LATHEEF:** I have given an amendment and I want that it should be referred to Select Committee.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான்தான் அடுத்து வருகிறது என்று சொல்கிறேன். அதற்குள் நீங்கள் எழுந்து நின்றால் எப்படி? மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் திருத்தங்களை முன்மொழியலாம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவையே செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்ற ஒரு திருத்தம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒவ்வொன்றாக வருகிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய 'புரசீடிங்ஸ்ஸே' தவறு என்பதே என்னுடைய கருத்து.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் அவர்களுடைய வாதத்தை ஏற்றுக்கொள்கிறேன். இது துறையினுடைய தவறு என்று கருதுகிறேன். ஏனென்றால், இந்தச் சட்டமுன்வடிவை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டும் — ஆய்வுக் குழுவுக்கு விட வேண்டும் — என்ற ஒரு திருத்தம் தரப்பட்டிருக்கும்போது, அதன் மீதும் வாக்கெடுப்பு நடத்துவதுதான் முறையாக இருக்கும். எனவே, அந்த வாக்கெடுப்பை நடத்திவிட்டுத்தான், பிறகு clause-by-clause-க்குப் போவது நல்லதாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருத்தங்களை அவர்கள் முன்மொழிந்த பிறகுதான் அதைச் செய்ய முடியும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டத்திற்கு உள்ளே இருக்கிற ஷரத்துக்களில் திருத்தம் கொடுக்கவில்லை. சட்டமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வலியுறுத்தப்பட்டிருக்கிற நிலையில், அதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்பதுதான் திருத்தம். நீங்கள் சொல்வது, சட்டத்திற்குள் இருக்கும் ஷரத்துக்களில் சொல்லப்படுகிற திருத்தங்களை ஷரத்துவாரியாக....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய தேசிய லீக் கட்சி ஆகியோர் சொல்கிறார்கள். ஆளுங்கட்சி அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மற்ற கட்சிகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தாலும்கூட, அதைத் தாங்கள் வாக்கெடுப்புக்கு விட்டு, அதற்குப் பிறகு clause-by-clause எடுப்பதுதான் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

## GENERAL

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"That the Tamil Nadu Prevention of Terrorist Activities Bill, 1998 (L.A.Bill No.19 of 1998) be referred to a Select Committee of the House consisting of ...... Members. (List of Members will be included later)".

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

(திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.



**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"That the Tamil Nadu Prevention of Terrorist Activities Bill, 1998 (L.A.Bill No.19 of 1998) be referred to a Select Committee of the House consisting of ............ Members. (List of Members will be included later)".

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

(திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்களுடைய திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்தத்தை வலியுறுத்துகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன், மற்றும் திரு. ம. அப்துல் லத்தீப் ஆகியோருடைய திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்படுகின்றன.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தங்கள் தோல்வியுற்றன.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் இதில் டிவிஷன் கோருகிறோம்.

[1998 மே 30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சட்டப்பேரவை விதி 99, (8)-ல் ''எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு அவசியமின்றிக் கேட்கப்படுகிறதென்று பேரவைத் தலைவர் கருதினால் அவர் முறையே 'ஆம்' என்று ஏற்பவர்களையும் 'இல்லை' என்று எதிர்ப்பவர்களையும் தனித்தனியே அவரவர்களது இருக்கையில் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொண்டு, அவர்களது எண்ணிக்கையைக் கணித்துப் பேரவையின் முடிவு என்ன என்பதை அறிவிக்கலாம். அவ்வாறு கணிக்கப்பெறும்போது வாக்காளர்களின் பெயர்கள் தனித்தனியே பதிவு செய்யப்பெற மாட்டாது'' என்று இருக்கிறது. எனவே, அந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ம. அப்துல் லத்தீப் மற்றும் திரு. ஜி. நிஜாமுதீன் ஆகியோருடைய திருத்தங்களை ஆதரிப்பவர்கள் எழுந்து நிற்கலாம்.

*(இந்திய தேசிய லீக், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி-2 மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் மொத்தம் 13 பேர் எழுந்து நின்றனர்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது நீங்கள் அமரலாம். திரு. ம. அப்துல் லத்தீப் மற்றும திரு. ஜி. நிஜாமுதீன் ஆகியோருடைய திருத்தங்களை எதிர்ப்பவர்கள் எழுந்து நிற்கலாம்.

*[திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் மாநில காங்கிரஸ் (மூப்பனார்) மற்றும் ஜனதா தளம் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்]*

இப்போது நீங்கள் அமரலாம். 13 பேர் தவிர மற்றவர்கள் எல்லாம் திருத்தங்களை எதிர்ப்பதால், திருத்தங்கள் தோல்வியுற்றன.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்தைச் சொல்ல அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் சொல்லும்போது நீங்கள் எழுந்து நின்றிருக்க வேண்டும். நினைத்தபோதெல்லாம் சொல்ல முடியாது. உட்காருங்கள். இப்போது அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். நீங்கள் திருத்தங்களை ஆதரிக்கிறீர்களா அல்லது எதிர்க்கிறீர்களா?



1998 மே 30]

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நடுநிலை வகிக்கிறேன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை எதிர்த்து இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக உள்ள உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(இந்திய தேசிய லீக் கட்சியைச் சேர்ந்த திரு. ஜி. நிஜாமுதீன் வெளிநடப்புச் செய்தார்)*

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை எதிர்த்து இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக உள்ள உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(இந்திய தேசிய லீக் கட்சியைச் சேர்ந்த திரு. அ.வ. அப்துல் நாசர் வெளிநடப்புச் செய்தார்)*

### பிரிவு - 2

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவு-2, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வெங்கடசாமி தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, I move the following amendment:

"In clause 2, in sub-clause (a) *after* item (iii), *add* the following as item (iv):

'(iv) any other method or means adopted, but not contemplated in this Act'.

2. In clause 2, in sub-clause (9), in item (1) *after* the words 'strike terror' *add* the words 'and create fear of life and liberty'.

*(திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது)*

[1998 மே 30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினருடைய திருத்தம் வலியுறுத்தப்படுகின்றதா என அறிய விரும்புகிறேன். திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Not pressing.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

பிரிவு-2, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**HON. THIRU ALADI ARUNA:** Hon. Deputy Speaker Sir, I move the following amendment:

In clause 2, in sub-clause (a), in item (i), *omit* the expression 'communication or',

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



1998 மே 30] [பேரவைத் துணைத் தலைவர்]

பிற்பகல் 12-25

பிரிவுகள் 3 முதல் 12 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 3 முதல் 12 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 13, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**பிரிவு - 13**

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

In clause 13, in sub-clause (1), *after* the expression 'recorded by such police officer', *insert* the expression in the manner prescribed under the rules'.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 13, திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 14 முதல் 25 முடிய. திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 14 முதல் 25 முடிய. சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1998) திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, திருத்தப்பெற்றபடி, ஏற்கப்பட்டது.

## 5. விதி 110-ன்கீழ் அறிக்கை–தொடர்ச்சி

**(ஆ) அரசுத் துறைகளிலும் போக்குவரத்துத் துறையிலும் வேலை வாங்கித் தருவதாகக் கூறி முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் புகைப்படங்களோடு விண்ணப்பங்கள் அச்சடித்து தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீதான நடவடிக்கை குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் அறிக்கை.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிப்பதற்காக, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீப காலமாக அரசுத் துறைகளில், குறிப்பாகப் போக்குவரத்துத் துறையில், வேலைகள் வாங்கிக் கொடுப்பதாகக் கூறி ஒருசிலர் நூதனமான முறைகளில் பல தவறான செய்கைகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள். குறிப்பாக, நேற்றையதினம், மாண்புமிகு முதல்வர் அவர்கள், பேராசிரியர் அவர்கள் ஆகியோரைப்போல போலியாகக் கையெழுத்துக்களைப் போட்டு இதுபோன்ற ஒரு விண்ணப்பத்தையே (மாண்புமிகு அமைச்சர் ஒரு விண்ணப்பத்தை அவை உறுப்பினர்களுக்குக் காட்டினார்) உருவாக்கி, இந்த விண்ணப்பத்தின் மூலமாகப் போக்குவரத்துத் துறையில், தமிழக முதல்வரின் சார்பாக வேலைவாய்ப்புத் திட்ட நிர்வாகக் கோட்டா பணி நியமன விண்ணப்பம் என்று அச்சிட்டு, முத்திரையோடு

[டாக்டர் க. பொன்முடி] [1998 மே 30

கையெழுத்தையும் இட்டு, ஒரு வேலைக்கு ஒரு லட்சம் ரூபாய் என்று சொல்லி, 15 நாட்களுக்கு முன்பு புவனகிரியைச் சார்ந்த ஒருவரிடம் ரூ.60,000 பணத்தையும் பெற்றிருக்கிறார்கள்.

இந்த விண்ணப்பத்தைப் பார்க்கிற நண்பர்கள், ஒரு அரசாணையில் முதல்வர் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோரின் புகைப்படங்கள் எல்லாம்கூட இருக்குமா என்றுகூட கருதிப் பார்க்காமல், பணத்தைக் கொடுத்ததால், ஆர்வத்தின் காரணமாக இருப்பவர்களை இப்படி ஏமாற்றுகின்ற நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. ஒவ்வொரு விண்ணப்பத்திலும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் புகைப்படம், பேராசிரியர் அவர்களின் புகைப்படம், நாஞ்சிலார் அவர்களின் புகைப்படம், போக்குவரத்துத் துறை அமைச்சர் என்கிற வகையில் என்னுடைய புகைப்படம் ஆகிய நான்கு படங்களையும் அச்சிட்டு, அமைச்சர்களுக்குக் கோட்டா இருப்பதாகச் சொல்லி, ஒரு இலட்சம் ரூபாய் என்று சொல்லி இருக்கிறார்கள். அதிலே பணம் கொடுத்தவர்கள் சிலர் நேற்று என்னிடம நேரடியாகப் புகார் செய்தவுடன் அந்த அடிப்படையில் காவல் துறைக்கு இது அனுப்பப்பட்டதில், அவர்கள் விசாரித்து இருவரைக் கைது செய்திருக்கிறார்கள். சசி பெர்னாண்டோ என்பவரும், அருணாசலம் என்பவரும் சேர்ந்து இதைச் செய்ததாக கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடம் மேலும விசாரணை நடத்தியபோது, இதுபோன்ற காரியங்களுக்கு முன்நின்று நடத்தியவர் கோவையைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவர்தான் இதைச் செய்கிறார் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த பாலகிருஷ்ணன் என்பவர் இதுபோன்று மோசடியில் முன்பே ஈடுபட்டு, 17 பேருக்கு வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி 11 இலட்சம் ரூபாய் வரை ஊழல் செய்திருப்பதாக அவர் மீது ஏற்கெனவே வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவர் இதுபோல தொடர்ந்து செய்து கொண்டிருப்பதாகவும் செய்தி வந்திருக்கிறது. இந்த விஷயம் தற்போது விசாரணையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, இந்த அறிவிப்பின் மூலமாகப் பொதுமக்கள், குறிப்பாக வேலை தேடுகின்ற இளைஞர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்ல விரும்புகிறேன். போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் அப்ரண்டிஸ் பணிக்குக்கூட, எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலிருந்து இன்டர்வியூ வராமல் இந்த இரண்டாண்டுகளில் யாரையும் தேர்ந்தெடுக்கவில்லை என்பதை அனைவரும் அறிந்து இருக்கிறார்கள். இருந்தாலும், இதுபோன்ற ஆசை வார்த்தைகளால்,



1998 மே 30] [டாக்டர் க. பொன்முடி]

இதுபோன்ற கவர்ச்சியான விண்ணப்பங்களின் மூலமாக, இதுபோன்ற போலி கையெழுத்துக்கள் மூலமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மூலமாக, சிலர் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதில் யாரும் ஏமாந்துவிடக்கூடாது என்பதற்காக இந்த அறிக்கையின் மூலமாக இந்த அறிவிப்பைச் செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வாறு யாரேனும் இதுபோன்ற ஏமாற்று வேலைகளில் ஈடுபட முன்வருவார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர்கள் காவல் துறையிடம் தெரிவித்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி

### (ஆ) சென்னை மாநகரக் காவற்படை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவற்படை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவற்படை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/1998)(1) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

(1) 25-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2. திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2. சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

"1998 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவற்படை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(இ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் நுழையும் இயக்கூர்திகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் நுழையும் இயக்கூர்திகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் நுழையும் இயக்கூர்திகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

---

@ 26-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும்
என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் நுழையும் இயக்கூர்திகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



## (ஈ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவதன் மீதான வரி (இரண்டாம் திருத்து) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.'

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 27-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்முடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



D V24,2'N98 N98.59.1

பிற்பகல் 12-35

## 7. அறிவிப்புகள் - தொடர்ச்சி

### (ஆ) இந்தியக் குற்றவியல் சட்டத்திற்கான திருத்தச் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு இந்தியக் குற்றவியல் சட்டத்திற்கான திருத்தச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1998) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி

### (உ) இந்தியக் குற்றவியல் சட்டத்திற்கான திருத்தச் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு இந்தியக் குற்றவியல் சட்டத்திற்கான திருத்தச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு இந்தியக் குற்றவியல் சட்டத்திற்கான திருத்தச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 27-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசித[illegible]ட்டுள்ளது.



22056

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய. திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்றும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்றும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு இந்தியக் குற்றவியல் சட்டத்திற்கான திருத்தச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஊ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1998) @ மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@28-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் துணைத் தலைவர்] [1998 மே 30

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2. திருத்தங்கள் இல்லை

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



1998 மே 30]

## (எ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1998), மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1998)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 8 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@28-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் துணைத் தலைவர்] [1998 மே 30

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





பிற்பகல் 12-40

### (ஏ) தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1998), மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

---

@ 28-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



## (ஒ) தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1998). மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1998) (1) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி:

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் கல்வி ஆண்டு தொடங்கிய காலத்திலிருந்து தனியார் பள்ளிகளுக்கு அரசு மூலம் கொடுக்கப்பட்டு வந்த மானியத்தையும், புதிதாக அமைக்கப்பட்ட வகுப்புகளைத் தொடங்குவதற்கு அரசு கொடுத்து வருகிற மானியத்தையும் நிறுத்துவது என்று அரசு கொள்கை முடிவு எடுத்து, அந்தக் கொள்கை முடிவை செயல்படுத்துகிற வகையிலே சட்டத் திருத்தத்தை இன்றைக்கு அவையிலே கொண்டு வந்திருக்கிறது. ஏற்கெனவே, தனியார் பள்ளிகளில் குறிப்பாக, மெட்ரிகுலேசன் போன்ற பள்ளிகளில் எல்லாம் வரைமுறையற்ற நன்கொடை வசூலிக்கப்பட்டு வருகிறது. அப்படி வரைமுறையற்று வசூலிக்கப்படுகிற நன்கொடையின் காரணமாக, ஏழை எளிய மக்களுடைய கல்வி உரிமை என்பது பறிக்கப்படுகிறது. அப்படியான நிலைமைகளும் தமிழ்நாட்டிலே அதிகமாக இருக்கின்றன.

அடுத்து, இந்தத் தனியார் கல்வி நிலையங்களில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு மற்றும் அலுவலர்களுக்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லாமல், மிகக் குறைந்த ஊதியம் வழங்கப்படுகிறது. அந்த ஊதியத்தை உத்தரவாதப்படுத்தவும்,

---

(1) 28-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. நா. பெரியசாமி] [1998 மே 30

ஏழைகளினுடைய கல்வி உரிமை பாதிக்கப்படாமல் இருக்கவும், வசூலிக்கப்படுகின்ற கட்டணங்களுக்கு வரைமுறை ஏற்படுத்தவும், சட்டத் திருத்தம் கொண்டுவரவேண்டும் என்ற கருத்தை இந்த நேரத்திலே நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடைமுறையில் உள்ள ஒரு நிலைமையே, நீதிமன்றத்திற்குச் சென்று, அரசாங்கத்தினுடைய நடைமுறைக்கு மாறாக உரிமை கொண்டாடக்கூடிய ஒரு நிலைமைக்கு இடம் தரக்கூடாது என்பதற்காக, 1991 ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாரும், ஏற்கெனவே வழங்கப்பட்டவர்களைத் தவிர, புதியதாக நிதி உதவி கேட்கிற ஒரு கட்டாயமான நிலைமையை அரசாங்கத்தின்மீது திணிக்கக்கூடாது என்பதற்கு, நீதிமன்றத்திலேயே தெரிவிக்கப்பட்ட ஒரு கருத்தின்படி, இது வெறும் விதிமுறையாக இருந்தால் போதாது, சட்டமாக இருப்பது நல்லது என்னும் அந்தக் கருத்தை ஏற்று, அந்த அடிப்படையில் இந்தச் சட்டம் வருகிறது. இது அரசாங்கத்தை, சிறுபான்மை என்ற பெயராலோ அல்லது வேறு ஏதேனும் ஓர் உரிமையின் அடிப்படையிலோ எங்களுக்கு நீங்கள் கட்டாயம் நிதி உதவி தந்தாகவேண்டும் என்று வலியுறுத்த யாருக்கும் உரிமை இல்லை என்ற அந்த அடிப்படையிலே, அதுவும் 1991 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட பள்ளிகளைப் பொறுத்து, இந்தச் சட்டம் ஒரு பாதுகாப்பிற்காக வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.



1998 மே 30] [பேரவைத் துணைத் தலைவர்]

பிரிவுகள் 2 முதல் 7 முடிய. திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஓ) தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/1998), மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/1998) (a) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

| | |
|---|---|
| ஏற்போர் 'ஆம்' என்க. | (ஆம்) |
| மறுப்போர் 'இல்லை' என்க. | (இல்லை) |

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 முடிய, திருத்தங்கள் இல்லை.

(a) 28-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





பிரிவுகள் 2 முதல் 7 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

| | |
|---|---|
| ஏற்போர் 'ஆம்' என்க. | (ஆம்) |
| மறுப்போர் 'இல்லை' என்க. | (இல்லை) |

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

| | |
|---|---|
| ஏற்போர் 'ஆம்' என்க. | (ஆம்) |
| மறுப்போர் 'இல்லை' என்க. | (இல்லை) |

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

| | |
|---|---|
| ஏற்போர் 'ஆம்' என்க. | (ஆம்) |
| மறுப்போர் 'இல்லை' என்க. | (இல்லை) |

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஓ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/1998), மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/1998)ஐ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2. திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2. சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

(ஓ) 28-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 12-30

## 7. அறிவிப்புகள் - தொடர்ச்சி

### (இ) பத்தாவது காமன்வெல்த் நாடாளுமன்ற சங்க மாநாட்டில் கலந்துகொண்டு பேரவைத் தலைவர் ஆற்றிய கருத்துரைக்குக் கிடைத்த பாராட்டு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பத்தாவது காமன்வெல்த் நாடாளுமன்ற சங்க மாநாட்டில் கலந்துகொள்ள 19-5-1998 அன்று கனடா சென்றுள்ளதையடுத்து, பேரவைக் கூட்ட இறுதி நாளன்று பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய அறிவிப்பை இம்மாமன்றத்திற்கு அளிக்கும் வாய்ப்பு எனக்கு இரண்டாவது முறையாக இவ்வாண்டு கிடைத்துள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் 27-5-1998 அன்று கனடாவில் "நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றங்களின் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள்" என்ற தலைப்பில் மிகச் சிறப்பான முறையில் தமது கருத்துரையை வழங்கினார்கள் என்றும், நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு மேல் கூடுதலாக 20 நிமிடங்கள் அளிக்கப்பட்டதாகவும், அவரது கருத்துக்களுக்கு மிகுந்த வரவேற்பு இருந்ததாகவும் எனக்குத் தகவல் வந்துள்ளது என்பதை மெத்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 9. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, இக்கூட்டத்தொடரின்போது பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் குறித்த அறிவிப்பு.

பதினொராவது சட்டமன்றப் பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடர் 18-3-1998 அன்று தொடங்கி இன்று 30-5-1998 வரை நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| பேரவை கூடிய மொத்த நாட்கள் (ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட) | .. | 44 |
| மாலையிலும் பேரவை கூடிய நாட்கள் | .. | 3 |
| அவைக்கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம் | .. | 184 மணி 18 நிமிடங்கள் |

மேதகு ஆளுநர் அவர்கள் 18-3-1998 அன்று பேரவையில் உரையாற்றினார்கள்.





| | | |
|---|---|---|
| ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்ற நாட்கள் | .. | 4 |
| பங்கு கொண்ட உறுப்பினர்கள் | .. | 31 உறுப்பினர்கள் |

1998-99 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை 27-3-1998 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளித்தார்கள்.

| | | |
|---|---|---|
| வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம் நடைபெற்ற நாட்கள் | .. | 6 |
| பங்குகொண்ட உறுப்பினர்கள் | .. | 51 |
| மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள் | .. | 28 |
| உறுப்பினர்கள் ஆற்றிய உரைகள் | .. | 313 |
| உரையாற்றிய நேரம் | .. | 58 மணி 53 நிமிடங்கள் |

இதில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பேரவைத் தலைவர் மற்றும் அமைச்சர்கள் நீங்கலாக உள்ள மொத்த சட்டமன்ற உறுப்பினர் எண்ணிக்கையில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை 80.19 சதவிகிதம் ஆகும். எனினும் மானியக் கோரிக்கை விவாதத்தில் பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை, பேசியவர்களின் எண்ணிக்கையில் 34.5 சதவிகிதம் மட்டுமே. அவர்கள் எடுத்துக்கொண்ட நேரம் மொத்த நேரத்தில் 29.72 சதவிகிதம்தான். இதிலிருந்தே எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இந்த அவையில் எந்த அளவுக்கு வாய்ப்புள்ளது என்பது புலனாகும்.

| | | |
|---|---|---|
| கொடுக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் | .. | 3977 |
| அவைமுன் வைக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் | .. | 3623 |
| விவாதித்து நிறைவேற்றப்பட்ட மானியக் கோரிக்கைகள் | .. | 61 |

வினாக்கள் பற்றிய விவரங்கள்.

| | | |
|---|---|---|
| 30-4-1997 முதல் 29-5-1998 வரை சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட மொத்த வினாக்கள் | .. | 9321 |
| வினாக்கள் அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை | .. | 104 |
| அனுமதிக்கப்பட்ட மொத்த வினாக்கள் | .. | 2937 |
| உடுக்குறியிட்டவை | .. | 1432 |
| உடுக்குறியிடாதவை | .. | 1505 |

[பேரவைத் துணைத் தலைவர்] [1998 மே 30

அனுமதிக்கப்பட்ட வினாக்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்:

1. திரு. ஆ. ஞானசேகரன் .. 511 வினாக்கள்
2. திரு. ப. கோவிந்தன் .. 201 வினாக்கள்
3. திரு. கே. சுப்பராயன் .. 179 வினாக்கள்
4. திரு. கே. ரவி அருணன் .. 131 வினாக்கள்
5. திரு. ஜி.கே. மணி .. 111 வினாக்கள்

இக்கூட்டத்தொடரின்போது அவையில் விடையளிக்கப்பட்டவை .. 675

உடுக்குறியிட்ட வினாக்கள்:

துணை வினாக்கள் .. 1195

உடுக்குறியிடாத வினாக்கள் .. 713

உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் .. 1250

வினாக்கள்-விடைகள் எடுத்துக்கொள்ளப்பட்ட நாட்கள் .. 31

வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பட்ட நாட்கள் .. 24

நீட்டிக்கப்பட்ட நேரம் .. 4 மணி 41 நிமிடங்கள்

சிறப்புக் கவன ஈர்ப்பு:

அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொதுப் பொருள்கள் குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பு அதாவது Special Mention என்ற வகையில் அவையில் எடுத்துக் கொள்ளப்பட்டவை .. 43

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்தவை .. 25

எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம் .. 11 மணி 40 நிமிடங்கள்



1998 மே 30] [பேரவைத் துணைத் தலைவர்]

பங்கு கொண்ட உறுப்பினர்கள் .. 139

கவன ஈர்ப்பு:

உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை .. 428

அனுமதிக்கப்பெற்றவை .. 117

அவையில் எடுத்துக்கொள்ளப்பெற்று விளக்கம் அளிக்கப்பெற்றவை .. 36

இறுதி நாளன்று அவைமுன் வைக்கப்பெற்றவை .. 56

உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்:

அவையில் எழுப்பப்பெற்றவை .. 2

உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டவை .. 1

அரசினர் சட்டமுன்வடிவுகள்: ..

வரப்பெற்றவை .. 43

நிறைவேற்றப்பெற்றவை .. 43

இவற்றில் பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமுன்வடிவு, ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மை சட்டமுன்வடிவு ஆகியவை குறிப்பிடத்தக்கவை ஆகும்.

பிற்பகல் 12.55

விதி 110-ன்கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்:

மொத்தம் அளிக்கப்பட்டவை .. 22

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்தவை.. 6

ஒத்திவைப்புத் தீர்மானம்:

அவையில் எடுத்துக்கொள்ளப்பட்டு அனுமதி மறுக்கப்பெற்றது .. 1

வெள்ளை அறிக்கை:

கோயம்புத்தூர் குண்டு வெடிப்பு குறித்த அரசின் வெள்ளை அறிக்கைமீது 11-5-1998 அன்று விவாதம் நடைபெற்றது. விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர்கள் 12 பேர். பேசிய நேரம் 3 மணி 32 நிமிடங்கள்.

பேரவைக் குழுக்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள்:

பொதுக் கணக்குக் குழு .. 48

| | | |
|---|---|---|
| பொது நிறுவனங்கள் குழு | .. | 30 |
| பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | . | 0 |
| மதிப்பீட்டுக் குழு | .. | 7 |
| சட்ட விதிகள் ஆய்வுக் குழு | . | 4 |
| மனுக்கள் குழு | .. | 3 |
| அரசு உறுதிமொழிக் குழு | .. | 1 |
| அவை உரிமைக் குழு | .. | 1 |
| பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்: | | |
| (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும் | .. | 175 |
| (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள் | .. | 278 |

உறுப்பினர்கள் வருகை:

இக்கூட்டத்தொடரின்போது அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்கள் பட்டியல் பின்வருமாறு:

திரு. அ. அசோகன்.
திரு. ம. அப்துல் லத்தீப்
திரு. லி. அய்யலுசாமி
திரு. பால. ஆனந்தன்
டாக்டர் காஞ்சனா கமலநாதன்
திரு. ஏ. கோதண்டம்
திருமதி கோமதி சீனிவாசன்
திரு. வெ. கோவிந்தன்
திரு. சி. சண்முகம்
திரு. இஜி. சுகவனம்
திரு. கே. சுந்தர்
திரு. செங்கை சிவம்
டாக்டர் ஆ. ஞானசேகரன்
திரு. குழந்தை தமிழரசன்
திரு. ஆர். தமிழ்ச்செல்வன்
திரு. வீ. தமிழ்மணி
திரு. விஜி. தனபால்





திரு. இரா. தாமரைக்கனி
திரு. பெ.சு. திருவேங்கடம்
திரு. கொ.வீ. நன்னன்
திரு. ந. பாண்டுரங்கன்
திரு. டி. மணி
திரு. எஸ். மதிவாணன்
திரு. கு. மனோகரன்
திரு. ச.சு. வெங்கடேசன்

மொத்தம் 25 பேர். இவர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் 21 பேர், மற்ற கட்சியினர் 4 பேர்.

இப்பட்டியல், உறுப்பினர்கள் வருகைப் பதிவேட்டை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். மாண்புமிகு அமைச்சர்கள் இப்பதிவேட்டில் கையொப்பமிடுவதில்லை என்பதால் அவர்கள் அனைத்து நாட்களும் அவைக்கு வந்திருந்தாலும் அவர்களது பெயர் இப்பட்டியலில் இடம் பெறாது. குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்திப்பதற்காக 7-4-1998 அன்று புது டெல்லி சென்ற ஒரு நாள் தவிர அனைத்து நாட்களிலும் (மேசையைத் தட்டும் ஒலி) அவைக்கு வந்திருந்து தான் பொறுப்பு வகிக்கும் துறைகள் மட்டுமல்லாது இதர அமைச்சர்களின் துறைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கும் உடனுக்குடன் பதிலளித்து அவை நடவடிக்கைகளில் சிறப்பாக பங்குகொண்டார்கள் என்பது நீங்கள் அனைவரும் அறிந்ததே.

தனது உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாமல் காவல் துறை மானியக் கோரிக்கையின்போது ஒன்றேகால் மணி நேரம் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் தொடர்ந்து விரிவான பதிலளித்தது சட்டமன்றத்தின்மீது அவர் கொண்டுள்ள மரியாதையையும், ஈடுபாட்டையும் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

பார்வையாளர்கள்

பார்வையாளர்கள் மாடத்தில் (Visitors Gallery) அனுமதிக்கப் பெற்றவர்கள்:

| | | |
|---|---|---|
| ஆண்கள் | .. | 14,785 |
| பெண்கள் | .. | 1,048 |

| | | |
|---|---|---|
| பேரவைத் தலைவர் மாடத்தில் (Speaker's Gallery) அனுமதிக்கப்பெற்றவர்கள் | .. | 11,520 |
| நூலகம் | | |
| சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர் | .. | 2,200 |
| வழங்கப்பெற்ற நூல்கள் | .. | 520 |
| இவ்வாண்டு புதியதாக வாங்கப்பெற்ற நூல்கள் எண்ணிக்கை | .. | 715 |
| நடவடிக்கைக் குறிப்புகள் | | |
| இக்கூட்டத் தொடரில் உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் (குறுக்கீடுகள் இதில் இடம் பெறாது) | .. | 945 |
| தட்டச்சு செய்யப்பெற்ற மொத்தப் பக்கங்கள். | .. | 10,095 |
| மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | .. | 3,014 |
| தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | .. | 1,076 |

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுவரும் படிகள் உயர்த்தப்பட்ட வகையில் அவர்களின் மாத ஊதியம் ரூ.8,000-லிருந்து ரூ.9,000 ஆக இவ்வாண்டு உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு சட்டமன்ற உறுப்பினர் இறக்க நேரிட்டால் அவரது குடும்பத்திற்கு வழங்கப்படும் தொகை ரூ.50,000 ஆக இருந்தது. இவ்வாண்டு இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.1,250 லிருந்து ரூ.2,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதிகபட்சமாக ரூ.5000 வரை வழங்கப்படவுள்ளது.

இப்பேரவைக் கூட்டத் தொடர் சிறப்பாக நடந்து முடிய உதவி செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்களில் முதன்மையாக, அவையை நடத்துவதில் எனக்கு அனைத்து வகைகளிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் எனது நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





பிற்பகல் 1.00

அதேபோன்று, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர், மற்ற கட்சித் தலைவர்கள், எனக்கு உறுதுணையாக இருந்த பேரவை மாற்றுத் தலைவர்களான திருவாளர்கள் ரா. சேதுநாதன், கு. மனோகரன், வ. வேலுசாமி, சி. ஞானசேகரன், நா. பெரியசாமி, முகம்மது கோதர் மைதீன் ஆகியோருக்கும் எனது நன்றி உரித்தாகும். உறுப்பினர்கள் அவையில் தங்கள் கருத்துக்களை எடுத்து வைக்க உதவி செய்த அரசு தலைமைக் கொறடா மற்றும் அனைத்து கட்சி கொறடாக்கள் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்ற இந்த ஐந்தாவது கூட்டத் தொடர் நல்ல முறையில் நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும் செய்திட்ட சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. சாலமன் ஜெயபால் அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் இதர அலுவலர்கள், நிருபர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் அனைவருக்கும் இத்தருணத்தில் எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் ஒலி பெருக்கி வசதி செய்து கொடுத்து உறுப்பினர்களின் குரல் ஓங்கி ஒலிக்கச் செய்த பொதுப் பணித் துறை ரேடியோ ஆப்பரேட்டர்களுக்கும், பேரவைக் காவலர்களுக்கும், மின்னணு கடிகாரத்தைப் பராமரித்த திரு. சுவாமிநாதன் அவர்களுக்கும் இத்தருணத்தில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவையின் நடவடிக்கைகளை நாட்டு மக்களுக்கு உடனுக்குடன் எடுத்துச்சென்றது மட்டுமல்லாமல், சட்டமன்றப் பேரவை நடத்தப்படும் முறை குறித்து ஆக்கபூர்வமான விமர்சனங்களை வழங்கிய அனைத்துப் பத்திரிகைகளுக்கும், அவற்றின் செய்தியாளர்களுக்கும், வானொலி, தொலைக்காட்சி மற்றும் இதர செய்தி நிறுவனங்களுக்கும் என்னுடைய நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

இறுதியாக, கடந்த இரண்டாண்டுகளில் இப்பேரவை எப்படி இயங்கி வருகிறது என்பது குறித்து 15-5-1998 அன்று தினமணி பத்திரிகை எழுதியுள்ள கீழ்க்கண்ட தலையங்கத்தைச் சுட்டிக்காட்டி நிறைவு செய்ய விரும்புகிறேன்:

"சட்டப் பேரவை தன் பழைய ஆரோக்கியத்திற்குத் திரும்ப, வழி பிறந்தது. இலாவணிக் கச்சேரி, சந்தை ஆரவாரம் போன்ற காட்சிகள் மறைந்தன. அடுத்து, பிரச்சினைகளை விவாதிப்பதற்கு உரிய மக்கள் மன்றமாக பேரவை மாறியது. இந்த மாற்றத்தை விளைவித்ததில்,

முதல்வர், பேரவைத் தலைவர் ஆகிய இருவருக்குமே பங்கு உண்டு." (மேசையைத் தட்டும் ஒலி)

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, என் வாழ்நாளிலே எனக்குக் கிடைத்த மிகப்பெரும் பாக்கியம், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பவள விழா காணும் நேரத்தில் அவர்களைப் பாராட்ட எனக்கு வாய்ப்புக் கிட்டி இருக்கின்றது. அவர்கள் பல்லாண்டு வாழ என்னுடைய இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 10. அரசினர் தீர்மானம்

### பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுவதற்கான தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்" என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை 1-03 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.





## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

174. 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி பொறியற் பணி விதிகளை வகுப்பது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 24-12-1997ஆம் நாளிட்ட 309ஆம் எண் அரசாணை மற்றும் 12-1-1998ஆம் நாளிட்ட கடித எண் 778/M.E.III/98-1, [1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

175. 1996-97ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் இருபதாம் ஆண்டறிக்கை, [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

255. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55-ன் கீழ் அனுமதிக்கப்பெற்ற கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புகளின்மீது பெறப்பட்ட அறிக்கைகளின் பட்டியல் (வரிசை எண்கள் 1 முதல் 56 வரை).

256. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பன்னிரெண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

257. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதிமூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

258. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

259. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினைந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

[1998 மே 30

260. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினேழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

261. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினேழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

262. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினெட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

263. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பத்தொன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 43 வரை).



1998 மே 30]

## இணைப்பு—1

[குறிப்பு: இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.]

### உடுக்குறியிடாத வினாக்கள்

(1 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

**(பன்னிரெண்டாம் பட்டியல்)**

**1—**

**உயிரோடு இருப்பவர்கள் பெயர்களைச் சூட்டுதல்**

**வினா 76—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உயிரோடு இருப்பவர்கள் பெயர்கள் பொது நிறுவனங்களுக்கும், போக்குவரத்துக் கழகத்துக்கும், கட்டடங்களுக்கும் சூட்டக் கூடாது என அரசு ஆணை உள்ளதா?

(ஆ) ஆணை மீறப்பட்டிருப்பின் அத்தகைய நேர்வுகளில் அரசு எடுக்க உள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) உயிரோடு இருப்பவர்களின் பெயர்களை பொது நிறுவனங்களுக்கும், கட்டடங்களுக்கும் வைக்கலாம் என்றும், அவ்விதம் பெயர்கள் வைக்க விரும்பினால் அரசினுடைய முன் அனுமதி பெற்ற பின்னரே வைக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை (நிலை) எண் 1574 பொதுத் (பொது.1) துறை, நாள் 25-9-87-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இத்துறையினால் வெளியிடப்பட்ட மேற்கூறிய பொதுவான வழிமுறைகள் தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்து துறைகளுக்கும்

[1998 மே 30

அனுப்பப்பட்டு அவைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. மேற்பட்டிருக்கும் நிகழ்வுகளில், நடவடிக்கைகள், சம்பந்தப்பட்ட துறைகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

2—

**ஜாதிய அமைப்புச் சங்கம்**

**வினா 643—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமைச்சர்கள், இ.ஆ.ப., இ.கா.ப., அதிகாரிகள் ஆகியோர் ஜாதிய அமைப்பில் அங்கம் பெறுவதைத் தடை செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அமைச்சர்களைப் பொறுத்தவரை, அமைச்சராகப் பதவி பொறுப்பு ஏற்கும் ஒருவர், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் விதிமுறைகள், 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் விதிமுறைகள் மற்றும் தற்போது செயலில் உள்ள மற்ற விதிகளைப் பின்பற்றுகின்றனர். மைய அரசால் அவ்வப்பொழுது வெளியிடப்படும் ஆணைகளை அடிப்படையாகக் கொண்டு அமைச்சர்களுக்கான நடத்தை விதிகள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் அமைச்சர்கள் சாதிய அமைப்பில் அங்கம் பெறுவது தொடர்பாகக் குறிப்பு ஏதுமில்லை. அனைத்திந்தியப் பணியாளர்கள் (நடத்தை) விதிகள், 1968-ன்படி ஒவ்வொரு அனைத்திந்தியப் பணியாளரும், முழுமையான ஒருமைப்பாட்டினையும், கடமையார்வப் பற்றினையும் எப்பொழுதும் கடைப்பிடிக்க வேண்டும். மேலும் விதிகளுக்குப் புறம்பாக அனைத்திந்தியப் பணிக்கு குந்தகம் விளைவிக்கும் செயல் எவற்றிலும் ஈடுபடுதல் கூடாது. அவர்கள் தடை செய்யப்பட்ட சட்டத்திற்கு மாறான சங்கங்களில் உறுப்பினராகவோ அல்லது அவற்றுடன் தொடர்போ கொண்டிருக்கக் கூடாது. அங்ஙனம் தெரியவந்தால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம். மேலும் எந்த ஒரு அனைத்திந்தியப் பணியாளரும் எந்த ஒரு அரசியலில் கட்சியிலும் உறுப்பினராகவோ அல்லது அரசியல்



1998 மே 30]

ஈடுபாடு கொண்டுள்ள சங்கத்தில் உறுப்பினராகவோ அல்லது வேறு வகையில் அந்தச் சங்கங்களுக்கு உதவுவதோ, சந்தாதாரர் ஆகுவதோ கூடாது.

மேலும், அனைத்திந்தியப் பணியாளர்கள் நடத்தை விதியில் இல்லாத சில வழிவகைகள், மாநில அரசின் நடத்தை விதியின்கீழ் இருப்பின் அவை அவர்களுக்கும் பொருந்தும் என மைய அரசு கருத்துக் கூறியுள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிகளின்படி எந்த ஒரு அரசு அலுவலரும் மத, இன, மொழி அல்லது சாதி, பிறந்த இடம், வசிக்கும் இடம் ஆகியவற்றின் இடையே விரோத உணர்வு, பொறாமை, வெறுப்பு அல்லது கொடிய மனப்பான்மையை வளர்ப்பதாகவோ அல்லது வளர்க்கும் முயற்சியில் ஈடுபாடு கொண்டுள்ள சங்கங்களின் உறுப்பினராகவோ அல்லது அவற்றுடன் தொடர்பு கொண்டிருக்கவோ கூடாது. இந்த நடத்தை விதிகள் அனைத்திந்தியப் பணியாளர்களுக்கும் பொருந்தும். மேற்கூறிய விதிகள் அனைத்தும் நடைமுறையில் இருப்பதால், அமைச்சர்கள், இ.ஆ.ப., இ.கா.ப., அதிகாரிகள் ஆகியோர் சாதிய அமைப்பில் அங்கம் பெறுவதைத் தடை செய்யும் செயற்குறிப்பு ஏதும் தேவையில்லை என்று கருதப்படுகிறது.

3—

**நெய்வேலி நிலக்கரிச் சுரங்க உபரி நீர்**

**வினா 1468—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், கத்தாழை, வளையமாதேவி பகுதிகளுக்கு விவசாயத்திற்காக, நெய்வேலி நிலக்கரிச் சுரங்க உபரி நீரைத் திருப்பி விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம். பரிசீலனையில் உள்ளது.

[1998 மே 30

(ஆ) தென் ஆற்காடு கடலூர் மாவட்டம், நெய்வேலி நிலக்கரிச் சுரங்க வளாகத்தில் உபரி நீரை கால்வாய் மூலம் கந்தாமூர் ஏரிக்குக் கொண்டு செல்லவும், பின்பு கந்தாமூர் அருகே ஏரிகளின் வழியாக விருத்தாசலம் வடக்கு பிரதான கால்வாயில் விடவும் மதிப்பீடு ஒன்று 1996-97 விலை விகிதப்படி ரூ.121.13 இலட்சத்திற்கு திட்ட உருவாக்கல் பிரிவினால் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. நெய்வேலி நிலக்கரிச் சுரங்க நிறுவனம் மற்றும் தமிழக அரசின் சம்பந்தப்பட்ட இலாக்காக்கள் இந்தத் திட்டத்தைப்பற்றி பரிசீலனை செய்யும்.

4—

## தொழில் புரிவதற்கு கடன் உதவி

**வினா 1801—திரு. டி. மணி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பாரதிய சமூக சேவா சங்கம், தொழில்கள் செய்வதற்குக் கடன் கொடுப்பதாகக் கூறி பொதுமக்களிடமிருந்து உறுப்பினர் கட்டணம் என்ற பெயரால் வசூல் செய்துவிட்டு கடன் கொடுக்காமலும், வசூல் செய்த பணத்தைத் திருப்பிக் கொடுக்காமலும் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) உறுப்பினர் கட்டணம் என்று வசூல் செய்த பணத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை என புகார் வரவில்லை. மாறாக, பாரதிய சமூக சேவா சங்கம் என்ற அமைப்பின் தலைவர் குசலகுமார் என்பவரும் மற்றும் சிலரும் பல நபர்களிடம் வேலை வாங்கித் தருவதாகக் கூறி சுமார் ரூ.5 இலட்சம் வரை மோசடி செய்துவிட்டதாகக் காவல்துறைக்கு புகார்கள் வந்துள்ளன.

(ஆ) மேற்படி புகார்கள் சம்பந்தமாக 9 நபர்கள் மீது களியக்காவிளை காவல் நிலையத்தில் 13-9-96 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டது. அவ்வழக்கு குழித்துறை காவல்நிலையத்திற்கு 2-4-97 அன்று மாற்றப்பட்டு தற்போது விசாரணையில் உள்ளது. குற்றவாளிகள் தலைமறைவாக உள்ளனர்.



1998 மே 30]

5—

## விதிக்கப்பட்ட வரியினை நீக்குதல்

**வினா 1944—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரி விலக்களிக்கப்பட்ட (Consignment) விற்பனைக்கு வரி விதிக்கப்பட்டதை நீக்கக்கோரி அரசிற்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956-ன் படி வெளி மாநிலங்களுக்கு முகவர் வழி விற்பனைக்காகச் செல்லும் ஒப்படைப்பு சரக்குகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் மாநில அரசுக்குக் கிடையாது. ஆனாலும் சில வணிகர்கள், நேரடி வெளிமாநில விற்பனைக்காக செல்லும் பண்டங்களை 'முகவர் வழி' ஒப்படைப்புச் சரக்கு (Consignment) என்ற போர்வையிலும், வெளிமாநிலத்திலுள்ள கிளைகளுக்கு மாற்றம் செய்கின்ற சரக்கு என்ற வடிவத்திலும் (Branch Transfer) எடுத்துச் செல்வதால் வணிகவரி அலுவலர்கள் அதனை வரி ஏய்ப்பு என்று கண்டுபிடித்து வரிவிதிப்பு செய்கின்றனர். இது தொடர்பாக பல வழக்குகள் நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளன. நீதிமன்றங்கள் சுட்டிக்காட்டியுள்ள நெறிமுறைப்படியே தற்போது வரி விதிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இது தொடர்பாக வணிகர்களின் கோரிக்கைகள் அவ்வப்போது வணிகவரித் துறைக்கு முறையீடுகளாக வந்துள்ளன.

(ஆ) அத்தகைய முறையீடுகளுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு விண்ணப்பதாரருக்கு முறையான விளக்கங்களும் பதிலும் தரப்பட்டுள்ளன.

6—

## நஷ்டஈடு வழங்கல்

**வினா 1946—திரு. செங்கை சிவம்:**

*மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி படுகொலையின் போது வீடுகள் மற்றும் தொழிற்கூடங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிமன்ற ஆணைப்படி நஷ்ட ஈடு வழங்கப்பட்டதா?*

*(ஆ) இல்லையெனில், வழங்கப்படாதவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(இ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறைகளில், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் திரு. கே. ஜே. எம். ஷெட்டி, இ.ஆ.ப. அவர்கள் சிறப்பு ஆணையாளர் (நிவாரணம்)-ஆக நியமிக்கப்பட்டார். அவர் குறிப்பிட்ட தேதிக்குள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பாதிக்கப்பட்டோர் விண்ணப்பிக்க வேண்டுமென விளம்பரம் செய்து, நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் விண்ணப்பித்தவர்களுக்கு நிவாரணம் வழங்கியுள்ளார். அவரது பதவிக் காலம் 30-4-1994 அன்று முடிவடைந்தது. எனினும் இந்நிகழ்வுகளில் திரு. கே.ஜே.எம். ஷெட்டி கமிஷன் வழங்கிய நிவாரணத் தொகையை உயர்த்தக்கோரி, பாதிக்கப்பட்டவர்கள் பலரிடமிருந்தும் கோரிக்கைகள் பெறப்பட்டதால், திரு. கே. ஜே. எம். ஷெட்டி, சிறப்பு ஆணையர் (நிவாரணம்) வழங்கிய நிவாரணத் தொகையை, எதிர்ப்புத் தெரிவித்து பெற்றுக் கொண்டவர்கள் மற்றும் நிவாரண ஆணையை எதிர்த்து நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தவர்கள் ஆகியோரின் கோரிக்கைகளைப் பரிசீலித்து நிவாரணம் வழங்கிட 27-3-1997-ல் நாளிட்ட உயர்நீதிமன்றத்தின்*





*ஆணைகளின்படி அரசு ஆணை (நிலை) எண் 396, பொதுத் (சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்) துறை, நாள் 4-4-1997-ல் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு. எம். மோகன் அவர்களை ஒரு நபர் கமிஷனாக நியமிக்க அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அவர் ஆறு மாதங்களுக்குள் இப்பணியினை முடிக்கக் கோரப்பட்டுள்ளார். இந்தக் கமிஷன் தற்போது தனது பணியினை மேற்கொண்டுள்ளது.*

*(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.*

7—

## கள்ளச் சாராயம் ஒழித்தல்

**வினா 2900—திரு. இரா. தாமரைக்கனி:**

*மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாட்டில் கள்ளச் சாராயத்தை ஒழிக்க அரசு எடுத்துவரும் துரித நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*1. கள்ளச் சாராயத்தை ஒழிக்கும் பணியில் காவல்துறை, வருவாய்த் துறை மற்றும் ஆயத் தீர்வைத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் அடிக்கடி சோதனைகள் மற்றும் வேட்டைகள் நடத்தி செயல்படுகின்றனர்.*

*2. கள்ளச் சாராயத் தொழிலில் ஈடுபடும் சில சமூக விரோதிகள் மீதும், மற்றும் அத்தொழிலில் வழக்கமாக ஈடுபடும் குற்றவாளிகள் மீதும், தடுப்புக் காவல் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 14/1982) உபயோகித்து அவர்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.*

*3. ஒவ்வொரு மாவட்டத்திலும் 1000 மகளிர்க்கு உரிய ஊதியம் வழங்கி மதுவின் தீமைகளை எதிர்த்து பிரச்சாரம் செய்ய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*4. கள்ளச் சாராய ஒழிப்புப் பணியில் தீவிரமாக ஈடுபடும் காவல்துறை அலுவலர்கட்கு, உத்தமர் காந்தி பெயரில் பதக்கமும்,*

ரூ.10,000/- ரொக்கமாகவும் வழங்க தீர்மானிக்கப்பட்டு, அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

8—

**காவலர் பணியமர்த்தல்**

**வினா 3092—திரு. டி. மணி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1993-ல் நடைபெற்ற காவலர்களுக்கான தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களில் எத்தனை பேர் பணியில் அமர்த்தப்பட்டனர்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

1993—ல் நடைபெற்ற காவலர்களுக்கான தேர்வில் தேர்ச்சி பெற்ற 10,335 நபர்களில், பயிற்சியை முடித்த 10,054 பேர் பணியில் அமர்த்தப்பட்டனர்.

9—

**வரி இழப்பினைத் தடுத்தல்**

**வினா 3094—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டவர் பாண்டிச்சேரியில் இரு சக்கர, நான்கு சக்கர வாகனங்களை வாங்குவதால் மாநில அரசுக்கு எவ்வளவு வரி இழப்பு ஏற்படுகிறது?

(ஆ) அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டவர் பாண்டிச்சேரி போன்ற பிற மாநிலங்களில் இரு சக்கர, நான்கு சக்கர வாகனங்களை வாங்குவதால் மாநில அரசுக்கு ஏறத்தாழ ரூ.100 கோடி வரை இழப்பு ஏற்படும் என மதிப்பீடு செய்யப்படுகிறது.



(ஆ) இதனைத் தடுக்கும் நடவடிக்கையாக வெளிமாநிலத்தில் வாங்கப்பட்ட வாகனங்களை தமிழ்நாட்டில் பயன்படுத்துபவர்கள், நுழைவு வரியை மூன்று தவணையாக, முதல் தவணையை 10-1-97-க்கு முன்னரும், இரண்டாவது தவணையை 15-2-97-க்கு முன்னரும், மூன்றாம் தவணையை 15-3-97-க்கு முன்னரும் செலுத்துவதற்கும், நுழைவு வரி செலுத்தப்படாத வாகனங்களைப் பறிமுதல் செய்வதற்கும், வழிவகை செய்தும் 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பரப்பிடங்களுக்குள் நுழையும் இயக்கூர்திகள் மீதான வரிச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. அதனை எதிர்த்து போடப்பட்ட வழக்குகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. அத்தீர்ப்பினை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் பெற்ற தடையாணை 8-9-97-உடன் முடிவடைந்துவிட்டது. இந்நிலையில் நுழைவு வரி வசூலிப்பது துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

10—

**காவலர்களின் சீருடை மாற்றுதல்**

**வினா 3159—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் காவலர்களின் சீருடையில் மாற்றம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

11—

**அபராதம் ரத்து செய்தல்**

*வினா 3260—திரு. இ.ஜி. சுகவனம்:*

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1995 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் திருநெல்வேலி மாவட்டம், பொன்னக்குடியில் தனி நபர் முறைகேடாக கல்குவாரியில் கருங்கல் வெட்டியதில் மாவட்ட ஆட்சியர் விதித்த 28 இலட்ச ரூபாய் அபராதத்தை ரத்து செய்து 28 ஆயிரம் ரூபாய் அபராதமாக செலுத்த இயக்குநரகம் உத்தரவிட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரவைமுன் ஓர் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

**விளக்க அறிக்கை**

1995 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், பொன்னக்குடியில் தனி நபர் முறைகேடாக கல்குவாரியில் கருங்கல் வெட்டியதில் மாவட்ட ஆட்சியர் விதித்த 28 இலட்ச ரூபாய் அபராதத்தை ரத்து செய்து 28 ஆயிரம் ரூபாய் அபராதமாக புவியியல் மற்றும் சுரங்க இயக்குநரகம் உத்தரவிட்டுள்ளது பற்றி அறிக்கை.

ஆம். திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், பொன்னக்குடி கிராமம், புல எண் 24—ல் திரு. ஜெபராஜ் என்பவர் கள்ளத்தனமாக கல்குவாரி செய்து வெட்டியெடுத்ததின் பேரில், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சியர் 28 இலட்ச ரூபாய் அபராதம் விதித்தார். இந்த ஆணையை எதிர்த்து திரு. ஜெபராஜ், புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையரிடம் மேல்முறையீடு செய்தார்.

திரு. ஜெபராஜின் மேல் முறையீட்டு மனுவின் பேரில், புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் அவர்கள் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணையினை பகுதியாக (Part) ரத்து செய்து அபராதத்தை



குறைத்து விதித்துள்ளார். ஏனெனில், பாளையங்கோட்டை வட்டாட்சியர் தனது அறிக்கையில் பொன்னக்குடி கிராமத்தில் புல எண் 24—ல் உள்ள கல்வெட்டிய குழி சுமார் 25 ஆண்டு காலமாக செயல்பட்டு வந்தது என்றும் திரு. ஜெபராஜ் ஒருவரே செய்திருப்பார் என்று கருத இயலாததாலும், திரு. ஜெபராஜூம் தான் சுமார் 100 லாரி லோடு அளவுள்ள கற்களை அப்புறப்படுத்தியதாக தனது அறிக்கையில் கூறியிருந்ததாலும், மொத்த கற்களை திரு. ஜெபராஜ் ஒருவரே வெட்டி அப்புறப்படுத்தியிருப்பார் என்று சான்று நிலை நிறுத்த அத்தாட்சி ஏதும் இல்லாததாலும், புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் அவர்கள் 100 லோடு கற்களுக்கே அபராதம் விதித்தார். மேலும், புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் அவர்கள் தன் செயல்முறை ஆணையில் திரு. ஜெபராஜ் மற்றும் வேறு நபர்கள் செய்திருக்க வாய்ப்பு உள்ளது என்பதால் திருநெல்வேலி கட்ட பொம்மன் மாவட்ட ஆட்சியரின் ஆணையை பகுதியாக (Part) ரத்து செய்து திரு. ஜெபராஜூவையும் சேர்த்து மற்ற நபர்கள் யார் யார் கள்ளத்தனமாக கற்களை வெட்டியெடுத்தார்கள் என்று கண்டுபிடித்து அபராதம் விதித்து தொகையை வசூலிக்க ஆணையிட்டுள்ளார். ஆகவே, மாவட்ட ஆட்சியர், புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையரின் ஆணையை செயல்படுத்தியபின், அவசியம் இருந்தால், அரசு மறுபரிசீலனை செய்யும்.

**12—**

**குவாரிகளுக்கு அனுமதி வழங்கியது**

**வினா 3264—திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கனிமச் சலுகை விதிகள் 39—க்கு 1993—ல் திருத்தம் செய்யப்பட்டு விழுப்புரம் மாவட்டம், சேமங்கலம் உள்ளிட்ட 9 குவாரிகளுக்கு அனுமதி வழங்கியதில் அரசுக்கு ஏதேனும் இழப்பு ஏற்பட்டுள்ளதா?

(ஆ) அரசுக்கு இவ்வகையில் ஏற்பட்ட இழப்பு தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

[1998 மே 30]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம். புறம்போக்கு நிலங்களில் கிராவைட் குவாரிகளுக்கான உரிமம் வழங்கும்போது டெண்டர் முறையைக் கட்டாயமாக கையாள வேண்டுமென்று முன்பு கழக அரசு எடுத்த முடிவை புறக்கணித்துவிட்டு, முந்தைய அரசால் புறம்போக்கு குவாரிகளைத் தங்கள் விருப்பம்போல் யாருக்கு வேண்டுமானாலும் எதையும் கணக்கில் கொள்ளாமல் உரிமம் வழங்க ஏதுவாக, விதி 39 என்கிற விதியை இயற்றி, அரசாங்க வருவாயை பாதிக்கும் முடிவுகள் எடுக்கப்பட்டன. அவ்விதியின் கீழ், விழுப்புரம் மாவட்டத்தில் சேமங்கலம் உள்ளிட்ட 9 குவாரிகளுக்கு குத்தகை உரிமத்தை முந்தைய அரசு வழங்கியது. இந்த விதி 39-ல் கனிம வரிவிதிப்பு பற்றி கூறப்படவில்லை. ஆனால் மேற்கூறிய 9 குவாரிகளுக்கு உரிமை வரி அல்லது இடப்பு வரி இவற்றில் எது அதிகமோ அதனையும் மற்றும் பரப்பு வரியும் வசூலிக்க ஆணை உள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட குவாரிகளுக்கு குத்தகைத் தொகை வசூலிக்க வழியில்லை. எனவே இவ்வாட்சி பொறுப்பேற்றவுடன், இவ்விதியின் சூட்சமத்தினை உணர்ந்து மேற்கூறிய விதியினை நீக்கி, பிற வரிகளுடன் குத்தகையும் வசூலிக்க வகை செய்தது. மேலும் ஒளிவுமறைவற்ற டெண்டர் மற்றும் ஏல முறையைக் கொண்டுவந்து அரசின் வருமானத்தைப் பெருக்கியது. எனவே தற்போதைய நிலையை ஒப்பிடும்போது சிறு கனிம விதி 39-யை நடைமுறைப்படுத்தியதால் அரசுக்கு இழப்புதான்.

(ஆ) விதி 39-ன் கீழ் புறம்போக்கு நிலங்களில் கிராவைட் குவாரிகளுக்கு குத்தகை உரிமம் வழங்கியதில் நடைபெற்ற முறைகேடுகள்/இழப்புகள் பற்றி விசாரணை நடைபெற்று, மாநில குற்றப் புலனாய்வுத் துறை (CB. CID.)-யிடம் வழக்கு தொடர உத்தரவிடப்பட்டுள்ளது. அவர்களும் இது குறித்து மேல் நடவடிக்கை எடுத்து, சம்பந்தப்பட்டவர்கள் மீது கிரிமினல் வழக்கு ஒன்றினை தொடுத்துள்ளனர்.

13—

**அரசின் வருவாய் இழப்பு**

**வினா 3265—திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) கடந்த ஆண்டுகளில் அரசு அதிகாரிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட குழு மூலம் மணல் குவாரி, கல் குவாரிகள் முறைகேடாக வழங்கப்பட்டதில் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பேரவை முன் ஓர் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

**விவர அறிக்கை**

கடந்த ஆண்டுகளில் அரசு அதிகாரிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட குழு மூலம் மணல் குவாரி, கல் குவாரிகள் முறைகேடாக வழங்கப்பட்டதில் அரசுக்கு வருவாய் இழப்பு பற்றிய அறிக்கை:

1959-ஆம் ஆண்டின் தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளின்படி மணல்-கல்-குவாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பகிரங்க டெண்டர் அடிப்படையில் குத்தகைக்கு விடவேண்டும். ஆனால், தவறான நோக்கத்துடன் முந்தைய அரசு இந்தக் குவாரிகளை இலஞ்சம் பெற்றுவிட்டு உரிமம் வழங்க, புதியதாகக் கொண்டுவந்த விதி 39-ன் கீழ் மனுக்களைக் கோரினர். இந்த மனுக்களைப் பரிசீலித்து பரிந்துரைகள் வழங்க, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு குழு அமைத்தார்கள். இந்தக் குழுவில், இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத் துறை, புவியியல் மற்றும் சுரங்கத் துறை வேலையைப் பார்க்கும் அரசு துணைச் செயலர் மற்றும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இடம் பெற்றார்கள். அக்குழு, விண்ணப்பதாரர் விண்ணப்பித்துள்ள இடங்களைப் பார்வையிட்டும், பார்வையிடாமலும், தன்னிச்சையாக வேண்டியவர்களுக்கு மட்டும், சில பலன்களை எதிர்பார்த்தும், அமைச்சரின் இங்கிதத்திற்கு ஏற்றவாறும், பரிந்துரைகளை வழங்கியது. அந்தப் பரிந்துரைகளை ஏற்று அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன. மாவட்ட அளவில் டெண்டர் அடிப்படையில் நடக்க வேண்டிய விஷயம், அரசு மட்டத்தில் எடுக்கப்பட்டது. முன்பிருந்த விதி 39-ன்

[1998 மே 30

கீழ் குத்தகை வழங்கப்பட்ட குத்தகைதாரர்களிடமிருந்து நேராயமாக குத்தகைத் தொகை நிர்ணயம் செய்து அதிலில் 50% தொகையினை உடனடியாக குத்தகைதாரர் செலுத்தினால் போதும் என்றும் சலுகை வழங்கினார்கள்.

விதி 39-ன் கீழ். 47 மணல் குவாரி குத்தகைகள். 87 ஜல்லி (கல்)குவாரி குத்தகைகள். தவறான முறையில் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு என்பதைப் பற்றி ஆய்வு செய்ய விழிப்புப் பணி மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறைக்கு எழுதி இருக்கிறோம்.

தற்போது, கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் விதி 39 ரத்து செய்துவிட்ட பிறகு, மணல். கல் குவாரிகளுக்கு உரிமம் வழங்குவதில் மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முன்னிலையில் முடிவு எடுக்க அரசு ஆணை வழங்கியுள்ளது. அந்த போல். ஒளிவு மறைவு இல்லாத முடிவு எடுக்க ஏதுவாக இருக்கும் பொருட்டு ஏலம் மற்றும் டெண்டர் முறையில் முடிவெடுக்கும்படியும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசாங்கம் அறிவுரை வழங்கியுள்ளது. லஞ்ச ஒழிப்புத் துறையினரிடமிருந்து அறிக்கை கிடைத்த பிறகு தவறுக்குக் காரணமாக இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றி யோசிக்கலாம்.

14—

### கிரானைட் கற்கள் விற்பதில் குறைபாடுகள்

**வினா 3271—திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு கனிம நிறுவனம், கிரானைட் கற்களை உலக சந்தை விலையை விட குறைந்த விலைக்கு வெளிநாட்டில் விற்கப்பட்டதாக ஆவணங்களில் தெரிவித்துவிட்டு, இடைத்தரகர் மூலமாக அதிக பணத்தைப் பெற்று பினாமி பெயர்களில் வெளிநாட்டு வங்கிகளில் பண முதலீடு செய்துள்ளதாக புகார் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது நடவடிக்கை எடுக்கப் பெறுமா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) புகார் ஏதும் அரசுக்கு வரவில்லை.

(ஆ) எழவில்லை.

15—

### கிரானைட் கற்கள் தரச் சான்றிதழ்

**வினா 3272—திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் முன்னாள் நிர்வாக இயக்குநர் பதவியில் இருந்தபோது டாமினுக்குச் சொந்தமான உயர்தர கிரானைட் கற்களை தரம் குறைந்தது எனச் சான்றிதழ் அளித்து குறைந்த விலைக்கு விற்றுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த வகையில் டாமினுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் எவ்வளவு?

(இ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) அரசிற்கு குறிப்பிட்டு புகார் வரவில்லை. இதைப்பற்றித் தகவல் கொடுத்தால் விசாரிக்கலாம்.

(ஆ) எழவில்லை.

(இ) எழவில்லை.

16—

### பினாமி விற்பனை முறைக்கு தண்டனை அளித்தல்

**வினா 3890—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

பினாமி விற்பனை முறையில் (Bill Trading) செய்வோர்மீது சட்டப்படி தண்டனை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஆம். இதற்குத் தேவையான சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

**17—**

**நிலம் ஆக்கிரமிப்பு**

**வினா 4211—திரு. சிடி. தண்டபாணி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் இண்டர்நேசனல் ஸ்கூல் நிர்வாகம் தங்கள் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டதாக கொடைக்கானல் காவல் நிலையத்தில் 1991 ஆம் ஆண்டு புகார் கொடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம். 1-7-1991 அன்று பள்ளி உதவி முதல்வர் கொடுத்த புகார் பதிவு செய்யப்பட்டது.

(ஆ) அதே நிலத்திற்கு இந்திய லூத்தரன் மிஷனைச் சேர்ந்த திரு. எ. சுந்தரம் என்பவரும் சொந்தம் கொண்டாடிப் புகார் செய்ததால் கொடைக்கானல் வருவாய்க் கோட்டாட்சியருக்கு வழக்கு விசாரணைக்கு அனுப்பப்பட்டது. தீர்ப்பு பள்ளி நிர்வாகத்திற்குப் பாதகமாகப் போனதால், சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளனர். வழக்கு நிலுவையில் உள்ளது.



1998 மே 30]

**18—**

**விடியோ கேம்ஸ்**

**வினா 4523—திரு. மு.க. ஸ்டாலின்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் காவல் துறை அனுமதியின்றி நடத்தப்படும் விடியோ கேம்ஸ் நடத்துபவர்களை கடுமையாக தண்டிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னையில் காவல் துறை உரிமம் இன்றி விடியோ கேம்ஸ் நடத்துபவர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தால் அபராத தண்டனையும் வழங்கப்பட்டு உள்ளது. எனினும் இத்தகைய விடியோ கேம்ஸ் அனுமதியின்றி நடத்த நீதிமன்றத்தில் திரு. முருகேசன் என்பவரால் மனு செய்யப்பட்டுள்ளது. இதற்கு மறுப்புப் பிரேரணை காவல் துறையினரால் சமர்ப்பிக்கப்பட்டு வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

**19—**

**சாதி வேற்றுமையைத் தடுக்க சிறப்புத் திட்டம்**

**வினா 4774—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாதி வேற்றுமைகளால் அடிக்கடி சமூக வாழ்வில் பதட்டமும், மோதலும் ஏற்படுவதைத் தடுக்க அரசு சிறப்புத் திட்டம் ஏதேனும் உருவாக்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சாதி வேற்றுமைகளால் அடிக்கடி சமூக வாழ்வில் பதட்டமும் மோதலும் ஏற்படுவதைத் தடுக்க சிறப்புத் திட்டம் ஏதும் உருவாக்கும் எண்ணம் தற்போது அரசுக்கு இல்லை. ஆனால், சாதி வேற்றுமைகளால் கலவரங்கள் நடவாமல் கண்காணித்திட மதச்சார்பற்ற முறையில் பணியாற்றும் அதிரடிப்படை (Swift Action Force) ஒன்றினை 19-2-1997 நாளிட்ட அரசு ஆணை எண் 269-ல் அரசு ஏற்படுத்தியுள்ளது.

மேலும், இனம் மற்றும் மதக் கலவரங்கள் நடவாமலிருக்க ஊர்பெரியவர்கள், மூத்த அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் மதத் தலைவர்கள் அடங்கிய அமைதிக் குழு, வட்ட அளவில்கூட அமைக்குமாறு 5-2-1997 மற்றும் 8-2-1997 ஆம் நாளிட்ட அரசு கடித எண் 806/ச மற்றும் ஒ.பி/96-3-ன் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு அமைதிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்கள் தொடர்ந்து, கூட்டங்கள் நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

1984 ஆம் ஆண்டு மதக் கலவரங்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட மஹாராஷ்டிரா மாநில பிவாண்டி மாவட்டத்தில் இயங்கி வரும் அமைதிக் குழுக்கள் போன்று தமிழகத்திலும் முதற்கட்டமாக இராமநாதபுரம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் அமைத்திட அம்மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு 5-9-1997 நாளிட்ட அரசு ஆணை நிலை எண் 293—ன் மூலம் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**20—**

### மத்திய அரசின் மானியத் தொகை விவரம்

**வினா 5139—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்கு 1996-97 ஆம் ஆண்டில் மத்திய அரசு வழங்கவுள்ள மானியத் தொகை தீர்மானிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திட்டத்தில் சேராத பணிகளுக்கான மானியம் ரூ.115.08 கோடியும், மாநிலத் திட்டப் பணிகளுக்கான மானியங்கள் ரூ.602.18 கோடியும், மத்தியத் திட்டப் பணிகளுக்கான மானியங்கள் ரூ.60.64 கோடி மற்றும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டப் பணிகளுக்கான மானியங்கள் ரூ.162.24 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**21—**

### மத துவேஷ சக்திகளைத் தடுத்தல்

**வினா 5274—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விநாயகர் சதுர்த்தி என்ற பெயரால் மத துவேஷ உணர்வைத் தூண்டி விடுகிற சக்திகளின் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) அறியும்.

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் விநாயகர் சதுர்த்தியின்பொழுது காவல் துறையினர் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். விநாயகர் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் செல்லும் பாதையை முன்கூட்டியே நிர்ணயித்து சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகளும், மதக் கலவரங்களும் ஏற்படாமல் இருக்கும் வகையில் ஊர்வலங்கள் செல்ல அனுமதி கொடுக்கப்படுகின்றன. ஊர்வலம் செல்லும் பாதை மற்றும் நேரம் குறித்த கட்டுப்பாடுகளும்

விதிக்கப்படுகின்றன. சட்டம்-ஒழுங்கைக் கருத்திற்கொண்டு ஊர்வலத்தைக் கட்டுப்படுத்த காவல் துறைக்கு அதிகாரம் உள்ளது என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே, தொடர்ந்து விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்களை, சட்டம்-ஒழுங்கையும் மத நல்லிணக்கத்தையும் கருத்திற்கொண்ட வகையில் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**22—**

### குண்டுவெடிப்புச் சம்பவ குற்றவாளிகள் கைது

**வினா 5349—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996 ஆம் ஆண்டு நடந்த குண்டுவெடிப்புச் சம்பவங்கள் எத்தனை?

(ஆ) அவற்றின் காரணங்கள் கண்டறியப்பட்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனரா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 1996 ஆம் ஆண்டில் மொத்தம் 13 குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

(ஆ) ஒரு சம்பவத்தில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது புலன் விசாரணையில் உள்ளது. மற்றொரு சம்பவத்தில் 11 குற்றவாளிகளில் 5 பேர் கைது செய்யப்பட்டு வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. மற்ற சம்பவங்களும் புலன் விசாரணையில் உள்ளன.

**23—**

### ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி திறத்தல்

**வினா 5406—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி திறக்கப்படும் என்ற மாநில அரசின் அறிவிப்பு அமலாக்கப்படாததற்குக் காரணம் என்ன?

(ஆ) அது எப்போது திறக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெருங்களத்தூரில் உள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனியை மீண்டும் புனரமைத்து திறப்பதற்கான தீவிர முயற்சிகளை மேற்கொண்ட பின்னர் நவம்பர் 1994-ல் இந்திய நிதி புனரமைப்பு நிறுவனம் இந்நிறுவனத்தைக் கலைத்துவிட உத்தரவிட்டது. நலிவுற்ற தொழில் நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டம், 1985 பிரிவு 20 (1)-ன்படி இந்நிறுவனத்தைக் கலைப்பதற்கான உத்தரவிட சென்னை உயர்நீதிமன்றத்திற்குப் பரிந்துரை செய்தது.

இக்கலைப்பு உத்தரவிற்கு எதிராக இணை தொழில் முனைவர், தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ் நிறுவனமும், தொழிலாளர்கள் சங்கங்களும் இந்திய நிதி புனரமைப்புக் குழுவின் மேல்முறையீட்டு அதிகாரிக்கு மேல்முறையீடு செய்தனர். இம்மேல்முறையீடு 30-3-1995 அன்று நிராகரிக்கப்பட்டது.

நிறுவனத்தின் தொழிலாளர்களின் நலன் கருதி கடந்த சில மாதங்களாக இந்நிறுவனத்தை மீண்டும் திறப்பதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தனியார்களின் சில வேண்டுகோள்களும் பரிசீலிக்கப்பட்டு எதுவும் சரிவராததால் மேற்படி நிறுவனத்தை மூடிவிடலாம் என்ற இந்திய நிதி புனரமைப்பு நிறுவனத்தின் தீர்மானத்தை ஏற்பதைத் தவிர அரசுக்கு வேறு வழி எதுவுமில்லை.

உயர்நீதிமன்றத்தில் தொழிலாளர்கள் சங்கங்கள் மற்றும் கடன்தாரர்கள் ஏராளமான வழக்குகளைத் தொடர்ந்தனர். 4-10-1996-ல் உயர்நீதிமன்றம், ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனத்தைக் கலைப்பதற்கு உத்தரவிட்டு அதற்கான அலுவல் முறையிலான கலைப்பு அதிகாரியை (Official Liquidator) நியமித்து உத்தரவிட்டுள்ளது.

[1998 மே 30

24—

### குழித்துறை சந்திப்பில் கடைகள் சூறையாடல்

**வினா 5720—திரு. டி. மணி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை சந்திப்பில் இருந்த 4 கடைகள் 23-10-1996 அன்று அடித்து நொறுக்கி தரைமட்டமாக்கப்பட்டு, பொருள்கள் சூறையாடப்பட்டது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கடைகளை அடித்து, பொருள்களை கொள்ளையடித்ததாலும், சேதப்படுத்தியதாலும், நட்டம் விளைந்ததாகக் கடை உரிமையாளர்கள் கொடுத்த புகார் மற்றும் வாக்குமூலம் பேரில் காவல் துறையினர் வழக்கு பதிவு செய்துள்ளனர். இந்தக் குற்றவாளிகள் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளனர். வழக்கு விசாரணையில் உள்ளது.

25—

### வாடகைக் கார், ஓட்டுநர் கடத்தல்

**வினா 5721—திரு. டி. மணி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளை காவல்நிலைய சரகத்திற்குட்பட்ட கழுவந்திட்டை என்ற இடத்திலிருந்து 03-10-1996 அன்று வாடகைக் கார் எண் கே.எல்.ஏ.1110 மற்றும் ஓட்டுநர் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவம் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?



1998 மே 30]

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க ஆய்வாளர் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு 21-01-1997 அன்று பாலகுமார் என்பவர் கைது செய்யப்பட்டார். வாகனத்தின் சில உதிரி பாகங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வழக்கில் தலைமறைவாகியுள்ள முக்கிய குற்றவாளியாகக் கருதப்படும் டேவிஸ் மகன் பினோ மற்றும் இருவரைக் கைது செய்ய தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வழக்கு விசாரணையில் உள்ளது.

26—

### காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் தொடங்குதல்

**வினா 5974—திரு. அ. கடலைமுத்து:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் தொடங்குதல் குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

27—

### புறக்காவல் நிலையம் அமைத்தல்

**வினா 5976—திரு. அ. கடலைமுத்து:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதி, மீ. மீனாட்சிபுரத்தில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**28—**

**காவல் நிலையம் அமைத்தல்**

**வினா 6254—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பொளையல்லூர் ஒன்றியம், பெரிய கொழப்பலூரில் காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரிய கொழப்பலூரில் காவல் நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**29—**

**சாதித் தொடர்பான மோதல்களால் இழப்பு**

**வினா 6299—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 1996 ஆம் ஆண்டில் எத்தனை சாதித் தொடர்பான மோதல்கள் ஏற்பட்டன?



1998 மே 30]

(ஆ) அவற்றால் மனித உயிர் இழப்பு மற்றும் பொருள் இழப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 13

(ஆ) மனித உயிர் இழப்பு .. 36

பொருள் இழப்பு .. ரூ.2,32,18,510/—

**30—**

**புதிய ஆலை தொடங்க அனுமதி**

**வினா 6339—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**
**திரு. கோ. மோகனதாசன்:**
**திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறு நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை விவகார எல்லைக்குள் (ஏரியா ஆப் ஆபரேஷன்) புதிய ஆலை தொடங்க அனுமதி கேட்டு ஏதேனும் விண்ணப்பம் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், புதிய ஆலை அமைத்தால் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலை "நலிவடையும்" என்பதை அரசு அறியுமா?

(இ) இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தலைஞாயிறு நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை விவகார எல்லைக்குள் புதிய ஆலை தொடங்க அனுமதி கேட்டு தற்போது விண்ணப்பம் எதுவும் அரசுக்கு வரப்பெறவில்லை.

(அ) கேள்வி எழ இடமில்லை.

(இ) இக்கேள்வி எழவும் இடமில்லை.

31—

**தனி காவல் பிரிவு உருவாக்குதல்**

**வினா 6473—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீதிமன்றப் பணிகளுக்காகவும், நீதிபதிகள் பாதுகாப்பிற்காகவும் தனி காவல் பிரிவு உருவாக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இதுபற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

32—

**தூக்கணாம்பாக்கம் கிராமத்தில் காவல் நிலையம் அமைத்தல்**

**வினா 6474—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், கடலூர் ஒன்றியம் தூக்கணாம்பாக்கம் கிராமத்தில் காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கடலூர் மாவட்டம், கடலூர் ஒன்றியம் தூக்கணாம்பாக்கம் கிராமத்தில் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.





33—

**கருப்புக்கல் எடுப்பதை குத்தகைக்கு விடுதல்**

**வினா 6475—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் அரசு புறம்போக்கு நிலங்களில் கருப்புக்கற்கள் எடுப்பதை (கிரானைட்) குத்தகைக்கு விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்தில் கருப்புக்கல் (கிரானைட்) குத்தகைக்கு விட 118 புலங்கள் கண்டறியப்பட்டு, அவைகளை ஆய்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. ஆய்வுப் பணியில் குத்தகை வழங்க ஏதுவான பகுதிகள் கண்டறியப்பட்ட பின்பு குத்தகைக்கு விட ஏல அறிவிக்கை வெளியிடப்படவுள்ளது.

34—

**இண்டூரில் காவல் நிலையம் ஏற்படுத்துதல்**

**வினா 6476— திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம் இண்டூரில் புதிதாக காவல் நிலையம் ஒன்று ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், இண்டூரில் புதிதாக காவல் நிலையம் அமைக்க அரசு ஆணை (பல்வகை) எண் 971, உள் (காவல் 11) துறை, நாள் 27.6.1997ல் ஆணை வெளியிடப்பட்டு.

தற்போது இன்டூரில் காவல் நிலையம் 1.11.1997 முதல் திறக்கப்பட்டு இயங்கி வருகிறது.

(ஆ) எழாது.

**35—**

### கள் விற்பனை அனுமதி

**வினா 6602—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்தியாவில் தயாரிக்கப்படும் அன்னிய மதுவகைகள் விற்பனை செய்வதைப்போல் 'கள்' விற்பனை அனுமதிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கள் விற்பனையை அனுமதிப்பதென்ற கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**36—**

### காவல் துறை ஊரகக் கண்காணிப்பு அலுவலகத் தலைமையிடம் மாற்றல்

**வினா 6615—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை காவல் துறை ஊரகக் கண்காணிப்பு அலுவலகத் தலைமையிடத்தை திருப்பூருக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.



**37—**

### உரிமைகள் மற்றும் நலன்கள், மொழி சிறுபான்மையினர் சட்டம் மூலம் பாதுகாத்தல்

**வினா 6687—திரு. ச. இராஜுரெட்டி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை ஆகிய பகுதிகளில் வாழும் மொழி சிறுபான்மையினர்களின் உரிமைகள் மற்றும் நலன்கள் மொழி சிறுபான்மையினர் சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஆம்.

**38—**

### சிறுபான்மை மொழியிலேயே அச்சிடுதல்

**வினா 6714—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறுபான்மை மக்கள் வாழும் பகுதியிலுள்ள பேரேடுகள், விண்ணப்பங்கள் அவர்களது மொழியிலேயே அச்சிட மத்திய அரசும், சிறுபான்மை மொழி குழுமமும் அரசுக்கு நாக்கீது ஏதும் அனுப்பியுள்ளனவா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஆம்.

**39—**

### சிறப்புப் போலீஸ் படை

**வினா 6761—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதக் கலவரங்களைத் தடுக்க சிறப்புப் போலீஸ் படை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : மதக் கலவரங்களையும், வன்முறைச் சம்பவங்களையும் தடுத்து கட்டுப்படுத்துவதற்கென்று "அதிவிரைவு நடவடிக்கைப் படை" (Swift Action Force) என்ற ஒரு சிறப்புப் படையை அரசு ஏற்கெனவே அமைத்துள்ளது இப்படை 28-3-1997 முதல் இயங்கி வருகிறது.

**40—**

**காவலர் குடியிருப்பு கட்டுதல்**

**வினா 7199—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம் அதியமான் கோட்டையில் காவலர்களுக்குக் குடியிருப்பு கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**41—**

**காவல் நிலையம் கட்டுதல்**

**வினா 7200—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998 மே 30]

தருமபுரி [illegible] நல்லம்பள்ளி ஒன்றியம், அதியமான் கோட்டை மற்றும் இண்டூரில் புதியதாக காவல் நிலையக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

1998-99 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டத்தின்கீழ், தருமபுரி மாவட்டம் அதியமான் கோட்டை காவல் நிலையத்திற்குப் புதிய காவல் நிலையக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இண்டூரில் உள்ள காவல் நிலையத்துக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு எதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**42—**

## சேலம் இரும்பு ஆலை

**வினா 7211—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள இரும்பு ஆலைக்காக எவ்வளவு நிலம் கையகப்படுத்தப்பட்டது?

(ஆ) இதுவரை இரும்புத்தாது வெட்டி எடுக்கப்பட்டுள்ளதா?

விடை.—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) சேலம் இரும்பாலைக்காக 3962.70 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) கஞ்சமலையிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட இரும்புத்தாதுவின் திறன் விழுக்காடு மிகவும் குறைவு. எனவே, இத்தாது பொருளாதார ரீதியில் இலாபம் ஈட்டக்கூடியதாக இல்லை என்பதால், பரிசோதனைக்கு மட்டுமே அவ்வப்போது வெட்டி எடுக்கப்பட்டது.

[1998 மே 30

43—

### நீயணைப்பு நிலையம்

**வினா 7234—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதிக்கு உட்பட்ட பு.புளியம்பட்டி பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

44—

### திட்ட ஒதுக்கீடு

**வினா 7465—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திட்ட ஒதுக்கீடு குறித்து காட்கில்-முகர்ஜி ஆகியோரின பழைய கோட்பாட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து மத்திய அரசின் நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மாநில அரசின் கருத்து மத்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு காட்கில்-முகர்ஜி கோட்பாட்டை மாற்றியமைப்பது குறித்து ஆய்வு செய்து வருகிறது.



1998 மே 30]

45—

### தீயணைப்பு நிலையம்

**வினா 7609—திரு. அ. வெங்கடாசலம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடியிலும், கீரமங்கலத்திலும் தீயணைப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

46—

### புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாக்குதல்

**வினா 7613—திரு. அ. வெங்கடாசலம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, மழையூரில் இயங்கும் புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

51—

**காவலர் குடியிருப்புகளுக்கு புதிய கட்டடம் கட்டுதல்**

**வினா 7704—திரு. த. நடராஜன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சியில் பழுதடைந்த நிலையில் உள்ள காவலர் குடியிருப்புகளுக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

52—

**காவல் துறை உரிமம் ரத்து செய்தல்**

**வினா 7709—திரு. டி. மணி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரிலுள்ள அனைத்துத் தேநீர் மற்றும் சிற்றுண்டிக் கடைகளுக்கு வழங்கும் காவல் துறை உரிமத்தை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) இல்லையெனில், 1997—98 ஆம் ஆண்டில் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) சென்னை நகரிலுள்ள அனைத்துத் தேநீர் மற்றும் சிற்றுண்டிக் கடைகளுக்கு வழங்கும் காவல் துறை உரிமத்தை ரத்து செய்வது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இல்லை.





53—

**காவல் நிலையம் அமைத்தல்**

**வினா 7849—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் தொகுதி, மேட்டுப்பட்டி மற்றும் தாடிக்கொம்பு ஆகிய இடங்களில் காவல் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

54—

**வில்லாபுரத்தில் காவல் நிலையம் அமைத்தல்**

**வினா 7931— திரு. செ. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் தொகுதி வில்லாபுரத்தில் காவல் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

[1998 மே 30

55—

### காவல் நிலையக் காவலர்களுக்கு குடியிருப்புக் கட்டுதல்

**வினா 7932—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதிக்குட்பட்ட புதுப்பட்டினம் மற்றும் திருவெண்காடு காவல் நிலையங்களில் பணிபுரியும் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

புதுப்பட்டினம் காவல் நிலையப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவது குறித்து, அதற்கான நிலம் கையகப்படுத்திய பின் உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும். திருவெண்காடு காவல் நிலைய[illegible] பணியாளர்களுக்குக் காவ[illegible] சொந்தமான நிலத்[illegible] குடியிருப்புகள் கட்ட நில[illegible]முடிவுற்றதும் உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

56—

### மகேந்திரமங்களத்தில் காவல் நிலையம்

**வினா 8806—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் தொகுதி, பாலக்கோடு வட்டத்தில், மகேந்திரமங்களம் கிராமத்தில் புதிய காவல் நிலையம் தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

மகேந்திரமங்களம் [illegible] காவ[illegible] அமைக்கும் செயற்குறிப்பு [illegible]



1998 மே 30]

57—

### காவல் நிலையம் அமைத்தல்

**வினா 8007—திரு. ஜி.எல். வெங்கடாசலம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம் மலைப்பகுதி சூழ்ந்த பெல்ரம்பட்டி என்ற ஊரில் புதிய காவல் நிலையம் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) எழவில்லை

58—

### சிந்தாமணிப்பட்டி காவலர்களுக்குக் குடியிருப்பு கட்டுதல்

**வினா 8019—திரு. ச. நாகரத்தினம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்ட பாலவிடுதி, சிந்தாமணிப்பட்டியில் பணிபுரியும் காவலர்களுக்குக் குடியிருப்பு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

[1998 மே 30

59—

### காவல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம்

**வினா 8020—திரு. ச. நாகரத்தினம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி கடவூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட பாலவிடுதி. சிந்தாமணிப்பட்டி ஆகிய இடங்களிலுள்ள காவல் நிலையங்களுக்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

60—

### சத்திரக்குடியில் தீயணைப்பு நிலையம் அமைத்தல்

**வினா 8058—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாமக்குடி தொகுதி, சத்திரக்குடியில் தீயணைப்பு நிலையம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.



1998 மே 30]

61—

### காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல்

**வினா 8132—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள அம்பிளிக்கை காவல் நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்குவதால் அதற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

62—

### காவல் நிலையத்திற்குப் புதியக் கட்டடம்

**வினா 8134—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் கள்ளிமந்தையத்தில் காவல் நிலையத்திற்குப் புதிதாகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கள்ளிமந்தையம் காவல் நிலையம் அமைந்துள்ள பழைய கட்டடத்தை இடித்து விட்டு புது கட்டடம் கட்டுவது குறித்து பொதுப் பணித் துறையின் ஆய்வறிக்கை காவல்துறை இயக்குநரால் கோரப்பட்டுள்ளது. ஆய்வறிக்கை கிடைக்கப் பெற்றதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

63—

### காவல் துறை அலுவலர்களுக்குக் குடியிருப்பு

**வினா 8135—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டன்சத்திரம் தொகுதியில் இடையக்கோட்டையில் காவல் துறை அலுவலர்களுக்கு அரசு குடியிருப்புக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

1997-98-ம் ஆண்டில் நிலை VI (Phasc. VI) திட்டத்தில் காவல் துறைக்குச் சொந்தமான இடங்களில் 2500 காவலர் குடியிருப்புகள் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் கட்ட அரசு ஆணை (நிலை) எண் 35, உள் துறை, நாள் 9-1-1998-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதில் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், இடையக் கோட்டையில் 1 ஆய்வாளர், 1 உதவி ஆய்வாளர், 16 தலைமைக் காவலர்/காவலர் ஆக மொத்தம் 18 காவலர் குடியிருப்புகள் கட்டுவதும் அடங்கும்.

64—

### காவல் துறை துணைக் கண்காணிப்பாளருக்கு அலுவலகக் கட்டடம்

**வினா 8136—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ஒட்டன்சத்திரத்தில் காவல் துறை துணைக் கண்காணிப்பாளருக்குக் குடியிருப்போடு சேர்ந்த அலுவலகம் கட்டப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

1997-98-ஆம் ஆண்டில் நிலை VI (Phasc. VI) திட்டத்தில் காவல் துறைக்குச் சொந்தமான இடங்களில் 2,500 காவலர் குடியிருப்புகள்





தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் கட்ட அரசு ஆணை (நிலை) எண் 35, உள் துறை நாள் 9-1-1998-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதில் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களுக்குக் குடியிருப்போடு சேர்ந்த அலுவலகம் கட்டும் செயற்குறிப்பும் அடங்கும்.

65—

### வெள்ளிமேடுபேட்டையில் தீயணைப்பு நிலையம்

**வினா 8380—திரு. த. நடராஜன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வெள்ளிமேடுபேட்டையில் ஒரு தீயணைப்பு நிலையம் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டே தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

66—

### மேல்நிலை அலுவலர்களை நியமித்தல்

**வினா 8418—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடுங்கையூர் காவல் நிலையத்தை மேம்படுத்தி மேல்நிலை அலுவலர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கொடுங்கையூர் காவல் நிலையம் வகை-I-ஐச் சார்ந்தது (Type-I). அதன் தரத்தினை மீண்டும் உயர்த்த அவசியம் எழவில்லை

[1998 மே 30

67—

**புதிய காவல் நிலையம் அமைத்தல்**

**வினா 8509—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மகேந்திரமங்கலத்தில் புதியதாகப் காவல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

மகேந்திரமங்கலத்தில் புதிய காவல் நிலையம் அமைக்கும் தேவை எழவில்லை.

68—

**வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பட்டியல் வெளியிடுதல்**

**வினா 8613—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தேர்வாணைக் குழு தேர்வு எழுத விளம்பரம் வந்தவுடன், கல்வி பயின்று கொண்டிருப்பவர்கள் தேர்வு எழுதி பணிக்குச் செல்ல வாய்ப்பு உள்ளதால் தேர்வாணைக் குழுவின் தேர்வுகளை எழுத வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பட்டியல் வெளியிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.



1998 மே 30]

69—

**போக்குவரத்துக் காவல் நிலையம் அமைத்தல்**

**வினா 8784—திரு. அ. கடலைமுத்து:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடிநாயக்கனூர் தொகுதி, போடி நகரில் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

70—

**போடியில் காவல் நிலையத்திற்குக் கட்டடம், குடியிருப்புக் கட்டுதல்**

**வினா 8785—திரு. அ. கடலைமுத்து:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடிநாயக்கனூர் தொகுதி, போடியில் புதிய காவல் நிலையக் கட்டடம் மற்றும் காவலர் குடியிருப்புகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

71—

**தீயணைப்பு நிலையம் அமைத்தல்**

**வினா 8797—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, திருவீழிமிழலை, எரவாஞ்சேரி பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

72—

**விற்பனை வரி விலக்கு**

**வினா 8813—திரு. ஜே.எம். ஆருன் ரஷீத்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்தியாவின் மற்ற மாநிலங்களில் வரி விலக்களிக்கப் பட்டிருப்பதைப்போல், கோழிகளுக்குப் போடப்படும் தடுப்பூசி மருந்துகளுக்கு அரசு விதித்துள்ள 8 சதவிகித விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

73—

**காவல் நிலையங்களுக்குக் கட்டடம் கட்டுதல்**

**வினா 9506—திரு. பா. வேல்துரை:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக்குறிச்சி, சேரன்மகாதேவி, பத்தமடை, முக்கூடல் ஆகிய காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

74—

**ரோஷனை காவல் நிலையத்திற்குக் கட்டடம்**

**வினா 9508—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகரத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் ரோஷனை காவல் நிலையத்திற்கு அரசு கட்டடம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

75—

**பெரம்பலூர் சர்க்கரை ஆலை**

**வினா 9518—திரு. பா. துரைசாமி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் சர்க்கரை ஆலை நட்டம் அடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கடந்த 3 ஆண்டுகளில் பெரம்பலூர் சர்க்கரை ஆலை அடைந்துள்ள இலாபம்/நட்டம் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | வருடம் | தொகை இலாபம்/நட்டம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 1994-95 | (+) 75.98 |
| 2. | 1995-96 | (-) 526.34 |
| 3. | 1996-97 | (-) 314.72 |

76—

**வள்ளியூர் காவல் நிலையத்திற்குக் கட்டடம்**

**வினா 9697—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டத்திலுள்ள வள்ளியூர் தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய விபத்து ஊர்தி வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

77—

**ராதாபுரத்தில் தீயணைப்பு நிலையம் அமைத்தல்**

**வினா 9722—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, ராதாபுரத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்கப்படுமா?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ராதாபுரத்தைச் சுற்றியுள்ள 25 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் இரண்டு தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருவதால், இங்கு ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

78—

**கண்டமங்கலத்தில் தீயணைப்பு நிலையம் அமைத்தல்**

**வினா 9731—திரு. ச. ஆறுமுகம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலத்தில ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

79—

**புறக்காவல் நிலையம் அமைத்தல்**

**வினா 9762—திரு. ஜி.எஸ். வெங்கடாசலம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலக்கோடு ஒன்றியம், புலிகரை என்ற ஊரில் "புறக்காவல் நிலையம்" அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

80—

**பெரம்பலூரில் காகித ஆலை**

**வினா 9943—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூரில் காகித ஆலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

81—

**புறக்காவல் நிலையம் அமைத்தல்**

**வினா 9961—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் வட்டம், கண்டமங்கலம் ஒன்றியத்தைச் சேர்ந்த பாக்கம் கூட்டுச் சாலையில் ஒரு புறக்காவல் நிலையம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

விழுப்புரம் வட்டம், கண்டமங்கலம் ஒன்றியத்தைச் சேர்ந்த பாக்கம் கூட்டுச் சாலையில் புறக்காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

82—

**தொழிலில் பின்தங்கிய வட்டமாக அறிவித்தல்**

**வினா 10007—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டத்தை தொழிலில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

83—

**மதுபான வகைகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்**

**வினா 10031—திரு. கே.கே. வீரப்பன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் உள்ள எரிசாராயத் தொழிற்சாலையைப் பயன்படுத்தி அங்கு ஒரு வெளிநாட்டு மதுபான வகைகள் (IMFL) தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

84—

**ஃபோர்டு மகேந்திரா மற்றும் ஹூண்டாய் கார் தொழிற்சாலைகள்**

**வினா 10065—திரு. ஜ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஃபோர்டு மகேந்திரா மற்றும் ஹூண்டாய் கார் தொழிற்சாலைகள் கட்டுவதற்காக எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது?

(ஆ) நிலம் கொடுத்தவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு கொடுக்க முன்வருமா?

[1998 மே 30

(இ) தொழிற்சாலை கட்டுமானப் பணி எப்போது முடிவடையும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மகேந்திரா ஃபோர்டு கார் தொழிற்சாலைக்கு இதுவரை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மூலம் சுமார் 162.10 ஏக்கர் நிலமும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் 3.60 ஏக்கர் நிலமும், 76.62 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் ஆக மொத்தம் 242.32 ஏக்கர் நிலம் அளிக்கப்பட்டுள்ளது. ஹூண்டாய் கார் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், அரசு ஏற்கெனவே அளிப்பதாக ஒப்புக் கொண்டுள்ள 543 ஏக்கர் நிலத்தில் இதுவரை சுமார் 488.87 ஏக்கர் நிலத்தை 'சிப்காட்' மூலம் அந்நிறுவனத்திற்கு அளித்துள்ளது.

(ஆ) பொதுத் துறை நிறுவனங்களுக்காக நில ஆர்ஜிதம் செய்யும் போது, நிலம் வழங்கியவர்களது குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பகம் மூலம் அல்லாமல் நேரடியாக வேலை வாய்ப்பளிக்கப் பரிந்துரை செய்து அரசு ஆணையிட்டுள்ளது. ஆனால், தனியார் நிறுவனங்களைப் பொறுத்தவரையில் அத்தகைய ஆணையிடப்படவில்லை.

(இ) மகேந்திரா ஃபோர்டு கார் தொழிற்சாலையின் கட்டுமானப் பணி 1998ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஹூண்டாய் கார் தொழிற்சாலையின் கட்டுமானப் பணி 1998 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

85—

### புது தில்லி தமிழ்நாடு இல்லத்தில் வசதிகள்

**வினா 10191—திரு. ஜ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புது தில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் தமிழ்நாட்டிலிருந்து செல்லும் அதிகாரிகள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்குப் போதுமான இடவசதி இல்லை என்பதை அரசு அறியுமா?



1998 மே 30]

(ஆ) ஆம் எனில், சாணக்கியா திரை அரங்கு அருகில் கையகப்படுத்தியுள்ள நிலத்தில் புதிய இல்லம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் தமிழ்நாட்டிலிருந்து வரும் அரசு அதிகாரிகளுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் போதுமான தங்கும் வசதி செய்யப்பட்டு வருகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமனம் ஆனதும் தங்குவதற்கு மத்திய அரசு இடவசதி செய்துதரும் வரை மத்திய அரசின் வேண்டுகோளுக்கிணங்க தமிழ்நாடு இல்லத்தில் அவர்கள் தங்குவதற்கான தனி அறை ஒதுக்கித் தரப்படுகிறது. பின்னர் மத்திய அரசு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தனிக் குடியிருப்புகளை வழங்கிவிடுகிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் வரும்பொழுதெல்லாம் தங்குவதற்கு வசதி செய்து தரப்படுகிறது.

(ஆ) புதுதில்லி சாணக்கியா திரையரங்கு அருகில் கையகப்படுத்தியுள்ள நிலத்தில் புதிய இல்லம் கட்டுவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது.

86—

### மாநில மனித உரிமைகள் ஆணையம்

**வினா 10191—திரு. ஜ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக பொது மக்களிடம் இருந்து வரும் புகார்களை விசாரிப்பதற்கு "மாநில மனித உரிமைகள் ஆணையம்" அமைப்பதற்கு அரசு எப்போது ஆணை பிறப்பித்தது?

(ஆ) "மாநில மனித உரிமைகள் ஆணையத்திடம்" இதுவரை எவ்வளவு விண்ணப்பம் வந்துள்ளது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக பொதுமக்களிடம் இருந்து வரும் புகார்களை விசாரிப்பதற்கு மனித

உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993, பிரிவு 21இன்படி தமிழ்நாட்டில் மாநில மனித உரிமைகள் ஆணையத்தினை அமைத்திட அரசு ஆணை நிலை எண் 1166, பொதுத் (சட்டம் மற்றும் ஒழுங்கு-அ) துறை, நாள்: 20-12-1996 இல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) மாநில மனித உரிமைகள் ஆணையத்திடம் இதுவரை 152 விண்ணப்பங்கள் வந்துள்ளன.

**87—**

**வல்லம் பகுதியில் தீயணைப்பு நிலையம்**

**வினா 10506—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், வல்லம் பகுதியில் தீயணைப்பு நிலையம் புதிதாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**88—**

**பேரூர் காவல் நிலையம் முற்றுகை**

**வினா 10529—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆலாந்துறை பகுதியில் எயிட்ஸ் நோய் பீதி கிளம்பியதால் கிராம மக்கள் சாலை மறியல் செய்து பேரூர் காவல் நிலையத்தை முற்றுகையிட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதற்கு போர்க்கால நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 19-3-1997 அன்று வெளியான தினமலர் பத்திரிகையில் இச்சம்பவம் குறித்து பொய்யான தகவல் வெளிவந்ததால்



ஆலாந்துறை பொது மக்கள் மத்தியில் பீதி உண்டாக, அப்பகுதி மக்கள் சாலை மறியல் செய்ய முற்பட்டனர். காவல் துறையினர் உரிய நேரத்தில் இதனை எடுத்துக் கூறியதன் விளைவாக பொதுமக்கள் இந்த முயற்சியைக் கைவிட்டு கலைந்து சென்றனர். எனவே, பேரூர் காவல் நிலையத்தை யாரும் முற்றுகை இடவில்லை மற்றும் சாலை மறியல் ஏதும் நடைபெறவில்லை.

**89—**

**அனைத்து டாமின் நிறுவனங்களை மீண்டும் தொடங்கி வேலைவாய்ப்பு அளித்தல்**

**வினா 10543—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

"தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி அரசுக்குச் சொந்தமான அனைத்து டாமின் கனிமச் சுரங்கங்களை மீண்டும் தொடங்கி வேலை வாய்ப்பு அளிக்க அரசு ஆவன செய்யுமா?"

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குச் சொந்தமான பென்னாகரம் சட்டமன்ற தொகுதியில் அமைந்துள்ள பேவாலூர் மற்றும் கோடிஹள்ளி ஆகிய சுரங்கங்களில் முறையே டிசம்பர் 1996 மற்றும் மே 1997 ஆகிய மாதங்களில் மீண்டும் உற்பத்திப் பணி தொடங்கியுள்ளது.

**90—**

**வெறையூரில் தீயணைப்பு நிலையம் அமைத்தல்**

**வினா 10602—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, வெறையூரில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

91—

**ஜெயங்கொண்டம் நிலக்கரிச் சுரங்கம்**

**வினா 10744—திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள ஜெயங்கொண்டத்தில் நிலக்கரிச் சுரங்கம் ஆரம்பிக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) பெரம்பலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் பழுப்பு நிலக்கரி (லிக்னைட்) சுரங்கத்துடன் இணைந்து அனல் மின் நிலையம் ஒன்றினை ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளது.

(ஆ) பெரம்பலூர் மாவட்டம் ஜெயம்கொண்டம் பகுதியில் கிடைக்கக்கூடிய பழுப்பு நிலக்கரியைக் கொண்டு தனியார் முதலீட்டுடன் ஒரு ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரி சுரங்கத்துடன் இணைந்து அனல் மின் நிலையத்தினைச் செயல்படுத்த முடியும். இதில் முதல் கட்டமாக ஆண்டொன்றுக்கு 3.75 மெட்ரிக் டன் பழுப்பு நிலக்கரி எடுத்து 500 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 10.5 மெட்ரிக் டன் பழுப்பு நிலக்கரி எடுத்து 1500 மொகாவாட் என்ற அளவை எட்ட இயலும். உலக அளவிலான அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. 1998-ம் ஆண்டின் மத்தியில் தனியார் தொழில் முனைவோர் தெரிவு இறுதி செய்யப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

92—

**அலுமினியம் தொழிற்சாலை**

**வினா 10756—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏற்காடு மற்றும் கொல்லிமலையில் கிடைக்கும் பாக்லைட் என்னும் கனிமத்தைக் கொண்டு அலுமினியம் தொழிற்சாலை தொடங்க அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஏற்காடு மலைப்பகுதியில் கிடைக்கும் பாக்லைட்டைப் பயன்படுத்த ஏற்கனவே மதராஸ் அலுமினியம் நிறுவனத்தாருக்கு சுரங்க உரிமம் அளித்து அலுமினியம் தொழிற்சாலை செயல்பட்டுவருவதால், அரசு தனியாக ஓர் அலுமினியம் தொழிற்சாலை தொடங்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

93—

**புறக்காவல் நிலையம் அமைத்தல்**

**வினா 10778—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் ஒன்றியம் சாயர்புரம் காவல் சரகத்திற்கு உட்பட்ட கோவங்காடு விலக்குப் பகுதியில் புறக்காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கோவங்காடு விலக்குப் பகுதியில் புறக்காவல் நிலையம் அமைக்கும் உத்தேசமில்லை.

94—

**காவல் நிலையத்திற்குக் கட்டடம் கட்டுதல்**

**வினா 10784—திரு. பீ.அ. வைத்தியலிங்கம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி பீர்க்கன்கரணை பேரூராட்சி ச.எண் 183/1-ல் ஒதுக்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான இடத்தில் காவல் நிலையம் கட்டும் செயற்குறிப்பு அரசிடமுள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

[1998 மே 30

95—

### காகிதத் தொழிற்சாலை

**வினா 10798—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் காகிதத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

96—

### புறக்காவல் நிலையங்கள்

**வினா 10823—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதியில் செயல்படாமல் இருக்கும் தோட்டியோடு, சுவாமியார்மடம் ஆகிய இரு புறக்காவல் நிலையங்களையும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

1956 ஆம் வருடம் முதல் செயல்படாமல் இருக்கும் தோட்டியோடு, சுவாமியார்மடம் ஆகிய இரு புறக்காவல் நிலையங்களைச் செயல்படுத்த அவசியம் எழவில்லை.



1998 மே 30]

97—

### விராலிமலையில் தீயணைப்பு நிலையம் அமைத்தல்

**வினா 11125—திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி விராலிமலையில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், கொளத்தூர் தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தில் தீயணைப்பு நிலையம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

98—

### எரிசாராயம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்

**வினா 11150—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் கழிவுபாகிலிருந்து (மொலாசஸ்) எரிசாராயம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் கழிவுப்பாகிலிருந்து எரிசாராயம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1998 மே 30

99—

### சிப்காட் மூலம் தொழிற்சாலை வளாகம் அமைத்தல்

**வினா 11164—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மிகவும் பின்தங்கிய தொகுதியான செங்கத்தில் இதுவரை எந்த தொழிற்சாலையும் இல்லாத நிலையில் 'சிப்காட்' மூலம் தொழிற்சாலை வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதியில் சிப்காட் தொழில் வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

100—

### காகிதத் தொழிற்சாலை

**வினா 11163—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கம் தொகுதியில் காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.



1998 மே 30]

101—

### தீயணைப்பு நிலையம் அமைத்தல்

**வினா 11236—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேடப்பட்டி தொகுதி, பேரையூர் வட்டத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

102—

### கிராமப்புற மாணவர்களுக்கு போட்டித் தேர்வில் கூடுதல் மதிப்பெண் வழங்குதல்

**வினா 11250—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு வேலைவாய்ப்பில் கிராமப்புற மாணவர்களுக்கு போட்டித் தேர்வில் கூடுதல் மதிப்பெண் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

[1998 மே 30

103—

**தீயணைப்பு நிலையம்**

**வினா 11253—திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் நகரில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

104—

**கிராஃபைட் தொழிற்சாலை**

**வினா 11413—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கையில் கிராஃபைட் தொழிற்சாலை அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சிவகங்கையில் தோண்டி எடுக்கப்படும் கிராஃபைட்டை 96% சுத்திகரிக்கும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட கிராஃபைட் தொழிற்சாலை இரண்டு வருட முயற்சி எடுத்தும் எதிர்பார்த்த அளவில் உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு கிடைக்க இன்னும் முடியவில்லை. கிராஃபைட்டை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சாலைகள் அப்பகுதியில் நிறுவ உதவி செய்ய தமிழ்நாடு



1998 மே 30]

கிராஃபைட் நிறுவனம் தொடங்கப்பட்டது. இந்த நிறுவனம் கிராஃபைட்டைப் பயன்படுத்தி உற்பத்தித் தொடங்கக்கூடிய பொருட்களைப் பற்றி ஆய்வு நடத்தி, திட்ட அறிக்கைகள் தயார் செய்து, தனியார் துறை முனைவோர்களைத் தொழில்கள் தொடங்க ஊக்குவிக்க முயற்சிக்கிறது.

105—

**பறக்கும் காவலர் படைப் பிரிவு**

**வினா 13177—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகருக்குள் குற்றச் செயல்களைத் தடுக்கப் பறக்கும் காவலர் படைப் பிரிவு ஒன்றை நிரந்தரமாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருப்பூர் நகருக்குள் குற்றச் செயல்களைத் தடுக்க திருப்பூர் உட்கோட்டத்தில் உள்ள காவலர்களின் மூலம் தனிப்படை ஒன்று அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. குற்றங்கள் நடவாமல் இருக்க இரவு ரோந்து மற்றும் பகல் ரோந்து தவறாமல் நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக திருப்பூர் நகரில் பறக்கும் காவலர் படைப் பிரிவு அமைக்க அவசியமில்லை.

106—

**ஓமலூர் நகரில் துணைக் காவல் நிலையம்**

**வினா 13202—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் நகரில் ஒரு துணைக் காவல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஓமலூரில் ஒரு துணைக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகமும் மற்றும் ஒரு காவல் நிலையமும் இயங்கி வருவதால் ஓமலூரில் ஒரு துணைக் காவல் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

**107—**

**நிரந்தர காவல் நிலையம் அமைத்தல்**

**வினா 13203—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, வெள்ளாளப்பட்டி கிராமத்தில் நிரந்தரக் காவல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, வெள்ளாளப்பட்டி கிராமத்தில் நிரந்தரக் காவல் நிலையம் அமைக்க, கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**108—**

**காற்றடைக்கும் மிதவைப் படகு வழங்குதல்**

**வினா 13275—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கால நடவடிக்கைகளுக்கு உதவிடும் வகையில் கடற்கரையோரத் தீயணைப்பு நிலையங்களுக்குக் காற்றடைக்கும் மிதவைப் படகு (Air Floating Boat) வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**109—**

**அரசு ஊர்தி ஓட்டுநர்கள் சங்கத்திற்கு அரசு நிதியுதவி**

**வினா 13510—திரு. பெ. சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு ஊர்தி ஓட்டுநர்கள் சங்கத்திற்கு அரசு நிதி உதவி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு அரசு ஊர்தி ஓட்டுநர்கள் சங்கத்திற்கு, கட்டடம் கட்டுவதற்கு 1992-ல் ரூ. 2.5 இலட்சமும், 1997-ல் ரூ. 1.5 இலட்சமும் என்ற வகையில் இதுவரை மொத்தம் ரூ. 4 இலட்சம் நிதி உதவி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**110—**

**அனந்தபுரத்தில் தீயணைப்பு நிலையம்**

**வினா 13704—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஒன்றியம் அனந்தபுரத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**111—**

**கலசப்பாக்கம் நகரில் தீயணைப்பு நிலையம்**

**வினா 13739—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் நகரத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**112—**

**பெரம்பூரில் தீயணைப்பு நிலையம்**

**வினா 13771—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், பெரம்பூரில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.





**113—**

**வழிப்பறி, திருட்டுக்களைத் தடுத்தல்**

**வினா 13846—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி எல்லையில் அடிக்கடி கொலைகள், பேருந்து நிலையங்களில் வழிப்பறி, திருட்டு ஆகியவைகள் தினசரி நடைபெறுகிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**114—**

**புதிய தீயணைப்பு நிலையம் அமைத்தல்**

**வினா 13894—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை தீயணைப்பு நிலையம் பழுதடைந்துள்ளதால், புதிய தீயணைப்பு நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை தீயணைப்பு நிலையத்திற்கு ரூ. 27.12 இலட்சம் செலவினில் நிரந்தரக் கட்டடம் கட்ட அரசால் 12-5-1997

[1998 மே 30

அன்று ஒப்புதல் வழங்கப்பட்டு கட்டடம் கட்டும் பணி பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு நீதிமன்றத் தடையாணையால் நிறுத்தப்பட்டுள்ளது. தடையாணையை நீக்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தடை ஆணை நீக்கப்பட்டதும் கட்டுமானப் பணி தொடங்கப்படும்.

**115—**

**உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றுதல்**

**வினா 6417—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், நூல அள்ளி தொடக்கப் பள்ளியையும், முத்தம்பட்டி தொடக்கப் பள்ளியையும் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

விடை.—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்தில் வி. முத்தம்பட்டியில் தொடக்கப்பள்ளி ஏதும் இல்லை. 1 முதல் 8 வகுப்புகளுடன் நடுநிலைப்பள்ளியொன்று இயங்கி வருகின்றது. 1998-99 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளியையும், நூல அள்ளி தொடக்கப்பள்ளியையும் உயர்நிலைப்பள்ளிகளாக உயர்த்தும் கருத்துருக்கள் பெறப்பட்டால், பள்ளிகளை தரம் உயர்த்த வகுக்கப்பட்ட நெறிமுறைகள் அடிப்படையிலும், உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும் உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**116—**

**செல்லம்மாள் பெண்கள் கல்லூரி**

**வினா 13428—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பச்சையப்பன் அறக்கட்டளையைச் சேர்ந்த செல்லம்மாள் பெண்கள் கல்லூரி வகுப்பறைகள் இடிந்து விழும் நிலையில் உள்ளதாக அரசிற்குப் புகார் வந்துள்ளதா?



1998 மே 30]

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) செல்லம்மாள் மகளிர் கல்லூரியில் கட்டட மராமத்து பணியினை மேற்கொள்ள கல்லூரி கட்டட வளர்ச்சிக் குழுவின் ஆலோசனைப்படி மராமத்துப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 31-3-1998-க்குள் முடிக்கப்படவுள்ளதாக கல்லூரிச் செயலர் தெரிவித்துள்ளார்.

**117—**

**சிறுநீரக சிகிச்சைப் பிரிவு துவக்குதல்**

**வினா 5622—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு அரசு மருத்துவமனையில் சிறுநீரக சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு அரசு மருத்துவமனையில் சிறுநீரக சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்சமயம் இல்லை. இருப்பினும் சம்பந்தப்பட்ட சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[1998 மே 30

**118—**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா 9378—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், வெள்ளாங்கிபாலம், வெள்ளாப்பம்பட்டியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வெள்ளாங்கிபாலம், வெள்ளாப்பம்பட்டி மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகையின் அடிப்படையில் தற்போது செயல்படும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாலும், 1.5 கி.மீ. தொலைவில் துணை சுகாதார நிலையமும், 5.5 கி.மீ. தொலைவில் வெள்ளாறு ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதாலும் வெள்ளாங்கிபாலம் வெள்ளாப்பம்பட்டியில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அவசியமும் சாத்தியமும் இல்லை.

**119—**

**மீட்புப் பணிக்குப் பயிற்சி அளித்தல்**

**வினா 8039—திரு. இரா. மதிவாணன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புயல் மற்றும் இயற்கைச் சீற்றங்கள் சென்னையில் அதிக அளவு தாக்குவதால் மீட்புப் பணியில் எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ்-2 தேர்ச்சி பெற்றவர்களை தொகுப்பு சிறப்பு ஊதியத்தில் பயிற்சி அளித்து பணியளிக்க அரசு ஆவன செய்யுமா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

அவசியம் இல்லை.

**120—**

**அனைத்து அலுவலகம் கொண்ட வட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல்**

**வினா 8129—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகம் தற்சமயம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுக் கொண்டிருப்பதால் அதற்கு அனைத்து அலுவலகம் கொண்ட வட்டாட்சியர் அலுவலகம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**121—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா 1781—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் நகராட்சியின் அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1998 மே 30

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு 1998 மே மாத இறுதிக்குள் குடிநீர் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**122—**

**குடிநீர் வழங்கும் திட்டம்**

**வினா 3028—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், நெமிலி ஒன்றியம், பாலாற்றிலிருந்து களத்தூர்-சங்கரம்பாடி வழியாக பனப்பக்கத்திற்கும், அரக்கோணம் ஒன்றியம், கல்லாற்றிலிருந்து தக்கோலம் பேரூராட்சிக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பனப்பாக்கம் பேரூராட்சிக்குப் பாலாற்றிலிருந்து களத்தூர்-சங்கரம்பாடி வழியாகக் குடிநீர் கொண்டு செல்லும் திட்டம் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகிறது. தக்கோலம் பேரூராட்சிக் குடிநீர் திட்டத்திற்காக விரிவான மதிப்பீடுகள் களப் பணியாளர்களால் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்கான ஒப்புதல் பெறப்பட்டவுடன் இத்திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.



1998 மே 30]

**123—**

**பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்**

**வினா 7754—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் ஒன்றியத்திற்குட்பட்ட, பள்ளப்பட்டி, அனைப்பட்டி, குரும்பப்பட்டி, அடியனூத்து, செட்டிநாயக்கன்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : இத்திட்டம் வரும் நிதியாண்டில் (1998-99) முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றப்பட்டு செயலுக்குக் கொண்டு வரப்படும்.

**124—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா 10466—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, விருதுவிளங்கினான் மற்றும் சாத்தனூர் கூட்டுக் குடிநீர் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

[1998 மே 30

(ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதியைச் சார்ந்த விருதுவிளங்கினான் மற்றும் அதைச் சுற்றியுள்ள 21 கிராமக் குடியிருப்புகளுக்குத் தென்பெண்ணையாற்றை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர் திட்டம் அமைக்க, நீராதார ஆய்வுப் பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளன.

125—

**கட்சித் தாவல் நடவடிக்கை**

**வினா 11204—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் கட்சித்தாவல் செய்தால் அது கட்சித்தாவல் சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்க வழிவகுக்குமா?

(ஆ) நடவடிக்கைகள் எடுக்கும் அதிகாரம் யாரிடம் உள்ளது?

(இ) கட்சித் தாவிய உறுப்பினரை பதவி நீக்கம் செய்ய என்ன வழிவகை மேற்கொள்ளப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தில் இதற்கு வழிவகை செய்யப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ): இக்கேள்விகள் எழவில்லை.

126—

**சென்னையில் வடிகால் வசதிகள்**

**வினா 13545—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதி நவீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சென்னையில் வடிகால் வசதிகளைத் திருத்தி மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கீழ்க்காணும் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன:

(1) கழிவு நீர் உந்து நிலையங்கள் பராமரித்து மேம்படுத்துதல்.

(2) கழிவு நீர் வழியமைப்புகளில் இயந்திரங்கள் மூலம் மணல் அப்புறப்படுத்தும் ஜெட் ராடிங் இயந்திரம் மூலம் அடைப்புகள் நீக்குதல்.

(3) நீர் மூழ்கி உந்தும் பம்பு செட்டு மூலம் கழிவு நீர் உந்து நிலையங்களில் கழிவு நீரை வெளியேற்றுதல்.

127—

**பண்ணைமுறை விவசாயத் திட்டம்**

**வினா 9165—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயச் செலவுகளைக் குறைக்க, பண்ணைமுறை விவசாயத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

128—

**தரங்கம்பாடியில் கடல் அரிப்பைத் தடுத்தல்**

**வினா 12780—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

தரங்கம்பாடியில் கடல் அரிப்பைத் தடுக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி கடற்கரைப் பகுதியில், கடல் அரிப்பைத் தடுப்பதற்கு தடுப்புச்சுவர் கட்டும் பணிக்கு ரூ. 50.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, ஒப்பந்தக்காரரால் பணி தொடங்கப்பட்டு உள்ளது.

**129—**

**அரசுப் போக்குவரத்துக் கழகத்தினை ஒரே அமைப்பாக்குதல்**

**வினா 1896—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்கள் அனைத்தையும் இணைத்து, அரசுப் போக்குவரத்துக் கழகம் என்று ஒரே அமைப்பாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை.

**130—**

**சென்னை அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலைத் தடுத்தல்**

**வினா 3161—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலைத் தடுக்க அதனை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஆம்.

**131—**

**சேதுசமுத்திரத் திட்டம்**

**வினா 12003—திரு. கே. சுப்பராயன்:**
**திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேதுசமுத்திரத் திட்டத்தை அமல்படுத்துமாறு மத்திய அரசை மாநில அரசு கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து மத்திய அரசின் நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேதுசமுத்திரத் திட்டத்தை அமல்படுத்த வேண்டி, முதலீடு செய்வதற்காக முடிவெடுக்கும் திட்டம் மத்திய அரசால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**132—**

**சாலைப் போக்குவரத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்ய அனுமதி**

**வினா 12972—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை, சாலைப் போக்குவரத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்திட அனுமதி கோரி அரசிற்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட முடிவு என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பெருந்துறை மருத்துவக் கல்லூரிக்கு இந்திய மருத்துவக் குழுவின் அங்கீகாரம் கிடைத்தவுடன் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

**133—**

**சுரங்கப் பாதைப் பணிகள் தொடங்குதல்**

**வினா 890—திரு. வி.கே. லட்சுமணன்:**
**திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் காந்திபுரம் சுரங்கப் பாதைப் பணிகள் எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூரில் காந்திபுரத்தில் பேருந்து நிலையம் அருகே சுரங்கப் பாதை கட்டுவதற்கு ரூ. 70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மேலாண்மைக் குழுமம் உலக வங்கியின் ஒப்புதலைக் கோரியது. உலக வங்கித் திட்டத்தின்கீழ் புதிய திட்டப் பணிகள் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என உலக வங்கி தெரிவித்துள்ளது. எனவே இப்பணி தொடங்கப்படாத நிலையில் உள்ளது.

**134—**

**சாக்கோட்டை பாலத்தைப் புதுப்பித்தல்**

**வினா 6542—திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம்-நீடாமங்கலம் சாலையில் அரசலாற்றின் குறுக்கே உள்ள பழுதடைந்த சாக்கோட்டை பாலம் புதுப்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசின் நிதிப் பற்றாக்குறை காரணமாக இப்பாலத்தை தற்பொழுது புதுப்பிக்க இயலாது.

**135—**

**போக்குவரத்துப் பாலம் அமைத்தல்**

**வினா 6667—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, குறிச்சி ஊராட்சி, கருங்கன்னிக்காட்டூருக்குச் செல்வதற்கு மேட்டூர் வலது வாய்க்காலில் 20/0-ல் போக்குவரத்துப் பாலம் அமைத்துக் கொடுக்கும் புதிய திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவாக அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**136—**

**கன்னாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்**

**வினா 7624—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 21

(அ) தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு தொகுதியில் உள்ள கண்ணனாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் கட்டும் பணி நபார்டு திட்டத்தில் ரூ. 122.64 இலட்சம் செலவில் செய்ய அரசு நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிட்டுள்ளது.

**137—**

**வத்தலக்குண்டில் மாற்றுவழி**

**வினா 7835—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டைத் தொகுதி, வத்தலக்குண்டு வழியாக அதிகமான பேருந்துகள் போய் வருகின்ற காரணத்தால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு விபத்துக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதால் வத்தலக்குண்டில் மாற்றுவழி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வத்தலக்குண்டு நகரத்திற்கு புறவழிச்சாலை அமைக்கத் தோராயமாக ரூ. 1.10 கோடி தேவைப்படும். பெருந்தொகை தேவைப்படும் இப்பணியினை அரசின் நிதி நெருக்கடி நிலைமை காரணமாக அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.



1998 மே 21]

**138—**

**இருவழிச் சாலையாக மாற்றுதல்**

**வினா 9710—திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு-ஆந்திரா இணைப்புச்சாலை (வழி) - தருமபுரி மாவட்டம் - கிருஷ்ணகிரி முதல் மகாராஜக்கடை, வாட்டணப்பள்ளி, பசவண்ண கோயில் வழியாக குப்பம் வரை உள்ள ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**139—**

**தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுதல்**

**வினா 10533—திரு. கோ. தளபதி**
**திரு. வி.பி. இராசன்**
**திரு. மா. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம்-டி. கல்லுப்பட்டி-ராசபாளையம் மாநிலச் சாலையினை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

திருமங்கலம்-டி. கல்லுப்பட்டி-ராசபாளையம் மாநிலச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**140—**

### பயணியர் ஓய்வு விடுதி

**வினா 10774—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் நகராட்சி பகுதியில் நெடுஞ்சாலைத் துறை மூலம் பயணியர் ஓய்வு விடுதி கட்டப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**141—**

### புறவழிச்சாலை அமைத்தல்

**வினா 11400—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறில் புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவையாறுக்கு புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

**142—**

### சிறுமலை மலைச்சாலை வேலை தொடங்குதல்

**வினா 13111—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) மிகவும் பழுதடைந்துள்ள சிறுமலை மலைச்சாலை வேலை தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆகஇதர மாவட்டச் சாலையான சிறுமலை மலைச் சாலை போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையில் கி.மீ. 5/6-25/0 பகுதியில் ஏற்பட்டிருந்த நொடிகள் சீர் செய்யப்பட்டுள்ளன. கி.மீ. 14/2 மற்றும் 21/4 ஆகிய இடங்களில் தடுப்புச் சுவர் கட்டும் பணி முடிவடைந்துள்ளது. மேலும் மூன்று இடங்களில் தடுப்புச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவற்றைத் தவிர இச்சாலையில் 6.60 கி.மீ. நீளச் சாலைப் பகுதிகளை ரூ.35.00 இலட்சம் மதிப்பில் புதுப்பிக்கும் பணியினை 1998-99 ஆம் ஆண்டுக்கான நிதியிலிருந்து எடுத்துச் செய்யப்படும்.

**143—**

### கிழக்குக் கடற்கரை - கடலூர் சாலையைத் திறத்தல்

**வினா 13514—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கிழக்குக் கடற்கரைச் சாலையில் இருந்து கடலூர் செல்லும் சாலை வரை பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது திறக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து கடலூர்வரை கிழக்குக் கடற்கரைச் சாலைப் பகுதிப் பணி முழுவதும் முடிவடைந்து 14-1-1998 அன்று பொதுமக்கள் உபயோகத்திற்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

**144—**

**அருள்மிகு பகவதி அம்மன் ஆலய இராஜகோபுரம் கட்டுதல்**

**வினா 10829—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், அருள்மிகு மண்டைக்காடு பகவதி அம்மன் ஆலயத்திற்கு இராஜகோபுரம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு அருள்மிகு பகவதி அம்மன் ஆலயத்திற்கு இராஜகோபுரம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**145—**

**பிறமொழி சமய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தல்**

**வினா 11712—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற மொழியில் வெளிவந்துள்ள சிறந்த சமய நூல்களை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :**

சமய நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.



**146—**

**மொழிக் காவலர் நிதியுதவி**

**வினா 12403—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொழிக் காவலர் நிதியுதவி கோரி அரசுக்கு வந்துள்ள முறையீடுகள் எத்தனை?

(ஆ) இதுகுறித்து எப்போது தீர்வு காணப்படும்?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :**

(அ) மொழிக் காவலர் நிதியுதவி கோரி வந்துள்ள விண்ணப்பங்கள் 4193.

(ஆ) அரசு அமைத்துள்ள உயர்நிலைக் குழு விரைவில்கூடி வந்துள்ள விண்ணப்பங்களைத் தகுதியின் அடிப்படையில் ஆய்ந்து நிதியுதவி பெறுவதற்குரியவர்களைத் தெரிவுசெய்யும். அவ்வுயர் நிலைக்குழுவின் பரிந்துரையின்படி ஓய்வூதியம் வழங்கப்படும்.

**147—**

**உணவகங்களில் உணவுப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்துதல்**

**வினா 3401—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலும், தமிழ்நாட்டின் பிற இடங்களிலும் உணவகங்களில் உணவுப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்த அரசு எடுத்துவரும் நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் உணவகங்களில் உணவுப் பண்டங்களின் விலைகள் வெளி அங்காடிகளில் நிலவும் அத்தியாவசியப் பண்டங்களின் விலையைப் பொறுத்தே உள்ளன. மிக அதிகமாக விலையேற்றம் இருக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட மாவட்ட வழங்கல் அலுவலர் உணவக உரிமையாளர்களுடன் கலந்து ஆலோசித்து விலையை நிலைப்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்க அவ்வப்போது அறிவுரை வழங்கப்படுகிறது.

**148—**

**நுகர்பொருள்களின் விலைப் பட்டியலை வைத்தல்**

**வினா 6385—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அங்காடிகளிலும் நுகர்பொருள்களின் விலைப்பட்டியலைக் கட்டாயமாக வைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

தமிழகத்தில் உள்ள அங்காடிகளில் இன்றியமையாப் பொருட்களின் இருப்பு மற்றும் விலைகளை எழுதி வைப்பதைச் சட்டபூர்வமாகச் செயற்படுத்த இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் கீழ் ஏற்கெனவே ஆணை வெளியிடப்பட்டு அமலில் உள்ளது.

**149—**

**தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைத்தல்**

**வினா 8326—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், அமரகுந்தி கிராமத்தில் ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**150—**

**கூட்டுறவு நிலவள வங்கிக் கிளை தொடங்குதல்**

**வினா 9801—திருமதி ஆர். வேடம்மாள்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் பாப்பிரெட்டிப்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு கூட்டுறவு நிலவள வங்கிக் கிளை தொடங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியைப் பிரித்து, பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் பாப்பிரெட்டிப்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியைப் புதியதாகத் தொடங்குவதற்கு தகுந்த முன்மொழிவுகள், தேசிய வேளாண்மை

மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, சென்னைக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

151—

## அரிசி ஆலையை நவீனப்படுத்துதல்

**வினா 11195—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், அம்மன்பேட்டை அரசு அரிசி ஆலையை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) தற்போது இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

152—

## பணி நிரந்தரம் செய்தல்

**வினா 2582—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பணி நிரந்தரச் சட்டப்படி 180 நாட்கள் பணிபுரிந்த தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்யாமலுள்ள நிர்வாகங்கள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர் பணி நிரந்தர தகுதி நிலை வழங்கும்) சட்டத்தின்படி, பணி நிரந்தரம் பெறத் தகுதி பெற்ற தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாத போது, சம்பந்தப்பட்ட ஆய்வாளர்களிடம் மனு தாக்கல் செய்யும் பட்சத்தில் அச்சட்டத்தின்கீழ் ஆய்வாளர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இது தொடர்பாக, தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை மூலம் மேற்கொண்ட 11,883 ஆய்வுகளில் 1792 தொழிற்சாலைகளில் 24 காலண்டர் மாதங்களில் 180 நாட்கள் தொடர் பணிபுரிந்த தொழிலாளர்களுக்குப் பணி நிரந்தரம் அளிக்காதது கண்டுபிடிக்கப்பட்டு தீவிர நடவடிக்கை மூலம் இத்தொழிற்சாலை நிர்வாகத்திற்குத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென ஆணை பிறப்பிக்கப்பட்டு இதன்மூலம் 16,589 தொழிலாளர்களுக்குப் பணி நிரந்தர அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. பணி நிரந்தரச் சட்டத்தை அமல்படுத்தாத நிர்வாகங்களின் மீது வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை 7 ஆகும்.

2. மேலும், தொழிலாளர் துறை மூலம் மேற்கொண்ட ஆய்வின் போது, 931 புகார்கள் பெறப்பட்டு, அப்புகார்களின் அடிப்படையில் தொழிலாளர் துறையால் எடுக்கப்பட்ட நடவடிக்கை மூலம் முடிவுக்கு வந்தவை 462 மற்றும் நிலுவையில் உள்ளவை 469 ஆகும். இதனால் பயன்பெற்ற மொத்தத் தொழிலாளர்கள் 577 பேர் ஆவர். தொடரப்பட்ட வழக்குகள் தொழிலாளர் துறையில் நிலுவையில் ஏதும் இல்லை.





153—

## நடமாடும் மருந்தகம் அமைத்தல்

**வினா 5826—திரு. இ. [illegible]:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரில் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் நடமாடும் மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

**154—**

**இலவசப் பேருந்துப் பயண அனுமதிச்சீட்டு**

**வினா 7964—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் அரசு தனியார் தொழிற் பயிற்சி மையங்களில் படிக்கும் மாணவர்களுக்கும் அரசுப் பேருந்துகளில் இலவசப் பேருந்துப் பயண அனுமதிச் சீட்டு வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் படிக்கும் மாணவர்களுக்கு, அரசுப் பேருந்துகளில் 50 சதவீத சலுகை பயண அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டு வருகிறது. தனியார் தொழிற் பயிற்சி மையங்களில் படிக்கும் மாணவர்களுக்கு அரசுப் பேருந்துகளில் 50 சதவீத சலுகை பயண அனுமதிச் சீட்டு வழங்குவது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**155—**

**தனி வேலைவாய்ப்பு அலுவலகங்கள்**

**வினா 9967—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

சென்னை, கோவை மற்றும் மதுரையில் உள்ளதுபோல் தொழிற்திறன் படைத்தோருக்கான தனி வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (Special Employment Office for Technical Personnel) பிற மாவட்டங்களிலும் தோற்றுவிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சென்னை மற்றும் கோவையில் உள்ளதுபோல், தொழில்திறன் படைத்தோருக்கான தனி வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (Special Employment Office for Technical Personnel) பிற மாவட்டங்களில் தோற்றுவிக்கப்பட செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**156—**

**வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு முறையை மாற்றுதல்**

**வினா 9971—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தற்போதுள்ள வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற முறை ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை என்று மாற்றி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தற்போதுள்ள வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க வேண்டும் என்ற முறையை ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை என்று மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1998 மே 30

**157—**

### தாம்பரத்தில் நீதிமன்ற வளாகம் அமைத்தல்

**வினா 6066—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் வட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தை தாம்பரத்தில் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் வட்ட நீதிமன்ற வளாகத்தை தாம்பரத்தில் அமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**158—**

### உரிமையியல் நீதிமன்றம் கூடுதலாகத் தொடங்குதல்

**வினா 8152—திரு. வ. வேலுசாமி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் உரிமையியல் நீதிமன்றங்கள் கூடுதலாகத் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், குற்றவியல் நீதிமன்றங்களையும், உரிமையியல் நீதிமன்றங்களாக அறிவிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.



1998 மே 30]

**159—**

### பூந்தமல்லி சார்பு நீதிமன்றத்தினை நிரந்தரமாக்குதல்

**வினா 8551—திரு. டி. சுதர்சனம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூந்தமல்லியிலுள்ள சார்பு நீதிமன்றம் நிரந்தரமாக்கப்பட வகைசெய்யும் உத்தரவை உடனடியாக அரசு பிறப்பிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

பூந்தமல்லியில் இயங்கும் சார்பு நீதிமன்றம் நிரந்தரமான சார்பு நீதிமன்றமாகும்.

**160—**

### கூடுதல் சார்பு நீதிமன்றம் அமைத்தல்

**வினா 13120—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் எத்தனை வழக்குகள் தேங்கியுள்ளன?

(ஆ) வேலைப்பளுவைக் குறைக்க கூடுதல் சார்பு நீதிமன்றம் தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் 30-4-1997 அன்று நிலவரப்படி மொத்தம் 7,188 வழக்குகள் நிலுவையில் உள்ளன. திருப்பூரில் கூடுதல் சார்பு நீதிமன்றம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**161—**

### சிறைத் துறையில் சிறப்புப் பயிற்சி

**வினா 13707—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதியதாகத் தேர்வு செய்யப்படும் சிறைக் காவலர்களுக்கு, சிறைத் துறையில் சிறப்புப் பயிற்சி வழங்கிய பின்னர் பணி நியமனம் செய்யும் திட்டத்தை அரசு கொண்டுவருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

புதியதாகத் தேர்வு செய்யப்படும் சிறைக் காவலர்களுக்கு, சிறைத் துறையில் சிறப்புப் பயிற்சி வழங்கிய பின்னர், பணி நியமனம் செய்யும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**162—**

### சிறைக் காவலர்களுக்கு ஏ.கே.47

**வினா 13709—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறைக் காவலர்களுக்கு ஏ.கே. 47 போன்ற நவீன ஆயுதங்கள் வழங்கி ஆயுதப் பயிற்சி அளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

தற்போது ஏ.கே. 47 நவீன ரக ஆயுதங்களைக் கொண்டு பயிற்சி அளிப்பதற்கான உடனடித் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**163—**

### சிறையில் அரசியல் கைதிகளுக்கு வசதிகள்

**வினா 13845—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலம் மத்திய சிறைச்சாலையில் அரசியல் கைதிகளுக்கு விதிப்படி வசதிகள் செய்து கொடுக்காமலும், அடிப்படை வசதியான கழிப்பறை வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீரும் கிடைப்பதில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மத்திய சிறையில் போதிய வசதிகள் உள்ளன. வசதிகள் இல்லையென புகார் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**164—**

### மயிலாடுதுறையில் சட்டக் கல்லூரி

**வினா 15641—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறையில் சட்டக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறையில் சட்டக் கல்லூரி அமைத்திட கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**165—**

### மூடிக்கிடக்கும் கூட்டுறவு நூற்பாலை நெசவாளர்களுக்கு நிவாரணம்

**வினா 6441—திரு. டி. மணி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூடிக்கிடக்கும் கூட்டுறவு நூற்பாலைகள் எத்தனை?

அவற்றைத் திறக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

(ஆ) வேலையில்லாத காலத்தில் அந்த நெசவாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலுள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளில் புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையும், வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலையும் இயங்காமல் உள்ளன. இவ்விரு நூற்பாலைகளையும் திறந்து நடத்துமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்திரவிட்டுள்ளார். கூட்டுறவு நூற்பு ஆலைகளை ஆராய்ந்து அவற்றிற்குப் புத்துயிர் ஊட்டத் தேவையான அறிக்கையைத் தயாரித்து அரசுக்கு வழங்க அலுவலர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு தனது நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது. அக்குழு அளிக்கும் அறிக்கையின்மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

(ஆ) இல்லை.

**166—**

**விசைத்தறி துணி ஏற்றுமதி**

**வினா 12587—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து வருடந்தோறும் ஏற்றுமதியாகும் விசைத்தறித் துணியின் மதிப்பு என்ன?

(ஆ) ஏற்றுமதி விகிதம் அதிகரித்து வருகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) இந்தியா முழுவதும் ஏற்றுமதி செய்யப்படும் விசைத்தறி, பருத்தித் துணியின் மதிப்பு கடந்த மூன்று ஆண்டுகளுக்குப் பின்வருமாறு உள்ளது:



| வருடம் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1994-95 | 2,76,790 |
| 1995-96 | 3,26,790 |
| 1996-97 | 4,03,640 |

(ஆ) மேற்காணும் விவரப்படி விசைத்தறித் துணி ரகங்களின் ஏற்றுமதி விகிதம் அதிகரித்துள்ளது.

**167—**

**மாணவர் தங்கும் விடுதி**

**வினா 7480—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி தொகுதி, சோழபாண்டி உயர்நிலைப்பள்ளிக்கு மாணவர் தங்கும் விடுதி ஒன்று அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி தொகுதி, சோழபாண்டி உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி திறப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**168—**

**மாஸ்டர் பிளானில் உள்ளூர் திட்டக் குழுமம்**

**வினா 4276—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலம் பகுதியில் மாஸ்டர் பிளானில் உள்ளூர் திட்டக் குழுமம் தயாரித்த அரசு ஆணை எண் 300, நாள் 11-5-1993-க்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கையின் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 11-5-1993 நாளிட்ட வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் அரசாணை எண் 300-ல் இணக்கம் அளிக்கப்பட்ட உதகமண்டலம் முழுமைத் திட்டத்திற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இணக்கம் அளிக்கப்பட்ட உதகமண்டலம் முழுமைத் திட்டத்தில் உள்ள குறைகளை நீக்கும்பொருட்டு அப்பகுதி மக்களின் கருத்துகளையும், ஆட்சேபணைகளையும் பெற்று, திருத்திய முழுமைத் திட்டம் தயாரிப்பது தொடர்பாக, பரிந்துரை வழங்குவதற்கு ஒரு வல்லுநர் குழு நியமிக்கப்பட்டது. மேலும், அப்பொழுது நடைமுறையில் இருந்த இணக்கம் பெற்ற முழுமைத் திட்டத்திலுள்ள முதன்மை குடியிருப்புப் பகுதி மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினர் பகுதியில் கட்டடம் கட்டுவதற்கு குறிக்கப்பட்டுள்ள மனை அளவுகள் மற்றும் கட்டிட அளவுகளை நீக்கம் செய்து ஆணையிடப்பட்டது. மற்றும் வல்லுனர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், உதகமண்டலம் உள்ளூர் திட்டப்பகுதிக்கு ஒரு திருத்திய முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**169—**

**மின்னணு தொழிற்பேட்டை**

**வினா 10803—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் மின்னணு தொழிற்பேட்டைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?





விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): செங்கம் தொகுதியில் மின்னணு தொழிற்பேட்டை தொடங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

**170—**

**பாப்பாட்டியில் பாலர் பள்ளி தொடங்குதல்**

**வினா 11598—திரு. ஜி. கே. மணி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னகரம் தொகுதி, பண்டஅள்ளி ஊராட்சி, பாப்பாட்டியில் பாலர் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**171—**

**சத்துணவு சமையல் கூடங்கள் அமைத்தல்**

**வினா 12692—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்துக்குளி ஒன்றியம் - புத்தூர் பள்ளப்பாளையம், செல்லிபாளையம் ஆகிய ஆரம்பப் பள்ளிகளில் சத்துணவு சமையல் கூடங்கள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா? ...

விடை—

**மாண்புமிகு இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

ஆம். 1998-99 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டத்தில் இவ்விரு ஆரம்பப் பள்ளிகளிலும் சத்துணவு சமையற்கூடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**172—**

**தொழிற்பேட்டை செயல்படுத்துதல்**

**வினா 13208—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் ஓமலூர் ஒன்றியம் பாகல்பட்டி கிராமத்தில் நிறுவப்பட்டுவரும் தொழிற்பேட்டை எப்போது செயல்படத் தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் :**

சேலம் கிரானைட் மற்றும் தொழிற்பேட்டை, பாகல்பட்டி (சேலம் மாவட்டம்) 30-12-1993-ல் பதிவு செய்யப்பட்டு, 19-1-1994 முதல் தொடங்கப்பட்டது.

**173—**

**தேசிய விருதுபெற்ற படங்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்புதல்**

**வினா 5542—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய மொழிகளில் தேசிய விருதுபெற்ற படங்கள் தொலைக்காட்சியில் ஞாயிறு மதியம் ஒளிபரப்பப்படும்போது இந்தியில் மட்டும் (Sub Title) விளக்கம் தரப்படுவது அரசுக்குத் தெரியுமா?



(ஆ) ஆம் எனில், மாநில மொழிகளில் விளக்கம் தர மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் :**

(அ) இந்திய மொழிகளில் தேசிய விருதுபெற்ற படங்கள் தொலைக்காட்சியில் ஒவ்வொரு ஞாயிறு மதியம் ஒளிபரப்பப்படும்போது பல்வேறு மாநில மொழிகளில் விளக்கம் தரப்படுகிறது. தற்சமயம் சென்னைத் தொலைக்காட்சி நிலையம் அப்படங்களுக்குத் தமிழில் விளக்கம் அளிக்கிறது. இதற்கு முன்பு தொழில்நுட்பக் காரணங்களால் ஒரு சில மாதங்கள் மட்டும் இந்தியில் விளக்கம் ஒளிபரப்பப்பட்டது.

(ஆ) வினா எழவில்லை.

**174—**

**சிலை அமைத்தல்**

**வினா 6204—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் தீரன் சின்னமலைக்கு சிலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): அரசின் ஆய்வில் இல்லை.

**175—**

**நினைவகம் கட்டுதல்**

**வினா 10236—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மகாகவி பாரதியாரின் நினைவகம் கட்டுவதற்கு அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் :**

ஏற்கெனவே எட்டயபுரத்தில் மகாகவி பாரதியாருக்கு மணிமண்டபமும், எட்டயபுரத்திலும், சென்னையிலும் அவர் வாழ்ந்த இல்லங்கள் நினைவிடங்களாக ஆக்கப்பட்டுள்ளன. எனவே, புதிதாக நினைவிடம் கட்டும் கருத்து அரசின் ஆய்வில் தற்பொழுது இல்லை.

**176—**

**முழு உருவச் சிலை அமைத்தல்**

**வினா 10238—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் முழு உருவச் சிலை எந்த இடத்தில், எப்பொழுது நிறுவப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் :**

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் முழு உருவச் சிலை சென்னையில், சீரணி அரங்க முகப்பில் காமராசர் சாலை (மெரினா கடற்கரை) 15-12-1997 அன்று அரசால் நிறுவப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**177—**

**அரசு சாதனைகளைத் திரையரங்குகளில் காண்பித்தல்**

**வினா 10419—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





தமிழ்நாடு அரசின் சாதனைகளை விளக்கும் தமிழ்நாடு அரசு செய்திச் சுருள் படத்தை அனைத்துத் திரையரங்குகளிலும் கட்டாயமாகக் காண்பிக்கப்பட வேண்டும் என அரசு வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் :**

தமிழ்நாடு அரசு செய்திப்படங்கள் தமிழ்நாடு திரைப்படப் பிரிவால் மாதம் ஒரு செய்தி மலர் தயாரிக்கப்பட்டு மத்திய அரசு திரைப்படப் பிரிவின் சென்னை மற்றும் மதுரைக் கிளைகள் மூலம் அனைத்துத் திரையரங்குகளிலும் திரையிடப்படுகின்றன. அவ்வாறு அனுப்பப்படும் செய்தி மலர் முறையாக திரையரங்குகளில் திரையிடப்படுகிறதா என்பதை மாவட்டத்திலுள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள்மூலம் கண்காணிக்கிறார்கள்.

**178—**

**அரசு செய்திச்சுருள் படத்தை கம்பிவடத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புதல்**

**வினா 10422—டாக்டர் மு. தேவராஜன் :**

**திரு. பா. துரைசாமி :**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் செய்திச்சுருள் படத்தை கம்பிவடத் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்ப அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் :**

அரசின் முக்கியத் திட்டங்கள், ஆக்கப் பணிகள் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளைத் தொகுத்து வீடியோ செய்தி மலராக 23 நிமிடத்திற்கு தயார் செய்து மாதம் ஒரு முறை (முதல் வாரத்தில்) (மத்திய அரசு) சென்னைத் தொலைக்காட்சி நிறுவனம் மற்றும் தனியார் செயற்கைகோள் ஒளிபரப்பு நிறுவனங்கள் (சன், விஜய், ராஜ் டி.வி.) மூலம் ஒளிபரப்பப்படுகிறது.

[1998 மே 30

179—

**நினைவு இல்லத்தை அழகுபடுத்துதல்**

**வினா 10475—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிண்டியில் உள்ள பெருந்தலைவர் காமராசர் நினைவு இல்லத்தை அழகுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் :**

கிண்டியிலுள்ள பெருந்தலைவர் காமராசர் நினைவு மண்டபம் வண்ணம் பூசப்பட்டு பொலிவுடன் உள்ளது. இந்நினைவு இல்லத்தை மேலும் மேம்படுத்தும் செயற்குறிப்பு தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

180—

**நாவலைத் திரைப்படமாக்குதல்**

**வினா 11353—திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் "தென்பாண்டிச் சிங்கம்" நாவலைத் திரைப்படமாக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

இப்பொருள் குறித்த செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



1998 மே 30]

181—

**சுதந்திரப் போராட்ட வீரரின் இல்லத்தை நினைவகமாக்குதல்**

**வினா 181—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி என். அண்ணாமலை பிள்ளை வாழ்ந்த வீட்டை நினைவுச் சின்னமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இயலாது.

182—

**சினிமாக்களில் ஆபாசத்தைத் தடுத்தல்**

**வினா 14556—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சினிமாக்களில் நிறைய ஆபாசம், வன்முறை இடம்பெறுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

அனைத்துத் திரைப்படங்களும் மத்திய திரைப்படத் தணிக்கைக் குழுவினால் திரைப்படச் சட்டம் 1952-ன்கீழ் வகுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு, பொதுமக்களின் பார்வைக்குத் தகுதி வாய்ந்தவையா என

சான்றளிக்கப்படவேண்டும். அவ்வாறு சான்றளிக்கும்போது தேவையற்ற மற்றும் தவிர்க்கக்கூடிய ஆபாச, வன்முறைக் காட்சிகளும் மனிதாபிமானத்தையும் மனித உணர்வுகளையும் கெடுக்கும் கொடூரமான காட்சிகளும் இடம் பெறாத வகையில் மத்திய தணிக்கைக் குழு உறுதி செய்ய வாய்ப்புள்ளது. ஆபாசத் திரைப்படங்கள் காட்டுவது குறித்து ஏதேனும் புகார்கள் வரப்பெற்றால், 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) சட்டம் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**183—**

**தினக்கூலி விகிதாச்சாரம் மாற்றம்**

**வினா 1841—திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

Whether there in any variations regarding payment of daily wages in the districts for casual labourers working in Livestock Farms in Tamil Nadu?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

ஆம். மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் பணிபுரியும் தினக்கூலி பணியாளர்களுக்கு, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிர்ணயம் செய்யும் தினக்கூலி வழங்கப்படுகிறது. அவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி மாவட்டத்திற்கு மாவட்டம் சிறிது வேறுபடுகிறது.

**184—**

**கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம்**

**வினா 6970—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி எடப்பாடி ஒன்றியம், சித்தூர் பஞ்சாயத்திலுள்ள நத்தம்பட்டி கிராம கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இப்பொருள் குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**185—**

**கால்நடை மருத்துவமனையாக உயர்த்துதல்**

**வினா 7768—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, நல்லாம்பட்டியிலுள்ள கால்நடை மருத்துவக் கிளை நிலையத்தை மருத்துவமனையாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இது குறித்து தற்சமயம் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

**186—**

**பிராணிவதை தடுப்புச் சட்டம்**

**வினா 8235—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

பிராணிவதை தடுப்புச் சட்டம்பற்றி சிறப்பான முறையில் மக்களிடையே விளம்பரம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

ஆம். தற்போது பிராணிவதை தடுப்புச் சங்கங்கள் மக்களுக்கு விளக்கிக் கூற பிராணிநல இருவார விழா மாவட்டத் தலைநகரங்களில் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி முகாம்கள் முதலியவற்றை நடத்தி வருவதுடன், பத்திரிகைகள் மூலமாகவும் அச்சட்டத்தினைப் பரப்பி வருகின்றன.

**187—**

**துணைக் கால்நடை மருத்தகம் அமைத்தல்**

**வினா 8308—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், தண்டமங்கலம் ஊராட்சியில் பஞ்சுகாளிப்பட்டியில் துணைக் கால்நடை மருத்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், தண்டமங்கலம் ஊராட்சியில் உள்ள பஞ்சுகாளிப்பட்டியில் துணைக் கால்நடை மருத்தகம் (கால்நடை கிளை நிலையம்) அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**188—**

**துணைக் கால்நடை மருந்தகம்**

**வினா 8309—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

தாரமங்கலம் தொகுதி, பாப்பம்பாடியில் துணைக் கால்நடை மருந்தகம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தாரமங்கலம் தொகுதி பாப்பம்பாடியில் துணைக் கால்நடை மருந்தகம் (கால்நடை கிளை நிலையம்) அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**189—**

**புதிய இன ஆடுகள் கண்டுபிடித்தல்**

**வினா 8561—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், பொட்டனேரியிலுள்ள மேச்சேரி ஆடுகள் ஆராய்ச்சி மையத்தில் புதிய இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், பொட்டனேரியிலுள்ள மேச்சேரி ஆடுகள் ஆராய்ச்சி மையத்தில் புதிய இனம் கண்டுபிடிக்கப்படவில்லை.

**190—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா 8645—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், பொட்டனேரியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் :**

செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**191—**

### கால்நடை மருந்தகம் அமைத்தல்

**வினா 9620—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், ஊ. மாரமங்கலம் ஊராட்சி பூச்சுகாயனூரில் ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இதுகுறித்து தற்சமயம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**192—**

### ஆடு வளர்ப்பு மற்றும் ஆராய்ச்சி மையம்

**வினா 10691—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியில் ஆடு வளர்ப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இல்லை.



**193—**

### கால்நடை கிளை மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றியமைத்தல்

**வினா 10898—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி கால்நடை கிளை மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றியமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு ஏதுமில்லை.

**194—**

### தெக்குந்தியில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா 11469—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், எர்ரப்பையன அள்ளி ஊராட்சியிலுள்ள தெக்குந்தியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இதுகுறித்து செயற்குறிப்பு ஏதுமில்லை.

[1998 மே 30

195—

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா 12581—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, எட்டிக்குட்டப்பட்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இதுகுறித்து செயற்குறிப்பு ஏதும் இல்லை.

196—

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா 12598—திரு. ப. கோவிந்தன் :**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், எம். காளிப்பட்டி ஊராட்சி, குட்டப்பட்டி இரயில்வே வாயிலுக்கு அருகில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இதுகுறித்து செயற்குறிப்பு ஏதும் இல்லை.

197—

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா 12773—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், கேசவபுரம் கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இதுகுறித்து செயற்குறிப்பு ஏதும் இல்லை.

198—

**கால்நடை ஆராய்ச்சி**

**வினா 12883—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், டேனிஷ்பேட்டை ஊராட்சியில் கால்நடை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் :**

தற்போது சேலம் மாவட்டத்தில் சேலத்தை மையமாகக் கொண்டு ஒரு பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமும் மற்றும் மேட்டூர் வட்டம் மேச்சேரி அருகில் பொட்டனேரியில் மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையமும் அமைத்து செயல்பட்டு வருகின்றன. சேலத்தில் இயங்கிவரும் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் காடையாம்பட்டி ஒன்றியம் டேனிஷ்பேட்டைக்கு மிக அருகில், எளிதில் அணுகக்கூடிய நிலையில் இருப்பதால், காடையாம்பட்டி ஒன்றியம், டேனிஷ்பேட்டை ஊராட்சியில் தனியாக கால்நடை ஆராய்ச்சி மையம் அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை.

199—

**கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு சலுகைகள் வேண்டுதல்**

**வினா 6830—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இளம் விதவைகளுக்கு தற்போது அரசால் வழங்கப்பட்டு வரும் சலுகைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

விதவைகளுக்கு வழங்கும் எல்லா உதவிகளையும் கணவனால் கைவிடப்பட்ட மகளிருக்கு அளிக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

200—

**விதிமுறைகளைத் தளர்த்தல்**

**வினா 7976—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வாகனங்கள் இலவசமாக வழங்க அரசு ஏதேனும் விதிமுறைகளை வகுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த விதிமுறைகளைத் தளர்த்தி, ஊனமுற்றோரில் பெரும்பான்மையினர் பயனுற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர சைக்கிள் இலவசமாக வழங்க அரசு கீழ்க்கண்ட விதிமுறைகளை வகுத்துள்ளது:—

1. மூன்று சக்கர சைக்கிள் இலவசமாகக்கோரும் மனுதாரர் இரு கால்களும் ஊனமுற்றவராக இருக்க வேண்டும்.



2. 12 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

3. மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

4. ஆண்டு வருமானம் ரூ.[illegible]/-க்குள் இருக்க வேண்டும்.

(ஆ) தற்போது, மேற்கண்ட விதிமுறைகளைத் தளர்த்துவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

## பதிமூன்றாம் பட்டியல்

1—

**பெண்கள் பள்ளி ஆய்வாளர்கள் பதவிகள்**

**வினா 2453—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்கள் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளை ஆய்விடவும் பார்வையிடவும் பெண் பள்ளி ஆய்வாளர்கள் பதவிகளை அரசு மீண்டும் புதுப்பிக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

2—

**பல்கலைக்கழகத் தேர்தல்களை நெறிமுறைப்படுத்துதல்**

**வினா 2504—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்கலைக்கழகங்களில் நடக்கும் பேரவைத் தேர்தல், ஆட்சிமன்றத் தேர்தல், கல்விமன்றத் தேர்தல் ஆகியவை எல்லா பல்கலைக் கழகங்களிலும் ஒரே நெறிமுறையில் நடக்க அரசு வழிவகை செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அதுபோன்ற கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

3—

**தினச் சம்பள பணியாளர்களை நிரந்தரம் செய்தல்**

**வினா 2720—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாரதியார் பல்கலைக்கழகத்தில் தினச் சம்பள அடிப்படையில் எத்தனை பேர் பணியிலமர்த்தப்பட்டுள்ளனர்?

(ஆ) அவர்களை நிரந்தரம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) பாரதியார் பல்கலைக்கழகத்தில் தினக்கூலி அடிப்படையில் தற்போது மொத்தம் 62 பேர் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

(ஆ) நிதி நிலை நெருக்கடி காரணமாக இவர்களில் சிலரையேனும் கூட பணி நிரந்தரம் செய்ய நடவடிக்கை ஏதும் எடுக்க இயலாத நிலையில் பல்கலைக்கழகம் உள்ளது

4—

**உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்துதல்**

**வினா 2950—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஒன்றியம் தளபதி சமுத்திரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1998-99 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தக் கோரி கருத்துருக்கள்



பெறப்பட்டால், உரிய நிதி உள்ளதென உயர்மட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்படுமேயானால் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

5—

**உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்துதல்**

**வினா 3415—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், புவனகிரி ஒன்றியம், சி. முட்லூர் அரசு உயர்நிலைப்பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1997-98 ஆம் ஆண்டில் சி. முட்லூர் அரசு உயர்நிலைப் பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

6—

**மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துதல்**

**வினா 3635—திரு. வி. அய்யலுசாமி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டையபுரம் பாரதியார் நூற்றாண்டு நினைவு மகளிர் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1998-99 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட கருத்துரு ஏதும்

பெறப்பட்டால் உயர் மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

7—

**மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்**

**வினா 4041—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தொகுதி, பெரியதச்சூர், தழுதாளி, எண்டியூர் அரசு உயர்நிலைப் பள்ளிகளை 1996-97-ல் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், பெரியதச்சூர் மற்றும் தழுதாளி அரசு உயர்நிலைப் பள்ளிகளை 1997-98 ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளிகளாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மற்றும் 1998-99 ஆம் கல்வி ஆண்டில் எண்டியூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தக்கோரி கருத்துருக்கள் பெறப்பட்டால் பள்ளிகளின் நிலை உயர்த்த வகுக்கப்பட்ட நெறிமுறைகளின் அடிப்படையிலும் உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும் உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

8—

**செங்கம் நூலகத்திற்கு நூல்கள் வழங்குதல்**

**வினா 4160—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் நூலகத்தில் போட்டித் தேர்வுகளுக்குத் (Competitive Examinations) தேவையான நூல்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எவ்வகையான நூல்கள் வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் நிதி நிலைமை, கிளை நூலகத்தின் இட வசதி, மற்றும் வாசகர்களின்





பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட நூலக அலுவலரின் பரிந்துரையின் அடிப்படையில் கிளை நூலகங்களில் போட்டித் தேர்வு மையங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. செங்கம் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் இல்லை. இந்நூலகம் அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு, இங்கு தனியாகப் பயிற்சி மையம் திறப்பதற்கான போதிய நிதி வசதி இல்லை. எனவே தற்போது இந்நூலகத்தில் போட்டித் தேர்வுகளுக்குத் தேவையான நூல்கள் வழங்க இயலாது.

9—

**மாணவர்களுக்கு சிறப்புத் திட்டம்**

**வினா 4192—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைக் கல்வி வரை தமிழ் மொழி வழியாகவோ அல்லது தமிழ் மொழியை ஒரு பாடமாகவோ படிக்காத மாணவர்களுக்கும் நிதிநிலை அறிக்கையில் அரசு அறிவித்துள்ள சிறப்புத் திட்டம் பொருந்துமா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து மறுபரிசீலனை செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) பொருந்தாது.

(ஆ) இல்லை.

10—

**மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்**

**வினா 4299—திரு. ஆர். மகேந்திரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, சோலையார்பேட்டை ஒன்றியம், வெலக்கல் நத்தம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**11—**

**மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துதல்**

**வினா 4345—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, களப்பால் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : 1998-99 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தக் கோரி கருத்துருக்கள் பெறப்பட்டால் உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**12—**

**தமிழ்நாடு கல்வி வாரியம் அமைத்தல்**

**வினா 4891—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தமிழ்நாட்டில் தொடக்கக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரையிலானவற்றை ஒழுங்குபடுத்த தமிழ்நாடு கல்வி வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

**13—**

**பள்ளி மைதானத்தை கிராம விளையாட்டு மையமாக்குதல்**

**வினா 5083—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தை விரிவுபடுத்தி, கிராம விளையாட்டு மையத்திற்குப் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கடலூர் மாவட்டம் புவனகிரி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஊரக விளையாட்டு மையம் அமைத்திட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் அனுமதியளிக்கப்பட்டு ரூ. 10,000 பெறுமானமுள்ள விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. 200 மீட்டர் ஓடு பாதை அமைத்தல், விளையாட்டுப் பொருட்கள் வைத்தல் மற்றும் உடை மாற்றும் அறை கட்டுதல் ஆகியவை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ 1.00 இலட்சம் செலவில் உருவாக்க கருத்துருக்கள் மற்றும் மதிப்பீடுகள் பள்ளியிலிருந்து கேட்கப்பட்டுள்ளன. அவை பெறப்பட்ட உடன் இத்திட்டத்தை நிறைவேற்ற மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பரிந்துரைக்கப்படும்.

14—

### மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துதல்

**வினா 5201—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

15—

### நூலக நேரம் உருவாக்குதல்

**வினா 5541—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்பப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கு நூலக நேரம் (Library Period) உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆரம்பப் பள்ளிகளில் மாணவர்களுக்கு நூலக நேரம் என தனியாக ஒதுக்கப்படவில்லை. மேலும் இதன் தொடர்பாக செயற்குறிப்பு எதுவும் நிலுவையில் இல்லை. உயர்நிலைப் பள்ளிகளில்





மாணவர்களுக்கு வாரத்திற்கு ஒரு பாட வேளை நூலகப் பயன்பாட்டிற்காக ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

16—

### மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டடம்

**வினா 8812—திரு. ஜு. [illegible]:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட பரவலாக்கப்பட்டத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வந்த கட்டடம் ஆரம்ப நிலையிலேயே நின்று போனது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை விரைவாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1995-96 மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் கட்டடம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி அளித்து, எடப்பாடி நகராட்சி ஆணையர் மூலம் கட்டடம் பேஸ்மெண்ட் அளவில் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. பொதுப்பணித் துறையில் அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி எதிர்பார்க்கப்படுவதால் பணி நிலுவையில் உள்ளது. பொதுப்பணித் துறையினரிடமிருந்து அனுமதி பெறப்பட்டதும் பணி முடிக்கப்பட்டு விடும்.

17—

### தொடக்கப் பள்ளி தொடங்குதல்

**வினா 6133—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, கோடியஅல்லி ஊராட்சி டீக்கடை கிராமத்திற்குத் தொடக்கப் பள்ளி இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் தொடக்கப் பள்ளி தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1997-98 ஆம் கல்வியாண்டில் டீக்கடை கிராமத்திற்கு புதிய ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி தொடங்க தொடக்கக் கல்வி இயக்குநரால் கருத்துரு பெறப்பட்டு, புதிய தொடக்கப் பள்ளி தொடங்க தொடக்கக் கல்வி இயக்குநரால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**18—**

**விவசாயத்தைக் கட்டாயப் பாடமாக்குதல்**

**வினா 6161—திரு. கு. மனோகரன்:**
**திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை (+2) விவசாயப் பாடத்தை கட்டாயப் பாடமாகக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

விவசாயப் பாடத்தின் பகுதிகளை தற்போதுள்ள பாடத் திட்டத்துடன் இணைக்கவும் மேல்நிலைப் பள்ளியில் வாழ்க்கைக் கல்வித் திட்டத்தின்கீழ் விவசாயப் பாடத் திட்டத்தை விரிவாக்கவும் கருத்துருக்கள் உயர்மட்டக் குழு ஒன்றால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.



1998 மே 30]

**19—**

**உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா 6163—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரி ஒன்றியம் சோலைக்கொட்டாய் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1998-99 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தக்கோரி கருத்துரு பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**20—**

**உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்**

**வினா 6370—திரு. ஜி.எல். வெங்கடாசலம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாலக்கோடு ஒன்றியம், புலிக்கரை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1997-98 ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1998-99 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தக் கோரி கருத்துரு பெறப்பட்டால்,

உயர்மட்டக்குழுவினால் பரிந்துரைக்கப்படுமானால் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**21—**

**மாணவர்கள் மீது நடவடிக்கை**

**வினா 6400—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை காருண்யா கல்லூரி நிர்வாகம் மாணவர்கள் மீது சட்ட விரோத அடக்குமுறைகளை ஏவிவிட்டுள்ளதாக அரசிற்கு புகார் ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மாவட்ட ஆட்சித் தலைவர், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், கோவை பாரதியார் பல்கலைக் கழகம், ஆகியவர்களுடன் கலந்தாலோசித்து மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**22—**

**விளையாட்டு அரங்கம் கட்டுதல்**

**வினா 6403—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், ராக்கியாபாளையம் கிராமம் S.F. No. 655/1. 673/1 மற்றும் 2, 674/27 என்னுள்ள புறம்போக்கு நிலத்தில் விளையாட்டு அரங்கம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) திருப்பூர், ராக்கியாபாளையம் கிராமம், S.F.No. 655/1, 673/1, மற்றும் 2, 674/27 என்னுள்ள புறம்போக்கு நிலத்தில் விளையாட்டரங்கம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**23—**

**ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஏற்படுத்துதல்**

**வினா 6620—திரு. எஸ்.எஸ். மணிநாடார்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, நாசரேத்தில் புதிதாக அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழ இடமில்லை.

**24—**

**டென்னிஸ் மைதானத்தில் மின்னொளி விளக்குகள்**

**வினா 6621—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு விளையாட்டுக் கழகத்தின் (Tamil Nadu Sports Council) டென்னிஸ்

மைதானத்தில் மின்னொளி விளக்குகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) அரசு ஆணை நிலை எண் 54, பள்ளிக் கல்வித்துறை, நாள் 31-1-1997-ல் ஆணையிட்டவாறு சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின், டென்னிஸ் மைதானத்தில் மின்னொளி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன

(ஆ) இப்பணி 1997 ஏப்ரல் மாதம் முடிவடைந்தது.

**25—**

**பொது மைய நிதி ஏற்படுத்துல்**

**வினா 6623—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளையாட்டு மேம்பாட்டிற்காக தனி "பொது மைய நிதி" ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பரிசீலனையிலுள்ளது. இதற்கான விதிகள், வரையறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன. வகுத்த பின், நடைமுறைக்கு வரும்.

**26—**

**விளையாட்டு விரர்கள், விராங்கனைகளை தத்து எடுத்தல்**

**வினா 6624—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திறமையும் தகுதியும் வாய்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளை அரசு தத்து எடுத்து, அவர்களை ஊக்குவிக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம், எனில் அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இப்போது நடைமுறையில் உள்ள திட்டத்தில், திறமையும் தகுதியும் வாய்ந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளைத் தத்து எடுத்து, ஊக்கப்படுத்தி வருகிறது. 8-2-1997 அன்று நடைபெற்ற தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கூட்டத்தில், இந்தத் திட்டத்தினை "விளையாட்டு உதவித்தொகை வழங்கும் திட்டமென" அழைக்க அக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 100 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு விளையாட்டு உதவித்தொகை வழங்க திட்டமிடப்பட்டுளளது. மேலும் 100 மாணவர்களுக்கு, மாவட்ட அளவில் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பரந்த மனப்பான்மை கொண்ட நல்லோர்களின் கூட்டு முயற்சியாலும், இதுபோன்ற விளையாட்டு உதவித் தொகை வழங்கிடவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து விளையாட்டுச் சங்கங்களின் கருத்துருக்களைப் பெற்று அதன்பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

**27—**

**மாவட்டங்களில் விளையாட்டு அரங்கங்கள்**

**வினா 6625—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டரங்கங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) விளையாட்டரங்கம் இல்லாத மாவட்டங்களில் விளையாட்டரங்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது

(ஆ) விளையாட்டரங்கம் இல்லாத மாவட்டங்களில் விளையாட்டரங்கம் அமைக்கும் திட்டம் 9 ஆம் 5 ஆண்டுத் திட்டக் காலத்தில் படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

**28—**

**விளையாட்டுப் பயிற்சி மாணவர்களுக்கு இலவச பேருந்து வசதி**

**வினா 6631—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளையாட்டுப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு அவர்கள் இல்லத்திலிருந்து விளையாட்டு மைதானம் சென்று பயிற்சி பெற்றுவர, இலவச பேருந்து/பயண அனுமதிச் சீட்டு வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

மாணவர்கள் பள்ளிக்குச் சென்று வர வழங்கப்படும் சலுகையே அரசுக்குக் கூடுதலான செலவாகின்ற காரணத்தால் இத்திட்டத்தை விரிவாக்கும் உத்தேசம் இல்லை.

**29—**

**விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு**

**வினா 6632—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு வேலைவாய்ப்பில் விளையாட்டு வீரர்கள். வீராங்கனைகளுக்கு இட ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசு பொது நிறுவனங்களில் விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசாணை வெளியிடப்பட்டு நடைமுறையில் உள்ளது. அரசுத் துறைகளில், சிறந்த விளையாட்டு வீரர்களை, அடிப்படைப் பணிகளில், அதாவது அலுவலக உதவியாளர் நிலை பணிகளில் பணி நியமனங்களுக்கான பொது விதியான வேலை வாய்ப்பு அலுவலகம் வழியாக அறிமுகப்படுத்துதலுக்கு விதி விலக்கு அளித்து அரசாணை வெளியிடப்பட்டு நடைமுறையில் உள்ளது.

**30—**

**சென்னை பச்சையப்பன் கல்லூரிக்கு தன்னாட்சி அதிகாரம்**

**வினா 6700—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டின் பழம்பெரும் கல்லூரிகளில் ஒன்றான சென்னை பச்சையப்பன் கல்லூரியை தன்னாட்சிக் கல்லூரியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சென்னை பச்சையப்பன் கல்லூரியை தன்னாட்சிக் கல்லூரியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை. இக்கல்லூரிக்கு தன்னாட்சி நிலை வேண்டாம் என கல்லூரி முதல்வரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**31—**

**ஆரம்பப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா 7060—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை, பேரூராட்சி காடையாம்பட்டியில் நடுநிலைப்பள்ளி மட்டுமே இயங்குவதால், கே.கே. நகரில் உள்ள மாணவர்கள் உயர் கல்வி பயில இளம்பிள்ளை பள்ளிக்குச் செல்ல வேண்டி உள்ளதால் கே.கே. நகர் ஆரம்பப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கே.கே. நகரில் 1997-98 ஆம் கல்வியாண்டில் புதிய அரசு உயர்நிலைப் பள்ளி தொடங்க அனுமதி கோரி பெறப்பட்ட கருத்துரு, 1997-98-ல் புதிய அரசு உயர்நிலைப் பள்ளிகளைத் தேர்வு செய்ய அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு இப்பள்ளியை பரிந்துரைக்காததால் 1997-98-ல் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் இப்பள்ளி தேர்வு செய்யப்பட வில்லை. இருப்பினும், கே.கே. நகர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியை 1997-98 ஆம் கல்வியாண்டில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

**32—**

### உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

**வினா 7084—திரு. த. பூவேந்தன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி, பழனி வட்டம், ஆயக்குடி பேரூராட்சி பழைய ஆயக்குடியில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1998-99 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தக்கோரி கருத்துரு பெறப்பட்டால், உரிய தகுதியுள்ளதென உயர்மட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்படுமானால், மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.



**33—**

### பெரியார் பல்கலைக்கழகத்திற்கு இடம் தேர்வு செய்தல்

**வினா 7278—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்தில் புதியதாக அமைக்கப்பட இருக்கும் பெரியார் பல்கலைக்கழகத்தினை ஓமலூர் தொகுதியில் உள்ள அரசினர் பொறியியற் கல்லூரி வளாகத்தில் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

பெரியார் பெயரில் சேலத்தில் புதிதாக அமையவிருக்கும் பல்கலைக்கழகத்திற்கான இடம் சேலத்தில் உள்ள அரசு பொறியியற் கல்லூரி வளாகத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**34—**

### இரும்புலிக்குறிச்சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

**வினா 7305அ—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடம் ஒன்றியம், இரும்புலிக்குறிச்சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நடப்பாண்டில் மேம்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டில் இரும்புலிக்குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

35—

**கோனேரிப்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா 7391—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், நெடுங்குளம் கிராமம், கோனேரிப்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டில் கோனேரிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

36—

**சமுத்திரம் கிராமத்தில் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா 7392—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டில் சமுத்திரம் அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.





37—

**வங்கிகளின் மூலம் கடன் உதவி**

**வினா 7457—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருத்துவம் மற்றும் பொறியியற் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வங்கிகளில் கடன் கொடுக்க அரசு ஆணைகள் இருந்தும், கடன் கொடுக்க மறுக்கும் வங்கிகளின் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பில் வங்கிகள் மூலம் வழங்கப்படும் கடன் உதவியைப் பெற்றுக் கொள்ளவும், திருப்பிச் செலுத்தவும் ஆணைகளிடப்பட்டுள்ளதால், கடன் கொடுக்க மறுக்கும் வங்கிகள்மீது நடவடிக்கை எடுக்கும் பிரச்சினை எழ வாய்ப்பில்லை.

38—

**வணிகவியல் முதுகலைப் பட்டப்படிப்பு வகுப்பு தொடங்குதல்**

**வினா 7467—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், எல்.ஆர்.ஜி. மகளிர் கல்லூரி நிர்வாகம், வணிகவியல் முதுகலைப் பட்டப் படிப்பு வகுப்பு தொடங்க அனுமதி கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அனுமதி எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

39—

**தந்தை பெரியார் பல்கலைக்கழகத்திற்கு இடம்**

**வினா 7472—திரு. ஏ.எம். ராமசாமி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம்-சென்னை நெடுஞ்சாலையில், சேலத்திற்கருகில் சேஷன்சாவடி புகைவண்டி நிலையத்திற்கருகிலுள்ள சுமார் 1,500 ஏக்கர் அரசுப் புறம்போக்கு நிலத்தில், தந்தை பெரியார் பெயரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பல்கலைக்கழகம் அமைய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சேலம் பொறியியற் கல்லூரி வளாகத்தில் பல்கலைக்கழகம் செயல்பட முடிவு செய்யப்பட்டுள்ளது.

40—

**போக்குவரத்து விதிமுறைகளைப் பாடத்திட்டத்தில் சேர்த்தல்**

**வினா 7488—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போக்குவரத்து விதிமுறைகளை ஆறாம் வகுப்பு முதல் பாடத்திட்டத்தில் சேர்ப்பதோடு நடைமுறையிலும் மாணவ, மாணவியர்க்குக் கற்றுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

திருத்தியமைக்கப்பட்ட பாடநூல்களில் ஆறாம் வகுப்பு முதல் பாடத்திட்டத்தில் ஏற்கெனவே போக்குவரத்து விதிமுறைகள் பாடங்கள்



இடம் பெற்றுள்ளன. மேலும், நடைமுறைப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன.

41—

**நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா 7597—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, வடபாதிமங்கலம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

42—

**குறும்பலாப்பேரியில் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா 7823—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், குறும்பலாப்பேரி அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், குறும்பலாப்பேரி அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**43—**

**கணிப்பொறிகளை அறிமுகப்படுத்துதல்**

**வினா 7097—திரு. ஜே.எம். ஆரூன் ரஷீத்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஆவணக் காப்பகத்தில் கணினிப் பொறிகளை அறிமுகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திலுள்ள ஆவணங்களை கணினி மூலம் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டு அரசு ஆணை (நிலை) எண் 650, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, நாள் 12-9-1996-ல் ஆணை வெளியிட்டுள்ளது. இதற்கென 1996-97-ஆம் நிதியாண்டில் ரூ.15 இலட்சம் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணியை விரைவில் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**44—**

**தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கல்வித் துறை**

**வினா 8440—திரு. ஜே.எம். ஆரூன் ரஷீத்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



கணினியுடன் இண்டர்நெட் போன்ற பல்வேறு தகவல் தொடர்புத் தொழில்நுட்பங்கள் கல்வித் துறையில் அறிமுகம் செய்ய அரசு அனுமதியளிக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

கணினியுடன் இண்டர்நெட் போன்ற பல்வேறு தகவல் தொடர்புத் தொழில் நுட்பங்கள் கல்வித் துறையில் அறிமுகம் செய்யும் திட்டம் தற்போது அரசுக்கு இல்லை.

**45—**

**தொலைத் தொடர்புக் கல்வி மற்றும் தொழில்நுட்பத்திறன் கல்வி**

**வினா 8443—திரு. ஜே.எம். ஆரூன் ரஷீத்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொலைத் தொடர்புக் கல்வி மற்றும் தொழில்நுட்பத்திறன் சம்பந்தப்பட்ட கல்வியை பல்கலைக்கழகங்கள் ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

ஆம்.

**46—**

**நாட்டு நலப் பணித் திட்டத்தில் மாணவர்களுக்கு முன்னுரிமை**

**வினா 8451—திரு. ஜே.எம். ஆரூன் ரஷீத்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்டு நலப் பணித் திட்டத்தில் உள்ள மாணவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

கல்லூரிகளில் பட்ட வகுப்புகளில் சேர்க்கையின்போது 5 மதிப்பெண்கள் கூடுதலாக வழங்கப்படுகிறது. வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை வழங்கும் முறை தற்போது இல்லை.

**47—**

**பெண்களுக்கு உயர்நிலைப்பள்ளி**

**வினா 3476—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் பெண்களுக்கென தனியே உயர்நிலைப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1998-99-ம் கல்வி ஆண்டில் வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் பெண்களுக்கென்று தனியே உயர்நிலைப் பள்ளி தொடங்கக்கோரி கருத்துரு பெறப்பட்டால், புதிய அரசு உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்க வகுக்கப்பட்ட நெறிமுறைகள் அடிப்படையிலும், உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும் உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**48—**

**இலவசக் கல்விச் சலுகை வழங்குதல்**

**வினா 8614—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் படிக்கும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு இலவசக் கல்விச் சலுகை வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

**49—**

**கடலூர் தந்தை பெரியார் அரசு கலைக் கல்லூரியில் மகளிரும் பயிலுதல்**

**வினா 8620—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர், தந்தை பெரியார் அரசு கலைக் கல்லூரியில் மகளிரும் சேர்ந்து படித்திட அரசு அனுமதி வழங்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**50—**

**பெண்களுக்கென தொழிற்கல்லூரி தொடங்குதல்**

**வினா 8623—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்களுக்கென தனிக் கல்லூரி, பெண்களுக்கென தனிப் பல்கலைக்கழகம் இருப்பது போல பெண்களுக்கென தனியாக தொழிற்கல்லூரி தொடங்க அரசு பரிசீலிக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சுயநிதி பொறியியற் கல்லூரி தொடங்கக் கருத்துரு பெறப்பட்டால் அதைப் பரிசீலித்து அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் குழுமத்திற்குப் பரிந்துரை செய்ய அரசு பரிசீலிக்கும்.

**51—**

## தொழில்நுட்பப் பயிலகம் தொடங்குதல்

**வினா 8701—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் புதியதாக அரசு தொழில் நுட்பப் பயிலகம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) தற்போதைய நிதிநிலையில் அரசு பாலிடெக்னிக்கினை திருவண்ணாமலை சம்புவாராயர் மாவட்டத்தில் திருவண்ணாமலை தொகுதியில் தொடங்குவதற்கான வாய்ப்பு ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**52—**

## முன்னாள் படைவீரர்களுக்கு வீடு மற்றும் வீட்டுமனைப் பட்டா

**வினா 8839—திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சொந்தமாக வீட்டு இடம் மற்றும் வீடு இல்லாத முன்னாள் படைவீரர்களுக்கு வீடு மற்றும் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(1) சொந்தமாக வீட்டு இடம் மற்றும் வீடு இல்லாத முன்னாள் படைவீரர்களுக்கு, அரசாணை (நிலை) எண் 275, வருவாய்த் துறை, நாள் 2-1-1991-ல் முன்னுரிமைப் பட்டியல் வரிசை எண் 1-ல் அரசு புறம்போக்கு நிலங்களை வீட்டுமனையாக ஒதுக்கீடு செய்துவிட்டு மனைப் பட்டா வழங்க முன்னுரிமை வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.



(2) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் வீடுகள், அடுக்குமாடி வீடுகள் மற்றும் வீட்டுமனைகளில் முன்னாள் படைவீரர்களுக்கு 7 விழுக்காடு ஒதுக்கீடு உள்ளது. இதனில் வீரவிருது பெற்றவர்களுக்கு 1 சதவிகிதம் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

**53—**

## முதுகலை கூட்டுறவு பட்டப்படிப்பு வகுப்பு தொடங்குதல்

**வினா 8869—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள அரசு கலைக் கல்லூரிகளில் முதுகலை கூட்டுறவு பட்டப்படிப்பு வகுப்பு தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**54—**

## புதுச்சத்திரத்தில் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

**வினா 9469—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1998-99-ம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தக் கோரி கருத்துருக்கள் பெறப்பட்டால், உரிய தகுதி உள்ளதென உயர்மட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்படுமானால், மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**55—**

**நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா 9490—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், புதுசத்திரம் ஊராட்சி ஒன்றிய, கதிராநல்லூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1998-99-ம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரி கருத்துரு பெறப்பட்டால், பள்ளிகளைத் தரம் உயர்த்த வகுக்கப்பட்ட நெறிமுறைகளின் அடிப்படையிலும், உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும் உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**56—**

**வெள்ளார் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா 10301—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம் வெள்ளார் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1998-99-ம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தக்கோரி கருத்துரு பெறப்பட்டால், உரிய தகுதி உள்ளதென உயர்மட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்படுமானால் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**57—**

**நூலகங்களில் கணிப்பொறிகளைப் பயன்படுத்துதல்**

**வினா 10428—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நூலகங்களில் உள்ள நூல்களை அடுக்கி வைக்கவும், எடுத்து வழங்கவும் உதவும் வகையில் கணிப்பொறிகளைப் பயன்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

நூலகங்களில் உள்ள நூல்களை அடுக்கி வைக்கவும், எடுத்து வழங்கவும் கணிப்பொறியினைப் பயன்படுத்திச் செய்ய இயலாது என்பதால், மனித சக்தியைக் கொண்டே இப்பணிகள் தற்போது செய்யப்பட்டு வருகின்றன.

**58—**

**இருங்கோவேள் உயர்நிலைப் பள்ளி எனப் பெயர் சூட்டுதல்**

**வினா 11189—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் ஒன்றியம், சிவகளை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புறநானூற்றில் இடம் பெற்ற மன்னன் "இருங்கோவேள் அரசு உயர்நிலைப் பள்ளி" எனப் பெயர் சூட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

கருத்துரு ஏதும் பெறப்பட்டால் தகுந்த நடவடிக்கை எடுக்க இயலும்.

**59—**

**நூலகர்கள் நியமனம்**

**வினா 11445—திரு. கே. ரவி அருணன்:**
**திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நியமிக்கப்படாத பகுதி நேர நூலகர்களை புதியதாகத் திறக்கப்படவுள்ள ஊர்ப்புற நூலகங்களில் நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இது தொடர்பாக அரசு ஏற்கெனவே ஒரு கொள்கை முடிவெடுத்து, 18-8-1997 நாளிட்ட பள்ளிக் கல்வித் துறை அரசாணை (1டி) எண் 99-ல் தக்க ஆணை பிறப்பித்துள்ளது.

**60—**

**ஏலகிரியில் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா 11541—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி ஏலகிரியில் இயங்கி வரும் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1998-99 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தக் கோரி கருத்துருக்கள் பெறப்பட்டால், பள்ளிகளின் நிலை உயர்த்த வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகள் அடிப்படையிலும், உயர் மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும் உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**61—**

**மாணவர்களின் நலன் முழுமையாகப் பாதுகாக்கப்படுதல்**

**வினா 11600—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேர்வாளர்களின் கவனக் குறைவால் ஏராளமான மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தேர்வாளர்களின் கவனக் குறைவால் ஏராளமான மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படுகிறது என்ற கருத்தினை ஏற்க இயலாது. எனினும், ஓரிரு தவறுகள் நிகழ்வது கவனத்திற்குக் கொண்டு வரப்படும்போது உடனடியாகத் தக்க

[1998 மே 30

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மாணவர்களின் நலன் முழுமையாகப் பாதுகாக்கப்படுவதுடன், தவறுக்குக் காரணமான தேர்வாளர்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தண்டனையும் வழங்கப்படுவதால், இத்தகு நிகழ்வுகள் ஏற்பட வாய்ப்பில்லை.

**62—**

**அரசுப் பள்ளிகள் தேர்வு விகிதத்தை அதிகரிக்க நடவடிக்கை**

**வினா 11690—திரு. கே. சுப்புராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார் பள்ளிகளைவிட, அரசுப் பள்ளிகள் தேர்வு விகிதத்தை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படுவதுடன் தரமான கல்வியை அளிக்க ஏதுவாக அடிப்படை வசதிகள் செய்துகொடுத்தும், கிராமப்புறங்களில் அமைந்துள்ள பள்ளிகளில் உள்ள மாணவ/மாணவியர்களுக்கு விசேட வகுப்புகள் நடத்தப்பட்டும், அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுவதன் மூலமும், இவ்வாறாக பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் அரசுப் பள்ளிகளில் தேர்வு விகிதத்தை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**63—**

**கல்லூரி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்**

**வினா 11829—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள அரசுக் கல்லூரிகளில் 12 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய கல்லூரி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தமிழ்நாடு ஓய்வூதிய விதி 4-ன்படி ஒரு அரசு பணியாளர் 10 ஆண்டுகள் பணிமுடித்து ஓய்வு பெற்றால் அவர் ஓய்வூதியம் பெறத் தகுதி உடையவராகிறார்.

**64—**

**பல்தொழில்நுட்பப் பயிலகம் அமைத்தல்**

**வினா 12053—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98-ல் கூட்டுறவு அமைப்பில் எடப்பாடியில் பல்தொழில்நுட்பப் பயிலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

**65—**

**விளையாட்டை ஊக்குவித்தல்**

**வினா 12057—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1997-98 ஆம் ஆண்டில் விளையாட்டை ஊக்குவிக்க அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

(ஆ) தேசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றவர்களுக்கு அரசு காட்டும் சலுகை என்ன?

விடை —

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் விளையாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், விளையாட்டுச் சங்கங்களுக்கு மானியம் அளித்தல், சாதனை புரிந்த விளையாட்டு வீரர்களுக்கு நிதி, விருது அளித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்படுகின்றன. 1997-98-ல் கீழ்க்காணும் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன:—

1. விளையாட்டுத் திறனுள்ளவர்களை இளமையில் தேர்ந்தெடுக்கும் போட்டிகள் நடத்தப்பட்டன.

2. ஊராட்சி ஒன்றிய அளவிலான ஊரக விளையாட்டுப் போட்டிகளும், அனைத்திந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன.

3. வேலூரில் பளுதூக்கும் சிறப்பு மையமும், கோவையில் கூடைப்பந்து சிறப்பு மையமும், நெல்லையில் வளைகோல்பந்து சிறப்பு மையமும், திருப்பத்தூரில் வாலிபால் மேம்பாட்டு மையமும் அமைக்கப்பட்டுள்ளன.

4. இந்திய சுதந்திர தினப் பொன்விழாவைச் சிறப்பிக்கும் ஒரு பகுதியாக, மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் 1997-ல் நடத்தப்பட்டன.

5. இந்திய விளையாட்டுக் குழுமத்தின் தேசிய மகளிர் விளையாட்டு மாநில போட்டிகளை, தமிழ்நாடு பொறுப்பேற்று நடத்தியுள்ளது.

(இறகுப்பந்து, டென்னிஸ், மேசைப்பந்து மற்றும் நீச்சல் போட்டிகள் நடத்தப்பட்டன)

6. தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் முதன்முறையாக 1997-98-ல் நடத்தப்பட்டன.

7. 4-வது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு வெகுமதியாக ரூ. 22,45,000 வழங்கப்பட்டது.

8. விளையாட்டுப் பள்ளி/விடுதிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.



9. மாவட்ட/மாநில அளவு விளையாட்டுப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன.

10. அண்ணா சைக்கிள் பந்தயமும் இவ்வாண்டில் நடத்தப்பட்டுள்ளது.

11. 1998 ஜனவரி 12 முதல் 16 வரை தேசிய இளைஞர் விழா சென்னையில் சிறப்பாக நடத்தப்பட்டது.

12. தமிழ்நாடு அரசு விளையாட்டு மேம்பாட்டுக்காக பொது மைய நிதி ஏற்படுத்தி முதற்பங்காக ரூ. 1.00 கோடி வழங்கியுள்ளது.

(ஆ) தேசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சார்ந்த தனிப் போட்டியாளர்கள், குழுப் போட்டியாளர்கள் அனைவருக்கும் ரூ. 50,000 நிதி, விருது அரசால் வழங்கப்படுகிறது.

**66—**

## அனைவருக்கும் கல்வி சிறப்புத் திட்டம்

**வினா 12238—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைவருக்கும் கல்வி என்ற கொள்கையை நடைமுறைப்படுத்த அரசு கருதியுள்ள சிறப்புத் திட்டம் பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அனைவருக்கும் கல்வி என்ற கொள்கையை நடைமுறைப்படுத்த கீழ்க்காணும் திட்டங்கள் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

1. விளம்பரம், வெளியீடுகள், ஊர்வலம் இவற்றின் வாயிலாக கல்வி கற்றலின் மேன்மை, சிறப்பியல்புகள், அனைத்து நிலை மக்களையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தப்படுகிறது.

[1998 மே 30

2. குழந்தைகள் பள்ளியை நாடி வரும் சூழ்நிலையை மேம்படுத்தவும், அவர்கள் இடையில் பள்ளியை விட்டு நின்றிடாவண்ணம் இனிய சூழ்நிலையை ஏற்படுத்திடவும் கீழ்க்காணும் அடிப்படை வசதிகள் அனைத்துப் பள்ளிகளிலும் செய்யப்பட்டு வருகின்றன:—

(அ) தளவாடச் சாதனங்கள் வழங்குதல்.

(ஆ) பள்ளிகளுக்கு மின்வசதி இணைப்பு வழங்குதல்.

(இ) குடிநீர் வசதி செய்து தருதல்.

(ஈ) கழிப்பிட வசதி அமைத்தல்.

(உ) விளையாட்டுப் பொருட்கள் வழங்குதல்.

(ஊ) வானொலி மற்றும் ஒலிநாடாப் பெட்டி வழங்குதல்.

மேலும், உலக வங்கி உதவியுடன் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இரண்டாம் கட்டமாக, இத்திட்டம் புதுக்கோட்டை, பெரம்பலூர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ், பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டுதல், அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல், தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சிறப்பு பயிற்சியளித்தல் ஆகியவைகள் செயல்படுத்தப்படுகின்றன. "பள்ளி செல்லும் வயதுடைய குழந்தைகள்" அனைவரும் பள்ளியில் சேருவதுடன் மட்டுமின்றி, அவர்கள் இடையில் நின்றுவிடாமல் தொடர்ந்து கல்வி பயில, இலவச மதிய உணவு, இலவசப் பாடப்புத்தகங்கள், கற்பலகை, சீருடை வழங்குதல் திட்டம் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

3. மக்கள் தொகை 500 உள்ள, அருகில் 1½ கிலோ மீட்டர் தூரத்தில், தொடக்கப்பள்ளி இல்லாத கிராமங்களில் புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்க அரசு முடிவெடுத்துள்ளது.

4. எந்தவொரு பள்ளியும் மாணவர்களுக்குக் கற்பிக்க போதிய ஆசிரியர் இன்றி இருத்தல் கூடாதென்ற அரசின் கொள்கைக்கேற்ப, ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்படுகின்றனர். மேலும், மாணவர்கள் வகுப்பறையில் கல்வி கற்றலை இனிமையான சூழ்நிலையில் கற்பிக்கும்பொருட்டு "யுனிசெப்" (UNICEF) நிறுவனத்தின் உதவியுடன்



1998 மே 30]

"கற்றலின் இனிமை" என்ற பயிற்சியை ஆசிரியர்களுக்கும், உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்க்கும் வழங்கப்பட்டு வருகிறது.

**67—**

**முதுநிலைப் பட்டப் படிப்புகள் தொடங்குதல்**

**வினா 12548—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் எம்.வி.எம். அரசு மகளிர் கல்லூரியில் முதுநிலைப் பட்டப்படிப்புகள் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**68—**

**மணக்காடு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா 12628—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மணக்காடு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தாம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம், மணக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி 1997-98 ஆம் கல்வி

ஆண்டுகள் அரசாணை (நிலை) எண் 271, பள்ளிக் கல்வி, நாள் 23-6-97-ன்படி உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு 1-8-97 முதல் செயல்பட்டு வருகிறது.

**69—**

**பெண்கள் கல்லூரி அமைத்தல்**

**வினா 12920—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் நகரத்தில் பெண்கள் கல்லூரி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**70—**

**பட்ட மேற்படிப்புகள் தொடங்குதல்**

**வினா 13437—திரு. ரா. சேதுராமன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் அரசினர் கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்புகள் எம்.ஏ., எம்.காம்., எம்.எஸ்சி., ஆகிய முதுகலை வகுப்புகள் தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

திண்டிவனம் அரசினர் கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்புகள் தொடங்க கருத்துரு பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.



**71—**

**தருமபுரி தொகுதியில் பல்தொழில் பயிலகம்**

**வினா 13480—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதியில் அரசினர் பல்தொழில் பயிலகம் (Polytechnic) தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

**72—**

**நாங்குநேரியில் கலைக் கல்லூரி தொடங்குதல்**

**வினா 13487—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் கலைக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**73—**

**சிறுமலையில் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா 13622—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதி, சிறுமலையில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1998-99-ம் கல்வி ஆண்டில் திண்டுக்கல் தொகுதி, சிறுமலையில் உள்ள நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தக் கோரி கருத்துருக்கள் பெறப்பட்டால், பள்ளிகளை தரம் உயர்த்த வகுக்கப்பட்ட நெறிமுறைகள் அடிப்படையிலும், உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும் உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**74—**

**தொழில்நுட்பப் பட்டய பயிற்சி மையம்**

**வினா 13658—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் ஒரு தொழில் நுட்பப் பட்டய பயிற்சி மையம் அமைக்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



**75—**

**முதுநிலைப் பாடப் பிரிவுகள் தொடங்குதல்**

**வினா 14066—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தந்தை பெரியார் அரசு கலைக் கல்லூரியில் முதுநிலைப் பாடப் பிரிவுகளைத் தொடங்கிடவும் புதிய கட்டடங்களை கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**76—**

**திருவண்ணாமலையில் பெண்கள் கல்லூரி**

**வினா 14106—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் அரசு பெண்கள் கல்லூரி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**77—**

**ஊராட்சி ஒன்றியங்களில் விளையாட்டு அரங்கம்**

**வினா 14115—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்த ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் விளையாட்டு அரங்கம் அமைத்து கிராம இளைஞர்களை உற்சாகப்படுத்த திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்த ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் விளையாட்டு அரங்கம் (Stadium) அமைக்கும் திட்டம் இல்லை. ஆனால், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தேர்ந்தெடுத்த பள்ளி மைதானத்தில் ஊரக விளையாட்டு மையம் (Rural Sports Centre) அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விளையாட்டு அரங்கம் அமைக்கும் திட்டம் மாவட்டத் தலைநகரங்களில் மட்டும் செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.

**78—**

**எடப்பாடியில் கலைக் கல்லூரி**

**வினா 14160—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் ஒரு கலைக் கல்லூரி நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



**79—**

**பெரம்பலூரில் பெண்கள் கலைக் கல்லூரி**

**வினா 14195—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூரில் பெண்கள் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**80—**

**வியாசர்பாடி டாக்டர் அம்பேத்கர் கல்லூரியில் கூடுதல் வசதி**

**வினா 14395—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளிவிழா காணும் சென்னை வியாசர்பாடியிலுள்ள டாக்டர் அம்பேத்கர் கல்லூரியில் புதிய வகுப்பறைகள், முதுநிலை பட்டப் படிப்புகள் தொடங்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை— .

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பெதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**84—**

**மருத்துவமனை அமைத்தல்**

**வினா 12507—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேர்சேரி ஒன்றியம், நட்டப்பட்டி ஊராட்சியில் ஒரு அரசு மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இதற்கான கருத்துரு ஏதும் ஆய்வில் இல்லை.

**82—**

**ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்குதல்**

**வினா 12655—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, செருவாவிடுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**83—**

**அழகியநாயகிபுரம் ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா 12656—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அழகியநாயகிபுரம் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?





விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**84—**

**மின்மாற்றி அமைத்தல்**

**வினா 12667—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பத்தேவன் வலசை கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

**85—**

**கூடுதல் திறன் கொண்ட மின்மாற்றிகள் அமைத்தல்**

**வினா 12668—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், சங்கமங்கலத்தில் உள்ள 6.5 கி.வோ. மின்மாற்றியை 110 கி.வோ. மின் மாற்றியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

86—

துணை மின் நிலையம் தொடங்குதல்

**வினா 12670—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் சேடப்பட்டி தொகுதி, சாப்டூரில் புதிய துணை மின் நிலையம் விரைவில் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 11-10-97 அன்று இயக்கி வைக்கப்பட்டது.

87—

மருத்துவமனை தொடங்குதல்

**வினா 12674—திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றம் வட்டத்தின் தலைநகர் திருக்கழுக்குன்றம் நகரில் 30 படுக்கை வசதி கொண்ட புதிய மருத்துவமனை தொடங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருக்கழுக்குன்றம் ஆரம்ப சுகாதார நிலையம் அரசு வட்டத் தலைமை மருத்துவமனையாக உயர்த்தப்பட்டுள்ளது.



88—

மகப்பேறு பிரிவு அமைத்தல்

**வினா 12675—திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றம் சதுரங்கப்பட்டினம் ஊராட்சியின் சுகாதார நிலையத்திற்கு 5 படுக்கை வசதியுடன் கூடிய மகப்பேறு பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருக்கழுக்குன்றம் ஒன்றியம், சதுரங்கப்பட்டினத்தின் (சட்ராஸ்) ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டடம் கட்ட மெய்யூர் கிராமத்தில் சர்வே எண் 158/97-ல் ஒரு ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு நிலம் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இங்கு 6 படுக்கைகள் மற்றும் தேவையான வசதிகளுடன் புதிய கட்டடம் கட்டப்படவுள்ளது.

89—

விசைத்தறி தொழிலுக்கு மின் கட்டணம்

**வினா 13018—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைத்தறி தொழிலுக்கு மின் கட்டணம், அதிகமாக இருப்பதாக அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

90—

**மீனவர் கிராம வீடுகளுக்கு மின் இணைப்பு**

**வினா 13159—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள பழையாறு மீனவர் கிராம வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க மறுக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சிறப்பு நேர்வாக விண்ணப்பம் செய்துள்ள மீனவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மின் வாரியத்தால் மறுக்கப்படுவதில்லை. உரிய விண்ணப்பம் கிடைத்தவுடன் மின் இணைப்பு உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) தற்போது புதிய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை.

91—

**துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா 13160—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியிலுள்ள ஆச்சாள்புரத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நாகை மாவட்ட பெருந்திட்டத்தில், சீர்காழி தொகுதி ஆச்சாள்புரத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.

92—

**வைத்தீஸ்வரன் கோவிலில் துணை மின் நிலையம்**

**வினா 13161—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள வைத்தீஸ்வரன் கோவிலில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இந்து சமய அறநிலையத் துறையிடமிருந்து நிலம் பெறப்பட்டு கையகப்படுத்தப்பட்டவுடன் பணி தொடங்கப்படும்.

93—

**ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு**

**வினா 13174—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து இடமும் ஒதுக்கப்பட்ட பின்னரும் பணி தொடங்காமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1996-97 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் கட்டடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்ட 300 ஆரம்ப சுகாதார நிலையங்களில் திருப்பூர் மங்கலம் ஆரம்ப சுகாதார நிலையமும் ஒன்றாகும். இதில் கட்டடம் கட்ட பணி தளம் 4-6-1997-ல் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, கட்டடம் கட்ட ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.

**94—**

**ஓமலூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் வசதி**

**வினா 13191—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் அரசு மருத்துவமனையில் நவீன முறையில் எக்ஸ்ரே பிரிவு, நவீன வசதியுடன் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு நவீன முறையில் எக்ஸ்ரே பிரிவு அமைக்க 1998-99 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தில் மாநில திட்டக் குழுவின் ஒப்பதல் பெறப்பட்டுள்ளது. இதற்கான ஆணை 1998-99 ஆம் நிதியாண்டின் துவக்கத்தில் வெளியிடப்படும். விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.



**95—**

**சேலம் மாநகராட்சிக்கு துணை மின் நிலையம்**

**வினா 13196—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சேலம் மாநகராட்சிக்கு தனியாக துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

**96—**

**விவசாயத்திற்கு மின் இணைப்பு வழங்குதல்**

**வினா 13197—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதியில் விவசாயத்திற்காக மின் இணைப்பு கோரி வரப்பெற்ற மனுக்கள் எத்தனை நிலுவையிலுள்ளன?

(ஆ) அவர்களுக்கு மின் இணைப்பு எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஓமலூர் தொகுதியில் விவசாயத்திற்காக மின் இணைப்பு கோரி பெறப்பட்ட மனுக்களில் 20-12-1997 முடிய 2738 மனுக்கள் நிலுவையில் உள்ளன.

(ஆ) மேற்படி நிலுவையில் உள்ள விண்ணப்பங்களுக்கு, வரும் நிதி ஆண்டுகளில் நிர்ணயிக்கப்படும் குறியீட்டைப் பொறுத்து மின் இணைப்புகள் பதிவு வரிசை அடிப்படையில் வழங்கப்படும்.

[1998 மே 30

97—

## அனல் மின் நிலையம் அமைத்தல்

**வினா 13225—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகை தொகுதி, காமேஷ்வரம் பகுதியில் அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

98—

## மின்பாதை அமைக்கும் பணி

**வினா 13249—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈச்சங்காட்டிலிருந்து விருத்தாச்சலம் வரை 110 கே. வி. மின்பாதை அமைக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?

(ஆ) எப்பொழுது அப்பணி முடிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஈச்சங்காடு 230 கே. வி. துணை மின் நிலையத்திலிருந்து விருத்தாசலம் 110 கே. வி. துணை மின் நிலையம் வரை 110 கே. வி. மின்பாதை அமைக்க தற்போது நில அளவை பணி நடந்து வருகின்றது.

(ஆ) 1998-99 ஆம் நிதியாண்டில் மேற்கண்ட மின்பாதை வேலைகள் முடிக்கப்பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.



1998 மே 30]

99—

## மின் அணு சாதனங்களைப் பழுதுபார்த்தல்

**வினா 13280—திரு. அ. வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அரசு பொது மருத்துவமனையில் உள்ள இருதய சிகிச்சைப் பிரிவில் குளிரூட்டும் சாதனங்கள் இயங்காததால் மாரடைப்பு, நெஞ்சுவலியால் அனுமதிக்கப்படும் நோயாளிகள் பாதிக்கப்படுவதையும் கோடிக்கணக்கான மதிப்புள்ள மானிட்டர் மின் அணு சாதனங்கள் பழுதடைய வாய்ப்புள்ளதையும் அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தற்சமயம் அரசு பொது மருத்துவமனையின் இருதய நோய் சிகிச்சைப் பிரிவில் உள்ள ஏழு குளிர் சாதனங்களில் நான்கு சாதனங்கள் நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன. ஆகையால் மாரடைப்பு, நெஞ்சுவலியால் அனுமதிக்கப்படும் நோயாளிகள் பாதிக்கப்பட வாய்ப்பு இல்லை. பலவித மின் அணு சாதனங்கள் பழுதடைய வாய்ப்பு இல்லை. மூன்று குளிரூட்டும் சாதனங்களை சீர் செய்ய உரிய டீலர்களிடம் மனு சமர்ப்பித்து இச்சாதனங்களை சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

100—

## மருத்துவமனைக்கு கூடுதல் வசதி

**வினா 13283—திரு அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை அரசு பொது மருத்துவமனையில் உள்ள சி.சி.யு. வார்டில் கழிப்பறைகள் சரியாக பராமரிக்கப்படாததால் நோயாளிகள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சி.சி.யு. வார்டில் உள்ள நோயாளிகளுக்குரிய கழிப்பறைகள் ஒரு சமயம் பழுது அடைந்த நிலையில் இருந்ததால் அச்சமயம் சி.சி.யு. பணியாளர்களுக்குரிய கழிப்பறையை நோயாளிகள் பயன்படுத்தினர். தற்பொழுது நோயாளிகளுக்குரிய கழிப்பறைகள் பழுது பார்க்கப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**101—**

**துணை மின் நிலையங்கள் ஏற்படுத்துதல்**

**வினா 13301—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நூலஹள்ளி, கடகத்தூர், கிருஷ்ணாபுரம் ஆகிய ஊர்களில் துணை மின் நிலையங்கள் ஏற்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**102—**

**மின் அழுத்தக் குறைவினைப் போக்குதல்**

**வினா 13339—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, ஆளூர் பேரூராட்சிக்குட்பட்ட மேலப்பெருவிளையில் மின் அழுத்தக் குறைவைப் போக்க மின் மாற்றி அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஏப்ரல் 1998-க்குள் இப்பணியினை முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**103—**

**நெடுங்குளம் கிராமத்திற்கு மின் வசதி**

**வினா 13679—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், புதூர் பேரூராட்சி, நெடுங்குளம் கிராமத்திற்கு மின் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**104—**

**பாவூர்சத்திரத்தில் துணை மின் நிலையம்**

**வினா 13681—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) பாலூர்சத்திரத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) திட்டமிடப்பட்டு ஒன்பதாவது ஐந்தாண்டு பெருந்திட்டத்தில் (1997-2002) சேர்க்கப்பட்டு பிறகு மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**105—**

**பெருந்துறை அரசினர் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வசதி**

**வினா 13853—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை அரசினர் மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் வசதி செய்யக் கேட்டு அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மேற்படி மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் வசதி செய்யக் கேட்டு முறையீடு ஏதும் வரப்பெறவில்லை.



1998 மே 30]

**106—**

**மின்சார விளக்குகள் அமைத்தல்**

**வினா 13876—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, மேல்கச்சிராப்பட்டு, பண்டிதப்பட்டு ஊராட்சி திருமூர்த்தி நகர், மெய்யூர் ஊராட்சி திருமூர்த்தி நகர், மெய்யூர் ஊராட்சி விநாயகபுரம் ஆகிய கிராமங்களில் மின்சார விளக்கு அமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**107—**

**ஒரு மின்விளக்கு திட்டம்**

**வினா 13878—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதியில் ஆதிதிராவிடர் வீடுகளில் துண்டிக்கப்பட்ட ஒரு மின்விளக்குத் திட்டத்தின்கீழ், மீண்டும் ஒரு மின் விளக்கு இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மறு இணைப்பு எனில் வாரிய விதிகளுக்குட்பட்டு, ஈடுகட்டும் தொகையினை மின்நுகர்வோர் செலுத்தினால் மறு இணைப்பு கொடுக்கப்படும்.

**108—**

**தண்டராம்பட்டில் மருத்துவமனை அமைத்தல்**

**வினா 13881—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, தண்டராமபட்டில் அரசு மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழக அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு 1998-99-ம் நிதியாண்டில் இத்தகைய செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**109—**

**தரைப் பாலம் கட்டுதல்**

**வினா 9362—திரு. கொ. வீ. நன்னன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் ஊராட்சி, பாமனந்தல்—திருவள்ளுவர் சாலையில் செய்யாற்றின் குறுக்கே ஒரு தரைப் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?



1998 மே 30]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தரைப் பாலம் கட்ட இயலாது.

(ஆ) எழாது.

**110—**

**புதிய ஊராட்சி ஒன்றியம் அமைத்தல்**

**வினா 9423—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**111—**

**மின்சார தகன மேடை**

**வினா 9429—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் மின்சார தகன மேடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாநகராட்சியில் மின்சார தகன மேடை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**112—**

**தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

**வினா 9496—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, துட்டம்பட்டி ஊராட்சியில், ஆலாமாத்தூரில் தீ விபத்தில் குடிசையை இழந்த ஆதிதிராவிட மக்களுக்கு உடனடியாகத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்போது இல்லை.

**113—**

**கசிவு நீர்க் குட்டை அமைத்தல்**

**வினா 9499—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், பெரியேரிப்பட்டி ஊராட்சியில் வருதன்னூரில் ஒரு கசிவு நீர்க் குட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கசிவு நீர்க் குட்டை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**114—**

**அடிப்படை வசதிகள் வழங்குதல்**

**வினா 9582—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலுள்ள அனைத்து அரசு ஊழியர் குடியிருப்புகளுக்கும் குடிநீர், சாலை, தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை நகரிலுள்ள அரசு ஊழியர் குடியிருப்புகளுக்கு அக்குடியிருப்புகளைக் கட்டிய அரசு நிறுவனங்களாகிய பொதுப் பணித் துறை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஆகியவை அடிப்படை வசதிகளை அமைத்துப் பராமரித்து வருகின்றன.

**115—**

**ஏழுதேசம் பேரூராட்சியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா 9600—திரு. டி. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) கன்னியாகுமரி மாவட்டம், ஏழுதேசம் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டம் கொல்லங்கோடு பேரூராட்சி, ஏழுதேசம் பேரூராட்சி மற்றும் 21 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.137.50 இலட்சத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஒப்புதல் அளிக்கப்பட்டு தற்சமயம் தலைமைப் பணியிடம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**116—**

**பேருந்து நிலையம் அமைத்தல்**

**வினா 9606—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொம்பலூர் நகரத்தில் அமைந்திருக்கும் புதிய பேருந்து நிலையம் மக்களுக்கு உபயோகமாக இல்லாததால் அந்நிலையத்தை நகராட்சி தங்குமிடமாகவும், நகராட்சி சுங்கச்சாவடியாகவும் மாற்றி தேசிய நெடுஞ்சாலையில் புதிய பேருந்து நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரம்பலூர் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள புதிய பேருந்து நிலையத்தை மாற்றி அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.



1998 மே 30]

**117—**

**ஒளிவெள்ள விளக்குகள் அமைத்தல்**

**வினா 9629—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் மெயின் அருவி, ஐந்தருவி பகுதிகளில் பொதுமக்கள் இரவில் பயமின்றி நீராடுகின்ற வகையில் ஒளிவெள்ள விளக்குகள் (Flood Lights) அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், வருகின்ற பருவகாலத்திற்கு முன்பாக அது நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): குற்றாலத்தில், மெயின் அருவி, ஐந்தருவி முதலிய அருவிகளுக்கு ஒளிவெள்ள விளக்குகள் அமைக்க ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**118—**

**சலவைத் துறைக் கட்டடம் அமைத்தல்**

**வினா 9642—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், புளியரையில் சலவைத் தொழிலாளர்களுக்கு சலவைத் துறைக் கட்டடம் அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

**119—**

**தென்னைப் பொருட்கள் உற்பத்தி**

**வினா 9776—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையில் ஒருங்கிணைந்த தென்னைப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிலைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**120—**

**செங்கோட்டை நகருக்குக் குடிநீர்த் திட்டம்**

**வினா 9779—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை நகராட்சிக்கு குடிநீர் மேம்பாட்டிற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள புதிய குடிநீர்த் திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அப்பணி தொடங்கும்?





விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): செங்கோட்டை நகராட்சிக்கு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான செலவினை மேற்கொள்ளும் வழிவகை (Financial Pattern) முடிவு செய்தபின் இத்திட்டத்திற்கு வாரியத்தால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**121—**

**தென்காசி நகராட்சிக்கு குடிநீர் வசதி**

**வினா 9780—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி நகராட்சிக்கு புதிய குடிநீர்த் திட்டம் தயாரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) எப்போது அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தென்காசி நகராட்சிக்கு குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தை ரூ.10.66 கோடியில் அமைக்கவும் அதன் பராமரிப்புக்காக ரூ.45 இலட்சமும் அரசு ஆணை எண் 292, நாள் 23-9-1997 மூலம் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) இத்திட்டம் தற்போது செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நீராதாரம் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. திட்டப்பணிகளை இரண்டு ஆண்டுகளில் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**122—**

**புதூர் பேரூராட்சிக்கு குடிநீர் வசதி**

**வினா 9783—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், புதூர் பேரூராட்சி, கதிரவன் குடியிருப்பு, அம்பேத்கர் குடியிருப்பு, மூன்று வாய்க்கால், இரட்டைகுளம், நெடுஞ்சி ஆகிய பகுதிகளுக்கான புதிய குடிநீர்த் திட்டம் தயாரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) செங்கோட்டை வட்டம், புதூர் பேரூராட்சியைச் சேர்ந்த (1) தலவணை (2) சதியன்பேடு (3) வாய்க்கால், (4) கண்ணனூப்புளிமேடு, (5) பண்ணைமுண்டம், (6) தாமோதரன் நகர், (7) பூலான்குடியிருப்பு, (8) இராவிதர்மம், (9) ஹரிசன் காலனி, (10) புதூர், (11) கேசவபுரம் ஆகிய குடியிருப்புகளுக்கு இந்தியாண்டில் (1997-98) குடிநீர்த் திட்டத்திற்கான நீராதாரம் தோற்றுவிப்பதற்காக நிதிநிலை அறிக்கையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு ரூ.5.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கதிரவன் குடியிருப்பு, அம்பேத்கர் குடியிருப்பு, இரட்டைகுளம், நெடுஞ்சி ஆகிய பகுதிகளின் வாரிய மறு ஆய்வு பதிவேட்டில் (1992) இடம் பெறவில்லை என்ற போதிலும் இந்நான்கு குடியிருப்புகளும் மேற்காணும் 11 குடியிருப்புகளுக்குள் அடங்குபவையே ஆகும்.

**123—**

## மைலம் ஒன்றியத்தில் கூட்டுக் குடிநீர் வசதி

**வினா 9847—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதி, மைலம் ஒன்றியத்தில் உள்ள மைலம், கீழ்மைலம், பாதிராபுலியூர் கிராமங்களுக்கு ஆத்திக் குப்பத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படாமல் இருப்பது குறித்து அரசு அறியுமா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திண்டிவனம் தொகுதி மைலம் ஒன்றியத்தின்கீழ் உள்ள மைலம், கீழ்மைலம், பாதிராபுலியூர் கிராமங்களுக்கு தற்போது தத்தம் கிராமங்களில், தனித்தனியாக குடிநீர்த் திட்டங்கள் போடப்பட்டு அவைகள் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து விரிவாக்கப்பட்டுவிட்டன.

**124—**

## ஊராட்சித் தலைவருக்கு அலுவலக அறை

**வினா 10047—திரு. மீ. அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலேயே மாவட்ட ஊராட்சித் தலைவருக்கு அலுவலக அறை அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**125—**

## செஞ்சி பேருந்து நிலையம்

**வினா 10127—திரு. த. நடராஜன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி பேருந்து நிலையத்தை செஞ்சியிலுள்ள 'பி' ஏரியில் மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னி பேருந்து நிலையத்தை தற்போது மாற்றுவதற்கான வாய்ப்புகள் இல்லை.

**126—**

**கல்கி பூங்காவில் கலை அரங்கம்**

**வினா 10139—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகராட்சிப் பகுதியிலுள்ள கல்கி பூங்காவைச் சீரமைத்து பொது நிகழ்ச்சிகள் நடத்திடும் வகையில் கலை அரங்கம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மன்னார்குடி நகராட்சியில் உள்ள கல்கி பூங்கா சீரமைக்கப்பட்டுள்ளது. ஆனால், பொது நிகழ்ச்சிகள் நடத்திடும் வகையில் கலையரங்கு கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**127—**

**பத்மநாபபுரம் தொகுதியில் பாலம் கட்டுதல்**

**வினா 10336—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, புங்கறை ஊர் மக்கள் ஆற்றைக் கடக்க பாலம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, திக்கணங்கோடு பேரூராட்சிக்குட்பட்ட புங்கறை ஊர் மக்கள் ஆற்றைக் கடக்க ரூ.30,000 செலவில் ஒரு பாலம் தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

**128—**

**பி.பி. சானலைக் கடக்க பாலம் கட்டுதல்**

**வினா 10337—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், பத்மநாபபுரம் தொகுதி, நுள்ளிவிளை பேரூராட்சியில் வடக்கு நுள்ளிவிளை மக்களுக்கு பி.பி. சானலைக் கடக்க பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், பத்மநாபபுரம் தொகுதி, நுள்ளிவிளை பேரூராட்சியில், வடக்கு நுள்ளிவிளை மக்கள் பி.பி. சானலைக் கடக்க பாலம் கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**129—**

**பூங்காக்கள் அமைத்தல்**

**வினா 10492—திரு. கோ.வி. நன்னன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத் தலைமையிடங்களிலும் மற்றும் பெரிய ஊர்களிலும் பூங்காக்கள் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத் தலைமையிடங்களிலும் மற்றும் பெரிய ஊர்களிலும் பூங்காக்கள் அமைப்பது தொடர்பாகத் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

**130—**

**மருத்துவமனையை மீண்டும் செயல்படுத்துதல்**

**வினா 10508—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தெக்கூர் ஊராட்சி, கோட்டைத் தெரு கிராமத்தில் செயல்படாமல் உள்ள சித்த மருத்துவமனையை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தஞ்சை மாவட்டம், தெக்கூர் ஊராட்சி, கோட்டைத் தெரு கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய சித்த மருத்துவமனையில் உள்ள மருத்துவ அலுவலர் 31-8-1991-ல் ஓய்வு பெற்றுவிட்டார். காலியிடம் நிரப்பப்படும் வரையில் அருகாமையில் உள்ள ஆதனக்கோட்டை சித்த மருத்துவ அலுவலர் கூடுதல் பொறுப்பு வகிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.



1998 மே 30]

**131—**

**சுரங்க நடைபாதைகளில் கடைகள்**

**வினா 10663—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுரங்க நடைபாதைகளில் (Sub Way) கடைகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**132—**

**சுரங்கப் பாதைகள் அமைத்தல்**

**வினா 10712—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் புதிய பேருந்து நிலையம், ஐந்து ரோடு போன்ற பகுதிகளில், சாலையைக் கடக்க சுரங்கப் பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் புதிய பேருந்து நிலையம், ஐந்து ரோடு போன்ற பகுதிகளில் சாலையைக் கடக்க சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

133—

**கோயம்புத்தூரில் சுரங்கப் பாதை அமைத்தல்**

**வினா 10861—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் டாக்டர் நஞ்சப்பா சாலையில் சுரங்கப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் டாக்டர் நஞ்சப்பா சாலையில் சுரங்கப் பாதை அமைக்கும் திட்டம் கோயம்புத்தூர் மாநகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

134—

**வணிக வளாகம் கட்டுதல்**

**வினா 10864—திரு. கோ.வீ. நன்னன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் மற்றும் புதுப்பாளையம் பேரூராட்சிப் பகுதிகளில் ஒருங்கிணைந்த வணிக வளாகம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): செங்கம் மற்றும் புதுப்பாளையம் பேரூராட்சிகளில் ஒருங்கிணைந்த வணிக வளாகம் கட்டுவதற்கான வாய்ப்புகள் தற்போது இல்லை.



135—

**பயணிகள் தங்கும் விடுதி**

**வினா 10866—திரு. கோ.வீ. நன்னன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் பேரூராட்சி சார்பில் பயணிகள் தங்கும் விடுதி அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தற்போது தேவையான அளவு பயணியர் விடுதிகள் இருப்பதால் மேற்கொண்டு, செங்கம் பேரூராட்சி சார்பில், பயணியர் தங்கும் விடுதி அமைத்துத் தருவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

136—

**விளையாட்டு மைதானத்தைச் சீர்படுத்துதல்**

**வினா 10919—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெரம்பூர் இரயில் நிலையத்திற்கு எதிரிலுள்ள கால் பந்தாட்ட மைதானத்தில் குப்பைகள் கொட்டப்பட்டிருப்பதால் விளையாட்டு மைதானம் பயனற்று இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குப்பைகளை அகற்றி மீண்டும் விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னை பெரம்பூர் இரயில் நிலையத்திற்கு எதிரில் உள்ள கால் பந்தாட்ட மைதானம் இரயில்வே துறையைச் சார்ந்தது. ஆகையால் இது குறித்து சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுக்க இயலாது.

**137—**

**அடையாறு திரு.வி.க. பாலத்தில் சுரங்கப் பாதை அமைத்தல்**

**வினா 10922—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அடையாறு திரு.வி.க. பாலத்தின் முன்பு பள்ளிக்குச் சென்றுவரும் குழந்தைகளின் நலன் கருதி சாலையைக் கடப்பதற்கு வசதியாக சுரங்கப்பாதை (Sub-way) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நடப்பு நிதி ஆண்டில் (1997-98) இப்பணியை மேற்கொள்ளும் செயற்குறிப்பு ஏதும் சென்னை மாநகராட்சியில் இல்லை.

**138—**

**செம்மலூர் ஆற்றில் பாலம் கட்டுதல்**

**வினா 11122—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் தொகுதிக்குட்பட்ட பெரும்பாலையிலிருந்து செம்மலூர் செல்லும் சாலையில் செம்மலூர் அருகே ஆற்றில் பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**139—**

**கொல்லங்கோடு கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா 11315—திரு. டி. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முடிவடையும்;

(இ) எப்போது முதல் குடிநீர் விநியோகிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ): உத்தேசமாக மார்ச் 1999-க்குள் முடிக்கப்படும். திட்டப் பணிகள் முடிந்ததும், இக்குடிநீர்த் திட்டம் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

**140—**

**பேரூராட்சிகளை இணைத்து நகராட்சியாக்குதல்**

**வினா 11502—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம், திருநகர், ஹார்விப்பட்டி ஆகிய மூன்று பேரூராட்சிகளையும் இணைத்து நகராட்சியாக அறிவிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**141—**

### சுகாதாரப் பணியாளர் நியமனம்

**வினா 11614—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்ளாட்சித் துறையில் ஒப்பந்த அடிப்படையில் சுகாதாரப் பணியாளர் நியமிப்பதற்கு தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 30-4-1997 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 101-ல் நகராட்சிகளில் துப்புரவுத் பணியாளர்களை நியமனம் செய்வதற்கான அளவுகோல் திருத்தியமைத்து புதிதாகத் தோற்றுவிக்கப்படும் பணியிடங்களில் மாதம் ஒன்றுக்கு ரூ.1000-என்ற தொகுப்பூதியத்தில் துப்புரவுப் பணியாளர்களை நியமனம் செய்யுமாறும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள



தொகுப்பூதியத்தின் அளவு பற்றி பல்வேறு சங்கங்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன. எனவே அரசு இதை மறுபரிசீலனை செய்து வருகிறது.

**142—**

### தொகுப்பு வீடுகள் கட்டுதல்

**வினா 11684—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, ஏர்ரபையனஅள்ளி ஊராட்சி, நெக்குந்தி மற்றும் முத்தப்ப நகர், மேலும் ஏலகிரி ஊராட்சி, எருமைக்கொட்டாயில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பட்டாக்கள் பெறப்பட்டு விண்ணப்பித்திருந்தால் அவ்வப்பொழுது நிதி நிலைமைக்கேற்ப தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகின்றன.

**143—**

### புதிய நீராதாரம் ஏற்படுத்துதல்

**வினா 11858—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், துவாரங்காடு ஊராட்சிக்கு வழங்கப்படும் குடிநீர் உவர் நீராக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய நீராதாரம் ஏற்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம். கீழப்பாவூர் ஒன்றியம், துவாரங்காடு குடியிருப்பில் தற்பொழுது செயல்பட்டுவரும் குடிநீர்த் திட்டம் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டது. இக்குடிநீர் உவர் நீராக உள்ளது. இக்குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் (1997-98) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் விசைப்பம்புத் திட்டம் செயல்படுத்த ரூ.7.62 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

**144—**

**ஒன்றியங்களைப் பிரித்தல்**

**வினா 12118—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம் 33 ஊராட்சிகளையும் இரண்டு பேரூராட்சிகளையும் உள்ளடக்கியுள்ளதால் இதை இரண்டு ஒன்றியங்களாகப் பிரித்துச் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம் ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.



**145—**

**சென்னை மாநகராட்சி துப்புரவுப் பணியில் தனியாரை ஈடுபடுத்துதல்**

**வினா 12408—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி துப்புரவுப் பணியில் தனியாரை ஈடுபடுத்தும் முயற்சிக்குக் கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைக் கைவிடும் கொள்கை அறிவிப்பை அரசு வெளியிடுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னை மாநகராட்சி துப்புரவுப் பணியில் தனியாரை ஈடுபடுத்தும் முயற்சிக்கு சென்னை அண்ணா பொதுப் பணியாளர்கள் சங்கம் தவிர எந்தச் சங்கத்திடமிருந்தும் எதிர்ப்பு இல்லை.

**146—**

**ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்**

**வினா 12579—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட ஆண்டிக்கொட்டாய் அருகேயுள்ள ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இது துறையின் ஆய்வில் உள்ளது.

147—

**குற்றாலம் பேரூராட்சியில் குடிநீர் வசதி**

**வினா 12712—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பேரூராட்சி குடிநீர்த் திட்டத்திற்கு தற்போது குடிநீர் எடுக்கப்பட்டு வரும் இடத்தில் குடிநீர் மாசுபடுவதால் செண்பகாதேவி அருவியிலிருந்து நேரடியாகக் குடிநீர் எடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது

148—

**இணைப்புச் சாலை அமைத்தல்**

**வினா 12868—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை, தனிப் பேரூராட்சியில் கழிவு நீர்ப் பாதையிலும், பாலாற்றிலும் பாலம் கட்டி பொன்னாலம்மன் சோலையை இணைக்கும் இணைப்புச் சாலை அமைக்க அரசிற்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?





விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

149—

**வேளாண்மை வளங்களை உருவாக்குதல்**

**வினா 13040—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக் குடிநீர் வாரியம் மூலம் கழிவு நீரைச் சுத்திகரித்து வேளாண்மை வளங்களை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம். சென்னைக் குடிநீர் வாரியம் ஏற்கெனவே இதனைச் செய்து வருகிறது.

(ஆ) சென்னை நகரில் கொடுங்கையூர், கோயம்பேடு மற்றும் நெசப்பாக்கத்தில் சென்னைக் குடிநீர் வாரியத்திற்குச் சொந்தமான நிலப்பரப்பில் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரில் ஒரு பகுதியைப் பயன்படுத்தி மரக் காடுகள் உருவாக்கப்பட்டுள்ளது. வில்லிவாக்கம் சுத்திகரிப்பு நிலையத்தில் மீன் வளர்க்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது.

150—

**சமுதாய நலக்கூடம் கட்டுதல்**

**வினா 13041—திரு. எஸ். வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, வள்ளியூரில் சுப்பிரமணிய சுவாமி கோயில் அருகில் சமுதாய நலக்கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நாங்குநேரி தொகுதி, வள்ளியூரில் சுப்பிரமணிய சுவாமி கோயில் அருகில் சமுதாய நலக்கூடம் கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**151—**

**களக்காடு பேரூராட்சியில் சமுதாய நலக்கூடம்**

**வினா 13043—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு பேரூராட்சி 2-வது வார்டுக்கு சமுதாய நலக்கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு பேரூராட்சி, 2-வது வார்டுக்கு சமுதாய நலக்கூடம் கட்ட திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1998 மே 30]

**152—**

**கிராமங்களில் மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா 13942—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, கல்லேரி, வன்னியநகரம், விருதுவிளங்கினான், காடகமான், மயிலாடும்பாறை, பொறிக்கல், பவித்திரம் ஆகிய கிராமங்களில் மின்விளக்கு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தண்டராம்பட்டு தொகுதி, கல்லேரி, வன்னியநகரம், விருதுவிளங்கினான், காடகமான், மயிலாடும்பாறை, பொறிக்கல், பவித்திரம் ஆகிய கிராமங்களில் தற்போது போதுமான தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

**153—**

**வண்டிகளில் சிற்றுண்டிகள் விற்பதைத் தடுத்தல்**

**வினா 14292—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் இரவு நேரங்களில் சாலை ஓரங்களில் வண்டிகளில் சிற்றுண்டிகள் விற்பனை செய்யப்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நகர சுகாதாரத்தைக் காக்கின்ற வகையில் அந்தச் சிற்றுண்டிகள் விற்பனை செய்வதை முழுவதுமாகத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னை மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடமாடும் உணவு விடுதிகள் நடத்த சென்னை மாநகராட்சியால் உரிமம் 1995-96 ஆம் ஆண்டுவரை வழங்கப்பட்டது. அதன் பிறகு உணவகங்கள் பொதுமக்களுக்கும் பொதுச் சுகாதாரத்திற்கும் இடையூறாக இருப்பதால் புதியதாக நடமாடும் உணவகங்கள் நடத்த உரிமம் வழங்குவதையும், புதுப்பித்தலையும் சென்னை மாநகராட்சி நிறுத்தி வைத்துள்ளது.

**154—**

**சென்னை, பெரம்பூர் தொகுதியில் பாதாளச் சாக்கடை வசதி**

**வினா 14405—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, பெரம்பூர் தொகுதி, வியாசர்பாடியில் பாதாளச் சாக்கடை வசதியில்லாத பல குடிசைப் பகுதிகளுக்கு ஆதி-ஆந்திரா திட்டம் மற்றும் ஹட்கோ திட்டத்தின்கீழ் நிதி உதவியோடு புதிய இணைப்புகள் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை, பெரம்பூர் தொகுதி, வியாசர்பாடி பகுதியில் கழிவு நீர் வசதியில்லாத பல குடிசைப் பகுதிகளுக்கு கழிவு நீர் அகற்றும் வசதி செய்வதற்காக ஆதி-ஆந்திரா திட்டம் மற்றும் ஹட்கோ நிதியுதவியோடு சென்னைக் குடிநீர் வாரியம் கழிவு நீர்க் குழாய்கள் பதிக்கும் பணிகளைப் பெரும்பாலும் செய்து முடித்துள்ளது. மற்றும் வீடுகளுக்கு கழிவு நீர் இணைப்புகள் வழங்கும் பணிகளுக்கு அரசு முழு மானியம் வழங்க வேண்டும் என்பது குறித்த சென்னைக் குடிநீர் வாரியத்தின் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



1998 மே 30]

**155—**

**கழிவு நீர் அகற்றும் நிலையங்களை விரிவுபடுத்துதல்**

**வினா 14407—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதி, பெரம்பூர் நெடுஞ்சாலையில் எருக்கஞ்சேரி, மேல்பட்டடை ஆகிய கழிவு நீர் அகற்றும் நிலையங்களை விரிவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை நகரில் 16 கழிவு நீர் அகற்றும் நிலையங்களை மேம்படுத்துவதற்காக ரூ.34.29 கோடி மதிப்பீட்டில் திட்டம் ஒன்று திட்டப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடந்து வருகின்றன. இதில் எருக்கஞ்சேரி கழிவு நீர் அகற்றும் நிலையமும் அடங்கும். பணிகள் செப்டம்பர் 1998-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேல்பட்டடை கழிவு நீர் அகற்றும் நிலையத்தை மேம்படுத்துவதற்கான பணி ரூ.181.89 இலட்சம் செலவில் உத்தேசிக்கப்பட்ட மூன்றாவது சென்னைக் குடிநீர் மற்றும் துப்புரவுப் பணித் திட்டத்தில் மேற்கொள்ளப்பட உள்ளது.

**156—**

**இணைப்புப் பாலம் கட்டுதல்**

**வினா 8321—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகப்பேர், கலெக்டர் நகர் ஆகிய பகுதிகளிலிருந்து கோயம்பேடு அங்காடி வளாகம் செல்ல, மதுரவாயல், நெற்குன்றம், நுங்கம்பாக்கம்

[1998 மே 30

வழியாக சென்னை நகருக்குள் நுழையும் கூவம் ஆற்றில் ஒரு இணைப்புப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இப்பாலத்தை அமைக்க இத்துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**157—**

### சாலைப் பராமரிப்புக்கு நிதி

**வினா 8366—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாகன வரி மூலம் தமிழக அரசுக்கு வரும் வரிப் பணத்தை சாலைப் பராமரிப்புக்குச் செலவிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வாகன வரி மூலம் தமிழக அரசுக்கு வரும் வரிப் பணத்தில் 10 சதவீதத்தை தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டு நிதியில் சேர்த்து அந்நிதி முக்கிய ஊரக சாலைகளைப் பராமரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இதனைக் கண்காணிக்கக் குழு ஒன்றும் நெடுஞ்சாலைத் துறைச் செயலரைத் தலைவராகக் கொண்டு செயல்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**158—**

### மேம்பாலம் அமைக்கும் திட்டம்

**வினா 8424—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) ஈரோடு மாவட்டம், ஊத்துக்குளி-திருப்பூர் சாலையில் திம்மநாயக்கன்பாளையம் இரயில்வே கடவின் அருகில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஈரோடு மாவட்டம்-ஊத்துக்குளி திருப்பூர் சாலையில் திம்மநாயக்கன்பாளையம் இரயில்வே கடவின் அருகே மேம்பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**159—**

### இரயில்வே மேம்பாலம் அமைத்தல்

**வினா 8498—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை-விருத்தாசலம் சாலையில், இருப்புப்பாதை கடவின் அருகில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அப்பணி துவங்கும்?

விடை—

**மாண்புமிகு பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): உளுந்தூர்பேட்டை-விருத்தாசலம் சாலையில், இருப்புப்பாதை கடவின் அருகே இரயில்வே மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

[1998 மே 30

160—

இருப்புப்பாதை கடவில் மேம்பாலம்

**வினா 8499—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) என்.எச்.45-ல் விழுப்புரம்-உளுந்தூர்பேட்டை சாலையில் இருப்புப்பாதை கடவின் அருகே இரயில்வே மேம்பாலம் அமைக்க மாநில அரசு மத்திய அரசைக் கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசு, மேற்கண்ட இரண்டு மேம்பாலங்கள் அமைக்கும் பணிகள் உலக வங்கித் திட்டக் கடன் உதவி III-ன்கீழ் விழுப்புரம்-திருச்சி தேசிய நெடுஞ்சாலை-45 பகுதியை நான்கு வழிச்சாலை வேலையுடன் சேர்த்து செய்யும்பொருட்டு, தேசிய நெடுஞ்சாலைக் குழுமம் (என்எச்ஏஐ), புதுடில்லி என்ற மைய அரசு நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

161—

இருவழிச் சாலையாக்குதல்

**வினா 8515—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலத்திலிருந்து பழைய குற்றாலம் வழியாக மத்தளம் பாறை செல்லும் சாலையை இருவழிச் சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது விரிவுபடுத்தப்படும்?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசின் நிதி நெருக்கடி காரணமாக இப்பணிகளை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

162—

கொள்ளிடம் ஆற்றில் பாலம் கட்டுதல்

**வினா 8746—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை வட்டம், மணல்மேடு பாப்பாக்குடியையும், வள்ளலார் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், முட்டத்தையும் இணைக்க கொள்ளிடம் ஆற்றில் பாலம் கட்டும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இல்லை.

163—

சென்னையிலிருந்து திருவள்ளூர் வரை இருவழிச்சாலை

**வினா 8819—திரு. ஜெ.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை-திருப்பதி நெடுஞ்சாலையில், சென்னையிலிருந்து திருவள்ளூர் வரை இருவழிச்சாலையாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் பணி தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இப்பணி விரைவில் தொடங்கப்படும்.

**164—**

**சாலையை அகலப்படுத்தி இருவழிச் சாலை அமைத்தல்**

**வினா 9947—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், பெரியகுளம் நகரத்திலிருந்து வடுகபட்டி, மேல்மங்கலம், ஜெயமங்கலம் வழியாக சுற்றுலா மையமாக ஆண்டிப்பட்டி ஒன்றியம் வைகை அணை முகப்பு வரையிலான சாலையை அகலப்படுத்தி இருவழிப் பாதையாக அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

தேனி மாவட்டம், பெரியகுளம் நகரத்திலிருந்து ஜெயமங்கலம் வழியாக வைகை அணை முகப்பு வரையிலான சாலையை இருவழிப்பாதையாக அமைக்கும் பணியை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் வாய்ப்புகள் இல்லை.

**165—**

**இணைப்புச் சாலை அமைத்தல்**

**வினா 9949—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதி, கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை ஒன்றியம், வருசநாடு கிராமத்திலிருந்து கம்பத்து பொட்டை, காமாட்சிபுரம், கோகிலாபுரம் மற்றும் பிள்ளைக்கல் அணை வழியாக இராசபாளையத்திற்கு இணைப்புச் சாலை அமைக்கும் பணி ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அந்தப் பணி துவங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வினாவில் கண்டுள்ள சாலையானது ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். மேற்படி சாலையை பகுதி - 2 திட்டத்தின்கீழ் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

**166—**

**வராக நதியின் குறுக்கே பாலம் கட்டுதல்**

**வினா 9951—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், பெரியகுளம் ஒன்றியம், ஜெயமங்கலத்தினையும் பொம்மிநாயக்கன்பட்டி உள்ளிட்ட 10 கிராமங்களையும் இணைக்கும் வகையில் சிந்துவம்பட்டியில் வராக நதியின் குறுக்கே பாலம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

தேனி மாவட்டம், பெரியகுளம் ஒன்றியம் ஜெயமங்கலத்தினையும் மற்றும் பல கிராமங்களையும் இணைக்கும் வகையில் சிந்துவம்பட்டியில் வராகநதியின் குறுக்கே பாலம் அமைக்கும் பணியினை அண்மைக் காலத்தில் மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை.

[1998 மே 30

167—

### வைகை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

**வினா 9953—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றியம், டி. அணைக்கரைப்பட்டிக்கும் பெரியகுளம் ஒன்றியம் குள்ளப்புரத்திற்கும் இடையில் வைகை ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றியம் டி. அணைக்கரைப்பட்டிக்கும், பெரியகுளம் ஒன்றியம் குள்ளப்புரத்திற்கும் இடையில் வைகை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணியை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை.

168—

### ஆத்தங்கரைப்பட்டி ஆற்றின் குறுக்கே பாலம்

**வினா 9954—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், கடமலைக் குண்டு, மயிலாடும்பாறை ஒன்றியத்தில் ஆத்தங்கரைப்பட்டி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

தேனி மாவட்டம், மயிலாடும்பாறை ஒன்றியத்தில் ஆத்தங்கரைப்பட்டி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கப்பட வேண்டிய சாலை அரசு சாலை அல்லாததால் இப்பணியை நெடுஞ்சாலைத் துறையின் மூலம் மேற்கொள்ள இயலாது.



1998 மே 30]

169—

### அரசலாற்றின் குறுக்கே பாலம்

**வினா 10026—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு-கும்பகோணம் செல்லும் சாலையில் உள்ள திருமண்டங்குடி சர்க்கரை ஆலைக்கும் தஞ்சை-கும்பகோணம் செல்லும் சாலையில் உள்ள சுந்தரப்பெருமாள் கோயில் இடையே உள்ள காவிரி, அரசலாற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

170—

### உதவிப் பொறியாளர் பணியிடங்கள் நிரப்பப்படுதல்

**வினா 10037—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நெடுஞ்சாலைத் துறை உதவிப் பொறியாளர் பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டும், இதுவரை அப்பணியிடங்கள் நிரப்பப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பணியிடங்களை விரைவில் நிரப்ப உரிய நடவடிக்கை அரசு மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தற்போது நிரப்பப்பட்டு விட்டது.

171—

**தண்டரைக்குப் பேருந்துகள் இயக்குதல்**

**வினா 10103—திரு. டி. சுதர்சனம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூவிருந்தவல்லி தொகுதியில் பட்டாபிராம்-பூந்தமல்லி சாலையில் கூவம் ஆற்றுக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ள மேம்பாலம் பணி முடிக்கப்பட்டு பேருந்துகள் தண்டரைக்குச் செல்ல உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

பாலப் பணி முடிக்கப்பட்டு, போக்குவரத்து நடைபெற்று வருகின்றது.

172—

**பழுதடைந்துள்ள பாலத்தைப் புதுப்பித்தல்**

**வினா 10527—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் பாலாற்றில் பழுதடைந்துள்ள பழைய பாலத்தைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள பழுதடைந்த பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் 1975-ல் கட்டப்பட்டு போக்குவரத்து நடைபெறுவதால், பழைய பாலத்தைப் புதுப்பிக்க வாய்ப்புகள் இல்லை.



173—

**தேசிய நெடுஞ்சாலையாக நீட்டிப்பு**

**வினா 10532—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை-திருச்சி தே.நெ.எண் 45-சாலையுடன் திருச்சி-மேலூர்-மதுரை மாநிலச் சாலையினை தேசிய நெடுஞ்சாலையாக நீட்டிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

திருச்சி-மேலூர்-மதுரை மாநிலச் சாலையினை தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தி தேசிய நெடுஞ்சாலை எண் 45 பி-யாக பெயர் சூட்டலாம் என்ற இவ்வரசின் கருத்து மைய அரசிற்கு தெரிவிக்கப்பட்டு மைய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

174—

**சாலையை அகலப்படுத்தும் திட்டம்**

**வினா 10605—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, திருவண்ணாமலை-வானாபுரம் வழியே மூங்கில்துறைப்பட்டு வரையில் நெடுஞ்சாலைத்துறைக்குச் சொந்தமான சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

175—

**இருவழிப் பாதையாக விரிவுபடுத்துதல்**

**வினா 11118—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதிக்குட்பட்ட ஒகேனக்கல் ஒருசிறந்த சுற்றுலா மையமாக இருப்பதால் பென்னாகரம்-ஒகேனக்கல் செல்லும் சாலையை இருவழிப்பாதையாக விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

அரசு நிதி நெருக்கடி காரணமாக வினாவில் குறிப்பிட்டுள்ள சாலைப் பணியை அண்மைக்காலங்களில் மேற்கொள்ளும் வாய்ப்புகள் இல்லை.

176—

**கரை பாலத்தை அகலப்படுத்துதல்**

**வினா 11309—திரு. டி. மணி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், களியல் கிராமத்தில் சிற்றாற்றின் கரை பாலத்தை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?





விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பணி அரசால் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. அரசின் நிதி நெருக்கடி காரணமாக இப்பணியை அண்மைக் காலங்களில் எடுத்துச் செய்யும் சாத்தியக்கூறுகள் இல்லை.

177—

**புறவழிச் சாலை அமைத்தல்**

**வினா 11399—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் நகரத்தைச் சுற்றி, புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : முதல் கட்டப்பணி முடிவடைந்து விட்டது. இரண்டாம் கட்டப்பணி தனியார் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டவுடன் தொடங்கப்படும்.

178—

**தென்காசியில் புறவழிச் சாலை அமைத்தல்**

**வினா 12036—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

**179—**

**கலங்கரை விளக்கம் அமைத்தல்**

**வினா 12624—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் அடைக்கலபத்தேவன் கடற்கரையில் புதியக் கலங்கரை விளக்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**180—**

**பாலத்தை விரைவில் கட்டி முடிக்க நடவடிக்கை**

**வினா 12892—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை-சாம்பவர் வடகரை சாலையில் ஹரிகரா நதி குறுக்கே (கி.மீ. 0/4) தமிழ்நாடு



கட்டுமானக் கழகம் மூலம் கட்ட உத்தேசித்துள்ள பாலத்தை விரைவில் முடித்துக் கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சுமார் ஓராண்டு கால அளவிற்குள் கட்டி முடிக்கப்படும்.

**181—**

**சீர்காழி நகரில் புறவழிச் சாலை**

**வினா 13153—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியிலுள்ள சீர்காழி நகரை ஒட்டி புறவழிச் சாலை (பைபாஸ் ரோடு) அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைப் பணி தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. முன் தெரிவு ஆய்வின் முடிவின் அடிப்படையில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**182—**

**அனுமன் நதியின் குறுக்கே பாலம்**

**வினா 13163—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம் இடையத்தவணைக்கும் தாயார்தோப்பு ஊருக்கும் இடையே அனுமன் நதியின் குறுக்கே பாலம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

**183—**

**பழுதடைந்த பாலத்தைப் புதுப்பித்தல்**

**வினா 13222—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், கீவளூர் வட்டம், கீழையூர் ஒன்றியம் 37வது வட்டம் சோழவித்தியாபுரம் ஊராட்சியில் வெள்ளையாற்றின் குறுக்கே உள்ள பாலம் பழுதடைந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) இப்பாலம் தற்பொழுது பழுதடைந்த நிலையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**184—**

**சாலையை மேம்படுத்தும் திட்டம்**

**வினா 13223—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், கீழையூர் ஒன்றியம் மேலவாழக்கரைராமன் கோட்டகம் சாலையை மேம்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலவாழக்கரைராமன் கோட்டகம் சாலை மேம்பாட்டுப் பணியை நபார்டு வங்கி உதவி நிதித் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**185—**

**கடல்சார் வாரியம் அமைத்தல்**

**வினா 13512—திரு. பெ.க. திருவேங்கடம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு "கடல்சார் வாரியத்தை" அமைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டம், 1995 (தமிழ்நாடு சட்டம் 4/96)-ன்கீழ் அரசாணை (நிலை) எண் 74, போக்குவரத்துத் துறை, நாள் 18-3-1997-ல் மேற்படிச் சட்டம் அமலாக்கம் செய்யப்பட்டு அரசாணை (நிலை) எண் 75, போக்குவரத்துத் துறை, நாள் 18-3-1997-ன் வாயிலாக தமிழ்நாடு கடல்சார் வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது.

(ஆ) தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை ஆட்சி செய்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் போன்றவை இக்கடல்சார்

வாரியத்தின் முக்கியப் பணிகளாகும். இந்நாள்வரை இவ்வாரியத்தில் ஆறு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இக்கூட்டங்களில் இத்துறைமுகங்களின் வளர்ச்சிப் பணிகள் குறித்து சிறந்த முறையில் விவாதிக்கப்பட்டுள்ளன.

**186—**

**படகுப் போக்குவரத்துத் திட்டம்**

**வினா 13513—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு சென்னை-கடலூர் இடையே படகுப் போக்குவரத்துத் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தனியார் பங்கேற்பின் மூலம் சென்னை கடலூருக்கு இடையே அதிவேகப் பயணிகள் போக்குவரத்தினை மேற்கொள்ள இவ்வரசால் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) தனியார் நிறுவனங்களிடமிருந்து சென்னை-கடலூருக்கு இடையே அதிவேகப் பயணிகள் படகுப் போக்குவரத்தினை மேற்கொள்வது தொடர்பான செயற்குறிப்புகளை வரவேற்று தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் மூலம் பத்திரிகைகளின் வாயிலாக விளம்பரம் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து நான்கு நிறுவனங்களிடமிருந்து செயற்குறிப்புகள் பெறப்பட்டுள்ளன. இச்செயற்குறிப்புகளைத் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தொழில் நுட்பம் மற்றும் பொருளாதாரக் குழுக்களின் வாயிலாக மதிப்பீட்டு ஆய்வு மேற்கொள்ள இரு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 27-2-1998 அன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தில், சென்னைக்கும் கடலூருக்குமிடையே வேகப்படகு மூலம்



பயணிகள் போக்குவரத்தினை நடத்திட தனியார் நிறுவனங்களை அனுமதிக்கும் திட்டம் குறித்த மதிப்பாய்வு அறிக்கையைப் பரிசீலனை செய்ததில் சென்னைக்கும் கடலூருக்குமிடையே வேகப் படகு மூலம் பயணிகள் போக்குவரத்தினை திருவாளர் மெரைன் கன்சல்டன்ஸ் & சர்வேயர்ஸ் (பிரைவேட்) லிமிடெட், சென்னை, திருவாளர் காந்தி வெங்கடபதி என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட், சென்னை மற்றும் திருவாளர் கிரியல் ஷிப்பிங் கம்பெனி, சென்னை ஆகிய மூன்று நிறுவனங்களும் நடத்திட அனுமதிக்கலாமென முடிவெடுக்கப்பட்டது.

**187—**

**சுரங்கப் பாதை அமைத்தல்**

**வினா 13772—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, அம்பேத்கர் சட்டக் கல்லூரிக்கு எதிரே போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதால் சுரங்கப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணிகள் துவக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

**188—**

**புதிய பாலம் கட்டுதல்**

**வினா 15594—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டணம் ஊராட்சி ஒன்றியத்தில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பண்ணந்தூர்-அரசம்பட்டி ஊராட்சிகளை

இணைக்கும் பொருட்டு புதியப் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் திட்டம் தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**189—**

**சிலைகள் கடத்தலைத் தடுத்தல்**

**வினா 2987—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் கோவில்களிலிருந்து திருடிச் சென்ற சிலைகள், சிற்பங்கள் வெளிநாட்டிற்குக் கடத்திச் செல்வதைத் தடுக்கவும், கடத்திச் சென்றதை மீட்கவும் அரசு எடுத்து வரும் நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

தமிழ் நாட்டில் உள்ள திருக்கோயில்களில் களவு நடப்பதைத் தடுக்கவும், சிலைகள், சிற்பங்கள் கடத்திச் செல்லப்பட்டவற்றை மீட்கவும், அனைத்துத் திருக்கோயில் நிர்வாகிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டும், ஒவ்வொரு ஊரிலும் விக்ரகங்கள் உள்ள திருக்கோயில்களுக்கு அருகில் வாழும் மக்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்க ஒவ்வொரு மாவட்ட ஆட்சியருக்கும் அறிவுரை வழங்கப்பட்டும், முதுநிலைத் திருக்கோயில்களில், முன்னாள் படை வீரர்களைக் கொண்ட பாதுகாப்புப் படை நிறுவப்பட்டும், எல்காட் நிறுவனம் மூலம் திருக்கோயில்களில் கள்வர் எச்சரிக்கை மணி பொறுத்தப்பட்டும், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டக் காவல் துறை கண்காணிப்பு அலுவலர் நடத்தும் சிராய்வுக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட மாவட்ட இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் தவறாது கலந்து கொண்டு அக்கூட்டத்தில் இது பற்றி விவாதித்து முடிவு எடுக்கவும், அறிவுறுத்தப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அலுவலகத்தில் ஒரு காவல் துறை கண்காணிப்பாளரையும் மூன்று காவல் துறை ஆய்வாளர்களையும் கொண்ட ஒரு தனி காவல் பிரிவு அமைக்கப்பட்டும், இக்குழுவின் மூலமாக மாநிலம் முழுவதும் நடைபெறும் திருக்கோயில் களவு நிகழ்ச்சிகள், சம்பந்தப்பட்ட காவல் நிலைய அதிகாரிகளுடன் இணைந்து செயல்பட்டு, இக்களவுகளை கண்டுபிடிக்க துரித நடவடிக்கை எடுக்கவும், ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிலைகள், சிற்பங்கள் கடத்திச் செல்வதை மீட்கவும், இதற்கெனத் தனியாக காவல் துறையில் சிறப்புப் பிரிவு ஒன்றினை ஏற்படுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





**190—**

**இராஜகோபுரம் கட்ட நிதி உதவி**

**வினா 3671—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அருள்மிகு நஞ்சுண்டேஸ்வரர் ஆலயத்திற்கு இராஜகோபுரம் கட்ட அரசு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு அரசு நிதி உதவி அளிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இத்திருக்கோயிலின் 5 நிலை இராஜகோபுரம் கட்டும் பணியை முழுவதுமாகவே உபய வேலையாகச் செய்ய, ரூ. 18 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரால் அங்கீகரிக்கப்பட்டு,

இப்பணியை உபயதாரர் சஷ்டி குழுவினர் மூலமாகச் செய்து முடிக்க, திருக்கோயில் செயல் அலுவலருக்கு அனுமதி வழங்கப்பட்டு, திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. எனவே, இத்திருப்பணிக்கு அரசு நிதி வழங்கப்படவில்லை.

**191—**

**தமிழ் மறைகளைக் கற்றுக் கொடுத்தல்**

**வினா 3926—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேத ஆகமக் கல்லூரியில் தமிழ் மறைகளைக் கற்றுக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

வேத ஆகமக் கல்லூரியின் பாடத் திட்டத்தினைத் தேர்வு செய்யும்போது, தேவாரம், திருவாசகம், திருமந்திரம் ஆகிய சைவ சமய நூல்களையும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், திருவாய்மொழி ஆகிய வைணவ சமய நூல்களையும் பாடத் திட்டத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**192—**

**வழிபாட்டுத் தலங்களில் சுகாதார ஆய்வாளர் நியமனம்**

**வினா 4321—திரு. மு.க. ஸ்டாலின்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள முக்கிய வழிபாட்டுத் தலங்களில், சுகாதார ஆய்வாளரை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு ஏதுமில்லை.

**193—**

**பழனியில் பல்கலைக்கழகம்**

**வினா 7229—திரு. த. பூவேந்தன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், பழனியில் இந்து சமய அறநிலையத் துறை மூலம் ஒரு பல்கலைக்கழகம் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**194—**

**தமிழ் மாமுனிவர் மங்கலங்கிழாரின் நூற்றாண்டு நிறைவு விழா**

**வினா 7855—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடக்கெல்லைத் தந்தை, தமிழ் மாமுனிவர் மங்கலங்கிழாரின் நூற்றாண்டு நிறைவு விழாவினை நடத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

இல்லை.

**195—**

**திரு.வி.க. படைப்புகளை அரசுடைமையாக்குதல்**

**வினா 8646—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணவழகர் திரு. வி. கல்யாணசுந்தரனார் அவர்களுடைய படைப்புகளை அரசுடைமையாக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

இல்லை.

**196—**

**இசைப்பள்ளி தொடங்குதல்**

**வினா 8722—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் இசைப் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் அரசு இசைப் பள்ளி தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.



**197—**

**விராலிமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் தேரை ஓட்டுதல்**

**வினா 11131—திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, விராலிமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்த் தேரை ஓட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

திருக்கோயிலுக்குப் புதிதாகத் தேர் ஒன்று செய்து, வழக்கம்போல் தேர் ஓட்டம் நடைபெற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**198—**

**அறங்காவலர்கள் நியமனம்**

**வினா 11795—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறநிலையக் கட்டுப்பாட்டின்கீழ் வரும் கோயில்களுக்கு ஒழுக்கம், நன்னடத்தை, தெய்வ நம்பிக்கை உடையவர்களை மட்டுமே கோயில் அறங்காவலர்களாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

இந்து சமய அறநிலைய சட்ட விதிகளின்படி, அறநிலைய கட்டுப்பாட்டின்கீழ் வரும் கோயில்களுக்கு ஒழுக்கம், நன்னடத்தை தெய்வநம்பிக்கை உடையவர்கள் மட்டுமே கோயில் அறங்காவலர்களாக அரசால் நியமிக்கப்படுகிறார்கள்.

**199—**

**மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி தொடங்குதல்**

**வினா 13115—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் சுயநிதியிலிருந்து மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**200—**

**இலஞ்சி குமாரர் கோயிலைப் புதுப்பித்தல்**

**வினா 14281—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், இலஞ்சி குமாரர் கோயில் பல ஆண்டுகளாகப் பராமரிப்பின்றி இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் செய்து முடிக்கப்பட்டு 15-9-1986 ஆம் வருடம் குடமுழுக்கு நடைபெற்றது. நிதி வசதி இல்லாத காரணத்தால் இதர மராமத்து வேலைகள் செய்யப்பட வேண்டிய நிலை உள்ளது. திருக்கோயிலின் மின் இணைப்பு பழுதுபட்டு மின் இணைப்பு வேலைகள் உபயதாரர் மூலம் உபயமாக செய்து முடிக்கப்பட்டுள்ளது. பிற மராமத்துப் பணிகளை உபயதாரர்களைத் தொடர்பு கொண்டு செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திருக்கோயில் தற்போது நல்ல முறையில் பராமரிக்கப்பட்டுள்ளது.

## பதினான்காம் பட்டியல்

**1—**

**கண்டியப்பேரி மருத்துவமனையை திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையோடு இணைத்தல்**

**வினா 60—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாநகராட்சி நடத்தி வரும் கண்டியப்பேரி பா.ராமசாமி மருத்துவமனையை பாளையங்கோட்டையிலுள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையோடு இணைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இது தொடர்பாக மருத்துவக் கல்வி இயக்குநர் சமர்ப்பித்துள்ள செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

**2—**

**மயிலாடுதுறை மருத்துவமனையை நவீனப்படுத்துதல்**

**வினா 632—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை அரசினர் மருத்துவமனையில் இடநெருக்கடி அதிகமாக இருப்பதால் அதனை விரிவுபடுத்துவதற்கும், நவீனப்படுத்துவதற்கும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை அரசினர் மருத்துவமனையில் இட நெருக்கடி அதிகமாக இருப்பதால் அதனை விரிவுபடுத்தவும் நவீனப்படுத்தவும் ரூ. 9.90 இலட்சம் செலவில் 6 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு ஒன்று கட்ட அரசாணை 2(டி) எண் 57 (சு) நாள் 13-6-1997 ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் 48 படுக்கைகள் கொண்ட உள்நோயாளிகள் பிரிவு ஒன்று கட்டுவதற்கு, 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் சேர்க்கப்பட்டு இதற்கு மாநில திட்டக் குழு பரிந்துரை செய்துள்ளது.

மேலும் இம்மருத்துவமனையில் நவீன வசதிகளுடன் கூடிய புற நோயாளிகள் பகுதி ஒன்று ரூ. 60.00 இலட்சம் செலவில் கட்டுவதற்கு அரசாணை நிலை எண் 62 (சு), நாள் 6-2-1998-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.





**3—**

**தெரு விளக்குகள் பராமரிப்பு**

**வினா 848—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சியில் தெரு விளக்குப் பராமரிப்பை மின் வாரியத்திடமிருந்து திரும்பவும் மாநகராட்சி வசமே ஒப்படைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாநகராட்சியின் தெருவிளக்குப் பராமரிக்கும் பணி மாநகராட்சியிடம்தான் உள்ளது. இருப்பினும் மாநகராட்சியின் தெரு விளக்குப் பராமரிக்கும் பணியை மேற்கொள்ளத் தேவையான பணியாளர்கள் மாநகராட்சியில் தற்போது இல்லாததால், தமிழ்நாடு மின்சார வாரியம் தற்காலிகமாக அந்தப் பணியை மேற்கொண்டு வருகிறது.

**4—**

**தக்கலையில் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்துதல்**

**வினா 945—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலையில் உள்ள அரசு மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை அறை மற்றும் ஜெனரேட்டர் அமைத்துத் தரவும், படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், கூடுதல் கட்டடம் கட்டித் தரவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை அரசு மருத்துவமனையில் தற்போது சிறிய அளவிலான அறுவைச் சிகிச்சை அறை ஒன்று செயல்பட்டு வருகிறது. இதற்குப் போதுமான அளவில் குறைந்த திறனுடைய ஜெனரேட்டர் உபயோகத்தில் உள்ளது. தற்போது 96 படுக்கைகள் உள்ளன. தேவையெனில் அம்மருத்துவமனையில் படுக்கை எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் கூடுதல் கட்டடம் கட்டித் தரவும் தக்க சமயத்தில் பரிசீலிக்கப்படும்.

**5—**

**குழித்துறை அரசு மருத்துவமனையை விரிவுபடுத்துதல்**

**வினா 1071—திரு. டி. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை அரசு மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதிகளைக் கொண்ட புதியக் கட்டடம் கட்ட அரசுக்கு ஏதேனும் பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இந்தப் பணி ஆரம்பிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை அரசு மருத்துவமனையில் தற்போது 42 படுக்கைகள் உள்ளன. படுக்கை எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்திக் கட்டடம் கட்டுவது அவசியமெனில் அது இவ்வாண்டு பகுதி-2 திட்டத்தில் பரிசீலிக்கப்படும்.

(ஆ) பணி ஆரம்பிப்பது, ஏற்கப்பட்ட பின்னரே ஆகும்.

**6—**

**கீரிப்பாறை மருத்துவமனைக்குக் கூடுதல் வசதி**

**வினா 1207—திரு. டி. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





அரசுக்குச் சொந்தமான கீரிப்பாறையிலுள்ள ரப்பர் தோட்டத்தில் அமைந்துள்ள மருத்துவமனையில் தேவையான மருந்துகள் வழங்கவும், மருத்துவர்கள் நியமனம் செய்யவும் அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அரசுக்குச் சொந்தமான கீரிப்பாறையில் உள்ள ரப்பர் தோட்டத்தில் அமைந்துள்ள மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துகள் வழங்கப்பட்டு வருவதுடன் தேவையான மருத்துவரும் பணியில் உள்ளார்.

**7—**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா 1979—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், திருவில்லிப்புத்தூர் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியம், சுந்தரபாண்டியம் பேரூராட்சி எ. நத்தம்பட்டி கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க ரூ. 10,000, தலா 5 ஏக்கர் நிலமும் அரசிடம் கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஆரம்பச் சுகாதார நிலையம் எப்பொழுது முதல் செயல்படும்?

விடை—

**மாண்.,மிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) நத்தம்பட்டி கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடம் கட்ட 3 ஏக்கர் 40 சென்ட் நிலமும் 10,000 ரூபாய் நன்கொடையும் பொதுமக்கள் செலுத்தியுள்ளார்கள்.

(ஆ) 1996-97 ஆம் ஆண்டில் இந்த நிலையத்துக்குக் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்படும். கட்டடம் முடிந்ததும் புதியக்

[1998 மே 30

கட்டடத்தில் செயல்படத் துவங்கும். அதுவரை தற்போதுள்ள ஊராட்சி ஒன்றியக் கட்டடத்தில் தொடர்ந்து செயல்படும்.

8—

**கிராம செவிலியர்களுக்கு 'மொபெட்' வழங்குதல்**

**வினா 1971—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் கிராமப்புறங்களில் வேலை பார்க்கும் கிராம செவிலியர்களுக்கு மொபெட் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : தமிழ் நாட்டில் கிராமப்புறங்களில் வேலை பார்க்கும் கிராமச் சுகாதார செவிலியர்கள் மொபெட் வாங்க ஏதுவாக 1996-97 ஆம் ஆண்டிற்கு அரசு ஆணை (நிலை) எண் 478, சுகாதாரம், நாள் 23-9-1996-ல் ரூ. 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

9—

**அரசு மருத்துவமனை தொடங்குதல்**

**வினா 2303—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி பாப்பிரெட்டிப்பட்டியில் அரசு மருத்துவமனை தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் தொடங்கப்படுமா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசு, 1997-98-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் பாப்பிரெட்டிப்பட்டியில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி ஆணை பிறப்பித்துள்ளது.

10—

**மருத்துவமனைகளுக்கு மருத்துவத் தளவாடங்கள்**

**வினா 2366—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சியில் புதிதாக இந்திய மக்கள் தொகை திட்டம்-5ன் கீழ் கட்டப்பட்ட மூன்று மருத்துவமனைகளுக்கு, மருத்துவத் தளவாடங்கள் வாங்க ஒதுக்கப்பட்ட பணம் பயன்படுத்தப்படாததை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சியில் (கஸ்பா) தலைமையிடத்தில் அமைந்துள்ள 10 படுக்கை வசதிகளுடன் கூடிய மகப்பேறு மருத்துவமனைக்கு மருத்துவத் தளவாடங்கள் வாங்குவதற்காக ரூ. 1 லட்சம், 5-வது இந்திய மக்கள் தொகைத் திட்டத்தின்கீழ் நகராட்சி ஆணையருக்கு வழங்கப்பட்டு மருத்துவத் தளவாடங்கள் தற்போது வாங்கப்பட்டுவிட்டன.

11—

**அரசு மருத்துவமனை அமைத்தல்**

**வினா 2370—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) தென்காசி வட்டம், சுரண்டையில் படுக்கை வசதியுடன் கூடிய அரசு மருத்துவமனை ஒன்று அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தென்காசி வட்டம், சுரண்டையில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. தற்போதைக்கு அதுவே போதுமானதாகும். எனவே படுக்கை வசதியுடன் கூடிய அரசு மருத்துவமனை அமைக்க வேண்டியதில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

12—

### புதிய மருத்துவப் பிரிவுகள் ஆரம்பித்தல்

**வினா 2603—திரு. வ. வேலுசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் அதிக நோயாளிகள் வருவதால், பாலரெங்காபுரம் அரசு மருத்துவமனையில் மேலும் ஐந்து புதிய மருத்துவப் பிரிவுகள் (New Units) ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1998 மே 30]

13—

### மருத்துவமனையின் தகுதியை உயர்த்துதல்

**வினா 3243—திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்ட மருத்துவமனையின் தகுதியை உயர்த்தி அறுவை சிகிச்சை, பொது மருத்துவம், மகப்பேறு, காது, மூக்கு, தொண்டை, கண், பல், தோல் போன்ற சிகிச்சைகளுக்கான நிபுணர்கள் நியமிக்கப்படும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

14—

### ஓமலூர் மருத்துவமனையை விரிவுபடுத்துதல்

**வினா 3313—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் மருத்துவமனையைச் சீர் செய்து, விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) இந்த மருத்துவமனைக்கு "ஆம்புலன்ஸ்" ஒன்று வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஓமலூர் அரசு மருத்துவமனையைச் சீர்செய்து விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[1998 மே 30

(ஆ) அரசாணை (நிலை) எண் 102, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை, நாள் 18-3-1997-ல் புதிய ஆம்புலன்ஸ் ஊர்திகள், பழைய ஊர்திகளுக்குப் பதிலாக வாங்க ரூ. 4.45 கோடி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஊர்திகளில் ஒன்று ஓமலூர் அரசினர் மருத்துவமனைக்கு அளிக்கப்படும்.

15—

**நெடுஞ்சாலையில் மருத்துவமனை அமைத்தல்**

**வினா 3319—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய நெடுஞ்சாலையில் 100 கிலோ மீட்டருக்கு ஒன்று வீதம், 24 மணி நேரமும் இயங்கும் வகையில் நெடுஞ்சாலையில் மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தேசிய நெடுஞ்சாலையில் ஒவ்வொரு 100 கிலோமீட்டருக்கும் ஒரு மருத்துவமனை அமைக்கத் தற்சமயம் திட்டம் இல்லை. ஆனால், தேசிய நெடுஞ்சாலையில் உள்ள எல்லா மருத்துவமனைகளிலும் 24 மணி நேரமும் இயங்கும் வகையில் அவசர சிகிச்சைப்பிரிவு இயங்கிவருகிறது.

16—

**பழுதடைந்துள்ள மருத்துவமனைகளைப் புதுப்பித்தல்**

**வினா 3684—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழுதடைந்துள்ள குத்தாலம், குடவாசல் அரசு மருத்துவமனைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகள் அதிக படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவமனைகளாகப் புதுப்பிக்கப்படுமா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள குத்தாலம், குடவாசல் அரசு மருத்துவமனைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகள் அதிக படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவமனைகளாக புதுப்பிக்கப்படும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

17—

**நீரிழிவு நோய்க் கென்று மருத்துவமனை**

**வினா 3922—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீரிழிவு நோய்க் கென்று தனியாக சென்னையில் புது மருத்துவமனை தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

18—

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா 3970—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, பெருமாள் தேவன்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதால், பெருமாள் தேவன்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**19—**

**தொழில்நுட்ப உதவியாளர் நியமனம்**

**வினா 4098—திரு. வை. சிவபுண்ணியம் மற்றும் திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1994 ஆம் ஆண்டு செப்டம்பர் 14-ல் திருச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு மின்வாரியத்தின் தொழில்நுட்ப உதவியாளர் தேர்வில் தேர்வு செய்யப்பட்டவர்கள் இன்னும் நியமனம் செய்யப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உச்ச நீதிமன்ற ஆணைப்படி தமிழ்நாடு மின்வாரியத்தில் தொழில் நுட்ப உதவியாளர் பதவிக்காக 9/94-ல் நடைபெற்ற நேர்முகத் தேர்வு ரத்து செய்யப்பட்டு, தினசரி பத்திரிகையின் வாயிலாக மறு விளம்பரம் செய்யப்பட்டு விண்ணப்பங்கள் தேர்வு செய்து, தொழில் பழகுநர் பயிற்சி பெற்ற பட்டயதாரர்களையும் சேர்த்து நேர்முகத் தேர்வு நடத்தி, ஆட்கள் தேர்வு செய்யப்பட்டு பணி நியமன ஆணைகள் அனுப்பப்பட்டு வருகின்றன.



**20—**

**பொறையார் மருத்துவமனையை விரிவுபடுத்துதல்**

**வினா 4107—திரு. கோ. மோகனதாசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொறையார் அரசு பொது மருத்துவமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விரிவுபடுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பொறையார் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் (படுக்கைகள் எண்ணிக்கை அதிகப்படுத்தும் திட்டம்) செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**21—**

**சென்னை பல் மருத்துவக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டுதல்**

**வினா 4322—திரு. மு.க. ஸ்டாலின்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பல் மருத்துவமனை மற்றும் கல்லூரிக்கு புதிய பல மாடிக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டடம் கட்டி முடிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சென்னையிலுள்ள அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு ஒன்பது மாடிக் கட்டடம் கட்டத்தக்க வகையில்

[1998 மே 30

அடித்தளம் அமைத்து தரைத் தளம் மட்டும் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி, தரைத்தளப் பணிகள் முடிவுற்று, 1995 மே மாதம் பொதுப் பணித் துறையால் இக்கல்லூரிக்கு ஒப்படைக்கப்பட்டது.

(ஆ) மேல் தளங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**22—**

**அரசு மருந்தகம் அமைத்தல்**

**வினா 4629—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் சத்துவாச்சாரியில் அரசு மருந்தகம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : சத்துவாச்சாரியிலிருந்து 3 கி.மீ. தொலைவில் அனைத்து வசதிகளுடன் கூடிய அரசு தலைமை மருத்துவமனை இயங்கி வருகிறது. எனவே, சத்துவாச்சாரியில் தனியே ஓர் அரசு மருந்தகம் அமைக்க வேண்டிய அவசியமில்லை.

**23—**

**தொழில் பழகுநர்களை நிரந்தரம் செய்தல்**

**வினா 4642—திரு. டி. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்வாரியத்தில் நாட்பணியாளர்களாகப் பணிபுரியும் தொழில் பழகுநர்களை நிரந்தரம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1998 மே 30]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**24—**

**தமிழ்நாடு மின்சார வாரிய அச்சகம்**

**வினா 4644—திரு. டி. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மின்வாரியத்திற்கென வில்லிவாகத்தில் நடைபெறும் அச்சகத்தில், வாரியத்திற்கென அச்சடிக்கப்படும் கெஜட் மற்றும் மின் உபயோக அட்டைகளை வாரியம் வெளியே ஆர்டர் கொடுத்து அச்சடிப்பதினால், வாரியத்திற்கென நடைபெறும் அச்சகம் பாதிப்பிற்குள்ளாகிறதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மின்சார வாரிய அச்சகத்தில் வாரியத்திற்குத் தேவையான வெள்ளை மின் கட்டண அட்டை, பச்சை மின் கட்டண அட்டை மற்றும் கெஜட் அச்சடித்து, தமிழ்நாடு முழுவதும் விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும், வாரியத்திற்கு வேண்டிய பேரேடுகள் ரிஜிஸ்டர்கள் போன்றவை அச்சடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் மின்வாரிய அச்சகம் பாதிப்புக்குள்ளாகாது.

**25—**

**துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா 4645—திரு. டி. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

விளவங்கோடு வட்டம், மருதங்கோடு துணை மின் நிலையம் அமைப்பதற்குக் கையகப்படுத்தும்போது நிலத்தின் உரிமையாளர்களின் வீட்டுக்கு ஒரு நபருக்கு வேலை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**26—**

**மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்**

**வினா 5259—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், வட்ட கூத்தாநல்லூர் நகராட்சி மருத்துவமனையை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் நகராட்சிக்குள் உள்ள லெட்சுமாங்குடியில் அரசு வட்டம் சாரா மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

**27—**

**மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டுதல்**

**வினா 5260—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், தலைமை மருத்துவமனைக்குப் புதிதாக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**28—**

**நீராவி சலவைப்பொறி தொடங்குதல்**

**வினா 5360—திரு. கே. சுப்பராயன் மற்றும்
திரு. ஜி. நிஜாமுதீன் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் (Steam Laundry) நீராவி சலவைப் பொறி வைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர்களின்கீழ் இயங்கும் பெரிய மருத்துவமனைகள் பெரும்பாலானவற்றில் தற்போது நீராவி சலவைப் பொறி இயங்கி வருகிறது. மற்ற மருத்துவமனை

[1998 மே 30

29—

**அரசு மருத்துவமனைகளின் தரத்தை உயர்த்துதல்**

**வினா 5364—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார் மருத்துவமனைகளுக்கு ஈடாக அரசு மருத்துவமனைகளின் தரத்தை உயர்த்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தனியார் மருத்துவமனைகளுக்கு ஈடாக அரசு மருத்துவமனைகளின் தரத்தை உயர்த்த அரசு ஒவ்வொரு நிதியாண்டிலும், பகுதி-2 திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. இது தவிர, மருத்துவமனைகளுக்குத் தேவையான நவீன சாதனங்கள் மற்றும் உயர்வகை மருந்துகள் தருவிப்பது போன்ற வசதிகள் அவ்வப்போது செய்யப்படுகின்றன.

30—

**குழந்தைகள்நல மருத்துவமனையில் படுக்கை வசதிகளை அதிகரித்தல்**

**வினா 5368—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் படுக்கை வசதிகளை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சென்னை அரசு குழந்தைகள் மருத்துவமனையில் 1+3 தளங்கள் கொண்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சைக் கட்டடம் கட்டப்பட்டு,



1998 மே 30]

முடியும் தருவாயில் உள்ளது. அதில் கூடுதல் படுக்கை வசதிகள் செய்யப்படும்.

31—

**மருத்துவமனைகள், மருத்துவப் பரிசோதனை நிலையங்கள் அமைத்தல்**

**வினா 5646—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97-ஆம் ஆண்டில் தமிழகத்தில் வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள், மருத்துவப் பரிசோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : 1996-97-ஆம் ஆண்டில் தமிழகத்தில் வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் ஏதும் புதிதாக அமைக்கப்படவில்லை. மேலும், பரிசோதனை நிலையங்கள் ஏதும் அமைக்கப்படவில்லை.

32—

**துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா 5759—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமேஸ்வரத்தில், குறைவான மின் அழுத்தத்தைப் போக்க துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**33—**

**நவீன மருத்துவக் கருவி நிறுவுதல்**

**வினா 5761— திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நோய்களைத் துல்லியமாகக் கண்டறியப் பயன்படும் எம்.ஆர்.ஐ. எனப்படும் அதி நவீன மருத்துவக் கருவி அரசு மருத்துவமனையில் நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை அரசு பொது மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ. (Magnetic Resonance Imaging) சாதனம் ஒன்றைத் தமிழ்நாடு மருத்தவ சேவைக்கழகம் வாங்கி நிறுவிட அரசு ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது.

(ஆ) மேற்படி சாதனத்தை வாங்குவதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அவை பரிசீலனையில் உள்ளன.

**34—**

**தாலுக்கா மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்**

**வினா 5831—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



எடப்பாடி அரசு மருத்துவமனையைத் தாலுக்கா அளவிலான மருத்துவமனையாக ஆக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**35—**

**புதிய மின் விநியோக வட்டம் ஏற்படுத்துதல்**

**வினா 5855—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்ட மின் விநியோக வட்டத்தை இரண்டாகப் பிரித்து தென்காசியைத் தலைமை இடமாகக் கொண்டு, புதிய மின் விநியோக வட்டம் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ) : இக்கருத்துரு இனி பரிசிலிக்கப்படும்.

**36—**

**மின் இணைப்பு வழங்குதல்**

**வினா 5872—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) திருப்பூர் வீரபாண்டி ஊராட்சி, ஜனசக்தி நகரில் போர்வெல் போட்டு மோட்டார் பொருத்திய பின்பும் மின் இணைப்புக் கொடுக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.**

(அ) ஆம்.

(ஆ) வீரபாண்டி கிராமத்தில் அமைந்துள்ள போர்வெல்லுக்கு மின் இணைப்பு வழங்க நிலத்தில் மின் பாதைகளை அமைக்க திரு. முருகேசன் என்பவரால் உயர் நீதிமன்றத்தில் தடை ஆணை பெறப்பட்டுள்ளது. எனவே, போர்வெல்லுக்கு மின் இணைப்பு வழங்க இயலவில்லை. தடையை நீக்க உயர் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தடையை நீக்கியவுடன் மின் இணைப்பு வழங்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**37—**

**சிறப்பு மருத்துவப் பிரிவுகள் தொடங்குதல்**

**வினா 5982—திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனையில் கண், காது, மூக்கு, தொண்டை, இரத்த வங்கி, பலவகையான ஸ்கேன் வசதிகள், சித்த மருத்துவப் பிரிவு, இருதய நோய்ப் பிரிவு போன்ற சிறப்பு மருத்துவப் பிரிவுகள் தொடங்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**38—**

**மின்வாரிய தினக்கூலி, தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்குதல்**

**வினா 5984—திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 10 ஆண்டு காலமாகப் பணிபுரிந்து கொண்டிருக்கும் மின்வாரிய தினக்கூலி, தற்காலிக ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கிடமில்லை.

**39—**

**பொது மருத்துவமனையில் ஸ்கேன் வசதி**

**வினா 6005—திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு அரசினர் பொது மருத்துவமனையில் ஸ்கேன் வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு அரசினர் பொது மருத்துவமனையில் சி.டி.ஸ்கேன் கருவி தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் 8-2-1997 அன்று நிறுவப்பட்டு பொதுமக்களுக்குப் பயன்பட்டு வருகிறது.

**40—**

**தாலுகா சுகாதார மருத்துவமனை கட்டுதல்**

**வினா 6014—திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் தாலுகா, தலைநகர் திருக்கழுக்குன்றத்தில் தாலுகா சுகாதார மருத்துவமனை கட்ட அரசு முன் வருமா?

(ஆ) அதில் 50 படுக்கை வசதி கொண்ட பிரசவ வார்டு தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருக்கழுக்குன்றத்தில் இயங்கி வந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(ஆ) தற்போது ஆய்வில் இல்லை.

**41—**

**ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்குதல்**

**வினா 6051—திரு. டி. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கன்னியாகுமரி மாவட்டம், இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழக அரசின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, 1998-99ஆம் நிதியாண்டில் இத்தகைய செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**42—**

**தற்காலிக துப்புரவுப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்தல்**

**வினா 6052—திரு. டி. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், இடைக்கோடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலரின்கீழ் 1962 ஆம் ஆண்டு முதல் பணி புரிந்து வரும் தற்காலிக துப்புரவு பணியாளர்களின் பணி, நிரந்தரம் செய்யப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இவர்களுக்கு முழுநேரப் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் சலுகைகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1998 மே 30

43—

### ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 6059—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், பின்னலூரில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புவனகிரி தொகுதி, புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்களும், பின்னலூர் கிராமத்திலேயே ஒரு துணை சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன. பின்னலூரிலிருந்து 6 கி.மீ. தொலைவில் சேத்தியாத்தோப்பு ஆரம்ப சுகாதார நிலையமும் உள்ளது. மக்கள் தொகை அடிப்படையில் இவை போதுமானதாகும். எனவே, புதியதாக பின்னலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அவசியமில்லை.

44—

### மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்

**வினா 6323—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை, அப்பகுதி மக்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழக அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு, 1998-99 ஆம் நிதியாண்டில் இத்தகைய செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

45—

### முன்னுரிமையில் மின் விசைத் திட்டம்

**வினா 6333—திரு. என்.ஆர். அழகராஜா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயத்திற்கு மின் விசை கேட்கும் பயனீட்டாளர் அதற்குரிய மின் கட்டணத்தைக் கட்ட ஒப்புதல் அளித்தால் அவர்களுக்கு முன்னுரிமையில் மின்விசை அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

46—

### உயர்சக்தி மின்மாற்றி அமைத்தல்

**வினா 6443— திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகராட்சிப் பகுதிகளில் உயர் சக்தி அழுத்தமுள்ள மின் மாற்றிகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**47—**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா 6460—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதியில் வெள்ளக்கோவில் ஒன்றியம் கம்பளியம்பட்டி, தாராபுரம் ஒன்றியம் கொளத்துப்பாளையம் ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோயில் தொகுதியில் வெள்ளக்கோயில் ஒன்றியம், கம்பளியம்பட்டி கிராமத்தில் ஒரு துணை சுகாதார நிலையம் ஏற்கெனவே செயல்படுவதாலும், தாராபுரம் ஒன்றியம் கொளத்துப்பாளையம் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையமும், அரசு ஊழியர் காப்பீட்டுறுதி மருத்துவமனையும்(ESI Hospital), சித்த மருத்துவமனையும் செயல்படுவதாலும் மேற்படி கிராமங்களில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**48—**

**ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துதல்**

**வினா 6468—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதியைச் சார்ந்த வேமாண்டம்பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வேமாண்டம் பாளையம் கிராமம், நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. இவ்வொன்றியத்தில் தற்சமயம் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இக்கிராமத்தில் ஒரு துணை சுகாதார நிலையம் ஏற்கெனவே செயல்படுகிறது. 10 கி.மீ. தூரத்தில் நம்பியூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. எனவே, ஏற்கெனவே செயல்படும் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மக்கள் தொகையின் அடிப்படையில் போதுமானதாக இருப்பதினாலும், வேமாண்டம்பாளையம் கிராமத்தில் ஒரு துணை சுகாதார நிலையம் ஏற்கெனவே செயல்படுவதாலும் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

**49—**

**பட்டயப் பயிற்சிக் கல்லூரி அமைத்தல்**

**வினா 6496—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் செவிலியர் பட்ட, பட்டயப் பயிற்சிக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் செவிலியர் பட்ட, பட்டயப் பயிற்சி கல்லூரி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

[1998 மே 30

50—

**உயர் சக்தி துணை மின் நிலையம்**

**வினா 6505— திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி 110 கிலோ வாட் துணை மின் நிலையத்தை 230 கிலோ வாட் துணை மின் நிலையமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

51—

**சித்த மருத்துவப் பிரிவு**

**வினா 6508—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட அரசு மருத்துவமனைகளில் இயங்கிவரும் சித்த மருத்துவ மையங்கள் எத்தனை?

(ஆ) எடப்பாடி அரசு மருத்துவமனையில் ஒரு சித்த மருத்துவப் பிரிவு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் மொத்தம் 22 அரசு மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.



1998 மே 30]

(ஆ) எடப்பாடி அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு தொடங்க அரசு ஆணை (நிலை) எண்558, மக்கள் நல்வாழ்வு நாள் 13-11-1997-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

52—

**மருத்துவமனையை விரிவுபடுத்துதல்**

**வினா 6533—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு கையகப்படுத்தியுள்ள சீர்காழி பொது மருத்துவமனையைச் சுற்றியுள்ள நிலத்தில் ஆண்கள் உள்நோயாளி பிரிவு, மகப்பேறு பகுதி ஆகியவற்றை அமைத்து மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அரசாணை (நிலை) எண்62 (சுகாதாரம்) நாள் 6-2-1998-ல் சீர்காழி அரசு மருத்துவமனையில் ரூ.12 இலட்சம் செலவில் 12 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பகுதி மற்றும் பிரசவத்திற்கு முன்பு பெண்கள் தங்கும் பகுதி (Neo Natal Room) கட்டுவதற்கும், ரூ.10 இலட்சம் செலவில் இந்த மருத்துவனைக்குச் சுற்றுச் சுவர் கட்டுவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆண்கள் உள்நோயாளி பிரிவு மற்றும் மகப்பேறு பிரிவு கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. அரசு ஆணையில் அனுமதிக்கப்பட்டுள்ள பணிகள் முடிவுற்ற பின்னர் அவசியம் ஏற்பட்டால் ஆண்கள் உள்நோயாளி பிரிவு மற்றும் மகப்பேறு பகுதி அமைத்து மருத்துவமனை மேலும் விரிவுபடுத்தப்படும்.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[1998 மே 30

53—

எக்ஸ்ரே கருவியைச் செயல்படுத்துதல்

**வினா 6547—திரு. டி. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை அரசு மருத்துவமனையில் செயல்படாமலிருக்கும் எக்ஸ்ரே கருவியைச் செயல்படுத்த அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை அரசு மருத்துவமனைக்கு அயற்பணி மூலம் பணியாளரை நியமித்து, செயல்படாமல் இருக்கும் எக்ஸ்ரே கருவியைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

54—

காசநோய் மருத்துவமனைக்கு மருத்துவர்கள்

**வினா 6548—திரு. டி. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் அரசு காசநோய் மருத்துவமனையில் போதுமான மருத்துவர்கள் இல்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் அரசு காசநோய் மருத்துவமனையில் 8 உதவி மருத்துவர்கள் மற்றும் ஒரு முதுநிலை



1998 மே 30]

குடிமுறை மருத்துவர் உட்பட போதிய மருத்துவர்கள் உள்ளனர்.

(ஆ) இவ்வினா எழவில்லை.

55—

மருத்துவர்கள் தனியார் மருத்துவமனையில் பணிபுரிவதைத் தடுத்தல்

**வினா 6550—திரு. டி. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் தனியார் மருத்துவமனையில் சென்று பணிபுரிவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.**

அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் தனியார் மருத்துவமனைகளில் சென்று மருத்துவ ஆலோசனை (Consultation Practice) வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

56—

வட்டத் தலைநகர் அரசு மருத்துவமனையாக உயர்த்துதல்

**வினா 6600—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறையில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்டத் தலைநகர் அரசு மருத்துவமனையாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ): 1997-98 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில், பெருந்துறை ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**57—**

**துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா 6605—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், தாண்டவசமுத்திரத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1997-98-ஆம் ஆண்டிற்கான மின்சாரம் செலுத்துதல் மற்றும் மின் பகிர்மானத்துக்கான திட்டத்தில் சேர்க்கப்பட்டு துணை மின் நிலையத்தை இயக்கி வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**58—**

**மின் துறையால் வசூலிக்கப்படும் கட்டணத்தைக் குறைத்தல்**

**வினா 6608—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிற்றூராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சி எல்லைக்குள் வீதி விளக்குகள் அமைத்திட மின் துறையால் கட்டணம் வசூலிக்கப்படுகிறதா?



1998 மே 30]

(ஆ) ஆம் எனில், அதன் அளவு என்ன?

(இ) அதனைக் குறைத்துக் கொள்ள அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சிற்றூராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சிகளில் வைப்புத் தொகை நிதித் திட்டத்ின்கீழ் ஒரு தெரு விளக்கிற்கு ஆகும் முழுத் தொகையையும் செலுத்தி மின் இணைப்பு பெறுகிறார்கள். இந்தத் தொகை, மின் விளக்கின் எண்ணிக்கையையும், மின் பாதை நீளத்தையும் பொறுத்து வேறுபடும்.

(இ) குறைக்க இயலாது.

**59—**

**சித்த வைத்தியம் வளர்ச்சி**

**வினா 6711—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சித்த வைத்தியம் வளர்ச்சி அடைய சித்தர்களின் பாடல்களைப் பொருளோடு, மலிவுப் பதிப்பாக வெளியிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**60—**

**மருத்துவமனையை விரிவுபடுத்துதல்**

**வினா 6746—டாக்டர் வே. ஆல்பன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) திருவெட்டார் தொகுதி, குலசேகரம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி நவீனமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருவெட்டார் தொகுதி, குலசேகரம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி நவீனமாக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை

**61—**

### ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 6754 திரு. அ.லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்ட மானூர் ஒன்றியம், சீதபற்பநல்லூர், கோடகநல்லூர் பஞ்சாயத்து (கீழ்க்கநல்லூர்) ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், மானூர் ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,11,388 ஆகும். அந்த ஒன்றியத்தில் தற்போது மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. சீதபற்பநல்லூர் கிராமத்தில் ஒரு துணை சுகாதார நிலையம் செயல்படுகிறது கோடகநல்லூர் மக்களுக்கு கல்லூர் துணை சுகாதார நிலையத்தின் மூலம் மருத்துவ சேவை அளிக்கப்படுகிறது. மானூர் ஒன்றியத்தில் மக்கள் தொகையின்



1998 மே 30]

அடிப்படையில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருவதால், மேற்படி கிராமங்களில் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அவசியம் இல்லை.

**62—**

### ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 6762—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், அம்மாபேட்டை ஒன்றியம், குறிச்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், அம்மாபேட்டை ஒன்றியம் குறிச்சி கிராமத்தில் ஒரு துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், 4 கி.மீ.தூரத்தில் ஒலகடம் ஆரம்ப சுகாதார நிலையமும், 6 கி.மீ. தூரத்தில் மைலம்பாடி ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதாலும், மக்கள் தொகை அடிப்படையில் இவ்வொன்றியத்திலுள்ள 4 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமென்பதாலும் இக்கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

**63—**

### மின் துறை அலுவலகங்கள் ஒரே இடத்தில் செயல்படல்

**வினா 6765—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்க்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பவானியில் மின் துறை அலுவலகங்கள் நான்கு இடங்களில் செயல்பட்டு வருவதை ஒரே இடத்தில் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பவானியில் மின் துறை அலுவலகங்கள் நான்கு இடங்களில் செயல்பட்டு வருவதை ஒரே இடத்தில் செயல்படச் செய்வதற்குப் போதுமான இடம் வாடகைக்குக் கிடைக்கவில்லை. நகராட்சியிலும் போதுமான இடம் இல்லை. எனவே, மேற்படி அலுவலகங்களை ஒரே இடத்தில் இயங்கச் செய்வதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

**64—**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா 6850—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், முருகம்பாளையத்திலுள்ள ஊராட்சி நிலத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும்படி ஊராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): முருகம்பாளையத்தில் உள்ள ஊராட்சி நிலத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சம்பந்தப்பட்ட அலுவலரை அணுகலாம் என 8-1-1997 அன்று நடைபெற்ற ஊராட்சியின் சாதாரணக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், மக்கள் தொகையின் அடிப்படையில் போதுமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருவதாலும்





முருகம்பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

**65—**

**புதிய மின்மாற்றிகள் அமைத்தல்**

**வினா 6876—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொண்கணாபுரம் ஒன்றியத்தில் உள்ள புதுப்பாளையம் கிராமத்தில் மிகவும் குறைந்த மின் அழுத்தம் உள்ளதாலும், முத்தையம்பட்டி, கோவில்காடு, புதுப்பாளையம், காட்டூர், சடச்சிபாளையம், முன்சீப்வளவு, அரிசிபாளையம், செங்காவளவு, வாசியான்வளவு, சின்னமுத்தையன்பட்டி, சட்டித்தலையான்காடு, மனகாடு, சித்திபாளையம், நைனாகவுண்டம்பாளையம் ஆகிய பகுதிகள் பயனடையும் வகையிலும் புதிய மின் மாற்றிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

**66—**

**டேனிடா திட்டம் மூலம் தாய் சேய் நலவிடுதி**

**வினா 6878—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி இடங்கண சாலை, பேரூராட்சியைச் சார்ந்த காட்டூர், மாட்டையம்பட்டி போன்ற இடங்களில் டேனிடா திட்டத்தின் மூலம் தாய் சேய் நலவிடுதி அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): டேனிடா நலத்திட்டம் பகுதி-1 (Phase-I) மற்றும் பகுதி-2 (Phase-II) பணிகள் கடலூர், விழுப்புரம், சேலம் ஆகிய மூன்று மாவட்டங்களில், ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு, மார்ச் 1996-இல் முடிவு பெற்றது. காட்டூரில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகின்றன. மாட்டையம்பட்டி கிராமம் காட்டூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வெகுஅருகில் உள்ளது. இந்நிலையில் காட்டூர், மாட்டையம்பட்டி கிராமங்களில் டேனிடா திட்டத்தின்கீழ் தனியாக தாய் சேய் நலவிடுதிகள் கட்டும் கருத்துரு அரசிடம் இல்லை.

**67—**

### மருத்துவமனையில் குழந்தைகள், பல் மற்றும் மகப்பேறுப் பிரிவுகளை அமைத்தல்

**வினா 6880—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தாலுக்கா அரசு பொது மருத்துவமனையில், குழந்தைகள் பிரிவு, பல் மருத்துவப் பிரிவு, மகப்பேறுப் பிரிவு ஆகியவற்றை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தாலுக்கா அரசு பொது மருத்துவமனையில் குழந்தைகள் பிரிவு, பல் மருத்துவப் பிரிவு, மகப்பேறுப் பிரிவு ஆகியவற்றை அமைக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.



**68—**

### தாய் சேய் நல மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டுதல்

**வினா 6883—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம் சித்தூர் பஞ்சாயத்து, மொரசப்பட்டியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் தாய் சேய் நல மருத்துவமனைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மொரசப்பட்டி கிராமத்தில் தாய் சேய் நல மருத்துவமனை எதுவும் அரசால் அனுமதிக்கப்படவில்லை. எனவே, அவ்வாறு மருத்துவமனை ஏதும் வாடகைக் கட்டடத்தில் செயல்படவில்லை. எனவே, இங்கு அரசு கட்டடம் கட்டும் வினா எழாது.

**69—**

### துணை மின் நிலையம் அமைத்தல்

**வினா 7194—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

[1998 மே 30

70—

### மின் வசதி ஏற்படுத்துதல்

**வினா 7196—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், கம்மம்பட்டி ஊராட்சி, மூலக்காடு, மலையூர்க்காடு ஆகிய பகுதிகளுக்கு மின் வசதி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், கம்மம்பட்டி ஊராட்சி மூலக்காடு, மலையூர்க்காடு ஆகிய பகுதிகளில் வரப்பெற்ற 21 வீட்டு மின் இணைப்பு விண்ணப்பங்களுக்கும், 3 விவசாய மின் இணைப்பு விண்ணப்பங்களுக்கும் 1997-98ஆம் ஆண்டு இறுதிக்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.

71—

### ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துதல்

**வினா 7556— திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி புதுப்பட்டினத்தில் உள்ள மக்கள், இலவசமாக நிலம் வழங்கினால் அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

புதுப்பட்டினம் கிராமம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வருகிறது. இவ்வொன்றியத்தின் மக்கள் தொகைக்கு ஏற்ப ஏற்கெனவே



1998 மே 30]

4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளதாலும் புதுப்பட்டினத்தில் துணை சுகாதார நிலையம் இருப்பதாலும், இலவசமாக நிலம் தர பொது மக்கள் முன்வந்தாலும் அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

72—

### சித்த மருத்துவக் கல்லூரி இடம் மாற்றம்

**வினா 7232—திரு. த. பூவேந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்த மருத்துவக் கல்லூரி பழனிக்கு மீண்டும் மாற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியை சென்னையை விட்டு பழனிக்கு மீண்டும் மாற்றிட செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

73—

### ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 7557—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியிலுள்ள மாதானம், திருநகரி மற்றும் திருவாலி ஆகிய பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

மக்கள் தொகைக்கேற்பத் தேவையான ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாலும், திருநகரி மற்றும் திருவாலி கிராமங்களில் துணைச் சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும் மாதானம், திருநகரி மற்றும் திருவாலி பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்திகக்கூறு ஏதும் இல்லை.

74—

**ஓமியோபதி கல்லூரி திறத்தல்**

**வினா 7608—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டு மேலும் ஓர் ஓமியோபதி கல்லூரியைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு ஓமியோபதிக் கல்லூரி ஒன்றைத் திறக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை.

75—

**துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா 7626—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி ஒரத்தநாடு ஒன்றியம், ஒக்கநாடு கீழையூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?





(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

76—

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா 7644—திரு. ஆ. இராசேந்திரன் (என்கிற) தீரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டம், பொன்பரப்பியில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

பெரம்பலூர் மாவட்டத்தில் பொன்பரப்பி, செந்துறை ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வருகிறது. இவ்வொன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் தேவைக்கும் அதிகமாகவே 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. மேலும், பொன்பரப்பி கிராமத்தில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே, இங்கு புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

77—

**துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா 7653—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

சிவகிரிக்கு அருகில் உள்ள விஸ்வநாதப்பேரியில் புதிதாக ஒரு துணை மின் நிலையத்தை 9-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறுவுவதற்கான ஒரு வரைவுத் திட்டம் ஆய்வில் உள்ளது.

**78—**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா 7690—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ருத்திரசிந்தாமணி, வெள்ளாளங்காடு ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் மக்கள் தொகை அடிப்படையில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானது. ஆனால், அங்கு 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே இயங்கி வருகின்றன. எனவே, ருத்திரசிந்தாமணி மற்றும் வெள்ளாளங்காடு கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**79—**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா 7700—திரு. த. நடராஜன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியத்தில், இரும்புலி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இரும்புலி கிராமம், வல்லம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. அவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கு ஏற்ப தற்போது செயல்படும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாலும், இரும்புலி கிராமத்திலிருந்து 2 கி.மீ. தூரத்தில் சோழங்குளம் துணை சுகாதார நிலையமும், மேல்சித்தாமூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதாலும் இரும்புலி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அவசியமும் சாத்தியக்கூறுகளும் இல்லை.

**80—**

**துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா 7911—திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு எஸ்.எஸ்.230 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

புதிய 230 கி.வோ. துணை மின் நிலையத்தை தொழில் நுட்பக் காரணங்களினால் கிருஷ்ணகிரிக்குப் பதிலாக காரிமங்கலத்தில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் வரும் ஆண்டுகளில் தொடங்கப் பெறும்.

[1998 மே 30

81—

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 7923—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தொகுதிக்குட்பட்ட கொங்கராயர்குறிச்சி, மேலதட்டப்பாறை, கருங்குளம் ஒன்றியம், சிங்கத்தாக்குறிச்சி ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கொங்கராயர்குறிச்சி, மேலதட்டப்பாறை, சிங்கத்தாக்குறிச்சி ஆகிய கிராமங்களில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், மக்கள் தொகைக்கேற்பத் தேவையான ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருவதாலும் மேற்படி கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

82—

## துணை மின் நிலையம் அமைத்தல்

**வினா 7929—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடிப்பாக்கம், உள்ளகரம், புழுதிவாக்கம் பகுதிகளில் குறைந்த மின் அழுத்தக் குறையைப் போக்க பள்ளிக்கரணை கழிவு வெளிப்பகுதியில், துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

83—

## ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துதல்

**வினா 7938—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டை, பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. பள்ளிப்பட்டில் முன்னதாக செயல்பட்டு வந்த ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே வட்டார மருத்துவமனையாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது. பொதட்டூர்பேட்டையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தின் மூலம் பயனடையும் உள் நோயாளிகள் மற்றும் வெளி நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. எனவே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் பரிசிலனையில் இல்லை.

84—

## துணை மின் நிலையம் அமைத்தல்

**வினா 8000—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், காஞ்சிக்கோவிலை மையமாகக் கொண்டு ஒரு துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் பணி எப்போது தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திட்ட ஆய்வின்படி இத்துணை மின் நிலையத்தை அமைக்கும் தேவை ஏற்படின் 9-வது ஐந்தாண்டுக்கான (1997-2002) பெருந் திட்டத்தில் சேர்க்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

**85—**

**ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்**

**வினா 8010—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம் சவளக்காரன் ஊராட்சி மற்றும் வடபாதிமங்கலம் கிராமம் ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு முனவருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியத்தில் மத்திய அரசின் வரையறையின்படி மக்கள் தொகைக்கு எற்ப 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருவதாலும், சவளக்காரன் ஊராட்சி மற்றும் வடபாதிமங்கலம் ஆகிய கிராமங்களில் துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதாலும், அக்கிராமங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் அரசு மருத்துவமனை அமைத்துள்ளதாலும் மேற்படி கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.



**86—**

**வட்ட மருத்துவமனை அமைத்தல்**

**வினா 8012—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், கோட்டூரில் ஒரு வட்ட மருத்துவமனை ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் வட்டத் தலைமையிடமாக இல்லாததால் இங்கு வட்ட மருத்துவமனை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**87—**

**மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைத்தல்**

**வினா 8026—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் சானிடோரியம் நெஞ்சக நோய் மருத்துவமனைக்கு புதிய மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1998 மே 30

**88—**

### ஊழியர்கள் பணியிடம் குறைப்பு

**வினா 8027—திரு. மீ.அ. வைத்தியலிங்கம் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சானிடோரியம் நெஞ்சக நோய் மருத்துவமனையில் 247 ஆக இருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 130 ஆக குறைக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தற்பொழுது நடைமுறையில் உள்ள அரசு ஆணையின்படி தாம்பரம் சானிடோரியம் நெஞ்சக நோய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் 248 பேர்களில் காலியிடங்கள் 34 தவிர 214 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். எனவே, பணியாளர்களின் எண்ணிக்கை 130 ஆக குறைக்கப்படவில்லை.

(ஆ) அரசாணை எண் 1364, சுகாதாரம், நாள் 21-12-1992-இன்படி அனைத்து மருத்துவமனைகளிலும் 6 படுக்கைக்கு ஒரே ஒரு பணியாளர் என்ற குறியீட்டை அரசு விதித்துள்ளது. அதன்படி தாம்பரம் சானிடோரியம் நெஞ்சக நோய் மருத்துவமனையிலுள்ள அளவின்படி 129 பணியாளர்களே இருக்க வேண்டும். ஆனாலும் கூடுதலாகவே பணியாளர்கள் உள்ளனர். எனவே, பணியாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்படவில்லை.

**89—**

### மருத்துவர்கள் எண்ணிக்கையை உயர்த்துதல்

**வினா 8032—திரு. மீ.அ. வைத்தியலிங்கம் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

சானிடோரியம் (தாம்பரம்) நெஞ்சக நோய் மருத்துவமனையில் மருத்துவர்கள் எண்ணிக்கையை உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சானிடோரியம் (தாம்பரம்) நெஞ்சக நோய் மருத்துவமனையில் மருத்துவர்கள் எண்ணிக்கையை உயர்த்தும் திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**90—**

### செவிலியர் பணியினை இரண்டு ஷிப்டாக உயர்த்துதல்

**வினா 8033—திரு. மீ.அ. வைத்தியலிங்கம் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செவிலியர் பணியை இரண்டு ஷிப்டாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

செவிலியர் பணியை இரண்டு ஷிப்டாக மாற்றும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**91—**

### தாம்பரம் மருத்துவமனை எனப் பெயர் மாற்றம்

**வினா 8034—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெஞ்சக நோய் மருத்துவமனை, தாம்பரம் பொது மருத்துவமனை மற்றும் தொழுநோய் தடுப்பு மருத்துவமனைகளை ஒன்றாக இணைத்து, தாம்பரம் மருத்துவமனை எனப் பெயர் மாற்றம் செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நெஞ்சக நோய் மருத்துவமனை, தாம்பரம் பொது மருத்துவமனை மற்றும் தொழுநோய் தடுப்பு மருத்துவமனைகளை ஒன்றாக இணைத்து தாம்பரம் பொது மருத்துவமனை எனப் பெயர் மாற்றம் செய்யும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**92—**

**மருந்துக்குக் கட்டுப்படாத காசநோய்**

**வினா 8036—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது உள்ள மருந்துக்குக் கட்டுப்படாத காசநோய் வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மருந்துக்குக் கட்டுப்படாத புதிய வகை காச நோய் எதுவும் வந்ததாகத் தகவல் இல்லை.

**93—**

**நரம்பியல் பிரிவிற்கு கருவிகள்**

**வினா 8038—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 'நரம்பியல்' பிரிவிற்குத் தேவையான இ.இ.ஜி. மற்றும் இ.எம்.ஜி. ஆகிய கருவிகளை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் நரம்பியல் பிரிவிற்கு இ.இ.ஜி. மற்றும் இ.எம்.ஜி. கருவிகள் வழங்குவதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**94—**

**துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா 8054—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, பார்த்திபனூர், பி.கொடிக்குளம் ஆகிய ஊர்களில் துணை மின் நிலையம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**95—**

**கண் மருத்துவம் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளைத் தொடங்குதல்**

**வினா 8056—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி அரசு மருத்துவமனையில் கண் மருத்துவப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியவை தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பரமக்குடி அரசு மருத்துவமனையில் கண் மருத்துவப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியவை தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**96—**

**அறுவை சிகிச்சை அரங்கில் மயக்க மருந்து கருவி**

**வினா 8069—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி அரசு மருத்துவமனையில் அறுவை அரங்கில் (Operation Theatre) மயக்க மருந்து கருவி (Boyle Apparatus) என்ற கருவியை உடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி அரசு மருத்துவமனையில் அறுவை அரங்கில் ஏற்கெனவே உள்ள மயக்க மருந்து கருவி தற்போது பழுதுபார்க்கப்பட்டு எவ்விதக் குறைபாடுமின்றி செயல்படுவதால் அம்மருத்துவமனைக்கு புதிய மயக்க மருந்து கருவி ஒன்றினை வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**97—**

**புற்றுநோய் கண்டறிய கருவிகள்**

**வினா 8072—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சேலம் மோகன் குமாரமங்கலம் அரசினர் மருத்துவமனையில் 'புற்றுநோய்' கண்டறிய 1. டெலிகோபால்ட் 2. சி.சி. ஆப்லிகேஷன் ஆகிய கருவிகளை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு புற்றுநோய் கண்டறியப் பயன்படும் டெலிகோபால்ட் மற்றும் சி.சி. ஆப்லிகேஷன் கருவிகள் வழங்குவதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

**98—**

**உள்நோயாளிகளுக்கு உணவு**

**வினா 8073—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், மோகன் குமாரமங்கலம் அரசினர் மருத்துவமனையில் உள்நோயாளிகளுக்கு பழம், காபி, முட்டை ஆகியவைகள் கொடுக்கப்படுவது இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): விடையை உள்ளடக்கிய அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

அரசு மருத்துவமனைகளில் உள்ள உள்நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த காபி அதிக விலை ஏற்றத்தினாலும் இந்திய காபி விற்பனைப் பிரிவினர் எல்லா மாதங்களிலும் முறையாக காபித்தூளை

விநியோகம் செய்யாததினாலும் நோயாளிகளுக்கு காபி வழங்குவது அறிவியல் ரீதியாக அவசியம் ஏதுமில்லை என்பதினாலும் காபி வழங்குவது நிறுத்தப்பட்டது. ஒப்பந்தக்காரர்கள் பழங்களை வழங்குவதில் முறைகேடுகள் செய்ததாலும் தரமான பழங்களை வழங்காததாலும் பழங்கள் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டது.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனைக்கு முட்டை வழங்க 90 சதவீத முன்பணம் கோரியதால் முட்டை வழங்கப்படாமல் இருந்தது. தற்சமயம் கோழிவளர்ப்பு நிறுவனம் கடனில் முட்டை வழங்க இசைந்துள்ளதால், இம்மருத்துவமனையில் நோயாளிகளுக்கு முட்டை வழங்கப்பட்டு வருகிறது.

**99—**

### எய்ட்ஸ் நோயாளிகளுக்குத் தனிப்பிரிவு

**வினா 8074—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மோகன் குமாரமங்கலம் அரசினர் மருத்துவமனையில் 'எய்ட்ஸ்' நோயாளிகளுக்கு தனிப்பிரிவு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: எய்ட்ஸ் நோய் காற்று, நீர், உணவு பூச்சிகள் போன்றவற்றால் பரவுவது இல்லை. எனவே, எய்ட்ஸ் நோயாளிகளை தனிவார்டில் வைத்து சிகிச்சை அளிக்க வேண்டியதில்லை என்பதாலும், அவர்கள் தனிமைப் படுத்தப்படக்கூடாது என்பதாலும், எய்ட்ஸ் நோயாளிகளுக்கு என்று தனிப்பிரிவு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.



**100—**

### மின் அழுத்தக் குறைவைப் போக்குதல்

**வினா 8077—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி-புளியங்குடி வாசுதேவநல்லூர் ஆகிய பகுதிகளிலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் மின் அழுத்தம் மிகக் குறைவாக உள்ளது என்பதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், அதைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* குறைவான மின் அழுத்தத்தைப் போக்க தேவையான தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**101—**

### ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குதல்

**வினா 8086—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதி, மரக்காணம் ஒன்றியத்தில் உள்ள சிங்கனூர் கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சார**

[1998 மே 30

5 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், சிங்கனூர் கிராமத்திலேயே துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், அக்கிராமத்திலிருந்து 6 கி.மீ. தூரத்தில் திண்டிவனம் அரசு மருத்துவமனை உள்ளதாலும், சிங்கனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அவசியமும், சாத்தியக் கூறுகளும் இல்லை.

**102—**

**மின்மாற்றித் திறனை உயர்த்துதல்**

**வினா 8090—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கருங்கல்வாடி ஊராட்சியில் குறைந்த மின் அழுத்தம் உள்ள 'அனிகா பைப்ஸ்' அருகில் உள்ள மின்மாற்றியின் திறனை உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அவசியம் இல்லை

**103—**

**மின் அழுத்தக் குறைவினைப் போக்குதல்**

**வினா 8092—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், அமரகுந்தி ஊராட்சியில் உள்ள அக்கிராம்பட்டி மற்றும் அரிசன தெருவில் மின் அழுத்தக் குறைவைப் போக்க அரசு முன்வருமா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

**104—**

**அரசு மருத்துவமனையினை விரிவுபடுத்துதல்**

**வினா 8094—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக விரிவுபடுத்தி 24 மணிநேர மருத்துவமனையாக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் வட்ட அளவிலான (Block level) ஆரம்ப சுகாதார நிலையங்களை 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற அரசு முடிவு செய்துள்ளது. அதன் அடிப்படையில் மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்தையும் 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**105—**

**தாய் சேய் நல விடுதி அமைத்தல்**

**வினா 8097—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம் ஆரூர்பட்டி கிராமத்தில் கணக்குப்பட்டியில் ஒரு தாய் சேய் நல விடுதி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆரூர்பட்டி கிராமத்திலுள்ள கணக்குப்பட்டி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். கணக்குப்பட்டி கிராமத்திற்கு மிக அருகில் உள்ள மந்தைதோப்பூரில் தாய் சேய் நல விடுதி (துணை சுகாதார நிலையம்) செயல்படுவதாலும் கணக்குப்பட்டி கிராமத்திலிருந்து 6 கி.மீ. தூரத்தில் சேடப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளதாலும், 4 கி.மீ. தூரத்தில் தாரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளதாலும் ஆரூர்பட்டி கிராமத்தைச் சார்ந்த கணக்குப்பட்டியில் புதிதாக தாய் சேய் நல விடுதி அமைப்பதற்கான அவசியமும் சாத்தியக்கூறும் இல்லை.

**106—**

**லித்தோட்ரிப்சி கருவி வழங்குதல்**

**வினா 8099—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிறுநீரகக்கல் அகற்றும் நவீன இயந்திரம் "லித்தோட்ரிப்சி" என்ற கருவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிறுநீரகக்கல் அகற்றும் நவீன "லித்தோட்ரிப்சி" இயந்திரம் வழங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



(ஆ) வினா எழாது.

**107—**

**மருத்துவமனையாக உயர்த்துதல்**

**வினா 8131—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டன்சத்திரம் தொகுதியில், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கீரனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழக அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு 1998-99 ஆம் நிதியாண்டில் இத்தகைய செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**108—**

**அரசு ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா 8144—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, பேய்க்குளத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பேய்க்குளம் கிராமத்திலிருந்து ½ கி.மீ. தூரத்தில் துணை சுகாதார நிலையமும், 2 கி.மீ. தூரத்தில் ஆரம்ப சுகாதார நிலையமும்

[1998 மே 30

செயல்படுவதால் பேய்க்குளம் கிராமத்தில் புதியதாக ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியமும், அவசியமும் இல்லை.

**109—**

**மின் அழுத்தத்தைச் சீரமைத்தல்**

**வினா 8146—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதியில் அரியநாயகிபுரம், புத்தன் தருவை, பால்குளம் பகுதிகளில் உள்ள குறைந்த மின் அழுத்தத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சாத்தான்குளம் தொகுதியில் அரியநாயகிபுரம், புத்தன் தருவை, பால்குளம் பகுதிகளில் உள்ள குறைந்த மின் அழுத்தத்தைச் சீரமைக்க தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**110—**

**துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா 8148—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, கருங்குளத்தில் துணை மின் நிலையம் (sub-station) அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**111—**

**மின் அழுத்தக் குறைவினை சரி செய்தல்**

**வினா 8246—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், தெசவிளக்கு ஊராட்சி, இலட்சுமாயூரில் உள்ள மின் அழுத்தக் குறைவினை சரி செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

**112—**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா 8248—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியப் பகுதியில் உள்ள குறுக்குப்பட்டியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் தற்போதுள்ள மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதால், குறுக்குப்பட்டியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

**113—**

**பணியிடங்களை நிரப்பத் தடையை நீக்குதல்**

**வினா 8256—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளில், அந்த மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களையும், காலியாக உள்ள இடங்களையும் நிரப்ப அரசு விதித்துள்ள தடையை நீக்கி உத்தரவிடப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பத் தடை ஏதும் இல்லை. ஆனால் அரசாணை (நிலை) எண். 179, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 2-6-1995-ன்படி காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப இவ்வாணையில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்மட்டக் குழுவின் ஒப்புதல்பெற வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது. காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1998 மே 30]

**114—**

**துணை மின் நிலையம்**

**வினா 8263—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதி, சந்தைபேட்டை ஒட்டியுள்ள பட்டணம் என்ற கிராமத்தில் புதியதாக 33/11 கி.வோ. துணை மின் நிலையம் தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**115—**

**மின் இணைப்பு வழங்குதல்**

**வினா 8264—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மின்வாரியத்தில் தேவைக்கேற்ப மின் மீட்டர்கள் வாங்கப்பட்டு காலதாமதமின்றி மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆவன செய்யும்.

**116—**

**மின் மாற்றித் திறனை உயர்த்துதல்**

**வினா 8265—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதி, திவனூரில் தற்போதுள்ள 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தை 110/11 கிலோ வோல்ட் ஆக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**117—**

**துணை மின் நிலையத்தின் கட்டுமானப் பணி தொடங்குதல்**

**வினா 8266—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதியில் உள்ள ரெட்டணை கிராமத்தில் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தில் கட்டுமானப் பணி எப்பொழுது தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திண்டிவனம் தொகுதியில் உள்ள ரெட்டணை கிராமத்தில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் உடனடியாக அமைக்கும் திட்டம் ஏதும் ஆய்வில் இல்லை.

**118—**

**மின் கம்பிகளை மாற்றியமைத்தல்**

**வினா 8269—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



திண்டிவனம் தொகுதியில் உள்ள கணபதிபட்டு கிராம காலனியில் சில வீடுகளின் மேல் செல்கின்ற மின் கம்பிகளை மாற்றி அவை தெருவில் செல்லும் வகையில் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

31-7-1997 அன்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

**119—**

**தரக் கட்டுப்பாடு ஆய்வு மையம்**

**வினா 8354—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அலோபதி மருந்துகளுக்குத் தரக் கட்டுப்பாட்டு மையங்கள் இருப்பதுபோல், சித்தா, ஓமியோபதி, ஆயுர்வேத, யுனானி மருந்துகளுக்கும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அலோபதி மருந்துகளுக்குத் தரக் கட்டுப்பாட்டு மையங்கள் இருப்பதுபோல், சித்தா, ஓமியோபதி, ஆயுர்வேத, யுனானி மருந்துகளுக்கும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடம் அமைக்கும் திட்டத்தைத் தள்ளி வைத்துள்ளது.

**120—**

**மின்சார பம்பு செட்டுகள் அமைத்தல்**

**வினா 8383—திரு. கோ. மோகனதாசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

கோவில் மடங்களின் நிலங்களை குத்தகைக்கு எடுத்து நடத்தும் விவசாயிகளுக்கு குத்தகைப் பதிவேடுகள் இருந்தாலே அந்த நிலங்களில் மின்சார பம்பு செட்டுகள் அமைக்க அனுமதி வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

**121—**

**விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டம்**

**வினா 8405—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுகாதாரம், சுத்தம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வானொலி, தொலைக்காட்சி விளம்பரங்கள், கண்காட்சிகள் மற்றும் நலக்கல்வி வெளியீடுகள் ஆகியவற்றின் மூலம் சுகாதாரம், சுத்தம் பற்றிய விழிப்புணர்வை அரசு மக்களிடையே ஏற்படுத்தி வருகிறது. மாணவர்களுக்கு உடல் நலப் பரிசோதனை செய்ய அரசு ஏற்பாடு செய்துள்ளது. ரூ. 30.00 இலட்சம் செலவில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. போலியோ சொட்டு மருந்து கொடுப்பதற்கு, மத்திய அரசு உதவியுடன் ரூ. 95 இலட்சம் செலவு செய்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி இத்திட்டம் வெற்றிபெற பெரிதும் உதவியது.



1998 மே 30]

**122—**

**ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்**

**வினா 8408—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்குவளை ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருக்குவளை ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த திட்டம் ஏதும் இல்லை.

**123—**

**அறுவை சிகிச்சைப் பிரிவை மீண்டும் இயங்கச் செய்தல்**

**வினா 8411—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகூர் அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவை மீண்டும் இயங்கச் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நாகூர் அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவில் குறைந்த அளவில் சாதாரண அறுவை சிகிச்சைகள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[1998 மே 30

124—

## அவசர சிகிச்சைப் பிரிவு அமைத்தல்

**வினா 8419—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலிருந்து இராமநாதபுரம் வரை 125 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலை 49-ல் விபத்துக் கால அவசர சிகிச்சைப் பிரிவு இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பரமக்குடி வட்ட மருத்துவமனையில் இந்நிதியாண்டில் அவசர சிகிச்சைப் பிரிவு அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசு வட்ட மருத்துவமனையில் தற்போது அவசர சிகிச்சைப் பிரிவு இல்லை. தேவையின் அடிப்படையிலும், நிதி வசதிக்கு ஏற்பவும் இத்திட்டம் எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

125—

## ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

**வினா 8423—திரு. அ. அசோகன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக நிலை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் தற்போது செயல்பட்டு வரும் நான்கு (4) ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதால் கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுவதற்கு சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

126—

## குறைந்த மின் அழுத்தத்தைப் போக்குதல்

**வினா 8427—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், தகாளிபட்டி பகுதியில் குறைந்த மின் அழுத்தத்தைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

127—

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 8428—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், பொட்டனேரி கிராமம், குள்ளமுடையானூரில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

குள்ளமுடையனூர் கிராமத்திலிருந்து 3 கி.மீ தூரத்தில் பொட்டனேரி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், 6 கி.மீ. தூரத்தில் மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும் மத்திய அரசின் வரையறையின்படி மேச்சேரி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகையின் அடிப்படையில் தற்போதுள்ள 3 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாலும், குள்ளமுடையானூரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**128—**

**புதிய மீட்டர்கள் வழங்குதல்**

**வினா 8496—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டத்தில், பழுதடைந்துள்ள மின்சார மீட்டர்களுக்குப் பதிலாக புதிய மீட்டர்கள் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

**129—**

**அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்குதல்**

**வினா 8501—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில், அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1995-96 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் ரூ. 15 இலட்சம் செலவில் அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்க அரசு ஏற்கெனவே ஆணையிட்டுள்ளது. 1996 செப்டம்பரில் இம்மருத்துவமனைக்கு ரூ.10.00 இலட்சத்தில் அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்க அரசு திருத்திய நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இம்மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு ரூ.25 இலட்சம் செலவில் கட்டடம் கட்டுவதற்காக தலைமைப் பொறியாளர் அனுப்பிய வரைபடம் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றிற்கு அரசு 7-8-1997-ல் ஒப்புதல் அளித்துள்ளது. எனவே, அவசர சிகிச்சைப் பிரிவு விரைவில் தொடங்கப்படும்.

**130—**

**புதிய மின்மாற்றிகள் அமைத்தல்**

**வினா 8518—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலகரம், நன்னகரம் பகுதிகளில் மின் அழுத்தக் குறைவைப் போக்க புதிய மின்மாற்றிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மேலகரம் கிராமத்திற்கு புதிய மின்மாற்றி அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணி முடிவடைந்தவுடன்

[1998 மே 30

மின் அழுத்தக் குறைபாடு சீரடையும். நன்னகரம் கிராமத்தில் மின் அழுத்தம் திருப்திகரமாக உள்ளது.

131—

**புதிய மின்மாற்றி அமைத்தல்**

**வினா 8520—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், மேலப்பாவூர் பகுதியில் மின் அழுத்தக் குறைவைப் போக்க புதிய மின்மாற்றி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இப்பணி 1997 செப்டம்பர் மாத இறுதிக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

132—

**மனநோய்ப் பிரிவில் உள்நோயாளிப் பிரிவு ஏற்படுத்துதல்**

**வினா 8540—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், நாகை அரசினர் தலைமை மருத்துவமனையில் மனநோய்ப் பிரிவில் உள்நோயாளிப் பிரிவு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இதற்கான கருத்துரு ஏதும் ஆய்வில் இல்லை.



1998 மே 30]

133—

**அவசர ஊர்தி, அமரர் ஊர்தி வழங்குதல்**

**வினா 8541—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், நாகை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு அவசர ஊர்தியும், அமரர் ஊர்தியும் வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வழங்கப்படும்.

134—

**துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா 8749—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், ஊத்துக்குளி பகுதியில் குறைந்த அளவு மின் அழுத்தத்தை சரி செய்ய புதிய துணை மின் நிலையம் அமைக்கும் கொள்கைக் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

[1998 மே 30

135—

**ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் மற்றும் பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல்**

**வினா 8803—திரு. ஆ. இராசேந்திரன் (என்கிற) தீரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரும்புலிக்குறிச்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் மற்றும் பணியாளர் குடியிருப்புகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இரும்புலிக்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலர் மற்றும் பணியாளர் குடியிருப்புகள் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

136—

**புறநோயாளிகள் பிரிவு மாலையிலும் செயல்படுதல்**

**வினா 8826—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் போன்ற மாநகரங்களில் உள்ள அரசினர் பொது மருத்துவமனைகளுக்கு புற நோயாளிகள் அதிக அளவில் வருவதால், மாலை நேரத்திலும் புற நோயாளிகள் பிரிவு செயல்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மருத்துவக்கல்வி சாரா மருத்துவமனைகளில் மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை புற நோயாளிகள் பிரிவு ஏற்கெனவே



1998 மே 30]

செயல்பட்டு வருகிறது. மேலும் 24 மணி நேர விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவும் செயல்பட்டு வருகின்றன.

137—

**கூடுதல் பெண் மருத்துவர்கள் நியமித்தல்**

**வினா 8831—திருமதி ஆர். சரஸ்வதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவர்கள் குறைவாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு கூடுதலாக பெண் மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தாராபுரம் அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவர்கள் தேவையான அளவில் உள்ளனர்.

138—

**நிரோத் ஆணுறை விற்க தானியங்கி இயந்திரங்கள் அமைத்தல்**

**வினா 8832—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிரோத் ஆணுறை விற்க தானியங்கி இயந்திரங்கள் எல்லா நகரங்களிலும் நிறுவப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எய்ட்ஸ் நோய்க் கட்டுப்பாட்டுக் கழகத்தினரால் இதுவரை எய்ட்ஸ் நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ் 19 ஆணுறை தானியங்கி

இயந்திரங்கள் வாங்கப்பட்டு கீழ்க்கண்ட இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. கோயம்புத்தூர் | .. | 3 |
| 2. விழுப்புரம் | .. | 1 |
| 3. மதுரை | .. | 3 |
| 4. காட்பாடி | .. | 2 |
| 5. சென்னை | .. | 6 |
| 6. திருச்சி | .. | 4 |
| மொத்தம் | .. | 19 |

மேலும் 20 அணுஉறை தானியங்கி இயந்திரங்கள் வாங்கி மாநிலத்தின் மற்றப் பகுதிகளில் நிறுவ எய்ட்ஸ் நோய்க் கட்டுப்பாட்டுக் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**139—**

**வெள்ளைத் தழும்பு நோயைத் தடுக்க நடவடிக்கை**

**வினா 9092—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

யாஷ் என்கிற வெள்ளைத் தழும்பு நோயைத் தடுக்க பொது சுகாதாரத் துறையின் மூலமாக சுகாதார ஆய்வாளர்கள், நோயாளிகளின் வீட்டிற்குச் சென்று ஊசி மூலம் மருந்து கொடுத்து வந்த சிகிச்சை முறையைத் திரும்பவும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் தற்பொழுது யாஷ் என்கிற நோயினால் பாதிப்பு இல்லாத காரணத்தினால், யாஷ் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவது அவசியமல்ல.





**140—**

**குழந்தைகள் நல சிகிச்சைப் பிரிவு தொடங்குதல்**

**வினா 9368—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி வட்ட மருத்துவமனையில், குழந்தைகள் நல சிகிச்சைப் பிரிவு தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**141—**

**புதிய மின்மாற்றி அமைத்தல்**

**வினா 9375—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், நவபட்டி கிராம நயனா கவுண்டனூரில் மின் பற்றாக்குறையைப் போக்க அங்கு மேலும் ஒரு புதிய மின்மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**142—**

**இலவச மின்விளக்கு அமைத்தல்**

**வினா 9376—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், மல்லிகுந்தம் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் சந்துகாடு, ஊஞ்சகாடு, காவனூர் போன்ற குடியிருப்புகளுக்கு இலவசமாக மின் விளக்கு அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

**143—**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா 9377—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், அரங்கனூரில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அரங்கனூர் கிராமம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கு தற்போது செயல்படும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதால் அரங்கனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் அவசியமும், சாத்தியமும் இல்லை.

**144—**

**துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக்குதல்**

**வினா 9393—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

பாபநாசம் தொகுதி, தியாகசமுத்திரம் ஊராட்சியில் துணை ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தியாகசமுத்திரம், பாபநாசம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. அவ்வொன்றியத்தின் மக்கள் தொகைக்கு ஏற்ப தற்போது செயல்படும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானது. மேலும் தியாகசமுத்திரம் கிராமத்திலிருந்து 4 கி.மீ. தூரத்தில் சுவாமிமலை ஆரம்ப சுகாதார நிலையமும், 10 கி.மீ. தூரத்தில் கபிஸ்தலம் 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால் தியாகசமுத்திரம் ஊராட்சியில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

**145—**

**ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் அமைத்தல்**

**வினா 9539—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி - கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வெள்ளாளபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது தனியார் கட்டடத்தில் வாடகை ஏதுமின்றி இயங்கி வருகிறது.

[1998 மே 30

1996-97 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தில் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டடம் கட்டும் திட்டத்தின்கீழ் மாற்று இடமாக வெள்ளாளபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, பொதுப்பணித் துறையால் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் முடிக்கப்படும்.

**146—**

**சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவர்கள் நியமித்தல்**

**வினா 9549—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு மருத்துவர் மட்டும் செயல்பட்டு வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், காலி பணியிடங்களுக்கு மருத்துவர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட 2 மருத்துவர் பணியிடங்களில் 7/95 முதல் டி. மனோகரன் என்ற மருத்துவரும், 5/97 முதல் எஸ். சித்ரா என்ற மருத்துவரும் ஆக இரண்டு மருத்துவர்கள் பணிபுரிகிறார்கள்.

**147—**

**குறைந்த மின் அழுத்தம் நிவர்த்தி செய்தல்**

**வினா 9653—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் நகராட்சியின் வார்டு 28, 29, 32, 33 மற்றும் 37-ல் மிகக் குறைந்த மின் அழுத்தம் இருப்பது அரசுக்குத் தெரியுமா?



1998 மே 30]

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை —

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) குறைந்த மின் அழுத்தத்தைப் போக்க இப்பகுதிகளில் மூன்று 100 கி.வோ. மின்மாற்றி அமைத்தும், மின் கம்பிகளை வலுப்படுத்தியும், மின் இணைப்புகளை புதுப்பித்தும் சீரமைக்கும் பணிகள் முடிந்தவுடன் குறைந்த மின் அழுத்தம் நிவர்த்தி செய்யப்படும்.

**148—**

**230 கிலோ வோல்ட் மின்சார அமைப்புத் திட்டம்**

**வினா 9663—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், திருக்கானூர் பட்டியில், 230 கிலோ வோல்ட் மின்சார அமைப்புத் திட்டம் எப்போது முடிவடையும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இத்துணை மின் நிலையத்தின் கட்டுமானப் பணிகளை 1998 மார்ச் திங்களுக்குள் முடித்து, இயக்கி வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**149—**

**மின்சாரம் சீராகக் கிடைக்க நடவடிக்கை**

**வினா 9677—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) பவானி நகரம் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் மின் அழுத்தம் மிகக் குறைவாக இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மின்சாரம் சீராகக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பவானி நகரம் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் மின் கட்டமைப்பின் நிலையினால் மின் அழுத்தம் குறைவாக இருந்தது. இக்குறையை நிவர்த்தி செய்ய சங்கமேஸ்வரர் ஆலயத்தின் அருகில் ஒரு 75 கே.வி.ஏ. மற்றும் வர்ணபுரத்தில் ஒரு 100 கே.வி.ஏ. புதிய மின் மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன்பிறகு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**150—**

**ஓமியோபதி மருந்தாளுநர் பயிற்சி நிலையம் அமைத்தல்**

**வினா 9685—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஓமியோபதி மருத்துவ மருந்தாளுநர் பயிற்சி நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1998 மே 30]

**151—**

**ஓமியோபதி மருத்துவப் பிரிவு அமைத்தல்**

**வினா 9686—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் காவலர் மருத்துவமனையில் ஓமியோபதி மருத்துவப் பிரிவு அமைப்பதற்கான கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் காவலர் மருத்துவமனையில் ஓமியோபதி மருத்துவப் பிரிவு அமைப்பதற்கான கோரிக்கை எதுவும் அரசுக்கு வரவில்லை.

**152—**

**சித்தா மற்றும் ஓமியோபதி மருத்துவ சிகிச்சை முறைகள்**

**வினா 9688—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சித்தா மற்றும் ஓமியோபதி மருத்துவ சிகிச்சை முறைகள் அறிமுகப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

[1998 மே 30

(ஆ) தமிழ்நாட்டில் உள்ள 1420 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவ சிகிச்சைக்காக சித்தா மருத்துவப் பிரிவுகள் 287 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏற்கெனவே இயங்குகின்றன. மாநிலத்தின் நிதிநிலைமைக்கேற்ப காலக்கிரமத்தில் மீதமுள்ள 1133 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தா மருத்துவப் பிரிவுகள் தொடங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போது ஓமியோபதி சிகிச்சை முறை ஆரம்ப சுகாதார நிலையங்களில் அறிமுகப்படுத்தப்படவில்லை. எனினும், அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஓமியோபதி மருத்துவப் பிரிவுகள் தொடங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**153—**

**ஓமியோபதி பயிற்சிக் கல்லூரி அமைத்தல்**

**வினா 9689—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனையில் ஓமியோபதி பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னையில் உள்ள அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவமனையில் ஓமியோபதி பயிற்சிக் கல்லூரி ஆரம்பித்திட கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

**154—**

**ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்துதல்**

**வினா 9714—திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) பர்கூர் தொகுதி, பர்கூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தாலுகா அல்லாத அரசு மருத்துவமனையாக உயர்த்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழக அரசின் நிதிநிலையை கருத்தில் கொண்டு 1998-99ஆம் நிதியாண்டில் இத்தகைய செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**155—**

**பத்மநாபபுரம் மருத்துவமனைக்கு அவசர ஊர்தி**

**வினா 10010—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, பத்மநாபபுரம் மருத்துவமனைக்கு அவசர ஊர்தி (ஆம்புலன்ஸ்) வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விரைவில் வழங்கப்படும்.

**156—**

**துணை மின்நிலையம் அமைத்தல்**

**வினா 10025—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

பாபநாசம் தொகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**157—**

**தனி மின்மாற்றி, தனி ஃபீடர் லைன் அமைக்கும் திட்டம்**

**வினா 10044—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் நகராட்சிக்குக் குடிநீர் வழங்கும் வில்லியம்பாக்கம் இணைப்புக்கு தனி மின்மாற்றியும் தனி ஃபீடர் லைனும் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**158—**

**100 மெகாவாட் மின் திட்டம்**

**வினா 10058—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் 100 மெகாவாட் திறன் கொண்ட மின் திட்டம் தொடங்கும் பணி அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1998 மே 30]

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**159—**

**அ. புதூரில் ஆரம்பச் சுகாதார நிலையம்**

**வினா 10074—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம் அ. புதூரில் ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அ. புதூர் கிராமம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. அவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் தற்போதுள்ள மூன்று ஆரம்பச் சுகாதார நிலையங்களே போதுமானதாகும். மேலும், அ. புதூரிலேயே, துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், அக்கிராமத்திலிருந்து 4 கி.மீ. தொலைவில் வைகுந்தம் ஆரம்பச் சுகாதார நிலையம் செயல்படுவதாலும் அ. புதூரில் புதிய ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் அவசியமும் சாத்தியக்கூறுகளும் இல்லை.

[1998 மே 30

160—

**மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரிக் கட்டடம் பழுதுபார்த்தல்**

**வினா 10076—திரு. ஐ. கணேசன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள கட்டடங்களைப் பழுதுபார்த்துச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள கட்டடங்களைப் பழுதுபார்த்துச் சீரமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது.*

161—

**விகிதாச்சார அடிப்படையில் அடிப்படை ஊழியர் நியமனம்**

**வினா 10079—திரு. ஐ. கணேசன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு அரசு மருத்துவமனையில் 6 படுக்கைகளுக்கு ஒரு அடிப்படை ஊழியர் என்ற விகிதாச்சாரம் அறிமுகப்படுத்தி இருப்பதால் மருத்துவமனைகளில் சுகாதாரக்கேடு ஏற்படுவதாக அரசுக்கு ஏதேனும் தகவல் கிடைத்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், இந்த விகிதாச்சார அடிப்படையை நீக்கிவிட்டு பழைய முறையைக் கொண்டுவர அரசு முயற்சிக்குமா?*



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): நடைமுறையிலுள்ள இம்முறையின் இடர்பாடுகளைக் களைந்து சிறப்பான முறையில் மருத்துவ உதவி வழங்கிடும்முகத்தான் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.*

162—

**துணை மின் நிலையத்தை 110 கி.வோ. திறனுள்ளதாக்குதல்**

**வினா 10084—திரு. ஐ. கணேசன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பள்ளிப்பட்டு தொகுதியில் உள்ள அத்திமாஞ்சேரிப்பேட்டையில் உள்ள துணை மின் நிலையத்தை 110 கி.வோ. திறனுள்ளதாக ஆக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*ஆம்.*

163—

**கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையம் தொடங்குதல்**

**வினா 10091—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பள்ளிப்பட்டு வட்டம், சொரக்காப்பேட்டை கிராமத்தில் கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சொரக்காப்பேட்டை கிராமம், பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. அந்த ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகையின்படி தற்போதுள்ள இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்களே போதுமானதாகும். மேலும் சொரக்காப்பேட்டையில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும் அக்கிராமத்திலிருந்து 7 கி.மீ. தூரத்தில் பொதட்டூர்பேட்டை ஆரம்பச் சுகாதார நிலையம் செயல்படுவதாலும் சொரக்காப்பேட்டையில் கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையம் தொடங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

**164—**

**துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா 10108—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், வடுகபட்டி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**165—**

**கிளாமங்கலத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம்**

**வினா 10509—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கிளாமங்கலத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கிளாமங்கலம் திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. அவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகையின் அடிப்படையில் தற்போது செயல்படும் நான்கு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தேவையைவிட அதிகமானவை என்பதாலும், கிளாமங்கலத்தில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும் அக்கிராமத்தில் புதிய ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**166—**

**வாண்டையார் இருப்பு கிராமத்தில், ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குக் கட்டடம்**

**வினா 10511—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு வட்டம், வாண்டையார் இருப்பு கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஒரத்தநாடு வட்டம், வாண்டையார் இருப்பு கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு 1996-97ஆம் ஆண்டு அரசு அனுமதித்துள்ளது. இதற்கான கட்டடப்பணிகள் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[1998 மே 30

**167—**

**சாமிசெட்டிப்பட்டி ஊராட்சியில் ஆரம்பச் சுகாதார நிலையம்**

**வினா 10545—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட சாமிசெட்டிப்பட்டி ஊராட்சியில் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட சாமிசெட்டிப்பட்டி ஊராட்சியானது நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. இந்த ஒன்றியத்தில் தற்போதுள்ள 5 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மக்கள் தொகைக்கு ஏற்பப் போதுமானதாகும். எனவே, புதிதாக ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதில்லை. எனவே ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டும் கேள்வி எழவில்லை.

**168—**

**ஆரம்பச் சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்குதல்**

**வினா 10597—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஒன்றிய ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்தவும், புதிய கட்டடம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

கருத்துரு ஏதும் ஆய்வில் இல்லை.



1998 மே 30]

**169—**

**உள் நோயாளிகளை அனுமதித்தல்**

**வினா 10598—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, தானிப்பாடி அரசு மருத்துவமனையில் உள் நோயாளிகளை அனுமதிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

தானிப்பாடி அரசு மருத்துவமனையில் உள் நோயாளிகள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

**170—**

**திருவண்ணாமலை அரசு பொது மருத்துவமனைக்குப் புதிய கட்டடம்**

**வினா 10600—திரு. க. மணிவர்மா :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை அரசு பொது மருத்துவமனையின் அபாயகரமான கட்டடத்தில் உள்நோயாளிகள் அனுமதிக்கப் பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) திருவண்ணாமலை அரசு பொது மருத்துவமனையில் கட்டடங்கள் ஏதும் அபாயகரமான நிலையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

[1998 மே 30

**171—**

**மில்லியன் கிணறு திட்டக் கிணறுகளுக்கு மின்சார இணைப்பு**

**வினா 10743—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மில்லியன் கிணறு திட்டத்தின் கீழ் வெட்டப்படும் கிணறுகள் அனைத்திற்கும் உடனடியாக மின்சார இணைப்பு தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மில்லியன் கிணறு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வெட்டப்படும் கிணறுகளுக்கு அரசு ஆணை எண் 151, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (எம்சசி) துறை, நாள் 5-7-1993-ன்படி வருடந்தோறும் 2000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (SC/ST) பம்பு செட்டிற்கு சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

**172—**

**பொறியியல் கல்லூரி தொடங்குதல்**

**வினா 10760—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சார வாரியத்தின் சார்பாக பொறியியல் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**173—**

**கூத்தாநல்லூர் பகுதியில் 33 கி.வாட் துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா 10763—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர், லெஷ்மாங்குடி, பூதமங்கலம், பொதக்குடி போன்ற ஊர்களுக்கு போதிய மின்சாரம் கிடைக்காததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கூத்தாநல்லூர் பகுதியில் 33 கிலோ வாட் மின் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைத்துத் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

**174—**

**புதிய மின்மாற்றி அமைத்தல்**

**வினா 10767—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, பருத்திக்கோட்டையிலுள்ள நம்பர் 4 மின்மாற்றி சரிவர இயங்காததால் அதற்குப் பதிலாக புதிய மின் மாற்றி அமைத்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மேற்கண்ட பழுதான மின் மாற்றியை அகற்றி விட்டு அதே திறன் உள்ள புதிய மின் மாற்றி மாற்றப்பட்டதால் குறைபாடுகள் சரி செய்யப்பட்டு விட்டன.

**175—**

**கூடுதல் சக்தி உள்ள மின்மாற்றிப் பொருத்துதல்**

**வினா 10768—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம் ஆலங்கோட்டை ஊராட்சியில் குறைந்த மின் அழுத்தம் உள்ளதைப் போக்கிட கூடுதல் சக்தி உள்ள மின்மாற்றி பொருத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**176—**

**ஓமியோபதி மருத்துவர்களுக்கு என்லிஸ்ட்மெண்ட் கொடுத்தல்**

**வினா 10769—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் பணியாற்றும் சுமார் 15,000 ஓமியோபதி மருத்துவர்களுக்கு என்லிஸ்ட்மெண்ட் (Enlistment) கொடுத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?





விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.**

தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவமுறை மற்றும் ஓமியோபதி தொழில் புரிவோர் சட்டம் 1971-ன் படி, பதிவு செய்வதற்குக் கடைசி நாளான 4-5-76 வரை தமிழ் நாட்டிலுள்ள சுமார் 15,000 ஓமியோபதி மருத்துவர்களுக்கு, அவர்களின் அனுபவரீதியாக தமிழ்நாடு ஓமியோபதி மருத்துவக் கவுன்சில் மூலம் பதிவு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு அவர்கள் தொழில் புரிந்து வருகிறார்கள். 1976 மே மாதத்திற்கு பிறகு அனுபவ ரீதியாகப் பதிவோ அல்லது என்லிஸ்ட்மெண்டோ (Enlistment) வழங்குவதற்கு மாநில ஓமியோபதிச் சட்டம் 1971 மற்றும் மத்திய ஓமியோபதிச் சட்டம் 1973 ஆகியவைகளில் இடமில்லை.

**177—**

**பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்களைப் பணி நியமனம் செய்தல்**

**வினா 10772—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) பல் நோக்கு சுகாதாரப் பணியாளர் 700 பேர்கள், அடையாறு, எழும்பூர், பூந்தமல்லி, சேலம், காந்திகிராமம் ஆகிய இடங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு பணிநியமனம் செய்யப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம், எனில், இவர்களைப் பணி நியமனம் செய்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பல் நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சி பெற்றவர்கள் மொத்தம் 752 பேர் உள்ளனர். இவர்களில் முதல்

[1998 மே 30

கட்டமாக, நிர்வாகத் தீர்ப்பாயத் தீர்ப்பின்படி, 1989-90 ஆம் ஆண்டு தன்னியக்கச் சுகாதாரப் பணிகள் நிறுவனம் அடையாற்றில் பயிற்சி பெற்ற 18 நபர்களுக்குப் பணி அளிக்கப்பட்டுள்ளது. அடுத்தகட்டமாக 1990-91ஆம் ஆண்டு பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சி பெற்ற 372 நபர்களுக்கும், 1991-92-ல் பயிற்சி பெற்ற 362 நபர்களுக்கும் காலியிடங்களுக்கு ஏற்ப பணி நியமனம் அளிக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

**178—**

**அக நிலைத் தணிக்கைப் பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்**

**வினா 10783—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மின்வாரியத்தில் அகநிலைத் தணிக்கைப் பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடமுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மின்வாரியத்தில் அகநிலைத் தணிக்கைப் பிரிவிற்கு கூடுதல் பணியிடங்கள் வழங்கும் கருத்துரு மின் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

**179—**

**அக்குபங்சர் சிகிச்சை முறையை அறிமுகப்படுத்துதல்**

**வினா 10790—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளில் நவீன விஞ்ஞான நுட்பங்களுடன் கூடிய அக்குபங்சர் சிகிச்சை முறையை அறிமுகப்படுத்த அரசு முன்வருமா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அரசு மருத்துவமனைகளில் அக்குபங்சர் சிகிச்சை முறையை அறிமுகப்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**180—**

**சித்த மருத்துவப் பிரிவு தொடங்குதல்**

**வினா 10802—திரு. கொ.வி. நன்னன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): செங்கம் அரசு மருத்துவமனை உட்பட 46 தாலூகா அரசு மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்க அரசாணை நிலை எண் 558, மக்கள் நல்வாழ்வுத் துறை, நாள் 13-11-97-ல், அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**181—**

**தோரியம், யுரேனியத்தில் இருந்து மின்சாரம் தயாரித்தல்**

**வினா 10804—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி கடற்கரையில் கிடைக்கும் தோரியம், யுரேனியத்தில் இருந்து மின்சாரம் தயாரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**182—**

**நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்ய நடவடிக்கை**

**வினா 10807—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு பொது மருத்துவமனைகளில் நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசு பொது மருத்துவமனைகளில் நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை தற்பொழுது நடைபெறுவதில்லை. இனிவரும் காலத்தில் அதி நவீன வசதிகள் பெருகிய பின்பும் இச்சிகிச்சை பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரும் இம்மருத்துவமனைகளில் நடைபெற வாய்ப்புகள் உள்ளன.

**183—**

**புளியறை பகுதியில் மின் அழுத்தக் குறைவினைப் போக்குதல்**

**வினா 10812—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம் புளியறை பகுதியில் மின் அழுத்தக் குறைவைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



1998 மே 30]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஒரு 63 கே.வி. மின் மாற்றி மற்றும் 1.79 கி.மீ. தூரத்திற்கு ஏ.சி.எஸ்.ஆர். 7/2 59 எம்.எம். மின் கடத்தியுள்ள உயர் அழுத்த மின் பாதை அமைக்கப்படவுள்ளது. இப்பணி முடிவடைந்தவுடன் மின் அழுத்தக் குறைபாடு சீரடையும்.

**184—**

**மின் அழுத்தக் குறைவை நிவர்த்தி செய்தல்**

**வினா 10813—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை 16வது வார்டு மின் அழுத்தக் குறைவை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது இப்பகுதியில் மின் அழுத்தக் குறைபாடு இல்லை.

**185—**

**ஆரம்பச் சுகாதார நிலையத்தை விரிவுபடுத்துதல்**

**வினா 10832—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பாளையம்புதூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பாளையம்புதூர் ஆரம்பச் சுகாதார நிலையம் நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. இது பிரதான ஆரம்ப சுகாதார நிலையமாகும். அனைத்து பிரதான ஆரம்பச் சுகாதார நிலையங்களையும் 24 மணி நேரம் செயல்படும் ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி தற்போது 124 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்பச் சுகாதார நிலையங்களாகச் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும்பொழுது பாளையம்புதூர் பிரதான ஆரமபச் சுகாதார நிலையமும் 24 மணி நேரமும் செயல்படும் ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றுவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**186—**

## ஆரம்பச் சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 11091—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட சத்தியநாதபுரம் ஊராட்சியைச் சேர்ந்த கரியம்பட்டியில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கரியம்பட்டி பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. அவ்வூராட்சி ஒன்றியத்தில் நான்கு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், கரியம்பட்டி கிராமத்திற்கு 4.கி.மீ. தொலைவில்



1998 மே 30]

பெண்ணாகரம் அரசு மருத்துவமனை உள்ளதாலும், கரியம்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அவசியம் ஏதுமில்லை.

**187—**

## ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்குதல்

**வினா 11123—திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், கொளத்தூர் தொகுதி, இலுப்பூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்த அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஏற்கெனவே அரசு மருத்துவமனையாக உள்ளது. ஆகவே தேவையில்லை.

**188—**

## மின் பற்றாக்குறையைத் தீர்த்துக் கொடுத்தல்

**வினா 11133—திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கொளத்தூர் வட்டத்தில் உள்ள விவசாயிகள் கடுமையான மின் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மின் பற்றாக்குறையைத் தீர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டத்தில் உள்ள கிராமப் பகுதிகளில் நிலவிவரும் குறைந்த மின் அழுத்தத்தை நிறைவு செய்யப் புதிதாக ஒரு 33/11 கே.வி. துணை மின் நிலையம் குண்ணாண்டார்கோவில் கிராமத்தில் நிர்மாணம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**189—**

**துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா 11134—திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கொளத்தூர் தொகுதி, குண்ணாண்டார் கோவிலில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், துணை மின் நிலையம் எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**190—**

**ஆரம்பச் சுகாதார நிலையத்தை முழு நேரமும் செயல்படுத்துதல்**

**வினா 11170—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சாத்தான்குளம் தொகுதி, தென்திருப்பேரையில் செயல்படும் ஆரம்பச் சுகாதார நிலையத்தை முழுநேர ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வட்டார அளவிலான ஆரம்பச் சுகாதார நிலையங்களை 24 மணி நேரமும் செயல்படும் ஆரம்பச் சுகாதார நிலையங்களாக மாற்றும் திட்டம் விரிவுபடுத்தப்படும்போது, தென்திருப்பேரையில் செயல்படும் முழுநேர ஆரம்பச் சுகாதார நிலையமும் 24 மணி நேரமும் செயல்படுத்தப்படும்.

**191—**

**முழுமையான மூட்டு மற்றும் அறுவை மருத்துவம் செய்யும் தனித்துவ மருத்துவ நிபுணர்கள் விபரம்**

**வினா 11243—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முழுமையான மூட்டு மாற்று அறுவை மருத்துவம் (Total Joint Replacement Surgery) செய்யும் தனித்துவ அறுவை மருத்துவ நிபுணர்கள் (Super Speciality Surgeon) சென்னை அரசு பொது மருத்துவமனைகளில் எத்தனை பேர் பணியில் இருக்கிறார்கள்?

(ஆ) மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு ஒரு நிபுணர் என்ற அளவில் இத்துறை மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்களா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை அரசுப் பொது மருத்துவமனையில் முழுமையான மூட்டு மாற்றும் அறுவை மருத்துவம் செய்யும் தனித்துவ மருத்துவ

[1998 மே 30

நிபுணர்கள் 3 யூனிட் தலைமை மருத்துவர்களும் 4 முதுநிலை உதவிப் பேராசிரியர்களும் பணிபுரிகின்றனர்.

(ஆ) மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கு இத்துறை மருத்துவர்களை நியமிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**192—**

**இருதய மின்வரைபட நுட்பனர்களை பணியிலமர்த்தும் விவரம்**

**வினா 11244—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் பயிற்சி முடித்த இருதய மின் வரைபட நுட்பனர்களை (இ.சி.ஜி) பணியிலமர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): மருத்துவக்கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவ நிலையங்களில் இருதய மின் வரைபட நுட்பனர் பதவிகள் ஏதும் காலியில்லை. மேலும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருதய மின்வரைபட கருவிகள் வழங்கப்படாததால் இங்கு பதவிகள் நிரப்ப வாய்ப்பில்லை. மேலும், இ.சி.ஜி. நுட்பனர் பதவி நுழைவு நிலை பதவிப் பணி நியமனம் செய்ய மேற்படி நுழைவு நிலைப் பதவிகளுக்குத் தடை உள்ளதால் தற்போது பணி நியமனம் செய்ய இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1998 மே 30]

**193—**

**அரசு மருத்துவமனைகளில் முழு உடல் பரிசோதனை**

**வினா 11249—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுப் பொது மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை செய்து கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சென்னை அரசுப் பொது மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனைத் திட்டம் 30-4-1997 முதல் மிகச் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

**194—**

**புதிய முதுகலைப் பட்டப்படிப்புப் பிரிவுகள் தொடங்குதல்**

**வினா 11268—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சை மருத்துவக் கல்லூரியில் புதிய முதுகலைப் பட்டப் படிப்புப் பிரிவுகள் தொடங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

[1998 மே 30

195—

## இரத்த சேமிப்பு நிலையம் அமைத்தல்

**வினா 11305—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதி, மேலூரில் உள்ள அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் அமைக்கும செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1998-99ஆம் நிதியாண்டில் மேலூர் அரசு மருத்துவமனையில் இரத்த வங்கி துவக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

196—

## கூடுதல் அழுத்த சக்தி உள்ள மின் மாற்றியாக மாற்றுதல்

**வினா 11363—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், மேலப்பாவூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அருகிலுள்ள மின் மாற்றியைக் கூடுதல் அழுத்த சக்தி உள்ளதாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.



1998 மே 30]

197—

## இயற்கை மூலிகைகளையும், மருந்துச் செடிகளையும் பாதுகாத்தல்

**வினா 11370—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் உள்ள இயற்கை மூலிகைகளையும் மருந்துச் செடிகளையும் பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் உள்ள இயற்கை மூலிகைகளையும் மருந்துச் செடிகளையும் பாதுகாக்கும் பொருட்டு, இவ்விடத்தினை "மூலிகைத் தாவரப் பாதுகாப்புப் பகுதி"-யாக அரசு அறிவித்துள்ளது.

198—

## ஈரோடு மின் திட்டத்தில் இணைத்தல்

**வினா 11403—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், ஊத்துக்குளி ஒன்றியம், அ. பெரியபாளையம் ஊராட்சி, நல்லகட்டிப்பாளையம் பகுதி ஈரோடு மின் திட்ட விநியோகத்தில் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பகுதி ஈரோடு மின் திட்டத்தில் இணைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

[1998 மே 30

(அ) ஆம்.

(ஆ) நல்லகட்டிப்பாளையம் பகுதியிலுள்ள குறைந்த அழுத்தத்தைத் தவிர்க்க தனி மின் பாதை அமைக்கும் பணி முடிவடைந்தவுடன், அங்கு மின் அழுத்தக் குறைபாடு சீரடையும். எனவே, நல்லகட்டிப்பாளையம் பகுதியினைக் கோவை தெற்கு மின் பகிர்மான வட்டத்திலிருந்து ஈரோடு மின் பகிர்மான வட்டத்திற்கு மாற்றத் தேவையில்லை.

**199—**

**மின் ஆலைகளில், காற்றாடிகளைக் குறைத்தல்**

**வினா 11590—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நலவாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காற்றாடி மின் ஆலைகளில் உற்பத்தியாகும் தரக் குறைவான மின் சக்தியின் பேரில், அத்தகையக் காற்றாலைகளைக் குறைத்திட தமிழ்நாடு மின் வாரியம் புதிய முயற்சிகளை எடுத்துள்ளனவா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

காற்றாடி ஆலைகளினால் உண்டாகும் தரக்குறைவான மின்சக்தி உற்பத்தியை மேம்படுத்த வாரியம் தீவிர பயனுள்ள நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால் மத்திய அரசின் பரிந்துரையின்படி காற்றாலை மின் உற்பத்தி வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டு, அத்தகைய காற்றாடிகளைக் குறைத்திடும் எண்ணத்தில் செயல்படவில்லை.

**200—**

**150 கி. வாட் துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா 12475—திரு. ஆர்.ஆர் சேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

ஓமலூர் தொகுதி, கொங்குப்பட்டியில் 150 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைத்துச் சீரான மின்சாரம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

துணை மின் நிலையம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

## பதினைந்தாம் பட்டியல்

**1—**

**ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை**

**வினா 2411—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நகராட்சி, பேரூராட்சிகளில் அரசு அனுமதி இல்லாமல் புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆக்கிரமிப்பாளர்கள் நீதிமன்றத்திற்கு செல்லாமல் சட்டத் திருத்தம் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

2—

## வட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்

**வினா 5257—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்ட அலுவலகத்திற்குப் புதிதாகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்ட அலுவலகத்திற்குப் புதிதாக கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது நிலுவையில் இல்லை. மேற்கண்ட அலுவலகம் தற்போது அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

3—

## திருப்பூர் தொகுதியில் பட்டா வழங்குதல்

**வினா 5563—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் தொகுதி, திருப்பூர் நல்லாத்துபாளையத்திற்கு அருகிலுள்ள அறிவொளி நகரில் வாழும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



4—

## விவசாய நிலங்களுக்குப் பட்டா வழங்குதல்

**வினா 6272—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சி, முருங்கைமரத்தரசு கிராமத்தில் விவசாய நிலங்களுக்கு நில அளவை செய்தும் 200 ஏக்கருக்குப் பட்டா வழங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் பட்டா வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பவளந்தூர் கிராமத்தில் 62 ஏக்கர் அரசு நிலம் உள்ளது. இருபது பேர் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். தேவையான நிலவகை மாற்றம் செய்து தகுதி வாய்ந்த நபர்களுக்கு ஒப்படை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5—

## பெரியூர் கிராமங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா 6276—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, பெரியூர் கிராம மக்கள் குடியிருப்புகளுக்கு வீட்டுமனைப் பட்டா உடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பிக்கிலி ஊராட்சி, பெரியூர் கிராமம், ச.எண் 19 மற்றும் 26-இல் உள்ள நிலங்கள் ஒப்படைக்குத் தடை செய்யப்பட்ட-

சாலைப் புறம்போக்கு மற்றும் ஏரிப் புறம்போக்கு நிலங்களாகும். எனவே, இந்நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்பாளர்களுக்கு வீட்டுமனை ஒப்படை வழங்க இயலாது.

6—

**திருப்பூர் தொகுதியில் குடியிருப்பு மனைப் பட்டா வழங்குதல்**

**வினா 6855—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பத்மாவதிபுரம், என்.எஸ்.கே. நகர், சூசையாபுரம் பகுதி மக்கள் குடியிருப்பு மனைப்பட்டா கோரி அரசுக்கு முறையீடு செய்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், தொட்டிப்பாளையம் கிராமத்தில், பத்மாவதிபுரம் பகுதியில் குடியிருப்போருக்கு மனைப் பட்டா வழங்குவது பரிசீலனையில் உள்ளது. என்.எஸ்.கே. நகர் மற்றும் சூசையாபுரம் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு மனைப்பட்டா வழங்குவது தொடர்பாக கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

7—

**சமயசங்கிலி பஞ்சாயத்து, நேரு நகரில் உள்ள வீடுகளுக்குப் பட்டா வழங்குதல்**

**வினா 6898-அ—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், சமயசங்கிலி பஞ்சாயத்து, நேரு நகரிலுள்ள வீடுகளுக்குப் பட்டா வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், சமயசங்கிலி பஞ்சாயத்து, நேரு நகரில் குடியிருந்த மக்களுக்கு, அவர்கள் இருந்த இடத்திற்கு அருகில் உள்ள காடச்சநல்லூர் கிராமம், புல எண் 130-இல் தோப்பு புறம்போக்கில் வீட்டுமனை அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

8—

**குடும்பத் தலைவனை இழந்த ஏழைப் பெண்களுக்கு உதவித்தொகை**

**வினா 7534— திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1995-97 ஆம் ஆண்டுகளில் குடும்பத் தலைவனை இழந்த ஏழைப் பெண்களுக்கு எவ்வளவு தொகை எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?

(ஆ) எடப்பாடி தொகுதியில், குடும்பத் தலைவனை இழந்த ஏழைப் பெண்கள் எத்தனை பேர் விண்ணப்பம் செய்தார்கள்? அதில் எத்தனை பேருக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): எடப்பாடி தொகுதியில் எடப்பாடி வட்டம் மற்றும் சங்ககிரி வட்டத்தின் பகுதி அடங்கும். 1994-95 முதல் 1996-97 வரை நலிந்தோர் நலத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நிவாரணம் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. 31-3-1997 முதல் மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

| விவரம் | 1994-95 | 1995-96 | 1996-97 |
|---|---|---|---|
| பெறப்பட்ட மொத்த மனுக்கள் | 259 | 159 | 208 |
| அனுமதிக்கப்பட்ட மனுக்கள் | 116 | 106 | 176 |
| தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் | 143 | 53 | 32 |
| ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்தத் தொகை | ரூ. 18,40,000 | ரூ. 21,00,000 | ரூ. 27,50,000 |

[1998 மே 30

9—

**பள்ளிப்பட்டு வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்**

**வினா 7939—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆர்.கே. பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு வட்டம் உருவாக்குவது குறித்த செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆர்.கே. பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு வட்டம் உருவாக்குவது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

10—

**நாங்குநேரி தொகுதியில் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

**வினா 8045—திரு. எஸ்.வி. கிருஷ்ணன் :**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, இடையன்குளம் பஞ்சாயத்து, இடையன்குளம் தென்புறம் உள்ள காமராஜ் நகர் மற்றும் மங்கால்குறிச்சி கிராமம் ஆகிய இடங்களில் குடியிருக்கும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்து செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.



1998 மே 30]

11—

**கோவிந்தாபுரம் பகுதியில் குடியிருப்போருக்கு பட்டா வழங்குதல்**

**வினா 8051—திரு. உ. திசைவீரன்.**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி, கோவிந்தாபுரம் பகுதியில் பல ஆண்டுகளாகக் குடியிருப்போருக்கு பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, கோவிந்தாபுரம் பகுதிகளில் ஆக்கிரமிப்புகளைக் கணக்கிட்டு, தகுதியின் அடிப்படைகளிலும் ஒப்படை விதிகளின்படியும் வீட்டுமனைப்பட்டா வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

12—

**வட்டாட்சியர் அலவலகம் அமைத்தல்**

**வினா 8138—திரு செங்கை சிவம்.**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒரு வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கும் எண்ணம் அரசிற்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இப்பொருள் குறித்துச் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

13—

### தாரமங்கலம் தொகுதியில் விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா 8249 — திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கோனகாபாடி கிராமம், ரெட்டிகாடு பகுதியில் பல ஆண்டுகளாக வசிப்போருக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

வீட்டுமனை ஒப்படை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

14—

### வெள்ள அபாயத் தடுப்பு நடவடிக்கை

**வினா 8349—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதியில் காட்டாற்று வெள்ளத்தால் பீமாரப்பட்டி என்ற கிராமமே அடித்துச் செல்ல இருக்கிற அபாயகரமான சூழ்நிலையை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தடுப்பு நடவடிக்கையெடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தண்டராம்பட்டு தொகுதியில் ஓடும் பாம்பனாறு எனும் காட்டாறு பீமாரப்பட்டி கிராமத்திலிருந்து 300 அடி தூரத்தில் ஓடுவதாலும், காட்டாற்றைவிட கிராமம் சுமார் 10 அடி உயரத்தில் உள்ளதாலும் காட்டாற்று வெள்ளத்தால் பீமாரப்பட்டி



கிராமம் அடித்துச் செல்லக்கூடிய அபாயம் ஏதும் இல்லை. எனவே தடுப்பு நடவடிக்கை எடுக்க அவசியம் எழவில்லை.

15—

### நில அளவைக்கானக் கட்டணத்தைச் சீரமைத்தல்

**வினா—8370 திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நில அளவைக்கான கட்டணம் நஞ்சை, புன்செய் என்று நில அடிப்படையில் வித்தியாசம் உள்ளதைத் தவிர மாவட்டத்துக்கு மாவட்டம், வட்டம் வாரியாக வித்தியாசப்படுவதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

16—

### வருவாய் கிராமமாக உயர்த்தும் செயற்குறிப்பு

**வினா 8400—திரு பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம் (நீடாமங்கலம் ஒன்றியம்) புள்ளவராயன் குடிக்காடு கிராமத்தை தனி வருவாய் கிராமமாக அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எப்போது அமைக்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம் (நீடாமங்கலம் ஒன்றியம்) புள்ளவராயன் குடிக்காடு கிராமத்தைத் தனி வருவாய்

[1998 மே 30

கிராமமாக அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

17—

**வறட்சிப் பகுதியாக அறிவித்தல்**

**வினா 8493—திரு. வி. அய்யலுசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி, விளாத்திகுளம், ஒட்டப்பிடாரம், சங்கரன்கோவில் ஆகிய வட்டங்களை வறட்சிப் பகுதியாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டி, விளாத்திகுளம் மற்றும் ஒட்டப்பிடாரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சங்கரன்கோவில் ஆகிய வட்டங்களில் கடந்த சில மாதங்களாகக் குடிநீர்த் தட்டுப்பாடு இருந்ததால் குடிநீர்ப் பற்றாக்குறையை நீக்குவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கான பணிகளும் நடைபெறுகின்றன. வறட்சிப் பகுதிகளாக அறிவிப்பதற்கு சில நிபந்தனைகள் நிறைவு செய்யப்படவேண்டும். இதுவரை வந்துள்ள அறிக்கைகளைக் காணும்பொழுது இப்பகுதியினை வறட்சிப் பகுதியாக அறிவிக்கத் தேவையான காரணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. மேலும், வரும் தென்மேற்குப் பருவக் காலத்தில் இப்பகுதியில் போதிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என எதிர்பார்க்கப்படுகிறது.

18—

**திருப்போரூர் தொகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா 8521—திரு. ஜி. சொக்கலிங்கம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் தொகுதியில் அடங்கிய புறநகர்ப் பகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் உள்ள தடையை நீக்கி வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை ஆய்வு செய்து வரன்முறைப்படுத்த அரசுக்குப் பரிந்துரைக்க ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் தொகுதியில் அடங்கிய புறநகர்ப் பகுதியிலும் வீட்டுமனைப்பட்டா வழங்குவது குறித்து ஆய்வு செய்யும்.

19—

**மண்பாண்டத் தொழிலாளர்களுக்குப் பட்டா வழங்குதல்**

**வினா 8535—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி, அனுப்பர்பாளையம், க.ச.எண் 424 எண்ணிலுள்ள குளைக்குரிய இடத்தை மண்பாண்டத் தொழிலாளர்களுக்குப் பட்டா செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

20—

**ஊராட்சிகளை இணைத்தல்**

**வினா 8781—திரு அ. கடலைமுத்து:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

போடிநாயக்கனூர் தொகுதியில் உள்ள சங்கராபுரம் ஊராட்சி, பொட்டிப்புரம் ஊராட்சி, எர்ணம்பட்டி ஊராட்சிப் பகுதிகளை போடி வட்டத்துடன் இணைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் உள்ள சங்கராபுரம் ஊராட்சி, பொட்டிப்புரம் ஊராட்சி, எர்ணம்பட்டி ஊராட்சி பகுதிகளை போடிநாயக்கனூர் வட்டத்துடன் இணைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**21—**

**கிராம நிர்வாக அலுவலர்களுக்குப் பதவி உயர்வு**

**வினா 8808—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982 முதல் நியமிக்கப்பட்ட தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்களுக்குப் பதவி உயர்வு வழங்க அரசிடம செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம், எனில் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இச்செயற்குறிப்பு வருவாய்த் துறை நிர்வாக சீர்திருத்த குழுவின் பரிந்துரைக்கு அனுப்பப்பட்டு அதன் பரிந்துரை எதிர்பார்க்கப்படுகிறது.



1998 மே 30]

**22—**

**ஆண்டிமடம் தொகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா 8809—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை வட்டம், நக்கம்பாடி மற்றும் நின்னியூர் ஜாகாவாரி புறம்போக்கு நிலத்தில் வசிப்போருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பரிசீலனையில் உள்ளது.

**23—**

**மேச்சேரி ஒன்றியத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா 9380—திரு ப. கோவிந்தன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், பானாபுரம் கிராமம், சர்வே எண் 6-இல் குடியிருக்கும் 25 பேர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

குடியிருப்புப் பகுதி, தீர்வை ஏற்பட்ட தரிசு ஆகும். இதனை கிராம நத்தமாக வகை மாற்றம் செய்து, பின் வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

24—

### மாவட்டப் பெயர் மாற்றம்

**வினா 9657—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம் என்பதை கடலூர்-வள்ளலார் மாவட்டம் எனப் பெயர் மாற்றம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

இப்பொருள் குறித்து செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

25—

### குட்டப்பட்டி ஊராட்சியிலுள்ளவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா 9675—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், குட்டப்பட்டி ஊராட்சி, அம்மன்கோவிலூரில் வசிக்கும் ஏழை மக்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

குடியிருப்புதாரர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.



26—

### குடியிருப்போருக்கு வீட்டுமனைப்பட்டா

**வினா 10000—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் :**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானி நகரிலும், ஜம்பை பேரூராட்சி, தலைவாய்பேட்டையிலும், பெரியபுலியூர் ஊராட்சிமன்றம் சேவானூரிலும், ஓடைப் புறம்போக்கிலும், சாலைப் புறம்போக்கிலும் 25 வருடங்களுக்குமேல் குடியிருப்போருக்கு மனைப்பட்டா வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

வீட்டுமனைப்பட்டா வழங்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

27—

### மின் இணைப்பு வழங்குதல்

**வினா 10113—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசின் ஓடைப் புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க வருவாய்த் துறை மூலம் தடை இல்லாச் சான்று வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

அரசு புறம்போக்குகளில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு தமிழ்நாடு மின்சார வாரியமே தகுதியின் அடிப்படையில் மின் இணைப்பு வழங்கலாம் என அரசு ஆணையிட்டுள்ளது. இதற்கு வருவாய்த் துறையின் தடையில்லாச் சான்று தேவையில்லை.

[1998 மே 30

28—

**சாதிச் சான்று வழங்குதல்**

**வினா 10547— திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் காட்டுநாயக்கன், சோழா, கொண்டா ரெட்டி போன்ற தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு 1989 ஆம் ஆண்டு முதல் சாதிச் சான்றிதழ் வழங்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் சான்றிதழ் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் 133 காட்டுநாயக்கன், 5 கொண்டா ரெட்டி, 61 கனியான், 3 கோரகா, 6 கம்மார, 11 பனியன் மற்றும் 24 மலைக்குறவன் சாதிச் சான்றுகள் தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு 1989ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) மேலும் பழங்குடியினர் சாதிச் சான்றுகள் கேட்டு வரும் மனுக்களை உடனுக்குடன் முடிவு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கோட்டாட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு சாதிச்சான்று வழங்கும் பணி கண்காணிக்கப்பட்டு வருகிறது.

29—

**பெண்ணாகரம் தொகுதியில் வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

**வினா 10558— திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோடிஅள்ளி ஊராட்சி, டீக்கடை, மந்தமேடு காந்திநகர், தெய்வபுரம் ஆகிய ஊர்களில் மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஊராட்சி மற்றும் கால்நடைத் துறை இசைவு பெற்று வீட்டுமனைப் பட்டா வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

30—

**பெண்ணாகரம் தொகுதியில் வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

**வினா 10559— திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, சுஞ்சல்நத்தம், ஏரியூர், ஈச்சம்பாடி, கூர்காம்பட்டி, தண்டாபட்டாக்காரன்கொட்டாய் ஆகிய ஊர்களில் புறம்போக்கு நிலத்தில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தகுதியான நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

31—

**பெண்ணாகரம் தொகுதியில் வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

**வினா 10560—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, பெரியூர், சக்கிலிநத்தம் ஆகிய ஊர்களில் புறம்போக்கு நிலத்தில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1998 மே 30

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

வி

டை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தகுதியுள்ள நபர்களுக்கு கிராமநத்தம் புறம்போக்கில் காலியாக உள்ள இடத்தில் வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**32—**

**பெண்ணாகரம் தொகுதியில் வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

**வினா 10561—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, எல்லுக்குழி, போலனஅள்ளி, கமலநத்தம் ஆகிய ஊர்களில் மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள நிலம் ஆட்சேபணைக்குரியது மற்றும் தடை செய்யப்பட்ட வகைபாடு நிலமாகும். ஆகவே, தொடர்பான துறைகளைக் கலந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**33—**

**அரக்கோணம் பகுதியை திருவள்ளூர் மாவட்டத்தில் சேர்த்தல்**

**வினா 1075—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**



1998 மே 30]

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் பகுதியை, பொதுமக்களின் நலன் கருதி திருவள்ளூரை தலைநகராகக் கொண்டு இயங்கும் திருவள்ளூர் மாவட்டத்துடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இது குறித்து செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**34—**

**காங்கேயம் வட்டத்தில் வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

**வினா 10800—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், வெள்ளக்கோவில் வருவாய் கிராமம், அம்மன்கோவில் பகுதி க.ச.எண் 371/ஏ1, புறம்போக்கில் குடியிருக்கும் பொதுமக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1998 மே 30

35—

**கட்டடம் மற்றும் நிலம் நகராட்சிக்கு வழங்குதல்**

**வினா 10821—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, தக்கலையில் உள்ள சி.பி. மெமோரியல் கட்டடம் மற்றும் நிலத்தை பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் திருமண மண்டபம் மற்றும் கடைகள் கட்ட அந்த இடத்தை பத்மநாபபுரம் நகராட்சிக்கு வழங்க ஆணை பிறப்பிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

29-8-1997 நாளிட்ட அரசு வருவாய்த் துறை ஆணை (நிலை) எண் 801-ல், சி.பி. மெமோரியல் கட்டடம் மற்றும் நிலத்தை பத்மநாபபுரம் நகராட்சிக்கு உரிமைமாற்றம் வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

36—

**தண்டராம்பட்டு தொகுதியிலுள்ள ஏழை மக்களுக்கு விட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா 10881—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, பாட்டை, குளம், மந்தைவெளி, ஏரிப் புறம்போக்குகளில் குடியிருக்கும் ஏழை மக்களுக்கு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

மந்தைவெளி மற்றும் நீர்நிலைப் புறம்போக்கு போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை நேரில் பார்வையிட்டு, அவற்றை வரன்முறைப்படுத்த, தக்க பரிந்துரைகளை செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் அறிக்கை பெறப்பட்டதும், தண்டராம்பட்டு தொகுதி ஆட்சேபகரமான புறம்போக்கு பகுதிகளில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

37—

**பெண்ணாகரம் தொகுதியிலுள்ள புறம்போக்கு நிலத்திற்குப் பட்டா வழங்குதல்**

**வினா 11093—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கோடல்பட்டியில் வசிக்கும் மக்களின் விவசாய புறம்போக்கு நிலத்திற்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

மஞ்சிநாயக்கனஹள்ளி வருவாய் கிராமத்தைச் சார்ந்த கோடல்பட்டி மற்றும் புதுப்பட்டியில் உள்ள நிலங்களை நிலவகை மாற்றம் செய்த பின்னர் சாகுபடியாளர்களுக்கு ஒப்படை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

38—

**பெண்ணாகரம் தொகுதியில் விட்டுமனைப்பட்டா வழங்குதல்**

**வினா 11094—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பருவதனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த திருவள்ளுவர் நகரில் சுமார் 50 (ஐம்பது) வருடங்களாக குடியிருந்து வரும் வீடுகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**39—**

**பெண்ணாகரம் தொகுதியில் வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

**வினா 11095—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பெரும்பாலை மற்றும் கொண்டேனஹள்ளி ஊராட்சியைச் சேர்ந்த சாமாத்தாள்பள்ளம் என்ற ஊரில் வசிக்கும் ஏழை எளிய மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் வீட்டுமனைப்பட்டா வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



**40—**

**பெண்ணாகரம் தொகுதியில் வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

**வினா 11096—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட சத்தியநாதபுரம் ஊராட்சியைச் சேர்ந்த கரியம்பட்டியில் வசிக்கும் ஏழை எளிய மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இவர்கள் இருப்பது தனியார் நிலம். இருப்பினும் விதிகளின்கீழ் பட்டா வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**41—**

**பெண்ணாகரம் தொகுதியில் நிலப் பட்டா வழங்குதல்**

**வினா 11097—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கெண்டையனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த மேட்டுக்காடு என்ற கிராமத்தில் வசிக்கும் ஏழை எளிய மக்களின் விவசாய நிலங்களுக்கு நிலப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

[1998 மே 30

பெண்ணாகரம் வட்டம், கெண்டையனஅள்ளி கிராமத்தில் மேட்டுக்காடு ஊரில் உள்ள ஏழை எளிய மக்கள் ஆக்கிரமிப்பு செய்து சாகுபடி செய்துவரும் நிலங்கள் மேட்டூர் நீர்த்தேக்க நீர்பிடிப்பு நிலங்கள் என்பதால் பட்டா வழங்க இயலாது.

42—

**பெண்ணாகரம் தொகுதியில் நிலப்பட்டா வழங்குதல்**

**வினா 11098—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட அரக்காசனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த பாலிக்காட்டு வளவில் வசிக்கும் ஏழை எளிய விவசாயிகளின் புறம்போக்கு நிலங்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது:

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தடை செய்யப்படாத வகைபாடுள்ள நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்தவருக்கு ஒப்படை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

43—

**பெண்ணாகரம் தொகுதியில் நிலப்பட்டா வழங்குதல்**

**வினா 11099—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பெரும்பாலை ஊராட்சியைச் சேர்ந்த கொம்பாடியூர் காட்டுவளவு



1998 மே 30]

என்ற இடத்தில் வசிக்கும் ஏழை எளிய விவசாயிகளுக்கு நிலப்பட்டா வழங்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நிலவகை மாற்றம் செய்து ஆக்கிரமிப்புதாரர்களுக்கு இலவசப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

44—

**பெண்ணாகரம் தொகுதியில் வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

**வினா 11100—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பெரும்பாலை ஊராட்சியைச் சேர்ந்த சாணாரப்பட்டியில் உள்ள ஏழை எளிய மக்களின் வீடுகளுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் வீட்டுமனைப்பட்டா வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப்பட்டா வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1998 மே 30

45—

**பெண்ணாகரம் தொகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா 11101—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நாகமரை ஊராட்சிக்குட்பட்ட மணியக்காரன்கொட்டாய் என்ற ஊரில் சுமார் 50 வீடுகளுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

46—

**புறம்போக்கு நிலத்திற்குப் பட்டா வழங்குதல்**

**வினா 11102—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட அஜ்ஜனஅள்ளியில் இருக்கும் போடுகால் புறம்போக்கு நிலத்திற்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**



1998 மே 30]

(அ) மற்றும் (ஆ): ஆக்கிரமிப்பு செய்து சாகுபடி செய்து வரும் மக்களுக்கு, தகுதியின் அடிப்படையில் ஒப்படை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

47—

**பெண்ணாகரம் தொகுதியில் வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

**வினா 11106—திரு ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கூத்தப்பாடி ஊராட்சியைச் சேர்ந்த ஊட்டமலையில் வசிக்கும் ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

48—

**பெண்ணாகரம் தொகுதியில் வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

**வினா 11107—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட தொண்ணகுட்டஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த அத்திமரத்தூர் புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டி வசிக்கும் ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

137 நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டு உள்ளது.

[1998 மே 30

49—

**திருப்பூர் தொகுதியில் விட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா 12434—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், தொட்டிப்பாளையம் கிராமம், க.ச. எண் 301/ஏ, 301/சி-இல் குடியிருக்கும் 96 குடும்பங்களுக்கு பட்டா வழங்குமாறு அரசிற்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அந்தக் கோரிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

50—

**மசனக்குடி மலைவாழ் மக்களுக்கு விட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா 12469—திரு. டி. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், மசினக்குடி மலைவாழ் மக்கள் குடியிருப்புகளுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்.

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): குடியிருப்புகளுக்குப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1998 மே 30]

51—

**நிலச்சீர்திருத்தத்தை செம்மையாக்கும் வழிவகைகள்**

**வினா 13173— திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலச்சீர்திருத்தத்தை மேலும் செம்மையாக்கும் வழிவகை குறித்துத் தீர்மானிக்க விவசாயத் தொழிலாளர் சங்கங்களை அழைத்துப் பேச அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

52—

**வேட்டப்பட்டு ஊராட்சியில் விட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா 13293—திரு. ஆர். மகேந்திரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோலையார்பேட்டை ஒன்றியம், வேட்டப்பட்டு ஊராட்சி, சொக்கலாம்பட்டி கிராமத்தில் நீர்பிடிப்பு இல்லாத குடியிருப்புகளுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், வேட்டப்பட்டு மதுரா, சொக்கலாம்பட்டி கிராமத்தில் ஏரி புறம்போக்கில் ஆக்ரமணம்

[1998 மே 30

செய்துள்ள நபர்களுக்கு, இப்புறம்போக்கில் வீட்டுமனை ஒப்படை செய்வது சம்பந்தமாக பொதுப்பணித் துறையின் கருத்துருவினைப் பெற்று, கிராம நத்தமாக மாற்ற அரசால் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**53—**

**கிராமங்களை வட்டத்துடன் இணைத்தல்**

**வினா 14242—திரு. லி. அய்யலுசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எட்டயபுரம் தனி வட்டமாக அறிவிக்கப்படுவதைத் தொடர்ந்து கோவில்பட்டிக்கு மிக அருகிலுள்ள இளையரசனேந்தல் பிர்க்காவும், திருவேங்கடம் பிர்க்காவிலிருந்து குளக்கட்டாகுறிச்சி, சுந்தரேஸ்வரபுரம், மைல்பாறை, நடுவப்பட்டி, வரகனூர் ஆகிய ஐந்து கிராமங்களை கோவில்பட்டி வட்டத்துடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரம் தனி வட்டமாக அறிவிக்கப்படுவதைத் தொடர்ந்து கோயில்பட்டிக்கு மிக அருகிலுள்ள இளையரசனேந்தல் பிர்க்காவும், திருவேங்கடம் பிர்க்காவிலிருந்து குளக்கட்டாகுறிச்சி, சுந்தரேஸ்வரபுரம், மைல்பாறை, நடுவப்பட்டி, வரகனூர் ஆகிய ஐந்து கிராமங்களை கோவில்பட்டி வட்டத்துடன் இணைப்பது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**54—**

**கண்காணிப்புக் குழு அமைத்தல்**

**வினா 3399—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

அரசு அளிக்கும் மானியங்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுவதைக் கண்காணிக்க, கண்காணிப்புக் குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**55—**

**விவசாய உயர்மட்டக் குழு அமைத்தல்**

**வினா 4979—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகள் பிரச்சினைகளைக் கண்டறிந்து அரசுக்குப் பரிந்துரை வழங்க விவசாயிகள் உயர்மட்டக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**56—**

**மானிய விலையில் நடுத்தர விவசாயிகளுக்கு விவசாயக் கருவிகள் வழங்குதல்**

**வினா 6075—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

சிறு, குறு விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் விவசாயக் கருவிகள் வழங்குவதைப்போல் நடுத்தர விவசாயிகளும் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விவசாயிகளுக்குக் கீழ்க்கண்ட மைய அரசு திட்டங்களின்கீழ் விவசாயக் கருவிகள் 50 சதவீதம் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன :

1. தீவிர தானிய அபிவிருத்தித் திட்டம் (நெல்)
2. தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டம்
3. தேசிய பயறு அபிவிருத்தித் திட்டம்
4. எண்ணெய்வித்து அபிவிருத்தித் திட்டம்
5. கரும்பு அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டங்கள் சிறு, குறு விவசாயிகள் மட்டுமின்றி அனைத்து விவசாயிகளும் பயன்பெறும்படி செயல்படுத்தப்படுகின்றன.

**57—**

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை மீண்டும் செயல்படுத்துதல்**

**வினா 6147—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுககு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், மழையூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், மழையூரில் மீண்டும் துணை விற்பனைக் கூடம் 1997-98ஆம் ஆண்டில் தொடங்க தக்க நடவடிக்கை வேளாண்மை விற்பனைத் துறை மூலம் எடுக்கப்பட்டு வருகிறது.

**58—**

**டீசல் விநியோகம் செய்தல்**

**வினா 6162—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையம் (என்கோபெட்) மூலம் தருமபுரியில் டீசல் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஆம்.

**59—**

**விளை பொருள்களுக்கு உடனடியாகப் பணம் வழங்கும் ஏற்பாடு**

**வினா 6167—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கென கொள்முதல் செய்யப்படும், விவசாயிகளின் நெல், பருத்தி, கடலை போன்ற

[1998 மே 30

விளைபொருட்களுக்கு உடனடியாகப் பணம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கென விளைபொருட்கள் ஏதும் கொள்முதல் செய்யப்படுவதில்லை. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு, விவசாயிகளால் விற்பனைக்குக் கொண்டுவரப்படும் அனைத்து விவசாய விளைபொருட்களுக்கும் மறைமுக ஏலத்தின் மூலம் வியாபாரிகளால் நேரடியாக விலை நிர்ணயம் செய்யப்பட்டு, பெரும்பாலான ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், வியாபாரிகளால் அன்றே பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகின்றது தொலைதூரங்களிலிருந்து வரும் வியாபாரிகள் மறைமுக ஏலத்தில் வாங்கும் மூட்டைகளை கணக்கிட்டுக்கூற இயலாததாலும், போதிய அளவு பணம் கொண்டு வராததாலும் ஓரிரு நாட்களில் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. எனினும் ஒழுங்குமுறை விற்பனைக் கூட அலுவலர்கள் உடனே பணம் பட்டுவாடா செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். இதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

60—

**சிறுதானியங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு**

**வினா 6702—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) [illegible] போன்ற சிறு தானியங்கள் விளைவு அதிக அளவில் உறபத்தி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**



1998 மே 30]

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்க ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித் திட்டம் (அரிசி) தீவிர மக்காச்சோள அபிவிருத்தித் திட்டம், சிறுதானிய சிறுதளைகள் விநியோகத் திட்டம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகளின் வயல்களில் தீவிர தானிய உற்பத்தித் திட்டம் ஆகியன மத்திய அரசு மானியத்துடன் செயல்படுத்தப்படுகின்றன.

61—

**வேளாண் அறிவியல் மையம் ஏற்படுத்துதல்**

**வினா 6935—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வேளாண் அறிவியல் மையம் நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறுவப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

62—

**வேளாண் கல்லூரி அமைத்தல்**

**வினா 7388—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**63—**

**வேளாண் பொறியியல் பட்டதாரிகளைப் பணி நியமனம் செய்தல்**

**வினா 7490—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண் பொறியியல் துறையில் உதவிப் பொறியாளர் பணிக்கு, அதற்கென படித்த வேளாண் பொறியியல் பட்டதாரிகளைக் கொண்டு, பணியிடங்கள் நிரப்பப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன காரணம்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1982-84ஆம் ஆண்டுகளில் தேர்வாணையம் மூலம் உதவிப் பொறியாளர் பதவிக்கு நேரடி நியமனம் செய்யப்பட்டது. அவ்வாறு 179 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அதில் முதல் 88 பேர் வேளாண்மைப் பொறியியல் பட்டதாரிகள். பின்னர் 31-12-1985 வரை தற்காலிக நியமனம் செய்யப்பட்டு அரசு ஆணை எம்.எஸ்.எண் 444, வேளாண்மைத் துறை, நாள் 13-6-1990-ன்படி பணி வரன்முறை செய்யப்பட்ட 157 உதவிப் பொறியாளர்களில் 58 பேர் வேளாண்மைப் பொறியியல் பட்டதாரிகள். 1-1-1986 முதல் நேரடி நியமனம் மூலம் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு அரசு ஆணை 511, வேளாண்மைத் துறை நாள் 19-9-1995-ன்படி பணி வரன்முறை செய்யப்பட்ட 114 உதவிப் பொறியாளர்களில் 83 பேர் வேளாண்மைப் பொறியியல் பட்டதாரிகள். இது தவிர கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட 5 உதவிப் பொறியாளர்களில் 3 பேர்



வேளாண்மை பொறியியல் பட்டதாரிகள் ஆக மொத்தம் 232 வேளாண்மைப் பொறியியல் பட்டம் பெற்றவர்கள் உதவிப் பொறியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். உதவிப் பொறியாளர்கள் நேரடி நியமனத்தில் வேளாண்மைப் பொறியியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதையே இது காட்டுகிறது.

**64—**

**வேளாண் பொறியியல் பட்டப் படிப்பு படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு**

**வினா 7492—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக, வேளாண் பொறியியல் பட்டப் படிப்பு படித்து வேலையின்றியுள்ள 600-க்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண் பொறியியல் பட்டதாரிகள் கிடைக்காதிருக்கும் பட்சத்தில் மட்டுமே மற்ற பிரிவுகளில் பொறியியல் பட்டம் பெற்றவர்கள் கருதப்படுவார்கள் என்று தமிழ்நாடு வேளாண் பொறியியல் சிறப்பு விதிகளின் வழிவகை செய்யப்பட்டுள்ளதின் அடிப்படையில் வேளாண் பொறியியல் துறையில் உதவிப் பொறியாளர் (வேளாண் பொறியியல்) காலிப் பணியிடங்களில், நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும் பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தற்போது வேளாண் பொறியியல் துறையிலிருந்து ஊரக வளர்ச்சித் துறைக்கு மூன்று ஆண்டுகளுக்கு உதவிப் பொறியாளர்கள் அனுப்பப்பட்டுள்ளதால் சுமார் 100 உதவிப் பொறியாளர்கள் (வேளாண் பொறியியல்) பணியிடங்கள் காலியாக உள்ளன. இவற்றில் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும்போது தமிழ்நாடு வேளாண் பொறியியல் சிறப்பு விதிகளில் கூறப்பட்ட வழிவகைகளின்படி வேளாண் பொறியியல் பட்டதாரிகள் கருதப்படுவார்கள்.

65—

**சர்க்கரை ஆலைகளே கரும்பு வெட்டுக் கூலி மற்றும் வண்டி வாடகை ஏற்பு**

**வினா 7639—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரும்பு உற்பத்தியாளர்களுக்கு, கரும்பு வெட்டுக் கூலியும், வண்டி வாடகையையும் சர்க்கரை ஆலைகளே ஏற்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

66—

**இரசாயன உரங்கள் ஆய்வுக்கூடம் அமைத்தல்**

**வினா 7893—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் இரசாயன உரங்கள் ஆய்வுக்கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

67—

**ஒருங்கிணைந்த நெல் மேம்பாட்டுத் திட்டம்**

**வினா 7894—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



ஒருங்கிணைந்த நெல் மேம்பாட்டுத் திட்டத்தினை அமல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஆம். தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டம், மத்திய, மாநில அரசுப் பங்கீட்டுடன் 1994-95 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

68—

**எண்ணெய்ப் பனை சாகுபடியை அதிகரிக்க விவசாயிகளுக்குப் பயிற்சி**

**வினா 7895—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எண்ணெய்ப் பனை சாகுபடியை அதிகரிக்க விவசாயிகளுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) எண்ணெய்ப் பனைச் சாகுபடியை அதிகரிக்க விவசாயிகளுக்கு அந்தந்த மாவட்டத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது தவிர எண்ணெய்ப் பனைச் சாகுபடி செய்யும் பிற மாநிலங்களுக்கு விவசாயிகளை அழைத்துச் சென்றும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(ஆ) வருடந்தோறும் விவசாயிகளைப் பிற மாநிலங்களான, கர்நாடக மற்றும் ஆந்திரப் பிரதேசத்திற்கும் அழைத்துச் சென்று எண்ணெய்ப் பனைச் சாகுபடி பற்றிப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

[1998 மே 30

1993-94ஆம் ஆண்டில் 1092 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

1994-95ஆம் ஆண்டில் 150 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

1995-96ஆம் ஆண்டில் 393 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

1996-97ஆம் ஆண்டில் 403 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

**2038**

மொத்தத்தில் 2038 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**69—**

**விருதாசலத்தில் உள்ள எண்ணெய் பிழியும் ஆலையை மறுபடியும் இயக்குதல்**

**வினா 8504—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதாசலத்தில் இயங்காமல் உள்ள சூரியகாந்தி எண்ணெய் பிழியும் ஆலையை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): விருதாசலத்தில் உள்ளது தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்து உற்பத்தியாளர்கள் இணையத்தின் நிர்வாகத்தில் இயங்கும் கடலை எண்ணெய் பிழியும் ஆலையாகும். இடையில் இயங்காமல் இருந்து மீண்டும் புதுப்பிக்கப்பட்டு இதனை இயக்கும் வகையில் வெள்ளோட்டம்விட 3-6-1997 நாளிட்ட வேளாண்மைத் துறை அரசாணை (நிலை) எண் 240-ல் அரசு அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளது.



1998 மே 30]

**70—**

**வாழைக்கு சரியான சந்தை வசதி ஏற்படுத்துதல்**

**வினா 8707—திரு. கோ.வீ. நன்னன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் பகுதியில் அதிகமாக விளையும் வாழைக்கு சரியான சந்தை வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எம்முறையில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) செங்கம் பகுதியில் அதிகமாக விளையும் வாழையை விற்பனை செய்திட தனியார் மூலம் அமைத்திடும் சந்தை மையங்களே தற்போது நடைமுறையில் உள்ளன. சந்தை வசதி ஏற்படுத்தித் தர அரசிடம் தற்போது திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**71—**

**வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம்**

**வினா 9164—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

[1998 மே 30

(ஆ) வினா எழவில்லை.

72—

**வேளாண் ஆய்வு மையம் தொடங்குதல்**

**வினா 9170—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினத்தில் வேளாண் ஆய்வு மையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

73—

**பழம் மற்றும் பூக்களை ஏற்றுமதி செய்யும் திட்டம்**

**வினா 9201—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மல்கோவா மாம்பழம், மல்லிகைப்பூ ஆகியவற்றை சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யும் எண்ணம் அரசுக்கு உண்டா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகள் மாதிரிப் பண்ணைகளாக இயங்கி வருவதுடன், விவசாயிகளுக்குச் சேவை புரியும் நோக்கத்தோடு செயல்பட்டு வருவதால் வியாபார நோக்கோடு செயல்பட இயலாது.



1998 மே 30]

ஆகவே, மாம்பழம், மல்லிகைப்பூ போன்றவை சிங்கப்பூருக்கு இத்துறையின் மூலம் ஏற்றுமதி செய்யப்படுவதில்லை.

74—

**அறுவடை இயந்திரங்களை வாங்கி விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுதல்**

**வினா 9777—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் அறுவடை செய்வதற்குப் போதுமான விவசாயத் தொழிலாளர்கள் கிடைக்காததால் போதுமான அளவு அறுவடை இயந்திரங்களை வாங்கி விவசாயிகளுக்கு வாடகைக்கு விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை —

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் அறுவடை செய்வதற்கு அறுவடை இயந்திரங்கள் வாடகைக்குக் கேட்டு கோரிக்கைகள் ஏதும் பெறப்படவில்லை. அவ்வாறு கோரிக்கைகள் பெறப்பட்டால் அறுவடை இயந்திரங்கள் மூலமாக வேளாண் கூட்டுறவு இணையத்தினால், வாடகைப் பணி செய்து கொடுக்கப்படும்.

75—

**ஏற்றுமதியை ஊக்குவிக்க ஒருங்கிணைந்த பயிற்சி மையம் தொடங்குதல்**

**வினா 10180—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிக ரீதியான தொழில்களான மலர், காய்கறி, காளான் ஆகியவையின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை ஊக்குவிக்க எடப்பாடி

தொகுதியில் ஒருங்கிணைந்த பயிற்சி மையம் ஒன்றைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விடை—

(அ) மற்றும் (ஆ): எடப்பாடி தொகுதியில் வணிக ரீதியான வேளாண் தொழில்களான மலர், காய்கறி, காளான் ஆகியவைகளின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு ஒருங்கிணைந்த பயிற்சி மையம் தொடங்குவது குறித்த திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**76—**

**வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணை அமைத்தல்**

**வினா 10416—டாக்டர் மு. தேவராஜன்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெரம்பலூர் தொகுதி, பெரம்பலூரில் விதைப் பண்ணை, வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணை அமைக்க அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**77—**

**மஞ்சள் உற்பத்தியைப் பெருக்குதல்**

**வினா 10432—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மஞ்சள் உற்பத்தியைப் பெருக்க புதியதாக வீரிய விதைகளைக் கண்டுபிடித்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்*

*(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மஞ்சள் உற்பத்தியைப் பெருக்க கோ. 1, பி.எஸ்.ஆர் 1, பி.எஸ்.ஆர் 2 ஆகிய மூன்று வீரிய மஞ்சள் இரகங்களை உருவாக்கியுள்ளது.*

**78—**

**மாதிரி விவசாயப் பண்ணை அமைத்தல்**

**வினா 10463—திரு. ந. பாண்டுரங்கன்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர், தெள்ளார் மற்றும் சேத்துப்பட்டு ஆகிய ஒன்றியங்களில் ஏதாவது ஓரிடத்தில் மாதிரி விவசாயப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

[1998 மே 30

79—

**வேளாண்மைத் துறை அலுவலகங்களை இடமாற்றம் செய்வது குறித்து**

**வினா 11352—திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மைத் துறை அலுவலகங்கள் மீண்டும் குடுமியான்மலை அண்ணாப் பண்ணைக்கு மாற்றப்பட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

80—

**தோட்டக்கலைப் பண்ணை அமைத்தல்**

**வினா 11415—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் தேசூர், சேத்பட்டு, பெரணமல்லூர் ஆகிய இடங்களில் ஏதாவது ஒன்றில் அரசு தோட்டக்கலைப் பண்ணை அல்லது காய்கறி விதை உற்பத்தி மையம் தொடங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் தேசூர், சேத்பட்டு, பெரணமல்லூர் ஆகிய இடங்களில் ஏதாவது ஒன்றில் அரசு தோட்டக்கலைப் பண்ணை அல்லது காய்கறி விதை உற்பத்தி மையம் தொடங்கிட அரசிடம் தற்சமயம் திட்டம் எதுவுமில்லை.



1998 மே 30]

81—

**உழவர் பயிற்சி மையம் அமைத்தல்**

**வினா 11417—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தேசூர், சேத்பட்டு, பெரணமல்லூர் ஆகிய ஊர்களில் ஏதாவது ஒன்றில் உழவர் பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

82—

**வேளாண்மைக் கல்லூரி தொடங்குதல்**

**வினா 11439—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[1998 மே 30

83—

### வேளாண்மை ஆராய்ச்சி மையம் அமைத்தல்

**வினா 11440—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர், தேசூர், சேத்பட்டு ஆகிய ஊர்களில் ஏதாவது ஒன்றில் வேளாண்மை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

84—

### சொட்டு நீர்ப் பாசனத்திற்கு மானியம் வழங்குதல்

**வினா 11454—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதியில் கடும் வறட்சி நிலவுவதால் இங்கு சொட்டு நீர்ப் பாசனத்தை நடைமுறைப்படுத்த அதிக அளவில் மான்யம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சாத்தான்குளம் தொகுதியில் கடும் வறட்சி நிலவுவதால் இங்கு சொட்டு நீர்ப் பாசனத்தை நடைமுறைப்படுத்த அதிக அளவில் மானியம் வழங்க அரசு ஆவன செய்யும்.



1998 மே 30]

85—

### சலுகை விலையில் உரம் மற்றும் பூச்சி மருந்து வழங்குதல்

**வினா 12077—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு எந்தெந்த உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் சலுகை விலையில் வழங்கப்படும்?

(ஆ) அதன் உத்தேச மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மத்திய அரசு சலுகை விலையில் உரங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் கட்டுப்பாடு நீக்கப்பட்ட உரங்களான டைஅமோனியம் பாஸ்பேட், சூப்பர் பாஸ்பேட் (தூள்), சூப்பர் பாஸ்பேட் (குருணை) மியூரியேட் ஆப் பொட்டாஷ் மற்றும் கூட்டு உரங்கள், மற்றும் கார்பன் டை சிம் (ஃபுன்கோ செய்) குளோரின் பரிபாஸ் போன்ற பூச்சி மருந்துகள் ஆகியவைகளுக்கு காரிப்/ரபி பருவவாரியாக அதிகபட்ச விலையில் சலுகை தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

(ஆ) 1997-98 ஆம் ஆண்டு மத்திய அரசால் சலுகை விலையில் வழங்கப்படவுள்ள உரத்தின் மதிப்பு ரூபாய் 150 கோடியாகும்.

1997-98 ஆம் வருடம் எண்ணெய்வித்துப் பெருக்குத் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ள பூச்சி மருந்தின் மானியத் தொகையின் மதிப்பீடு ரூ.44 இலட்சமாகும்.

86—

### கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகையைப் பட்டுவாடா செய்வது

**வினா 12541—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97 ஆம் ஆண்டு நாமக்கல் மாவட்டம், மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் விவசாயிகள் சப்ளை செய்த கரும்பு டன் ஒன்றுக்கு மொத்தம் ரூ.627.20 பட்டுவாடா செய்ய வேண்டும். ஆனால் ரூ.481.80 மட்டும் பட்டுவாடா செய்யப்பட்டு மீதி டன் ஒன்றுக்கு ரூ.145.40 வீதம் இன்னும் பட்டுவாடா செய்யப்படாமல் உள்ளது ரூ. 4.06 கோடி என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) உடனடியாக கரும்பு விவசாயிகளுக்கு மீதித் தொகையைப் பட்டுவாடா செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 21-7-1997 அன்றே பாக்கித் தொகை முழுவதும் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது.

(ஆ) எழவில்லை.

**87—**

### நெல் உற்பத்தி இலக்கு

**வினா 12736—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98ஆம் ஆண்டு நாட்டில் எத்தனை மெட்ரிக் டன் 'சம்பா' நெல் உற்பத்தி செய்ய அரசு இலக்கு நிர்ணயித்து உள்ளது?

(ஆ) மேட்டூர் கிழக்குக் கரையில் எவ்வளவு டன் கால்வாய் பாசனத்தால் விளையும் என்று அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் அரிசி உற்பத்திக்கென காரீப் பருவத்தில் (முதல் மற்றும் இரண்டாம் காலாண்டு ஏப்ரல்-



செப்டம்பர்) 22.50 இலட்சம் மெட்ரிக் டன்னும், ராபி பருவத்தில் (மூன்றாம் மற்றும் நான்காம் காலண்டு-அக்டோபர்-மார்ச்) 47.50 இலட்சம் மெட்ரிக் டன்னும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டிற்கான மொத்த அரிசி உற்பத்தி இலக்கு 70.00 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும்.

எனினும், சம்பா பருவத்தில் இயல்பான சாகுபடி பரப்பான 16.70 இலட்சம் ஹெக்டேரில், மாநில சராசரி மகசூலான 3217 கிலோ/ஹெக்டேருக்கு என்ற அளவில் நடப்பு ஆண்டில் 53.72 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி அடைய திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) மேட்டூர் கிழக்குக் கரையில் கால்வாய் பாசனத்தின் மூலம் நெல் உற்பத்தி செய்ய தனியாக இலக்கு எதுவும் நிர்ணயிக்கப்படுவதில்லை.

**88—**

### தேங்காய் எண்ணெய் தொழிற்சாலை அமைத்தல்

**வினா 13198—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் தேங்காய் அதிக அளவில் உற்பத்தியாவதால் தேங்காய் எண்ணெய்த் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**89—**

### வேளாண் கல்லூரி அமைக்கும் திட்டம்

**வினா 14122—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 4 வேளாண்மைக் கல்லூரிகளும் 2 வேளாண்மைப் பொறியியல் கல்லூரிகளும், ஒரு தோட்டக் கலைக் கல்லூரியும், ஒரு வன இயல் கல்லூரியும் மற்றும் ஒரு மனையியல் கல்லூரியும் செயல்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இப்பல்கலைக் கழகத்தில் 531 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். இதில் வேளாண்மைப் பட்டப்படிப்பில் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் சேர்க்கப்படும் மாணவர்கள் மட்டும் 376 பேர். வேளாண்மைப் பட்டப்படிப்பு முடித்து அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைக்குச் சேர்ந்தவர்கள் போக தற்போது சுமார் 2,500 வேளாண்மைப் பட்டதாரிகள் வேலை வாய்ப்புக்காக காத்துக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் புதியதாக வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**90—**

## முல்லை-பெரியாறு பாசன ஒப்பந்தம்

**வினா 172—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முல்லைப் பெரியாறு பாசன ஒப்பந்தம் குறித்து மறு ஆய்வு நடத்த வேண்டுமென கேரள அரசு கோரியுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

இல்லை.



1998 மே 30]

**91—**

## பரம்பிக்குளம் - ஆழியாறு உடன்பாட்டை புதுப்பித்தல்

**வினா 5764—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரம்பிக்குளம்-ஆழியாறு உடன்பாட்டை புதுப்பிக்க தமிழ்நாடு, கேரளா பேச்சுவார்த்தை எந்நிலையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டம் பற்றி தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகளுக்கிடையேயான ஒப்பந்தம் காலவதியாகவில்லை. நடைமுறை அனுபவத்தினடிப்படையில், இவ்வொப்பந்த விதிகளின் ஷரத்துகளில் திருத்தங்கள் ஏதேனும் தேவையா என்பது பற்றி இரு மாநிலங்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றுவருகிறது. இதில் நல்ல முன்னேற்றம் உள்ளது.

**92—**

## தடுப்புச் சுவர் கட்டுதல்

**வினா 6491—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் வைகை ஆற்றின் இருபுறமும் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இதற்கிடமில்லை.

[1998 மே 30

93—

**அணைக்கட்டுத் திட்டம்**

**வினா 6589—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை சிவகிரி கோம்பை ஆறு அணைக்கட்டுத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இத்திட்டம் ஏற்கெனவே 1977 ஆம் ஆண்டு பரிசீலிக்கப்பட்டு ஆய்வுக்குப் பின் நீர்ப் பற்றாக்குறையைக் கருதி கைவிடப்பட்டுள்ளது.

94—

**நதிநீர்ப் பங்கீடு**

**வினா 6590—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரளா தமிழ்நாட்டிற்கிடையே நதி நீர்ப் பங்கீடு தொடர்பாக ஆராய்வதற்காக கேரளா உயரதிகாரக் குழு ஒன்று அமைத்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தமிழ்நாட்டிலும் அத்தகைய குழு அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



1998 மே 30]

(ஆ) தமிழ்நாட்டில் அத்தகைய குழு அமைக்கப்படவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

95—

**கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டுதல்**

**வினா 6776—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி பெரியதாழை பகுதியில் கடல் அரிப்பினால் மக்கள் மரணம் அடைவதைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

பெரிய தாழை கடற்கரை பகுதியில் ஏற்கெனவே கடல் அரிப்பு தடுப்புச் சுவர் ரூ. 9,57,000/- செலவில் 300 மீட்டர் நீளத்தில் அமைக்கப்பட்டு 14.92 மீ. அகல நிலப்பகுதி பாதுகாக்கப்பட்டுள்ளது.

96—

**பச்சை ஆற்றில் புதிய அணை**

**வினா 7918—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பச்சை ஆற்றில் புதிதாக அணை கட்டப்படுவதால் கீழுள்ளவர்களுக்கு நீர்வரத்தில் ஏதேனும் பாதிப்பு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதனைக் களைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பச்சை ஆற்றில் புதிதாக அணை கட்ட உத்தேசிக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வடக்கு பச்சையாறு நீர்த்தேக்கத்தினால் இவ்வாற்றின் கீழுள்ளவர்களுக்கு நீர்வரத்தில் எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

**97—**

**பம்பா - அச்சன் கோவில் - வைப்பார் இணைப்புத் திட்டம்**

**வினா 10504—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பம்பா-அச்சன்கோவில்-வைப்பார் இணைப்புத் திட்டத்திற்கு மத்திய நீர்வளக் குழுமத்தின் ஒப்புதல் கிடைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) இந்தத் திட்டத்தின்மூலம் எவ்வளவு மின்சாரம் கூடுதலாக உற்பத்தி செய்ய இயலும்?

(இ) இந்தத் திட்டத்தின்மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் எந்தெந்த பகுதிகள் புதிதாக பாசன வசதி பெறும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) பம்பா-அச்சன்கோவில்-வைப்பார் இணைப்புத் திட்ட அறிக்கையினை மத்திய நீர்வளக் குழுமத்தின் ஆய்வுக்காகவும், ஒப்புதலுக்காகவும், தமிழ்நாடு அரசு 19-12-1995 அன்று அனுப்பிவைத்துள்ளது. தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) ஆண்டுக்கு சுமார் 1114 மில்லியன் யூனிட் மின் உற்பத்தி செய்ய இயலும்.



1998 மே 30]

(இ) இந்தத் திட்டத்தினால் திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவில், சிவகிரி மற்றும் தென்காசி வட்டங்களில் சுமார் 55,562 ஹெக்டேர் நிலம் புதிதாக பாசன வசதி பெறும்.

**98—**

**கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்றி மராமத்து செய்தல்**

**வினா 10814—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி சிற்றார் கோட்டம், ஆலங்கால் கால்வாயிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி மராமத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இக்கால்வாயிலுள்ள ஆக்கிரமிப்புகளை வருவாய் துறையுடன் இணைந்து ஆய்வு செய்து, வருவாய் துறையினரால் எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டதும் நிதி நிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**99—**

**மெரினா கடற்கரையை அழகுபடுத்துதல்**

**வினா 12745—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மெரினா கடற்கரையின் அழகும் நீளமும் குறைந்து கொண்டு வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

இல்லை.

[1998 மே 30

**100—**

**உபகோட்ட அலுவலகத்திற்கு ஈப்பு வழங்குதல்**

**வினா 13221—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினத்தில் உள்ள பொதுப்பணித் துறை (பாசனம்) உபகோட்ட அலுவலகத்திற்கு ஈப்பு வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினத்தில் உள்ள பொதுப்பணித் துறை (பாசனம்) உபகோட்டம் அலுவலகத்திற்கு ஈப்பு வழங்கப்பட்டுள்ளது.

**101—**

**சென்னை மாநகர மேம்பாட்டுத் திட்டம்**

**வினா 132—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரின் மேம்பாட்டிற்கென பெருந்திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஆம்.

**102—**

**பேருந்தினை மீண்டும் இயக்குதல்**

**வினா 1137—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

சேலம் மாவட்டம், எடப்பாடி நகருக்கு ஈரோடு வழியாக சென்னையிலிருந்து வந்து கொண்டிருந்த அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஈரோட்டிலிருந்து சென்னைக்கு சேலம் மாவட்டம், எடப்பாடி வழியாக இயக்கப்பட்ட அரசு விரைவுப் போக்குவரத்துக்கழக பேருந்தில் பயணம் செய்யும் பயணிகள் விகிதாச்சாரம் குறைவாக இருந்ததன் காரணமாக நிறுத்தப்பட்டது. தற்போது அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் ஈரோடு பேருந்துகள் எடப்பாடியிலிருந்து சென்னைக்கு இயக்கப்பட்டு வருகிறது.

**103—**

**சொகுசுப் பேருந்தாக மாற்றல்**

**வினா 1222—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியிலிருந்து சென்னைக்கு வரும் அரசு பேருந்தை சொகுசுப் பேருந்தாக மாற்றி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றி விடப்படும்.

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தர்மபுரி - சென்னை வழித் தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்-கோட்டம்-2) கழகத்தால் சொகுசுப் பேருந்து 9-3-98 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

[1998 மே 30

**104—**

### பாயிண்ட் டு பாயிண்ட் பேருந்து இயக்குதல்

**வினா 1310—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பரங்கிப்பேட்டையிலிருந்து சென்னைக்கு பாயிண்ட் டு பாயிண்ட் பேருந்து இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**105—**

### சென்னை ஆட்டோவில் மீட்டர் சார்ஜ்க்கு மேல் கட்டணம் வசூல் செய்வதைத் தடுத்தல்

**வினா 1968—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் ஆட்டோவில் மீட்டரில் தவறு நடப்பதைத் தடுக்கவும், மீட்டர் சார்ஜ்க்கு மேல் கட்டணம் வசூல் செய்வதைத் தடுக்கவும் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சென்னையில் ஆட்டோ ரிக்ஷாக்களில் மீட்டரில் தவறுகள் நடப்பதைத் தடுக்கவும், மீட்டர் சார்ஜ்க்கு மேல் கட்டணம் வசூல் செய்வதைத் தடுக்கவும், தீவிர கவனம் செலுத்தவும் இயக்கூர்தி ஆய்வாளருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் ஆட்டோ



1998 மே 30]

ரிக்ஷாக்களில் நடைபெறும் முறைகேடுகளைத் தடுத்து நிறுத்த அனைத்து வட்டார போக்குவரத்து அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**106—**

### புதிய பேருந்து இயக்க வேண்டுதல்

**வினா 2290—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியிலிருந்து சேலம் வரை சித்தூர், இருப்பாளி திருமானூர், சமுத்திரம், சினைப்பம்பட்டி, நாரமங்கலம் வழியாக அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் பகுதி வாரியாக போதுமான அளவு பேருந்து வசதி பெற்றிருப்பதாலும் சித்தூரிலிருந்து சமுத்திரம் வரையிலான 11 கி.மீ. தூரம் சாலை, பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லாததாலும், பேருந்து இயக்கத்திற்குத் தேவையான பயணிகள் போக்குவரத்தும் இவ்வழித்தடத்தில் இராது என்று கருதப்படுவதாலும், இத்தடத்தில் அரசு போக்குவரத்துக்கழக பேருந்து விடும் சாத்தியக்கூறு இல்லை.

**107—**

### நகரப் பேருந்து இயக்க வேண்டுதல்

**வினா 2291—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடியிலிருந்து ஆட்டையாம்பட்டிக்கு கொங்கனாபுரம், சண்டிப்பனை, அ. புதூர், பட்டணாம்பட்டி, மகுடஞ்சாவடி வழியாக ஒரு நகரப்பேருந்து விட அரசு ஏற்பாடு செய்யுமா?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வினாவில் கேட்கப்பட்ட வழித்தடத்தில் அனைத்து பகுதிகளும் பகுதி வாரியாக போதுமான அளவு பேருந்து வசதி பெற்றுவருவதால் புதிய நகரப் பேருந்துகள் தொடங்குவதற்கான தேவை தற்போது இல்லை.

**108—**

**புதிய நகரப் பேருந்து இயக்க வேண்டுதல்**

**வினா 2882—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார் கோயிலிலிருந்து மோவூர், செட்டித்தாங்கல் மற்றும் வேலம்பூண்டி வழியாக ஆயங்குடிக்கு புதியதாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): காட்டுமன்னார்குடி மற்றும் ஆயங்குடி ஆகிய ஊர்களுக்கிடையே செயல்பாட்டிலுள்ள அரசு விதிமுறைகளின்படி நகரப்பேருந்து வசதி அளித்திட இயலாது.

**109—**

**கூடுதல் பேருந்து இயக்க வேண்டுதல்**

**வினா 3048—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் பேருந்துகளில் கூட்ட நெரிசல் அதிகமுள்ளதால் கூடுதலாகப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை-கோட்டம்.1)-ல் பேருந்துகளில் கூட்ட நெரிசலை குறைக்கவேண்டி பல்வேறு கூட்ட நெரிசல் மிக்க பகுதிகளிலிருந்து 33 வழித்தடங்களில் 50 நெரிசல் நேரப் பேருந்துகளை இயக்குகின்றது. தவிர 65 வழித்தடங்களில் 107 வெட்டுத்தடங்களையும், 59 வழித்தடங்களில் 89 கூடுதல் பேருந்துகளையும் இயக்குகின்றது. 33 புதிய வழித்தடங்களில் 51 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின் பேரில் 16 வழித்தடங்களில் 16 பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

நெரிசல் நேரங்களில் போக்குவரத்து நெரிசலை சமாளிக்கும் பொருட்டு, அதிகப்படியான பயணிகளை விரைவில் கொண்டு செல்ல நெரிசல் நேர சிறப்புப் பேருந்துகளாக கோட்டம்.2-ல் மட்டும் 50 நெரிசல் நேர சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

நெரிசல் நேரப் பயணிகள் மட்டுமல்லாமல், குறைந்த தூரப் பயணிகளும், பயணம் செய்யும் விதத்தில் வெட்டுத்தடங்கள் கூடுதலாக்கப்பட்டு, செம்மையாக இயக்கப்பட்டு வருகின்றது. அதிக அளவு பயணிகளை ஏற்றிச்செல்லும் வகையில் புதிய பேருந்துகள் வடிவமைக்கப்பட்டு புதிய பேருந்துகள் 250 இந்த ஆண்டு இயக்கப்பட்டுள்ளன. பழைய பேருந்துகளும் பழுதடைந்து சாலையில் நிற்காமல் நல்ல முறையிலேயே இயக்க பராமரிப்பு மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

**110—**

**பேருந்துகளை அதிகப்படுத்த வேண்டுதல்**

**வினா 3558—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலிருந்து சேலம் செல்லும் வழித்தடத்தில் தனியார் பேருந்துகளை விட அரசு போக்குவரத்துக்

[1998 மே 30

கழகப் பேருந்துகள் மிகவும் குறைவாக உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், வளர்ந்து வரும் மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சட்டமன்ற உறுப்பினர் கோரிய வழித்தடத்தில் அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் கூடுதலாக ஒரு பேருந்தை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**111—**

**அதிகப்படியான புறநகர் இரயில்கள் இயக்க வேண்டுதல்**

**வினா 3572—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆவடி-தாம்பரத்திற்கு இடையே அகல இரயில் பாதையில் அதிகப்படியான புறநகர் இரயில்களை இயக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் இரயில்கள் இயக்குவதில் இடர்பாடுகள் இருப்பதாலும், தொடர்வண்டி இல்லாமையாலும், ஆவடிக்கும் தாம்பரத்திற்கும் இடையே மேற்கொண்டு அதிக இரயில்கள் இயக்க சாத்தியமில்லை. ஆயினும், தற்போதுள்ள மீட்டர்கேஜ் இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்றிய பிறகுதான், மேற்கொண்டு அதிக எண்ணிக்கையில் இரயில் வண்டிகளை இயக்க திட்டமிட இயலும். எனவே, இதுபற்றி தற்பொழுது மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தும் அவசியம் எழவில்லை.



1998 மே 30]

**112—**

**புதிய போக்குவரத்துக் கழகம் அமைக்க வேண்டுதல்**

**வினா 3815—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மறைமலை அடிகள் பெயரில் அரசு போக்குவரத்துக் கழகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை.

**113—**

**பணிநீக்கம் செய்யப்பட்ட போக்குவரத்து விற்பனைப் பிரிவு ஊழியர்கள் குறித்து**

**வினா 4050—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் நலக் கழகத்தின் மூலம் அரசுப் போக்குவரத்து விற்பனைப் பிரிவுகளில் (Counter) பணியாற்றிய 27 பேர் 31-9-1995-ல் திடீர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்துக் கழகத்தில் மாதாந்திர பயணச்சீட்டு மற்றும் மாணவர்களுக்கான மாதாந்திர சலுகைப் பயணச்சீட்டு ஆகியவற்றினை விற்பனை செய்யும் பணி,

விற்பனைக்கேற்ற கமிஷன் (தரகு) அடிப்படையில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் நலக்கழகத்திடம் ஒப்பந்தத்தின்படி ஒப்படைக்கப்பட்டு இருந்தது. முன்னாள் படைவீரர் நலக்கழகம் பயணச்சீட்டு விற்பனைத் தொகையினை கமிஷன் போக, அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு செலுத்திவந்தது. மேற்காணும் விற்பனைக்காக, முன்னாள் படைவீரர் நலக்கழகம் ஈடுபடுத்திய நபர்களுக்கு பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் நேரடியாக எந்தத் தொடர்பும் இல்லை. இந்த ஒப்பந்தம் 30-9-95 அன்று விலக்கிக்கொள்ளப்பட்டது. இதன்விளைவாக முன்னாள் படைவீரர் நலக்கழகம் மூலமாக பயணச்சீட்டு விற்பனை நிலையங்களில் பணி செய்ததாகக் கூறப்படும் திரு. சரவணன் மற்றும் 20 நபர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடுத்துள்ளனர்.

(நீதிப்பேராணை 692/96) அவ்வழக்கு இன்னமும் நிலுவையில் உள்ளது.

**114—**

**பேருந்தினை மீண்டும் இயக்குதல்**

**வினா 4884—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடிக்கு சேலத்திலிருந்து இரவு 11-00 மணிக்கு புறப்பட்டுக் கொண்டிருந்த பேருந்தை மீண்டும் இயக்க ஆவன செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் திரு. க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

புதிய வழித் தடங்கள் தொடங்கும்போது இக்கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**115—**

**போக்குவரத்துக் கழகத்திற்கு பெயர் சூட்டுதல்**

**வினா 4985—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



வருங்காலத்தில் அமையும் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு அதியமான் பெயர் சூட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை.

**116—**

**புதிய வழித்தடத்தில் பேருந்துகளை இயக்குதல்**

**வினா 5496—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், லால்புரம் தொடந்தாலம்மன், பாசாத்தாங்கரை, அம்பலத்தாடிகுப்பம், தையங்குப்பம், நீழமுங்கிலடி வழியாக சி.முட்லூர் மண்டபம் கிள்ளை வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கோரிக்கை வழித்தடத்தில் மணலூர் சாலைச்சந்திப்பு முதல் சி.முட்லூர் சாலை சந்திப்பு வரை உள்ள 6 கி.மீ. மண் மற்றும் ஜல்லிச்சாலை போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லாத காரணத்தினால் பேருந்து இயக்கக்கூடிய நிலைமை இல்லை.

**117—**

**சென்னையிலிருந்து பம்பாவிற்கு பேருந்து விடுதல்**

**வினா 5804—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) சென்னையில் இருந்து கேரளாவில் உள்ள பம்பாவிற்கு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் பேருந்து விடப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கேரள மாநிலத்துடன் ஒப்பந்தம் ஏற்படும்போது இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்குவதுபற்றி பரிசீலித்து முடிவு செய்யப்படும்.

**118—**

**போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தல்**

**வினா 5887—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ராயபுரம் பாலத்தில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த, லாரிகள் செல்ல ‘தடை’ விதிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



1998 மே 30]

**119—**

**சிற்றுந்து விடும் செயற்குறிப்பு**

**வினா 6125—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் சிற்றுந்து (மினி பஸ்) விடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பயணப்பேருந்து வசதியில்லாத கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு அத்தகைய வசதியினை அளித்திடும்பொருட்டு தனியார் நிறுவனங்கள் மூலம் 16 கி.மீ. வரை சிற்றுந்துகளை இயக்க அனுமதி அளிக்க அரசு ஏற்கெனவே ஆணை வெளியிட்டுள்ளது.

**120—**

**புதிய பேருந்து இயக்கும் செயற்குறிப்பு**

**வினா 6135—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி பெண்ணாகரத்திலிருந்து தருமபுரிக்கு மகளிர் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெண் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் மகளிருக்குத் தனியாகப் பேருந்து இயக்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

[1998 மே 30

**121—**

**வெளி மாநிலங்களுக்கு அரசுப் பேருந்துகள் இயக்குதல்**

**வினா 6305—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்க்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் நகரிலுள்ள வணிகர்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று வருவதற்கு ஏதுவாக அரசுப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அண்டை மாநிலங்களுடன் போக்குவரத்து சம்பந்தமான ஒப்பந்தம் ஏற்படும் தருணத்தில் சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**122—**

**பணியாளர்களைத்தேர்வு செய்யும்போது வயது வரம்புச் சலுகை அளித்தல்**

**வினா 6386—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுநர், நடத்துநர் பணிக்கு பணியாளர்களைத் தேர்வு செய்யும்போது ஆதிதிராவிட வகுப்பினருக்கு வயது வரம்புச் சலுகை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுநர், நடத்துநர் பணிக்கான தேர்வுகளில் ஆதிதிராவிட வகுப்பினருக்கு மற்றைய வகுப்பினரைக்



1998 மே 30]

காட்டிலும் வயதுவரம்புச் சலுகை ஏற்கெனவே அளிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

**123—**

**புதிய வழித்தடத்தில் அரசுப் பேருந்து இயக்கம்**

**வினா 6637—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஜலகண்டபுரம் முதல் மாணிக்கம்பட்டி, சமுத்திரம், புதுப்பாளையம், எடப்பாடி, சங்ககிரி வழியாக ஈரோடு வரை புதிய வழித்தடத்தில் அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடத்தில் அனைத்துப் பகுதிகளும் பகுதி வாரியாக போதுமான அளவு பேருந்து வசதி பெற்று வருவதால், இவ்வழித்தடத்தில் அரசுப் பேருந்து இயக்கும் சாத்தியக்கூறுகள் தற்சமயம் இல்லை.

**124—**

**சென்னை கோயம்பேட்டில் புதிய வணிக வளாகங்கள் கட்டுவது குறித்து**

**வினா 6843—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை கோயம்பேடு மலர், கனி, காய்கறி மொத்த அங்காடி வளாகத்திலேயே, அரிசி, பருப்பு போன்ற தானிய வகைகளுக்கும், துணிக் கடைகளுக்கும் விரைவில் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஆம். சென்னைக்கு அருகே கோயம்பேட்டில் தற்பொழுது நடைபெற்றுவரும் மலர், கனி, காய்கறி மொத்த விற்பனை அங்காடிக்கு அருகில், இரண்டாம் கட்டமாக சுமார் 21.50 ஏக்கர் நிலப்பரப்பில் துணி வகைகளுக்கான மொத்த விற்பனை அங்காடி அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் அடுத்த கட்டமாக தானிய அங்காடியின் அபிவிருத்தி, அதற்கான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டவுடன் மேற்கொள்ளப்படும்.

**125—**

**அரசுப் பேருந்து இயக்கம்**

**வினா 6951—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம் எடப்பாடியிலிருந்து அம்மன்கோயில், மூலக்கடை, இருப்பாளி இராமகவுண்டனூர், குண்டத்துமேடு, மேட்டுத் தெரு வழியாக ஜலகண்டபுரத்திற்கு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடத்தில் பேருந்து இயக்குவதற்கேற்ற பயணிகள் போக்குவரத்து இல்லையென்பதால் பேருந்து இயக்கும் உத்தேசம் இல்லை.

**126—**

**அரசுப் பேருந்து இயக்கம்**

**வினா 7030—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தென் ஆற்காடு-வள்ளலார் மாவட்டம் சிதம்பரத்திலிருந்து கவரப்பட்டு வழியாக கீழ்த்திருக்கழிப்பாலை வரை அரசுப் பேருந்து இயக்க ஆவன செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சிதம்பரத்திலிருந்து கீழ்த்திருக்கழிப்பாலை தடநீளம் 12.2 கி.மீ. ஆகும். இதில் சிதம்பரத்திலிருந்து கவரப்பட்டு வரை 7.2. கி.மீ. தூரப்பகுதியில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் மூலம் நாளொன்றுக்கு 16 நடைகளில் பேருந்து வசதி அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால், கவரப்பட்டியிலிருந்து கீழ்த்திருக்கழிப்பாலை வரை உள்ள சாலை மிகவும் குறுகலாகவும், குண்டும் குழியுமாகவும் பதினைந்து இடங்களில் சாலை அறுந்தோடியும், ஜல்லிகள் பெயர்ந்தும் உள்ளபடியால் இப்பகுதி பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**127—**

**புதிய வழித்தடத்தில் அரசுப் பேருந்து இயக்கம்**

**வினா 7035—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியில் இருந்து சேலம் வரை சித்தூர் இருப்பாளி, திருமாலூர் மூலக்கடை, சமுத்திரம், சின்னப்பம்பட்டி இரும்பாலை வழியாக பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஒரு புதிய புறநகர்ப் பேருந்து 11-6-1997 முதல் பூலாம்பட்டி-சேலம்வரை (வழி) சித்தூர், இருப்பாளி, திருமாலூர், புதுப்பாளையம், சமுத்திரம், சின்னப்பம்பட்டி, மாட்டையாம்பட்டி, எனம்பிள்ளை, சித்தர் கோவில் என இயக்கப்படுகிறது.

[1998 மே 30

128—

நிறுத்தப்பட்ட நகரப் பேருந்தினை மீண்டும் இயக்குதல்

**வினா 7041—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சேலத்திலிருந்து இடங்கணசாலை பேரூராட்சியில் உள்ள சின்னப்பம்பட்டி வரை இயக்கப்பட்டு, நிறுத்தப்பட்ட நகரப் பேருந்து 81-ஏவை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடத்தில் 81-ஏ நகரப்பேருந்து இயக்கப்பட்ட நேரங்களிலேயே பிரிதொரு நகரப் பேருந்து வழித் தடம் எண் 107, 1-4-1997 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

129—

புதிய பேருந்து இயக்குதல்

**வினா 7042—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம் எடப்பாடியிலிருந்து சித்தூருக்கு பிற்பகல் நேரத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித் தடத்தில் போதுமான அளவு பேருந்து வசதிகள் இருப்பதால் கூடுதலான நடைகள் இயக்கும் உத்தேசம் இல்லை.



1998 மே 30]

130—

நகரப் பேருந்தினை அதே வழித் தடத்தில் மீண்டும் இயக்குதல்

**வினா 7043—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியிலிருந்து கீச்சங்காடு, மோட்டுப்பட்டி, முனியன் கொட்டாய், மூப்பனூர், கூளையனூர், வெடிகாரன்பாளையம் சித்தூர் வழியாக ஆனைப்பள்ளம் செல்லும் 3-ஏ நகரப் பேருந்தினை, அதே வழித் தடத்தில் மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித் தடத்தில் 3-ஏ நகரப் பேருந்தினை மீண்டும் இயக்கும் உத்தேசம் இல்லை.

131—

எடப்பாடி தொகுதியில் அரசுப் பேருந்து இயக்க வேண்டுதல்

**வினா 7048—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்டர்குல மாணிக்கம், பெரியாண்டிபட்டி வழியாக ஆட்டையாம்பட்டி வரை அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித் தடத்தில் பேருந்து இயக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

[1998 மே 30

132—

ஓமலூரிலிருந்து சென்னைக்குப் பேருந்து இயக்கம்

**வினா 7276—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, ஓமலூரிலிருந்து காடையாம்பட்டி, பொம்மிடி, அரூர், ஊத்தங்கரை வழியாகச் சென்னைக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஓமலூரிலிருந்து சென்னைக்கு, காடையாம்பட்டி, பொம்மிடி, அரூர், ஊத்தங்கரை வழியாகப் பேருந்து இயக்க சாலை வசதி ஏற்றதாக இலலை. எனவே மேற்படி வழித் தடத்தில் பேருந்து இயக்க இயலாது.

133—

ஓமலூரிலிருந்து திருப்பதிக்கு நேரடிப் பேருந்து இயக்கம்

**வினா 7277—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூரில் இருந்து திருப்பதிக்கு நேரடியாகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித் தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், (சேலம் கோட்டம்-I) புதிய பேருந்து இயக்கும் உத்தேசம் இல்லை.



1998 மே 30]

134—

ஓமலூரிலிருந்து மேட்டூருக்குப் பேருந்து இயக்கம்

**வினா 7279—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூரில் இருந்து மேட்டூருக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழித் தடத்தில் ஏற்கெனவே போதிய பேருந்து வசதிகள் இருப்பதால், இத்தடத்தில் புதிய வழித்தடப் பேருந்து ஏதும் இயக்கும் உத்தேசம் இல்லை.

135—

ஓமலூரிலிருந்து சேலத்திற்கு விரைவுப் பேருந்து இயக்கம்

**வினா 7280—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் நகரிலிருந்து சேலம் புதிய பேருந்து நிலையத்திற்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித் தடத்தில் போதுமான அளவுக்குப் பேருந்து வசதிகள் இருப்பதுடன் புறநகர்ப் பேருந்துகளே விரைவுப் பேருந்துகளாகவும் செயல்பட்டு வருவதால், புதிய விரைவுப் பேருந்து இயக்குவதற்கான தேவை இல்லை.

[1998 மே 30

136—

### திருப்பூர் தொகுதியில் பேருந்து இயக்கம்

**வினா 7300—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் தொகுதி, முருகம்பாளையம் ஊராட்சி, வஞ்சிப்பாளையத்திற்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இப்பகுதியில் புதிய வழித் தடங்கள் இயக்கும்போது இதுபற்றி பரிசீலிக்கப்படும்.

137—

### திருப்பூரில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மையப் பேருந்து நிலையம் அமைத்தல்

**வினா 7373—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மையப் பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருப்பூரில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மையப பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.



1998 மே 30]

138—

### எடப்பாடித் தொகுதியில் கூடுதல் பேருந்து இயக்கம்

**வினா 7393—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடித் தொகுதியில் சேலத்தில் இருந்து புதுப்பாளையம் வரை அரசுப் போக்குவரத்துக் கழகம் மூலமாகப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித் தடத்தில் ஏற்கெனவே இருக்கும் பேருந்து வசதிகளே போதுமானதாகக் கருதப்படுவதால், அத்தடத்தில் கூடுதல் பேருந்துகள் அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம்-1-ன் மூலம் இயக்கும் அவசியம் எழவில்லை.

139—

### புதிய வழித் தடம் அமைத்தல்

**வினா 7410—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி, வெள்ளைக்கரடு, அமராவதிபாளையம் செம்மாண்டாம்பாளையம் ஆகிய ஊர்களின் வழியாக முறையான வழித் தடம் அமைத்து பேருந்து இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தமட்டில் திருப்பூர் தொகுதி, வெள்ளைக்கரடு,

[1998 மே 30

அமராவதிபாளையம், செம்மாண்டாம்பாளையம் ஆகிய ஊர்களின் வழியாக புதிய வழித் தடம் இயக்கும் திட்டம் தற்போது ஏதுமில்லை.

(ஆ) வினா எழாது.

**140—**

**பட்டுக்கோட்டை — களப்பால் வரை பேருந்து இயக்கம்**

**வினா 7482—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையிலிருந்து முத்துப்பேட்டை, சங்கேந்தி குலமாணிக்கம் வழியாக களப்பால் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித் தடத்தில் சாலை பேருந்து வசதிக்கு ஏற்றதாக இல்லாத காரணத்தினாலும், புதுப்பாண்டி ஆற்றில் அமைந்துள்ள பாலம் குறுகியதாகவும், சாலை குறுகிய வளைவு உள்ளதாலும் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

**141—**

**திருப்பூருக்கு காலை / மாலை வேளைகளில் சிறப்புப் பேருந்துகள் இயக்குதல்**

**வினா 7775—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் மையமாக விளங்கும் திருப்பூரில் காலை மற்றும் மாலை வேளைகளில் சிறப்புப் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**142—**

**எடப்பாடித் தொகுதியில் நகரப் பேருந்து இயக்கம்**

**வினா 8117—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடித் தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சி பில்லுக்குறிச்சியிலிருந்து பொன்னாக்கவுண்டனூர், ஊத்துக்குளி, மோளப்பாறை வழியாக பூலாம்பட்டி வரை நகரப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கேட்கப்பட்ட வழித் தடத்தில் தற்போது பேருந்து வசதி அளிக்கும் உத்தேசம் இல்லை.

**143—**

**அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையினை விரிவாக்குதல்**

**வினா 8185—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசியிலுள்ள அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) விரிவுபடுத்த அவசியம் எழவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**144—**

**தாரமங்கலம் தொகுதியில் நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா 8347—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடிக்கு சேலம் பழைய பேருந்து நிலையத்திலிருந்து அஸ்தம்பட்டி வழியாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித் தடத்தில் பேருந்து இயக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

**145—**

**பேருந்துகளில் பெண் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் நியமனம்**

**வினா 8454—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிர், சிறார்க்கென இயக்கப்படும் பேருந்துகளில் பெண் ஓட்டுநர், நடத்துனர் நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும்?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மகளிர், சிறார்க்கென இயக்கப்படும் பேருந்துகளில், பெண் ஓட்டுநர், நடத்துநர் நியமிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**146—**

**கூண்டு உந்துகள் (வேன்கள்) இயக்கம்**

**வினா 8481—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வாணியம்பாடியிலிருந்து பெரியப்பேட்டை, கொடையாஞ்சி, அம்பலூர், வடக்குப்பட்டு, திம்மம்பேட்டை வழியாக நாராயணபுரத்திற்கு மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக கூண்டு உந்துகள் (வேன்கள்) இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் (விழுப்புரம் - கோட்டம் 2) கழகத்தில் கூண்டு உந்துகள் (வேன்கள்) இயக்கும் திட்டம் எதுவும் இல்லையாது.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

**147—**

**பட்டாபிராம் முதல் திருவள்ளூர் வரை நான்காம் இரயில் பாதை அமைக்கும் பணி**

**வினா 8512—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

அரக்கோணம் பாதையில், சென்னை - சென்ட்ரல் இரயில் பாதையில் பட்டாபிராம் முதல் திருவள்ளூர் வரை நான்காம் இரயில் பாதை அமைக்கும் பணியை முடிக்க மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரக்கோணம் பாதையில் சென்னை-சென்ட்ரல் இரயில் பாதையில் பட்டாபிராம் முதல் திருவள்ளூர் வரை நான்காம் இரயில் பாதை அமைக்கும் பணியை முடிக்க இரயில்வே நிர்வாகம் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

**148—**

**தென்காசி நகராட்சியில் நகரப் பேருந்துகள் இயக்குதல்**

**வினா 8594—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி நகராட்சி, வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு பகுதிக்குள் நகரப் பேருந்துகளை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கோரிக்கை வழித் தடத்தில் 2-4-1997 முதல் ஏற்கெனவே இயக்கப்பட்ட 6 சுற்றுகளுடன் கூடுதலாக 2 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

**149—**

**பேருந்துகூடு கட்டும் தொழிற்சாலை**

**வினா 8607—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டில் அயல்நாட்டுத் தொழில்நுட்ப உத்திகளுடன் பேருந்துகூடு (body building) கட்டும் தொழிற்சாலை நிறுவப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**150—**

**வந்தவாசி - பெங்களூர் பேருந்து இயக்குதல்**

**வினா 8685—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசியிலிருந்து பெங்களூர் செல்லும் தடம் எண் 444 பேருந்து பெரணமல்லூர் வழியாக வந்து செல்ல ஆவன செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) வந்தவாசியிலிருந்து பெங்களூர் வரை இயக்கப்படும் பேருந்து ஓர் அண்டை மாநில வழித் தடமாகும். மேற்படி பேருந்து அண்டை மாநில வழித் தடம் என்பதால் இப்பேருந்தினை பெரணமல்லூர் சென்று வர (retrace) இயக்க சாத்தியமில்லை.

(ஆ) வினா எழாது.

**151—**

**வட்டாரப் போக்குவரத்துக் கழகம் அமைத்தல்**

**வினா 8783—திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடிநாயக்கனூர் தொகுதி, போடிநாயக்கனூரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை.

**152—**

**சிற்றுந்து இயக்குதல்**

**வினா 8835—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடியிலிருந்து வெலத்துமாணிபெண்டாவுக்கு சிற்றுந்து (Mini Bus) இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், சிற்றுந்து எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கோரிக்கை வழித் தடத்தில் தடுப்புச் சுவர் மற்றும் சாலை பழுது ஆகியவற்றைச் செப்பனிட, சரிசெய்ய கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையினர் கேட்டுக் கொள்ளப்பட்டனர். தற்பொழுது வாணியம்பாடியிலிருந்து மதனஞ்சேரி வரை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், (விழுப்புரம், கோட்டம்-2) லிருந்து நகரத் தடம் இயக்கி வருகிறது. மீதமுள்ள பகுதியில் பெரிய கிராமங்கள் எதுவும் இல்லை. எனவே, வாணியம்பாடி-வெலத்துமாணிபெண்டா தடத்தில் சாலைகள் முழுவதும் செப்பனிடப்பட்டபின் இத்தடத்தில் பேருந்து இயக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**153—**

**போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை அமைக்கும் திட்டம்**

**வினா 9214—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், ஆண்டிபட்டி ஒன்றியத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை அமைக்கும் திட்டம், அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**154—**

**தாரமங்கலம் தொகுதியில் நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா 9493—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் வழியாகச் செல்லும் வகையில் ஓமலூர் - சின்னப்பம்பட்டிக்கு ஒரு நகரப் பேருந்து வழித் தடம் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடத்தில் உள்ள சின்னம்பட்டி நேரடியாகவும், வேறு ஊர்களிலிருந்தும் போதுமான அளவுப் பேருந்து வசதி பெற்று வருவதால் தற்போது புதிதாக நகரப் பேருந்து இயக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**155—**

**சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்தும் வேன்களுக்குப் பர்மிட் வழங்குதல்**

**வினா 9651—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருப்பத்தூர், வாணியம்பாடி ஆகிய பகுதிகளிலிருந்து ஏலகிரி மலைக்குச் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்ல வேன்களுக்கு பர்மிட் வழங்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், விவரமென்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* : ஆம்.

**156—**

**போக்குவரத்து ஊழியர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் விருது**

**வினா 10050—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசின் காவல் துறை, தீயணைப்புத் துறையினருக்கு அண்ணா விருது வழங்குவது போன்று போக்குவரத்துக் கழகத்தில் வேலை செய்யும் ஓட்டுநர், நடத்துநருக்கு தொழிலாளர் தினத்தன்று





மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெயரால் விருதுகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சிறந்த ஓட்டுநர்கள், நடத்துநர்களுக்கு விருதளிக்கும் திட்டம் ஏற்கெனவே நடைமுறையில் இருப்பதால், தொழிலாளர் தினத்தன்று தனியாக விருதுகள் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**157—**

**மினி வேன்கள் இயக்கும் உரிமம்**

**வினா 10184—திரு. ஐ. கணேசன் மற்றும் திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* படித்த வேலைவாய்ப்பில்லாத பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஆதிதிராவிடர் இளைஞர்கள் ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பின் அவர்களுக்கு மினி வேன்களை இயக்கும் உரிமம் அளிக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* : போக்குவரத்து வசதியில்லாத ஊர்களுக்குத் தனியார் மூலம் சிறு பேருந்துகளை இயக்க அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான ஆணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது, 1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 71(3) (b)-ன்படி தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்களுக்கு 18 சதவீதம் உரிமம் வழங்கப்படும். ஆதிதிராவிடர் இளைஞர்கள் ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பின் பேருந்துகளுக்கு அனுமதிச் சீட்டு வழங்கும்போது கடைப்பிடிக்கப்படும் 18 சதவீதம் வாய்ப்பு இவர்களுக்கும் வழங்கப்படும். படித்த வேலைவாய்ப்பில்லாத, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இளைஞர்களுக்குத்

தனி ஒதுக்கீடு இல்லை. எனவே தகுதி அடிப்படையில் உரிமம் வழங்கப்படும்.

**158—**

**தனியார் சிற்றுந்து இயக்குதல்**

**வினா 10209—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் பேருந்து விடமுடியாத வழித் தடங்களில் தனியாரால் சிற்றுந்து இயக்கும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : பயணப் பேருந்து வசதியில்லாத கிராமப்புறப் பகுதிகளில் வாழும் மக்களுக்கும் அத்தகைய வசதியினை அளித்திடும் பொருட்டு தனியார் மூலமாக சுமார் 16 கி.மீ. வரை சிறு பேருந்துகளை இயக்க அரசு முடிவு செய்துள்ளது. மேற்படித் திட்டத்தை நிறைவேற்றிடும் பொருட்டு 1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்திற்கு தக்க மாற்றம் செய்து அதற்கான ஆணையும் வெளியிடப்பட்டுள்ளது. சிறு பேருந்துகள் இயக்குவதற்கு இதுவரை 105 பேருக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மே மாதம் சிறு பேருந்துகள் இயக்கப்படும்.

**159—**

**தருமபுரி தொகுதியில் நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா 10252—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரியிலிருந்து இண்டூர், பண்டஅள்ளி வழியாக கெட்டுஅள்ளி வரையிலும் இண்டூர் வழியாக சோம்பட்டி வரையிலும் நகரப் பேருந்துகள் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழித் தடங்களில் தற்போது போதுமான அளவு நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**160—**

**தருமபுரி—கமல் நத்தம் தடத்திற்கு புதிய நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா 10254—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரியிலிருந்து கெங்கலாபுரம் பாகலஅள்ளி, பாளையம், ஜி. எச். தண்டுகாரன்பட்டி, ஏலகிரி, சாமிசெட்டிபட்டி வழியாகக் கமல்நத்தம் வரை நகரப் பேருந்து இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : புதிய பேருந்துகள் வருகின்ற 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து இயக்கப்படவுள்ளன. ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டபடி தருமபுரி – கமல் நத்தம் தடத்திற்கு புதிய நகரப் பேருந்து வருகின்ற 1998-99 ஆம் நிதியாண்டில் இயக்கப்படும்.

**161—**

**பென்னாகரம் தொகுதியில் புதிய நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா 10255—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

தருமபுரி மாவட்டம், பென்னாகரத்திலிருந்து அலேபுரம், மல்லாபுரம், கோடாரப்பட்டி, நாகனூர், கருங்கல்மேடு, முதுகம்பட்டி, சிடுவம்பட்டி–மலையனூர், இராமகொண்டஅள்ளி, மஞ்சாரப்பட்டிக்காடு, டி. சோளப்பாடி வழியாக சாம்பளிக்காடு வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித் தடத்தின் நீளம் 35 கி.மீ.க்கும் அதிகமாக உள்ள காரணத்தால் தற்போதுள்ள தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளின்படி நகரப் பேருந்து இயக்கிட இயலாத நிலை உள்ளது.

**162—**

**பென்னாகரம்-பிக்கிலி கொல்லப்பட்டி புதிய நகரப் பேருந்து இயக்கம்**

**வினா 10256—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரத்திலிருந்து பளிஞ்சரஅள்ளி, நலப்பரம்பட்டி, பாப்பாரப்பட்டி, பனைக்குளம், வத்திமரத்தள்ளி, கிட்டம்பட்டி வழியாக பிக்கிலி கொல்லப்பட்டி வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : கோரிக்கை வழித் தடத்தில் தற்போது நகரப் பேருந்து இயக்கிடத்தக்க சாத்தியக்கூறுகள் இல்லை.



1998 மே 30]

**163—**

**தருமபுரி-கொட்டாயூர் நகரப் பேருந்து இயக்கம்**

**வினா 10258—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரியிலிருந்து இண்டூர், பி. அக்ரஹாரம், மாங்கரை, மோட்டுப்பட்டி, கொட்டாயூர் வழியாக பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : இத்தடத்தில் மாங்கரை முதல் மோட்டுப்பட்டி வரையுள்ள 2 கி.மீ. தூர சாலை பேருந்து செல்ல இயலாத நிலையில் மோசமாக உள்ளதால் பேருந்து இயக்கிட இயலாத நிலை உள்ளது.

**164—**

**தருமபுரி தொகுதியில் புதிய நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா 10261—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரியிலிருந்து பி. அக்ரஹாரம், புதூர், சிக்கனம்பட்டி, குட்டம்பட்டி, திண்ணூர், காளேகவுண்டனூர், மஞ்சநாயக்கன்அள்ளி, அனுமந்தபுரம் வழியாக கரூர் அம்மன் கோயில் வரை கூடுதலாக நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித் தடத்தில் தற்போது இயக்கப்படும் பேருந்துக்கே 63 விழுக்காடு கொள்ளளவுதான் உள்ளது. எனவே, கோரிக்கை வழித்

தடத்தில் கூடுதலாக நகரப் பேருந்து இயக்க வேண்டிய நிலைமை நிலவவில்லை.

**165—**

**தருமபுரி-இண்டூர் வரை புதிய நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா 10262—திரு. ஜி.கே. மணி:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், தருமபுரியிலிருந்து நாகர்கூடல் வழியாக இண்டூர் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித் தடத்தில் நகரப் பேருந்து இயங்கி வருகின்றது.

**166—**

**தருமபுரி - புதுப்பட்டி வரை புதிய நகரப் பேருந்து இயக்கம்**

**வினா 10263—திரு. ஜி.கே. மணி:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரியிலிருந்து இண்டூர் கடபனஅள்ளி, சத்தாரப்பட்டி, பண்டஅள்ளி, நெக்குந்தி வழியாக புதுப்பட்டி வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கோரிக்கை வழித் தடம் 30 கி.மீ.க்கு அதிகமாக இருப்பதால் தமிழ்நாடு மோட்டார் வாகன விதிப்படி நகரப் பேருந்து இயக்கிட இயலாது.

(ஆ) வினா எழாது.





**167—**

**ஒகேனக்கல்லிலிருந்து - கோயம்புத்தூருக்குப் புதிய பேருந்து இயக்குதல்**

**வினா 10264—திரு. ஜி.கே. மணி:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதிக்குட்பட்ட சுற்றுலாத் தலமான ஒகேனக்கல்லிலிருந்து கோயம்புத்தூருக்குப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

*விடை—*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கோரிக்கை வழித் தடத்தில் போதிய பேருந்து வசதிகள் இருப்பதால் தற்போது புதிதாக பேருந்து இயக்க வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**168—**

**பென்னாகரம் - கோலார் வரை பேருந்து இயக்குதல்**

**வினா 10265—திரு. ஜி.கே. மணி:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, ஒகேனக்கல்லிலிருந்து கிருஷ்ணகிரி வழியாக கர்நாடக மாநிலம் பெங்களூர் மற்றும் கோலார் தங்கவயல் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஒகேனக்கல் - கோலார் தங்கவயல் தடமானது புற மாநிலத் தடமாகும். இத்தடத்தில் பேருந்து இயக்கிட தமிழ்நாடு மற்றும் கர்நாடக அரசுகள் ஒப்பந்தம் செய்ய வேண்டும் என்ற காரணத்தினால் தற்போதைய நிலையில் பேருந்து இயக்கிட இயலாத நிலை உள்ளது.

**169—**

**ஒகேனக்கல் - திருச்சி வரை புதிய பேருந்து இயக்கம்**

**வினா 10266—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதிக்குட்பட்ட சுற்றுலாத் தலமான ஒகேனக்கல்லிலிருந்து திருச்சிராப்பள்ளிக்குப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஒகேனக்கல் - திருச்சிராப்பள்ளி வழித் தடத்தில் போதிய நேரடிப் பயணிகள் கொள்ளளவு இருக்காது என்ற காரணத்தால் வருவாயற்ற இத்தடத்தில் பேருந்து இயக்கிட இயலாது.

**170—**

**பென்னாகரம் - சாம்பளிக்காடு வரை நகரப் பேருந்து இயக்கம்**

**வினா 10268—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரத்திலிருந்து அலேபுரம், மல்லாபுரம், கோடாரம்பட்டி, நாகனூர், கருங்கல்மேடு, முதுகம் பட்டி - சிடுவம்பட்டி, மலையனூர், இராமகொண்டஅள்ளி,



மஞ்சாரப்பட்டிக்காடு 29 - சோளப்பாடி வழியாக சாம்பளிக்காடு வரை நகரப் பேருந்து செல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கோரிக்கை தடத்தின் நீளம் 36 கி.மீ. ஆகும். தடத்தின் நீளம் 30 கி.மீ.க்கு அதிகமாக உள்ள காரணத்தால் தற்போதுள்ள தமிழ்நாடு மோட்டார் வாகன விதிப்படி சாம்பள்ளிகாடு வரை நகரப் பேருந்து இயக்கிட இயலாது.

(ஆ) வினா எழாது.

**171—**

**தருமபுரி - செட்டிப்பட்டி வரை நகரப் பேருந்து இயக்கம்**

**வினா 10269—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரியிலிருந்து நல்லம்பள்ளி, ஈச்சம்பட்டி, முத்தம்பட்டி, கருதுகாரன்பட்டி, ஏலகிரி வழியாக சாமிசெட்டிப்பட்டி வரை நகரப் பேருந்து வசதியில்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பேருந்து இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : கோரிக்கை வழித் தடத்தில் தேவையான அளவு பேருந்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

[1998 மே 30

172—

**தருமபுரி - சின்னம்பள்ளி வரை நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா 10270—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரியில் இருந்து ஏலகிரி, நாகவதி அணை வழியாக சின்னம்பள்ளி வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித் தடம் ஏற்கெனவே போதிய பேருந்து வசதி பெற்றுள்ளதால் தற்போது நகரப் பேருந்து இயக்கும் உத்தேசம் இல்லை.

173—

**தருமபுரி - அனுமந்தபுரம் வரை நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா 10271—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரியில் இருந்து இண்டூர், கோணப்பட்டி, வேலுபள்ளி, எச்சனஅள்ளி காளேகவுண்டனூர் வழியாக அனுமந்தபுரம் வரை நகரப் பேருந்து இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பேருந்து இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கோரிக்கை வழித்தடத்தின் நீளம் 30 கி.மீ.க்கு அதிகமாக உள்ளதாலும், அனுமந்தபுரம் கிராமம் ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றுள்ள காரணத்தாலும் தற்போதுள்ள தமிழ்நாடு மோட்டார் வாகன விதியின்படி நகரப் பேருந்து இயக்கிட இயலாத நிலை உள்ளது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



1998 மே 30]

174—

**பென்னாகரம் தொகுதியில் நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா 10279—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரத்திலிருந்து ஏரியூர், நெருப்பூர், மணிக்காரன்கொட்டாய், ஒட்டனூர் வழியாக கோட்டையூர் பரிசல்துறை வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : கோரிக்கை வழித் தடத்தில் ஒட்டனூர் முதல் கோட்டையூர் பரிசல்துறை வரையுள்ள சாலையில் 2 கி.மீ. சாலை மிகவும் மோசமான நிலையில் உள்ள காரணத்தினால் பேருந்து இயக்கிட இயலாத நிலைமை உள்ளது.

175—

**பென்னாகரம் - புக்கிலகொல்லப்பட்டி வரை நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா 10280— திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரத்திலிருந்து படுவதனஅள்ளி, பனிஞ்சரஅள்ளி, நலப்பரப்பட்டி, பாப்பாரப்பட்டி, பனைக்குளம், வத்திமரத்தள்ளி, கிட்டம்பட்டி வழியாக பிக்கில் கொல்லப்பட்டி வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

[1998 மே 30

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கோரிக்கை வழித் தடத்தின் நீளம் 30 கி.மீ.க்கு அதிகமாக இருப்பதால் நடைமுறையிலுள்ள தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளின்படி நகரப் பேருந்து இயக்கிட இயலாது.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**176—**

**மேச்சேரி - தாரமங்கலம் புதிய பேருந்து வழித்தடம் தொடங்குதல்**

**வினா 10377—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், பொட்டனேரியில் புதியதாக ஒரு இரும்பு உருக்காலை ஏற்பட்டுள்ளதால், அங்கிருந்து மேச்சேரி, மேட்டூர், தொளசம்பட்டி, தாரமங்கலம் செல்ல புதிய பேருந்து வழித்தடங்களை அரசு தொடங்க முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மோட்டார் வாகன விதிகளின்படி ஏற்கெனவே பேருந்து வசதி பெற்று வரும் ஊர்களை இணைத்து 30 கி.மீ.-க்கு அதிகமான தூரத்திற்கு நகரப் பேருந்து இயக்க அனுமதியில்லை. தவிரவும் மேச்சேரியிலிருந்து குட்டம்பட்டி, நால்ரோடு, மாதநாயக்கன்பட்டி, தொளசம்பட்டி வழியாக தாரமங்கலத்திற்கு தினசரி 20 நடைகள் புறநகர் பேருந்துகளால் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கூறிய காரணங்களால், கேட்கப்பட்ட வழித் தடங்களில் நகரப் பேருந்துகளை இயக்கும் கருத்துரு இல்லை.



1998 மே 30]

**177—**

**வேப்பந்தட்டை - சென்னைக்கு அரசு விரைவுப் போக்குவரத்து இயக்குதல்**

**வினா 10417—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் தொகுதி, வேப்பந்தட்டை வட்டம் தனியாக அமைக்கப்பட்டுள்ளபடியால் வேப்பந்தட்டையிலிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு பரிசிலிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், சென்னை-கோட்டம்-ன் மூலம் வேப்பந்தட்டையிலிருந்து சென்னைக்குப் பேருந்து இயக்குவதற்கான திட்டம் ஏதும் இல்லை.

**178—**

**பயண வழி உணவகம் அமைத்தல்**

**வினா 10490—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையிலிருந்து சேலம், பெங்களூர் செல்லும் சாலையில் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் ஒரு பயண வழி உணவகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): உணவகம் அமைத்திடும் உத்தேசம் இல்லை.

[1998 மே 30

179—

**போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை தரமுள்ள உணவு விடுதிகளில் நிறுத்த முறைப் படுத்தல்**

**வினா 10491—திரு. கொ. வீ. நன்னன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(1) நீண்ட தூரம் செல்லும் பேருந்துகளில் பயணம் செய்யும்போது நடுவில் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் விருப்பம்போல் தரமற்ற உணவகங்களில் நிறுத்திவிடுவதை முறைப்படுத்தி, நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(2) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நீண்ட தூரம் செல்லும் பேருந்துகளில் பயணம் செய்யும்போது போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் போக்குவரத்துக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட உணவு விடுதிகளில் மட்டுமே உணவு மற்றும் சிற்றுண்டிக்காக நிறுத்தப்படுகின்றன.

180—

**மோட்டார் வாகனங்களைப் பழுதுபார்க்க 'ஆட்டோ நகர்' அமைத்தல்**

**வினா 10690—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் பழைய புறவழிச் சாலையை மோட்டார் வாகனங்களைப் பழுதுபார்க்கும் வண்டிக்கொட்டில் பட்டறை மற்றும் "ஆட்டோ நகர்" என்று தனியாக அமைத்துத்தர அரசு முன்வருமா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மேற்காணும் பொருள் குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

181—

**தனியாருக்கு புதிய போக்குவரத்து வழித் தடங்கள் அனுமதிக்கும் திட்டம்**

**வினா 12447—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நடப்பு நிதியாண்டில் தனியாருக்கு புதிய போக்குவரத்து வழித்தடங்களை அனுமதிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பேருந்து போக்குவரத்து வசதியில்லாத கிராமங்களில் சுமார் 16 கி.மீ. வரை சிறு பேருந்துகளை இயக்க தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கலாம் என அரசு முடிவுசெய்துள்ளது. அதற்கான அறிவிக்கை 4-9-1997 நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடப்பட்டுள்ளது. சிறு பேருந்துகளை ஓட்ட அனுமதி வழங்க ஆணையும் வழங்கப்பட்டுவிட்டது.

182—

**சாலை விதிகளைக் கண்காணித்தல்**

**வினா 12792—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) சென்னையில் சாலை விதிகளை மீறுபவர்களைக் கண்டுபிடிக்க வீடியோ காமிரா மூலம் கண்காணிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**183—**

**குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்**

**வினா 13256—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாலை விபத்துக்களில் இறந்துவிடுகிற குடும்பங்களுக்கு உதவ குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் ஒன்றை உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சாலை விபத்துக்களில் இறந்து விடுகின்ற குடும்பங்களுக்கு உதவ குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**184—**

**நாகை-பெங்களூருக்கு பேருந்து இயக்குதல்**

**வினா 13523—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

நாகையிலிருந்து சேலம், ஈரோடு மற்றும் பெங்களூருக்கு பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை. ஏற்கெனவே அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் கோட்டம் 2-ன் மூலமாக வேளாங்கன்னியிலிருந்து பெங்களூருக்கு நாகை, சேலம் வழியாகப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. நாகையிலிருந்து ஈரோட்டிற்கு பயணிகளின் விகிதாச்சாரம் குறைவின் காரணமாகப் பேருந்து இயக்குவது சாத்தியமில்லை.

**185—**

**புறவழிச் சாலை அமைத்தல்**

**வினா 3349—திரு. அ.வ. அப்துல்நாசர்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் நகரத்தில் புறவழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் :**

சிதம்பரம் நகரத்தில் புறவழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இல்லை.

**186—**

**இருவழிப் பாதை அமைத்தல்**

**வினா 3699—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

பூவிருந்தவல்லி - குன்றத்தூர் பேருந்து பாதையை இருவழிப் பாதையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இப்பொருளில் கண்டுள்ள சாலையை இருவழிச் சாலையாக மேம்பாடு செய்யும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**187—**

**நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்துதல்**

**வினா 4029— திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்தி மீண்டும் கப்பல் போக்குவரத்தைத் தொடரும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பெரிய அளவிலான சரக்குப் படகுகள் துறைமுகத்தினுள் வந்து செல்ல ஏதுவாக நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்தும் பொருட்டு தற்போதுள்ள கடல் [illegible] தடுப்பிகளை வடக்கு மற்றும் தெற்குப் புறங்களில் கடல்நீர் இயற்கையாக 15 அடி ஆழம் உள்ளவரை நீட்டிப்பதற்கு கருத்துரு ஒன்று 9-வது ஐந்தாண்டு திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதுகுறித்த சிறந்த வடிவமைப்பு மற்றும் ஒத்த நிலைகுறித்து அறிய மாதிரி ஆய்வு ஒன்று ரூ.7.5 இலட்சம் செலவில் திருவாளர்கள் ஈசன் இன்ஜினியரிங் சென்டர், இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி, சென்னை அவர்களால் மேற் கொள்ளப்பட்டு, கடந்த பிப்ரவரி 1998-ஆம் மாதத்தில் மேற்படி



1998 மே 30]

ஆய்வுக்கான இறுதி அறிக்கை இந்நிறுவனத்தால் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. மேற்படி அறிக்கையில் இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ.98.00 இலட்சம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தொடர்நடவடிக்கையை முடிவுசெய்ய அடுத்த வாரியக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

**188—**

**கிராமச் சாலைப் பகுதிகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு**

**வினா 5427—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமச் சாலைப் பணிகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1997-98 ஆம் ஆண்டு திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**189—**

**பாலம் சீர்செய்யும் பணி**

**வினா 5685—திரு. [illegible] பன்னீர்செல்வம்.**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மடவாமேடு கிராமத்தில் பக்கிங்காம் கால்வாய் மீது கட்டப்பட்டுள்ள பாலம் முழுவதும் சேதம் அடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

[1998 மே 30

(ஆ) ஆம் எனில், அதைச் சீர் செய்ய அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலப் பணியை சமீபத்திய ஆண்டுகளில் செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை.

**190—**

**பழைய பாலத்தை அப்புறப்படுத்தும் பணி**

**வினா 6021—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, ஒக்கியம் துரைப்பாக்கத்தில், ஒக்கியத்தில் தண்ணீர் வேகமாகச் செல்ல உயரமான பாலம் அமைத்த பின்னும் பழைய சிறியப் பாலத்தை அப்புறப்படுத்தாததால் மழைக்காலங்களில் வெள்ளப் பெருக்கெடுப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பழைய பாலத்தை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பழைய பாலத்தை அப்புறப்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**191—**

**சாலையைச் செப்பனிடல்**

**வினா 6201—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) வில்லிவாக்கம் தொகுதி, திருமங்கலத்தில், 64-வது வார்டிலுள்ள காந்தி பிரதான சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், மழைக் காலங்களில் நிரம்பி ஓடும் சாக்கடை நீரைத் தடுத்து நிறுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) இச்சாலை இத்துறையின் பராமரிப்பில் இல்லாத சாலையாகும்.

(ஆ) கேள்வி எழாது.

**192—**

**மேம்பாலம் கட்டும் பணி**

**வினா 6480—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, செம்மாண்டகுப்பம் ஆற்றுப் பாலத்தில் மழை நீரால் அடிக்கடி போக்குவரத்து பாதிக்கப்படுவதால் அங்கு ஒரு மேம்பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

அரசின் நிதிப் பற்றாக்குறை காரணமாக அண்மைக் காலங்களில் இத்திட்டத்தை எடுத்துச் செய்யும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**193—**

**இணைப்புச் சாலை அமைத்தல்**

**வினா 6486—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

தேனி மாவட்டம், சேடப்பட்டி தொகுதி, மல்லாப்புரம்-மயிலாடும்பாறை இணைப்புச் சாலை அமைக்கும் பணியை விரைவில் முடிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

தேனி மாவட்டம், சேடப்பட்டி தொகுதி, மல்லாப்புரம்-மயிலாடும்பாறை சாலை (கி.மீ. 0/0-13.2) பகுதியில் கி.மீ. 8/0-9/0 வரையிலுள்ள சாலைப் பகுதி தவிர மீதமுள்ள சாலைப் பகுதிகளில் தார்ச்சாலை அமைத்து அனைத்து வேலைகளும் முடிக்கப் பெற்றுள்ளன. மீதமுள்ள சாலைப் பகுதி கி.மீ. 8/0-9/0 வரை உள்ள சாலைப் பணியை ரூ. 64,32,593 மதிப்பீட்டில் செப்பனிடுவதற்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்பட்டு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, தேர்வு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரருக்கு வேலை ஒப்படைக்கப்பட்டுள்ளது. வெகு விரைவில் வேலைகள் தொடங்கி முடிக்கப்படும்.

**194—**

**தேசிய நெடுஞ்சாலையை மேம்படுத்துதல்**

**வினா 6521—திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether there is any proposal to upgrade the Highways Road from Hosur to Dharmapuri via. Uddanapally, Rayakotta, Palacode as National Highways in view of the heavy lorry traffic in the area; and

(b) If so, the details thereof?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசு நிதி நெருக்கடி காரணமாகப் பெருந்தொகை தேவைப்படும் இப்பணியை அண்மைக்காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.



1998 மே 30]

**195—**

**பவானி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்**

**வினா 7238—திரு. வெ. அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட இக்கரைகொடிவேரியில் பவானி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ இடமில்லை.

**196—**

**மேம்பாலம் அமைத்தல்**

**வினா 7560—திரு. ஆர். ஆர். சேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர்-மேட்டூர் சாலையில் மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இப்பணி 1997-98 ஆம் ஆண்டு இரயில்வே பணித் திட்டத்தின்கீழ் ஐந்தாவது முன்னுரிமைப் பணியாக மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டு,

[1998 மே 30

தலைமைப் பொறியாளர், தென்னக இரயில்வே, சென்னைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

197—

**ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்தல்**

**வினா 7561—திரு. ஆர். ஆர். சேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காடையாம்பட்டி ஒன்றியம், சேலம்—தருமபுரி மாவட்ட எல்லையில் உள்ள வேப்பாடி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் அமைக்கும் பணிக்கு தோராயமாக ரூ. 30 இலட்சம் தேவைப்படுகிறது. அரசு நிதி நெருக்கடி காரணமாக தற்பொழுது மேற்கொள்ளும் வாய்ப்பில்லை.

198—

**வெள்ளாற்றில் பாலம் கட்டும் திட்டம்**

**வினா 7642—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோட்டைக்காடு மற்றும் பெண்ணாடம் வெள்ளாற்றில் பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

கோட்டைக்காடு மற்றும் பெண்ணாடம் வெள்ளாற்றில் பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.



1998 மே 30]

199—

**பாலம் அமைக்கும் திட்டம்**

**வினா 8143—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, நாசரேத்திலிருந்து தூத்துக்குடி, திருச்செந்தூர், திருநெல்வேலியை இணைக்கும் நெடுஞ்சாலையில் வெள்ளரிக்காய் ஊரணி குளத்தின்மீது பாலம் அமைக்கும் திட்டம் அரசுக் குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

சாத்தான்குளம் தொகுதி, நாசரேத்திலிருந்து தூத்துக்குடி திருச்செந்தூர், திருநெல்வேலியை இணைக்கும் நெடுஞ்சாலையில் வெள்ளரிக்காய் ஊரணி குளத்தின்மீது பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

200—

**சுரங்க நடைபாதை அமைத்தல்**

**வினா 8320—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, திருமங்கலம் அருகில் நான்கு சாலைகள் இணையுமிடத்தில், வாகனப் போக்குவரத்து அதிகமுள்ளதால் பாதசாரிகள் சாலையைக் கடக்க சுரங்க நடைபாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இல்லை.

[1998 மே 30

## (பதினாறாம் பட்டியல்)

1—

### குடிதண்ணீர் தட்டுப்பாட்டை போக்குதல்

**வினா 148—திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு நகராட்சியில் குடிதண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு நகராட்சியில், திம்மாவரம், ஓமலூர், பழவேலி ஆகிய மூன்று குடிநீர் ஏற்று நிலையம் அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க இரண்டு புதிய கிணறுகள் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2—

### வசிஷ்டர் நதியில் பாலம் கட்டுதல்

**வினா 294—திரு. ஏ. எம். ராமசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், கல்பகதூர், வசிஷ்டர் நதியில் பாலம் கட்டும் பணி எந்நிலையில் உள்ளது?

(ஆ) இப்பணியைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : இல்லை.



1998 மே 30]

3—

### கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா 836—திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கும் கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

4—

### திண்டுக்கல் நகரில் பாதாள சாக்கடைத் திட்டம்

**வினா 843—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது துவக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

[1998 மே 30

(ஆ) திண்டுக்கல் நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் பொருட்டு ஒரு திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் திட்டப்பட்டுள்ளது. வாரியத்தால் ரூ. 28 கோடிகளுக்கு திட்டம் அமைக்கவும், ரூ. 40 இலட்சங்களுக்கு வருடாந்திர பராமரிப்புப் பணிக்கும் நிர்வாக ஒப்புதலுக்காக அரசிற்கு அனுப்பப்பட்ட செயற் குறிப்பு, அரசின் பரிசீலனையில் உள்ளது. நிர்வாக ஒப்புதல் வழங்கிய பின்னர், திண்டுக்கல் நகர பாதாள சாக்கடைத் திட்டம் துவக்கப்படும்.

**5—**

### பாலம் கட்டுதல்

**வினா 1168—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர்-கும்பகோணம் நெடுஞ்சாலையையும், கல்லணை-காவேரிப்பட்டினம் நெடுஞ்சாலையையும் உள்ளிக்கடை-வழுதூர் வழியாக இணைக்கும் சாலையில், காவேரி, குடமுருட்டி நதிகளில் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அப்பணிகள் எப்போது துவங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலங்கள் அமைக்கப்படவேண்டிய சாலையின் பெயர் உள்ளிக்கடை சாலை என்பதாகும். இது பாபநாசம் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ள கருங்கல் தளம் கொண்ட ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இச்சாலையில் வழுதூர் அருகே குடமுருட்டி ஆறு மற்றும் உள்ளிக்கடை அருகே காவேரி ஆறு ஆகிய நீர்வழிப் பாதைகள் குறுக்கிடுகின்றன. குடமுருட்டி மற்றும் காவேரி ஆற்றின் குறுக்கே பாலங்கள் அமைக்கவும் சாலை மேம்பாடு செய்யவும் தோராயமாக மொத்தம் ரூபாய் 11.28 கோடி தேவைப்படும். எனவே, இப்பணியை ஊராட்சி ஒன்றியம் மூலம் எடுத்துச் செய்ய சாத்தியக் கூறுகள் இல்லை.



1998 மே 30]

**6—**

### குடிநீர் வழங்கும் திட்டம்

**வினா 1198—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதியில் உள்ள அழகாபுரம் பிள்ளையார் கோவில் அருகே உள்ள கிணற்றில் தூர் எடுத்து, கூடுதல் சக்தி கொண்ட மின் மோட்டார் பொருத்தி புதிய நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : அழகப்பபுரம் கிராமம் முழுவதற்கும் வாரியத்தால் 1984-ம் ஆண்டில் செயலாக்கம் செய்யப்பட்ட 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு குடிநீர்த் திட்டம் நடைமுறைப் பயனில் உள்ளது. மேற்கண்ட பகுதிக்கு குடிநீர் வழங்க சாத்தியக் கூறுகள் உள்ளனவா என ஆராய்ந்ததில், அழகாபுரம் பிள்ளையார் கோவில் அருகேயுள்ள கிணற்றில் நீர் தற்சமயம் வறண்டு விட்டது. மேலும், கோரிக்கையில் உள்ள பொருள் அழகப்பபுரம் கிராமத்தின் ஒரு பகுதிக்கு புதிதாக குடிநீர் வசதி செய்வது சம்பந்தமானதாகும். எனவே வாரியத்தின் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை. வருங்காலத்தில் இது குறித்து ஆராயப்படும்.

**7—**

### அரசே ஊதியம் வழங்குதல்

**வினா 1439—திரு. பா. வேல்துரை:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

நிதிப் பற்றாக்குறை உள்ள பேரூராட்சி, நகராட்சிகளின் ஊழியர்களுக்கு மாதாமாதம் அரசாங்கமே ஊதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நடவடிக்கை தேவையில்லை.

**8—**

**பாதை அமைத்தல்**

**வினா 1563—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம் கச்சுப்பள்ளி கிராமம், அழகப்பம்பாளையத்திலிருந்து பாறக்காடு வழியாக வடுகப்பட்டி சாலை வரை பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம் கச்சுப்பள்ளி கிராமம், அழகப்பம்பாளையத்திலிருந்து பாறக்காடு வழியாக வடுகப்பட்டி சாலை வரை பாதை அமைக்கும் பணி தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வேலை நடைபெற்றுவருகிறது.

**9—**

**மேல்பவானித் திட்டம் நிறைவேற்றுதல்**

**வினா 1828—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

பவானிசாகர் தொகுதியில், குடிதண்ணீர் பிரச்சினையை போக்க மேல்பவானி திட்டம் ஒன்றை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பவானிசாகர் தொகுதியில் குடிநீர் மேம்பாட்டிற்காக மேல்பவானியில் இருந்து எவ்விதத் திட்டமும் உருவாக்கப்படவில்லை.

**10—**

**நிரந்தர சந்தை திடல் அமைத்தல்**

**வினா 1912—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி பேரூராட்சிக்கு சொந்தமான சந்தைத் திடலில் பல ஆண்டுகளாக உள்ள ஆக்கிரமிப்பை அகற்றி நிரந்தர சந்தை திடல் (Market) அமைக்க வேண்டுமே என அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இக்கோரிக்கை மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**11—**

**தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

**வினா 2025—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதியில் பிற்படுத்தப்பட்டோருக்காக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1996-97 முதல் கட்டப்பட்டு வருகிறது.

12—

**குடிநீர் வழங்கும் திட்டம்**

**வினா 2413—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் தொகுதி பனப்பாக்கம் பேரூராட்சிக்கு பாலாற்றிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டமும், தக்கோலம் பேரூராட்சிக்கு கல்லாற்றிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டமும் செயல்படுத்தப்பட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். தக்கோலம் பேரூராட்சிக்கு கல்லாற்றிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டம் பரிசீலனையிலும், பனப்பாக்கம் பேரூராட்சிக்கு பாலாற்றிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் தற்பொழுது செயல்படுத்தப்பட்டும் வருகிறது.



13—

**குடிநீர் பாதிப்பு**

**வினா 2426—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் இறால் பண்ணைகள் அதிக அளவில் இருப்பதால் குடிநீர் உப்பு நீராக மாறி பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்காமல் மக்கள் அவதிபடுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ). ஆம்.

(ஆ) சீர்காழி தொகுதியில் உள்ள கொள்ளிடம் ஒன்றியம் மற்றும் சீர்காழி ஒன்றியப் பகுதிகளில் கடற்கரையிலிருந்து சுமார் 15 கி.மீ. தூரத்திற்கு உள்நோக்கி உப்பு நீர் பரவியுள்ளதால் மேற்படி ஒன்றியங்களில் உள்ள கடலோர குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் வழங்கும் அமைப்பின் கீழ் செயல்படுத்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

14—

**ஊராட்சி ஒன்றியம் பெயர் மாற்றம்**

**வினா 2483—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, பரங்கிமலை ஊராட்சி ஒன்றியம், சிட்லபாக்கம் பேரூராட்சியில் அமைந்துள்ளதால் சம்பந்தமேயில்லாமல் பரங்கிமலை ஊராட்சி ஒன்றியம் என்றிருப்பதை மாற்றி சிட்லபாக்கம் ஊராட்சி ஒன்றியம் என்று பெயர் மாற்றம் செய்ய அரசு முன்வருமா?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தாம்பரம் தொகுதி, பரங்கிமலை ஊராட்சி ஒன்றியம், சிட்லபாக்கம் பேரூராட்சியில் அமைந்துள்ளதால் பரங்கிமலை ஊராட்சி ஒன்றியம் என்றிருப்பதை மாற்றி சிட்லபாக்கம் ஊராட்சி ஒன்றியம் என்று பெயர் மாற்ற காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி மன்றம் அனுமதியளிக்காததால், அவ்வாறு மாற்றியமைக்க வழியில்லை.

**15—**

**மின் ஏற்று நிலையங்களுக்கு மின் கட்டணம்**

**வினா 2524—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன். ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறைந்த வருவாயுள்ள ஊராட்சி மன்றங்கள் குடிநீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மின் ஏற்று நிலையங்களுக்கான மின் கட்டணங்களை ஏற்றுக் கொள்ள மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குறைந்த வருவாயுள்ள ஊராட்சி மன்றங்கள் குடிநீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மின் ஏற்று நிலையங்களுக்கான மின் கட்டணங்களை ஏற்றுக் கொள்ள மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தும் முன்மொழிவு எதுவும் இல்லை.

**16—**

**வாகனம் பயன்படுத்தாதது**

**வினா 2735—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) வேலூர் நகராட்சியில் இந்திய மக்கள் தொகை திட்டம் V-ன்கீழ் நோயாளிகள். கர்ப்பிணிகள் ஆகியோரை ஏற்றி வர வழங்கப்பட்ட வாகனம் அந்த நோக்கத்திற்கு பயன்படுத்தப் படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம், எனில், எப்போது அந்த வாகனம் அந்நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நகர்நல அலுவலரின் கண்காணிப்பில் உள்ள இவ்வாகனம் பொது சுகாதாரப் பணிகளை ஆய்வு செய்யவும், கர்ப்பிணிகள், நோயாளிகளை சிகிச்சைக்காக அழைத்து வரும் பணிகளுக்கும் உபயோகப்படுத்தப்படுகிறது. இருப்பினும் இந்த வாகனத்தை முழுமையாக குறிப்பிட்ட திட்டப் பணிக்குப் பயன்படுத்த வேண்டுமென்றும், நகர்நல அலுவலரின் இதர பொது சுகாதாரப் பணிகளுக்கு வேறு மாற்று ஏற்பாடு செய்து கொள்ளும்படியும் நகராட்சி ஆணையருக்கு தக்க அறிவுரைகள், நகராட்சி நிர்வாக இயக்குநரால் வழங்கப்பட்டுள்ளது.

**17—**

**தனியார் ஆக்கிரமிப்பு**

**வினா 2747—திருமதி ஆர். சரஸ்வதி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் தொகுதியில் நகராட்சிக்குச் சொந்தமான இடத்தை தனியார் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடங்கள் கட்டியுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): தாராபுரம் நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் தெரு ஆக்கிரமிப்பு தவிர, தனியார் கட்டடம் ஏதும் எழவில்லை.*

**18—**

**கூட்டுக் குடிநீர் திட்டம்**

**வினா 2776—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணித் தொகுதியில் கடற்கரையில் உள்ள கிராமங்களில் நிலவும் குடிதண்ணீர் பற்றாக்குறையை போக்க புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*இல்லை.*

**19—**

**பாதாள சாக்கடைத் திட்டம்**

**வினா 2792—திரு. வ. வேலுசாமி:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை மாநகரில் நிலுவையிலுள்ள பாதாள சாக்கடைத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?*



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*மதுரை மாநகராட்சியில் உள்ள பகுதி 9 (பிரிவு) பகுதி 8 அ (பிரிவு) மற்றும் பகுதி 10 ஆகிய பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசின் நிர்வாக ஒப்பதலுக்குப் பின் மாநகராட்சியிலிருந்து மதிப்பீட்டுத் தொகை பெறப்பட்டவுடன் திட்டங்கள் செயலாக்கத்திறகு எடுத்துக் கொள்ளப்படும்.*

**20—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா 2802—திரு. ச. அழகுவேலு:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விக்கிரவாண்டியில் குடிநீர்ப் பிரச்சினைப் போக்க சங்கராபரணி ஆற்றிலிருந்து வழங்கும் குடிநீரை கூட்டுக் குடிநீர்த் திட்டமாக மாற்றி ரெட்டிக்குப்பம், கயத்தார், ஆவடியார்ப்பட்டி ஆகிய கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*இல்லை.*

**21—**

**பாலாற்று குடிநீர் வழங்குதல்**

**வினா 2937— திரு. பீ.அ. வைத்தியலிங்கம்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மீனம்பாக்கம் பேரூராட்சிக்கு பாலாற்று குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

**22—**

**குடிநீர் திட்டம் செயல்படுத்துதல்**

**வினா 3184—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் ஒன்றியம், மேலக்கோடங்கிபட்டி, கீழக்கோடங்கிபட்டி கிராமத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நிவர்த்தி செய்ய அரசிடம் புதிய சிறப்புத் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதியாண்டில் (1996-1997) திருவில்லிப்புத்தூர் ஒன்றியம், மேலக்கோடங்கிபட்டி, கீழக்கோடங்கிபட்டி ஆகிய இரண்டு குடியிருப்புகளுக்கும் தனித்தனியாக நீர் ஆதாரம் உருவாக்கி, தனித்தனியாக விசைப்பம்புத் திட்டம் அடுத்த நிதியாண்டில் நிறைவேற்றப்பட உள்ளது. ஒவ்வொரு குடியிருப்புக்கும் தனித்தனியாக ரூ. 2.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





**23—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா 3187—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், மேலக்கோபாலாபுரம் ஆதி திராவிட கிராம மக்களுக்கு தரைமட்ட நீர்த் தேக்கத்தொட்டி மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம். நடப்பு நிதியாண்டில் நீராதாரம், தோற்றுவித்து, மேல்நிலைத்தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம், அடுத்த நிதியாண்டில் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்பட உள்ளது.

**24—**

**காட்டாற்றில் மேம்பாலம்**

**வினா 3350—திரு. சி. கோபு:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதி, ஒடுக்கத்தூர் சாலையிலிருந்து கீழ்கொத்து செல்லும் சாலையில் காட்டாற்றில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அணைக்கட்டு தொகுதி, ஒடுக்கத்தூர் சாலையிலிருந்து கீழ்கொத்து செல்லும் சாலையில் காட்டாற்றில் மேம்பாலம் அமைக்க போதிய நிதி வசதி இல்லை. மேலும் இது போன்ற பெரிய திட்டப் பணிகளை (Major Schemes) ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படுத்த முடியாது.

25—

**கழிவுநீர் கால்வாய் அமைத்தல்**

**வினா 3522—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், காட்பாடி, ஆக்சிலியம் கல்லூரி மழைக்காலங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கல்லூரியைச் சுற்றி மழைநீர் வடிகால், கழிவுநீர் கால்வாய் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

26—

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா 3596—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு, தாரணிப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவில் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.



27—

**வேலைவாய்ப்பில் முன்னுரிமை**

**வினா 3637—திரு. லி. அய்யலுசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காந்தி கிராமம் மற்றும் சில கல்லூரிகளில் கிராமிய சமூகவியல் மற்றும் பஞ்சாயத்து ராஜ், ஊரக வளர்ச்சி, கிராமியப் பொருளாதாரம் மற்றும் என்டர்சன் எஜுகேஷன் முதுகலை (கூட்டுறவு) ஆகிய பிரிவு களில் தேறிய பட்டதாரிகளுக்கு ஊராட்சி ஒன்றியம், நகராட்சிகளில் வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வாய்ப்பில்லை.

28—

**தனி மயானம் ஏற்படுத்தல்**

**வினா 3788—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், தும்பேரி கிராமத்திற்கு தனி மயானம் ஏற்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வாணியம்பாடி வட்டம், தும்பேரி கிராமத்தில் ஆதி திராவிட மற்றும் பிற்படுத்தப்பட்ட வன்னியர் மற்றும் ஜாதி இந்துக்களுக்கு தனித்தனியே மயானங்கள் உள்ளன. பிற்படுத்தப்பட்ட வன்னியர் மற்றும் ஜாதி இந்துக்களுக்கு உள்ள தற்போதைய மயானம் தனியார்

[1998 மே 30

நிலத்தில் உள்ளதால் மேற்படி பிரிவினருக்கு மயானம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

29—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா 3849—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதியில் சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திட்டம் ஆய்வில் உள்ளது.

30—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா 3851—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, விருதுவிளங்கினான் மற்றும் 30 கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்போது திட்டம் இல்லை.



1998 மே 30]

31—

மின்வினைஞரை நியமித்தல்

**வினா 3873—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் குடிதண்ணீர் வழங்கும் மின் இயந்திரங்களை பழுதுபார்க்க ஒப்பந்த முறையைத் தவிர்த்து, ஒன்றிய அலுவலகத்தில் மின்வினைஞரை (எலக்ட்ரிசியன்) நியமித்து, கால தாமதத்தை தவிர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமலுக்கு வரும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழ இடமில்லை.

32—

செங்கம் தொகுதியில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குதல்

**வினா 4162—திரு. கோ.வி. நன்னன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் குடிநீர்ப் பற்றாக்குறையை முற்றிலும் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) செங்கம் சட்ட மன்ற தொகுதியில் செங்கம் கிராம பேரூராட்சிக்கு குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கான நீராதாரத்திற்கு கிணறுகள் அமைக்கும் பணி நடைபெறுகிறது. திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

புதுப்பாளையம் கிராம பேரூராட்சிக்கு ரூ. 96 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வழங்க திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

செங்கம், புதுப்பாளையம் மற்றும் ஜவ்வாது (பகுதி) ஊராட்சி ஒன்றியங்களில் நாளொன்றுக்கு, நபர் ஒன்றிற்கு 10 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் பெறும் கிராமங்களுக்கு 1997-98 ஆம் நிதி ஆண்டில் கூடுதல் நீராதாரம் அமைத்து குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**33—**

**குடியிருப்புகளை பழுதுபார்த்தல்**

**வினா 4242—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணத்தைச் சுற்றியுள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளை பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**34—**

**நகராட்சி ஊழியர்களுக்கு ஊதியம்**

**வினா 4243—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகராட்சி ஊழியர்களுக்கு உரிய நாளில் ஊதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?





விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். நகராட்சி ஊழியர்களுக்கு உரிய நாளில் ஊதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

**35—**

**வத்திராயிருப்பு ஒன்றியத்திற்கு அடிப்படை வசதி**

**வினா 4410—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், கட்டயதேவன்பட்டி கிராமம், அருந்ததியர் வாழும் பகுதிக்குத் தெருவிளக்கு, பாதை, சிறுபாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், கட்டயதேவன்பட்டி கிராம அருந்ததியர் குடியிருப்பில் மொத்தம் 5 வீடுகள் உள்ளன. ஏற்கெனவே இந்த குடியிருப்புப் பகுதியில் இரு தெருவிளக்குகள் (குழல் விளக்குகள்) உள்ளன. மேலும் கூடுதலாக இரண்டு தெருவிளக்குகள் அமைக்க ஊராட்சித் தலைவரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கட்டயதேவன்பட்டி அருந்ததியர் குடியிருப்புப் பாதையை தார் சாலையாக்கும் பணியும் நடைபெறுகிறது. மேலும் இங்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 28,000 மதிப்பீட்டில் சிறுபாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

[1998 மே 30

36—

குடிசை வீடுகளுக்குப் பதிலாக கான்கிரீட் வீடு

**வினா 4411—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவில்லிபுத்தூர் தொகுதி, மூவரைவென்றான் ஊராட்சி, கட்டயதேவன்பட்டி கிராம அருந்ததியர்களுக்கு தற்போதுள்ள குடிசை வீடுகளுக்குப் பதிலாக கான்கிரிட் வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

37—

ஆண்டிமடம் தொகுதியில் குடிநீர் வசதி

**வினா 4430—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், சிலுப்பனூர், சேந்தமங்கலம், ஈச்சங்காடு, தளவாய், கட்டையன்குடிகாடு போன்ற பெரிய கிராமங்களுககு வெள்ளாற்றிலிருந்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.



1998 மே 30]

38—

துப்புரவுத் தொழிலாளர் நியமனம்

**வினா 4460—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* துப்புரவுத் தொழிலாளர்களை நியமிக்கக்கோரும் முன்மொழிவுகள் நகராட்சிகளிலிருந்து அரசின் பரிசீலனைக்கு வந்துள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* சில நகராட்சிகளில் கூடுதலாக துப்புரவுத் தொழிலாளர்களை நியமனம் செய்வது தொடர்பாக செயற்குறிப்பு பெறப்பட்டு, அவற்றின்மீது அரசால் திருத்தி அமைக்கப்பட்ட அளவுகோலின்படி தக்க நடவடிக்கை எடுக்கும்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

39—

நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா 4471—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தாம்பரம் தொகுதி, தரமணி குடிசைப் பகுதியில் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தாம்பரம் தொகுதி, தரமணி குடிசைப் பகுதியில் குடிநீர் வழங்குவது சம்பந்தமாக சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திடம் திட்டங்கள் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**40—**

**பாதாளச் சாக்கடைத் திட்டம்**

**வினா 4565—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மன்னார்குடி நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் தற்போது ஆய்வில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**41—**

**அணைக்கட்டு கட்டும் திட்டம்**

**வினா 4698—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் நகராட்சி, குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு, செண்பகத்தோப்பு அருகே பேயனாறு படுகையில் ஆற்றின் குறுக்கே மண் அணைக்கட்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தை செயல்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவில்லிபுத்தூர் நகராட்சிக்குப் பாதுகாக்கப் பட்ட குடிநீர் 1955-ல் இருந்து. பேயனாற்றிலிருந்து எடுத்து வரப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. நகரின் வளர்ச்சிக்கேற்ப அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்த தலைமை நீரேற்று நிலையத்தில் பேயனாற்றில் பருவ காலங்களில் தண்ணீர் ஓட்டம் அதிகமாக இருக்கும் காலங்களில் மேற்படி நீரை சேமித்து வைத்து வறட்சிக் காலங்களில் பயன்படுத்த ஏதுவாக கோடைக் கால நீர் தேக்கம் அமைக்கவும் இதனை மானியம் பெற்று செயல்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**42—**

**திருவில்லிபுத்தூர் தொகுதியில் குடிநீர் வசதி**

**வினா 4703—திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வ. புதுப்பட்டி பேரூராட்சியில் எல்லா வார்டுகளுக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் சீராக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதியைச் சார்ந்த வ. புதுப்பட்டி பேரூராட்சியில் உள்ள 15 வார்டுகளில், 84 பொது நல்லிகள், 310 வீட்டு இணைப்புகள் அமைக்கப்பட்டு வார்டின் எல்லா பகுதிக்கும்

[1998 மே 30

குடிநீர் சீராக விநியோகிக்கப்படுவதால், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தற்போது அமைக்கத் தேவையில்லை.

(ஆ) இல்லை.

**43—**

**குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கத் திட்டம்**

**வினா 4735—டாக்டர் அ. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்ப்பேட்டை பேரூராட்சியின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உளுந்தூர்ப்பேட்டை பேரூராட்சி குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ரூ. 149.25 இலட்சத்திற்கு திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஆயுள் காப்பீட்டுக்கழக நிதி உதவியுடன் திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் அனைத்துப் பணிகளும் ஜூலை 1997-க்குள் முடிக்கப் பெற்று மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட உள்ளது.

**44—**

**குடிதண்ணீர் வழங்கும் திட்டம்**

**வினா 4737—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, அத்திகுளம்—செங்குளம் கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும்?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நடப்பு நிதியாண்டில் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**45—**

**பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்**

**வினா 4738—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, காரங்குளம் கிராமத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம், எனில், எப்பொழுது முதல் செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நடப்பு நிதியாண்டில் திட்டம் எதுவும் இல்லை.

**46—**

**பெண்கள் கழிப்பிடத்தை நவீனப்படுத்துதல்**

**வினா 4740—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் நகராட்சியில், ஏற்கெனவே இருக்கும் பெண்கள் கழிப்பிடத்தை நவீனப்படுத்த வேண்டும் என அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவில்லிபுத்தூர் நகராட்சியில், 13 உலர் கழிப்பிடங்கள் உள்ளன. அவற்றை புதிய நவீன கழிப்பிடங்களாக மாற்றி அமைப்பதற்கான செயற்குறிப்பு உள்ளது. நடப்பு நிதியாண்டில் ஆராய்ச்சிப்பட்டி, பகவதி அம்மன் கோயில் தெருவிலுள்ள உலர் கழிப்பிடத்தை ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் ஆராய்ச்சிப் பட்டி, நாடார் தெருவிலுள்ள உலர் கழிப்பிடத்தை ரூ. 1.50 இலட்சம் மதிப்பீட்டிலும் நவீன கழிப்பிடங்களாக மாற்றி அமைக்கப்பட உள்ளது.

**47—**

**புதிய பேருந்து நிலையம் அமைத்தல்**

**வினா 4742—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**48—**

**ஆதிதிராவிட மக்களுக்குக் குடிதண்ணீர் வசதி**

**வினா 4743—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, குப்பச்சிப்பட்டி கிராம ஆதி திராவிட மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை. நடப்பு நிதியாண்டில் (1996-97) திட்டம் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**49—**

**சிறிய பாலம் அமைத்தல்**

**வினா 4890—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம் கோம்பைக்காடு ஆணைகவுண்டன் கொட்டாய் சாலையிலுள்ள பெரிய-பள்ளத்தில் மழை வெள்ளம் பெருக்கெடுத்ததால், பள்ளிக்கு வந்த மாணவர்கள் 4 பேர் அடித்துச் செல்லப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தச் சாலையில் ஒரு சிறு பாலம் இந்த நிதி ஆண்டில் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், கோம்பைக்காடு, ஆணைகவுண்டன் பள்ளத்தில் மழை வெள்ளத்தால் குழந்தைகள் எவரும் அடித்துச் செல்லப்படவில்லை.

(ஆ) வினாவில் குறிப்பிட்ட சாலையில் சிறிய பாலம் கட்ட ரூ. 1,50,000 செலவாகும். இதனை ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் இருந்து செய்ய தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

50—

### கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல்

**வினா 4998—திரு. சி. கோபு:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டுத் தொகுதி, குப்பம் பாளையம் ஊராட்சி, அகரம் ஊராட்சி, எல்லப்பன்பட்டி ஆகிய இடங்களில் கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : வேலூர் மாவட்டம், அணைக்கட்டுத் தொகுதி, குப்பம்பாளையம் ஊராட்சி ஆகிய இடங்களில் கசிவு நீர்க் குட்டைகள் அமைக்க திட்டம் ஏதும் இல்லை. எல்லப்பன்பட்டியில் ஒரு சிறிய கிராமக் குளத்தை கசிவுநீர்க் குட்டையாக மாற்றி அமைக்க 1996-97-ம் நிதியாண்டில் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் நடைபெற்று வருகிறது.

51—

### பிணங்களை எரிக்க மின்சார எரியூட்டும் கருவி

**வினா 5125—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் மயானத்தில் பிணங்களை எரிக்க மின்சார எரியூட்டுக் கருவி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்போது திட்டம் ஏதும் இல்லை.



52—

### ஆடு, மாடு இறைச்சி சுகாதார ஆய்வு விவரம்

**வினா 5146—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் இறைச்சிக் கொட்டில்களில் (Slaughter Houses) வெட்டப்படும் ஆடு, மாடு இறைச்சி சுகாதார ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

53—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா 5233—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகராட்சிக்குப் புதிதாக கூடுதல் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

[1998 மே 30

**54—**

**சுகாதாரமான குடிநீர் கிடைக்கச் செய்தல்**

**வினா 5254—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர், பில்லூர் குடிநீர் சுகாதாரமற்று இருப்பதாக மாநில அரசுக்கு புகார் ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம். ஆய்வின்போது குடிநீர் குடிப்பதற்கு உகந்தது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

**55—**

**பாசிமுத்தான் ஓடையில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்**

**வினா 5281—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் நகராக் கழிவுநீர், பாசிமுத்தான் ஓடையில் (கான் சாகிப் வாய்க்கால்) கலப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சிதம்பரம் நகராட்சியில், புதை சாக்கடைத் திட்டம் செயல்பட்டு வருவதால், இதன்மூலம் வெளியாகும் கழிவுநீர், புதை



1998 மே 30]

வடிகால் நீரேற்று நிலையம் மூலமாக நகர எல்லையிலிருந்து சுமார் 5 கி.மீ. தூரம் உள்ள கழிவுநீர் குளத்தில் விடப்படுகிறது. இந்தக் கழிவுநீர் குளத்தில் இருந்து சுமார் 300 அடி தூரத்தில் பாசிமுத்தான் ஓடை செல்கிறது. எனவே, பாசிமுத்தான் ஓடையில் கழிவுநீர் கலக்க வாய்ப்பில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**56—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 5286—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம் பெரியகுமட்டியில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஒன்றியம், பெரியகுமட்டியில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க நடப்பு நிதி ஆண்டில் ஆவன செய்யப்படும்.

**57—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துதல்**

**வினா 5287—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், சிலம்பிமங்களம், புதுச்சத்திரம் மற்றும் வில்லியநல்லூர் ஆகிய கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை புதுச்சத்திரத்தில் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) சிலம்பிமங்களம், புதுச்சத்திரம் மற்றும் வில்லியநல்லூர் ஆகிய கிராமங்களுக்கு தற்போது கூட்டுக் குடிநீர்த் திட்டம் எதுவும் இல்லை.

**58—**

**ஆதிதிராவிடர் இடுகாட்டில் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்**

**வினா 5296—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், பெரியகுமட்டி ஆதிதிராவிடர் இடுகாட்டிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**59—**

**விளையாட்டு மைதானம் அமைத்தல்**

**வினா 5598—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) திருப்பூர், வேலம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட வேலம்பாளையம் பகுதியிலுள்ள புறம்போக்கு நிலத்தில் விளையாட்டு மைதானம் உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**60—**

**தனியார் நிலத்தடி நீர் எடுப்பதைத் தடை செய்தல்**

**வினா 5655—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை புறநகரான திருவான்மியூர், நீலாங்கரை, பாலவாக்கம் போன்ற இடங்களில், தனியார் நிலத்தடி நீர் எடுப்பதை தடை செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னைப் புறநகரான திருவான்மியூர், நீலாங்கரை, பாலவாக்கம், போன்ற இடங்களில் தனியார் நிலத்தடி நீர் எடுப்பதை ஒழுங்குமுறைபடுத்துவதற்கான சென்னைப் பெருநகர் நிலத்தடி நீர் (ஒழுங்குபடுத்தும்) சட்டம் 1987, நடை முறையிலுள்ளது.

[1998 மே 30

61—

**பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்**

**வினா 5657—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி ஒன்றியத்திலுள்ள ஓரிச்சேரி, புன்னம் பருவாச்சி, மயிலாம்பாடி, ஊராட்சிகோட்டை, தொட்டிபாளையம், சன்னியாசி பட்டி, வாதநல்லூர் ஆகிய ஊராட்சியில் உள்ள ஊர்களுக்கும், அம்மாப்பேட்டை ஒன்றியம், காட்டபநல்லூர், ஒட்டபாளையம் ஊராட்சியிலுள்ள ஊர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மேற்காணும் வினாவில் கேட்கப்பட்டுள்ள ஊர்களுக்கு திட்டம் உருவாக்க தற்போது ஆய்வுப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

62—

**மலேரியா நோயைக் கட்டுப்படுத்துதல்**

**வினா 5735—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மலேரியா நோய் அதிகம் பரவி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதைக் கட்டுப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னை நகரில் மலேரியா நோய் அதிகம் பரவாமல் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது. மலேரியா நோயைக் கட்டுப்படுத்த வீடுகளில் உள்ள கிணறுகளிலும் மேல்நிலைத் தொட்டிகளிலும் கீழ்நிலைத் தொட்டிகளிலும் வாரம் ஒருமுறை கொசுப் புழுக் கொல்லி மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. மாநகராட்சியினால் அங்கீகரிக்கப்பட்ட கொசுப்புகா இரும்பு மூடிகளை உபயோகப்படுத்தவும் பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

63—

**மெரினா கடற்கரை அசுத்தமாவதைத் தடுத்தல்**

**வினா 5736—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, மெரினா கடற்கரையில் எருமை மாடுகள் புல் மேய்வதால் அப்பகுதி அசுத்தமாவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை மெரினா கடற்கரையில் எருமை மாடுகள் புல் மேய்வதால் அப்பகுதி அசுத்தமாவதைத் தடுக்க அங்கு சுற்றித் திரியும் மாடுகளையும், புல் மேயும் மாடுகளையும், பிடிக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டு, சென்னை மாநகராட்சி அலுவலர்கள், சென்னை மெரினா காவல் துறை அலுவலர்களுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றனர். காலையிலும் இரவிலும் இம்மாடுகளைப் பிடித்தல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது மார்ச் மாதத்தில் மொத்தம் 12 மாடுகள் சென்னை மெரினா கடற்கரைப் பகுதியில் பிடிக்கப்பட்டு சென்னை மாநகராட்சி பட்டிகளில் அடைக்கப்பட்டன.

[1998 மே 30

இம்மாடுகளின் உரிமையாளர்களின்மீது காவல் துறையினர் வழக்கு தொடர்ந்து அபராதம் விதிக்கப்பெற்றுள்ளனர். மேலும், சென்னை மாநகராட்சி இம்மாடுகளை பட்டியில் பராமரித்ததற்குண்டான கட்டணத் தொகையை மாட்டு உரிமையாளர்களிடமிருந்து வசூலித்துள்ளனர்.

**64—**

**மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 5783—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியிலுள்ள கொங்கணாபுரம் ஒன்றியத் திற்குட்பட்ட புதுப்பாளையம் பஞ்சாயத்திலிருக்கும் செங்கான்வளைவு, முன்சிப்வளைவு, புதுப்பாளையம் கஸ்பா, கரைக்காடு, வேப்பனேரி அய்யனாரப்பன் கோவில்காடு ஆகிய பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம், எனில், வேப்பனேரி ஏரி அருகில் ஒரு ஆழ்துளைக் கிணறு போட்டு, மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிக் கட்டி குடிநீர் விநியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வேப்பனேரி ஏரி அருகில் ஆழ்துளைக் கிணறு அமைத்து மேல்நிலைத் தொட்டிமூலம் குடிநீர் வசதி மேற்படி பகுதிக்கு வழங்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தற்போது இல்லை. வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் திட்டத்தைச் செயற்படுத்த நடவடிக்கை பரிசீலிக்கப்படும்.



1998 மே 30]

**65—**

**திறந்த வெளிக் கிணறு அமைத்தல்**

**வினா 5786—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்துறை தொகுதி, துடுப்பதி ஊராட்சி ராக்கியாபாளையம் என்ற இடத்தில் குடிதண்ணீர் வச[illegible]க திறந்த வெளிக் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**66—**

**பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டட வசதி செய்தல்**

**வினா 5888—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, அனந்தபுரத்தில் உள்ள ஆண்கள் தொடக்கப்பள்ளி, ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் காட்டு சித்தாமூரில் உள்ள ஆரம்பப் பள்ளி ஆகியவற்றிற்கு கூடுதல் கட்டட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, காட்டு சித்தாமூர் ஊராட்சியில் உள்ள ஆரம்பப் பள்ளிக்கு ஒரு கூடுதல் கட்டடம் கட்ட வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் மூலம், 1997-98-ம் ஆண்டுக்கு அனுமதியளிக்கப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.

அனந்தபுரம் பேரூராட்சியில் உள்ள ஆண்கள் தொடக்கப் பள்ளி மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றிற்கு கட்டட வசதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

67—

**குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தடுத்தல்**

**வினா 5915—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில், கொங்கணாபுரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட சமுத்திரம் பஞ்சாயத்திலுள்ள வியாபாரித் தெரு என்ற பகுதி மற்றும் தொப்பவளவு பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பகுதிக்கு ஒரு மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டிக் கட்டி வெங்கட்ராமன் வளவில் போடப்பட்டுள்ள தண்ணீர் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வெங்கட்ராமன் வளவு குடிநீர்த் திட்டம் அப்பகுதி மக்களுக்கு மட்டுமே போதுமானதாகவுள்ளதால், இத்திட்டத்திலிருந்து வியாபாரித் தெரு பகுதிக்கு குடிநீர் விநியோகிக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

தொப்பவளவு பகுதிக்கு மாணிக்கம்பட்டி குடிநீர்த் திட்டத்தின்கீழ் 10,000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலைத் தொட்டி மற்றும் பகிர்மானக் குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.



68—

**கடைக்காரர்களுக்கு மாற்று இடம் கொடுத்தல்**

**வினா 5925—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பாரிமுனையில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட கடைக்காரர்களுக்கு மாற்று இடம் செ[illegible]தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னை பாரிமுனையில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட கடைக்காரர்களுக்கு மாற்று இடம் வழங்கப்பட்டு உள்ளது.

69—

**குடவாசல் பேரூராட்சிக்குப் புதிய அலுவலகக் கட்டடம்**

**வினா 5929—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், குடவாசல் பேரூராட்சிக்குப் புதிதாக அலுவலகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருவாரூர் மாவட்டம், குடவாசல் பேரூராட்சிக்குப் புதிதாக அலுவலகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

[1998 மே 30

(ஆ) வினா எழவில்லை.

70—

**வரித் தண்டலர்களுக்குச் சம்பளம்**

**வினா 5936—திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனாட்சிபுரம் பேரூராட்சியில் வரித் தண்டலர்களுக்கு 1989-ம் ஆண்டு 9 மாதமும், 1996-ம் ஆண்டு 6 மாதமும் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

71—

**நேப்பியர் பாலம் விரிவுபடுத்துதல்**

**வினா 5993—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பல்கலைக் கழகத்தையும், தலைமைச் செயலகத்தையும் இணைக்கும் நேப்பியர் பாலத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



1998 மே 30]

(ஆ) நேப்பியர் பாலத்திற்கு பக்கவாட்டில் புதிய பாலம் கட்ட ரூ. 5.11 கோடி மதிப்பீட்டுச் செலவிற்கு அரசு ஆணை எண் 343, ந.நி.ம.கு.வ. துறை, நாள் 31-12-1996-ல் அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தை துரிதமாக செயல்படுத்த சென்னை மாநகராட்சி ஆணையாளரால் மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

72—

**புதிய குடிநீர்த் திட்டம்**

**வினா 6038—திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம் பேரூராட்சியின் புதிய குடிதண்ணீர் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) 1996-97-ஆம் ஆண்டில் திட்டம் முடிவுறுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருக்கழுக்குன்றம் பேரூராட்சிக்கு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ரூ. 174.58 இலட்சத்திற்கு 31-12-1996-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கும்பொருட்டு விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இத்திட்டம் 1998-99-ம் ஆண்டில் முடிக்க இலக்கிடப் பட்டுள்ளது.

73—

**பேருந்து நிலையம் கட்டுதல்**

**வினா 6121—திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் திருக்கழுக்குன்றம் பேருந்து நிலையம் கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்பொழுது அப்பணி முடிவுறும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆரம்ப கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) மாநில நகர் ஊரமைப்புத் திட்டக் குழுவினால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு செங்கல்பட்டு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு ஒதுக்கீட்டில் இருந்து நிதி கிடைக்கப்பெற்ற பின்னர், பேருந்து நிலையம் அமைக்கும் பணி தொடங்கப்படும்.

**74—**

**மின் இயக்கிகளை இயங்கச் செய்தல்**

**வினா 6131—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி நெருப்பூரில் குடிநீர் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய்க் கிணறு மின் இயக்கி மற்றும் பத்திரஅள்ளி ஊராட்சி ஆரல்குந்தி கிராம குடிநீர் வசதிக்கான மின் இயக்கி ஆகியவை பழுதடைந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக மின் இயக்கிகளை இயங்கச் செய்து குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, நெருப்பூர் கிராமத்தில் இயங்கி வந்த



1998 மே 30]

மின்மோட்டார் பழுது நீக்கம் செய்ய இயலாத நிலையில் உள்ளதால், புதிய விசைப்பம்புடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆரல்குந்தி கிராமத்தில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு மின் இணைப்புப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

**75—**

**தெருவிளக்கு வசதி செய்தல்**

**வினா 6136—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, முள்ளுவாடி, முதுகம்பட்டி, நாகனூர், எரிகலனூர் ஆகிய கிராமங்களுக்கு தெருவிளக்கு வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, முள்ளுவாடி, முதுகம்பட்டி, நாகனூர், எரிகலனூர் ஆகிய கிராமங்களில் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு அவை நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன.

**76—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா 6141—திரு. த. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம், நமத்தோடு கூட்டுக் குடிநீர் திட்டத்தினை விரைந்து செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்திற்கான ஒப்புதல் 8/1996-ல் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக செய்யாற்றில், நாராயணமங்களம் கிராமத்திற்கு அருகே நீராதாரம் கண்டறியப்பட்டு திட்டவடிவமைப்புகள் தயாரிக்கப்பட்டு வாரிய தொழில்நுட்பக் குழு பரிசீலனைக்குப் பின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு, இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**77—**

**ஒன்றிய உறுப்பினர்களுக்கும் பயணப்படி வழங்குதல்**

**வினா 6154—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி உறுப்பினர்களுக்குப் பயணப்படி வழங்குவதுபோல ஒன்றிய உறுப்பினர்களுக்கும் பயணப்படி வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மாவட்ட ஊராட்சிகளின் தலைவர், உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் தலைவர், உறுப்பினர்களுக்கு பயணப்படி, தினசரிப்படி, அமர்வு படி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.



**78—**

**பம்மல் நாகல்கேணி பேரூராட்சி என மாற்றம் செய்தல்**

**வினா 6178—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பம்மல் பேரூராட்சியை பம்மல் நாகல்கேணி பேரூராட்சி என பெயர் மாற்றம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பம்பல் பேரூராட்சியை பம்மல் நாகல்கேணி பேரூராட்சி என மாற்றம் செய்யும் நடவடிக்கை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**79—**

**குன்னத்தூர் பேரூராட்சியை ஊரகப் பேரூராட்சியாக அறிவித்தல்**

**வினா 6190—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், குன்னத்தூர் பேரூராட்சியை ஊரகப் பேரூராட்சியாக அறிவிக்கக் கோரும் முறையீடு அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எனினும் பேரூராட்சிகளை வருமானம் மற்றும் மக்கள் தொகை அடிப்படையில் தரம் மாற்றம் செய்ய பொதுவான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**80—**

### முள்ளுவாடியில் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்த்தல்

**வினா 6197—திரு. ஜி. கே. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பென்னாகரம் பேரூராட்சி முள்ளுவாடியில் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வரும் நிதியாண்டில் (1997-98) முன்வைப்புத் திட்டமாக (Deposit Works) எடுத்துக்கொண்டு நிறைவேற்ற அரசின் பரிசீலனையில் உள்ளது.

**81—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா 6198—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பிலியனூர் ஊராட்சி, குள்ளனூர், தாளப்பள்ளம், ராமனூர் ஆகிய மூன்று ஊர்களுக்கும் சேர்த்து ஒரே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் தொகுதியில் பிலியனூர் ஊராட்சியைச் சார்ந்த குள்ளனூர், தாளப்பள்ளம், ராமனூர் ஆகிய 3 குடியிருப்புகளில் தலா ஒரு கைப்பம்பு உள்ளது. நடப்பு ஆண்டில் 0 முதல் 10 லிட்டர் வரை குடிநீர் விநியோக அளவுள்ள குடியிருப்புகளுக்கு மட்டும் அரசு உத்தரவுப்படி திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்கண்ட குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் எதிர்வரும் ஆண்டுகளில் அரசு நிதி ஒதுக்கினைக் கருத்தில் கொண்டும் வாரிய முன்னுரிமைப்படியும் எடுத்து செயல்படுத்தப்படும்.

**82—**

### உத்தமசோழமங்கலத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா 6205—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம் உத்தமசோழமங்கலத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உத்தமசோழமங்கலம் கிராமத்தின் மக்கட்தொகை 427 ஆகும். இக்குடியிருப்பில் இந்தியா மார்க் II கைப்பம்பு ஒன்றும் வடிமுனை குழாய் கைப்பம்பு மூன்றும் உள்ளன. மறுஆய்வின்படி இக்குடியிருப்பு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 15 லிட்டர் முதல் 25 லிட்டர் வரை குடிநீர் பெறும் வகையில் உள்ளது. தற்போது நாள்

ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டருக்குக் குறைவாகக் குடிநீர் பெறும் கிராமங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப் படுவதால் உத்தமசோழமங்கலத்திற்கு நடப்பு ஆண்டில் குடிநீர் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.

**83—**

**கூடுதல் துப்புரவுத் தொழிலாளர்களை நியமித்தல்**

**வினா 6218—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சியில் கூடுதலாக துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தென்காசி நகராட்சியில் கூடுதலாக துப்புரவுப் பணியாளர் நியமனம் செய்ய உரிய செயற்குறிப்பு நகராட்சி ஆணையரிடமிருந்து பெறப்பட்டதும் நகராட்சி நிர்வாக இயக்குநரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**84—**

**ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்**

**வினா 6245—திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97 ஆம் ஆண்டில் தர்மபுரி மாவட்டத்தில் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் நிலுவையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இத்தகைய திட்டம் ஏதுமில்லை.

**85—**

**ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்**

**வினா 6285—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, வெள்ளக்கோவில், மூலனூர், தாராபுரம் ஒன்றியங்கள், கொளத்துப்பாளையம் பேரூராட்சி, சிற்றூராட்சிகளில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

**86—**

**குடிநீர் வடிகால் வாரியத் தொழிலாளர் சம்மேளனம்**

**வினா 6301—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டிசம்பர் 1996-ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தொழிலாளர் சம்மேளனம் மாண்புமிகு முதலமைச்சருக்கு ஏதேனும் கோரிக்கை மனு அனுப்பியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம். ரூ. 5 இலட்சங்கள் வரை மதிப்பீடுள்ள குடிநீர்த் திட்டங்களை உள்ளாட்சி நிறுவனங்களே நிறைவேற்றிக்கொள்ளலாம் என்னும் முடிவினை ஆட்சேபித்து தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்திற்கும் மற்றும் நிறைவேற்றப்படும் குடிநீர்த் திட்டங்களுக்கும் பாதிப்பு ஏற்படாவண்ணம் செயல்படுத்த சில கோரிக்கைகள் அடங்கிய மனுவினை 1996ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனு ஒன்றினை அளித்துள்ளார்.

(ஆ) ரூ. 10 கோடிக்கு மேலுள்ள குடிநீர்த் திட்டங்கள் மட்டுமே அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்படவேண்டும் என்றும், அனைத்து மாநகராட்சிகள் மற்றும் தேர்வுநிலை நகராட்சிகள் தாங்களே குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றலாம் என்றும் 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியச் சட்டம் திருத்தப்பட்டுவிட்டதால், மேற்படி சம்மேளனத்தின் கோரிக்கை மனுமீது நடவடிக்கை தேவையில்லை என்று கருதப்பட்டு மேல்நடவடிக்கை கைவிடப்பட்டது.

**87—**

**கடலூர் நகரக் குடிநீர்த் திட்டம்**

**வினா 6348—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

கடலூர் மாவட்டம், கடலூர் நகரக் குடிநீர்த் திட்டம் குறித்து அரசு பரிசீலிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



கடலூர் நகரக் கூட்டுக் குடிநீர்த் திட்ட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவை முடிவுறும் தருவாயில் உள்ளன.

**88—**

**ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்**

**வினா 6383—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பரமக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் நடப்பாண்டில் (1997-98-ல்) கட்டுவதற்கு செயற்குறிப்பு ஏதுமில்லை.

**89—**

**பேரூராட்சிகளின் பணிகளுக்கு நிர்வாக அனுமதி**

**வினா 6419—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் வருவதற்கு முன் போடப்பட்ட அரசாணையை (உள்ளாட்சித் துறை ஆணை 889/ நாள் 1-11-1990) வைத்துக்கொண்டு பேரூராட்சிகளில் செய்யப்படும் வேலைகளுக்கான நிர்வாக அனுமதியை அரசு அதிகாரிகளிடம் பெறவேண்டுமென நிர்ப்பந்திக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசால் அளிக்கப்படும் மானியம் மற்றும் பேரூராட்சியில் உள்ள உபரி நிதியைக் கொண்டு சிறப்பு மற்றும் தேர்வுநிலை பேரூராட்சி மன்றங்கள் ரூ. 2 இலட்சம் வரையிலும், நிலை 1 மற்றும் நிலை 2 பேரூராட்சி மன்றங்கள் ரூ. 1 இலட்சம் வரையிலும், உதவி இயக்குநர் ரூ. 5.00 இலட்சம் வரையிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் ரூ. 10.00 இலட்சம் வரையிலும், பேரூராட்சிகளின் இயக்குநர் ரூ. 100.00 இலட்சம் வரையிலும், அதற்குமேல் அரசும், பேரூராட்சிகளில் திட்டப்பணிகளுக்கு ஒப்புதல் வழங்கும் வகையில் அதிகார வரம்பினை உயர்த்தி 9-6-1997-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

**90—**

**பேரூராட்சிப் பணியாளர்கள் நியமனத்திற்கான குறியீடு**

**வினா 6420—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூராட்சிகளில் பணியாளர்களுக்கான நியமனத்திற்கான குறியீடு நிர்ணயம் (Norms Committee Yard Stick) செய்து பிறப்பித்துள்ள அரசாணையின்படி பேரூராட்சிகளில் பணியிடங்களை தோற்றுவிக்கும் அதிகாரத்தை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**91—**

**சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் வளர்ச்சிப் பணியில் கிராமங்களைச் சேர்த்தல்**

**வினா-6422—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் வாரியத்தினரால் வளர்ச்சிப் பணிகளுக்காக சென்னையை ஒட்டி எடுத்துக் கொண்டுள்ள 20 கிராமங்களுடன் தாமஸ்மலை ஊராட்சி ஒன்றியத்தில் கிழக்குக் கடற்கரை சாலை மற்றும் பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள கிராமங்களையும் மேடவாக்கம், ஜல்லடம்பேட்டை, பெரும்பாக்கம், வேங்கைவாசல் ஆகிய கிராமங்களையும் சேர்த்துக்கொள்ள அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னைப் பெருநகரின் அண்மையில் உள்ள 20 உள்ளாட்சி அமைப்புகளைத் தவிர, தாமஸ்மலை ஊராட்சி ஒன்றியத்தில் கிழக்குக் கடற்கரைச் சாலை மற்றும் பழைய மகாபலிபுரம் சாலைகளில் உள்ள கிராமங்கள் மற்றும் மேடவாக்கம், ஜல்லடம்பேட்டை, பெரும்பாக்கம், வேங்கைவாசல் ஆகிய கிராமங்கள் உட்பட, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் எல்லைக்குள் அடங்கிய அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுப் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு இவ்வனைத்துப் பகுதிகளையும் சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு மாற்றுவது குறித்த செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

**92—**

**ஊரக மருத்துவமனைகளைப் பராமரித்தல்**

**வினா 6516—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், காவிரிப்பட்டினம் தொகுதி, காவிரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில் பண்ணந்தூர் கிராமத்தில் பாராமரிக்கப்படும் ஊரக மருத்துவமனைகளை அரசு பொது சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறை மூலம் பராமரிக்க ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, பண்ணந்தூர் கிராமத்தில் பாராமரிக்கப்படும் ஊரக மருத்துவமனைகளை அரசு பொது சுகாதாரம மற்றும் மருத்துவத் துறை மூலம் பராமரிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

93—

**எய்ட்ஸ் நோய் தடுப்பு ஆராய்ச்சி மையம் ஏற்படுத்துதல்**

**வினா 6552—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டையார்பேட்டையில் உள்ள சென்னை மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் "எய்ட்ஸ்" நோய் தடுப்பு ஆராய்ச்சி மையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னை மாநகராட்சியின் பராமரிப்பில் தண்டையார்பேட்டையில் உள்ள தொற்று நோய் மருத்துவமனையில் "எய்ட்ஸ்" நோய் தடுப்பு ஆராய்ச்சி மையம் அமைக்கும் உத்தேசம் இல்லை.

94—

**சாலை வசதி செய்து கொடுத்தல்**

**வினா 6652—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், கமமம்பட்டி ஊராட்சி, மலையூர் காடு முதல் பரிகம் வரை சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், கம்மம்பட்டி ஊராட்சி, மலையூர் காடு முதல் பரிகம் வரை சாலை வசதி செய்வதற்கு ரூ.30 இலட்சம் செலவு ஏற்படும். மேற்படி சாலை அமைக்க மதிப்பீட்டுத் தொகை மிக அதிகமாக உள்ளதாலும் இப்பகுதி ரிசர்வ் பாரஸ்ட் மற்றும் மலைகள் சார்ந்த இடமாக உள்ளதாலும் இந்தச் சாலை அமைக்கும் பணியை ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் எடுத்துச் செய்ய சாத்தியக் கூறுகள் இல்லை.

95—

**புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தல்**

**வினா 6800—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானி நகரின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க அண்ணா நகர், சீனிவாசபுரம், அக்ரஹாரம், ஆகிய இடங்களில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

96—

**குற்றாலத்திலுள்ள பாம்புப் பண்ணையை விரிவுபடுத்துதல்**

**வினா 6819—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்திலுள்ள பாம்புப் பண்ணையை சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்திலுள்ள பாம்புப் பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**97—**

**கிருஷ்ணா குடிதண்ணீர் இணைப்புக் குழாய் வசதி செய்தல்**

**வினா 6826—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு கிருஷ்ணா குடிதண்ணீர் இணைப்புக் குழாய் வசதி செய்து கொடுக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கிருஷ்ணா குடிதண்ணீர் திட்டம் செயலாக்கத்திற்கு வரும்பொழுது அம்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடுகளுக்கு வேண்டுகோளுக்கு இணங்க, இணைப்புக் குழாய் வசதிகள் செய்து தரப்படும்.



**98—**

**மேல்நிலைத் தொட்டி அமைத்தல்**

**வினா 6932—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி — இடங்கணசாலை பேரூராட்சியில் சித்தர் கோவிலில் ஸ்டீல் மூலம் மேல்நிலைத் தொட்டி அமைத்து கே.கே.நகர் காளியம்மன் கோவில் அருகில் நாடார் தெரு, சாத்தம்பாளையம் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேற்கூறிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் நடப்பு நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

**99—**

**நகராட்சிப் பள்ளிக்கு சிமெண்ட் கூரைக் கட்டடம் கட்டுதல்**

**வினா 6965—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் எடப்பாடி நகரம் I-வது வார்டில் உள்ள மூப்பனூர் நகராட்சி பள்ளியின் கூரை மிக மோசமான நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சிமெண்ட் கூரைக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

[1998 மே 30

(ஆ) நகராட்சி நிதிநிலை தொடர்ந்து திருப்திகரமாக இல்லாததால் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்று இப்பணியை முழுமையாக செய்து முடிக்க நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

**100—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக் கட்டுதல்**

**வினா 6971—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், போடிநாயக்கன்பட்டி, பட்டறைக்கட்டி வளவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக் கட்டி, குழாய் இணைப்பு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**101—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 6972—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சி, கோட்டைமேட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**102—**

**இரயில்வே பாலத்தில் சுரங்கப் பாதை**

**வினா 6983—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் இரயில்வே பாலத்தில் சுரங்கப் பாதை அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது? அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரம்பூர் சுரங்கப்பாதையில் இருமருங்கிலும் பாதசாரிகள் சுரங்க நடைபாதை அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஆணை எண் 236, ந.நி.ம.கு.வ.துறை, நாள் 26-9-1996-ல் ரூ. 1.30 கோடி மதிப்பீட்டுச் செலவுக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணி இரயில்வே நிர்வாகத்தால் மேற்கொள்ளப்படும். வைப்புத் தொகையாக மதிப்பீட்டுச் செலவில் 25% அதாவது ரூ. 32.50 இலட்சங்கள் இரயில்வே துறைக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தை துரிதமாக செயல்படுத்த மாநகராட்சி உரிய மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**103—**

**மேம்பாலம் அமைத்தல்**

**வினா 6984—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) பெரம்பூர் குக்ஸ் சாலையில் இருந்து பி.பி.சாலை வரையில் மேம்பாலம் அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அப்பணி துரிதப்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெரம்பூர் குக்ஸ் சாலையில் இருந்து பி.பி.சாலை வரையில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு ரூ. 25.77 கோடி மதிப்பீட்டுச் செலவில் அரசு ஆணை எண்.279, ந.நி.ம.கு.வ.துறை, நாள் 25-10-1996-ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை அவர்களிடம் வரைபடம், மதிப்பீடு தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இப்பணியை துரிதப்படுத்த சென்னை மாநகராட்சி உரிய நடவடிக்கை எடுத்து வருகின்றது.

**104—**

**சுடுகாட்டிற்கு மின்விளக்கு மற்றும் மயான கொட்டகை அமைத்தல்**

**வினா 6990—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரம் 7-வது வார்டிலுள்ள ஆலச்சம்பாளையம் காட்டூர் பகுதியில் சுடுகாட்டிற்கு மின்விளக்கு மற்றும் மயான கொட்டகை அமைத்துக் கொடுக்கவும் முள்வேலிப் போடவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சியின் நிதிநிலை தொடர்ந்து பற்றாக்குறையாக இருப்பதால், இப்பணிகளை செய்ய இயலாத நிலை உள்ளது.



1998 மே 30]

**105—**

**மின் இணைப்பு வழங்குதல்**

**வினா 7004—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரம், 4வது வார்டிலுள்ள அருந்ததியர்கள் வாழும் நாராயணன் நகருக்கு மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். எடப்பாடி நகர 4 வது வார்டு, நாராயணன் நகர், அருந்ததியர் தெருவிற்குத் தெரு விளக்குகள் அமைக்கும் பணி அடுத்து வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும்.

**106—**

**மின் இணைப்பு வழங்குதல்**

**வினா 7005—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரம், 4வது வார்டு மோட்டூர் பகுதியிலுள்ள கோபு வீட்டு நகர், நாயக்கர் தெரு, மோட்டூர் காட்டுவளவு, காளியம்மன் நகர், ஆகிய பகுதிகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். எடப்பாடி நகரின் நான்காவது வார்டில் 6 குழல் விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வார்டில் இதர

பகுதிகளிலும் தெரு விளக்கு அமைக்கும் பணி அடுத்து வரும் திட்ட ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும்.

**107—**

**மின் விளக்குகள் அமைத்துக் கொடுத்தல்**

**வினா 7017—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டிப் பேரூராட்சியில் வன்னிய நகரில் போதுமான அளவு தெரு மின்விளக்குகள் இல்லாததால் அந்தப் பகுதிக்கு 7 மின் விளக்குகள் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பூலாம்பட்டிப் பேரூராட்சி, வன்னிய நகரில் 7 மின் விளக்குகள் அமைக்கப்பட்டு 22-12-1997 அன்று ஒளிரச் செய்யப்பட்டுள்ளன.

**108—**

**மின்கம்பம் அமைத்து மின்சார வசதி செய்தல்**

**வினா 7019—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, 1வது வார்டு மோட்டூரில் உள்ள சாமியார் கொட்டாய், சின்னப்பன் நகர், சந்தன மில், காளியம்மன் நகர், காக்காயன் காட்டுவளவு ஆகிய பகுதிகளுக்குத் தெரு விளக்கு இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அந்தப் பகுதிகளுக்கு மின் கம்பம் அமைத்து மின்சார வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?





விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) எடப்பாடி தொகுதியின் நான்காவது வார்டிலுள்ள காக்காயன் காட்டுவளவுப் பகுதிக்கு 1997-98-ம் ஆண்டு அடிப்படை வசதிகள் திட்டத்தின்கீழ் புதியதாக இரண்டு தெரு விளக்குகள் அமைப்பதற்காக 25-6-1997-ல் மின்வாரியத்திற்கு ரூ. 7280 செலுத்தப் பட்டுள்ளது. சாமியார் கொட்டாய், சின்னப்பன் நகர், சந்தன மில், காளியம்மன் நகர் ஆகிய பகுதிகளில் தெரு விளக்குகள் அமைக்கும் பணி 1998-99-ம் ஆண்டு மேற்கொள்ளப்படும்.

**109—**

**ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்**

**வினா 7077—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தொகுதி, இடையர்காடு—மஞ்சல்நீர்காயல் இணைப்புச் சாலையின் இருபுறமும் தனியார் செய்துள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தொகுதி, இடையர்காடு—மஞ்சல்நீர்காயல் இணைப்புச் சாலையில் தற்போது ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை.

[1998 மே 30

110—

தொகுப்பு விடுகள் கட்டுதல்

**வினா 7096—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதி, பு. புளியம்பட்டி, காந்திநகர் மற்றும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அனைத்துப் பேரூராட்சிப் பகுதிகளும் தற்போது தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் பேரூராட்சிப் பகுதிகளுக்கு விரிவாக்கப்படவில்லை. எனவே, பவானிசாகர் தொகுதி, பு. புளியம்பட்டி, காந்தி நகர் மற்றும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர இயலாது.

111—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா 7099—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதி, மாக்கினான் கோம்பை கூட்டுக் கூடிநீர்த் திட்டம் மற்றும் தொப்பம்பாளையம் குடிநீர்த் திட்டம் ஆகியவை நிறைவேற்றப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருப்பதாக அரசுக்குத் தகவலில்லை. திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற் றப்பட்டு வருகின்றன. 31-3-1998-க்குள் திட்டம் நிறைவேற்ற திட்டமிடப் பட்டுள்ளது.

112—

கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் கிடைக்க வசதி

**வினா 7307—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், தளவாய், சன்னாசி, நல்லூர், சேந்தமங்கலம் மற்றும் கட்டையன்குடிக்காடு ஆகிய கிராமங்களுக்கு அருகாமையிலுள்ள வெள்ளாற்றில் இருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், தளவாய், சன்னாசி, நல்லூர் மற்றும் சேந்தமங்கலம் கிராமங்களுக்கு வெள்ளாற்றின் கரை ஓரத்தில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கட்டையன்குடிக்காடு கிராமம் வெள்ளாற்றிலிருந்து 40 கி.மீ. தூரத்தில் உள்ளதால் வெள்ளாற்றிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்படவில்லை. இந்தக் கிராமத்துக்கு ஆழ்துளைக் கிணறு ஆதாரம் தேர்வு செய்யப்பட்டு திட்டப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. விரைவில் திட்டம் பொதுமக்கள் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

[1998 மே 30

113—

**எல்லைப் பகுதியை விரிவாக்கம் செய்தல்**

**வினா 7321—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி நகராட்சியின் எல்லைப் பகுதியை விரிவாக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

114—

**குடிநீர் கிடைக்க வசதி செய்தல்**

**வினா 7371—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி, கணக்கம்பாளையம் ஊராட்சியில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் நிலவுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர் தொகுதியின்கீழ் வரும் கணக்கம்பாளையம் ஊராட்சிக்கு நிரந்தரக் குடிநீர் வசதி வழங்கும் பொருட்டு திருப்பூர் பிரதானக் குழாயிலிருந்து 112 வழியோரக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் வழிவகை செய்யப் பட்டுள்ளது. இதற்கான அரசு ஆணை வழங்கப்பெற்று திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.



1998 மே 30]

115—

**தண்ணீரின் அளவை உயர்த்தும் திட்டம்**

**வினா 7372—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதியில், வழியோரக் கிராமக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பவானி ஆற்றிலிருந்து எடுக்கப்படும் தண்ணீரின் அளவைத் தேவையான அளவு உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

116—

**குடிநீர்ப் பஞ்சம் தீர்க்க நடவடிக்கை**

**வினா 7375—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி, சுட்டிவீரன்பாளையம் ஊராட்சி, மொய்யாண்டம்பாளையத்தில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் நிலவுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர் தொகுதியின் கீழ் வரும் ஈட்டிவீரன்பாளையம் ஊராட்சி, மொய்யாண்டம்பாளையத்திற்கு நிரந்தரக் குடிநீர் வசதி வழங்கும் பொருட்டு திருப்பூர் பிரதானக் குழாயிலிருந்து 412 வழியோரக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டு, திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**117—**

**தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

**வினா 7418—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பழுக்காடு கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**118—**

**சாண எரிவாயு அடுப்பு அமைத்தல்**

**வினா 7426—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட்டார அளவில் 'சாண எரிவாயு' அடுப்பு அமைக்க நிர்ணயிக்கப்படும் குறியீட்டைக் கைவிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?





(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**119—**

**சமுதாயக் கூடம் கட்டுதல்**

**வினா 7460—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவைகுண்டம் தொகுதி, மீனவர் அதிகம் வசிக்கும் பழையகாயல் கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிக் கொடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**120—**

**ஆதிதிராவிடர்களுக்குச் சமுதாயக் கூடம் அமைத்தல்**

**வினா 7478—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், ஆலங்கோட்டைக் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்குச் சமுதாயக் கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**121—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா 7507—திரு. அ. வெங்கடாசலம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, அறந்தாங்கி ஒன்றியம், செங்கல்மாரி, நற்பவளக்குடி ஊராட்சியில் குடிநீர்த் தொட்டி இருந்தும், சிறுநாட்டாண்மை, வடவயல் போன்ற பகுதிக்குக் குடிநீர் வழங்கப்படாததால், உடனடியாக அப்பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**122—**

**குடிநீர் திட்டப் பணியைத் துரிதப்படுத்துதல்**

**வினா 7520—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, வாசுதேவநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட திருமலாபுரம் மற்றும் நெல்கட்டும் செவல் கிராமங்களுக்கானக் குடிநீர்த்



திட்டப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், பணி தாமதமாவதால், அத்திட்டப் பணிகள் துரிதமாக நடைபெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**123—**

**பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்துதல்**

**வினா 7530—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதியில் உள்ள ஒரத்தநாடு பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஒரத்தநாடு பேரூராட்சியின் மக்கள்தொகை மற்றும் ஆண்டு வருமானம், நகராட்சியாகத் தரம் உயர்த்தும் அளவிற்கு இல்லாததால் இதனைத் தற்போது நகராட்சியாக உயர்த்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**124—**

**வாழோடு பகுதிக்குக் குடிநீர் வசதி**

**வினா 7547—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், திக்கணங்கோடு பேரூராட்சிக்குட்பட்ட வாழோடு பகுதிக்குக் குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், திக்கணங்கோடு பேரூராட்சிக்குட்பட்ட வாழோடு பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

**125—**

**சாலை வசதி செய்தல்**

**வினா 7550—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, கப்பியறைப் பேரூராட்சியில் மத்திகோடு, தட்டான்பறம்புகரை ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதிக்குச் சாலை வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, கப்பியறை பேரூராட்சியில், மத்திகோடு, தட்டான்பறம்புகரை ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதிக்குச் சாலை வசதி செய்து கொடுக்கத் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**126—**

**சமுதாயக் கூடம் அமைத்தல்**

**வினா 7553—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பழுக்காடு கிராமத்தில் ஒரு சமுதாயக் கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேராவூரணி தொகுதி சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பழுக்காடு கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**127—**

**பாதாளச் சாக்கடை அமைத்தல்**

**வினா 7564—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, செந்துறையில் பாதாளச் சாக்கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**128—**

**நல்லாத்துப் பாளையத்தில் குடிநீர் வசதி**

**வினா 7582—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி, நெறிப்பறைச்சல் கிராமம், நல்லாத்துப் பாளையத்தில் இருந்து குடிநீர் வசதி வேண்டும் என்று மாநில அரசிற்குக் கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**129—**

**பொன்றைவிளைப் பகுதிக்கு குடிநீர் வசதி**

**வினா 7590—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, கப்பியறை பேரூராட்சி, பொன்றைவிளைப் பகுதியில் குடிநீர்த் தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இத்திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**130—**

**குடிநீர்த் திட்ட வேலைகளைத் துரிதப்படுத்துதல்**

**வினா 7743—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரிப் பேரூராட்சியில் குடிநீர்த் திட்ட வேலைகள் துரிதமாக நடைபெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.





**131—**

**சமுதாயக் கூடக் கட்டுமானப் பணி முடித்தல்**

**வினா 7752—திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் பேரூராட்சி நெடுஞ்சாலையில் கட்டுமானப் பணியிலுள்ள சமுதாயக் கூடம் நீண்ட நாட்களாக முடிவடையாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முடிவு பெறும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பர்கூர் பேரூராட்சி நெடுஞ்சாலையில் உள்ள சமுதாயக்கூடக் கட்டுமானப் பணி முடிவுற்று 2—6—1997-ல் அக்கூடம் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**132—**

**கழிவுநீரை அப்புறப்படுத்தும் திட்டம்**

**வினா 7766—திரு. பீ.அ. வைத்தியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, உள்ளகரம் புழுதிவாக்கம் பேரூராட்சி சரஸ்வதி நகரில் தூய்மையைக் கெடுக்கும் ஆலந்தூர் நகராட்சிக் கழிவு நீரை அப்புறப்படுத்தும் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

[1998 மே 30

தாம்பரம் தொகுதி, உள்ளகரம், புழுதிவாக்கம் பேரூராட்சி சரஸ்வதி நகரில் தூய்மையைக் கெடுக்கும் ஆலந்தூர் நகராட்சிக் கழிவு நீரை அப்புறப்படுத்தும் திட்டத்தை, மூன்று மாத காலத்தில் மெகா சிட்டி திட்டத்தில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**133—**

**பேருந்து நிலையத்தை நவீன வசதிப்படுத்துதல்**

**வினா 7774—திரு. இ.ஏ.பி. சிவாஜி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணிப் பேருந்து நிலையத்தை நவீன வசதிகளுடன் மாற்றம் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருத்தணி பேருந்து நிலையத்தை நவீன வசதிகளுடன் மாற்றம் செய்வதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

**134—**

**இணைப்புச் சாலை அமைத்தல்**

**வினா 7779—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, வில்லுக்குறி பேரூராட்சிக்குட்பட்ட, மேலகருப்புக்கோடு, கீழகருப்புக்கோடு இணைப்புச் சாலை வேலையை முடித்துப் போக்குவரத்திற்குப் பயன்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேலகருப்புக்கோடு, கீழகருப்புக்கோடு இணைப்புச் சாலை பணி முடிக்கப்பட்டு, சாலையைத் தற்போது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

**135—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் பொதுக் குழாய் அமைத்தல்**

**வினா 7806—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சி, வார்டு எண் 26 கவுண்டம்பட்டி தெற்குத் தெரு பகுதிக்கு பூலாம்பட்டி-ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் பொதுக் குழாய் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): எடப்பாடி நகராட்சி, வார்டு எண் 26, கவுண்டம்பட்டி தெற்குத் தெருப் பகுதியில் பொதுக் குழாய் அமைப்பது தொடர்பாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. அவ்வனுமதி கிடைக்கப் பெற்றதும் விரைவு நடவடிக்கை மேற்கொண்டு மேற்காண் பணி முடிக்கப்படும்.

136—

**ஆதிதிராவிட மக்களுக்கு இடஒதுக்கீடு முறையில் கடைகள் ஒதுக்குதல்**

**வினா 7815—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகராட்சிகளில் (Shopping Complex) கடைகள் கட்டி ஏலம் விடும்போது ஆதிதிராவிட மக்களுக்கும் குறிப்பிட்ட அளவு இடஒதுக்கீடு முறையில் கடைகள் ஒதுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இட ஒதுக்கீடு முறையில் கடைகளை ஒதுக்கீடு செய்ய நகராட்சி விதிகளில் வழி இல்லை. எனவே, ஆதிதிராவிட மக்களுக்கு வணிக வளாகக் கடைகளை இடஒதுக்கீடு முறையில் ஒதுக்கீடு செய்து தர இயலாது.

137—

**இராட்சத மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைத்தல்**

**வினா 7819—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, வியாசர்பாடி, டாக்டர் அம்பேத்கர் கலைக் கல்லூரியை ஒட்டியுள்ள இடத்தில் இராட்சத மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வியாசர்பாடி தலைமை நீரேற்று நிலையம் கட்டுவதற்காக ரூ.157.55 மில்லியனுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு





உள்ளன. ஒப்பந்த கெடு தேதி 3-11-1997 ஆகும். அன்றையதினம் பெறப்படும் ஒப்பந்தங்களின் மீது முடிவு எடுத்தபின் பணிகள் தொடங்கப்படும்.

138—

**சென்னை மாநகராட்சி மற்றும் குடிநீர் வடிகால் வாரிய மண்டல அலுவலகம்**

**வினா 7820—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் பத்து மண்டலங்களாக இயங்கும் சென்னை மாநகராட்சி மற்றும் குடிநீர் வடிகால் வாரிய அலுவலகங்களை ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒன்று என்று மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னை மாநகராட்சியில் தற்போது இயங்கும் 10 வார்டு குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் மற்றும் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலமும் ஒன்றுக்கொன்று இணையானதாகும். எனவே, தற்சமயம் சென்னை மாநகராட்சியின் வார்டு அலுவலகங்களை அதிகரிக்க இயலாது.

139—

**நிழற்குடைகள், கழிப்பிடங்கள் ஒரே வடிவத்தில் அமைத்தல்**

**வினா 7867—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழில்மிகு சென்னையை உருவாக்கும்முகமாக நகரிலுள்ள அனைத்து நிழற்குடைகள், கழிப்பிடங்கள் ஆகியவற்றை ஒரே வடிவத்தில் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**140—**

### குளத்தைத் தூர்வாரி படிக்கட்டுகள் கட்டுதல்

**வினா 7869—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி பேரூராட்சி, பள்ளாங்குழிக் குளத்தை தூர் வாரி படிக்கட்டுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நாங்குநேரி பேரூராட்சி, பள்ளாங்குழிக் குளத்தை தூர்வாரி, படிக்கட்டுகள் கட்ட கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**141—**

### இடைமலக்கோணம் பகுதிக்குக் குடிநீர் வசதி

**வினா 7878—திரு. சி. வேலாயுதன்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, கப்பியறை பேரூராட்சி, இடைமலக்கோணம் பகுதிக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*





விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இடைமலக்கோணம் கிராமம், திப்பிரமலைக் கிராமத்திற்கு அருகே மலையடிவாரத்தில் உயரமான இடத்தில் அமைந்துள்ளதால் குழித்துறை ஆற்றுக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து நீர் பகிர்மானக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**142—**

### களர்விழிக் கிராமத்திற்குக் குடிநீர் வசதி

**வினா 7879—திரு. கே. சுப்பராயன்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் தொகுதி, மேற்குப் பகுதி ஊராட்சி, களர்விழி கிராமத்தில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் நிலவுவது அரசிற்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் தொகுதி, மேற்குப் பகுதி ஊராட்சி, களர்விழிக் கிராமத்தில் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

(ஆ) எழவில்லை.

**143—**

### வெள்ளானங்காடு வடக்குக் குடியிருப்புக்குக் குடிநீர் வசதி

**வினா 7880—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[1998 மே 30

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வெள்ளாளங்காடு வடக்குக் குடியிருப்பு பகுதிக்குக் குடிநீர் வசதி செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**144—**

**புதிய மேல்நிலைக் குடிநீர்த் தேக்கத் தொட்டி கட்டுதல்**

**வினா 7882—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, பம்மல் பேரூராட்சியில் புதிய மேல்நிலைக் குடிநீர்த் தேக்கத் தொட்டி கட்டப்பட்டு உபயோகிக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பம்மல் பேரூராட்சி, சங்கர் நகரில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தற்போது உபயோகத்துக்குக் கொண்டு வரப்பட்டு அதன்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**145—**

**மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைக்கும் திட்டம்**

**வினா 7884—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) தாம்பரம் தொகுதி, உள்ளகரம், புழுதிவாக்கம் பேரூராட்சியில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**146—**

**முலாம் பூசிய இரும்புக் குழாய்கள் மூலம் குடிதண்ணீர் வழங்கும் திட்டம்**

**வினா 7885—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில், வேளச்சேரி வட்டத்தில் சென்னைக் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் முலாம் பூசிய இரும்புக் குழாய்கள் பதித்துக் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தாம்பரம் தொகுதி, வேளச்சேரி பகுதியில் குடிநீர் விநியோகம் அமைப்பினை மேம்பாடு செய்வதற்காகப் பல்வேறு அளவிலான குடிநீர்க் குழாய்களை அமைக்கும் திட்டம் உலக வங்கியின் நிதி உதவியை எதிர்நோக்கி வகுக்கப்பட்டுள்ள சென்னை நகருக்கான மூன்றாவது திட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

(ஆ) இத்திட்டம் தற்போது உலக வங்கியின் பரிசீலனையின்கீழ் உள்ளது.

147—

குடிநீர் வசதி செய்தல்

**வினா 7892—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகரில் அட்டவணைச் சாதியினர் சுமார் 5000 பேர் வாழும் சிவானந்தபுரம், பொன்னையாபுரம், பாலன் நகர், கக்கன் நகர் போன்ற பகுதிகளில் இதுவரை குடிதண்ணீர் வசதி செய்யப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட சிவானந்தபுரம், பொன்னையாபுரம், பாலன் நகர் மற்றும் கக்கன் நகர் பகுதிகளில் பொதுக் குழாய்கள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் தற்போது நல்ல நிலையில் இயங்கி பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

148—

பேருந்து நிலையம் அமைத்தல்

**வினா 7971—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, சிங்கனேரி ஊராட்சி இளையார்குளத்தில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

149—

வணிக அங்காடி வளாகம் அமைத்தல்

**வினா 7982—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னைக்கருகில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கோயம்பேடு மொத்த அங்காடி வளாகம் போன்று, தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கருகிலும், மொத்த வணிக அங்காடி வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம், கோவை, மதுரை, திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிப் பகுதிகளில் மொத்த வணிக அங்காடி வளாகம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

150—

சித்த, ஆயுர்வேத மருத்துவமனைகள் ஆரம்பித்தல்

**வினா 8050—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

ஒவ்வொரு ஒன்றியத்திலும், சித்த, ஆயுர்வேத மருத்துவமனைகளை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஒவ்வொரு ஒன்றியத்திலும் சித்த மருத்துவப் பிரிவுகளைத் தொடங்கிட ஆண்டுதோறும் பகுதி-II திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆயுர்வேத மருத்துவப் பிரிவுகளைத் தொடங்கிட மாவட்ட ஊராட்சிகள் அமைப்பிற்குப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

**151—**

**குடிதண்ணீர் வசதி செய்தல்**

**வினா 8110—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, கடம்போடு வாழ்வு கிராமம், வடுகச்சிமதில் மேற்புறக் குடியிருப்பு ஆகியவற்றிற்குக் குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஏப்ரல் 1998-க்குள் விசைப்பம்புத் திட்டம் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

**152—**

**சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்**

**வினா 8114—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) நாங்குநேரி தொகுதி, வடுகச்சிமதில் ஊராட்சி/ஆலங்குளம் வயல்காட்டிலிருந்து அம்மன்கோயில் வழியாக வடுகச்சிமதில் வரை செல்லும் சாலை ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகியிருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்புகளை அகற்ற ஊராட்சி ஒன்றிய அளவில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**153—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா 8118—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கனாபுரம் ஒன்றியம், குருமபட்டி ஊராட்சியில் உள்ள தளவாப்பட்டி, ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு வெண்டனூர் மேல்நிலைத் தொட்டியிலிருந்தோ, அல்லது சானாரப்பட்டி மேல்நிலைத் தொட்டியிலிருந்தோ, குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கனாபுரம் ஒன்றியம், குருமபட்டி ஊராட்சியில் உள்ள தளவாப்பட்டி ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு வெண்டனூர் மேல்நிலைத் தொட்டியிலிருந்தோ அல்லது சானாரப்பட்டி மேல்நிலைத் தொட்டியிலிருந்தோ குடிநீர் வழங்க சாத்தியக்கூறு இல்லை.

[1998 மே 30

**154—**

**ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம்**

**வினா 8178—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், கீழையூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், கீழையூர் ஊராட்சி ஒன்றியத்திற்குப் புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

**155—**

**தரைப் பாலம் அமைத்தல்**

**வினா 8195—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு பேரூராட்சி, மஞ்சுவிளைச் சாலையில் இருந்து வடகரை செல்வதற்கு தரைப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு பேரூராட்சி, மஞ்சுவிளைச் சாலையில் இருந்து வடகரை செல்வதற்கு தரைப் பாலம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1998 மே 30]

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**156—**

**முருக்கோடி கிராமத்திற்குக் குடிநீர் வசதி**

**வினா 8205—திரு. சி. கோடி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், அணைக்கட்டுத் தொகுதி முருக்கோடிக் கிராமத்திற்குக் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், அணைக்கட்டுத் தொகுதி, முருக்கோடிக் கிராமத்திற்கு புதியத் திட்டம் ஏதும் இல்லை.

**157—**

**பேருந்து நிலையம் அமைத்தல்**

**வினா 8220—திரு. வ. வேலுசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் திருச்சி சாலையில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தை விரைவில் கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மதுரை—மேலூர் சாலை ஒருங்கிணைந்த புதிய பேருந்து நிலையம் அமைக்க திட்ட மதிப்பு ரூ. 15 கோடி

[1998 மே 30

ஆகும். இதில் 96 பேருந்துகள் ஒரே நேரத்தில் நிறுத்த முதல் கட்டமாக ரூ.618 லட்சம் மதிப்புள்ள திட்டப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுவரை ரூ.346.22 லட்சம் செலவிடப்பட்டு பணிகள் செய்யப்பட்டுள்ளன.

**158—**

**காய்கறி அங்காடி இடமாற்றம் செய்தல்**

**வினா 8221—திரு. வ. வேலுசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, அருள்மிகு மீனாட்சியம்மன் ஆலயம் அருகிலுள்ள மத்தியக் காய்கறி அங்காடியை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான மதுரை—மேலூர் சாலையிலுள்ள மாட்டுத் தாவணி இடத்திற்கு மதுரை, வேளாண்மை விளைபொருள் விற்பனைக் குழுவினால் தயாரிக்கப்படும் வடிவமைப்புப்படி, கடைகள் மற்றும் இதர வசதிகள் ஏற்படுத்தப்பட்ட பின்னர், மத்தியக் காய்கறி அங்காடி மாற்றப்படும்.

**159—**

**மேல்நிலைத் தொட்டி கட்டிக் குடிநீர் வழங்குதல்**

**வினா 8292—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

நாங்குநேரி தொகுதி, நெடுங்குளம் மறவர் குடியிருப்பிற்கு மேல்நிலைத் தொட்டி கட்டிக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**160—**

**மேல்நிலைத் தொட்டி மூலம் குடிநீர் வசதி**

**வினா 8293—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாங்குநேரி தொகுதி, தாழைகுளம், ரெட்டியார் தெரு, ஆதிதிராவிடர் குடியிருப்பு, கோனார் தெரு, நாடார் குடியிருப்பு ஆகிய இடங்களுக்கு மேல்நிலைத் தொட்டியின் மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**161—**

**ஆதிச்சைபேரிக் கிராமத்திற்குக் குடிநீர் வசதி**

**வினா 8296—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, தேவநல்லூர் ஊராட்சி, ஆதிச்சைபேரிக் கிராமத்திற்குக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1997—98-க்குள் விசைப்பம்புத் திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**162—**

**மஞ்சங்குளம் கிராமத்திற்குக் குடிதண்ணீர் வழங்குதல்**

**வினா 8297—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, தென்று நாங்குநேரி ஊராட்சி, மஞ்சங்குளம் கிராமத்திற்கு மேல்நிலைத் தொட்டி அமைத்துக் குடிதண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மஞ்சங்குளம் கிராமத்திற்குக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற ரூ.2.67 இலட்சங்களுக்கு மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் திட்டம் முழுமையாக முடிக்கப்பட்டு மக்களின் பயனுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**163—**

**மேல்நிலைத் தொட்டி அமைத்துக் குடிதண்ணீர் வழங்குதல்**

**வினா 8298—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், அமரக்குந்தி ஊராட்சி, தாதப்பிள்ளையூர் மேராட்டர் அருந்ததியர் தெரு, அன்னமாக்கரை மற்றும் கே.என்.பேட்டை ஆகிய இடங்களுக்கு மேல்நிலைத் தொட்டி அமைத்துக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேற்கண்ட இடங்களுக்குத் தற்போது மேல்நிலைத் தொட்டி கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

**164—**

**தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளிகளுக்குக் கட்டடம்**

**வினா 8303—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் நகரத்திலுள்ள காவேரிப்பாக்கம் நகராட்சி நடுநிலைப் பள்ளி, இடங்கள்—2-ல் உள்ள நகராட்சி தொடக்கப் பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு கட்டடம் கட்டவும் சுகாதாரச் சீர்கேட்டைப் போக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திண்டிவனம் நகராட்சியில் காவேரிப்பாக்கம் பள்ளிக்கு வடக்குக் கட்டடத்தில் பாதுகாப்புச் சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிக் கட்டடத்தைப் பழுதுபார்த்து மேற்கூரை போட, நகராட்சி நிதி நிலைமை பற்றாக்குறையாக இருப்பதால், மாவட்ட ஆட்சித் தலைவரின் நிதி ஒதுக்கீடு கோரி பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. இடங்கள்-2-ல் உள்ள பள்ளிக் கட்டடம் பழுதுபார்க்கப்பட்டு மதில் சுவரும் கட்டப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்படுகிறது. மேற்கண்ட பகுதிகள் சுத்தப்படுத்தப்பட்டு சுகாதாரம் பாதுகாக்கப்படுகிறது.

[1998 மே 30

**165—**

**குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்குதல்**

**வினா 8318—திரு. எஸ்.என் பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், ஊத்துக்குளி மற்றும் நம்பியூர் ஊராட்சி ஒன்றியங்களில் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம்.

**166—**

**தெசவிளக்குக் கிராமத்திற்குக் குடிநீர் வழங்குதல்**

**வினா 8328—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், தெசவிளக்குக் கிராமத்தில் பழுதடைந்துள்ள லட்சுமாயூர் மேல்நிலைத் தொட்டியைப் புதுப்பித்து, அப்பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

லட்சுமாயூர் குடியிருப்பில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 1994—95 ஆம் ஆண்டில் 60,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டி ஒன்று



1998 மே 30]

கட்டப்பட்டது. அதில் பழுது ஏதும் ஏற்படவில்லை. மின் அளவை மானியில் பழுது ஏற்பட்டது. மேற்படிக் கருவி மின்வாரியம் மூலம் சரி செய்யப்பட்டு தற்போது நபருக்கு 45 லிட்டர் அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

**167—**

**ஆரூர்பட்டி ஊராட்சிக்குக் குடிநீர் வழங்குதல்**

**வினா 8331—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், ஆரூர்பட்டி ஊராட்சி, பைப்பூர் மற்றும் பளுக்காரனூர் ஆகிய ஊர்களுக்கு மேல்நிலைத் தொட்டி மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், ஆரூர்ப்பட்டி ஊராட்சி, பைப்பூர் மற்றும் பளுக்காரனூர் ஆகிய ஊர்களுக்கு மேல்நிலைத் தொட்டி மூலம் குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

**168—**

**பனங்காட்டூரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்**

**வினா 8333—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், திண்டமங்கலம் ஊராட்சி, பனங்காட்டூரில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டி, பனங்காட்டூர், வேப்பமரத்தூர், பூசாரியூர், ஏரிக்காடு ஆகிய பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேற்கண்ட 3 குடியிருப்புகளுக்கும் மேல்நிலைத் தொட்டி அமைத்துக் குடிநீர் வழங்கும் திட்டம் அடுத்த நிதி ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**169—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா 8334— திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், ஊமாரமங்கலம் ஊராட்சி, புதூரில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, புதூர் காட்டுவளவு, மேட்டுப்பனை ஆகிய கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**170—**

**பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்குதல்**

**வினா 8535—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், செலவடை ஊராட்சி, செலவடை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து அருந்ததியர் குடியிருப்புவரை குழாய்த் தொடரமைப்பு அமைத்துக் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?





(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): செலவடைக் குடியிருப்பில் இருக்கும் 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியிலிருந்து அருந்ததியர் குடியிருப்புக்குத் தற்போது குடிநீர்க் குழாய் நீடிப்பு செய்து பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

**171—**

**குடிநீர் வசதி செய்தல்**

**வினா 8336—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், ஆரூர்பட்டி ஊராட்சி, குயவர் தெரு, நாகிரெட்டியூர், சேவத்தானூர் ஆகிய பகுதிகளுக்கும் புதிய மேல்நிலைத் தொட்டி அமைத்துக் குடிநீர் வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேவத்தானூர், நாகிரெட்டியூர் ஆகிய குடியிருப்புகளுக்கு மேல்நிலைத் தொட்டி கட்டும் திட்டம் எதுவும் இல்லை. ஆரூர்பட்டி குயவர் தெரு குடியிருப்புக்கு நடப்பு ஆண்டில் மேல்நிலைத் தொட்டிக் கட்டும் திட்டம் எடுக்கப்படவில்லை. 1998-99-ம் ஆண்டில் குடிநீர்த் திட்டம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

[1998 மே 30

**172—**

**கச்சு வளையனூரில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 8337—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றிய செம்மண் கூடல் ஊராட்சியில், கச்சு வளையனூரில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து அங்கு வசிக்கும் சுமார் 1,000 பேருக்குக் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**173—**

**குடிநீர் வசதி செய்தல்**

**வினா 8338—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்தநாயக்கன்பட்டி கிராமம், புதூர் காடம்பட்டியில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து அதன் மூலம் முதலித் தெரு, சின்னகாடம்பட்டி ஆகிய ஊர்களுக்குக் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சின்னகாடம்பட்டி, புதூர் காடம்பட்டி, முதலித் தெரு, ஆகிய மூன்று குடியிருப்புகளுக்கும், மேல்நிலைத் தொட்டி அமைத்துக் குடிநீர்



1998 மே 30]

வழங்கும் திட்டம் அடுத்த நிதி ஆண்டில் (1998-99) எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**174—**

**மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்குதல்**

**வினா 8339—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், எம். செட்டிபட்டிக் கிராமத்தில் பெருமாள் கோவிலில் ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து மொட்டையன் தெரு, ஆதி திராவிடக் காலனி, பிரிவு ரோடு, கருப்பசாமி கோவில் தெரு ஆகிய பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். மேற்கண்ட நான்கு குடியிருப்புகளுக்கும் மேல்நிலைத் தொட்டி அமைத்துக் குடிநீர் வழங்கும் திட்டம் அடுத்த (1998-99-ம்) நிதியாண்டில் எடுத்துக்கொள்ள ஆவன செய்யப்படும்.

**175—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா 8340—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பச்சனம்பட்டி ஊராட்சி, மோட்டூரில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, காட்டுவட்டம், பாப்பாங்காடு ஆகிய பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பச்சனம்பட்டி ஊராட்சி, மோட்டூரில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, காட்டுவட்டம், பாப்பாங்காடு ஆகிய பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யும்.

**176—**

**குடிநீர் வசதி செய்தல்**

**வினா 8342—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன் பட்டி கிராமம், மரத்துக்குட்டையில் ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, அருகில் உள்ள காட்டுவளவு ஆதிதிராவிடர் குடியிருப்பு, களர்பட்டி ஆகிய பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மரத்துக்குட்டையில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, அருகில் உள்ள காட்டுவளவு மற்றும் ஆதிதிராவிடர் தெரு, களர்பட்டி ஆகிய பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் அடுத்த நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்பட உள்ளது

**177—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் குடிநீர் வழங்குதல்**

**வினா 8343—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம் முத்துநாயக்கன்பட்டி கிராமம், கரிசல்பட்டியில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து அப்பகுதிக்கு குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**178—**

**பாலகுட்டப்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 8344—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம் முத்துநாயக்கன்பட்டி கிராமம், பாலகுட்டப்பட்டியில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து அப்பகுதிக்கு குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பாலகுட்டப்பட்டி குடியிருப்பில் தற்போது ஒருவருக்கு 15 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது.

1997-98 நிதியாண்டில் 0-10 லிட்டர் குடிநீர் வழங்கப்படும் குடியிருப்புகளுக்கு முன்னுரிமை கொடுத்து திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்படி திட்டங்கள் முடிவுற்றபின், 11-20 லிட்டர் குடிநீர் வழங்கப்படும் குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1998 மே 30

179—

**குடிநீர் வழங்குதல்**

**வினா 8345—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம் கருக்கல்வாடி ஊராட்சி, காவேட்டிரெங்கம்பாளையம், நெசவாளர் குடியிருப்பில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, மலையனூர் காடு, நெசவாளர் குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேற்கண்ட குடியிருப்புகளில் தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கப்படுவதால், தற்போது புதிய குடிநீர்த் திட்டம் எதுவும் எடுக்கப்படவில்லை.

180—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைச் செப்பனிட்டு குடிநீர் வசதி செய்தல்**

**வினா 8346—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம் கருக்கல்வாடி ஊராட்சி, கருக்கல்வாடி, ஆதிதிராவிடர் குடியிருப்பு, கங்காணியூர், குள்ளம் பூசாரியூர் ஆகிய இடங்களிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைச் செப்பனிட்டு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



1998 மே 30]

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம் கருக்கல்வாடி ஊராட்சி, கருக்கல்வாடி, ஆதிதிராவிடர் குடியிருப்பு கங்காணியூர், குள்ளம் பூசாரியூர் ஆகிய இடங்களில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருப்பதால் அம்மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை செப்பனிடும் திட்டம், அரசின் பரிசீலனையில் இல்லை.

181—

**குடிநீர் வழங்குதல்**

**வினா 8348—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம் சிக்கம்பட்டி ஊராட்சி, பெரியகாடம்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து மங்கானூர், நாடார் தெரு, கரட்டுக்கோரை ஆகிய பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கரட்டுக்கோரை குடியிருப்பிற்கு 1998-99 நிதியாண்டிலும், பெரிய காடம்பட்டி, மங்கானூர், நாடார் தெரு ஆகிய இரு குடியிருப்புகளுக்கு அடுத்து வரும் நிதியாண்டுகளிலும் குடிநீர் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

182—

**ஆழ்துளைக் கிணறுகள் மூலம் தண்ணீர் வழங்குதல்**

**வினா 8468—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, சங்கனேரி ஊராட்சி, சிங்கனேரிக்கு மேல்நிலைத் தொட்டி மூலமாக வழங்கப்படும் குடிநீர் பற்றாக்குறையாக உள்ளதால் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் தண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க என்கோபெட் நிறுவனத்தின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**183—**

**குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 8478—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி பேரூராட்சி பகுதி 1 நம்பிக்கை இல்லம் உள்ள பகுதியில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சத்துவாச்சாரி பேரூராட்சி பகுதி 1 மற்றும் பகுதி 3 குடிநீர் திட்டங்களுக்கான மதிப்பீடுகளுக்கு அரசு மற்றும் பொறியியல் குழுவின் அனுமதிகள் பெறப்பட்டு உரிய நிர்வாக நடைமுறைகளைப் பின்பற்றி பணிகள் மேற்கொள்ளப்படும்.

**184—**

**முல்லைகொம்மையை தனி ஊராட்சியாக்குதல்**

**வினா 8479—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) வேலூர் மாவட்டம், 102, ரெட்டியூர் ஊராட்சியிலிருந்து முல்லைகொம்மையைப் பிரித்து தனி ஊராட்சியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், 102, ரெட்டியூர் ஊராட்சியிலிருந்து முல்லைகொம்மையைப் பிரித்து தனி ஊராட்சியாகப் பிரிக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**185—**

**கோட்ட வளர்ச்சி அலுவலகம் பூந்தமல்லியில் அமைத்தல்**

**வினா 8552—திரு. டி. சுதர்சனம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூவிருந்தவல்லி வட்டம் மற்றும் அம்பத்தூர் வட்டத்திற்கும் இணைந்த கோட்ட வளர்ச்சி அலுவலகம் பூந்தமல்லியில் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**186—**

**பூந்தமல்லி பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்துதல்**

**வினா 8576—திரு. டி. சுதர்சனம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூந்தமல்லி பேரூராட்சியை, நகராட்சியாக உயர்த்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டிலேயே நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**187—**

**சலவை செய்யும் இடம் நவீனமயமாக்கும் திட்டம்**

**வினா 8580—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சேத்துப்பட்டிலுள்ள துணிகள் சலவை செய்யும் இடத்தை (டோபிகானா) நவீனமயமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை சேத்துப்பட்டிலுள்ள துணிகள் சலவை செய்யும் இடத்தை (டோபிகானா) நவீனமயமாக்கும் திட்டம் சென்னை மாநகராட்சியின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் பழுதடைந்துள்ள ஓய்வு அறைகளை இடித்துவிட்டு புதிய அறைகள் கட்டவும், கழிவு நீர் மற்றும் தண்ணீர் வசதிகள் செய்யவும் சென்னை மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



**188—**

**ஈச்சங்கோட்டையை தனி ஒன்றியமாக்குதல்**

**வினா 8593—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையை தனி ஒன்றியமாக ஆக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையை தனி ஒன்றியமாக ஆக்க செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

**189—**

**பம்ப் அறையை இடமாற்றம் செய்தல்**

**வினா 8612— திரு. பீ.அ. வைத்தியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதியில் பழைய மகாபலிபுரம் சாலையில் துரைப்பாக்கத்திலுள்ள பழைய பாலத்தில் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள 'பம்பிங் ரூம்'-ஐ அப்புறப்படுத்தி வேறு இடத்தில் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழைய மகாபலிபுரம், ஒக்கியம் பாலத்தில் உள்ள பம்ப் அறையானது மிகவும் வறட்சி மிகுந்த காலத்தில் சென்னை நகரத்தின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும்பொருட்டு அமைக்கப்பட்டது.

[1998 மே 30

ஆகவே, அந்த அறையை உடனே அகற்ற இயலாது. அதனை வேறு இடத்திற்கு மாற்றி அமைப்பது பற்றி பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

**190—**

**கடலூர் நகர குடிநீர்த் திட்டம் விரைவுபடுத்துதல்**

**வினா 8618—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் நகர குடிநீர்த் திட்டத்தினை அரசு விரைவுபடுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**191—**

**மிகப் பெரிய ஊராட்சிகளை இரண்டாகப் பிரித்தல்**

**வினா 8627—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.



1998 மே 30]

**192—**

**பிற்பட்ட வகுப்பினருக்கு தொகுப்பு வீடுகள் ஒதுக்கீட்டை அதிகரித்தல்**

**வினா 8628—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொகுப்பு வீடுகளை ஒதுக்குவதில் பிற்பட்ட வகுப்பினருக்கு தற்போது உள்ள இட ஒதுக்கீடு அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**193—**

**பெரிய ஊராட்சிகளை இரண்டாகப் பிரித்தல்**

**வினா 8630—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொதுமக்கள் நலன் கருதி, நிர்வாக வசதி கருதி பெரிய ஊராட்சிகளை இரண்டாகப் பிரிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பொதுமக்கள் நலன் கருதி, நிர்வாக வசதி கருதி பெரிய ஊராட்சிகளை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

[1998 மே 30

194—

**பொதுநிதியின் பங்கு பேரூராட்சிக்குப் பிரித்து அளித்தல்**

**வினா 8653—திரு. பா. வேல்துரை:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி ஒன்றியத்திலுள்ள பேரூராட்சிகள் தனிநிர்வாகம் ஆக்கப்பட்டு விட்டதால் ஒன்றியத்தில் இணைந்திருந்த போதிலுள்ள பொதுநிதியின் பங்கு பேரூராட்சிகளுக்குப் பிரித்து அளிக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஊராட்சி ஒன்றியப் பொதுநிதியும், பேரூராட்சிகளின் நிதியும் தனித்தனியானவை. இவைகள் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவை அல்ல. எனவே, ஊராட்சி ஒன்றியப் பொதுநிதியிலிருந்து பேரூராட்சிகளுக்குப் பங்கு வழங்க இயலாது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

195—

**தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்**

**வினா 8657—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பிறகு பழுதடைந்த தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்து கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

196—

**வல்லம் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்**

**வினா 8671—திரு. த. நடராஜன்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

197—

**வெங்கடாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்**

**வினா 8698—திரு. பா. வேல்துரை:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியத்திலுள்ள 27 குக்கிராமங்களைக் கொண்ட வெங்கடாம்பட்டி ஊராட்சி மன்றத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?*

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியத்திலுள்ள 27 குக்கிராமங்களைக் கொண்ட வெங்கடாம்பட்டி ஊராட்சி மன்றத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**198—**

**புதிய பேருந்து நிலையம் அமைத்தல்**

**வினா 8703—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டுத் தொகுதி, தானிப்பாடியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**199—**

**குபேரபட்டினம் கிராமத்தை தனி ஊராட்சியாக அமைத்தல்**

**வினா 8707—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தண்டராம்பட்டு தொகுதி, தண்டராம்பட்டு ஒன்றியம், குபேரபட்டினம் கிராமத்தைத் தனி ஊராட்சியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தண்டராம்பட்டு தொகுதி, தண்டராம்பட்டு ஒன்றியம், குபேரபட்டினம் கிராமத்தைத் தனி ஊராட்சியாக அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**200—**

**கொடிவேரி குடிநீர்த் திட்டம் நீட்டித்தல்**

**வினா 8847—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், ஊத்துக்குளி ஒன்றியம், குன்னத்தூர், ஊத்துக்குளி பேரூராட்சிப் பகுதிகளுக்கு கொடிவேரி குடிநீர்த் திட்டத்தை நீட்டிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

## பதினேழாம் பட்டியல்

1—

### ஊதியம் சீரமைத்தல்

**வினா 2229—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலை ஊழியர்களின் ஊதியம் சீரமைத்தல் குறித்து தொழிற்சங்கத் தரப்பிலிருந்து அரசுக்கு ஏதேனும் முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் பணியாளர்களுக்காக அமைக்கப்பட்ட ஊதிய சீரமைப்புக் குழுவின் அனைத்துப் பரிந்துரைகளையும் முழுமையாக, சில மாற்றங்களுடன் அரசு ஏற்று, அதனை அமல்படுத்த, 10.3.1997-ல் ஆணையிட்டது. இதனையடுத்து, இப்பண்டகசாலைகளின் பல்வேறு தொழிற்சங்கங்கள், பணியாளர்களுக்கு தேர்வுநிலை/சிறப்புநிலை ஊதியம் வழங்க வேண்டும் என்றும், வீட்டுவாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்றவைகளுக்கு 'அரசு ஊழியர்களுக்கான அளவிற்கு உட்பட்டு' என்ற நிபந்தனையை நீக்கி தகுந்த ஆணை வெளியிடவேண்டும் என்று சில கோரிக்கைகளை அரசுக்குத் தந்தனர். இதனை, அரசு பரிசீலித்து, இப்பணியாளர்களுக்கு தேர்வுநிலை ஊதியத்தை முதன் முதலாக இப்பண்டகசாலைகளுக்கு அறிமுகப்படுத்தி ஆணையிட்டதோடு மட்டுமல்லாமல், பணியாளர்கள் கேட்டுக்கொண்டபடி வீட்டுவாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படியும் 'அரசு ஊழியர்களுக்கான அளவிற்கு' என்ற நிபந்தனையை நீக்கி 28-8-1997-ல் அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், ஊதிய உயர்வுக்காக போராட்டத்தில் ஈடுபட்ட நான்கு நாள்களை விடுப்பு நாளாக கருதியும் அரசு ஆணையிட்டுள்ளது.





2—

### உணவுப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

**வினா 3401—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலும், தமிழ்நாட்டின் பிற இடங்களிலும் உணவகங்களில் உணவுப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்த அரசு எடுத்துவரும் நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சென்னை மற்றும் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உணவகங்களின் உரிமையாளர்கள் அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களால் கலந்து பேசப்பட்டு உணவுப் பண்டங்களின் விலைகளைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்கும், தரமாக வைத்திருப்பதற்கும் ஆவன செய்யப்படுகின்றன. மாவட்ட அளவில் உணவக உரிமையாளர்களுடன் இரு மாதங்களுக்கு ஒரு முறையாவது கலந்து பேசி உணவுப் பண்டங்களின் விலைகளை ஆய்வு செய்து, அவற்றைக் குறைப்பதோடு, உணவகங்கள் தரமான பண்டங்களை வழங்கிட, மாவட்ட ஆட்சியாளர்கள் ஆவன செய்ய வேண்டுமெனவும் அரசால் அண்மையில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

3—

### கூட்டுறவுப் பண்டகசாலைகளின் நஷ்டத்தை ஈடுகட்டுதல்

**வினா 5341—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் நஷ்டத்தை ஈடுகட்ட இந்தியாவில் தயாராகும் அன்னிய மதுபான விற்பனை உரிமையை வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1998 மே 30

(அ) மற்றும் (ஆ): குன்னத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 81-ன்கீழ் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையின் அடிப்படையில் மோசடிக்குக் காரணமான வங்கி செயலாளர், நிரந்தர பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேலாளர் திரு. ராஜு தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு உதவி குற்ற வழக்குரைஞரின் கருத்துருவின் அடிப்படையில் நிபந்தனைகளுடன் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார். மேலும், இம்முறைகேடு நடைபெற்றுள்ள காலத்தில் கடமை தவறிய மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மேற்பார்வையாளர், மற்றும் கூட்டுறவுத் தணிக்கையாளர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7—

**கூட்டுறவுப் பண்டகசாலைகளை மேம்படுத்தத் திட்டம்**

**வினா 6171—திரு. கே. சுப்பராயன் :**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகளின் நஷ்டத்தை ஈடுகட்ட அரசு ஏதேனும் சிறப்புத் திட்டங்களை அமல்படுத்தத் திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளை மேம்படுத்த சில சிறப்புத் திட்டங்கள் உள்ளன. அவற்றில் முக்கியமானவைகள்:-

(1) கட்டுப்பாடற்ற பொருள்களின் வியாபாரத்தைப் பெருக்க அரசு ரூ.2 கோடி நீண்ட காலக் கடனாக குறைந்த வட்டி விகிதத்தில் நிதியுதவி அளித்துள்ளது.

(2) கோயம்புத்தூர் சிந்தாமணி, திருச்சிராப்பள்ளி சிந்தாமணி, திருச்சிராப்பள்ளி அமராவதி, மதுரை பாண்டியன், கும்பகோணம்



1998 மே 30]

சந்திரசேகரபுரம் மற்றும் சென்னை பூங்காநகர் ஆகிய ஆறு கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளுக்கு புனரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

(3) தேவைக்கு அதிகமான பணியாளர்கள் பணி ஓய்வு பெற தன்விருப்ப ஓய்வுத் திட்டம் வகுக்கப்படும். இதனால் நிதிச்சுமை குறையும்; மற்றும்

(4) கட்டுப்பாட்டுப் பொருள்களுக்கு வழங்கப்படும் விளிம்புத் தொகையை (margin) உயர்த்துவது பற்றி அரசு ஆராயும்.

8—

**வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கிளை அமைத்தல்**

**வினா 6227—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சி கீழப்புலியூரில் வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) கீழப்புலியூரில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கிளையை அமைக்க இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

9—

**காவிரி கழிமுகப் பகுதியில் நெல் கொள்முதல் விவரம்**

**வினா 6629—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-இல் காவிரி கழிமுகப் பகுதியில் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

(இ) இதுவரை எத்தனை டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1997-சம்பா பருவத்தில் காவிரி கழிமுகப் பகுதிகளில் 9 இலட்சம் டன்கள் நெல் கொள்முதல் செய்யும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

(இ) 30-4-1997 வரை 9,48,868 டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

10—

**வைப்புத் தொகையின் வட்டி விதத்தை உயர்த்துதல்**

**வினா 6708—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் கூட்டுறவு வங்கிகளில் போடப்படும் வைப்புத் தொகைகளுக்கான வட்டி வீதத்தை உயர்த்தித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



11—

**நுகர்பொருள் வாணிபக் கழகம் விவரம்**

**வினா 6709—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நுகர்பொருள் வாணிபக் கழகம் நட்டத்தில் இயங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

12—

**பிற மாநிலங்களுக்கு உணவுப் பொருள்கள் கொண்டு செல்லுதல்**

**வினா 6710—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற மாநிலங்களுக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கான தடைகளை அகற்றுமாறு மத்திய அரசு, மாநில அரசைக் கேட்டுக்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து என்ன முடிவு எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு செல்ல பொதுவாக எந்தவித தடையும் கிடையாது. நெல்/அரிசியைப் பொறுத்தவரையில் பிற மாநிலங்களுக்கு நெல்/அரிசி கொண்டு செல்ல விரும்புவோர் அதற்குச் சமமான அளவு நெல்/அரிசி, அரசு கொள்முதல் விலையில் லெவியாக செலுத்தியபிறகு பிற மாநிலங்களுக்குக் கொண்டு செல்லலாம். தமிழ்நாட்டின் முக்கிய உணவு அரிசியாக இருப்பதாலும், ஆனால் இங்கு பொது விநியோக முறையின் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான நெல் விளைச்சல் இல்லை என்பதாலும், உற்பத்தியாகும் நெல், அரிசி பற்றாக்குறை அதிகமாக உள்ள அண்டை மாநிலமான கேரள மாநிலத்திற்கு போய்விடக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளதாலும், தமிழ்நாட்டிலிருந்து வெளிமாநிலங்களுக்கு நெல்/அரிசி கொண்டு செல்வதற்கான 100% லெவியை மட்டும் தற்போது முழுமையாக நீக்க முடியாத நிலையில் உள்ளது என்று மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது.

**13—**

**நியாயவிலைக் கடையை மாற்றி அமைத்தல்**

**வினா 6958—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், போடிநாய்க்கன்பட்டியில் உள்ள இரண்டு நியாயவிலைக் கடைகளில் ஒன்றினை குப்பதாசன் வளைவிற்கு மாற்றிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், போடிநாய்க்கன் பட்டியில் உள்ள மந்தயன் வளவு நியாயவிலைக் கடையை குப்பதாசன் காட்டுவளவுக்கு மாற்ற வாய்ப்புகள் இல்லை. எனினும் குப்பதாசன் காட்டுவளவுக்கு அருகே ஒரு பகுதிநேர நியாய விலை அங்காடி திறக்க 14.11.1997-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.





**14—**

**நியாயவிலைக் கடைகள் அமைத்தல்**

**வினா 7386—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரம் 4-வது வார்டு மோட்டூரில் உள்ள காந்திநகரை உள்ளடக்கிய முண்டாச்சியூர் காட்டுவளவு மற்றும் நாச்சிப்பாளையம் ஆகிய இடங்களில் நியாயவிலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

நாச்சிப்பாளையம் கிராமத்தில் புதிதாக நியாயவிலைக் கடை தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை. தற்போதுள்ள விதிகளின்படி சேலம் மாவட்டம் எடப்பாடி நகரம் முண்டாச்சியூர் காட்டுவளவு பகுதியில் பகுதிநேர நியாயவிலைக் கடை தொடங்க வாய்ப்புகள் உள்ளன. இருந்தபோதிலும் அப்பகுதி மக்கள் இலவசமாக கட்டடம் வழங்க முன்வராததால் பகுதிநேர நியாயவிலைக் கடை தொடங்க முடியாத சூழ்நிலை உள்ளது. இலவசக் கட்டடம் வழங்க அவ்வூர் பொது மக்கள் முன்வரும் பட்சத்தில் முண்டாச்சியூர் காட்டுவளவு பகுதியில் பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்க இயலும்.

**15—**

**பருத்தி அரைவை ஆலை அமைத்தல்**

**வினா 7420—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலமாக ஒரு பருத்தி அரைவை ஆலை (ஜின்னிங் பேக்டரி) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலமாக ஒரு பருத்தி அரைவை ஆலை (ஜின்னிங் பேக்டரி) 1981ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருவதால், மற்றொரு பருத்தி அரைவை ஆலை தேவைப்படவில்லை.

**16—**

**அரிசியின் விலையைக் கட்டுப்படுத்துதல்**

**வினா 7434—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெளிச்சந்தையில் விற்பனை செய்யப்படும் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த தாய்லாந்து நாட்டில் இருந்து அரிசி இறக்குமதி செய்து கூட்டுறவுக் கடைகள் மூலம் குறைந்த விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

இத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசின் வசம் தற்போது இல்லை.

**17—**

**டிராக்டர் கடன் வழங்குதல்**

**வினா 7486—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

தமிழ்நாட்டிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் மூலம் விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய டிராக்டர் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

இல்லை.

**18—**

**தனி நீதிமன்றங்கள் அமைத்தல்**

**வினா 8465—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நுகர்வோர் குறை சம்பந்தமான வழக்குகளை விசாரிக்க மாவட்ட அளவில் தனி நீதிமன்றங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

நுகர்வோர் குறை சம்பந்தமான வழக்குகளை விசாரிக்க தமிழ்நாட்டில் மொத்தம் 24 மாவட்ட நுகர்வோர் குறைதீர் அமைப்புகள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 10 இடங்களில் மட்டுமே மாவட்டத்திற்கென முழுநேர தனி அமைப்புகள் இயங்குகின்றன. மற்ற 14 அமைப்புகளைப் பொறுத்த மட்டில் இரண்டு மாவட்டங்களுக்கு ஓர் அமைப்பு என்ற அடிப்படையில் கூட்டு குறைதீர் அமைப்புகளாக செயல்பட்டு வருகின்றன. இந்த அமைப்புகளில் வழக்குகளின் எண்ணிக்கை தொடர்ந்து ஆறுமாத காலத்திற்கு 150-க்கு மேற்படுமானால் அத்தகைய மாவட்டங்களில், தனி குறைதீர் அமைப்பினை நிறுவ ஆவன செய்யப்படும்.

[1998 மே 30

19—

## திருட்டைத் தடுக்க நடவடிக்கை

**வினா 9206—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகரம் மற்றும் அனைத்துக் கிராமங்களில் உள்ள கூட்டுறவு வங்கிகளில் திருட்டைத் தடுக்க "பர்கலரி அலாரம்" பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

மாநிலத்திலுள்ள 125 நகரக் கூட்டுறவு வங்கிகளில் திருட்டு ஏற்படுவதைத் தடுத்து வங்கிகளின் சொத்தினை பாதுகாக்கும் பொருட்டு 65 நகரக் கூட்டுறவு வங்கிகளில் 'பர்கலரி அலாரம்' (Burgalar Alarm) பொருத்தப்பட்டுள்ளது. எஞ்சிய நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் அதன் கிளைகளில் பர்கலரி அலாரம் பொருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிராமங்களிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் நடைபெறும் கொள்ளை திருட்டு ஆகியவற்றை தடுத்து வங்கியின் சொத்துக்களை பாதுகாக்கும் பொருட்டு தேவைப்படும் நேர்வுகளில் பரிசீலித்து 'பர்கலரி அலாரம்' (அபாயமணி) அமைக்க மண்டல இணைப்பதிவாளர்களுக்கு ஏற்கெனவே அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

20—

## நியாயவிலைக் கடை அமைத்தல்

**வினா 9484—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், குருங்காவனம் பகுதியில் நியாயவிலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



1998 மே 30]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தென்காசி வட்டம், சுரண்டை கூட்டுறவுப் பண்டகசாலை நடத்தும் நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்ட குருங்காவனம் பகுதியில் 150 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. முழுநேர கடைக்கு குறைந்தது 500 குடும்ப அட்டைகளும், பகுதிநேர நியாயவிலைக் கடைக்கு 200 குடும்ப அட்டைகளும் தேவை. இந்நேர்வில் அதற்குக் குறைந்த அட்டைகளே உள்ளதால் குருங்காவனம் பகுதியில் முழுநேர நியாய விலைக்கடையோ, பகுதிநேரக் கடையோ அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

24—

## பகுதி நேர நியாயவிலைக் கடை அமைத்தல்

**வினா 9833—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம் தாசன்வளவில் செயல்படும் பொதுவிநியோகக் கடையிலிருந்து மல்லிக்குட்டை, அத்திராம்பட்டி, சின்னகுட்டிவளவு, பரியக்காபட்டி, ஆயகவுவளவு ஆகிய கிராமங்களைப் பிரித்து மல்லிக்குட்டையில் ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றிய சின்ன சோரகை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கட்டுப்பாட்டில் உள்ள மல்லிக்குட்டை கிராம அங்காடி தற்போது தாசன்வளவில் செயல்பட்டு

வருகின்றது. தாசன்வளவுக்கும் வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளுக்கும் இடையே உள்ள தூரம் 200 அடி முதல் 1 கிலோ மீட்டருக்கும் குறைவாக உள்ளதாலும், குறிப்பாக, பகுதிநேர நியாயவிலைக் கடை கோரும் மல்லிக்குட்டை கிராமம், தற்போதுள்ள கடையிலிருந்து 200 அடி தூரத்திலேயே உள்ளதாலும், இங்கு ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க, சாத்தியக்கூறுகள் இல்லை.

**22—**

**அச்சகங்களில் நவீன இயந்திரங்கள் பொருத்த நிதியுதவி**

**வினா 11854—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நடப்பு நிதியாண்டில் சேலம், நாமக்கல் மாவட்டக் கூட்டுறவு அச்சகங்களில் நவீன இயந்திரங்களைப் பொருத்துவதற்கு நிதியுதவி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

இல்லை.

**23—**

**வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்குதல்**

**வினா 11865—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி ஒன்றியம் பழைய தர்மபுரியில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஒன்றை புதிதாக தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

இல்லை.



**24—**

**புதிய நியாயவிலைக் கடை திறத்தல்**

**வினா 12758—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி கூட்டுறவுப் பண்டகசாலையில் பொருள்கள் வாங்க சுமார் 2 கி.மீ. மேல் செல்ல வேண்டியுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சித்தர் கோவில் என்ற இடத்தில் புதிய நியாய விலைக் கடையைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சியில் உள்ள காடையாம்பட்டியில், காடையாம்பட்டி கூட்டுறவுப் பண்டகசாலையினால் நியாயவிலைக் கடை நடத்தப்பட்டு வருகிறது. இந்நியாயவிலைக் கடையிலிருந்து மண்ணாத கவுண்டனூர் மட்டும் 2½ கி.மீ. தூரமும் மற்ற குடும்ப அட்டைதாரர்கள் 2 கி.மீ தூரத்திற்குள் உள்ளனர்.

(ஆ) சித்தர்கோவில், பொன்னகரம் மற்றும் மண்ணாத கவுண்டனூர் ஆகிய மூன்று ஊர்களில் மொத்த குடும்ப அட்டைகள் 175 மட்டுமே உள்ளதால் சித்தர் கோவிலில் புதிய நியாயவிலைக் கடை அமைக்க வாய்ப்புகள் இல்லை.

**25—**

**கோவை சிந்தாமணி இழப்பினைச் சரிகட்டுதல்**

**வினா 13253—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சிந்தாமணி தொடர்ந்து நஷ்டத்தில் இயங்குவதற்கு காரணமென்ன?

(ஆ) நஷ்டத்தை சரிபடுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இப்பண்டகசாலையில் 1986-87-ல் மேற்கொள்ளப்பட்ட விற்பனையில் பணியாளர் சம்பளம் மற்றும் இதர படிகள் வகையிலான செலவு 2.90 விழுக்காடாகவும், 1996-97-ல் 10.39 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளது. நிர்ணயிக்கப்பட்ட அளவான 2 விழுக்காட்டை விட 10.39 விழுக்காடு அபரிமிதமானதாக உள்ளது. 1986-87-ல் விற்பனையில் பண்டகம் வட்டி செலுத்தியது 2.02 விழுக்காடு ஆகும். 1996-97-ல் 4.62 விழுக்காடாக உயர்ந்துள்ளது. நிர்ணயிக்கப்பட்ட அளவு 1.5% ஆகும். ஆகவே, 4.62% வட்டி செலுத்தவேண்டி, பண்டகசாலையின் நிதிநிலைமை வெகுவாக பாதிப்புக்குள்ளானது. பண்டகத்தின் தற்போதைய மாதாந்திரச் செலவு ரூ.42.00 இலட்சம் ஆகும். ஆனால், மாதாந்திர வருமானம் ரூ. 12.00 இலட்சம் ஆகும். இந்தவகையில் ஒவ்வொரு மாதமும் ஏற்படும் பற்றாக்குறை ரூ.30.00 இலட்சம் ஆகும். நிதி பற்றாக்குறையினால் கட்டுப்பாடற்ற பொருள்கள் விற்பனையில் தொய்வு அடைந்துள்ளது. பண்டகசாலையில் பதப்படுத்தும் அலகுகள் முழு அளவில் பயன்படுத்தாததால் பாரமரிப்புச் செலவு அதிகமாகி தொகுப்பு நட்டம் பெருகி வருகிறது. மேற்குறிப்பிட்ட காரணங்களினால் நாள் ஒன்றுக்கு ரூ.1.00 இலட்சம் ரொக்க இழப்பு ஏற்படுகிறது.

(ஆ) இப்பண்டகசாலையின் நஷ்டத்தை சரிபடுத்த அரசு பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது.

**26—**

### தொகுப்பு விடுகள் கட்டுதல்

**வினா 2825—திரு. வ. வேலுசாமி:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகர், மதுரை கிழக்கு தொகுதி வட்ட எண். 55-ல் உள்ள கீழ்மதுரையில் வசிக்கும் ஆதிதிராவிடர்களின் குடிசை வீடுகளை மாற்றி தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

**27—**

### குடியிருப்பில்லாதவர்களுக்கு விட்டுமனை

**வினா 4468—திரு. மீ. அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி 154-வது வட்டம், தரமணி தந்தை பெரியார் நகரில் தமிழ்நாடு கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (டி.என்.யு.டி.பி.) எடுக்கப்பட்ட திட்ட பகுதி 1 மற்றும் 2-ல் குடியில்லாதவர்களுக்கு, குடியிருந்தவர்கள் இடத்தில் வீட்டுமனை வழங்கி முறைகேடு செய்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

ஆம். அவ்வாறு வழங்கப்பட்ட மனைகளுக்கான ஒதுக்கீட்டாணைகள் தற்போது இரத்து செய்யப்பட்டுள்ளன.

**28—**

### கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம்

**வினா 4852—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் நகரில், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் இலட்சக்கணக்கான பணம் மோசடி செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

அரக்கோணம் நகர பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாளர்கள் ஏற்படுத்திய பால் குறைவு மற்றும் பால் தரக்குறைவு

ஆகியவற்றின் மதிப்பு ரூ.2,62,344/- ஆகும். 1994-95ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இந்தக் குறைவு தொகையினை வசூலிப்பதற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு, சங்கத்தின் மூலம் தாவா நடவடிக்கை எடுக்கப்பட்டு துணைப்பதிவாளர் (பால்பதம்) நீதிமன்றத்தில் மே '96 மாதத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது. வினாவில் எழுப்பியவாறு இத்தொகை மோசடி செய்யப்பட்ட தொகை அல்ல. சங்கம், ஒன்றியத்திற்கு அனுப்பிய பாலில் ஏற்பட்ட குறைவு மற்றும் தரக்குறைவின் மூலம் ஏற்பட்ட நட்டத் தொகையாகும்.

**29—**

**மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியம் அமைத்தல்**

**வினா 6102—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டத்திற்கென தனியாக மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்திற்காக தனியாக பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

**30—**

**மாட்டுப்பட்டிகள் பராமரித்தல்**

**வினா 6825—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாதவரம் பால் பண்ணையில் மாட்டுப்பட்டிகள் பராமரிப்பின்றி உள்ளதை அரசு அறியுமா?



(ஆ) ஆம் எனில், அவற்றை சுகாதாரத்துடன் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மாதவரம் பால் பண்ணையிலுள்ள 8 மாட்டுப்பட்டிகள் பல ஆண்டுகளுக்கு முன்பே கைவிடப்பட்டு அவை தற்போது நல்லமுறையில் கால்நடை அறிவியல் வளர்ச்சிக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**31—**

**மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்துதல்**

**வினா 6910—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகர் பகுதியிலுள்ள கிராமப் பகுதியான நாச்சிபாளையத்தில் ஒரு மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி நகர் பகுதியிலுள்ள கிராமப் பகுதியான நாச்சிபாளையத்தில் ஒரு மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**32—**

**குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகள்**

**வினா 6930—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) எடப்பாடி தொகுதியில், எடப்பாடி நகரில் ஏழை மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடு கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போதைக்கு இல்லை.

**33—**

**பால் குளிரூட்டும் நிலையம், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்**

**வினா 6968—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரத்தில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது எடப்பாடி நகரில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**34—**

**பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்**

**வினா 9602— திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): விருத்தாசலம் நகருக்கு அருகாமையில் 25 கி.மீ தொலைவிலுள்ள சேத்தியாத் தோப்பில் நாளொன்றுக்கு 10,000 லிட்டர் பால் குளிர்விக்கும் திறன் வாய்ந்த பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருவதால், விருத்தாசலம் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வாய்ப்புகள் இல்லை.

**35—**

**பால் கூட்டுறவுச் சங்கங்களில் பால் விலை நிர்ணயம் செய்தல்**

**வினா 9618—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில், பால் கூட்டுறவுச் சங்கங்களில் பால் கொள்முதல் விலையில் ஒன்றியத்திற்கு ஒன்றியம் வேறுபாடு உள்ளதால், குறைந்தபட்சம் லிட்டருக்கு ஒரு ரூபாய் இலாபம் கிடைக்கும் வகையில் ஒரே விலையை நிர்ணயிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

பாலின் தரத்தின் அடிப்படையில் விலை வழங்கப்படுவதால் லிட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் இலாபம் கிடைக்கும் வகையில் ஒரே விலை நிர்ணயிக்க இயலாது.

**36—**

**பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்**

**வினா 10119— திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, பெரணமல்லூர் பேரூர் எல்லையில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெரணமல்லூர் தொகுதியில் பெறப்படும் பாலின் அளவு நாளொன்றுக்கு 7600 லிட்டர் என மிகக் குறைவாக உள்ளதால், பெரணமல்லூர் பேரூர் எல்லையில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வாய்ப்புகள் இல்லை.

**37—**

**புதிய பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைத்தல்**

**வினா 10626—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானி தொகுதியில், புதிதாக பால் உற்பத்தியாளர் சங்கங்கள் சேவாக்கவுண்டனூர், கவுண்டன்புதூர், துருசாம்பாளையம் மற்றும் சில பகுதிகளில் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

பவானி தொகுதியில் சேவாக்கவுண்டனூர் கிராமத்தில், ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அத்தொகுதியிலுள்ள கவுண்டன்புதூர் மற்றும் துருசாம்பாளையம் கிராமங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வாய்ப்பில்லை.

**38—**

**மீனவர்களுக்கு வீடுகள் ஒதுக்கும் சிறப்புத் திட்டம்**

**வினா 10904—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் மீனவர்களுக்கு வீடுகள் ஒதுக்கும் சிறப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**39—**

**சலவைத் தொழிலாளர்களுக்கு இலவச வீடுகள்**

**வினா 11475—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதிக்குட்பட்ட சலவைத் தொழிலாளர்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**40—**

**பால் கொள்முதல் செய்யும் மையம் அமைத்தல்**

**வினா 13596— திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், எம். காளிப்பட்டி ஊராட்சியில் சித்திக்குள்ளனூர் கோட்டியான் தெரு பகுதியிலும், தீராம்பட்டியிலும் பால் கொள்முதல் செய்யும் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

சித்திக்குள்ளனூர், கோட்டியான் தெரு மற்றும் தீராம்பட்டி ஆகிய பகுதிகள் ஏற்கெனவே செயல்பட்டு வரும் எம். காளிப்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் விவகார எல்லையில் உள்ளவைகளாகும். சித்திக்குள்ளனூரில் உற்பத்தியாகும் பால், இதன் அருகாமையில் உள்ள எம். காளிப்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் வழங்கப்பட்டு வருகின்றது. கோட்டியான் தெரு பகுதியில் நாளொன்றுக்கு 20 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுவதால் இப்பகுதியில் பால் கொள்முதல் மையம் அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை. தீராம்பட்டிப் பகுதியில் உற்பத்தியாகும் பாலின் அளவு 100 லிட்டர் ஆக இருப்பதால் அப்பகுதியில் பால் கொள்முதல் மையம் அமைக்க, சங்க நிர்வாகத்திற்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

41—

**தானியங்கி பால் விற்பனைக் கூடம் அமைத்தல்**

**வினா 13029—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்தில் தானியங்கி பால் விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

சேலத்தில் தானியங்கி இயந்திரம் மூலம் பால் விற்பனை செய்திட திட்டம் ஏதும் இல்லை.



42—

**கர்நாடகா மாநிலத்திற்குச் சென்ற தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் மரணம்**

**வினா 4654—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கர்நாடகா மாநிலத்திலுள்ள 'உஷா மினிசெம்' சிக்கிமுக்கிக் கல் பவுடர் தொழிற்சாலைக்கு தமிழ்நாட்டின் தர்மபுரி மாவட்டம், மொரப்பூர் பகுதியிலிருந்து வேலைக்குச் சென்ற தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் பலர் நோயுற்று தமிழ்நாடு வந்து மரணமடைந்துள்ளது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.**

(அ) கர்நாடகா மாநிலத்திலுள்ள 'உஷா மினிசெம்' சிக்கிமுக்கிக் கல் பவுடர் தொழிற்சாலைக்கு வேலைக்குச் சென்ற தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் பலர் நோயுற்று தமிழ்நாடு வந்து மரணமடைந்துள்ளது குறித்து விவரம் இத்துறைக்கு ஏதும் தெரிய வாய்ப்பில்லை.

(ஆ) எழாது

43—

**காலதாமத வழக்குகள் போக்க நடவடிக்கை**

**வினா 4670—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் நீதிமன்றங்களில் வழக்குகள் காலதாமதமாக நடப்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப்போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர் நீதிமன்றங்களில் நிலுவையாகவுள்ள வழக்குகளை விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**44—**

**தனலட்சுமி மில்ஸ் திறத்தல்**

**வினா 5315—திரு கே. சுப்பராயன்:**

*மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் தனலட்சுமி மில்ஸ் BIFR யூனிட்டாக மூடப்பட்டுள்ளதைத் திறக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை உயர்நீதிமன்றத்தின் 28-1-1997ஆம் தேதிய இறுதித் தீர்ப்பில் புதிய திட்டங்களை வரவேற்கும் பொருட்டு விளம்பரப்படுத்தி அந்த விளம்பரத்துடன் ஏற்கெனவே பெறப்பட்டுள்ள திட்டங்களையும், கருத்திற்கொண்டு முடிவு எடுக்குமாறு பி.ஐ.எப்.ஆர். (Board for Industrial Financial Reconstruction)-க்கு ஆணையிடப்பட்டது. அதனடிப்படையில், பி.ஐ.எப்.ஆர். விசாரணை மேற்கொண்டது. இதற்கிடையில், திரு. சி.ஆர். சேதுராமலிங்கம், நிருவாக இயக்குநர் தலைமையில் 1-10-1997 முதல் ஆலை மீண்டும் இயங்கி வருகிறது. 29-10-1997ஆம் தேதியில்



பி.ஐ.எப்.ஆர். இறுதித் தீர்ப்பு வழங்கியது. அதில், சேரன் குரூப் தலைவர் திரு. கே. சி. பழனிசாமி, கொடுத்த திட்டத்தை ஏற்றுக் கொண்டு, ஏற்கெனவே செலுத்தப்பட்டுள்ள வைப்புத் தொகை ரூ.50 இலட்சத்துடன் மேலும் ரூ. 1 கோடியை கூடுதல் வைப்பு நிதியாகச் செலுத்த வேண்டுமென உத்தரவிட்டுள்ளது. அத்தொகை இன்னும் செலுத்தப்படவில்லை. தற்போது ஆலையை நடத்திவரும் திரு. சி.ஆர். சேதுராமலிங்கம், பி.ஐ.எப்.ஆர்.-ன் ஆலையினை எதிர்த்து AAIFR (Appellate Authority for Industrial Financial Reconstruction) மேல்முறையீடு செய்துள்ளார். மேல்முறையீட்டு விசாரணை நடைபெறவுள்ளது. AAIFR-ன் முடிவிற்குப் பின்தான் ஆலையை யார் ஏற்று நடத்த வேண்டுமென்பது தெரியவரும்.

**45—**

**வேலை நிரந்தரம் செய்தல்**

**வினா 5668—திரு. நா. பெரியசாமி:**

*மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தனியார் பேருந்துகளில் பல ஆண்டுக் காலம் தொடர்ச்சியாகப் பணிபுரிந்தும் வேலை நிரந்தரம் செய்யப்படுவதில்லை என்ற புகார் அரசிற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பணி நிரந்தரம் செய்யக்கோரி தனியார் பேருந்துகளில் பணிபுரியும் தொழிலாளர்களிடமிருந்து தனியாகப் புகார் ஏதும் பெறப்படவில்லை. இருப்பினும், பல பொதுக் கோரிக்கைகளுடன் பணியாளர்களை நிரந்தரம் செய்வது குறித்தான கோரிக்கையினையும் சேர்த்து சில சங்கங்களால் தொழிற் தாவா எழுப்பப்பட்டு அவற்றின் மீது சம்பந்தப்பட்ட மாவட்ட சமரச அலுவலர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[1998 மே 30

**46—**

**தனியார் போக்குவரத்துத்துறைத் தொழிலாளர்கள் போராட்டம்**

**வினா 5806—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்ட தனியார் போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்கள் சட்ட உரிமைகளை அமலாக்கக் கோரி போராடி வருவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தெரியும்.

(ஆ) பெரியார் மாவட்டத்திலுள்ள தனியார் துறை மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் பணி நிரந்தரம் மற்றும் அரசு அறிவித்த குறைந்தபட்சக் கூலி உள்ளிட்ட சில பொதுக் கோரிக்கைகளை வற்புறுத்திப் போராடி வருகின்றனர்.

**47—**

**திருப்பூர் பனியன் தொழிலாளர்களுக்கு சட்ட ரீதியான உரிமைகள்**

**வினா 6575—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் பனியன் தொழிலாளர்களுக்குச் சட்ட ரீதியான உரிமைகளை அமலாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் அதன் தொடர்புடைய தொழிலாளர் நலச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துச் சட்ட ரீதியான உரிமைகள் அத்தொழிலாளர்களுக்கு



1998 மே 30]

அளிக்கத்தக்க வகையில் இத்துறையின் ஆய்வர்கள், முறை ஆய்வுகள், சோதனை ஆய்வுகள், சிறப்பு ஆய்வுகள் மேற்கொள்கின்றனர். ஆய்வு சமயம் தொழிற்சாலைகளில் சட்ட மீறல்கள் ஏதேனும் காணப்பட்டால் அவைகளைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சரி செய்யாத நிறுவனத்தின்மீது உடனடியாகச் சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**48—**

**தொழிலாளர் நல வாரியம் அமைத்தல்**

**வினா 6576—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமைப்பு ரீதியற்ற "தொழிலாளர் நல வாரியம்" அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவ்ரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கென தொழிலாளர் நல வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

**49—**

**'விஸ்கோஸ்' தொழிலாளர்களுக்கு மாற்றுப் பணி வழங்குதல்**

**வினா 7683—திரு. வி.கே. லட்சுமணன்:**

**திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள தென்னிந்திய 'விஸ்கோஸ்' தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால் யார் யாருக்கு என்னென்ன இழப்பு ஏற்பட்டுள்ளது?

(ஆ) அங்கு பணியாற்றிய தொழிலாளர்கட்கு, மாற்றுப் பணி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* தென்னிந்திய ‘விஸ்கோஸ்’ தொழிற்சாலை, கழிவுநீர் வெளியேற்றுவது தொடர்பான பிரச்சினையால் நீதிமன்ற உத்தரவின்படி சிறிது காலம் மூடப்பட்டிருந்தது. தற்போது உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்படி இவ்வாலை இயங்கி வருகிறது. இதனால் இழப்பேதும் ஏற்படவில்லை.

*(ஆ)* எழவில்லை.

*50—*

**உலமாக்களுக்கு ஓய்வூதியம் அதிகரித்தல்**

**வினா 8357—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓய்வு பெற்ற உலமாக்களுக்குக் கொடுக்கப்படும் ஓய்வூதியத்தை அதிகரித்துக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

உலமாக்களுக்குக் கொடுக்கப்படும் மாத ஓய்வூதியம் 3-9-1996 முதல் ரூ. 400/-லிருந்து ரூ. 500/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஓய்வூதியத்தை மேலும் உயர்த்துவது பற்றித் தற்போது பரிசீலனை ஏதும் இல்லை.

**51—**

**வேலைவாய்ப்பு அலுவலகத்தை மீண்டும் திறத்தல்**

**வினா 8755— திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்காயத்தில் மலைவாழ் மக்கள் நலன் கருதி, ஏற்கெனவே இயங்கி வந்த வேலைவாய்ப்பு அலுவலகத்தை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?





விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

ஆலங்காயத்தில் ஏற்கெனவே இயங்கி வந்த துணை வேலைவாய்ப்பு அலுவலகத்தை மீண்டும் திறப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**52—**

**தொழிலாளர் நல வாரியம் அமைத்தல்**

**வினா 8805— திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கட்டடத் தொழிலாளர்களுக்கு சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய மாநகராட்சிகளில் தொழிலாளர் வாரியம் அமைக்கப்பட்டது போல், சேலம், திருச்சி, நெல்லை மாநகராட்சிகளில் தொழிலாளர் நல வாரியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டம் ஆரம்பக் கட்டமாக சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகரங்களில் 1-11-1994 முதல் அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இந்த நலத் திட்டம், 15-6-1997 முதல் தமிழ்நாடு முழுவதும் விஸ்தரிக்க, அரசு ஆணை எண். 80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 5-6-1997-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

[1998 மே 30

53—

## தொழிற் பயிற்சி நிலையம் ஏற்படுத்துதல்

**வினா 9567—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98ஆம் ஆண்டு எடப்பாடி தாலுக்காவில் உலக வங்கி உதவியுடன் ஒரு தொழிற் பயிற்சி நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

உலக வங்கி உதவியுடன் 1997-98ஆம் ஆண்டு எடப்பாடி தாலுக்காவில் ஒரு அரசு தொழிற் பயிற்சி நிலையம் ஏற்படுத்த வாய்ப்பில்லை.

54—

## வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் தோற்றுவித்தல்

**வினா 9969—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, மதுரை மற்றும் அண்ணாமலை பல்கலைக் கழகங்களில் உள்ளதுபோல், கோவை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் காரைக்குடி பல்கலைக்கழகங்களிலும், பல்கலைக்கழக வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் தோற்றுவிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கோவை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் காரைக்குடி பல்கலைக் கழகங்களில் பல்கலைக்கழக வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் ஏற்படுத்துவது தொடர்பாக ஏற்கெனவே அரசு பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை தேவையில்லை என முடிவெடுத்துள்ளது.



1998 மே 30]

55—

## முருகன் ஸ்பின்னிங் மில் திறக்க நடவடிக்கை

**வினா 19719—திரு. டி. மணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூடிக்கிடக்கும் திருச்செந்தூர் முருகன் ஸ்பின்னிங் மில்லில் வேலையிழந்து நிற்கும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படுமா?

(ஆ) ஆலையைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திண்டுக்கல்லில் உள்ள திருச்செந்தூர் முருகன் ஸ்பின்னிங் மில் (பியின்) விட் ஆலை. நிர்வாகம் 4-12-1995 முதல் எவ்வித அறிவிப்பும் இல்லாமல் லே ஆப் செய்துள்ளதால் 290 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு சட்டரீதியான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

56—

## மத்திய அரசு நல ஆணையர் அலுவலகம் அமைத்தல்

**வினா 10724—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம். மத்திய அரசு நல ஆணையர் அலுவலகத்தை தென்காசி அல்லது திருநெல்வேலியில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. ரவி அருணன் எழுப்பியுள்ள இவ்வினா தொழிலாளர் துறை அல்லது மாநில அரசு சம்பந்தப்பட்டது

அல்ல என்றும், இவற்றின் நடவடிக்கைகளுக்குட்பட்டதும் அல்ல எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**57—**

### கட்டடத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம்

**வினா 10785—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கட்டடத் தொழிலாளர்களுக்கு, அறுபது வயதானவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கட்டடத் தொழிலாளர்களுக்கு அறுபது வயதானவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை. 1994-ம் வருடத்திய உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டத்தின் பிரிவு 3-ன்கீழ் கட்டடத் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். மேற்படி திட்டத்தின் பிரிவு 13-ன்கீழ் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்ட தொழிலாளி பதிவு செய்த 5 வருடத்திற்குப் பின்னர் 60 வயதினைப் பூர்த்தி செய்தால் ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுகின்றார். மேற்படி தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) திட்டம் 1994-ம் வருடம் முதல் அமலுக்கு வந்திருப்பதாலும் இத்திட்டத்தின் கீழ் தொழிலாளர்களின் பதிவு மே மாதம் 1995 முதல் தொடங்கப்பெற்றதாலும், 5 வருடம் பூர்த்தி செய்த பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் தற்சமயம் யாரும் இல்லை.





**58—**

### கட்டடத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு ஊதியம் முறைப்படுத்துதல்

**வினா 10786—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கட்டடத் தொழிலாளர்களுக்கு, வேலைவாய்ப்பையும் ஊதியத்தையும் முறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

1-11-1994 முதல் தமிழ்நாடு கட்டடத் தொழிலாளர் நல வாரியம் கட்டுமானத் தொழிலாளர்களின் நலனுக்காகச் செயல்பட்டு வருகிறது. இந்த வாரியத்தில் கட்டடத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பையும், ஊதியத்தையும் முறைப்படுத்தத் தற்சமயம் திட்டங்கள் ஏதுமில்லை.

**59—**

### கட்டடத் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை

**வினா 10788—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனவர்களுக்கு வழங்கப்படுவதைப்போல, கட்டடத் தொழிலாளர் இயற்கை மரணம் அடைந்தால் அவர்களது குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாயும், விபத்தில் இறந்தால் 1 இலட்சம் ரூபாயும் உதவித் தொகையாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்ட தொழிலாளர்கள் பணியில் இருக்கும்போது ஏற்படும் விபத்தில் இறந்தால், இழப்பீடாக ரூ.50,000/- அளிக்கப்படுகின்றது. விபத்தின் காரணமாக உடல் ஊனமுற்றால் உடல் ஊனத்திற்குத்

தக்கவாறு இழப்பீடு அளிக்கப்படுகின்றது. அனைத்து இழப்பீடுகளும் இன்சூரன்ஸ் கம்பெனியால் அளிக்கப்படுகின்றன.

2. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இல்லாத மீனவர்களும் பங்கு கொள்ளும் விதத்தில் 'தமிழ்நாடு மீனவர் தொகுப்பு தன் விபத்து காப்புறுதித் திட்டம்' என்ற பெயரில் காப்புறுதித் திட்டம் ஒன்று தமிழ்நாடு முதன்மை மீனவர் கூட்டுறவு இணையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விபத்தில் இறக்க நேரிடுகின்ற மீனவர்களுக்கு ரூ.1.00 இலட்சம் காப்பீட்டு நிவாரணமாகவும், ஊனமுற்றவர்களுக்கு ரூ.50,000/- காப்பீட்டு நிவாரணமாகவும் காப்பீட்டுக் கழகம் வழங்குகிறது. இத்திட்டத்தில் அரசு பிரிமியம் எதுவும் செலுத்துவதில்லை. மீனவர்களோ அல்லது படகு உரிமையாளர்களோ வருடம் ரூ.60/- தமிழ்நாடு முதன்மை மீனவர் கூட்டுறவு இணையத்தின் மூலம் செலுத்துகின்றனர். இத்திட்டத்தின் கீழும் விபத்தில் இறந்தவர்களுக்கு மட்டுமே காப்புறுதி நிவாரணம் வழங்கப்படுகிறது.

3. மேற்கூறிய சூழ்நிலையில், மீனவர்கள் இயற்கை மரணமடைந்தால் அவர்களது குடும்பத்திற்கு ரூ.50,000/- நிவாரணம் வழங்கும் திட்டம் இல்லை.

4. எனவே, மீனவர்களைப்போல, கட்டட தொழிலாளர் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குவது என்ற கேள்விக்கே இடமில்லை.

**60—**

### கட்டடத் தொழிலாளர் வாரியம் அமைத்தல்

**வினா 10789—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முழுமை பெற்ற கட்டடத் தொழிலாளர் வாரியம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

30-11-1994 முதல் இயங்கி வந்த தமிழ்நாடு கட்டடத் தொழிலாளர் நல வாரியம், 15-6-1997 முதல் தமிழ்நாடு முழுவதும் விரிவாக்கம்



செய்யப்பட்டுள்ளதால் முழுமை பெற்ற வாரியமாக இயங்கி வருகின்றது.

**61—**

### அரசு தொழிற் பயிற்சி நிலையம் அமைத்தல்

**வினா 11092—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியப் பகுதியில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**62—**

### மகளிர் தொழிற் பயிற்சிப் பள்ளி அமைத்தல்

**வினா 11174—திரு. எஸ்.எஸ். மணிநாடார்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, செய்துங்கநல்லூரில் மகளிர் தொழிற் பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தற்போது இல்லை.

[1998 மே 30

63—

## கட்டடத் தொழிலாளர் நல வாரியத்திற்கு வசூல் செய்யப்பட்ட தொகை

**வினா 12444—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) கட்டடத் தொழிலாளர் நல வாரியத்திற்குக் கட்டட உரிமையாளர்களிடமிருந்து கோவை மாநகராட்சிப் பகுதிகளில் வசூல் செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) பிற மாநகராட்சிகளோடு ஒப்பிடுகிறபோது இது குறைவானதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகராட்சிகளால் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்குச் செலுத்தப்பட்ட தொகை கீழ்க்கண்டவாறு உள்ளது :

| ஆண்டு விவரம் | சென்னை மாநகராட்சி ரூ. | மதுரை மாநகராட்சி ரூ. | கோவை மாநகராட்சி ரூ. |
|---|---|---|---|
| 1-4-95 முதல் 31-3-96 முடிய | 24,00,000 | 3,01,497 | 41,864 |
| 1-4-96 முதல் 31-3-97 முடிய | 52,99,345 | 4,39,855 | 13,586 |
| 1-4-97 முதல் 20-2-98 முடிய | 99,06,104 | 15,49,638 | 2,69,474 |
| 23-2-98 முதல் 2-3-98 முடிய | — | — | 23,73,994 |
| **மொத்த வசூல் 2-3-98 முடிய** | **1,76,05,449** | **22,90,990** | **26,98,918** |



1998 மே 30]

சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி மாநகராட்சிகளுக்கு 15-6-1997 முதல் தான் இவ்வாரியத்திற்கான சந்தாத் தொகை வசூல் செய்ய அரசாணை எண்.80 (தொழிலாளர் & வேலைவாய்ப்புத் துறை, நாள் 5-6-1997 மூலம் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்படி மாநகராட்சிகளால் செலுத்தப்பட்ட சந்தாத் தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| காலம் விவரம் | திருச்சி மாநகராட்சி ரூ. | சேலம் மாநகராட்சி ரூ. | திருநெல்வேலி மாநகராட்சி ரூ. | இதர மாநகராட்சிகள் ரூ. |
|---|---|---|---|---|
| 15-6-97 முதல் 20-2-98 முடிய | 3,36,168 | 23,460 | 2,59,162 | 28,15,000 |

(ஆ) இன்றைய தேதியில் மதுரை மாநகராட்சியால் இவ்வாரியத்திற்குச் செலுத்தப்பட்ட தொகை மற்ற மாநகராட்சிகளான சென்னை, கோவை ஆகியவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் குறைவாக உள்ளது.

64—

## போனசிற்கான உச்சவரம்பை முற்றிலும் நீக்குதல்

**வினா 12860—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போனசிற்கான உச்சவரம்பை முற்றிலும் நீக்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): போனசிற்கான உச்சவரம்பை முற்றிலும் நீக்க வேண்டும் என்பது குறித்து மாநிலத் தொழிலாளர் வாரியக் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது. அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

65—

**சென்னை ஜீவா இல்லத்தில் அறைகளை அதிகப்படுத்துதல்**

**வினா 13171—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற்சங்கத் தலைவர்கள் தங்குவதற்கான சென்னை ஜீவா இல்லத்தில் போதுமான அறைகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அறைகளை அதிகப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தொழிற்சங்கத் தலைவர்கள் தங்குவதற்கான சென்னை ஜீவா இல்லத்தில் போதுமான அறைகள் உள்ளன. இங்கு தொழிற்சங்கத் தலைவர்கள், பிரதிநிதிகள் தங்குவதற்கு 50 படுக்கைகள் கொண்ட அறைகள் உள்ளன. தங்குபவர்களுக்கு வசதியாக குளிப்பதற்கு சுடுநீர் வசதி, குடிப்பதற்கு நல்ல நீர், மின் விசிறிகள், சிற்றுண்டி, பேருண்டிகள் எடுத்துவர உரிய பாத்திரங்களும் உள்ளன. தவிர, 12 படுக்கைகள் கொண்ட 4 அறைகள் கூடுதலாகக் கட்டப்பட்டு மேற்கூறிய வசதிகளுடன் திறப்பதற்குத் தயார் நிலையில் உள்ளன.

66—

**தொழிலாளர் நல சட்டங்கள்**

**வினா 13184—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழிலாளர்களுக்குரிய நலச் சட்டங்கள் முழுமையாக அமலாகிறதா?



விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

ஆம்.

67—

**தமிழ்நாட்டு நீதிமன்றங்களில் தமிழைப் பயன்படுத்தும் விவரம்**

**வினா 2742—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அனைத்து நீதிமன்றங்களிலும் தமிழ் பயன்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், தற்போது தமிழ் எந்த அளவு பயன்படுத்தப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னை உயர் நீதிமன்றம் நீங்கலாக, தமிழ்நாட்டில் அனைத்து உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களிலும் தமிழ் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

68—

**சிலை திருட்டு விசாரணை நீதிமன்றத்தில் நீதிபதி பணியிடம் நிரப்புதல்**

**வினா 4588—திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணத்தில் சிலை திருட்டு விசாரணை தனி நீதிமன்றத்தில் (Additional Chief Judicial Magistrate) கடந்த ஐந்தாண்டுக் காலமாக நீதிபதி இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இப்பணியிடத்தினை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நிலக்கோட்டை குற்றவியல் நீதிபதி திரு. ஆர். இராஜசேகரனுக்குப் பணி உயர்வு கொடுத்து அவரை சிலை திருட்டு வழக்குகளை விசாரிக்கும் கும்பகோணம் கூடுதல் தலைமைக் குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிபதியாக உயர் நீதிமன்றம் பணியமர்த்தியுள்ளது. அவர் 4-3-1998 அன்று முதல் இந்நீதிமன்றத்தில் செயல்பட்டு வருகிறார்.

**69—**

**தனியார் நிதி நிறுவனங்களைத் தடை செய்யும் திட்டம்**

**வினா 4609—திரு. ஐ. கணேசன், திரு. கே. சுப்பராயன், திரு. செங்கை சிவம், திரு. பெ.சு. திருவேங்கடம், திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தனியார் நிதி நிறுவனங்களைத் தடை செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

இல்லை.

**70—**

**சொத்துக்களை அரசுடைமையாக்குதல்**

**வினா 5311—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் உட்படப் பொது வாழ்வில் உள்ளோர் முறைகேடாகச் சேர்த்த சொத்துக்களை அரசுடைமையாக்கச் சட்டமியற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் லஞ்சத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் குற்றச் செயலை எந்த ஒரு நபர் செய்தாலும், அக்குற்றம் நிரூபிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டால், அவரிடமிருந்து சொத்தினை நீதிமன்றம் பறிமுதல் செய்து ஆணையிட சட்டத்தில் ஏற்கெனவே வழிவகை உள்ளது. எனவே, இதற்காகத் தனிச் சட்டம் இயற்றும் அவசியம் எழவில்லை.

**71—**

**உரிமையியல் நீதிமன்றத்திற்குத் தனி நீதிபதி நியமித்தல்**

**வினா 5702— திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பறங்கிப்பேட்டையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள உரிமையியல் நீதிமன்றத்திற்குத் தனி நீதிபதி நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) புவனகிரி தொகுதி, பறங்கிப்பேட்டையில் இயங்கி வந்த குற்றவியல் நீதிமன்றம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றமாக மாற்றப்பட்டுள்ளது. உரிமையியல் வழக்குக்காக இங்கு தனி நீதிமன்றம் அமைக்கப்படவில்லை. எனவே, குற்றவியல்

[1998 மே 30

வழக்குகளை விசாரிக்கும் நீதிபதியே உரிமையியல் வழக்குகளையும் விசாரிப்பார். ஆகையால், உரிமையியல் வழக்குகளுக்காகத் தனி நீதிபதி நியமிக்க அவசியம் எழவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**72—**

**நீதிமன்றங்களுக்குக் கட்டட வசதி செய்துகொடுத்தல்.**

**வினா 5977—திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் புதிதாக நீதிமன்றம் திறக்கப்பட்டுள்ளதால் நீதிமன்றத்திற்குத் தேவையான அரசு கட்டடம், நூலகங்கள் மற்றும் சங்க வழக்கறிஞர்கள் கட்டடம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் செயல்பட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றத்திற்குத் தேவையான அரசு கட்டடம், நூலகங்கள் மற்றும் வழக்கறிஞர்கள் சங்கக் கட்டடம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**73—**

**நீதிமன்றங்களுக்குக் கட்டட வசதி செய்து கொடுத்தல்**

**வினா 6048—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானியில் சார்நிலை நீதிபதி நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் கூடுதல் மாவட்ட உரிமையியல்



1998 மே 30]

நீதிமன்றம் ஆகியவை மிக மோசமான வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றிற்கு ஒரே இடத்தில் கட்டட வசதிகளை செய்து கொடுக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) பவானியில் சார்பு நீதிமன்றம், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆகிய இரு நீதிமன்றங்கள் மட்டும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

(ஆ) இந்த நீதிமன்றங்களுக்கும் ஏற்கெனவே அரசுக் கட்டடங்களில் இயங்கிவரும் மேலும் இரண்டு நீதிமன்றங்களுக்கும் சேர்த்து ஒரே இடத்தில் நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**74—**

**தருமபுரியில் கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள்**

**வினா 7202—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தின் தலைநகர் தருமபுரியில் கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், தருமபுரி நகரில் ஒரு கூடுதல் மாவட்ட நீதிபதி-தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் (Additional District Judge-cum-Chief Judicial Magistrate's Court) ஏற்படுத்துவது குறித்த சென்னை உயர் நீதிமன்றத்தின் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

[1998 மே 30

75—

**மனித உரிமை நீதிமன்றங்கள் செயல்பட நடவடிக்கை.**

**வினா 7456—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டத் தலைநகரங்களில் நிறுவப்பட்ட மனித உரிமை நீதிமன்றங்கள் செயல்பட நடைமுறைகளையும், விதிமுறைகளையும் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம். குற்றவியல் மறு ஆய்வு வழக்கு எண்.868/96-ல் (Criminal Revision Case) சென்னை உயர் நீதிமன்றம் 23-6-1997 அன்று வழங்கிய தீர்ப்பில் மனித உரிமைகள் நீதிமன்றங்களின் செயற்பரப்பு, பணிகள் மற்றும் அதிகார வரம்பு ஆகியவைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இத்தீர்ப்பாணையில் குறிப்பிடப்படும் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்காகத் தீர்ப்பின் நகல்கள் அனைத்து மனித உரிமைகள் நீதிமன்றங்களுக்கும் சென்னை உயர் நீதிமன்றத்தால் அனுப்பப்பட்டுள்ளன.

76—

**குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு நிரந்தரக் கட்டடம்**

**வினா 7618—திரு. பி. இராசமாணிக்கம்**
**திரு. மா. இராமச்சந்திரன் :**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1998 மே 30]

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ): நீதித் துறையின் உள் கட்டமைப்பு வளர்ச்சிக்கான பல்வேறு கட்டடப் பணிகளை உள்ளடக்கிய பெருந்திட்டம் (Master Plan) ஒன்றை உயர் நீதிமன்றம் அனுப்பியுள்ளது. இதனை ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேற்கொள்வதற்காக மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்புவதற்கு அரசு பரிசீலித்து வருகிறது. இப்பெருந்திட்டத்திற்கு மைய அரசின் ஒப்புதலும் நிதி உதவியும் பெறப்பட்டபின்பு அதில் இடம்பெற்றுள்ள பல்வேறு திட்டப்பணிகள் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படும். இப்பெருந்திட்டத்தின் பரிசீலனையில் உள்ள திட்டப் பணிகளுள், தஞ்சை மாவட்டம் ஒரத்தநாட்டில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கான நீதிமன்றக் கட்டடம் கட்டும் திட்டமும் இடம் பெற்றுள்ளது.

77—

**உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றக் கிளைகள் நிறுவுதல்**

**வினா 7937—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டையில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றக் கிளைகளை நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

இல்லை.

[1998 மே 30

78—

**நீதிமன்ற வளாகம் ஒரே இடத்தில் அமைத்தல்**

**வினா 7693—திரு. ஏ.எம். இராமசாமி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூரில் வழக்கறிஞர்களின் பொது நலனைக் கருதி ஒரு இடத்தில் நீதிமன்ற வளாகம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

ஆத்தூரில் வழக்கறிஞர்களின் பொது நலனைக் கருதி ஒரே இடத்தில் நீதிமன்ற வளாகம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

79—

**சார்புநீதிமன்றம் அமைக்கும் திட்டம்**

**வினா 8049— திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் சார்புநீதிமன்றம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வரும் நிதியாண்டில் அறிவிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.



1998 மே 30]

80—

**சாத்தான்குளத்தில் சார்புநீதிமன்றம்**

**வினா 8147—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, சாத்தான்குளத்தில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சாத்தான்குளம் தொகுதி, சாத்தான்குளத்தில் சார்புநீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

81—

**நீதிமன்ற வளாகத்தில் தனி அறைகள் கட்டுதல்**

**வினா 8218—திரு. வ. வேலுசாமி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்கள் தங்குவதற்கு தனி அறைகள் (Chambers) கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

மதுரையில் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்கள் தங்குவதற்குத் தனி அறைகள் (Chambers) கட்டுவது சம்பந்தமான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

82—

**திருமணங்களைப் பதிவு செய்வதைக் கட்டாயமாக்குதல்**

**வினா 8361—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமணங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்பதைக் கட்டாயமாக்குவது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

திருமணங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்பதைக் கட்டாயமாக்குவது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

83—

**செஞ்சியில் சார்புநீதிமன்றம்**

**வினா 8379—திரு. த. நடராஜன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சியில் ஒரு சார்புநீதிமன்றம் (Sub-Court) அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

84—

**கரண்டையில் நீதிமன்றம் அமைத்தல்**

**வினா 9703—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) கரண்டையில் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கரண்டையில் நீதிமன்றம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

85—

**சட்டக் கல்லூரி நிறுவுதல்**

**வினா 9937—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் சட்டக் கல்லூரி நிறுவ அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் சட்டக் கல்லூரி நிறுவுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

86—

**ஆண்டிப்பட்டியில் கிளைச் சிறைச்சாலை**

**வினா 9959—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றியம், ஆண்டிப்பட்டியில் கிளைச் சிறைச்சாலை அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

இங்கே கிளைச் சிறைச்சாலை அமைக்கும் குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**87—**

**குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்களுக்குத் தனித்தனிக் கட்டடம்**

**வினா 10006—திரு. கொ.வி. நன்னன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டத்தில் ஒரே கட்டடத்தில் இயங்கி வரும் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள் தனித்தனிக் கட்டடத்தில் இயங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலை மாவட்டம், செங்கத்தில் இயங்கிவரும் மாவட்ட உரிமையியல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் (District Munsif-*cum*-Judicial Magistrate Court) ஒரே நீதிமன்றம் என்பதால் அதைக் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்களாகத் தனித்தனிக் கட்டடங்களில் இயங்க வைப்பது குறித்த வினா எழவில்லை.

**88—**

**குற்றவியல் நீதிமன்ற வளாகத்தில் புதிய கட்டடம்**

**வினா 10012—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதி, இரணியல் உரிமையியல் நீதிமன்றம், வசதிகள் இல்லாத வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதைக் குற்றவியல் நீதிமன்ற வளாகத்தில் புதிய கட்டடம் அமைத்துக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டம், இரணியலில் உள்ள கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மட்டும் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகிறது.

(ஆ) இந்நீதிமன்றத்திற்கான கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**89—**

**குற்றவியல் நீதிமன்றத்தை சொத்துரிமை நீதிமன்ற வளாகத்திற்கு மாற்றுதல்**

**வினா 10013—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதி, தக்கலை காவல் நிலையம் அருகில் இருக்கும் குற்றவியல் நீதிமன்றத்தை, சொத்துரிமை நீதிமன்ற வளாகத்தில் மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டம், தக்கலையில் உள்ள குற்றவியல் நீதிமன்றத்தை, உரிமையியல் நீதிமன்ற வளாகத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு ஏதும் சென்னை உயர் நீதிமன்றத்தின் பரிசீலனையில் இல்லை.

**90—**

**திண்டுக்கல்லில் புதிய சிறைச்சாலை**

**வினா 10036—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் நகரில் புதிய சிறைச்சாலை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**91—**

**எடப்பாடி நகரில் சிறைச்சாலை**

**வினா 10061—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் ஒரு கிளைச் சிறைச்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**92—**

**ஒரத்தநாட்டில் கிளைச் சிறைச்சாலை**

**வினா 10092—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி-I, ஒரத்தநாட்டில் கிளைச் சிறைச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1998 மே 30]

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கிளைச் சிறை அமைக்கத் தேவையான நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. வருவாய்த் துறையினரால் நில மாற்றம் செய்யப்பட்ட பின்னர் கட்டடம் கட்டப்பட்டுப் புதிய கிளைச் சிறை செயல்படும்.

**93—**

**மேட்டூரில் கிளைச் சிறைச்சாலை**

**வினா 10570—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, மேட்டூரில் கிளைச் சிறைச்சாலை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**94—**

**பென்னாகரம் பகுதியில் கிளைச் சிறைச்சாலை**

**வினா 10571—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் பகுதியில் கிளைச் சிறைச்சாலை தொடங்க அரசு முன்வருமா?

[1998 மே 30

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**95—**

**ஆவடி, மதுரவாயில் பகுதிகளை அம்பத்தூர் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்துடன் இணைத்தல்**

**வினா 10762—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆவடி, மதுரவாயில் ஆகிய பகுதிகளை மீண்டும் அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தில் இணைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

ஆவடி மற்றும் மதுரவாயில் ஆகிய பிர்க்காக்களை அம்பத்தூர் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்துடன் (District Munsif-*cum*-Judicial Magistrate Court) மீண்டும் இணைக்க இயலாது என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

**96—**

**சட்டக் கல்லூரி அமைத்தல்**

**வினா 11556—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில், சட்டக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?



1998 மே 30]

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) செங்கம் தொகுதியில் சட்டக் கல்லூரி அமைத்திட கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**97—**

**சார்பு நீதிமன்றம் அமைத்தல்**

**வினா 12839—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் மோட்டார் வாகன விபத்து நஷ்டஈடு கோரும் வழக்குகளை விசாரிக்க சார்புநீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திண்டுக்கல்லில் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரும் வழக்குகளை விசாரிக்கச் சார்புநீதிமன்றம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்டுப் பரிசீலனை செய்யப்பட்டது. அரசின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு இச்செயற் குறிப்புத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

**98—**

**தற்காலிகமாக இயங்கும் சார்புநீதிமன்றத்தை நிரந்தரமாக்குதல்**

**வினா 13119—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் சார்புநீதிமன்றம் தற்காலிகமாக இயங்குவதை நிரந்தரமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பரிசீலனைக்குப் பின் விரைவில் அரசு உரிய ஆணைகள் பிறப்பிக்கும்.

**99—**

**கோவை மத்திய சிறைச்சாலை தினசரி கொள்முதல் விவரம்**

**வினா 13187—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மத்திய சிறைச்சாலைக்குரிய காய்கறித் தேவைகள் எங்கிருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன?

(ஆ) தினசரி கொள்முதல் செய்யப்படும் காய்கறிகளின் பணமதிப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு அங்காடியிலிருந்து வாங்கப்படுகிறது.

(ஆ) தினசரி வாங்கப்படும் காய்கறிகளின் விலை சராசரியாகச் சுமார் ரூ.5,436/- ஆகும்.

**100—**

**இலவசச் சட்ட உதவி மைய வழக்குகள் விவரம்**

**வினா 13544—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) தமிழ்நாடு ஸ்டேட் லீகல் சர்வீஸ் அதாரிட்டி என்ற பெயரில் செயல்படும் இலவசச் சட்ட உதவி மையம் 1996, 1997ஆம் ஆண்டுகளில் எத்தனை வழக்குகளை நடத்தி முடித்தது?

(ஆ) அவை நடத்தும் வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக் குழு 1996ஆம் ஆண்டு 19,310 வழக்குகளையும் 1997ஆம் ஆண்டு 19,486 வழக்குகளையும் நடத்தி முடித்துள்ளது.

(ஆ) ஆம்.

**101—**

**கூட்டுறவு நூற்பாலை தரவேண்டிய நிலுவை விவரம்**

**வினா 1914—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் கூட்டுறவு நூற்பாலைகள் தர வேண்டிய நிலுவை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

கூட்டுறவு நூற்பாலைகள் விவசாயிகளிடமிருந்து நேரிடையாக பஞ்சு கொள்முதல் செய்வதில்லை. அதனால் விவசாயிகளுக்கு நேரிடையாகத் தர வேண்டிய நிலுவை ஏதுமில்லை. கூட்டுறவு நூற்பாலைகளின் ஆட்சியர்கள் ஆலைக்குத் தேவையான பஞ்சை மாநில நிறுவனங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு கொள்முதல் செய்த வகையில் கூட்டுறவு நூற்பாலைகள் மேற்படி மாநில நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும்

வியாபாரிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூ.73.85 கோடி ஆகும்.

**102—**

**கைத்தறிகளின் செயல்பாடுகள் பற்றிய விவரம்**

**வினா 5326—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறிகளின் செயல்பாடுகள் குறித்து மத்திய அரசு புள்ளி விவரங்களைச் சேகரித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், தமிழ்நாடு குறித்த விபர அறிக்கை மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுவிட்டதா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர், தேசிய செயல்முறை சார்ந்த ஆராய்ச்சி மன்றத்திற்கு (NCAER) 31-5-1996 அன்று அனுப்பியுள்ளார்.

**103—**

**கூட்டுறவு நூற்பாலைகளின் நூல் தரம் விவரம்**

**வினா 6186—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு நூற்பாலைகளின் நூல், தரம் குறைந்ததாக இருப்பதாக, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் புகார் நிலவுவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது கூட்டுறவு நூற்பாலைகளின் நூல் தரமானதாக உள்ளது. அவ்வப்போது நூல்கள் பரிசோதித்துப் பார்க்கப்பட்டு குறைகள் எதுவும் காணப்பட்டால் அவ்வப்போது சரிசெய்யப்படுகின்றன. மேலும் சங்கங்களுக்குச் சம்பந்தப்பட்ட கூட்டுறவு நூற்பாலையின் ஆலை மேலாளர் நேரில் சென்று குறைகளை நிவர்த்தி செய்து வருகிறார்.

**104—**

**திருப்பூர் பகுதியில் நிலத்தடி நீர் பாதிப்பு**

**வினா 6685—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், பொங்குபாளையம் ஊராட்சி, பரமசிவம்பாளையம் அருகிலுள்ள நெடுஞ்சாலைக் கால்வாய்களில் சாய வண்டல்களைக் கொட்டுவதால், நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதாக அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர், பொங்குபாளையம் ஊராட்சி, பரமசிவம்பாளையம் அருகிலுள்ள நெடுஞ்சாலைக் கால்வாய்களில் சாய வண்டல்களைக் கொட்டுவதால், நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதாக திருப்பூர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகத்தில் புகார்கள் பெறப்பட்டுள்ளன.

(ஆ) திருப்பூரிலுள்ள சாயத் தொழிற்சாலைகள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளிப்படும் திடக்கழிவுகளைப் பாலித்தீன் பைகளில் சேகரித்து அதனை வாரியத்தின் அனுமதியோடு வெளியேற்ற வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளன.

[1998 மே 30

105—

**கூட்டுறவு நூற்பாலையைச் சீரமைத்தல்**

**வினா 6806—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

*மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, நாசரேத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலையைச் சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, நாசரேத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்து வருகிறது.

106—

**கூட்டுறவு நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம்**

**வினா 7854—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

*மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதியில் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

விடை —

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதியில் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் உள்ள நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



1998 மே 30]

107—

**சிட்டா நூல்களை வெளி மாநிலங்களுக்கு விற்பனையைத் தடை செய்தல்**

**வினா 8322—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

*மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் சிட்டா நூல்களை வெளி மாநிலங்களில் விற்பனையைத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் சிட்டா நூல்களை வெளி மாநிலங்களுக்கு விற்பனை செய்யப்படுவதில்லையாதலால், அவ்விற்பனையைத் தடை செய்யும் நிலை இல்லை.

108—

**விஸ்கோஸ் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால் செயற்கை இழைத் தட்டுப்பாடு**

**வினா 8560—திரு. இ. கணேசன்:**

*மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மேட்டுப்பாளையத்திலுள்ள "விஸ்கோஸ்" தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால், செயற்கை இழைத் தட்டுப்பாட்டினால் சேலம் மாவட்டக் கைத்தறி, விசைத்தறி நெசவாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?*

விடை —

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

மேட்டுப்பாளையத்தில் உள்ள 'விஸ்கோஸ்' தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால், செயற்கை இழைத் தட்டுப்பாட்டினால் சேலம் மாவட்டக் கைத்தறி, விசைத்தறி நெசவாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்படவில்லை.

[1998 மே 30

**109—**

**நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்**

**வினா 8733—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெசவாளர்களுக்கு அரசு வழங்கும் சலுகைகள் முறையாகக் கிடைக்க அவர்களுக்கு அடையாள அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

இம்மாதிரியான திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

**110—**

**நெசவாளர் தொழிற்கூடம் அமைத்தல்**

**வினா 9196—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, வேலம்பாளையம் ஊராட்சி, கருக்குப்பாளையத்தில் நெசவாளர் தொழிற்கூடம் அமைக்கும் பணி நடந்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முடிவுறும்?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெருந்துறை தொகுதி, வேலம்பாளையம் ஊராட்சி, கருக்குப்பாளையத்தில் நெசவாளர் தொழிற்கூடம் அமைக்கும் பணி ஏதும் நடைபெறவில்லை. ஆனால் கருக்குப்பாளையம் கிராமம் 1991-92ம் ஆண்டுத் திட்டத்தில் கைத்தறி மாதிரிக் கிராமமாகத் தேர்வு செய்யப்பட்டு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஏஏ. 158. கொட்டத்துவளவு காமாட்சியம்மன் நெசவாளர் கூட்டுறவுச்



1998 மே 30]

சங்கம் மூலம் செயல்படுத்தவும், அதில் முதற் கட்டப்பணியாகச் சங்க அலுவலகம் மற்றும் குடோன் கட்டத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**111—**

**கைத்தறித் தொழிலை மேம்படுத்தத் திட்டம்**

**வினா 10342—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நலிந்த நிலையிலுள்ள கைத்தறித் தொழிலை மேம்படுத்த அரசு புதிய உத்திகளைக் கையாளத் திட்டம் மேற்கொண்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

ஆம். நலிந்த நிலையில் உள்ள கைத்தறித் தொழிலை மேம்படுத்த அரசு பல்வேறு நலத் திட்டங்களைக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தி வருகிறது.

**112—**

**கைத்தறி துறைக்கென ஒதுக்கப்பட்ட ரகங்கள்**

**வினா 11750—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறித் துறைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட 22 ரகங்கள் 11 ரகங்களாகக் குறைக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், இந்த முடிவு எந்த அடிப்படையில் எடுக்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விசைத்தறி தொழில் பாதிக்காத வகையில் கைத்தறித் தொழிலைப் பாதுகாக்கும் பொருட்டு மத்திய அரசு 22 ரகங்களை கைத்தறி உற்பத்திக்கென நிர்ணயித்து கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டத்தைப் பிறப்பித்தது. பல விசைத்தறி சம்மேளனங்கள், இச்சட்டத்தைச் செயல்படுத்தக் கூடாது என எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனை மறு பரிசீலனை செய்ய உயர்மட்ட அலுவலர்கள், கைத்தறியாளர்கள் அடங்கிய பல துணைக் குழுக்களை அமைத்து, அவற்றின் அறிக்கைகளையும் பெற்று, அதன் அடிப்படையில் மத்திய அரசு ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட 22 ரகங்களுக்குப் பதில் தற்பொழுது 11 ரகங்களைக் கைத்தறி உற்பத்திக்கென ரக ஒதுக்கீடு சட்டத்தை திருத்தம் செய்து மத்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**113—**

**ஸ்ரீஇராமலிங்க சூடாம்பிகை நூற்பாலையைத் திறத்தல்**

**வினா 12011—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஸ்ரீஇராமலிங்க சூடாம்பிகை நூற்பாலையைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

பொருளாதார நெருக்கடி காரணமாக மூடப்பட்டுள்ள திருப்பூர் ஸ்ரீஇராமலிங்க சூடாம்பிகை நூற்பாலையை நடத்த வேண்டுமானால், இயந்திரங்களை நவீனப்படுத்தவும், தொழிலாளர் வைப்பு நிதி, ஈட்டுறுதி நிதி போன்றவற்றைச் செலுத்தப் பெருந்தொகை தேவைப்படுகிறது. எந்த நிதி நிறுவனமும், நிதியுதவி அளிக்க முன்வராததால், ஆலையைத் திறந்து நடத்த இயலாத நிலை ஏற்பட்டு உள்ளது.

**114—**

**சங்க ஊழியர்களுக்கு மாதச் சம்பளம்**

**வினா 12696—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் 1947-வது ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு சுமார் 37 ஆண்டு காலம் இலாபத்தில் இயங்கிய அச்சங்கம் 31-7-1997-ல் சங்கத்திலுள்ள ஊழியர்களுக்கு அந்த மாதத்திற்குரிய சம்பளம்கூட வழங்க முடியாத நிலைக்கு வந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அச்சங்க ஊழியர்களுக்கு உரிய சம்பளம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) ஆம், சங்கத்தின் நிதிப் பற்றாக்குறையினால் ஜூலை 1997 மாதத்திற்கான சம்பளம் 31-7-1997 அன்று வழங்கப்படவில்லை.

(ஆ) சங்க ஊழியர்களுக்கு ஜூலை 1997 மாதத்திற்கான சம்பளத் தொகை 19-8-1997 அன்று அனைத்து சிப்பந்திகளுக்கும் வழங்கப்பட்டது. ஆகஸ்ட் 1997 மாதத்திற்கான சம்பளம் உரிய தேதியில் வழங்கப்பட்டது. இனி இம்மாதிரி நிலை நிகழாமலிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

**115—**

**பஞ்சு பற்றாக்குறை, நூல் தேக்கக் குறைபாடுகளைத் தீர்த்தல்**

**வினா 12834—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பஞ்சு பற்றாக்குறை, நூல் தேக்கம் காரணமாக பஞ்சாலைகள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளதாகக் கூறப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டிலுள்ள நூற்பாலைகளின் தேவையை ஈடுசெய்யும் அளவிற்கு பஞ்சு உற்பத்தி இல்லாமையால்,

[1998 மே 30

வெளிமாநிலங்களில் இருந்து பஞ்சு பெறப்படுகிறது. எனவே, பஞ்சு பற்றாக்குறை ஏற்பட சாத்தியக்கூறு இல்லை. பொருளாதார நெருக்கடி காரணமாக பல்வேறு கட்டங்களில் தனியார் ஆலைகள் அத்தியாவசிய செலவுகளுக்காக பொருளாதாரம் ஈட்டும் பொருட்டு நூல்களைக் குறைந்த விலைகளுக்கு விற்றுவிடுகின்றன. தனியார் ஆலைகளுடன் கூட்டுறவு நூற்பாலைகள் போட்டியிட்டு குறைந்த விலைக்கு நூல் விற்க இயலாத நிலையால், அச்சமயங்களில் கூட்டுறவு நூற்பாலைகளில் நூல் தேக்கம் ஏற்படுகிறது.

**116—**

### கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்

**வினா 14006—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரத்தில் சாயப்பட்டறை மற்றும் சலவைப் பட்டறையிலிருந்து வெளியேறும் கழிவுகளைச் சுத்தம் செய்ய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு. திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் அமைந்துள்ள சாய மற்றும் சலவைப் பட்டறைகளிலிருந்து வரும் கழிவு நீரைச் சுத்திகரிப்பு செய்வதற்கு அந்த நகரில் ஒரு பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது சாயத் தொழிற்சாலைகளின் பொறுப்பாகும், இந்தத் தொழிலகங்களின் சங்கத்தினர் பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க கால அவகாசம் கோரியுள்ளனர்.

**117—**

### கைத்தறி கிராம வளர்ச்சித் திட்டம்

**வினா 14022—திரு ஐ. கணேசன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

*(அ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி ஒருங்கிணைந்த கைத்தறி கிராம வளர்ச்சித் திட்டத்திற்காக மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி எடங்கன் சாலை கிராமத்தில் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தினை, அமல்படுத்தும் பொருட்டு, மைய அரசால் அனுமதிக்கப்பட்ட ரூ. 15.44 இலட்சத்தில், முதல் தவணையாக விடுவிக்கப்பட்ட ரூ.7.720 இலட்சத்தினை அரசு ஆணை (நிலை) எண் 151, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, 21-7-1997 நாளிட்ட அரசாணையில், வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**118—**

### தொகுப்பு வீடுகள் கட்டுதல்

**வினா 2823—திரு. வ. வேலுசாமி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்குத் தொகுதி, 58-வது வட்டம் கீரைத்துறை, ஓடக்கரையில் மிகவும் பின்தங்கியோர் வசித்து வரும் 300-க்கும் மேற்பட்ட குடிசை வீடுகளை மாற்றி தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

ஆண்டு வருமானம் ரூ.12,000க்குட்பட்ட, பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் முன்னேறிய வகுப்பினருக்கு

[1998 மே 30

இத்துறை மூலமாக இலவச வீட்டுமனை நிலம் கையகப்படுத்தி வழங்கப்படுகிறது. இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் வீட்டுமனை வைத்துள்ள நலிந்த பிரிவினருக்கு தொகுப்பு வீடுகள் ஊரக வளர்ச்சித் துறை மூலமாக ஊரகப் பகுதியில் இலவசமாகக் கட்டித்தரப்படுகிறது. மாநகரங்களில் குடிசைவாசிகளுக்கு அடுக்கு மாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் கட்டித்தருகின்றது. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் செயல்படுத்தப்படவில்லை.

## 119—

### சலவைத்துறை கட்டுதல்

**வினா 3186—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி. எஸ். கொடிக்குளம் பேரூராட்சியில் கூமாபட்டி. சர்வே எண் 653/1ல் சலவைத்துறை கட்ட அரசு இடம் தேர்வு செய்ததா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : திருவில்லிப்புத்தூர் தொகுதி. எஸ். கொடிக்குளம் பேரூராட்சியில் கூமாபட்டியில் மாவட்ட பரவலாக்கத் திட்டத்தின் (District De-centralised Scheme) கீழ் சலவைத்துறை கட்டப்பட்டு வருகிறது. அவ்வை விரைவில் கட்டி முடிக்கப்படும்.

## 120—

### மாணவர்களுக்கு உணவுப் படியை உயர்த்துதல்

**வினா 6250—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) தமிழ்நாட்டில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் நடத்தப்படும் கல்லூரி மாணவ விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுப்படி ரூ. 250 ஆக உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் நடத்தப்படும் கல்லூரி மாணவ விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுப்படி ரூ. 250 ஆக உயர்த்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## 121—

### மாணவியர் விடுதி அமைத்தல்

**வினா 6646—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் எடப்பாடி நகரில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவிகள் விடுதி அமைக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம். எடப்பாடி நகரில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல மாணவிகள் விடுதி அமைக்கும் வாய்ப்பு இல்லை.

**122—**

### மறவர்குல மக்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்

**வினா 7366—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டத்தில் வசிக்கும் மறவர் குல மக்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் வசிக்கும் மறவர் வகுப்பினரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**123—**

### டெல்லியிலுள்ள பயிற்சி நிலையத்திற்கு மாணவர்களை அனுப்புதல்

**வினா 7495—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வு எழுதும் தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள், பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களை அரசே ஏற்று, டெல்லியில் உள்ள பயிற்சி மையத்திற்கு அனுப்பி வைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**



(அ) ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வு எழுதும் தாழ்த்தப்பட்ட, மலைவாழ், மக்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களில் முதன்மைத் தேர்வில் வெற்றி பெற்று வாய்மொழி நேர்முகத் தேர்விற்கு சிறப்புப் பயிற்சி பெற டெல்லியிலுள்ள தனியார் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறவும், தமிழ்நாடு இல்லத்தில் தங்கும் வசதியும் அரசு செலவில் செய்து தரப்படுகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையைப் பொறுத்தவரை டெல்லி சென்று வருவதற்கான போக்குவரத்துக் கட்டணத்தையும் அரசே ஏற்கிறது.

(ஆ) எழாது.

**124—**

### மாணவியர் விடுதிக்குக் கட்டடம் கட்டுதல்

**வினா 7511—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, கருங்குளத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி கருங்குளம் மாணவியர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**125—**

**செங்குந்தர் வகுப்பினை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்**

**வினா 8448—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்ட செங்குந்த முதலியார் வகுப்பினை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் பரிந்துரை எதுமின்றி செங்குந்தர் வகுப்பினை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க இயலாது.

**126—**

**உயர் கல்விக்குக் கடன் வழங்குதல்**

**வினா 8615—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், அந்தந்த மாநில பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக உயர் கல்விக்கு கடன் வழங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியர் பயன் பெற்றுள்ளனரா?



விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இது சம்பந்தமான கருத்துரு தேசிய அளவில் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**127—**

**சலவைத்துறையும் இலவச வீட்டுமனைப் பட்டாவும் வழங்குதல்**

**வினா 8617—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையில் உள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு சலவைத் துறையும் இலவச வீட்டு மனைப்பட்டாவும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை நகரில் செட்டிதளமேட்டில் சலவைத் தொழிலாளர்களுக்கு சலவைத்துறை ஒன்று கட்டப்பட்டு உபயோகத்தில் உள்ளது. திருவண்ணாமலையில் சலவைத் தொழிலாளர்களுக்கு மற்றொரு சலவைத்துறை கட்டும் புனரமைப்புகள் எதும் அரசிடம் இல்லை.

இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தை பொறுத்தவரை 1996-97-ம் ஆண்டில் 111 மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன. 1997-98-ம் ஆண்டில் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்திற்கென திருவண்ணாமலை மாவட்டத்திற்கு ரூ. 6.3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் மிகப்

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டத் தொகை ரூ. 35 இலட்சம் ஆகும்.

**128—**

**மாணவர் விடுதி அமைத்தல்**

**வினா 11196—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி மற்றும் மேலத்திருப்பூந்திருத்தி ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் மாணவர் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி மற்றும் மேலத்திருப்பூந்துருத்தி ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**129—**

**பிற்படுத்தப்பட்டோர் மாணவ மாணவியர் விடுதி தொடங்குதல்**

**வினா 11434—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேடப்பட்டி தொகுதி, ஏழுமலையில் புதியதாக பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதிகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சேடப்பட்டி தொகுதி, ஏழுமலையில் புதிய பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியர் விடுதிகள் துவங்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**130—**

**அனந்தபுரத்தில் விடுதி கட்டுதல்**

**வினா 11456—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, அனந்தபுரத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சாத்தான்குளம் தொகுதி, அனந்தபுரத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**131—**

**மாணவர்களுக்கு நுழைவுத் தேர்விற்கு பயிற்சி அளித்தல்**

**வினா 12061—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியர்களுக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தில் உள்ள மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்கல்வி பயிற்சிகளில் சேருவதற்கு இலவச நுழைவுத் தேர்வு பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

[1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தில் உள்ள மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற் கல்வி பயிற்சிகளில் சேர்வதற்கு இலவச நுழைவுத் தேர்வு பயிற்சி அளிக்கும் திட்டம் ஏற்கனவே இத்துறை மூலம் எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி மாநிலம் முழுவதும் 72 அரசு/அரசு உதவிபெறும்/மேல்நிலைப் பள்ளிகளில் விண்ணப்பம் செய்யும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் இனத்தைச் சேர்ந்த மாணவ/மாணவியருக்கு நுழைவுத் தேர்வுக்கு முன் 15 நாட்களுக்கு இலவசமாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

132—

**ஓமலூர் பேரூராட்சியில் மாணவ விடுதிகள் அமைத்தல்**

**வினா 12119—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் ஓமலூர் பேரூராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம் ஓமலூர் பேரூராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகள் அமைக்கும் கோரிக்கை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

133—

**இலவச கல்வி பயிற்சி அளித்தல்**

**வினா 12560—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



[1998 மே 30]

(அ) தமிழ்நாட்டில் உள்ள பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட, சீர்மரபினருக்கு இலவச கணினி பயிற்சி அளிக்க எந்தெந்த மாவட்டங்களில் மாணவ மாணவியர்களைத் தேர்ந்தெடுக்க அரசு உத்தேசித்துள்ளது?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எவ்வளவு பேரைத் தேர்ந்தெடுக்க அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தகுதியுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினரைச் சேர்ந்த மாணவ மாணவியர் 1000 பேர்களை (500 பிற்படுத்தப்பட்டோர் + 500 மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்) தேர்ந்தெடுத்து கணிப்பொறிப் பயிற்சி அளிக்க கருதப்பட்டுள்ளது.

(ஆ) சேலம் மாவட்டத்தில் 20 மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியரும் 16 பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியரும் தேர்வு செய்யப்பட்டு கோயம்பத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்திற்குப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 1 நபர்களும், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 1 நபர்களும் மட்டுமே பயிற்சியில் சேர்ந்துள்ளனர்.

134—

**வனத் துறையின் காவல் நிலையங்கள் அமைத்தல்**

**வினா 1910—திரு. டி. மணி:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா, களியல் கிராமம், களியல் ரேஞ்ச் வனப்பகுதியில் மரங்கள் கொள்ளையடிக்கப்படுவதைத் தடுக்க வனத் துறையின் காவல் நிலையத்தை களியல் கிராமம், ஆறுகாணியில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பொங்கலூர் திரு. நா. பழனி சாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா, களியல் சரக வனப்பகுதியில் மரங்களை கொள்ளை அடிப்பதைத் தடுக்க கேரளா மாநில எல்லை அருகில் மருதம்பாறையை தலைமை இடமாகக் கொண்டு வனக்காவல் நிலையம் செயல்பட்டு வருகிறது. அடிக்கடி தீவிர பாதுகாப்பு பணியினை மேற்கொண்டு, மரங்கள் திருட்டுத்தனமாக வெட்டி எடுத்துச் செல்லப்படுவது தடுக்கப்பட்டு வருகிறது. மேலும், இது தொடர்பாக திருநெல்வேலியிலுள்ள தென்மண்டல வனப்பாதுகாவலரின் பொறுப்பில் செயல்படும் வனப்பாதுகாப்புப்படை திடீர் தணிக்கைகள், சோதனைகள் மேற்கொள்வதாலும் திருட்டு வெட்டுகள், ஏதும் நடைபெறாவண்ணம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேலும் களியல் ரேஞ்ச் வனப் பகுதியில் அண்மைக்காலத்தில் திருட்டுத்தனமாக வெட்டப்பட்ட மரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கு பொறுப்பான வன அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதால் திருட்டுத்தனமாக மரங்கள் வெட்டப்படுவது வெகுவாக குறைந்துள்ளது. மேற்காணும் சூழ்நிலையில் மருதம் பாறையினை தலைமையிடமாக கொண்டு வனக்காவல் நிலையம் திறம்பட செயல்பட்டு வருவதால் ஆறுகாணியில் ஒரு வனக்காவல் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**135—**

**காடுகள் அழிவதைத் தடுத்தல்**

**வினா 1913—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள காடுகள் அழிவதை தடுக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை யாது?





விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

ஆண்டுதோறும் அதிக நிலப்பரப்பில் தோட்டங்கள் எழுப்புதல், வனப்பாதுகாப்புப் படைகள், பறக்கும் படைகள், அதிரடிப் படைகள், வனச்சோதனைச் சாவடிகள் ஆகியவற்றின் உதவியுடன் திருட்டுத்தனமாக மரங்களை வெட்டுவதை தடுத்தல், மேலும் வனப்பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் வனத் துறை அலுவலர்களுக்கு போதிய அளவு பாதுகாப்புக் கருவிகள் வழங்குதல் போன்ற முறைகளினால் தமிழ்நாட்டில் காடுகள் அழியாமல் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேலும் வனங்களை பாதுகாக்க தேவையான சட்டங்கள் இயற்றப்பட்டு, அவற்றின் கீழ் தேவையான விதிமுறைகளும் ஏற்படுத்தப்பட்டு காடுகள் அழியாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**136—**

**மிருகங்களை வேட்டையாடுவதை தடுத்தல்**

**வினா 1915—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மலை மற்றும் காட்டுப் பகுதிகளில் மிருகங்களை வேட்டையாடுவதைத் தடுக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

1972 ஆம் ஆண்டு வன உயிரினப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வன உயிரினங்களைத் தகுந்த காரணங்களின்றி வேட்டையாடுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இதற்காக வனத் துறைத் தலைவர் நிலையில் ஒரு தலைமை வன உயிரினக் காப்பாளரின் கீழ் ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு வன உயிரினங்களின் பாதுகாப்புக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

[1998 மே 30

137—

மாதிரி தோட்டத்தை விரிவுபடுத்துதல்

**வினா 2985—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், சதுரகிரி மகாலிங்கம் கோவில் அடிவாரத்தில், தாணிப்பாறையிலுள்ள அரசு மூலிகை மாதிரி தோட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம் சதுரகிரி மகாலிங்கம் கோவில் அடிவாரத்தில், தாணிப்பாறையிலுள்ள அரசு மூலிகை மாதிரி தோட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

138—

வாகனங்கள்மீது நடவடிக்கை

**வினா 3784—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சந்தன மரக் கடத்தல்களில் ஈடுபட்டு கைப்பற்றப்பட்ட பின்னர் உரிமை கோரப்படாமல் உள்ள வாகனங்கள் எத்தனை?

(ஆ) அவை மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) சந்தன மரக் கடத்தல்களில் ஈடுபட்டு கைப்பற்றப்பட்ட பின்னர் உரிமை கோரப்படாமல் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை 2806 ஆகும்.

(ஆ) அரசால் பறிமுதல் செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படாத வாகனங்களை விற்பனை செய்ய துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசால் பறிமுதல் செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ள சில வாகனங்களை அரசின் ஆணை பெற்று சந்தனக் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

139—

மரங்களை ஏலத்தில் விடுதல்

**வினா 4476—திரு. டி. மணி:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்ட வனங்களில் விழுந்து கிடக்கும் ஈட்டி, தேக்கு, தேம்பாவு போன்ற விலையுயர்ந்த மரங்களைச் சேகரித்து வனத்துறை மூலமாக ஏலத்தில்விட அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

ஆம்.

140—

பறவை இனங்கள் குறைவதைத் தடுத்தல்

**வினா 5399—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) தமிழ்நாட்டில் பறவை இனங்களின் எண்ணிக்கை குறைந்து வருவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் பறவைகளின் எண்ணிக்கை குறையவில்லை. மாறாக அதிகரித்து வருகிறது.

(ஆ) பறவைகளை வேட்டையாடுதல் 1972-ஆம் ஆண்டு வன உயிரினச் சட்டத்தின்படி முற்றிலும் தடைசெய்யப்பட்டு, தமிழகத்திலுள்ள அனைத்து பறவைகள் சரணாலயங்களிலும் அவற்றை ஈர்க்கும் வகையில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மத்திய/மாநில அரசின் ஆண்டுத்திட்டங்களின் கீழ் செய்யப்படும் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**141—**

**காடுகளை சுத்தம் செய்தல்**

**வினா 6435—திரு. டி. மணி:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மருதம்பாறை கோட்டத்தில் ரப்பர் மரங்கள் நிற்கின்ற பகுதியில் உள்ள காடுகளைச் சுத்தம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) அந்த பகுதியில் மரங்களில் பால் எடுக்காததால் அரசுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) நடவடிக்கைக்கு அவசியமில்லை.



1998 மே 30]

(ஆ) ஒதுக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மாங்களில் இரப்பர் பால் எடுக்காததால் அரசுக்கு நஷ்டம் ஏதுமில்லை.

**142—**

**அரசு ரப்பர் தோட்டங்கள்**

**வினா 6440—திரு. டி. மணி:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ரப்பர் தோட்டத்தில் 1995-96 ஆம் ஆண்டு லாபம் என்ன?

(ஆ) அரசு ரப்பர் தோட்டத்தில் எல்லா கோட்டங்களிலும், கோட்ட மேலாளர்கள் இல்லாத குறையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) ரூ. 328.82 லட்சம்.

(ஆ) தற்போது அரசு ரப்பர் கழகத்தில் எல்லா கோட்டங்களிலும் கோட்ட மேலாளர் காலி இடங்கள் யாவும் நிரப்பப்பட்டு விட்டன.

**143—**

**மாங்குரோவ் காடுகளைப் பாதுகாத்தல்**

**வினா 6836—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம் பிச்சாவரத்தில் அழிந்து வரும் மாங்குரோவ் காடுகளைப் பாதுகாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): விழுப்புரம் கோட்டம் (கடலூர் மாவட்டம்) பிச்சாவரம் மாங்குரோவ் காடுகளை மேம்படுத்துவது மற்றும் பராமரிப்பு பணிகள் மத்திய மாநில அரசு நிதி உதவியுடன் 1989 முதல் 1996-97 வரை அமுல்படுத்தப்பட்டுவருகிறது. மேலும், இதை தவிர எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலையம், சென்னை-113, நவீன அறிவியல் தொழில் நுட்பங்களைக் கையாண்டு பிச்சாவரம் காப்புக்காடுகளை 1997 முதல் 2001 வரை ரூ. 22,41,500 செலவினத்தில் மேம்பாடு செய்ய உள்ளது.

**144—**

## சந்தன மரக்கன்றுகளை நடுதல்

**வினா 6840—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள வனப்பகுதிகளில் புதிதாக சந்தன மரக் கன்றுகளை நடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் ஆண்டுதோறும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**145—**

## சந்தனமர வெள்ளாடைகள் ஏலம் விடுதல்

**வினா 6922—திரு. ஐ. கணேசன்**
**திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) 19-12-1995 முதல் சேலம் சந்தனமரக் கிடங்கிலிருந்து சந்தனமர வெள்ளாடைகள் ஏலம் விடப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சந்தன மர வெள்ளாடைகளை ஏலம் விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) 19-12-1995 முதல் 10-11-1997 வரை 17.36 டன் சந்தன வெள்ளாடை ஏலம் விடப்பட்டுள்ளது.

(ஆ) பதில் எழவில்லை.

**146—**

## வனவிலங்குகளைப் பாதுகாத்தல்

**வினா 7075—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் பகுதியில், வனவிலங்குகளுக்குக் காட்டில் கட்டப்பட்ட தண்ணீர் தொட்டிகளை சரியாகப் பராமரித்து வனவிலங்குகளைக் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

பவானிசாகர் பகுதியில் வனவிலங்குகளுக்குக் காட்டில் கட்டப்பட்ட எட்டு தண்ணீர் தொட்டிகளும் வனத் துறையினரால் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**147—**

**சந்தன மரங்களை தனியார் நிலங்களில் வளர்த்தல்**

**வினா : 8232—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்**
**டாக்டர் மு.தேவராஜன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சந்தனமரங்கள் தனியார் நிலங்களில் வளர்க்க அரசு அனுமதிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

தற்போதுள்ள விதிகளின்படி தனியார் சந்தனமரங்களை வளர்ப்பதற்குத் தடை ஏதும் இல்லை.

**148—**

**திருப்பத்தூர் சந்தனக் கிடங்கு**

**வினா 10672— திரு. சி. ஞானசேகரன்**
**திரு. ச.க. வெங்கடேசன் :**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் சந்தனக் கிடங்கு இரண்டாவது முறையும் தீப்பற்றி எரிந்தது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், திருப்பத்தூர் சந்தன மரக் கிடங்கில் இரண்டாவது முறை தீப்பற்றி எதுவும் எரியவில்லை. இதனால் வினா 'ஆ' விற்கு பதில் எழவில்லை.



**149—**

**அமிர்தி காட்டில் சந்தன மரம்**

**வினா 10675—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரை அடுத்த அமிர்தி காட்டில் கருத்தலைப் பகுதியில் சந்தன மரம் தலைச் சுமையாகக் கடத்தப்படுவது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கையின் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சமூக விரோதிகளால் தலைச் சுமையாகக் கடத்தப்படும் சந்தனக் கட்டைகளை வனத்துறை அதிகாரிகள் சார்நிலைப் பணியாளர்களின் உதவியோடு உடனுக்குடன் கண்டுபிடித்து வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**150—**

**சென்னை மடிப்பாக்கத்தில் சந்தனக் கட்டைகள்**

**வினா 10682—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மடிப்பாக்கத்தில் பேருந்து மூலம் ரூ. 3.00 இலட்சம் பெறுமான சந்தனக் கட்டைகள் கடத்தப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சந்தனக் கட்டைகள் கடத்துவதைத் தடுக்க அரசு எடுத்த முயற்சிகள் யாவை?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். 279 கிலோகிராம் எடையுள்ள ரூ. 83,700 மதிப்புள்ள சந்தனக் கட்டைகள் கைப்பற்றப்பட்டு சம்பந்தப்பட்ட இருவர் கைது செய்யபபட்டு 15 நாள் காவலில் வைக்கப்பட்டனர்.

(ஆ) சந்தன மரக் கடத்தலைத் தடுக்க புதியதாக 468 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. வனப்பகுதிகளில் கட்டடங்கள் கட்ட, புதிய தொலைபேசி, தளவாடங்கள் வாங்க மற்றும் கம்பியில்லாத் தொடர்புச் சாதனங்கள் அமைக்க 1996-97 ஆம் ஆண்டிற்கு ரூ. 64.10 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**151—**

**யானைகள் அழிவதைத் தடுத்தல்**

**வினா 10684—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், கீரிப்பாறை அருகே யானைகள் கட்டுக் கொல்லப்பட்டு தந்தம் கடத்தப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதைத் தடுக்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டம் கீரிப்பாறை அருகே நவம்பர் 1996-ல் ஒரு யானை சுட்டுக் கொல்லப்பட்டது. கைது செய்யப்பட்ட குற்றவாளிகள்மேல் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இம்மாதிரி சம்பவங்கள் நடக்காமல் தீவிர பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



1998 மே 30]

**152—**

**சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம்**

**வினா 10910—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் சாலை ஓரங்களில் இருக்கும் அரசு நிலங்களில் சமூகக் காடுகள் வளரப்புத் திட்டத்தின்கீழ் பழ மரங்களான நாவல், அத்தி, வில்வம், வினா போன்றவற்றை வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டத்தின்கீழ் சாலையோரங்களில் பழ மரங்கள் நடும் திட்டம் எதுவும் இல்லை.

**153—**

**அரசுக்குச் சொந்தமான நிலங்களில் சமூகக் காடுகள்**

**வினா 10915—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுக்குச் சொந்தமான நிலங்களில், பயனுள்ள ஆச்சா, பூவரசு போன்ற மரங்களைக் கொண்ட சமூகக் காடுகள் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

ஆம்.

154—

சந்தன எண்ணெய் ஆலை அமைத்தல்

**வினா 11465—திரு. கொ.வி. நன்னன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் சந்தன எண்ணெய் அல்லது சந்தனத் துகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வேலூர் மாவட்டம், தெக்குப்பட்டில் உள்ள வனத் தோட்டக் கழகத்தின் மூலம் சந்தன எண்ணெய்த் தொழிற்சாலை செயல்படுவதால் செங்கம் தொகுதியில் புதியதாக சந்தன எண்ணெய் அல்லது சந்தனத் துகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

155—

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் வாரியம்

**வினா 12427—திரு. டி. மணி:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு அரசு ரப்பர் வாரியத்தில் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்து செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**



(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

156—

வனவளம் குறித்து ஆய்வு

**வினா 12572—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் வனவளம் குறித்து செயற்கைக்கோள் ஆய்வு நடத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசின் வனநில அளவை நிறுவனம் (Forest Survey of India) செயற்கைக்கோள் மூலம் கிடைக்கப் பெறும் விவரங்களை ஆதாரமாகக் கொண்டு இந்தியாவின் வனங்கள் நிலை 1995 (The State of Forest Report 1995) என்ற அறிக்கையில் தமிழ்நாட்டு வனங்கள் பற்றியும் விவரங்கள் உள்ளன.

157—

யூகலிப்டஸ் மரங்கள் வளர்ப்பு

**வினா 12590—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) யூகலிப்டஸ் மரங்கள் நிலத்தடி நீரை அதிகமாக உறிஞ்சிவிடுவதோடு காடுகளின் சுற்றுச்சூழலையும் பாதிப்பது அரசுக்குத் தெரியுமா?

[1998 மே 30

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை.—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ); யூகலிப்டஸ் மரங்கள் பற்றி ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. பல்வேறு விதமான கருத்துக்கள் வல்லுநர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளன. இதுபற்றி பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**158—**

**ரப்பர் மரங்களைப் பாதுகாத்தல்**

**வினா 12836—திரு. டி. மணி:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், அரசு ரப்பர் தோட்டம், பரளியாறு கோட்டம், இரண்டு, மூன்றாவது கூப்புகளில் விற்பனைக்காக அரசு ஒதுக்கியிருந்த மரங்களில் ரப்பர் மரங்கள் திருடப்பட்டதாகப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை.—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பரளியாறு கோட்டம், கூப்பு எண் 10 மற்றும் 11-ல் 15-7-1997 அன்று சட்டவிரோதமாக ரப்பர் மரங்கள் வெட்டப்படுவதாக வந்த ரகசிய தகவலின் அடிப்படையில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இக்கூப்புகளில் 39 மரங்கள் திருட்டுத்தனமாக வெட்டப்பட்டு உள்ளன. ஆனால் அவைகள் அப்புறப்படுத்தப்படவில்லை. திருட்டுத்தனமாக மரங்களை வெட்டிய குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க 17-7-1997-ல் கீரிப்பாறை காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டு குற்றம் பதிவு செய்யப்பட்டு உள்ளது. மீண்டும், 2-8-1997 அன்று குற்றம் புரிந்துள்ளதாகச் சந்தேகிக்கப்படும் 5 நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க கீரிப்பாறை காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.



1998 மே 30]

**159—**

**மிருகங்கள் அழிவதைத் தடுத்தல்**

**வினா 14130—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறுத்தைப் புலி, முள்ளம் பன்றி, நரி போன்ற மிருகங்களின் இனங்கள் அழிவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை.—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

சிறுத்தைப் புலி, முள்ளம் பன்றி, நரி போன்ற மிருகங்களின் இனங்கள் அழிவதைத் தடுக்கவும் உயிரினங்கள் உய்வதை வலுப்படுத்தும் வகையிலும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. வன உயிரின உய்விடங்கள் மற்றும் தேசியப் பூங்காக்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் இவ்வுயிரினங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நாடு முழுவதும் வேட்டையாடுதலுக்கு முற்றிலுமாகத் தடை ஆணை விதிக்கப்பட்டுள்ளது. வன உயிரின விதிகளைத் தீவிரமாகச் செயல்படுத்த விதிகளில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. வன உயிரினப் பாதுகாப்பிற்கு நாட்டில் உயர்ந்த முன்னுரிமை வழங்கப்பட்டு மேற்கண்ட வன உயிரினங்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்படும் முயற்சிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**160—**

**அடுக்கு மாடி குடியிருப்புகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கட்டுதல்**

**வினா 262—திரு. இரா. தாமரைக்கனி, மற்றும்**
**திரு. அ.லெ. சுப்பிரமணியன்,**
**திரு. ஏ. இராசேந்திரன்,**
**திரு. மு.க. ஸ்டாலின்,**
**டாக்டர் ஆ. ஞானசேகரன்,**
**திரு. குழந்தை. தமிழரசன்,**
**திரு. ஐ. கணேசன்,**
**திரு. ஜி. நிஜாமுதீன்,**
**திரு. சி. ஞானசேகரன்:**

[1998 மே 30

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள அரசினர் தோட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினால், சென்னை அரசினர் தோட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்காக அனைத்து வசதிகளுடன் கூடிய 240 அடுக்குமாடிக் குடியிருப்புக்கள் கட்டப்படவுள்ளன. இதற்கான நிதியுதவி ஹட்கோ நிறுவனத்திடமிருந்து பெற்று செயல்படுத்துவது குறித்த கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

161—

## பட்டினப்பாக்கம் அரசு ஊழியர் குடியிருப்பு

**வினா 5775—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டினப்பாக்கம் அரசு ஊழியர் குடியிருப்பில் ஓய்வு பெற்றபின்பும், தொடர்ந்து பலர் மூன்றாண்டுகளுக்கு மேலாகக் குடியிருந்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



1998 மே 30]

(ஆ) ஒதுக்கீடுதாரர்கள் நீதிமன்றத்தில்/தமிழ்நாடு தீர்ப்பாயத்தில் வழக்குகள் தொடுத்து பரிசீலனையில் இருக்கும் அவ்வழக்குகள் மீது நீதிமன்றத் தீர்ப்பாணை பெறும் வரையில் அரசு எந்த மேல் நடவடிக்கையையும் எடுக்க வழிவகை இல்லை.

162—

## எடப்பாடி நகரில் அரசு ஊழியர்கள் குடியிருப்பு

**வினா 6931—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் அரசு ஊழியர்களுக்கான வாடகைக் குடியிருப்பை வீட்டுவசதித் துறை மூலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது திட்டம் ஏதும் இல்லை.

163—

## சென்னையில் அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள்

**வினா 7328—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் நீண்ட நாட்களாக ஒதுக்கீடு செய்யாமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வருவாய் இழப்பைத் தவிர்க்க வீடுகள் ஒதுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வீட்டுவசதி வாரியத்திடமிருந்து குடியிருப்பு வாரியாக காலியிட அறிக்கை வரப்பெற்றவுடன், அரசாணை (டி) எண். 203, வீட்டுவசதித் துறை, நாள், 28-4-199-ல் குறிப்பிட்டுள்ள சுழற்சி முறைப்படி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**164—**

**சார்பதிவாளர் அலுவலகம் திறத்தல்**

**வினா 4059—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, இரும்புலிக்குறிச்சியில் சார்பதிவாளர் அலுவலகம் திறக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

31-3-1997-ல் நடந்த சட்டமன்றக் கூட்டத்தில் இரும்புலிக் குறிச்சியில் புதிய சார்பதிவகம் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**165—**

**தருமபுரியில் கச்சாப்பட்டு விற்பனை மையம்**

**வினா 5752—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் கச்சாப்பட்டு விற்பனை மையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் காஞ்சிபுரத்தில் உள்ள அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம் தவிர வேறு எங்கும் கச்சாப்பட்டு விற்பனை நிலையம் இல்லாத நிலையில் தருமபுரியில் கச்சாப்பட்டு விற்பனை மையம் ஏற்படுத்தும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**166—**

**தொழிற்பேட்டை அமைத்தல்**

**வினா 6007—திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் தாலுகாவில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருக்கழுக்குன்றம் தாலுகாவில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் எதுவும் சிட்கோவிடம் தற்போது இல்லை.

**167—**

**பீங்கான் தொழிற்சாலை அமைத்தல்**

**வினா 6769—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கண்ணாடி தயாரிக்கத் தேவையான மிகவும் அபூர்வமான மணல் கிடைக்கும் நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி,

[1998 மே 30

நாசரேத்-பூச்சிக்காடு தேரி பகுதியில் பீங்கான் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

சிதம்பரனார் மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, நாசரேத்-பூச்சிக்காடு தேரி பகுதியில் பீங்கான் தொழிற்சாலை அமைப்பது குறித்து பிரேரணை ஏதும் நிலுவையில் இல்லை. மேலும், அங்கு காணப்படும் மணல், கண்ணாடி உற்பத்திக்கு ஏற்றதாக இல்லாத காரணத்தால் அங்கு பீங்கான் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

**168—**

**நல்லூர் கிராமத்தில் பத்திரப்பதிவு**

**வினா 7576—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், II-செட்டிப்பாளையம் ஊராட்சிப் பகுதிகளுக்கான பத்திரப்பதிவை நல்லூர் கிராமத்திலிருந்து மாற்ற வேண்டும் என்று ஊராட்சி மன்றம் கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

(ஆ) அரசு பரிசீலித்து வருகிறது.



1998 மே 30]

**169—**

**துணைப் பதிவாளர் அலுவலகம் திறத்தல்**

**வினா 7701—திரு. த. நடராஜன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வெள்ளிமேடுப்பேட்டையில் ஒரு புதிய துணைப் பதிவாளர் அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**170—**

**தொழிற்பேட்டை ஆரம்பித்தல்**

**வினா 7926—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தொகுதியில் தொழிற்பேட்டை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் தொகுதியில் தற்போது சிட்கோ தொழிற்பேட்டை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

[1998 மே 30

**171—**

**பெருந்துறை வட்டத்தில் தொழிற்பேட்டை**

**வினா 8004—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம், கஸ்தூரிபாளையம் ஊராட்சி, வடமுகம் காங்கயம் பாளையத்தில் 'சிட்கோ' தொழிற்பேட்டை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெறுகிறதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது பூர்த்தியாகும்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு நடவடிக்கையிலிருக்கும்பொழுது, உயர்நீதிமன்றத்தில் நில உரிமையாளர்கள் வழக்குத் தொடர்ந்து வழக்குகள் நடைபெற்று வருவதால், வழக்குகள் முடிந்த பின்னரே, இங்கு தொழிற்பேட்டை நிறுவுவது சம்பந்தமாக நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும்.

**172—**

**சத்துணவுக் கூடம் கட்டுதல்**

**வினா 8305—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், ஊத்துக்குளி ஒன்றியம், ரெட்டிக்குட்டை ஊராட்சி, வலையபாளையத்தில் சத்துணவுக்கூடம் கட்டித்தரக் கேட்டு அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1998-99 ஆம் ஆண்டு செயல்படுத்தப்படும்.

**173—**

**சத்துணவு மையம் அமைத்தல்**

**வினா 8310-திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், ஆரூர்பட்டி ஊராட்சியில், பூமிரெட்டிப்பட்டி, மோட்டூர், பறையூர் ஆகிய குடியிருப்புகளுக்கு ஒரு புதிய சத்துணவு மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

நிதிநிலைக்குட்பட்டு இக்கருத்துரு பரிசீலிக்கப்படும்.

**174—**

**செஞ்சியில் தொழிற்பேட்டை**

**வினா 8556 திரு. த. நடராஜன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை —

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது செஞ்சியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**175—**

**தனியார் வியாபாரிகளிடம் கொள்முதல்**

**வினா 8717—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (பூம்புகார்) சுவாமிமலை உலோக விக்ரக உற்பத்தியாளர்கள் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கத்திலிருந்து கடந்த மூன்று வருட காலமாக விக்ரகங்கள் கொள்முதல் செய்யாமல் தனியார் வியாபாரிகளிடம் கொள்முதல் செய்ததால் அச்சங்கம் பாதிக்கப்பட்டிருப்பதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

கடந்த ஆண்டுகளில் சுவாமிமலை உலோக விக்ரக உற்பத்தியாளர்கள் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கச் சிலைகளின் தரம் மற்றும் வேலைப்பாடு குறைந்தும் விலை அதிகமாகவும் இருந்ததால் குறைந்த அளவே கொள்முதல் செய்யப்பட்டது. இச்சங்க நிர்வாகிகள் பொருட்களின் தரம், வேலைப்பாடு மற்றும் விலை குறித்து உத்தரவாதம் அளித்துள்ளதால், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் தேவைக்கேற்ப கொள்முதல் செய்யப்படும்.

**176—**

**சிறுதொழில் முனைவோருக்குப் பயிற்சிகள்**

**வினா 8801—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





ஒவ்வொரு ஒன்றிய அளவில் சிறுதொழில் சேவை மையத்தினர் சிறுதொழில் முனைவோருக்கு பயிற்சிகள் அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

மாவட்டம் மற்றும் ஒன்றிய அளவில் சிறுதொழில் முனைவோருக்கு சிறுதொழில் சேவை மையத்தினர் ஏற்கெனவே பயிற்சிகள் அளித்து வருகின்றனர்.

**177—**

**பள்ளி விடுமுறை நாட்களிலும் மதிய உணவு**

**வினா 9108—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளி விடுமுறை நாட்களில் மதிய உணவுத் திட்டத்தை நிறுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

பள்ளி விடுமுறை நாட்களில் மதிய உணவு திட்டத்தை நிறுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**178—**

**சத்துணவு மையம் ஏற்படுத்துதல்**

**வினா 10355—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஓரத்தநாடு தாலுக்கா, பின்னுவெட்டு விடுதி கிராமத்திலுள்ள பள்ளியில் மதிய உணவுத் திட்டத்தை செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1998 மே 30

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பிள்ளுவெட்டு விடுதி பள்ளியில் சத்துணவு மையம் 1-11-1997 முதல் இயங்க மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**179—**

**சத்துணவுக் கூடம் கட்டுதல்**

**வினா 10640—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதியில், தியாகசமுத்திரம் ஊராட்சியில் சத்துணவுக்கூடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை.—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

ஆம்.

**180—**

**தொழிற்பேட்டை அமைத்தல்**

**வினா 10798—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம் பவானி தொகுதியில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



1998 மே 30]

(ஆ) ஆம் எனில், தொழிற்பேட்டை அமைக்க அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா?

விடை.—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில் சிட்கோவினால் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**181—**

**தொழில்நுட்ப வளர்ச்சிக்கு நிதியுதவி**

**வினா 10809—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுதொழில் மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அயல்நாடு நிதியுதவி வழங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை.—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) சிறுதொழில் மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அயல்நாடு நிதியுதவி இத்துறையின் மூலம் ஏதும் வழங்கப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**182—**

**பனைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை**

**வினா 11640—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

சாத்தான்குளம் தொகுதியில், நறுமணப்பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

சாத்தான்குளம் தொகுதியில், நறுமணப்பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**183—**

**பத்திரப்பதிவு அலுவலகம் தொடங்குதல்**

**வினா 11947—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம் நல்லம்பள்ளியில் பத்திரப்பதிவு அலுவலகம் ஒன்றை தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

நல்லம்பள்ளியில் புதிய பத்திரப்பதிவு அலுவலகம் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**184—**

**மனைப் பிரிவுகளை பத்திரப்பதிவு செய்தல்**

**வினா 11959—திரு. கே. சுப்புராயன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் தோன்றாமல் இருக்க பத்திரப்பதிவின்போது அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவுகள்



1998 மே 30]

மட்டுமே பதிவு செய்யப்படும் என்று திருத்தம் செய்ய அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தில் 22-எ என்ற புதிய பிரிவு 22-8-1997 முதல் அமலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. பொது நலனுக்கு அல்லது கொள்கைக்கு எதிரானவை (opposed to public policy) என்று சிலவகை ஆவணங்களை அறிவிக்கவும் அவ்வாறு அறிவிக்கப்பட்ட ஆவணங்களைப் பதிவு செய்ய மறுக்கும் அதிகாரத்தைப் பதிவு அதிகாரிக்கு வழங்கவும் மேற்சொன்ன புதிய சட்டப்பிரிவு வகை செய்கிறது. உள்ளாட்சி நிறுவனத்தால் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் விற்பனைகளைப் பொது நலனுக்கு அல்லது கொள்கைக்கு விரோதமானது என்று அறிவிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டவுடன் இவ்வகை ஆவணங்கள் பதிவு செய்ய ஏற்கப்பட மாட்டாது.

**185—**

**சிறுதொழிற்சாலை அமைத்தல்**

**வினா 12493—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி வட்டாரத்தில் தென்னை சாகுபடி அதிகமாகக் காணப்படுவதால் தென்னங்கீற்றை பின்னி விற்கவும் தேங்காய்களை உலர்த்தி பவுடர் செய்து விற்கவும் சிறு தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

இல்லை.

[1998 மே 30

**186—**

**மகளிருக்குக் கடன் உதவி**

**வினா 12566—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில், முதல் தலைமுறையாகத் தொழில் முனையும் மகளிர் எத்தனை பேருக்கு தேவையான முதலீட்டில் 10 சதவீதத் தொகை ரூ. 50,000 வரம்பிற்குள் அரசு மானியம் வழங்க எவ்வளவு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் முதல் தலைமுறையாகத் தொழில் முனையும் மகளிருக்கு அரசு ஆணை நிலை எண் 12, சிறுதொழில் துறை, நாள் 24-2-1997-ன்படி, 10 சதவீதத் தொகை ரூ. 50,000 வரம்பிற்குள் அரசு மானியம் 1996-97-ஆம் ஆண்டில் யாரும் தகுதியுடையவராக இல்லாததால், வழங்க இயலவில்லை. எனினும் சென்னை மாவட்டத்தில் 194 மகளிர்கள் இந்தச் சலுகையை பெற்றுள்ளனர்.

**187—**

**பால்வாடியில் சமையல் கூடம் அமைத்தல்**

**வினா 12617—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிக்கோட்டை பால்வாடியில் சமையல் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**



1998 மே 30]

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம்—கழனிக்கோட்டை பாலர் பள்ளிக்கு சமையலறை, உணவுப் பொருள் இருப்பு வைப்பு அறை, கல்விக்கூடம் ஆகியவை இணைந்தே அமைக்கப்பட்டுள்ளது.

**188—**

**ஊட்டச்சத்து மையத்திற்கு பணியாளர்கள் நியமனம்**

**வினா 13986-திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் காலியாக உள்ள ஊட்டச்சத்து மையத்திற்குப் பணியாளர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மையத்திற்கும் ஒரு பணியாளர் மற்றும் ஒரு உதவியாளர் மட்டுமே என்ற அடிப்படையில் தற்போது நியமனம் செய்யப்படுவதால் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஊட்டச்சத்து மையங்களில் காலியிடங்கள் இருக்க வாய்ப்பில்லை.

(ஆ) எழவில்லை.

**189—**

**கணிப்பொறி மூலம் பத்திரப் பதிவு**

**வினா 14223—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரிலுள்ள பத்திரப்பதிவு அலுவலகத்தில் கணிப்பொறி மூலம் பத்திரம் பதிவு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

எடப்பாடி சார்பதிவகத்தில் கணிப்பொறி மூலம் பத்திரப்பதிவு செய்ய தற்போது செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**190—**

### ஜீவானந்தத்திற்கு நினைவகம்

**வினா 5805—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவிலில் ஜீவானந்தம் அவர்களுக்கு நினைவகம் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) நினைவகம் எவ்வாறு அமைக்கப்படவுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) அமரர் ஜீவானந்தம் அவர்களுக்கு நாகர்கோவிலில் உள்ள சி.பி. ராமசாமி பூங்காவில் அரசு சார்பில் நினைவகம் அமைக்க ரூ. 15.50 லட்சத்திற்கு அரசாணை நிலை எண் 213, செய்தி மற்றும் சுற்றுலா (நி-அ) துறை, நாள் 5-12-1996-ல் அரசு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(ஆ) அமரர் ஜீவானந்தம் நினைவு மண்டபம் நாகர்கோவிலில் உள்ள சி.பி. ராமசாமி பூங்காவின் மத்தியில் நூலகக் கட்டடத்தின் முன் 89.33 ச.மீ. வெளியில் அமைக்கவும், நினைவு மண்டபத்தில் மேடை ஒன்று அமைத்து அமரர் ஜீவாவின் சிலையை நிறுவிடவும் முழு மண்டபத்திலும் பளிங்குத் தரை அமைக்கவும் இம்மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது.



**191—**

### இராஜாதேசிங்கு நினைவாக மணிமண்டபம்

**வினா 7395—திரு. த. நடராஜன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், செஞ்சிக்கோட்டையில் செஞ்சியை ஆண்ட இராஜாதேசிங்கு நினைவாக ஒரு மணிமண்டபம் கட்டும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**192—**

### கலையரங்கம் கட்டுதல்

**வினா 8459—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து நகராட்சிகளிலும் செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் மூலம் கலையரங்கம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) செயற்குறிப்பு இல்லை.

(ஆ) எழவில்லை.

[1998 மே 30

**193—**

**விஸ்வநாததாஸ் அவர்களுக்கு சிலை அமைத்தல்**

**வினா 8675—திரு. வி.பி. இராசன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுதந்திரப் போராட்டத் தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் முழு உருவச் சிலையை சென்னையில் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

முன்வராது.

**194—**

**மேதகு பி.எஸ். குமாரசாமி ராஜா அவர்களின் சிலை நிறுவுதல்**

**வினா 8676—திரு. வி.பி. இராசன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முன்னாள் முதல்வரும் ஒரிசா மாநில முன்னாள் ஆளுநருமான மேதகு பி.எஸ். குமாரசாமி ராஜா அவர்களின் முழு உருவச் சிலை சென்னை மாநகரில் அரசின் சார்பில் நிறுவப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

அரசின் பரிசீலனையில் இல்லை.

**195—**

**வாழ்க்கை வரலாற்றினைத் திரைப்படமாக்குதல்**

**வினா 9172—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

அறிஞர் அண்ணா, பெரியார், காயிதே மில்லத் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றினைத் திரைப்படமாக எடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

அறிஞர் அண்ணா வாழ்க்கை வரலாறு குறித்த விளக்கப்படம் சுமார் 20 நிமிடம் ஓடக்கூடிய அளவில் தயாரிக்கப்பட்டு வருகிறது. பெரியார், காயிதே மில்லத் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளை திரைப்படமாக எடுக்கும் கருத்துரு தற்சமயம் அரசின் ஆய்வில் இல்லை.

**196—**

**புதிய சிலைகள் அமைத்தல்**

**வினா 9226—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி காந்தி மண்டபம் அருகிலுள்ள பாரதத்தாய் பழைய சிலையை அகற்றி, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் புதிய சிலை வைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி காந்தி மண்டபம் அருகிலுள்ள பாரதத்தாய் பழைய சிலை நல்ல நிலையில் மிகவும் உறுதியாக உள்ளது. சிலை முழுவதும் வர்ணம் பூசப்பட்டு பொலிவுடன் உள்ளது. எனவே தற்போதுள்ள பாரதத்தாய் சிலையை அகற்றத் தேவையில்லை.

(ஆ) எழவில்லை.

**197—**

### திரைப்பட நகர்

**வினா 9428—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரைப்பட நகர் முறைகேடுகள் குறித்து விசாரணைக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னை தரமணியில் அனைத்து வசதிகளும் உள்ளடக்கிய ஒரு திரைப்பட நகரம் நிர்மாணிக்கப்பட்டு 31-8-1994 அன்று முதல் செயல்பட்டு வருகின்றது. திரைப்பட நகரில் மராமத்துப் பணிகள் மற்றும் கட்டடங்கள், சாலைகள் அமைப்பது மற்றும் மின்சார சாதனங்கள் வாங்கியதில் அரசிற்குப் பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என இவ்வரசு கருதியது. மராமத்துப் பணிகளில் ஏற்பட்டுள்ள இழப்பினை நிர்ணயம் செய்வதற்கு கீழ்க்கண்ட நபர்கள் அடங்கிய ஒரு வல்லுநர் குழுவை அரசாணை எண் 177 செய்தி மற்றும் சுற்றுலாத் (திதொ.1) துறை, நாள் 20-9-1996-ன்படி அமைத்து ஆணையிடப்பட்டது.

1. டாக்டர் பி. சிவலிங்கம் அவர்கள்,
   துணைவேந்தர் (ஓய்வு),
   அண்ணா பல்கலைக் கழகம்.

2. திரு. எஸ். நடராஜன்,
   முதன்மைப் பொறியாளர் (ஓய்வு),
   (நெடுஞ்சாலைகள்).

மேலும் திரைப்பட நகருக்குச் சில நவீன திரைப்படச் சாதனங்கள் வாங்கப்பட்டதில் முறைகேடுகள் நடைபெற்று இருக்கலாம் என ஐயப்பாடு எழுந்ததையொட்டி அவ்வாறு கருவிகள் வாங்கப்பட்டதில் அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தினைக் கணக்கிடுவதற்கு அரசாணை எண் 178, செய்தி மற்றும் சுற்றுலாத் (தி.தொ.1) துறை, நாள் 20-9-1996-ன்படி



புனேயில் உள்ள இந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த இரு பேராசிரியர்களைக் கொண்ட ஒரு நிபுணர் குழு (Experts Committee) அமைக்கப்பட்டது.

மேற்கூறிய இரு வல்லுநர் குழுக்களும் தங்களது அறிக்கையினை 31-12-1996 அன்று அரசுக்கு அனுப்பி வைத்தன. எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில் நவீன திரைப்படக் கருவிகள் வாங்கியதிலும், திரைப்பட நகர் நிர்மாணிப்பதில் கட்டடங்கள், மராமத்துப் பணிகள், சாலைகள் அமைக்கும் பணிகள், சிறுவர் பூங்கா அமைப்பது போன்ற பணிகளில் பெருமளவுக்கு முறைகேடுகள் நடந்திருப்பதாக இந்த இரு வல்லுநர் குழுக்களும் அறிக்கை தந்துள்ளன. இம்முறைகேடுகள் பற்றி புலன் விசாரணை செய்திட முதலமைச்சர் அவர்களிடம் சுற்றோட்டத்தில் ஆணை பெறப்பட்டு, மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறை கூடுதல் தலைவருக்கு (Addl. D.G.P., CBCID) புலன் விசாரணை செய்வதற்கும் மேல் நடவடிக்கை எடுக்கவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**198—**

### டாக்டர் சீர்காழி கோவிந்தராஜனுக்கு சிலை அமைத்தல்

**வினா 9805—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழிசை வளர்த்த டாக்டர் சீர்காழி கோவிந்தராஜனுக்கு சென்னையில் சிலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**199—**

### காலைக் காட்சிகளை ரத்து செய்தல்

**வினா 9812—திரு மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

மாணவர், மாணவிகள் மற்றும் பணிக்கு செல்பவர்களின் கவனத்தைத் திசை திருப்பும் திரையரங்கு மூலம் திரையிடப்படும் காலைக் காட்சிகளை ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை —

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

அவ்வாறான உத்தேசம் ஏதும் அரசுக்கு இல்லை.

**200—**

**நாகர்கோவிலில் ஜீவா நினைவுச் சின்னம்**

**வினா 10187—திரு ஐ. கணேசன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98-ஆம் ஆண்டு நாகர்கோவிலில் ஜீவா நினைவுச் சின்னம் நிறுவ அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை —

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டு நாகர்கோவிலில் அமரர் ஜீவானந்தம் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்க ரூ. 15.50 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது.

## (பதினெட்டாம் பட்டியல்)

**1—**

**புகார் பெட்டிகள் வைத்தல்**

**வினா 13427—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) அரசு அலுவலகங்களில் லஞ்சம் பெறும் நடைமுறைகளைக் களைய லஞ்சம் குறித்த புகார் பெட்டிகள் வைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை —

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**2—**

**நீரேற்று நிலையம் அமைத்தல்**

**வினா 7802—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், கலங்கியம்—ஊத்துக்குளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், ஊத்துக்குளியில் ஒரு நீரேற்று நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை —

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**3—**

**வரகூர் தொகுதிக்குக் குடிநீர் வசதி**

**வினா 8598—திரு. பா. துரைசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) வரகூர் தொகுதியில் அந்தூர், வரகூர், இளியூர் பகுதிக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் கொளப்பாடியில் இருந்து குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

4—

**தலைவாசல் பகுதிக்குக் குடிநீர் வசதி**

**வினா 12037—செல்வி க. ராணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூரிலிருந்து 18-வது கிலோ மீட்டரில் உள்ள தலைவாசல் பகுதிக்கு மேட்டூரிலிருந்து ஆத்தூர் வரை வரும் காவிரிக் குடிநீரைக் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேட்டூரிலிருந்து ஆத்தூர் வரை வரும் காவிரிக் குடிநீர்த் திட்டத்தினை நீட்டித்து தலைவாசல் பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை

5—

**ஊராட்சியின்கீழ் குளம் பராமரிப்பு**

**வினா 8089—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) பெருந்துறை வட்டம், கண்டிக்காம்பாளையம் ஊராட்சி "அழியூர் குளம்" பொதுப்பணித் துறையின் கீழ் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனை ஊராட்சியின் பராமரிப்புக்கு அனுமதிக்க முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இந்த ஏரி பொதுப்பணித் துறையின் பராமரிப்பின்கீழ் உள்ளது. இந்த ஏரி இருப்புப்பாதை பாதிப்புகுளமாக (Railway affecting tank) இருப்பதால் அடிக்கடி ரெயில்வே துறையுடன் கூட்டு ஆய்வு மேற்கொள்ள வேண்டியுள்ளதால், இதனை ஊராட்சியின் பராமரிப்புக்கு அனுமதிக்க இயலாது.

6—

**பாலம் கட்டுதல்**

**வினா 8008—திரு. ஜி.எல். வெங்கடாசலம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாலக்கோடு தொகுதிக்குட்பட்ட கூடுதுறைப்பட்டி என்னுமிடத்தில, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை —

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசு நிதி நெருக்கடி காரணமாக வினாவில் குறிப்பிட்டுள்ள பணியை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

[1998 மே 30]

7—

### மரங்கள் ஏலம் விடுதல்

**வினா 3872—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த ஆண்டுகளில் வீடூர் அணை நீர்த்தேக்கப் பகுதியில் சவுக்கை, தைலம் போன்ற மரங்கள் மிகக் குறைந்த ஏலத்துக்கு விடப்பட்டது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மரங்கள் மிகக் குறைந்த தொகைக்கு ஏலத்தில் விற்கப்படவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

8—

### ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வாகனங்கள்

**வினா 7979—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடல் ஊனமுற்றோருக்கு, மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூகநலத் துறை அமைச்சர்:**

உடல் ஊனமுற்றோருக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனங்கள் இலவசமாக வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.



1998 மே 30]

9—

### விரைவுப் பேருந்துகளில் ஊனமுற்றோருக்கு பயணச் சலுகை

**வினா 10194அ—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விரைவுப் பேருந்துகளில் ஊனமுற்றோர் இலவசமாகப் பயணம் செய்ய எந்த அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூகநலத் துறை அமைச்சர்:**

விரைவுப் பேருந்துகளில் பயணம் செய்ய விரும்பும் பார்வையற்றோர் மற்றும் முடமானோர், ஊனமுற்றோர் சான்றிதழ் மற்றும் ஊனமுற்றோர் அடையாள அட்டையுடன் பயணம் செய்யும் இடம், பேருந்து, நாள் முதலிய விவரங்களை உரிய படிவத்தில் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட மறுவாழ்வு அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும். மாவட்ட மறுவாழ்வு அலுவலர் அனைத்து விவரங்களையும் சரிபார்த்த பின் வழங்கும் அனுமதிச் சீட்டின் அடிப்படையில் இவர்கள் பயணம் செய்யலாம். கடந்த ஆண்டு இத்திட்டத்தின்கீழ் பார்வையற்றோர் மற்றும் கால் முடமானோர் 7,100 பேர் பயனடைந்தனர்.

10—

### உதவித் தொகையை உயர்த்துதல்

**வினா 12232—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் முதியோர் - விதவைகள் மற்றும் கூலி வேலை செய்வோருக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ. 100-ஐ உயர்த்தி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூகநலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

11—

**ஊனமுற்றோருக்கு இலவச பஸ் பாஸ்**

**வினா 12242—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள உடல் ஊனமுற்றோர் அனைவருக்கும் அனைத்துப் பேருந்துகளிலும் இலவசமாகப் பயணம் செய்ய இலவச பஸ் பாஸ் வழங்கி ஆணை பிறப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூகநலத் துறை அமைச்சர்:**

உடல் ஊனமுற்றவர்கள் அனைவருக்கும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு அனைத்து அரசுப் பேருந்துகளிலும் (விரைவுப் பேருந்துகள் உட்பட) இலவச பயணச் சலுகை அளிக்க அரசு ஆணை ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

12—

**முதியவர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்**

**வினா 12788-திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண் குழந்தைகளை வாரிசாகக் கொண்டுள்ள 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?



1998 மே 30]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூகநலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): முதியவர்களுக்கு 1962-லிருந்தே உதவித் தொகை வழங்கப்படுகிறது. இவர்களில் கண்பார்வையற்றோர் தொழுநோய், மனநோய், பாரிசவாய்வு மற்றும் அவயம் இழந்து வருவாய் ஈட்ட முடியாத நபர்கள் உதவித் தொகை பெற குறைந்தபட்ச வயது 60 ஆகும். மற்ற ஆதரவற்ற நபர்களுக்கு குறைந்தபட்ச வயது 65 ஆகும். இவர்களுக்கு மாதம் ரூ. 100-ம் வருடத்திற்கு இருமுறை இலவச புடவை வேட்டியும், மதிய உணவும் வழங்கப்படுகின்றன.

13—

**மாணவர் விடுதி கட்டுதல்**

**வினா 2067—திரு. அவ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டையில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது இல்லை நிதிநிலைமைக்கேற்ப இனி வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

14—

**பழங்குடியினர் பட்டியல்கள்**

**வினா 3426—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) ஈரோடு மாவட்டம்-சத்தியமங்கலம், அந்தியூர் ஒன்றியங்களில் வாழும் உப்பிலியர், வலையர், ஜோகி, பன்னியாண்டி, போயர், ஒட்டர், குறவர், வேடர், இருளர் மற்றும் வண்ணார் இனத்தவர்களிடமிருந்து தங்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கக் கேட்டு அரசிற்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிட்டுள்ள இனங்களில் பன்னியான்டி, பட்டியல் சாதியிலும், இருளர், பழங்குடியினர் பட்டியலிலும் தற்போது இடம் பெற்றுள்ள சாதிகளாகும். வினாவில் குறிப்பிட்ட மற்ற இனத்தவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க கோரிக்கை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும் இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 342-ன்படி எந்த ஒரு இனத்தையும் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கவோ அல்லது நீக்கவோ வேண்டுமானால் பாராளுமன்ற இரு அவைகளிலும் சட்டதிருத்தம் நிறைவேற்றிய பின்னர்தான் இயலும்.

**15—**

**இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா 3956—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா

திருநெல்வேலி மாவட்டம், நான்குநேரி தொகுதி களக்காடு ஒன்றியம், கீழ்க்கட்டளை கிராமத்தில் திருவாடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான கோவில் நிலங்களைக் கையகப்படுத்தி, வீடு இல்லாத ஏழைகளுக்கு இலவச வீட்டு மனைபட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், நான்குநேரி வட்டம், களக்காடு ஒன்றியம் கீழ்க்கட்டளை கிராமத்தில் திருவாடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதும் இல்லை.

**16—**

**தாழ்த்தப்பட்ட பிரிவினரை ஒரே பெயரில் குறிப்பிடுதல்**

**வினா 4443—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாழ்த்தப்பட்ட பிரிவினரான பள்ளர், பறையர், அருந்ததியர் ஆகிய மூன்றும் மற்றும் அதன்கீழ் உள்ள அனைத்து பிரிவுகளையும் ஒன்றாக இணைத்து ஒரே பெயரில் குறிப்பிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

தத்தம் இனம் என்ன பெயரால் அழைக்கப்பட வேண்டும் என்பதை அந்தந்த இனத்தார்தாம் முடிவு செய்ய வேண்டும். அவ்வாறு முடிவு செய்து அரசுக்குக் கோரிக்கை தரும்போது அரசு ஆவணங்களில் தக்க திருத்தம் மேற்கொள்ள வகையாகும்.

**17—**

**சமூகநலக் கூடம், திருமண மண்டபம் கட்டுதல்**

**வினா 4482—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுவதும் உள்ள கிராமங்களில் தாழ்த்தப்பட்டோர் 50% வாழும் கிராமங்களில் சமூகநலக் கூடம், திருமண மண்டபம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**18—**

**குடியிருப்புகளுக்குப் பட்டா வழங்குதல்**

**வினா 4710—இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, பூவாணி ஊராட்சி, பட்டர்பூவாணி கிராமம், ஆதி திராவிடர்கள் குடியிருப்புக்குப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

(ஆ) திருவில்லிபுத்தூர் வட்டம், பட்டர்பூவாணி கிராமத்தில் உள்ள 39 ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டு மனை வழங்க நலிங்கப்போரி கிராமத்தில் புல எண் 1/1 ஏல் 0.58.5 ஹெக்டேர் தமிழ்நாடு நில எடுப்புச் சட்டம் 31/78-ன்படி நில எடுப்புச் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவரால் 25-12-1996-இல் 4(1) பிரிவின்கீழ் அரசிதழில் விளம்பல் செய்யப்பட்டுள்ளது தகுதியான பயனாளிகளுக்கு பட்டா வழங்கப்படும்.

**19—**

**அருந்ததியர்களுக்குப் பட்டா வழங்குதல்**

**வினா 4725—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, ப. திருவேங்கடபுரம் கிராமம், காளியம்மன் கோவில் தெரு, அருந்ததியர்களுக்குப் பட்டா கொடுக்க நிலம் கையகப்படுத்துவதில் காலதாமதம் ஆவது ஏன்?

(ஆ) காலதாமதத்தைப் போக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திருவில்லிபுத்தூர் வட்டம், அச்சந்தவிழ்த்தான் கிராம உட்கடை என் திருவேங்கிடபுரம் காளியம்மன் கோவில் தெருவில் வசிக்கும் ஆதி திராவிடர் இனத்தவர்கள் (அருந்ததியர்) 48 நபர்களுக்கு மேற்படி கிராம புல எண் 1105/1பி மற்றும் 1077/3-ல் கடந்த 31-8-1996 அன்று வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு உள்ளன.

(ஆ) வினா எழுவதில்லை.

**20—**

**பனியன் தொழிற்பேட்டை கட்டுதல்**

**வினா 5055—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் முதலிப்பாளையம் பகுதியில், ஆதிதிராவிடர்களுக்கான பனியன் தொழிற்பேட்டை கட்டி முடிக்கப்பட்டும் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் முதலிப்பாளையத்தில் பின்னலாடை தொழிற்பேட்டை ஒன்றினை 100

[1998 மே 30

அலகுகளைக் கொண்டதாக அமைக்க அரசு முடிவு எடுத்து. அதன்படியே 100 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு தொழிற்கூடம் குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யும்முன் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடம் மேற்படி கூடத்தில் தொழில் தொடங்க கடன் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்ற அடிப்படையில், அக்கழகத்திடம் விண்ணப்பித்து கடன் வழங்கப்பட்ட 71 பயனாளிகளுக்குத் தொழிற்கூடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

21—

### ஆதி திராவிட மக்களுக்குப் பட்டா வழங்குதல்

**வினா 5060—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் அணைமேடு பகுதியிலுள்ள ஆதி திராவிட மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

திருப்பூர் அணைமேடு பகுதியிலுள்ள 150 ஆதி திராவிடர் பயனாளிகளுக்கு திருப்பூர் ஆண்டிபாளையம் கிராமத்தில் பட்டா வழங்கப்பட்டும் அவர்கள் அதனைப் பெற்றுக் கொள்ள முன்வரவில்லை.

22—

### தொடக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குதல்

**வினா 5209—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் நஞ்சை மகத்துவாழ்க்கை தொடக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?



1998 மே 30]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை —

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1998-99ஆம் கல்வி ஆண்டில் இத்தொடக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்படும்.

23—

### அரசினர் தொழிற்பயிற்சிப் பள்ளி தொடங்குதல்

**வினா 5280—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம் சி. முட்லூரில் அரசினர் தொழிற்பயிற்சிப் பள்ளி ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

24—

### மாணவர்கள் விடுதிகளில் சிற்றுண்டி வழங்குதல்

**வினா 5580—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் அரசினர் நந்தனார் ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகளில் காலை வேளையில் சிற்றுண்டி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

ஆம். சிதம்பரம் அரசு நந்தனார் ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதியில் காலை வேளையில் இட்லி, உப்புமா, பொங்கல் மற்றும் பிற அரிசி வகை உணவுகள் இவைகளில் ஒன்று வழங்கப்படுகின்றது.

**25—**

### மாணவர் விடுதிகளில் செய்தித்தாள்கள்

**வினா 5586—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள அனைத்து ஆதி திராவிட நலத்துறையின்கீழ் இயங்கும் மாணவர் விடுதிகளில் செய்தித்தாள்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்கீழ் இயங்கும் அனைத்து விடுதிகளுக்கும் ஒரு ஆங்கில நாளிதழ் மற்றும் ஒரு தமிழ் நாளிதழ் வழங்க அரசு ஆணை நிலை எண் 93, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 13-5-1997-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**26—**

### பழங்குடியினர்களுக்குக் கடன் வசதி

**வினா 6344—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) மத்திய அரசின் National Scheduled Castes and Scheduled Tribes Finance Development Corporation நிதி நிறுவனத்திலிருந்து தமிழக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு வழங்கப்பெறும் கடன்களை திரும்பப் பெறுவதற்கான உத்திரவாதத்தை (Guarantee) NSFDC-க்கு தமிழக அரசு இதுவரை அளிக்கவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இந்த உத்திரவாதத்தை இந்நிதியாண்டிலேயே அளிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மத்திய அரசின் தேசிய பட்டியலினத்தவர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து (NSFDC) தமிழக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வழங்கப்பெறும் கடன்களைத் திரும்பப் பெறுவதற்கான உத்திரவாதத்தை (Guarantee) ஏற்கெனவே தமிழக அரசு அளித்துள்ளது.

(ஆ) எழவில்லை.

**27—**

### காட்டுபரமக்குடி பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குதல்

**வினா 6683—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1996-97ஆம் ஆண்டில் காட்டுபரமக்குடி பள்ளியை நடுநிலைப்பள்ளியாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

[1998 மே 30

28—

## சலவையாளர்கள் முடிதிருத்துவோர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்

**வினா 7599—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள சலவையாளர்கள் மற்றும் முடிதிருத்துவோர்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்து மாற்றி தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திட அரசு ஆணை பிறப்பிக்குமா?

விடை.—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

அரசு ஆணை பிறப்பிக்க இயலாது. இந்திய அரசமைப்புச் சட்டம் 341-ஆம் பிரிவின்படி பாராளுமன்ற இரு அவைகளிலும் சட்ட திருத்தம் நிறைவேற்றிய பின்னர்தான் எந்த ஒரு இனத்தினையும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க இயலும்.

29—

## சிறப்பு உதவித் தொகை வழங்குதல்

**வினா 7830—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டந்தோறும் முதல் மதிப்பெண் பெற்ற ஆதி திராவிட மாணவ மாணவிகளுக்கு சிறப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை.—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**



1998 மே 30]

மாவட்ட அளவில் +2, பத்தாம் வகுப்பு மற்றும் எட்டாம் வகுப்புகளில் முதன்மையாக தேர்வு பெறும் மாணவர் மற்றும் மாணவிகளுக்கு அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பரிசு வழங்கும் திட்டம் அரசால் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

30—

## மாணவியர் விடுதி அமைத்தல்

**வினா 8301—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, தானிப்பாடியில் ஆதி திராவிடர் மாணவியர் தங்கும் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை.—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

தற்போது இல்லை. வரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

31—

## வீட்டு மனைப்பட்டா வழங்குதல்

**வினா 8753—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியம் விருதுவிளங்கினான், கல்லேரி, சின்னியம்பேட்டை, கண்ணமங்கலம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் குடிசைவாழ் மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1998 மே 30

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தண்டராம்பட்டு தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியத்தில் கல்லேரி கிராமத்திலுள்ள ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்க கல்லேரி கிராமத்தில் 1.45.0 ஹெக்டேர் நிலம் செங்கம் ஆதி திராவிடர் நல தனி வட்டாட்சியரின் வழங்காணை எண். 5/95-96 நாள் 25-3-1996-ன்படி கையகப்படுத்தப்பட்டு 75 ஆதி திராவிட பயனாளிகளுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதர கிராமங்களில் வீட்டு மனைப்பட்டா வழங்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**32—**

**ஆரம்பப்பள்ளி தொடங்குதல்**

**வினா 10325—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிப் பட்டி தொகுதி, பெரியகுளம் ஒன்றியம், ஜெயமங்கலம் கிராமத்தில் ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாக ஒரு ஆரம்பப்பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**33—**

**அரசு சார்பில் குழு அமைத்தல்**

**வினா 10344—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மே 30]

அரசின் நலத்திட்டங்கள் ஆதி திராவிட மக்களைச் சென்றடைகிறதா என்பதைக் கண்காணிக்க அரசு சார்பில் குழு அமைக்கும் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

அரசின் நலத்திட்டங்கள் ஆதி திராவிட மக்களைச் சென்றடைகிறதா என்பதனைக் கண்காணிக்க அரசு சார்பில் அரசு ஆணை (நிலை) எண் 105, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை நாள் 12-9-1996-ல் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**34—**

**டாக்டர் அம்பேத்கர் மணிமண்டபம்**

**வினா 11557—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் டாக்டர் அம்பேத்கர் மணிமண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை

**35—**

**ஆதி திராவிட மாணவியர் விடுதி**

**வினா 11622—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

(அ) செங்கம் தொகுதியைச் சார்ந்த புதுப்பாளையம் ஒன்றியத்திலுள்ள வீரானந்தல் கிராமத்தில் ஆதி திராவிட மாணவியர் விடுதி தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**36—**

**தொழிற்பேட்டை கட்டுதல்**

**வினா 14220—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் எடப்பாடி நகரில் தாட்கோ மூலம் தொழிற்பேட்டை கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**37—**

**கலங்கரை விளக்குப் பகுதியை அழகுபடுத்துதல்**

**வினா 5090—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை கடற்கரையில் கலங்கரை விளக்குப் பகுதியை அழகுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை கடற்கரையில் கலங்கரை விளக்குப் பகுதியை அழகுபடுத்தும் திட்டம் குறித்த செயற்குறிப்பு தற்போது இத்துறையில் ஏதுமில்லை.

**38—**

**வடலூரைச் சுற்றுலாத் தலமாக்குதல்**

**வினா 5681—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமலிங்க வள்ளலார் நினைவிடம் உள்ள வடலூரைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து பக்தர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) இராமலிங்க வள்ளலார் நினைவிடம் உள்ள வடலூரைச் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதற்கான செயற்குறிப்பு இத்துறையில் தற்போது ஏதுமில்லை.

(ஆ) எழவில்லை.

**39—**

**தரங்கம்பாடியைச் சுற்றுலாத் தலமாக்குதல்**

**வினா 5802—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள தரங்கம்பாடியைச் சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) டேனிஷ் நாட்டு நிதி உதவியுடன் பழமை வாய்ந்த கட்டடங்களைப் பாதுகாக்கும் பிரேரணை பரிசீலனையில் உள்ளது. சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுவதற்கு மத்திய அரசு திட்டத்தின்கீழ் ரூ. 29.49 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதில் முதல் தவணையாக ரூ. 14.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு பங்காக ரூ. 5.00 இலட்சமும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. சிறப்பு சுற்றுலா நகர் அறிவிக்கப்பட்டதில் 1994-95-ஆம் ஆண்டு பகுதி-I திட்டத்தில் தரங்கம்பாடி மேம்பாட்டுப் பணிக்காக ரூ. 5.00 இலட்சம் குடிநீர் வசதி மற்றும் தெரு விளக்கிற்காகவும் வழங்கப்பட்டு பணி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் முடிக்கப்பட்டு உள்ளது.

**40—**

## தமிழ்நாட்டில் இளைஞர் விடுதிகள்

**வினா 7898—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இளைஞர் விடுதிகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் தற்போது எட்டு இளைஞர் விடுதிகள் இயங்கி வருகின்றன. (உதகமண்டலம், முதுமலை, கன்னியாகுமரி, இராமேஸ்வரம், ஏற்காடு, சென்னை, மாமல்லபுரம் மற்றும் குன்னூர்).



**41—**

## சர்வோதய சங்கங்களுக்கு மானியம் வழங்குதல்

**வினா 670—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில அரசால் ஒவ்வொரு ஆண்டும் தள்ளுபடி மானியமாக அனுமதிக்கப்படும் தொகை அனைத்து சர்வோதய சங்கங்களுக்கும் கொடுக்கப்படாமல் நிலுவையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1995-96 ஆம் ஆண்டிற்கான விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை. மாநில அரசால் ஒவ்வொரு ஆண்டும் அனுமதிக்கப்படும் தொகைகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**42—**

## இராசிபுரம் கதர் கிராம அங்காடி

**வினா 10890—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராசிபுரம் கதர் கிராம அங்காடியில் முறைகேடு நடைபெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்குரியவர்கள் கண்டறியப்பட்டுள்ளார்களா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) முறைகேடுகள் செய்த நபர்கள் கண்டறியப்பட்டுள்ளார்கள். இவர்கள்மீது முறைப்படி கடுமையான ஒழுங்கு நடவடிக்கை கதர் கிராமத் தொழில் வாரியத்தால் தொடரப்பட்டு வருகிறது.

**43—**

**கூட்டுறவு நிலையத்தை இயக்குதல்**

**வினா 11559—திரு. கொ. வீ. நன்னன்:**

*மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கம் தொகுதி, குயிலம் கிராமத்திலுள்ள கதர் கிராமிய நூற்பு நிலையம் மற்றும் குயிலம் ஆதி திராவிடர் காலனிகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிலையம் பல ஆண்டுகளாக இயங்காமல் இருப்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1. குயிலம் பகுதியில் வழங்கப்படும் விவசாயக்கூலி நூற்பாளர்கள் நூற்கும் நூற்புத்திறனுக்கேற்ப வழங்கப்படும் கூலியைவிட அதிகமாக உள்ளதால், நூற்புப் பணிக்கு நூற்பாளர்கள் எவரும் வருவதில்லை. அதனால் குயிலம் கிராமிய நூற்பு நிலையம் இயங்காத நிலையில் உள்ளது.

2. இலஞ்ச ஊழல் மற்றும் கண்காணிப்புத் துறையின் விசாரணையில் குயிலம் ஆதி திராவிடர் காலனி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் உட்படுத்தப்பட்டுள்ளதால், இச்சங்கம் இயங்காத நிலையில் உள்ளது.

**44—**

**மினரல் காக்கி உற்பத்தி**

**வினா 13491—திரு. நா. பெரியசாமி:**

*மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ) பெருந்துறை தொகுதி, பவானிசாகர் கதர் சாய சலவை அச்சு அலகில் மினரல் காக்கி உற்பத்தி செய்யப்படுகிறதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் உற்பத்தி எவ்வளவு?*

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பவானிசாகர் சாய சலவை அச்சு அலகில் 1996-97-ஆம் ஆண்டில் 23,443 மீட்டர் கதர் இரகங்கள் மினரல் காக்கியாக சாயமிடப்பட்டுள்ளது. 1997-98-ஆம் ஆண்டில் 34,380 மீட்டர் கதர் இரகங்களும், 33,241 மீட்டர் கோ-ஆப்டெக்ஸ் துணி இரகங்களும், மினரல் காக்கியாக சாயமிடப்பட்டுள்ளது.

**45—**

**ஜெட்டி அமைக்கும் திட்டம்**

**வினா 7066—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

*மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், சாமியார் பேட்டையில் மீன்பிடி தொழில் வளர்ச்சியை கருத்தில் கொண்டு, "ஜெட்டி" (படகுகள் தங்குமிடம்) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1998 மே 30

**46—**

**உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீடுகள்**

**வினா 7758—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மிகவும் நலிவடைந்த நிலையில் ஆறு மற்றும் குளங்களையே நம்பி வாழும் உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:**

உள்நாட்டு மீனவர்கள் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு அத்திட்டத்தின்கீழ் இலவச வீடுகள் பெற தகுதியுடையவர்கள். அதனடிப்படையில் 1997-98-ஆம் ஆண்டில் உள்நாட்டு மீனவர்களுக்கு 500 இலவச வீடுகள் கட்டி வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**47—**

**மீன் விற்பனைக் கூடம் கட்டுதல்**

**வினா 7759—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவைகுண்டம் தொகுதியிலுள்ள பழையகாயல் கிராமத்தில் "மீன் விற்பனைக் கூடம்" கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவைகுண்டம் தொகுதியிலுள்ள பழையகாயல் கிராமத்தில் மீன் விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும்



1998 மே 30]

இல்லை. பழையகாயல் கிராமம் ஒரு மீன் இறங்கும் தளமாகும். இங்கு போதுமான அளவு பச்சை மீன்கள் பொதுமக்களுக்கு எளிதாக கிடைக்கின்றது. மேலும், படகு உரிமைதாரர்களே பெரும்பாலும் மீன்களை நேரிடையாக பொதுமக்களுக்கு விற்பதால் இக்கிராமத்தில் மீன் விற்பனைக் கூடம் அமைப்பது வணிக ரீதியில் இலாபகரமாக இராது.

**48—**

**மீனவர் குடியிருப்புகளைப் புதுப்பித்தல்**

**வினா 7761—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவைகுண்டம் தொகுதி, பழையகாயல் கிராமத்தில் 1992-ல் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மீனவக் குடியிருப்புகளைப் பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:**

1979-80 ஆம் ஆண்டு பழையகாயல் கிராமத்திற்குக் கட்டி வழங்கப்பட்ட 30 வீடுகளில் 25 வீடுகள் பழுது பார்ப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டு பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**49—**

**மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கடனுதவி**

**வினா 7762—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 30

மீனவர்களின் படகில் உட்பொருத்தும் இயந்திரம் மற்றும் வலைகள் வாங்க மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

விடை.—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:**

ஒருங்கிணைந்த கடல் மீன்வள அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மீனவர்களின் படகில் உட்பொருத்தும் இயந்திரம் மற்றும் வலைகள் வாங்கத் தேர்வு செய்யப்பட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் அரசு ஏற்கெனவே கடனுதவி வழங்கி வருகிறது.

**50—**

**மீன் வலையில் வெடிகுண்டு**

**வினா 10681—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், அதிராம்பட்டினம் அருகே 1997 மார்ச் மாதம் மீனவர்கள் மீன்பிடிக்கும்போது மீன் வலையில் வெடிகுண்டு சிக்கி வெடித்ததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை.—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) வலையில் சிக்கியது வெடிகுண்டு அல்ல. அது ஒரு சமிக்ஞை செய்யும் சாதனம் மட்டுமே.

(ஆ) அதன் விவரம்.

ஒரு அடி நீளத்தில் டப்பா போன்ற பொருள் மீன்பிடி வலையில் சிக்கியது. அதன்மீது கீழ்க்கண்ட வாக்கியம் எழுதப்பட்டிருந்தது:

"Self Activating Smoke Signal K M 82-S
Kaokako Co., Ltd., Tokyo
(Caution for distress Signal Only)



1998 மே 30]

**(பத்தொன்பதாம் பட்டியல்)**

**1—**

**தகவல் தொகுதி தயாரித்தல்**

**வினா 6740—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டங்களில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களின் முகவரி, அரசு அதிகாரிகளின் பெயர் மற்றும் அலுவலக, இல்லத் தொலைபேசி எண்கள் அடங்கிய தகவல் தொகுதி (Directory) தயாரித்து அந்தந்த மாவட்டங்களில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தற்போது தமிழக அரசு ஆண்டுதோறும் வெளியிடும் தகவல் தொகுப்பின் பகுதி 7-ல் மாவட்டங்களில் முக்கியப் பணிகளில் இருக்கும் அலுவலர்களின் முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் வெளியிடப்படுகின்றன. இத்தொகுப்பு அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுகிறது. மேலும் மத்திய அரசின் தொலைச் செய்தி போக்குவரத்துத் துறை (Telecom Department) மாவட்ட வாரியாக மத்திய மற்றும் மாநில அரசுகளின் அலுவலக முகவரியும் தொலைபேசி எண்களும் அடங்கிய தகவல் தொகுதியினை ஆண்டுதோறும் வெளியிடுகிறது. எனவே மாவட்ட வாரியான மற்றொரு தகவல் தொகுதி வழங்க அவசியம் எழவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**2—**

**பெண் காவலர்களைச் சட்டம் ஒழுங்கு காவல் நிலையப் பணியில் அமர்த்துதல்**

**வினா 14461—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண் காவலர்களைப் பயிற்சி முடிந்ததும் சட்டம் ஒழுங்குக் காவல் நிலையப் பணியில் அமர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தற்பொழுதுள்ள விதிமுறைகளின்படி, காவலர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஆண், பெண் இருபாலரும் ஒருமுனை நுழைவு முறைப்படி பயிற்சி முடிந்ததும், தமிழ்நாடு சிறப்புக் காவலர் படையில் மூன்று ஆண்டுகளும், ஆயுதப் படையில் ஓராண்டும் பணிபுரிந்த பின்னரே சட்டம் ஒழுங்குக் காவல் பிரிவிற்கு மாற்றப்படுவர். எனவே, பெண் காவலர்களை மட்டும் பயிற்சி முடிந்ததும் நேரடியாகச் சட்டம் ஒழுங்கு காவல் நிலையப் பணியில் அமர்த்த இயலாது.

3—

**மாவட்டக் கல்வி அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுதல்**

**வினா 8168—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டக் கல்வி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வாடகைக் கட்டடத்தில் இயங்கும் திருப்பூர் மாவட்டக் கல்வி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான கருத்துருக்கள் பள்ளிக் கல்வி இயக்ககத்தின் பரிசீலனையிலுள்ளன. மேலும் கல்வித் துறையைச் சார்ந்த அனைத்து மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கும் முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கும் சொந்தமாகக் கட்டடம் கட்ட ஒருங்கிணைந்த கருத்துருக்கள் அனுப்பும் சமயத்தில் அரசு வழங்கும் நிதி ஆதாரங்களின் அடிப்படையில் இதனையும் பரிசீலனை செய்ய இயலும்.



4—

**உதவிக் கல்வி அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுதல்**

**வினா 10501—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் உதவிக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்குத் துறையின் சார்பாகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

5—

**தருமபுரி நகரில் கல்வி அலுவலகங்களுக்குக் கட்டடம்**

**வினா 11612—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் முதன்மைக் கல்வி அலுவலகம் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை) ஆகியவற்றிற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

வாடகைக் கட்டடத்தில் இயங்கும் கல்வித் துறையைச் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலகங்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலகங்களுக்கு பகுதி-II-ன் கீழ் சொந்தமாகக் கட்டடம் கட்டித்தர முன்னுரிமை அடிப்படையில் இயக்குநரின் இயக்ககத்தில் கருத்துருக்கள் பரிசீலனையில் உள்ளன. அரசு வழங்கும் நிதி ஆதாரங்களின்

அடிப்படையில் தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலகம் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலகம் ஆகியவற்றிற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவது குறித்து பரிசீலிக்க இயலும்.

6—

**மின்சாரம் தயாரிக்க ஆய்வு**

**வினா 6794—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி சட்டமன்றத் தொகுதியில் உள்ள குற்றால மலையில் தேனருவி மற்றும் செண்பகாதேவி அருவியில் மின்சாரம் தயாரிக்க வாய்ப்புள்ளதைக் கண்டறிய ஆய்வு செய்யும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

7—

**கோட்டை வாசலுக்கு மின் இணைப்பு**

**வினா 9402—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை வட்டம், புளியரைக் கிராமத்திலிருந்து கோட்டை வாசலுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) செங்கோட்டை வட்டம், புளியரைக் கிராமத்திலிருந்து கோட்டை வாசலுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும்.

(ஆ) உயர் மின்னழுத்தப் புதைவடம் ரயில் இருப்புப் பாதையைக் கடந்து அமைப்பதற்கான அனுமதி மின்னியல் செயற் பொறியாளர், தென்னக இயில்வே, மதுரை அவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்றவுடன் வேலை முடிக்கப்பட்டு மின்சாரம் கோட்டை வாசலுக்கு அளிக்கப்படும்.

8—

**ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்துதல்**

**வினா 9718—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புளியரை, ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், புளியரை, ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றிடும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை. ஆனால் 1997-98 நிதியாண்டில், புதிய வடிவமைப்பில் புளியரை, ஆரம்ப சுகாதார நிலையத்தையும் சேர்த்து 352 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக ஒப்புதலும் வழங்கியுள்ளது. தேவையான நிலம் பெறப்பட்டதும் கட்டடப் பணிகள் தொடங்கப்படும்.

9—

### சீர்காழி அரசு மருத்துவமனையில் படுக்கை வசதிகள்

**வினா 13158—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியிலுள்ள சீர்காழி அரசுப் பொது மருத்துவமனை உள் நோயாளிகளின் படுக்கைகளை அதிகரிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சீர்காழி, அரசுப் பொது மருத்துவமனையில் கூடுதலாக 12 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு மற்றும் நியோநேட்டல் அறை கட்டுவதற்கு அரசு ஆணை (நிலை) எண்68 (சுகாதாரம்), நாள் 6-2-1998-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு பொதுப் பணித் துறையினரால் வேலை தொடங்கப்பட உள்ளது. உள் நோயாளிகளின் படுக்கை எண்ணிக்கையை அதிகரிப்பது அவசியமென்றால் அதுபற்றி 1999-2000 பகுதி-2 திட்டத்தில் பரிசீலிக்கப்படும்.

10—

### கிராம நிர்வாக அலுவலர்களுக்குக் குடியிருப்புகள்

**வினா 14510—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராம நிருவாக அலுவலர்களுக்கு எல்லாக் கிராமங்களிலும் குடியிருப்புகளைக் கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

நிதி நிலையைக் கருத்திற்கொண்டு கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகளைப் படிப்படியாகக் கட்டித்தர



அரசு கருதியுள்ளது. முதல் கட்டமாக மலைப் பகுதிகளில் பணி புரியும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு 20 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டும் 40 குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் முடியும் நிலையிலும் உள்ளன.

11—

### காசிமேசர்புரம் ஊராட்சியை குற்றாலம் நகராட்சியுடன் இணைத்தல்

**வினா 6222—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், காசிமேசர்புரம் ஊராட்சியை குற்றாலம் நகராட்சியுடன் இணைக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

12—

### சுடுகாட்டில் எரிமேடை மற்றும் இணைப்புச் சாலை அமைத்தல்

**வினா 6223—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை, ஆறுமுகச்சாமி ஒடுக்கத்திலுள்ள சுடுகாட்டில் எரிமேடை அமைக்கவும், இணைப்புச் சாலை அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) செங்கோட்டை நகராட்சிப் பகுதியில் உள்ள ஆறுமுகச்சாமி ஒடுக்கத்திலுள்ள சுடுகாட்டில் எரிமேடை அமைக்கப்பட்டுவிட்டது. இணைப்புச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

13—

## புதிய ஊராட்சி அமைத்தல்

**வினா 6739— திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், கல்லூரணி ஊராட்சியில் 1-ம் வார்டையும் குலசேகரப்பட்டி ஊராட்சியில் 10-ம் வார்டையும் பிரித்து அவை இரண்டையும் ஒன்றாக இணைத்து பாவூர்சத்திரம் என்ற புதிய ஊராட்சி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், கல்லூரணி ஊராட்சியில் முதல் வார்டையும் குலசேகரப்பட்டி ஊராட்சியில் 10-வது வார்டையும் பிரித்து, அவை இரண்டையும் ஒன்றாக இணைத்து பாவூர்சத்திரம் என்ற புதிய ஊராட்சி அமைப்பதற்கு, கல்லூரணி ஊராட்சித் தலைவர் இசைவும், குலசேகரப்பட்டி ஊராட்சித் தலைவர் ஆட்சேபணையும் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் பாவூர்சத்திரம் என்ற புதிய ஊராட்சி அமைக்க வாய்ப்பில்லை



14—

## சித்த மருத்துவமனை அமைத்தல்

**வினா 9705— திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழப்பாவூர் ஒன்றியம், மேலப்பாவூரில் முழுநேர சித்த மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேலப்பாவூரில் உள்ள சித்த மருத்துவமனையை முழுநேர மருத்துவமனையாக மாற்றுவதற்கான நடவடிக்கையை, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம் மேற்கொண்டுள்ளது.

15—

## சமுதாயக் கூடம் அமைத்தல்

**வினா 13433— டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஒன்றியத்தில் உள்ள வரிக்கல் கிராமத்திற்குச் சமுதாயக் கூடம் ஒன்று அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

[1998 மே 30

16—

### எடப்பாடி தொகுதியில் குடிநீர் வசதி

**வினா 13928— திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, காவேரி குடிநீர் எடப்பாடி-ராசிபுரம் மற்றும் ஆவணியூர்க் கோட்டையில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பல பகுதிகளில் இன்னும் குழாய்கள் பதிக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம். எடப்பாடி-ராசிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு அரசின் ஆய்வில் உள்ளது. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பின் மேற்கண்ட பகுதிகளுக்கு பகிர்மானக் குழாய் பதிக்கப்படும்.

17—

### தண்டராம்பட்டு தொகுதியில் குடிநீர் வசதி

**வினா 13953— திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, வீராணம் ஊராட்சிக்கு மேல்நிலைநீர்த் தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம். மேற்கண்ட குடியிருப்புக்கு 1997-98 நிதியாண்டில் ரூ.4.05 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டம் எடுத்துக்



1998 மே 30]

கொள்ளப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 12/98 இல் முடிவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

18—

### மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி அமைத்தல்

**வினா 13955—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், காடகமான் பகுதிக்குத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) காடகமான் காலனி பகுதிக்கென மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் 1998-99ஆம் நிதியாண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

19—

### கிராமங்களுக்குக் குடிநீர் வசதி

**வினா 13962— திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டாரம்பட்டு தொகுதி, தச்சம்பட்டு ஊராட்சி, புதூர் பண்டிதப்பட்டு ஊராட்சி, கலர்பாளையம், மெய்யூர் ஊராட்சி

விநாயகபுரம், நாறையூர் ஊராட்சி காலனிப் பகுதி ஆகிய குடியிருப்புகளுக்கு மேல்நிலைநீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தண்டராம்பட்டு தொகுதி, தச்சம்பட்டு ஊராட்சி புதூர், பண்டிதப்பட்டு, மெய்யூர், நாறையூர் ஆகிய ஊராட்சிப்பகுதிகளுக்கு குடிநீர் வசதியளிக்க வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் பரிசிலிக்கப்படும்.

**20—**

**சிதம்பரம் நகருக்குக் குடிநீர் வசதி**

**வினா 14045— திரு. ச. அழகிரி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொள்ளிடம் ஆற்றிலிருந்து சிதம்பரம் நகருக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இத்திட்டத்தின் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் டிசம்பர் 1998-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது

**21—**

**சிமெண்ட் களங்கள் அமைத்தல்**

**வினா 10495— திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சாலைகளில் அறுவடைக் காலங்களில் களங்கள் அமைக்கப்படுவதைத் தடுப்பதற்கு ஆங்காங்கே நிலங்களை ஆர்ஜிதம் செய்து சிமெண்ட் களங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சாலைகளில் அறுவடைக் காலங்களில் களங்கள் அமைக்கப்படுதைத் தடுப்பதற்கு ஆங்காங்கே நிலங்களைக் கையகப்படுத்தி சிமெண்ட் களங்கள் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், சமுதாய நெற்களங்கள் மற்றும் உலர்களங்கள் அரசின் பல்வேறு திட்டங்களின்கீழ் அமைக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) வினா எழவில்லை.

**22—**

**நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்தல்**

**வினா 14187— டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல் பயிரிடுவதில் விவசாயிகள் படும் வேதனைகளையும் அதனால் வரும் விலை வீழ்ச்சியையும் தடுக்க குறைந்தபட்சம் குவிண்டாலுக்கு ரூ.600/- விலை நிர்ணயிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மத்திய வேளாண் விளைபொருள் செலவு மற்றும் விலை நிர்ணயக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசு நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைகளை நிர்ணயம் செய்கிறது.

[1998 மே 30

மத்திய அரசு நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைகளை 1997-98-ம் ஆண்டின் காரீஃப் பருவத்திற்கு (1-10-1997 முதல் 30-9-1998 முடிய) முதலில் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்தது:

| ரகம் | குவிண்டாலுக்கு விலை |
|---|---|
| சாதாரணம் | ரூ.415/- |
| சன்னம் | ரூ.435/- |
| மிகச் சன்னம் | ரூ.455/- |

இவ்வரசு மேற்கண்ட விலைகளை 1-9-1997 முதல் கடைப்பிடிக்க அரசாணை (நிலை) எண் 221, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 18-8-1997-ல் ஆணை வெளியிட்டது. பின்னர் மத்திய அரசு தனது 3-9-1997 நாளிட்ட கடிதத்தில் நெல்லின் ரகங்களைச் சாதாரண ரகம் மற்றும் கிரேடு 'ஏ' ரகம் என இரு ரகங்களாகப் பாகுபாடு செய்து அதற்கான விலைகளைக் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்து ஆணை வெளியிட்டது:

| ரகம் | குவிண்டாலுக்கு விலை |
|---|---|
| சாதாரணம் | ரூ.415/- |
| கிரேடு 'ஏ' | ரூ.415/- |

இவ்விலைகளை உடனடியாகக் கடைப்பிடிக்க அரசாணை (நிலை) எண் 302, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நாள் 23-10-1997ல் ஆணை வெளியிடப்பட்டது. மத்திய அரசு நிர்ணயித்த விலைக்கு மேல் கூடுதலாகக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.35/- இடைநிகழ்ச் செலவாக (Incidental Charges) வழங்கப்பட்டு வருகிறது.

**23—**

### கால்வாய்த் தூர் எடுத்தல்

**வினா 6315— திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்குளம் அணைக்கட்டின் கீழ் உள்ள வைராவிக் கால்வாய்த் தூர் எடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?



1998 மே 30]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): செங்குளம் அணைக்கட்டிலுள்ள வைராவிக் கால்வாயினைத் தூர்வாரி மேம்படுத்தும் பணிக்கு ரூ.2.15 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் பணிகள் எடுத்துச் செய்யப்படும்.

**24—**

### மலட்டாற்றைத் தூர் வாரிச் சீர்செய்தல்

**வினா 9963— திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் வட்டம், கண்டமங்கலம் ஒன்றியத்தில் மலட்டாற்றைத் தூர்வாரிச் சீர் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

இல்லை. இந்த வெள்ள நீர் சுமக்கும் ஆற்றில் உள்ள மணலைத் தூர்வாரும் பணி பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படவில்லை.

**25—**

### இறைவை பாசனத் திட்டம்

**வினா 10764—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட சுந்தரக்கோட்டை, அசேஷம் காட்டு வாய்க்காலில் வீணாகிச் செல்லும் தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் மேலேற்றும் இறைவைப் பாசனத் திட்டம் எப்பொழுது நிறைவேற்றித் தரப்படும்?

விடை.—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், மன்னார்குடி வட்டம், சுந்தரக்கோட்டைக் கிராமத்தில் உள்ள காட்டு வாய்க்காலில் செல்லும் தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் வகையில் ஒரு நீரேற்றுத் திட்ட மதிப்பீடு ரூ.88.90 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களது பரிசீலனையில் உள்ளது.

**26—**

**குளத்தில் தூர் எடுத்தல்**

**வினா 13226—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகை ஸ்ரீநிலாயதாட்சி அம்மனுக்குச் சொந்தமான பண்டரீகக் குளத்தில் தூர் எடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை.—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

இல்லை. நாகப்பட்டினம் ஸ்ரீநிலாயதாட்சி அம்மன் கோவிலுக்குச் சொந்தமான குளத்தில் தூர் எடுக்கும் செயற்குறிப்பு பொதுப் பணித் துறையினரிடம் ஏதும் இல்லை.

**27—**

**புதிய பேருந்து இயக்குதல்**

**வினா 524—திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, கொடையாஞ்சி-வாணியம்பாடி வழியாக, ஆம்பூர் வரை செல்லும் வழித்தடத்தில் ஒரு புதிய பேருந்து இயக்க அரசு முன் வருமா?



விடை.—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கொடையாஞ்சியிலிருந்து வாணியம்பாடிக்கு உள்ள தடத்தின் நீளம் 6.3 கி.மீ. ஆகும். இத்தடத்தில் வாணியம்பாடியிலிருந்து பெரியபேட்டை வரை மிகக் குறுகலானத் தெருக்களே உள்ளன. இரு புறங்களும் மக்கள் வசிக்கும் பகுதிகளாகும். அவை கனரகப் பேருந்துகள் செல்லும் அளவிற்கு அகலமான சாலையாக இல்லை. மேலும், இத்தடம் மாட்டு வண்டிகள் செல்லும் அளவில் உள்ளது. எனவே கொடையாஞ்சி-வாணியம்பாடி நேரடித் தடத்தின் சாலை மிகவும் குறுகலாக உள்ளதால் நாட்ராம்பள்ளியிலிருந்து ஆம்பூருக்கு, அம்பலூர், கொடையாஞ்சி, வாணியம்பாடி வழியாகப் பேருந்து இயக்கும் சாத்தியமில்லை.

**28—**

**மூலபெல்லூர் கிராமத்திற்குப் பேருந்து வசதி**

**வினா 2281—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி, மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம்-நெருப்பூர் சென்றுவரும் நகரப் பேருந்தை ஒரு நாளைக்கு மூன்று முறை மூலபெல்லூர் சென்றுவர ஆவன செய்யப்படுமா?

விடை.—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மூலபெல்லூர் கிராமம், பெண்ணாகரம் - நெருப்பூர் தடத்தில் தற்போது பேருந்து வசதியுள்ள தின்னபெல்லூரிலிருந்து 1.5 கி.மீ. தூரம் உள்ளது. இச்சாலை ஜல்லிச் சாலையாக உள்ளது. ஆனால் தின்னபெல்லூர் பிரிவுச் சாலையிலிருந்து 100 மீட்டர் நீளத்திற்கு வீடுகள் உள்ளதால் பேருந்து செல்ல இயலாது. வீடுகளை அகற்றிச் சாலை அகலப்படுத்தப்பட்டால்தான் பேருந்து செல்ல இயலும். மேலும் மூலபெல்லூர் கிராமத்தின் மொத்த மக்கட்தொகை 300 மட்டுமே. எனவே மூலபெல்லூர் கிராமத்திற்குத் தனியாகப் பேருந்து வசதி செய்ய இயலாது.

[1998 மே 30

29—

**புல்லுக்காட்டு வலசை வழியாகப் பேருந்து இயக்குதல்**

**வினா 6737—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியிலிருந்து பாபநாசத்திற்கு, புல்லுக்காட்டு வலசை வழியாகப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புல்லுக்காட்டு வலசை, அம்பாசமுத்திரம்-தென்காசி, திருநெல்வேலி-தென்காசி ஆகியப் பிரதானச் சாலைகளை இணைக்கும் இணைப்புச் சாலையில் அமைந்துள்ளதாலும், இக்கிராமத்திற்கு நகரப் பேருந்து வசதி உள்ளதாலும், தென்காசியிலிருந்து புல்லுக்காட்டு வலசை வழியாகப் பாபநாசத்திற்குச் சுற்று வழித்தடத்தில் புதிதாகப் பேருந்து இயக்க வேண்டிய தேவை ஏதும் தற்போது எழவில்லை.

30—

**பழுதடைந்த பேருந்துகளை மாற்றுதல்**

**வினா 7400—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, புளியங்குடி அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையில் இருந்து இயங்கும் நகரப் பேருந்துகள் 4, 6, 6ஏ 10, 22 ஆகியவை பழுதடைந்த நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அவ்வண்டிகளை மாற்றி, புதிய நகரப் பேருந்துகள் இயக்க அரசு முன் வருமா?



1998 மே 30]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்.2) லிமிடெட், திருநெல்வேலி, தடம் எண் 10-ல் புதிய நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. தடம் எண்கள் 4, 6 6ஏ ஆகியவற்றில் நகரப் பேருந்தாக மாற்றி புதுப்பிக்கப்பட்ட பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தடம் எண் 22-ல் பழைய நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இதனை விரைவில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

31—

**பாபநாசம்-மதுரை பேருந்து இயக்குதல்**

**வினா 11855—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசத்திலிருந்து மதுரைக்கு இயங்கி வந்த தடம் எண் 513 அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்தினை மீண்டும் இயங்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பாபநாசம்-சங்கரன்கோவில் - மதுரை வழித் தடத்தில் பாம்புகோவில் சந்தை வழியாக ஒரு பேருந்து 2 சுற்றுகளும் நடுவக்குறிச்சி வழியாக ஒரு பேருந்து 2 சுற்றுகளும் முன்னர் இயக்கப்பட்டு வந்தது. இவ்வழித்தடம் சுற்றுப் பாதையில் அதிக நிறுத்தத்துடன் கூடுதல் இயக்க நேரத்தில் பாபநாசத்திலிருந்து மதுரைக்கு இயக்கப்படுவதால் நேரடிப் பயணிகள் யாரும் இப்பேருந்தைப் பயன்படுத்தவில்லை. மேலும் இவ்வழித்தடத்தில் போக்குவரத்துத் தேவை பகுதி பகுதியாகவே காணப்பட்டதாலும், பயணிகள் விகிதாச்சாரம் மிகவும் குறைந்து இருந்ததாலும் தற்போது பாபநாசத்திலிருந்து பாம்புகோவில் சந்தை வழியாக மதுரைக்கு ஒரு சுற்றும், மதுரையிலிருந்து

நடுவக்குறிச்சி வழியாக பாபநாசத்திற்கு ஒரு சுற்றும் ஆக இரண்டு சுற்றுகள் இயக்கப்பட்டு வருகின்றன.

32—

### பேருந்து நிலையத்தை நவீனப்படுத்துதல்

**வினா 14317—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் உள்ள அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையத்தை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சென்னையில் உள்ள அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையத்தை நவீனப்படுத்தும் திட்டம் எதுவும் இல்லை. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை புறநகர் பகுதியில் உள் வட்டச் சாலையில் கோயம்பேடு மற்றும் மாதவரம் ஆகிய இடங்களில் இரண்டு மிகப் பெரிய நவீனப் பேருந்து நிலையங்களை அமைத்து, அனைத்து வெளியூர் பேருந்துகளையும் இந்த இரண்டு பேருந்து நிலையங்களிலிருந்தும் இயக்குவதற்கானத் திட்டங்களை வகுத்து பணியைத் தொடங்க இருக்கிறார்கள். இந்த நவீனப் பேருந்து நிலையங்கள் கட்டப்பட்டு இயக்கி வைக்கப்படும் தருணத்தில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகமும் தனது பேருந்துகளை இவ்விரண்டு பேருந்து நிலையங்களிலிருந்து இயக்கும் என்ற காரணத்தால் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையத்தை நவீனப்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

33—

### பணிமனை அமைத்தல்

**வினா 14736—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் பகுதிக்கு அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அலங்காநல்லூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் மதுரையிலுள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனைகள் மூலம் பேருந்து வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. அனைத்துக் கிராமப் பகுதிகளிலிருந்தும் மதுரையை இணைத்து பேருந்து வசதி கேட்கப்படுவதால், மதுரை பணிமனைகளின் மூலம் மதுரையிலிருந்து, பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அலங்காநல்லூர் ஏற்கெனவே பணிமனைகள் அமைந்துள்ள சோழவந்தானிலிருந்து 21 கி.மீ. தூரத்திலும், மதுரையிலிருந்து 17 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. எனவே, அலங்காநல்லூரில் உடனடியாகப் பணிமனை அமைக்கத் தேவையில்லை.

34—

### நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா 2891—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, கல்லூரணி, இராமநாதபுரம், சுப்பையாபுரம், செல்வவிநாயகபுரம் ஆகிய பகுதி பொதுமக்களுக்கென கல்லூரணியில் புதியதாக ஒரு நியாய விலைக்கடை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி கல்லூரணி, இராமநாதபுரம், சுப்பையாபுரம், செல்வவிநாயகபுரம் ஆகிய பகுதி பொதுமக்களின் நலன் கருதி கல்லூரணியில் 358 குடும்ப

அட்டைதாரர்களுக்கென புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கப்பட்டு 2-1-1998 முதல் செயல்பட்டு வருகிறது. இக்கடையில் வாரத்தில் இரு தினங்கள் அதாவது, வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன.

**35—**

**நியாய விலைக் கடை நிறுவுதல்**

**வினா 9781—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தென்காசி வட்டம், ஆவுடையானூர் ஊராட்சியில் மாடியனூர் பகுதியில் நாகல்குளம் தொடக்கக் கூட்டுறவு வங்கி மூலம் இயங்கி வரும் நியாய விலைக் கடையைப் பிரித்து சின்ன நாடானூரில் புதிய கடை நிறுவ அரசு முயற்சி எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) தென்காசி வட்டம், ஆவுடையானூர் ஊராட்சி நியாய விலைக் கடையில் சின்ன நாடானூரின் 117 குடும்ப அட்டைகளே உள்ளதாலும் அங்கு தற்போதுள்ள நியாய விலைக் கடைக்கும் சின்ன நாடானூருக்கும் இடையே 1½ கி.மீ. தூரமே உள்ளதாலும் தற்போதுள்ள நிபந்தனைகளின்படி, சின்ன நாடானூரில் புதிய நியாய விலைக் கடை தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை*

**36—**

**அரசுக் கிடங்குகளில் உணவுப் பொருட்களைச் சேமித்தல்**

**வினா 13617—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனங்கள் மூலமாக சேமிக்கப்படும் உணவுப் பொருட்களை அரசுக் கிடங்குகளில் வைத்திட அரசு, ஆவன செய்யுமா?*

*(ஆ) தற்போதுள்ள வாடகைக் கிடங்குகளில் எத்தனை டன் பொருட்கள் சேமிக்கப்பட்டுள்ளன?*

*(இ) அவ்வாடகைக் கிடங்குகளின் வாடகை விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்:**

*(அ) தமிழக அரசின் சார்பாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இன்றியமையாப் பொருட்களை கொள்முதல் செய்து இருப்பில் வைக்கிறது. அவ்வாறு கொள்முதல் செய்யும் பொருட்களை அந்நிறுவனத்தின் சொந்த சேமிப்பு கொள்ளளவான 5,80,663 மெட்ரிக் டன் இடத்தில் முழுவதும் வைக்கிறது. மேலும் பல தேவையான இடங்களில் தனியார் கிடங்குகளை வாடகைக்கு எடுத்து உணவுப் பொருட்களைச் சேமிப்பில் வைக்கிறது. மீதமுள்ளவற்றை தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனக் கிடங்குகள் உள்ள இடங்களில் இருப்பில் வைக்கிறது. தமிழ்நர்டு சேமிப்பு கிடங்கு நிறுவனமும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தை போன்றே தமிழக அரசின் நிறுவனமாகும். மேலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சேமிப்புக் கட்டணத்தில், சிறப்புச் சலுகை அளிக்கப்பட்டு குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது.*

*(ஆ) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனக் கிடங்குகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் உணவுப் பொருட்கள் சுமார் 2,51,892 மெட்ரிக் டன் அளவிற்கு 07-12-1997 அன்றைய தேதியில் சேமிப்பில் வைக்கப்பட்டிருந்தது மற்றும் 31-12-1997 நிலவரப்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் தனியாரிடமிருந்து வாடகைக்குப் பெறப்பட்ட கிடங்குகளில் 1,98,560 மெட்ரிக் டன் உணவுப் பொருட்கள் இருப்பில் இருந்தன.*

(இ) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனக் கிடங்குகளின் வாடகை விவரம்:

| | |
|---|---|
| ஒரு சதுர அடிக்கு | : ரூ.1.75 ஒரு மாதத்திற்கு |
| 76 கிலோ வரையுள்ள நெல்மூட்டை ஒன்றுக்கு | : ரூ.0.75 ஒரு மாதத்திற்கு |
| 76 கிலோ வரையுள்ள அரிசி மூட்டை ஒன்றுக்கு | : ரூ.0.95 ஒரு மாதத்திற்கு. |

அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமானக் கிடங்குகளில் உணவுப் பொருட்கள் சேமித்து வைக்கப்படுகின்றன. சொந்தமாக கிடங்குகள் இல்லாத வட்டத் தலைமை இடங்களில் பொது விநியோகம் தடையின்றி நடைபெற வேண்டும் எனும் கோட்பாட்டில் வாடகைக் கிடங்குகளும் எடுக்கப்பட்டு உணவுப் பொருட்கள் சேமித்து வைக்கப்படுகின்றன. இதைத்தவிர நெல் கொள்முதல் காலங்களில் கழகத்திற்குச் சொந்தமான கிடங்குகளில் தேவையான இடவசதி இல்லாதபோது தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனக் கிடங்குகள், மத்திய சேமிப்புக் கிடங்குகள் மற்றும் தனியார் கிடங்குகளில் நெல் சேமித்து வைக்கப்படுகிறது. அவைகளிலும் இடமில்லாத பொழுது திறந்த வெளிகளில் (CAP) முறைப்படி நெல் சேமிக்கப்படுகிறது. வாடகைக் கிடங்குகளுக்கு பொதுப்பணித் துறை வாடகை நிர்ணயமுறைப்படி வாடகை கணக்கிடப்பட்டு நிர்ணயம் செய்யப்படுகிறது. அவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் பொழுது நிர்வாக இயக்குநர் மற்றும் பொது மேலாளர் (வர்த்தகம்) ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்குட்பட்டு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

**37—**

**திருவண்ணாமலை மாவட்டத்தில் மையக் கூட்டுறவு வங்கி**

**வினா 14118—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் மைய கூட்டுறவு வங்கி இலாபத்தில் இயங்குகிறதா?



(ஆ) ஆம் எனில், 1996-97-ம் ஆண்டு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி.மணி. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி 1996-97-ம் ஆண்டில் ரூ.3,10,403.30 இலாபம் ஈட்டியுள்ளது.

**38—**

**சேலம் பால் பண்ணை**

**வினா 12418—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் பால் பண்ணையில் நாளொன்றுக்கு எத்தனை லிட்டர் பால் பதப்படுத்தப்படுகிறது?

(ஆ) 1996-97ஆம் ஆண்டு சேலம் பால் பண்ணையின் மூலம் எவ்வளவு இலாபம் ஈட்டியுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் 1996-97ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு சராசரியாக 2,35,180 லிட்டர் பாலைப் பதப்படுத்தியுள்ளது.

(ஆ) 1996-97-ம் ஆண்டு சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் ஈட்டிய நிகர இலாபம் ரூ. 7.82 இலட்சம் ஆகும்.

39—

### மத்திய சிறையைப் புதுப்பித்தல்

**வினா 13714—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

*மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*1837ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னை மத்திய சிறையைப் புதுப்பிக்கவும், விரிவுபடுத்தவும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

*சிறைவாசிகளின் கூடுதல் பாதுகாப்பு கருதி, சென்னை மத்திய சிறையில் கண்காணிப்புக் கோபுரங்கள் அண்மையில் அமைக்கப்பட்டுள்ளன. பழுதடைந்துள்ள சில பகுதிகளும் புதுப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் புதுப்பிக்கவும், விரிவுபடுத்தவும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

40—

### சாயப்பட்டறை கழிவு நீர்

**வினா 13964—திரு. நா. பெரியசாமி:**

*மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஈரோடு மாவட்டம், பேரோடு கிராமம், எஸ்.வி.பி. சாயப்பட்டறையின் கழிவு நீரால் விவசாயக் கிணறுகளும், குடிநீர் ஆதாரங்களும் மாசுபட்டிருப்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) ஈரோடு மாவட்டம், பேரோடு கிராமத்தில் அமைந்துள்ள திருவாளர்கள் எஸ்.வி.பி. சாயப்பட்டறையின் (திருவாளர்கள் விநாயகா*



*பிராசஸ் (பி) லிட்.) கழிவு நீரால் நீர் ஆதாரங்கள் மற்றும் கிணறுகள் பாதிக்கப்பட்டதாக, பேரோடு கிராம மக்களின் புகார் பெறப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தொழிற்சாலை 13-5-1997 முதல் செயல்படாமல் உள்ளது.*

41—

### பாதை அமைத்தல்

**வினா 9194—திரு. சி. ஞானசேகரன்:**

*மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர் மாவட்டம், ஏலகிரி மலையிலுள்ள மங்களம் என்ற கிராமத்தில் ஒதுக்கக் காட்டுப்பகுதியிலுள்ள காட்டிலாகாவின் இரயில் நிலையத்திற்குச் செல்ல பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

*(அ) இப்பொருள் தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.*

*(ஆ) கேள்விக்கு இடமில்லை.*

42—

### நாய்களை வளர்த்து ஏற்றுமதி செய்தல்

**வினா 12233—திரு. ஐ. கணேசன்:**

*மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாட்டில் குறைந்து வருகின்ற இராஜபாளையம், கோம்பை, சிப்பிப்பாறை போன்ற நாய்களை வியாபார ரீதியாக வளர்க்கவும், ஏற்றுமதி செய்யவும் அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் பிரசித்தி பெற்ற நாயினங்களான இராஜபாளையம், கோம்பை மற்றும் சிப்பிப்பாறை போன்றவை காலப்போக்கில் அழிந்துவிடாமல் பாதுகாத்திடவும் அவைகளின் இனப்பெருக்கத்தினை அதிகரித்து பொதுமக்களுக்கு விற்பனை செய்திடும் நோக்குடன் சைதாப்பேட்டை கால்நடை பன்முக மருத்துவ வளாகத்தில், நாய் வளர்ப்புப் பிரிவு ஒன்று 1980-81-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டு அதில் மேற்படி நாயினங்கள் இனவிருத்தி செய்யப்பட்டு, அரசு நிர்ணயம் செய்துள்ள விலையில் குட்டிகள் விற்பனை செய்யப்பட்டுவருகின்றன. மேலும் இந்தப் பிரிவைப் பலப்படுத்தவும் கூடுதலாக இனவிருத்தி செய்யவும் இந்த ஆண்டில் ரூ.5.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இனப்பெருக்கத்தைப் பொறுத்தும் தமிழ்நாட்டின் தேவையினைக் கருத்தில் கொண்டும் நாய்கள் தற்சமயம் ஏற்றுமதி செய்யப்படவில்லை.

**43—**

**தொழுநோயாளிகளுக்கு இலவச வேட்டி, சேலை வழங்குதல்**

**வினா 12192—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மறுவாழ்வு இல்லங்களிலுள்ள தொழுநோயாளிகளுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர் :**

அரசு மறுவாழ்வு இல்லங்களிலுள்ள தொழுநோயாளிகளுக்கும் அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கம் இல்லவாசிகள் ஆகியோருக்கும் அரசின் உத்தரவு எண்.04, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 12-1-98ன்படி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக இலவச வேட்டி, சேலை வழங்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 1565 வேட்டிகளும், 908 சேலைகளும் வழங்கப்பட்டு உள்ளன.



# இணைப்பு-2

*(14 ஆம் பக்கத்தில் உள்ள அடிக் குறிப்பைக் காண்க)*

## 1. வேலூரில் இயங்கிவரும் சென்னைப் பல்கலைக்கழக விரிவாக்க மையத்தை பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்த வேண்டியது குறித்து

உறுப்பினர்: **திரு. சி. ஞானசேகரன்**

அமைச்சர்: **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்**
(கல்வித் துறை)

**அறிக்கை**

தற்பொழுது வேலூரில் இயங்கிவரும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவாக்க மையம் 1983ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. அவ்விரிவாக்க மையத்தில் விலங்கியல் துறை, பொருளாதாரத் துறை ஆகிய இரண்டு துறைகள் இயங்கி வருகின்றன. விலங்கியல் துறையில் ஒரு பேராசிரியரும், பொருளாதாரத் துறையில் ஓர் இணைப் பேராசிரியரும் பணியாற்றி வருகிறார்கள்.

அந்த விரிவாக்க மையத்தை பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்த வேண்டுமானால் மேலும் பல துறைகளும், அதற்கான ஆசிரியர்களும், பணியாளர்களும், சொந்தக் கட்டடங்களும் வேண்டும். மேலும் குறைந்தபட்சம் 50 கோடி ரூபாய் தேவைப்படும். கடந்த ஆண்டு சேலத்தில் பெரியார் பல்கலைக்கழகமும் மற்றும் சென்னையில் (பூம்பொழில், சென்னை-28) டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகமும் ஏற்படுத்தப்பட்டன. இதற்கு முன்னர் 1990 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. ஒரு பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்து, அதற்கான நிதி உதவி செய்து வளர்ச்சி அடையச் செய்யப் பல ஆண்டுகள் ஆகும். சென்ற ஆண்டு இரண்டு பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது சென்னைப் பல்கலைக்கழகத்தின் வேலூர் மையத்தை பல்கலைக்கழகமாக மாற்ற வேண்டுவதின் அவசியம் இல்லை என்று தோன்றுகிறது.

[1998 மே 30

**2. தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றிவரும் 30 நடத்தாட்டிகளுக்கு 3 மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படாமல் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து**

*உறுப்பினர்:* **திரு. ஜி.கே. மணி**

*அமைச்சர்:* **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்**
*(கல்வித் துறை)*

**அறிக்கை**

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிகளில் பணிபுரியும் 29 நடத்தாட்டிகளுக்கு பிப்ரவரி 1998, மார்ச் 1998 மற்றும் ஏப்ரல் 1998 ஆகிய மாதங்களுக்குரிய ஊதியம் வழங்கப்படாமல் உள்ளதால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து தொடக்கக் கல்வி இயக்குநரிடம் விவரமான அறிக்கை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டது.

2. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மட்டும் 1-6-1981 முதல் அரசு ஊழியர்களாக்கப்பட்டு அவர்களுக்குரிய ஊதியம், சம்பந்தப்பட்ட உதவி தொடக்கக் கல்வி அலுவலரால், நேரடியாக கருவூலத்திலிருந்து பெற்று வழங்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் நடத்தாட்டிகள் போன்ற பணியாளர்களுக்கு ஊதியம், ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களாகக் கருதப்பட்டு சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களால் உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் மூலமாக வழங்கப்படுகிறது. ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களால் ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் நிர்ணயம் செய்யப்படும் Entitlement-படி, நிதி ஒதுக்கீடு பெற்று, நடத்தாட்டிகளுக்கு வழங்கப்படவேண்டிய ஊதியம் போன்ற தொகைகளுக்குரிய மானியம் தொடக்கக் கல்வித் துறை இயக்குநர் அவர்களால் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு விடுவிக்கப்படுகிறது.

3. 1997-98 ஆம் ஆணடில், தருமபுரி மாவட்டம், நலலம்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளில் பணிபுரியும் நடத்தாட்டிகளுக்கு ஊதியம் வழங்குவதற்காக மானியத் தொகையாக மொத்தம் ரூ.8,43,135/- ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை முழுவதும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் பயன்படுத்தப்பட்டுவிட்டதால் அவர்களுக்குரிய பிப்ரவரி 1998, மார்ச் 1998 மற்றும் ஏப்ரல் 1998 ஆகிய மாதங்களுக்குரிய ஊதியம் பெற்றுத் தர இயலாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.



1998 மே 30]

1998-99ம் ஆண்டுக்கு வழங்கப்பட வேண்டிய மானியம் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களின் Entitlement Statement பெற்று அரசின் நிதி ஒதுக்கீடு பெறப்பட்ட பின்னர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு வழங்கப்படும்.

4. இருப்பினும், ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து (General Fund) மேற்குறித்த நடத்தாட்டிகளுக்குரிய மூன்று மாதங்களுக்குரிய ஊதியம் வழங்கும் பொருட்டுத் தேவைப்படும் நிதி ஒதுக்கீட்டினை கல்வி நிதிக்கு (Education Fund) உடனடியாக மாற்றி அவர்களுக்கு ஊதியம் வழங்குவதற்குத் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**3. தமிழகத்தில் அழிந்து வரும் பாரம்பரிய சித்த மருத்துவக் குடும்பங்களைக் காப்பாற்ற அரசு இடைக்காலப் பதிவு வழங்குதல் தொடர்பாக**

*உறுப்பினர்:* **டாக்டர் தே. குமாரதாஸ்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி**
*(மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை)*

**அறிக்கை**

பரம்பரை சித்த மருத்துவர்களைப் பதிவு செய்வதற்கு மத்திய அரசின் சட்டத்தின்கீழ் இடம் இல்லாதிருக்கிறது. இதனைக் கருத்தில்கொண்டு 2-9-1993 ஆம் நாளிட்ட அரசு ஆணை எண்.1172-ன் படி பரம்பரை சித்த மருத்துவர்களுக்குப் (Enlistment) பதிவு வழங்குவதற்கு அரசு ஆணையிட்டது. அப்பொழுது பெறப்பட்ட மனுக்களின் அடிப்படையில் பரம்பரை சித்த மருத்துவர்களுக்கு (Enlistment) பதிவு வழங்கப்பட்டது. ஆனால் இன்னும் ஏராளமான பரம்பரை சித்த மருத்துவர்கள், பதிவு கோரி விண்ணப்பம் செய்திருக்கின்ற நிலையில், அரசு, இவர்களுக்குப் பதிவு வழங்குவதற்கு, சமீபத்தில் தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்ட தமிழ்நாடு சித்த மருத்துவ முறை (மேம்படுத்துதல் மற்றும் மருத்துவ தொழிலாற்றுநர்கள் பதிவு செய்து கொள்ளுதல்) சட்டம் விதி 18(1)-ன்படி இடமளித்துள்ளது. இந்தச் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ள சித்த மருத்துவக் கழகத்தினால் நிர்ணயிக்கப்படும் தகுதிகளின் அடிப்படையில் பதிவு வழங்க இடம் உள்ளது. இச்சட்டத்தின்கீழ் சித்த மருத்துவக்கழகமும் அமைக்கப்பட்டுள்ளது. பரம்பரை சித்த மருத்துவர்களின் பதிவு சம்பந்தமாக என்னென்ன தகுதி தேவை என்பதை, இந்த மன்றம் நிர்ணயித்து பரம்பரை சித்த மருத்துவர்களுக்குப் பதிவு வழங்குவது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 4. எடப்பாடியில் கொங்கணாபுரம் ஒன்றியம் வெள்ளாளபுரம் கிராமத்தில் காலரா வியாதி பரவியுள்ளது குறித்து

உறுப்பினர்: திரு. ஐ. கணேசன்

அமைச்சர்: மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி
(மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை)

**அறிக்கை**

சேலம் மாவட்டம், எடப்பாடி தாலுக்கா, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வெள்ளாளபுரம் ஆரம்பச் சுகாதார நிலையத்தைச் சார்ந்த வெள்ளாளபுரம் கிராமத்தில் வயிற்றுப்போக்கு நோயினால் யாரும் இறக்கவில்லை. ஆனால் வயிற்றுப்போக்கினால் பாதிக்கப்பட்டவர்கள் விவரம் பின்வருமாறு:

| நாள் | பாதிப்பு | இறப்பு |
|---|---|---|
| 22-4-1998 | 1 | இல்லை |
| 23-4-1998 | 1 | இல்லை |
| 25-4-1998 | 2 | இல்லை |
| மொத்தம் | 4 | இல்லை |

நோயினால் பாதிக்கப்பட்ட நபர்கள் விவரம் மற்றும் சிகிச்சை பெற்ற இட விபரம் கீழே தரப்படுகிறது:

| நோயினால் பாதிக்கப்பட்டவரின் பெயர் | வயது | சிகிச்சை பெற்ற இடம் |
|---|---|---|
| (1) பெரியண்ணன் | 45 | சின்னப்பன்பட்டி தனியார் மருத்துவமனை |
| (2) துர்க்கா க/பெ. பொன்னுசாமி | 45 | ஓமலூரர் அரசு மருத்துவமனை |
| (3) கோவிந்தம்மாள் க/பெ. ஆண்டியப்பா | 50 | அரசு மருத்துவமனை, சேலம் |
| (4) குப்பாயி க/பெ. பழனிச்சாமி | 24 | ஜலகண்டபுரம், மருத்துவமனை |



மேற்கண்ட நபர்கள் தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டு நலமாக உள்ளனர். மேலும் துரிதமாகத் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்ததால் வயிற்றுப்போக்கு நோயினால் 26-4-1998-க்குப் பிறகு பாதிப்பு இல்லை. மேலும் இக்கிராமத்தில் இந்நோயினால் இறப்பு ஏதும் ஏற்படவில்லை.

தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரங்கள்:

| | | |
|---|---|---|
| (1) காலரா தடுப்பூசி போடப்பட்ட நபர்கள் | : 290 | |
| (2) கிருமிநாசினி தெளிக்கப்பட்ட வீடுகள் | : 6 | |
| (3) குளோரினேஷன் செய்யப்பட்ட நீர்நிலைகள் | : கிணறு | : 2 |
| | மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி | : 1 |

நோய் பரவ முக்கிய காரணம், அழுகிய பழங்கள் மற்றும் ஒவ்வாத உணவை உட்கொண்டதேயாகும்.

மேலும் பாதிக்கப்பட்ட கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையத்தைச் சார்ந்த மருத்துவ அலுவலர் மற்றும் பொது சுகாதாரப் பணியாளர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு அனைத்துத் தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

காய்ச்சிய நீரைப் பருகுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

ஆரம்பச் சுகாதார நிலையம் மற்றும் அரசு மருத்துவமனைகளில் போதிய தடுப்பு மருந்து இருப்பில் உள்ளது.

### 5. சென்னை, பொது மருத்துவமனையில் செயல்படும் இருதயப் பிரிவு 2வது மாடி, 3வது மாடியில் ஏற்பட்டுள்ள சுகாதாரக் கேடு குறித்து

உறுப்பினர்: திரு. அ. வெங்கடாசலம்

அமைச்சர்: மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி
(மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை)

[1998 மே 30

**அறிக்கை**

சென்னை, அரசு பொது மருத்துவமனையில் செயல்படும் இருதயப்பிரிவு 2-வது மாடி, 3-வது மாடியில் தற்பொழுது கூடுதல் துப்புரவுப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு வார்டுகள், கழிவறைகள் மற்றும் சுற்றுப்புறச் சுகாதாரம் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும் முக்கிய பொதுக் குளியல்/கழிவறைகள் பொதுப்பணித் துறையினரால் பழுதுபார்க்கப்பட்டு நன்கு இயங்கி வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**6. தருமபுரி மாவட்டம், தளித் தொகுதி, தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் போதிய மருத்துவர் இல்லாததால் வைத்தியம் பார்க்கச் செல்லும் நோயாளிகளுக்கு ஏற்படும் அதிருப்தி நிலை குறித்து**

உறுப்பினர்: **திரு. ச. இராஜரெட்டி**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி**
*(மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை)*

**அறிக்கை**

அரசினர் மருத்துவமனை, தேன்கனிக்கோட்டையில் அரசால் ஏற்படுத்தப்பட்ட மொத்த படுக்கைகள் 34. இம்மருத்துவமனைக்கு இரண்டு உதவி மருத்துவர் பதவிகள் அரசால் உருவாக்கப்பட்டுள்ளன. கீழ்க்குறிப்பிட்ட உதவி மருத்துவர்கள் அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதியிலிருந்து இம்மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறார்கள்.

1. மருத்துவர், வி. சரோஜா, எம்.பி.பி.எஸ்., டி.ஜி.ஓ., 6-5-1988

2. மருத்துவர், பிச்சு திருமலை, எம்.பி.பி.எஸ்., டி.ஏ., 31-8-1994

எனவே, போதிய மருத்துவர்கள் இம்மருத்துவமனையில் பணியாற்றி வருகிறார்கள்.



1998 மே 30]

**7. சென்னை, நுங்கம்பாக்கம், புஷ்பாநகர் குடிசைமாற்று வாரியக் குடியிருப்புப் பகுதியில் குப்பைமேட்டில் டிரான்ஸ்பார்மர் பாதுகாப்பற்ற நிலையில் புதைக்கப்பட்டிருப்பது குறித்து**

உறுப்பினர்: **திரு. டி. மணி**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி**
*(மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை)*

**அறிக்கை**

சென்னை நுங்கம்பாக்கம், புஷ்பாநகர் குடிசைமாற்று வாரியக் குடியிருப்புப் பகுதியில் 500 கே.வி.ஏ., மின்மாற்றியின் அருகில் இருந்த குப்பைத் தொட்டி 29-4-1998 அன்று காலை 11-00 மணியளவில் அந்த இடத்தை விட்டு அகற்றப்பட்டு விட்டது. மின்மாற்றி பாதுகாப்பான நிலையில் உள்ளது. தற்போது ஆபத்து ஒன்றும் இல்லை.

**8. திருவண்ணாமலை மாவட்டம், போளூர் அரசு மருத்துவமனைகளை இணைத்து அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் செயல்பட வேண்டிய அவசியம் குறித்து**

உறுப்பினர்: **திரு. ஏ. ராசேந்திரன்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி**
*(மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை)*

**அறிக்கை**

திருவண்ணாமலை மாவட்டம், போளூரில், அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் உள்ள பழைய மருத்துவமனையில் மகப்பேறு பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் அறுவை சிகிச்சை-அரங்கம் ஆகியவை செயல்படுகின்றன. அங்கு விரிவாக்கத்திற்குப் போதிய இட வசதி இல்லை. ஆகவே, புதிய மருத்துவமனை சற்றுத் தொலைவில் கட்டப்பட்டுள்ளது. பொது மக்கள் நலன் கருதியே மகப்பேறு பிரிவு, அறுவை சிகிச்சைப் பிரிவு மற்றும் வெளிநோயாளிப் பிரிவு ஆகியவை மட்டும் பழைய மருத்துவமனையில் இயங்கி வருகிறது. எனவே, பழைய புதிய மருத்துவமனைகளை ஒன்றாக இணைத்து மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் செயல்படச் செய்யும் வாய்ப்பில்லை.

**9. புதுக்கோட்டை அருகிலுள்ள ஜெகதாப்பட்டினத்தில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாகப் பல மீனவர்கள் குடியிருப்புகள் பாதிப்பு குறித்து**

*உறுப்பினர்:* **திரு. லா. சந்தானம்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்**
(வருவாய்த் துறை)

**அறிக்கை**

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் தாலுக்கா, செல்லநேந்தல் கிராமத்தில் (ஜெகதாப்பட்டினம்) தீ விபத்து ஏற்பட்டு, மீனவர்கள் குடியிருக்கும் குடிசை வீடுகள் எரிந்தன. அதன் விபரம் கீழ் வருமாறு:

| | | |
|---|---|---|
| விபத்து ஏற்பட்ட நாள் | : | 25-3-1998 பிற்பகல் 3-40 மணியளவில் |
| விபத்துக்கான காரணம் | : | தற்செயலாக ஏற்பட்டுள்ளது |
| பாதிக்கப்பட்ட குடிசைகள் | : | 964 குடிசைகள் (முழுவதும்) |
| உயிரிழப்பு | : | ஏதுமில்லை, இரண்டு நபர்களுக்கு சிறிய தீக்காயம் ஏற்பட்டுள்ளது. |
| கால்நடை இழப்பு | : | ஏதுமில்லை |
| பொருட்சேதங்கள் | : | ரூ.54,23,450/- |
| நிதி நிவாரணம் | : | (1) தலா ரூ.1000/-வீதம் 964 குடிசைதாரர்களுக்கு ரூ.9,64,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து அறுபத்து நான்காயிரம் மட்டும்) வழங்கப்பட்டுள்ளன. (2) சிறிய தீக்காயம் ஏற்பட்ட இரு நபர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் தன்னிச்சை நிதியிலிருந்து தலா ரூ.500/-வீதம் ரூ.1,000/- 26-3-1998 அன்று வழங்கப்பட்டுள்ளது. |





| | | |
|---|---|---|
| நிவாரணம் அளிக்கப்பட்ட நாள் | : | 27-3-1998 மற்றும் 28-3-1998 |
| இதர நிவாரணம் | : | பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசி, வேட்டி, சேலை மற்றும் 1 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப் பட்டுள்ளன. |

2. தற்போது மாவட்ட பாகுபாடின்றி சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் புயல், வெள்ளம் மற்றும் தீ விபத்தில் முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசைதாரர்களுக்குத் தலா ரூ.1,000/-மும், பகுதியாகச் சேதமடைந்த குடிசைதாரர்களுக்குத் தலா ரூ.500/-ம் வழங்கப்படுகிறது. இதுதவிர, தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், 1 வேட்டி அல்லது லுங்கி மற்றும் சேலை இலவசமாக வழங்கப்படுகின்றன. அரசு எல்லா மாவட்ட ஆட்சியர்களுக்கும் கருவூல விதி எண் 27-ன்கீழ் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவி வழங்க அதிகாரம் வழங்கியுள்ளது. இதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டாட்சியர் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கியுள்ளார்.

**10. கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை தாமிரபரணி ஆற்றில் மங்காடு முதல் மூவாற்றுமுகம் வரையுள்ள பகுதிகளிலிருந்து தினசரி நூற்றுக்கணக்கான வள்ளங்களில் மணல் சட்டவிரோதமாக எடுக்கப்பட்டு கேரளமாநிலத்திற்கு லாரிகளில் கடத்திச் செல்லுவதன் விளைவாக ஆற்றுப்படுகையில் அமைந்துள்ள குடிநீர் உறிஞ்கும் கிணறுகளும் பழுதடைந்து மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க முடியாத நிலை குறித்து**

*உறுப்பினர்:* **திரு. டி. மணி**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்**
(வருவாய்த் துறை)

**அறிக்கை**

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1-6-1996 முதல் காவல் துறை, மீன்வளத் துறை மற்றும் குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களுடன், வருவாய்த் துறை அலுவலர்களும், சுமார் 40 குடிநீர்க் கிணறுகள்

[1998 மே 30

அமையப்பெறறுள்ள குழித்துறை ஆற்றுப்படுகையில் அனுமதியின்றி மணல் எடுப்பதைத் தடை செய்யத் தொடர் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். இந்தச் செயலைத் தீவரமாகக் கட்டுப்படுத்துவதற்கு காவல் துறை அலுவலர்களுடன் வருவாய்த் துறை அலுவலர்களால் வாராந்திரச் சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன 1-6-1996 முதல் 31-3-1998 வரை மாவட்ட நிர்வாகம் எடுத்த நடவடிக்கைகளைக் கீழ்க்கண்ட விவரங்கள் தெளிவாக எடுத்துக்காட்டும்:

| | | |
|---|---|---|
| 1. | நடத்தப்பட்ட திடீர் தணிக்கைகள் எண்ணிக்கை | 102 |
| 2. | அனுமதியின்றி மணல் எடுத்ததற்காகக் கைப்பற்றப்பட்ட லாரிகள் | 259 |
| 3. | அனுமதியின்றி மணல் எடுக்க பயன்படுத்தப் பட்டதற்காகக் கைப்பற்றப்பட்ட வள்ளங்கள் | 175 |
| 4. | குற்றவியல் நடவடிக்கைக்காக ஏற்பாடு செய்யப்பட்டவை | 52 |
| 5. | அனுமதியின்றி மணல் எடுத்ததற்காக வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை | ரூ.28.47 இலட்சம் |

மாவட்ட நிர்வாகம் அனுமதியின்றி ஆற்றுமணல் எடுப்பதைத் தடை செய்யத் தேவையான நடவடிக்கைகள் எடுத்து வரும்பொழுது, பொதுமக்களிடையே இந்தச் செயலைக் கண்டிக்க வேண்டும், கட்டுப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் ஏற்படவில்லை. அனுமதியின்றி ஆற்றுமணல் எடுக்கும் சமூக விரோதிகளை அடையாளம் காட்டுவதற்குத் தயக்கம் தெரிவிப்பதுடன் ஒரு சில கிராம மக்கள் சமூக விரோதிகள் மணல் எடுக்க உடந்தையாகவும் உள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரும் அனுமதியின்றி மணல் எடுப்பதை காவல் துறை அலுவலர்களுடன் வருவாய் அலுவலர்களுடனும் கண்காணிக்கும் பணிகளை நேரடியாக மேற்கொண்டபோதும், ஆற்றுப்படுகைகளுக்கு அருகில் உள்ள நில உடைமைதாரர்களின் ஒத்துழைப்புடன் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அனுமதியின்றி மணல் எடுப்பது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அனுமதியின்றி கனிமங்கள் எடுப்பதைக் கட்டுப்படுத்த அரசு, குறைந்தபட்ச அபராதத் தொகையை 1-12-1997 முதல் ரூ.10,000/-லிருந்து ரூ.50,000/- ஆக உயர்த்தியபோது பல அமைப்புகளின் வேண்டுகோளின்படி ரூ.15,000/-மாகக் குறைந்துள்ளது.



1998 மே 30]

அனுமதியின்றி கனிமங்கள் எடுப்பதையும், கொண்டு செல்வதையும், தீவிரமாகக் கட்டுப்படுத்தும் எண்ணத்துடன் அரசு உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் அனுமதியின்றி கனிமங்கள் எடுப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அதிகாரம் அளித்துள்ளது. அதன்படி 1-4-1998 முதல் நகராட்சி ஆணையர், பேரூராட்சி செயல் அலுவலர்கள், ஊராட்சிமன்றத் தலைவர் ஆகியோருக்கு அனுமதியின்றி கனிமங்கள் எடுப்பவர்கள் மீதும் பயன்படுத்தும் வாகனங்கள் மீதும் நடவடிக்கை எடுக்க அரசு அதிகாரம் வழங்கியுள்ளது. எனவே, உள்ளாட்சி அலுவலர்கள் ஒத்துழைப்புடனும், வருவாய் மற்றும் காவல் துறை அலுவலர்களுடனும் ஆற்றுமணல் எடுப்பதைத் தடை செய்ய தீவிர கண்காணிப்புப் பணிகள் மேலும் தொடர்ந்து நடைபெறும்.

**11. புறம்போக்கு நிலங்களில் விடு கட்டியிருப்போருக்கு பட்டா கோரி மக்கள் போராடி வருவதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து**

*உறுப்பினர்:* **திரு. சி. ஞானசேகரன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்**
*(வருவாய்த் துறை)*

**அறிக்கை**

சட்டமன்ற உறுப்பினர் தனது தீர்மானத்தில் குறிப்பாக எந்த ஒரு இடத்தினையும் சுட்டிக்காட்டி, வினாவினை எழுப்பாமல் பொதுவாக ஒரு கருத்தினைத் தெரிவித்துள்ளார். புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டியிருப்போருக்கு பட்டா கோரி மக்கள் போராடி வருவதால், பதட்டநிலை இருப்பதாக எந்த ஒரு மாவட்ட வருவாய் அலுவலராலும் தெரிவிக்கப்படவில்லை. எனினும், குறிப்பிட்டுச் சொன்னால் சம்பந்தப்பட்ட மாவட்டாட்சியரிடம் இருந்து அறிக்கை பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**12. வேலூர் மாவட்டத்தில் ஆம்பூரிலிருந்து வெள்ளக்குட்டைக்குச் செல்ல ரோடு அமைக்க வனத் துறைக்கு வருவாய்த் துறை கொடுக்க வேண்டிய புறம்போக்கு நிலத்தை வழங்காமல் காலம் கடத்துவதால் ரோடு அமைக்கும் பணி நின்று போனது குறித்து**

*உறுப்பினர்:* **திரு. சி. ஞானசேகரன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்**
*(வருவாய்த் துறை)*

[1998 மே 30

## அறிக்கை

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆம்பூரிலிருந்து வெள்ளக்குட்டை கிராமத்திற்கு கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சாலை அமைக்க வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் 1.60.0 ஹெக்டேர் நிலம் தேவைப்படுவதால் மத்திய அரசின் வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி இருமடங்கு வருவாய்த் துறை நிலங்கள், ஈட்டு நிலங்களாகத் தேர்வு செய்யப்பட்டன. வனத் துறையின் நிலங்களை நிலமாற்றம் செய்ய மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். சாலை அமைப்புப் பணி நெடுஞ்சாலைத் துறையினரால் மேற்கொள்ளப்பட வேண்டும். மேற்கூறிய சாலை அமைப்புப் பணிகளுக்காகவும் வனத் துறைக்கு அளிக்கும் ஈட்டு நிலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சிப் பணிகளுக்காகவும் மொத்தம் சுமார் ரூ.10,00,000/- செலவினம் ஏற்படக்கூடும். எனினும் சர்க்கரை ஆலைக்கு கரும்பு வரவு இல்லையென்றும் மேலும் கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செஸ் (Cess) நிதியில் இச்செலவினத்திற்கு வழிவகை ஏதுமில்லை என்றும், எனவே மேற்படி, சாலை அமைத்து மேம்பாடு செய்யத் தேவையில்லை என திருப்பத்தூர் மற்றும் ஆம்பூர் சர்க்கரை ஆலைகளின் தனி அலுவலர்கள் கருத்து தெரிவித்துள்ளதாக நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் வனத் துறைக்கு வருவாய்த் துறை ஈட்டு நிலம் கொடுக்க வேண்டிய வினா எழவில்லை.

**13. திருவான்மியூர் அடுத்துள்ள பெருங்குடி பேரூராட்சிக்கு உட்பட்ட செம்மன் நகர் முதல் தெரு, இரண்டாம் தெரு, மூன்றாம் தெருவில் உள்ள குடிசைகளில் தீப் பிடித்துக் குடிசைகள் நாசமடைந்து, பொருட்சேதம் ஏற்பட்டுள்ளது குறித்து**

உறுப்பினர்: **திரு. இரா. தாமரைக்கனி**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்**
(வருவாய்த் துறை)

## அறிக்கை

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், பெருங்குடி பேரூராட்சியில் செம்பொன் நகரில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் குடிசை வீடுகள் எரிந்து சேதமடைந்துள்ளன. அதன் விவரம் கீழ் வருமாறு:



1998 மே 30]

| | | |
|---|---|---|
| விபத்து ஏற்பட்ட நாள் | : | 18-4-1998 பகல் 12-30 மணியளவில் |
| விபத்துக்கான காரணம் | : | தற்செயலாக ஏற்பட்டுள்ளது |
| பாதிக்கப்பட்ட குடிசைகள் | : | 74 குடிசை வீடுகள் (முழுவதும்) |
| உயிரிழப்பு | : | ஏதுமில்லை |
| கால்நடை இழப்பு | : | ஏதுமில்லை |
| பொருட்சேதங்கள் | : | ரூ.2,50,000/- |
| நிதி நிவாரணம் | : | தலா ரூ.1,000/-வீதம் 74 குடிசை தாரர்களுக்கு ரூ. 74,000/- (ரூபாய் எழுபத்து நான்காயிரம் மட்டும்) 22-4-1998 அன்று வழங்கப்பட்டுள்ளது. |
| இதர நிவாரணம் | : | பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசி, வேட்டி மற்றும் சேலைகள் 18-4-1998 அன்றே வழங்கப்பட்டுள்ளன. |
| நிவாரணம் வழங்கப்பட்ட நாள் | : | 18-4-1998 மற்றும் 22-4-1998 |

2. தற்போது மாவட்ட பாகுபாடின்றி சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் புயல், வெள்ளம் மற்றும் தீ விபத்தில் முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசைதாரர்களுக்குத் தலா ரூ.1,000/-மும், பகுதியாகச் சேதமடைந்த குடிசைதாரர்களுக்குத் தலா ரூ.500/-ம் வழங்கப்படுகிறது. இதுதவிர, தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசி, 1 வேட்டி, அல்லது லுங்கி மற்றும் சேலை இலவசமாக வழங்கப்படுகின்றன. அரசு எல்லா மாவட்ட ஆட்சியர்களுக்கும் கருவூல விதி எண் 27-ன்கீழ் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவி வழங்க அதிகாரம் வழங்கியுள்ளது. இதனடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்டாட்சியர் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கியுள்ளார்.

**14. கோவை மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவுவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து**

*உறுப்பினர்:* **திரு. கே. சுப்பராயன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்**
*(வருவாய்த் துறை)*

**அறிக்கை**

கோவை மாவட்ட ஆட்சியரின் அறிக்கைகள் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டன. வடகிழக்குப் பருவமழை காலத்தில் கோவை மாவட்டத்தில் இயல்பான மழை அளவு 336 மி.மீ. ஆனால் 264 மி.மீ. கூடுதலாக மழை பெய்துள்ளது. இது இயல்பைவிட 79% கூடுதலான மழை அளவாகும். மேலும் 1998-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் 15-4-1998 முடிய சென்னை வானிலை ஆராய்ச்சி மைய அறிக்கையின்படி அம்மாவட்டத்தில் பெய்யவேண்டிய இயல்பான மழை அளவு 67 மி.மீ. அங்கு மேற்படி காலத்தில் 9 மி.மீ. மழை பெய்துள்ளது. அது இயல்பைவிட 86% குறைவாகும். 11-5-1998 அன்று கோவை மாவட்டம் முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்துள்ளது. மேற்கண்ட காரணங்களால் கோவை மாவட்டம் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாகக் கருத்தில் கொள்ள இயலாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

**15. நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுகா, பிரிவு 17 நிலம் ஏழை விவசாயிகளுக்குப் பட்டா, பிரிவு 53 நிலம் பட்டா வழங்குதல் குறித்து.**

*உறுப்பினர்:* **திரு. டி. மணி**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்**
*(வருவாய்த் துறை)*

**அறிக்கை**

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தின் பரப்பு 1,78,430 ஏக்கர் ஆகும். இதில் 80,087.74 ஏக்கர் ஜென்மம் நிலங்கள் ஆகும்.

2. வேளாண்மை மற்றும் நிலச் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன், அரசுக்கும், விவசாயிகளுக்கும் இடையே இருந்த இடைத்தரகர்களை ஒழித்து பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அவற்றில் தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக





மாற்றலும்) சட்டம், 1960 (தமிழ்நாடு சட்டம் 24/1969)ம் ஒன்றாகும். ஜென்மம் நில உடைமையாளர்கள் சிலர், தாங்கள் கைப்பற்றி உள்ள நிலங்களுக்கு இச்சட்டம் பொருந்தாது என்று உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். அவை தள்ளுபடி செய்யப்பட்டன. இந்த ஆணையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு மனுக்கள் தொடரப்பட்டன. அரசியல் நிர்ணயச் சட்டத்தின்படி கூடலூர் ஜென்மம் ஒழிப்புச் சட்டம் செல்லத்தக்கதா என்ற வினா எழுப்பப் பட்டுள்ளது. ஆகவே, இந்த வழக்கினை விசாரிக்க அதிக நீதிபதிகள் அடங்கிய பெஞ்சுக்கு அனுப்ப உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது. இந்த வழக்குகள் இன்னும் நிலுவையாக உள்ளன.

3. அரசின் மேலாண்மை ஆளுகையை நிலை நிறுத்த வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, உச்ச நீதிமன்ற வழக்குகளை விரைவில் முடிக்கக் கோரி மனு ஒன்றை அரசு தாக்கல் செய்துள்ளது. வழக்குகள் முடிக்கப்பெற்று ஆணை பெற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நிலையில் கூடலூர் ஜென்மம் நிலங்களுக்குப் பட்டா வழங்குவது தற்போது இயலாது.

**16. சத்துவாச்சாரி பேரூராட்சியில் தினக்கூலியில் பணிபுரியும் குடிநீர் காவலர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்று பணியாளர்கள் போராடி வருவது குறித்து**

*உறுப்பினர்:* **திரு. சி. ஞானசேகரன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. கோ.சி. மணி**
*(ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)*

**அறிக்கை**

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி பேரூராட்சியில் தற்போது 9 குடிநீர்த் திட்டக் காவலர்கள் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் அனைவரும் அரசின் அனுமதியின்றி தினக்கூலி பணியாளர்களாக நியமனம் செய்யப்பட்டவர்கள் ஆவர்.

2. அரசாணை (நிலை) எண் 878, ஊரக வளர்ச்சித் துறை, நாள்: 15-5-1981-ல், 1-4-1981-க்கு முன்னர் ஊராட்சி ஒன்றியங்களிலும், பேரூராட்சிகளிலும் பணியமர்த்தப்பட்ட சில்லரைச் செலவினப் பணியாளர்களை முறையான ஊதிய விகிதத்தின்கீழ் கொண்டு வர ஆணையிடப்பட்டது. அவ்வாணையில் 1-4-1981-க்குப் பிறகு சில்லரைச் செலவின பணியாளர்கள் எவரையும் பணியமர்த்தக்கூடாது என்றும்

ஆணையிடப்பட்டது. ஆனால் பல ஆண்டுகளாகப் பேரூராட்சிகளில் புதியதாகப் பணியிடங்கள் ஏற்படுத்தாத நிலையில், துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் குடிநீர்த் திட்டப் பணியாளர்கள் பலர் அந்தந்தப் பேரூராட்சிகளால் அரசின் அனுமதியின்றி தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு, பணியாற்றி வருகின்றனர். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் முறையாக மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலம் தேர்ந்தெடுக்கப்படாமலும், கல்வித்தகுதி, வயது வரம்பு ஆகியவை பரிசீலிக்கப்படாமலும், உரிய நியமன உத்திரவுகள் வழங்கப்படாமலும் பேரூராட்சிகளில் தினக்கூலி அடிப்படையில் பணியாற்ற நியமிக்கப்பட்டவர்கள் ஆவர்.

3. இவ்வாறு தற்போது பேரூராட்சிகளில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் தங்களை முறையான ஊதிய விகிதத்தின்கீழ் கொண்டு வந்து, தங்களது பணியை வரன்முறைப்படுத்த வேண்டும் என அரசைக் கோரி வருகின்றனர். அவர்களது கோரிக்கையை ஏற்று முதல் கட்டமாக அரசாணை (நிலை) எண் 199, ந.நி.ம.கு.வ.துறை, நாள்: 12-8-1997-ல் பேரூராட்சிகளில் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி துப்புரவுப் பணியாளர் பணியிடங்களை ஏற்படுத்தவும், அதில் தற்போது தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்துவரும் துப்புரவுப் பணியாளர்களை மாதம் ஒன்றுக்கு ரூ.900 என்ற தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யவும், அவர்களது தொகுப்பூதியத்தை ஆண்டு ஒன்றுக்கு 10% கூடுதலாக்கவும் மூன்றாண்டுகள் கழித்து அவர்களின் பணியினை மதிப்பீடு செய்து அவர்களை முறையான ஊதிய விகிதத்தின்கீழ் கொண்டுவருவது குறித்து அரசு பரிசீலித்து, ஆணையிடலாம் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த அரசாணையை எதிர்த்தும், தாங்கள் தினக்கூலி அடிப்படையில் பணியில் சேர்ந்த நாள் முதல் தங்களை பணியை வரன்முறைப்படுத்தக் கோரியும் பலர் தமிழ்நாடு மாநில நிர்வாகத் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்து, வழக்கு முடியும் வரையில் தங்களது தினக்கூலி பணியாளர்களாகவே தொடர்ந்து பணிபுரிய நிர்வாகத் தீர்ப்பாயத்தில் இடைக்காலத் தடை பெற்றுள்ளனர். இவர்களுக்கு ஏற்கெனவே அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகுப்பூதியத் தொகை அவர்கள் தினக்கூலி அடிப்படையில் பெற்று வந்ததைக் காட்டிலும் மிகவும் குறைவாக உள்ளதாக அரசுக்கு மனுக்கள் வந்ததையடுத்து, பணியாளர்கள் சங்கங்களை அழைத்துப் பேசி மேற்படி தொகுப்பூதியத்தை உயர்த்துவது குறித்து அரசு தற்போது பரிசீலித்து வருகிறது.





4. இரண்டாம் கட்டமாக, தினக்கூலி அடிப்படையில் துப்புரவு வாகன ஓட்டுநர்களாகப் பணிபுரிந்து வருபவர்களின் பணியை வரன்முறைப்படுத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்து அரசாணை (நிலை) எண் 23, ந.நி.ம.கு.வ. துறை, நாள்: 3-3-1998-ல் தக்க ஆணை பிறப்பித்துள்ளது.

5. அடுத்த கட்டமாக, பேரூராட்சிகளில் எஞ்சியுள்ள தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் குடிநீர்த் திட்டப் பணியாளர்கள், மின் பணியாளர்கள் போன்றோரை முறையான ஊதிய விகிதத்தின்கீழ் கொண்டு வருவதற்கு ஏதுவாக தேவையான பணியிடங்களைத் தோற்றுவிப்பது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது. இது குறித்து அரசால் பிறப்பிக்கப்படவுள்ள முடிவான ஆணை வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி பேரூராட்சியில் தற்போது தினக்கூலி அடிப்படையில் பணியாற்றி வரும் 9 குடிநீர்த் திட்டப் பணியாளர்களுக்கும் பொருந்தும்.

## 17. வேலூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்க 15 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் திட்டம் பல மாதங்களாகக் கிடப்பில் போடப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

*உறுப்பினர்:* **திரு. சி. ஞானசேகரன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. கோ.சி. மணி**
(ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)

**அறிக்கை**

தற்போது, வேலூர் நகரத்தில் ஒரு பேருந்து நிலையம் இயங்கி வருகிறது. இதன் பரப்பளவு 3-4 ஏக்கர் இருக்கலாம். இந்நகருக்கு, நகரப் பேருந்துகள் தவிர மற்ற பேருந்துகள் நாளொன்றுக்கு சுமார் 700 முதல் 800 வரை வந்து செல்கின்றன. அதனால் நெரிசல் மிகவும் அதிகமாக உள்ளது. எனவே பேருந்து நிலையம், வேறு இடத்திற்கு மாற்றப்பட வேண்டும் என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை

2. அவ்வாறு புதிய பேருந்து நிலையம் அமைக்க மாவட்ட ஆட்சித்தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று இடங்கள், உயர் அதிகாரிகளால் பார்வையிடப்பட்டு, பேருந்து நிலையம் அமைக்கத் தேவையான பரப்பளவு, தற்போதுள்ள பேருந்து நிலையத்திலிருந்து

[1998 மே 30

உள்ள தூரம் மற்றும் பிரதான சாலைக்கு அருகாமை, நிலத்தின் தோராய மதிப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அவ்விடத்தைக் கையகப்படுத்தி, பேருந்து நிலையம் அமைக்க தொடர் நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**18. திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சிக்கென ரூ.10.66 கோடி செலவில் தயாரிக்கப்பட்டுள்ள தாமிரபரணி குடிநீர்த் திட்டத்தையும், செங்கோட்டை நகராட்சிக்கென 1.06 கோடி செலவில் தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்தையும் குறித்த காலத்தில் முடிப்பதற்கு ஏதுவாக தென்காசியில் குடிநீர் வடிகால் வாரிய கோட்ட அலுவலகத்தை அமைக்க வேண்டிய அவசியம் குறித்து.**

உறுப்பினர்: **திரு. கே. ரவி அருணன்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. கோ.சி. மணி**

*(ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)*

**அறிக்கை**

திருநெல்வேலி மாவட்டம் தென்காசி நகராட்சிக்கென ரூ.10.66 கோடி செலவில் தயாரிக்கப்படும் குடிநீர்த் திட்டம் மற்றும் செங்கோட்டை நகராட்சிக்கென 1.06 கோடி செலவில் தயாரிக்கப்பட்டுள்ள குடிநீர்த் திட்டம் ஆகியவற்றிற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் திருநெல்வேலியிலுள்ள நகரகக் கோட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட வுள்ளது. தேவைக்கேற்ப தென்காசியில் கோட்டம்/உபகோட்டம் அமைப்பது பற்றி முடிவெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2. தென்காசி மற்றும் 5 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுவதற்கான திட்ட மதிப்பீடு ரூ.10.66 கோடிக்கு அரசு ஆணை எண் 292, நாள் 23-9-1997-ன் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

3. இத்திட்டத்தினால் தென்காசி நகராட்சி மற்றும் 5 வழியோர கிராமங்கள் பயன்பெறும். தற்போதைய (1996) மக்கள் தொகை 67,687 ஆகும். இத்திட்டத்தின் இடைக்கால (2011) மக்கட் தொகை 85,201



1998 மே 30]

மற்றும் உச்ச கால மக்கட் தொகை (2026) 1,07,033 ஆகும். இடைக்கால குடிநீர் தேவை 4.75 மில்லியன் லிட்டர் எனவும் உச்சகால குடிநீர் தேவை 6.83 மில்லியன் லிட்டர் எனவும் கணக்கிடப்பட்டு இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நீராதாரமாக 5 நீர் உறிஞ்சு கிணறுகள் தாமிரபரணி ஆற்றில் அமைக்கப்படவுள்ளன. இதற்கான விரிவான மதிப்பீடு அங்கீகாரம் அளிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இதர பணிகளுக்கான மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை டிசம்பர் 1999-க்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**19. கோயம்பேடு வணிக வளாக அங்காடி அருகில் சென்னை குடிநீர் வழங்கல் துறைக்குச் சொந்தமான சர்வே எண் 18, 17/3-பி/ 18/1 ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பது குறித்து.**

உறுப்பினர்: **திரு. சி. ஞானசேகரன்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. கோ.சி. மணி**

*(ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)*

**அறிக்கை**

சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு அறிவிப்பு எண் 217-ல் குறிப்பிட்டுள்ள சர்வே எண் 18 மற்றும் 17/3-பி நிலங்கள் சென்னைக் குடிநீர் வாரியத்திற்குச் சொந்தமானதல்ல. சர்வே எண் 18/1-ல் உள்ள நிலம் சென்னைக் குடிநீர் வாரியத்திற்குச் சொந்தமானது. இந்த நிலத்தினை திரு. கிருஷ்ணபிள்ளை என்பவர் அனுமதியின்றி தன்வயப்படுத்தியிருந்ததால், அந்நிலங்களை அறிவிப்பு கொடுக்கப்பட்ட 15 தினங்களுக்குள் காலி செய்யும்படியும், மீறினால் அவர் மொத்தமாக வெளியேற்றம் செய்யப்படுவார் என பிரிவு 6 தமிழ்நாடு சட்டம் 95-ன்கீழ் அவருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அதற்கு திரு. கிருஷ்ணபிள்ளை நிலத்தை விட்டு வெளியேறாமல் 7-வது மாநகர உரிமையியல் நீதிமன்றத்தில் தன்னுடைய உரிமை நிலையை நிறுத்திக் கொள்ள உரிமையியல் வழக்கு 4529/1997-ஆம் இடைக்கால மனு எண் ஐ.ஏ. 12286/1997-ஆம் கொடுத்து, 7-7-1997 அன்று தற்போதைய நிலைமை நீடிக்க நீதிமன்ற உத்தரவு பெற்றுள்ளார். இந்த உரிமையியல் வழக்கு மற்றும் இடைக்கால மனு ஆகியவைகளுக்கு எதிரான வழக்கு சென்னைக் குடிநீர் வாரியத்தால் 17-3-1998 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் வழக்கு நிலுவையில் உள்ளது.

**20. திருப்பரங்குன்றம் அருகே எம்.பி. தொகுதி மேம்பாட்டில் கட்டப்பட்ட கலையரங்கம் வேலை அனைத்தும் முடியும் தருவாயில் திடீரென்று இடிந்து தரை மட்டம் ஆகியுள்ளது குறித்து**

உறுப்பினர்: **திரு. டி. மணி.**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. கோ.சி. மணி**
*(ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)*

**அறிக்கை**

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் வேடர்புளியங்குளம் கிராமத்தில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 1996-97-ன்கீழ் கலையரங்கம் கட்டும் பணி ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வே. இராஜன் செல்லப்பா, எம்.பி. அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு, மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் 30-4-1997-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 11-7-1997 அன்று திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் தணக்கன்குளம் கிராமத்தைச் சார்ந்த திரு. செல்லக்கண்ணு என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட பணி கூரை, மட்டம் வரை முடிக்கப்பட்டு, கான்கிரீட் கூரை கடந்த 3-4-1998 அன்று போடப்பட்டுள்ளது. 16-4-1998 அன்று கான்கிரீட் பலகை பிரிக்கப்பட்டு, 19-4-1998 அன்று கான்கிரீட் கூரை மேல் சுற்றுச்சுவர் கட்டுவதற்கான செங்கல் மற்றும் மணல் ஆகியவை ஏற்றப்பட்டு, வேலையாட்களும் வேலை செய்ய மேலே ஏறியுள்ளனர். பொதுவாக கான்கிரீட் கூரை போடப்பட்டு 21 நாட்களுக்குப் பிறகே கான்கிரீட் பலகையைப் பிரிப்பது வழக்கம். ஆனால் வேடர்புளியங்குளம் கலையரங்கம் சரியாக 14 நாட்களில் சரியான முறையில் பராமரிக்கப்படாமல் (Proper Curing) பிரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேலே சுமை ஏற்றப்பட்ட நிலையில் கூரை எடை தாங்காமல் இடிந்து விழுந்துள்ளது. மேலும் அளவுப் புத்தகத்தின்படி (170/96-97) 27-10-1997 அன்று ரூ.33,964/-ம் (பக்கம் -7) 7-4-1998 அன்று ரூ.44,245/-ம் உதவிக் கோட்டப் பொறியாளர் (ஊரக வளர்ச்சி), மதுரை அவர்களின் பரிந்துரையின் பேரில் மொத்தம் ரூ.78,209/-மேற்படி செல்லக்கண்ணு என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 20-4-1998 அன்று மாவட்ட ஆட்சியரின் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் வேடர்புளியங்குளம் ஊர் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் அளித்த புகார் மனுவைத் தொடர்ந்து அன்றே





திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை அவர்களால் தல ஆய்வு செய்யப்பட்டு இடிந்து விழுந்த கட்டடத்திலிருந்து மாதிரி கலவை எடுக்கப்பட்டு, பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர், ஒன்றியப் பொறியாளர், ஒன்றிய மேற்பார்வையாளர் ஆகியோர் மீது தமிழ்நாடு ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு விதி 17(அ)-ன் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. உதவிக்கோட்டப் பொறியாளர் வேலையை மேலளவு செய்ததன் பேரில் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

வேடர்புளியங்குளம் கலையரங்கம் இடிந்த சம்பவத்தில் வேலை செய்த நபர்களுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ எவ்விதச் சேதமும் ஏற்படவில்லை.

கலையரங்கம் கட்டடத்தில் இடிந்து விழுந்து தரைமட்டம் ஆன கட்டட கட்டுமானப் பொருட்கள் அனைத்தும் முழுமையாக அகற்றப்பட்டு, ஏற்கெனவே கட்டடம் கட்டப்பட்டு வந்த அதே இடத்தில் தரைமட்டத்திலிருந்து சுவர்கள் எழுப்பும் பணி புதிதாகத் தொடங்கப்பட்டு தற்சமயம் வேலை முழுமூச்சில் நடைபெற்று வருகிறது.

**21. வேலூர் நகராட்சி புதிய குடிநீர்த் திட்டப்பணி தொடக்கப் படாததால் மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து**

உறுப்பினர்: **திரு. சி. ஞானசேகரன்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. கோ.சி. மணி**
*(ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)*

**அறிக்கை**

வேலூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு ரூ.953.31 இலட்சங்கள் மதிப்பீட்டில் அரசு ஆணை எண் 85 ஊ.வ. (குவ) நாள்: 24-3-1998-ல் அரசு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்ட மதிப்பீட்டிற்கான நீராதாரமாக பாலாற்றில் நீர் உறிஞ்சு கிணறுகள் அமைக்க வேலூர்-சித்தூர் பாலத்திற்கும், பூட்டுத்தாக்கு தரைப்பாலத்திற்கும் இடைப்பட்ட பாலாற்றுப் படுகையில் நீர் உறிஞ்சு கிணறுகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. மேற்படி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்காகத் தேர்வு செய்யப்பட்ட நீராதாரப் பகுதியில் வேலூர் நகராட்சி மற்றும் வேலூர் கிருத்துவ மருத்துவமனைக்

கல்லூரியின் கழிவுநீர் பாலாற்றில் தூய்மைப்படுத்தப்படாமல் நேரடியாகவே கலப்பது கண்டறியப்பட்டது. இதனால் நீராதாரத்திற்காக பாலாற்றில் தேர்வு செய்யப்பட்ட இடம் மாசு அடைந்திருப்பது கண்டறியப்பட்டது.

எனவே, வேலூர் நகராட்சிக்கும், சத்துவாச்சாரி பேரூராட்சிக்கும் பொதுவாக ஒரு நீராதாரம் கண்டறிவதற்காக ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்திற்கான மாற்று ஆதாரம் பாலாற்றுப் படுகையில் இல்லாத காரணத்தால் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நீராதாரம் பகுதியில் வேலூர் நகராட்சியின் கழிவுநீரும், இருத்துவ மருத்துவமனையின் கழிவுநீரும் நேரடியாகப் பாலாற்றில் கலப்பதைத் தடுத்து நிறுத்தும் பட்சத்தில் இவ்விடத்தில் நீராதாரம் அமைக்க ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளலாம்.

இந்நிலையில் பாலாற்றில் இறையான்காடுக்கும், பள்ளிகொண்டா பகுதிக்கும் இடையில் வேலூர் நகராட்சிக்கும், சத்துவாச்சாரி பேரூராட்சிக்கும் பொதுவாக குடிநீர்த் திட்டம் வகுப்பதற்கான நீராதாரம் கண்டறிய நிலநீர் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தக்க நீராதாரம் கண்டறிந்த பின்னர் வேலூர் நகருக்கும் சத்துவாச்சாரி பேரூராட்சிக்கும் சேர்த்து ஒரு குடிநீர்த் திட்டம் தயாரிக்கப்படும். மாசற்ற தகுந்த நீராதாரம் தோற்றுவிக்கப்பட்ட பின்பே வேலூர் நகராட்சியின் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயலுக்கு எடுத்துக் கொள்ள முடியும் எனக் கருதப்படுகிறது.

**22. சென்னைப் பெருநகர குடிநீர் வடிகால் வாரியம், கொளத்தூர், நீரேற்று நிலையம் கட்டுவதிலும், ஜெட்ராடிங் இயந்திரங்கள் வாங்கியதிலும் நடந்த முறைகேடுகள் குறித்து**

உறுப்பினர்: **திரு. அ. செல்லக்குமார்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. கோ.சி. மணி**
(ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)

**அறிக்கை**

I. *கொளத்தூர் நீரேற்று நிலையம் கட்டுவது சம்பந்தமாக:*

கொளத்தூர் குடிநீர் நீரேற்று நிலையம் கட்டும் பணி உலக வங்கி உதவியுடன் செயலாக்கப்படும் இரண்டாவது சென்னைக் குடிநீர் வழங்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இப்பணியின் திட்ட மதிப்பீடு



சுமார் ரூ.10.81 கோடி ஆகும். இத்திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுவதால் இத்திட்டத்தின் வடிவமைப்பு, ஒப்பந்த ஆவணங்கள் ஆகியவற்றிற்கு உலக வங்கியின் ஒப்புதல் பெற வேண்டும். அதன்படி, இத்திட்டத்தின் வடிவமைப்பு, ஒப்பந்த ஆவணங்களுக்கு உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு, சென்னைக் குடிநீர் வாரியம் 1997-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியது. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும் போது ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

2. இந்த ஒப்பந்தத்தில் ஆறு நிறுவனங்கள் பங்கேற்றன. அந்த ஆறு நிறுவனங்களில் திருவாளர்கள் கிர்லோஸ்கர் L-1 நிலையிலும், திருவாளர்கள் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் L-2 நிலையிலும், திருவாளர்கள் ஐ.வி.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன் L-3 நிலையிலும் இருந்தனர். ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிடப்பட்டிருந்த தகுதி அடிப்படைகள் பரிசீலிக்கப்பட்டபோது, திருவாளர்கள் கிர்லோஸ்கர் மற்றும் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் ஆகிய இரு நிறுவனங்களைத் தவிர மற்ற நான்கு நிறுவனங்களான திருவாளர்கள் ஐ.வி.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன் லிட்., சுபாஸ் புராடக்ட்ஸ் அன்ட் மார்க்கெட்டிங் லிட்., பாட்லிபாய் லிட்., மற்றும் அருண் இன்ஜினியரிங் என்டர்பிரைசஸ், ஆகிய நிறுவனங்கள் தகுதி அடிப்படைகளைப் பூர்த்தி செய்திருந்தனர். திருவாளர்கள் கிர்லோஸ்கர் மற்றும் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் ஆகிய இரு நிறுவனங்களும் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டிருந்த தகுதி அடிப்படைகளில் ஒன்றான கீழ்நிலைத் தொட்டி கட்டியதற்கான தகுதியைப் பூர்த்தி செய்யவில்லை என்று தெரிய வந்தது. ஆகையால், அவர்களுடைய ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்புடையது அல்ல எனக் கருதப்பட்டது. மீதமுள்ள நான்கு ஏற்புடைய ஒப்பந்தப்புள்ளிகளில் திருவாளர்கள் ஐ.வி.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் அளித்த விலை குறைந்ததாக இருந்தது. ஆகவே, திருவாளர்கள் ஐ.வி.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன் அளித்துள்ள ஒப்பந்தம் ஏற்புடைய ஒப்பந்தங்களில் குறைந்த விலை அளித்துள்ள ஒப்பந்தமாக இருந்தது. திருவாளர்கள் ஐ.வி.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன் அளித்த விலைப் புள்ளிகளும், திருவாளர்கள் கிர்லோஸ்கர் அளித்த விலைகளுக்கும் உள்ள விலை வித்தியாசம் ரூ.1,17,38,623.21 இருந்த காரணத்தினால் எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரித்து மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு வாரியம் உலக வங்கியிடம் அனுமதி கோரியது.

3. ஆனால் உலக வங்கி, திருவாளர்கள் கிர்லோஸ்கர் மற்றும் திருவாளர்கள் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் ஆகிய இரு நிறுவனங்களும் கீழ்நிலைத் தொட்டிக்கான தகுதி அடிப்படையைப் பூர்த்தி செய்யவில்லை என்றும், தகுதி அடிப்படையைப் பூர்த்தி செய்த குறைந்த விலை அளித்த திருவாளர்கள் ஐ.வி.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்க்கு அவர்கள் அளித்த விலையிலேயே ஒப்பந்தத்தை அளிக்கலாம் என அறிவுறுத்தியது. மேலும், எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிப்பதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை என உலக வங்கி கூறியுள்ளது எனினும் ஐ.வி.ஆர். நிறுவனம் தாமாகவே முன்வந்து விலை குறைத்து அளித்ததால் அந்தக் குறைந்த விலைக்கு ஐ.வி.ஆர். நிறுவனத்திற்கு பணியை அளிக்க வாரியம் தீர்மானித்து உலக வங்கியின் அனுமதியைக் கோரியது. உலக வங்கியும் ஐ.வி.ஆர். நிறுவனத்திற்கு அவர்கள் ஒப்பந்தத்தில் முதலில் அளித்துள்ள விலையிலேயே ஒப்பந்தத்தை வழங்க அனுமதி அளித்தது. இருப்பினும், வாரியம் ஐ.வி.ஆர் நிறுவனம் தாமாகவே முன்வந்து அளித்த விலைக் குறைப்பை ஏற்று, பணிக்கான ஆணையை ரூ. 10,36,29,739.90 என்ற விலைக்கு வழங்கியது. இந்த விலை திருவாளர்கள் கிர்லோஸ்கர் நிறுவனம் அளித்திருந்த ஒப்பந்தப்புள்ளி விலையான ரூ. 10,36,46,306.00-ஐ விட ரூ. 17,000 குறைவாகும். இதிலிருந்து வாரியமும் அரசும் தரமான ஒப்பந்தக்காரர்களுக்கு குறைந்த விலைப் புள்ளியில் பணிகள் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன என்பது தெரிய வருகிறது.

II-ஜெட்ராடிங் இயந்திரங்கள் வாங்கியது சம்பந்தமாக:

1996-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில மூன்று ஜெட்ராடிங் இயந்திரங்கள் வாங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கையில் இயந்திரங்களில் வோமா (ஜெர்மனி) 1503 மாடல் பம்பு இருக்க வேண்டும் என்றும், ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் நிறுவனங்கள் தாங்கள் கொடுக்கும் இயந்திரத்தின் தன்மையைப் பொறுத்து விலையைக் குறிப்பிட வேண்டுமென்று கூறப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்தப்புள்ளி இணைப்பில் இயந்திரத்தின் மற்ற தொழில் ரீதியான தன்மைகளும் சேர்க்கப்பட்டிருந்தன.

2. இந்த ஒப்பந்தத்தில் திருவாளர்கள் ஐ.பி.டபிள்யு.டி எஸ்.பி.இ. பிரைவேட் லிமிடெட் மற்றும் டாக்டர் அன்ட் கம்பெனி ஆகிய மூன்று நிறுவனங்கள் பங்கேற்றன. இவற்றில் ஐ.பி.டபிள்யு.டி நிறுவனம் தனது ஒப்பந்தப்புள்ளியில் வோமா பம்புடன் இயந்திரம் அளிப்பதாகவும், அதே சமயம் வோமா பம்பு மாடல் 1503 கிடைக்கவில்லையெனில் மேயர் (அமெரிக்கா) பம்பு அளிப்பதாகவும், ஆனால் எதுவானாலும் இயந்திரம் ஒப்பந்தப்புள்ளியில் கூறிய தொழில் ரீதியான அனைத்து தன்மைகளையும் பூர்த்தி செய்யும் எனக் குறிப்பிட்டுள்ளனர். 18-11-1996 அன்று ஒப்பந்தப்புள்ளி குழு இவற்றைப் பரிசீலித்து, ஐ.பி.டபிள்யு.டி நிறுவனம் அளித்த விலையான ரூ. 58,92,900 என்ற விலை எஸ்.பி.இ. நிறுவனம் அளித்த விலையானது ரூ. 77,51,370-ஐ விட குறைவாக இருந்ததால், ஐ.பி.டபிள்யு.டி நிறுவனத்திற்குப் பணிக்கான உத்தரவு வழங்கலாம் எனத் தீர்மானித்தது. இரண்டு நிறுவனங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசத் தொகை ரூ. 19.00 இலட்சம் ஆகும். 25-11-1996 ஆம் தேதி வாரியம் ஒப்பந்தக் குழுவின் பரிந்துரையை ஏற்று, ஐ.பி.டபுள்யு.டி. நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கலாம் என முடிவு செய்து, திருவாளர் எஸ்.ஜி.எஸ். என்ற அகில உலக (இன்டர்நேஷனல்) நிறுவனத்திற்கு இயந்திரங்களை ஆய்வு செய்யவும் நியமனம் செய்ய முடிவு செய்தது. 3-12-1996-இல் ஐ.பி.டபிள்யு.டி நிறுவனத்திற்கு ஆணைகள் வழங்கப்பட்டன. எஸ்.ஜி.எஸ். நிறுவனத்தால் முன் ஆய்வு செய்யப்பட்டு, அவர்களால் அளிக்கப்பட்ட "சரியாக உள்ளது" என்ற சான்றுடன் ஒரு ஜெட்ராடிங் இயந்திரம் 1997-ஆம் ஆண்டு ஜூலையிலும், மீதம் இரண்டு அக்டோபர் 1997-லிலும் வாரியத்தில் பெறப்பட்டன. இயந்திரங்களின் செயலாக்கம் பற்றி மற்றொரு வல்லுநர் குழுவால் ஆய்வு செய்யப்பட்டதில், இயந்திரத்தின் குழாய் (hose) சரியாக வேலை செய்யவில்லை என்று அறிந்ததால் ரூ. 6.00 இலட்சம் நிறுத்தி வைக்கப்பட்டு, மீதித் தொகை மட்டும் அளிக்கப்பட்டது. இயந்திரங்கள் 1997 ஜூலையிலும், அக்டோபரிலும் பெறப்பட்ட போதும் கூட 1998 பிப்ரவரியில்தான் தொகை அளிக்கப்பட்டது. தற்போது நிறுவனம் குழாய்களை மாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது.

3. 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் மறுபடியும் பத்து எண்ணிக்கை கொண்ட ஜெட்ராடிங் மற்றும் சக்ஷன் இயந்திரங்கள் வாங்க வாரியம் ஒப்பந்தப்புள்ளி கோரியது. ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் வோமா (ஜெர்மனி) அல்லது மேயர் (அமெரிக்கா) பம்பு, இதில் எதுவானாலும் கொடுக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்ததில் நான்கு நிறுவனங்கள் பங்கேற்றன. இவற்றில் மிகவும் குறைந்த விலை அளித்த ஐ.பி.டபிள்யு.டி. நிறுவனத்திற்கு பத்து இயந்திரங்களுக்கான ஆணைகள் 15-9-1997 அன்று வழங்கப்பட்டன.

4. மூன்றாவது முறையாக 30 ஜெட்ராடிங் இயந்திரங்கள் வாங்க வாரியம் 26-12-1997 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியது. அந்த ஒப்பந்தத்தில் நான்கு நிறுவனங்கள் பங்கேற்றன. அவற்றில் குறைந்த விலையான ரூ. 5,89,83,328-க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்த திருவாளர்கள் டி.டி.ஜி. நிறுவனத்துடன் வாரியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மேலும் பேச்சுவார்த்தை நடத்தி ரூ. 5,87,79,900 என்ற விலைக்கு 17-3-1998 அன்று ஆணைகள் வழங்கப்பட்டன. எந்த நிறுவனத்திற்கும் பாரபட்சம் காண்பிக்காமல் விலையின் அடிப்படையிலும், இயந்திரத்தின் தரத்தின் அடிப்படையிலும்தான் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 23. பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியம் 12-8-1997 முதல் 9-4-1998 முடிய 9 மாதங்களாக எந்த விதமான தீர்மானங்களும் நிறைவேற்றப்படாமல் நிர்வாகம் முற்றிலுமாக ஸ்தம்பித்து செயல்படாதது குறித்து

உறுப்பினர்: **திரு. இரா. தாமரைக்கனி**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. கோ.சி. மணி**

(ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)

### அறிக்கை

1. வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியக் குழுவில், குழுத் தலைவரையும் சேர்த்து மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 21 ஆகும். வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 12-8-1997 முதல் 29-4-1998 முடிய 5 ஒன்றியக்குழு கூட்டங்கள் நடைபெற்று உள்ளன. 12-8-1997 காலை 10-30 மணிக்கு ஒன்றியக் குழு கூட்டம் குழுத் தலைவர் திரு. வே. ராமலிங்கம் தலைமையில் நடைபெறும் என நிகழ்ச்சி நிரல் அனுப்பப்பட்டது. ஆனால் குழுத் தலைவர் மேற்படி கூட்டத்திற்கு வருகை தராததால் கூட்டம் துணைத்தலைவர் திரு. அ. ராமசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் 19 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். 42 பொருள்கள் வைக்கப்பட்டன. கலந்து கொண்ட உறுப்பினர்கள் 19 பேரும் பொருள்கள் அனைத்தையும் நிராகரித்து விட்டனர்.

2. பின்னர் 3-10-1997 அன்று அடுத்த குழுக் கூட்டம் ஒன்றியக் குழு தலைவர் தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் ஏறகெனவே நிராகரிக்கப்பட்ட 42 பொருள்களையும் சேர்த்து 71 பொருள்கள்





கொண்டு வரப்பட்டன. இக்கூட்டத்திற்கு வருகை தந்த 17 உறுப்பினர்களில் 12 உறுப்பினர்கள் எந்தப் பொருளும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூடாது எனத் தெரிவித்ததை அடுத்து கூட்டம் நடைபெறாமல் முடிவுற்றது.

3. தொடர்ந்து 27-11-1997-ம் நாள் அடுத்த குழுக் கூட்டம் குழுத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஏற்கெனவே வைக்கப்பட்ட பொருள்களுடன் 72 முதல் 98 வரை பொருள்கள் சேர்க்கப்பட்டு, குழுவின் அனுமதிக்கு வைக்கப்பட்டன. ஒன்றியக் குழு தலைவருடன் 18 ஒன்றியக் குழு உறுப்பினர்கள் வந்தனர். அவர்களில் பத்து உறுப்பினர்கள் தீர்மானத்தை நிராகரித்தனர். ஒன்பது உறுப்பினர்கள் உட்கார்ந்து இருந்தனர். பெரும்பான்மையான உறுப்பினர்களால் அனைத்துப் பொருள்களும் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

4. பின்னர், 22-1-1998 அன்று குழுத் தலைவர் தலைமையில் நடைபெற்ற ஒன்றியக் குழுக் கூட்டத்தில், 18 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்திலும் பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஆதரவு இல்லாததால் முந்தைய கூட்ட பொருள்களுடன் சேர்த்து 99 முதல் 137 வரை அனைத்துப் பொருள்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

5. கடைசியாக 23-3-1998 அன்று நடைபெற்ற ஒன்றியக் குழு கூட்டத்தில் தலைவர் உட்பட 20 உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர். மேற்படி கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் 12-8-1997, 3-10-1997, 27-11-1997 மற்றும் 22-1-1998 தேதிகளில் நடைபெற்ற கூட்டங்களில் நிராகரிக்கப்பட்ட 137 பொருள்களையும் விவாதித்து, அங்கீகரிப்பது எனத் தெரிவிக்கப்பட்டது. அன்று நடைபெற்ற கூட்டத்தில் அனைத்து பொருள்களும் பெரும்பான்மை உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்டதாகவும், ஆனால் ஒன்றியக்குழுத் தலைவர் அனைத்து பொருள்களும் அங்கீகரிக்கப்பட்டதாக கூட்ட நடவடிக்கை பதிவேட்டில் குறிப்பு எழுதியிருப்பதாகவும், இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் 2-வது வார்டு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் உடையார் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தந்தி அனுப்பியிருந்தார். அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒன்றியக் குழுத் தலைவரிடம் 1994-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 202(1)-ன்கீழ் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

[1998 மே 30

6. 1996-97ம் ஆண்டு 10-வது நிதிக்குழு மானியம் ரூ.10.00 இலட்சம் வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுமதிக்கப்பட்டு, அதற்காக ஒன்றியக் குழுவால் தனது தீர்மான எண் 11, நாள் 14-2-1997 மூலம் தேர்வு செய்யப்பட்ட வேலைகளுக்கு நிர்வாக அனுமதி மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட்டுள்ளது அனுமதிக்கப்பட்ட வேலைகளுக்கு ஊராட்சி ஒன்றிய ஆணையரால் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 2-8-1997-ல் உதவி கோட்டப் பொறியாளரால் குறைந்த விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒன்றியக் குழுவின் அனுமதிக்கு முறையே 12-8-1997 மற்றும் 3-10-1997-ல் நடைபெற்ற ஒன்றியக் குழுக் கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டது. அன்றைய தினங்களில் வைக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டதால் அங்கீகரிக்கப்பட்ட குறைந்த விலைப்புள்ளியை அனுமதித்து, ஊராட்சி ஒன்றியங்களின் ஆய்வாளர் என்ற முறையில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஊரக வளர்ச்சி இயக்குநரிடம் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, உதவி பொறியாளர் அங்கீகரித்த கீழே கண்ட வேலைகளுக்கு பெறப்பட்ட குறைந்த விலைப்புள்ளிகளுக்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 203-ன்கீழ் ந.க.ப.அ.9/4866/97, நாள் 23-3-1998 ஆம் தேதிய மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகளில் உதவிக் கோட்டப்பொறியாளர்கள் அங்கீகரித்த வேலைகளைத் தொடங்க உத்தரவிட்டார் :

| | | |
|---|---|---|
| 1. | அரசலூர்-எசனை தார்சாலை அமைத்தல் கி.மீ. 1/0 1/0-1/6 | ரூ.1,35,000 |
| 2. | அரசலூர்-எசனை தார்சாலை அமைத்தல் கி.மீ. 1/6-2/0 | ரூ.90,000 |
| 3. | அரசலூர்-எசனை தார்சாலை அமைத்தல் கி.மீ.2/0-2/6 | ரூ.1,35,000 |
| 4. | என்றயூர்-பொன்னகரம் தார்சாலை அமைத்தல் கி.மீ.0/0-0/6 | ரூ.1,35,000 |
| 5. | என்றயூர்-பொன்னகரம் தார்சாலை அமைத்தல் கி.மீ.0/6-1/0 | ரூ.90,000 |
| 6. | கிருஷ்ணாபுரம்-அன்னிமங்கலம் தார்சாலை அமைத்தல் கி.மீ.2/4-3/0 | ரூ.1,35,000 |



1998 மே 30]

| | | |
|---|---|---|
| 7. | பாண்டகப்பாடி-மாவிலங்கை தார்சாலை அமைத்தல் கி.மீ.2/6-3/0 | ரூ.90,000 |
| 8. | பாண்டகப்பாடி-மாவிலங்கை தார்சாலை அமைத்தல் கி.மீ. 3/0-3/6 | ரூ.1,35,000 |
| 9. | உடும்பியம்-கள்ளப்பட்டி தார்சாலை அமைத்தல் கி.மீ.0/8-ல் தடுப்புச்சுவர் கட்டுதல் | ரூ.55,000 |
| | கூடுதல் | ரூ.10,00,000 |

7. கீழ் கண்ட பள்ளிக் கட்டடங்கள் மராமத்துப் பணிகளுக்குரிய தீர்மானங்களும், குழு உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்டதால் ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 203-ன்படி ந.க.ப.அ.5/14924/97/நாள் 12-1-1998 தேதிய செயல்முறைகளில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது :

| | | |
|---|---|---|
| (1) | திருவாரந்துறை பள்ளிக் கட்டட மராமத்துப் பணி | ரூ.30,000 |
| (2) | வெங்கலம் பள்ளிக் கட்டட மராமத்துப் பணி | ரூ.30,000 |
| (3) | முகமது பட்டினம், பள்ளிக் கட்டட மராமத்துப் பணி | ரூ.10,000 |
| | கூடுதல் | ரூ.70,000 |

மேலும் 1997-98-ம் ஆண்டிற்கான பத்தாவது நிதிக்குழு மானியத்தின் கீழ் எடுக்கப்பட்டு ஒன்றியக் குழுவின் ஒப்புதல் பெற இயலாத கீழ்க்காணும் குடிநீர் வேலைகளையும் எடுத்துச் செய்ய பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 20-3-1998 தேதியிட்ட செயல்முறை எண்.ப.அ.1/01419/ 98-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1. | கண்ணப்பட்டியிலில் புதிய திறந்தவெளிக் குடிநீர்க் கிணறு வெட்டுதல் | ரூ.3.20 இலட்சம் |
| 2. | அரசலூரில் புதிய திறந்தவெளிக் குடிநீர்க் கிணறு வெட்டுதல் | ரூ.3.20 இலட்சம் |

[1998 மே 30

8. மேற்கண்டவாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட பணிகளில் பள்ளிக் கட்டட மராமத்துப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டிருப்பதாகவும், இதர பணிகள் நடைபெற்று வருவதாகவும் ஊராட்சி ஒன்றிய ஆணையர் தெரிவித்துள்ளார்.

9. மேலும், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய நியமனக் குழு உறுப்பினரைத் தெரிந்தெடுப்பதற்காகவும், 1998-99-ம் ஆண்டுக்கு வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் வேலைகளைத் தேர்வு செய்வதற்காகவும் 1998-99-ம் ஆண்டுக்கு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் 15% வேலைகள் தேர்வு செய்வதற்காகவும், 12-5-1998 அன்று ஒன்றியக் குழுவின் விசேட கூட்டங்கள் முறையே காலை 11-00 மணி, பிற்பகல் 1-30 மணி மற்றும் பிற்பகல் 4-30 மணிக்கு நடைபெறும் என ஒன்றியக் குழுத் தலைவரால் அனைத்து உறுப்பினர்களுக்கும் நிகழ்ச்சி நிரல் அனுப்பப்பட்டது. ஆனால் ஒன்றியக் குழுத் தலைவர் 12-5-1998-ம் தேதி நடைபெற வேண்டிய அனைத்துக் கூட்டங்களையும் காரணம் எதுவும் குறிப்பிடாமல் ஒத்தி வைத்து, 11-5-1998 அன்று அனைத்து ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களுக்கும் எழுத்து மூலமாகத் தெரியப்படுத்தியுள்ளார். எனவே வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 12-5-1998 அன்று கூட்டம் நடைபெறவில்லை. வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் காரணம் எதுவும் குறிப்பிடாமல் கூட்டத்திற்கு முதல் நாளே கூட்டத்தை ஒத்திவைத்திருப்பது விதிமுறைகளுக்குப் புறம்பான செயலாகும்.

10. தமிழ்நாடு 1994-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 203-ன்படி ஊராட்சிகள் ஆய்வாளர் என்ற முறையில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரது தலைமையில் வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய நியமனக் குழு உறுப்பினர் தேர்வு செய்ய ஊராட்சி ஒன்றியக் குழுக் கூட்டம் 29-5-1998 அன்று பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறவுள்ளது. நடைபெற உள்ள கூட்டத்தில் கலந்து கொள்ள ஒன்றியக் குழு தலைவர், ஒன்றியக் குழு துணைத் தலைவர் மற்றும் ஒன்றியக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

11. எனவே வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியக் குழுவின் தீர்மானங்கள் நிறைவேற்றப்படாத சூழ்நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஆய்வாளர் என்ற முறையில் நிர்வாகம் ஸ்தம்பித்துவிடாமல் அத்தியாவசியப் பணிகள் அனைத்தும் தொய்வின்றி நடைபெற அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.



1998 மே 30]

**24 திருவண்ணாமலை மாவட்டம், மேல்செங்கம் கிராமத்தில் உள்ள மத்திய மாநில அரசின் விதைப்பண்ணையில் 250 நிரந்தர ஊழியர்களுக்கும் ஆயிரம் தினக்கூலி தொழிலாளர்களுக்கும் ஓராண்டு காலமாகச் சம்பளம் வழங்கப்படாமல் அவர்களிடையே ஏற்பட்டிருக்கும் நிலை குறித்து**

உறுப்பினர்: **திரு. டி. மணி**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்**
**(வேளாண்மைத் துறை)**

**அறிக்கை**

திருவண்ணாமலை மாவட்டம் மேல்சங்கம் கிராமத்திலுள்ள மத்திய மாநில விதைப்பண்ணை தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இயங்கவில்லை. இப்பண்ணை இந்திய மாநில பண்ணைக் கழகத்தின் கீழ் செயல்படுகிறது. புதுடெல்லியிலுள்ள இப்பண்ணைக் கழகம் அளித்துள்ள தகவல்களின்படி இப்பண்ணையில் 154 நிரந்தர ஊழியர்களும், 900 தினக்கூலி தொழிலாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு டிசம்பர் 1997 முதல் மார்ச் 1998 வரை சம்பளம் வழங்கப்படவில்லை. இப்பண்ணை தொடர்ந்து பல ஆண்டுகளாக நஷ்டத்தில் இயங்கி வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் இப்பண்ணையில் ஏற்பட்ட நஷ்டம் பின் வருமாறு:-

| வருடம் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| 1992-93 | 120.99 |
| 1993-94 | 94.95 |
| 1994-95 | 101.56 |
| 1995-96 | 45.31 |
| 1996-97 | 77.59 |

31-3-1997 வரை கூடுதல் இழப்பு ரூ.766.75 இலட்சம் ஆகும். இதனால் இந்திய மாநில பண்ணைக் கழகம் இதர பண்ணைகளிலிருந்து இப்பண்ணைக்கு நிதி ஒதுக்கீடு செய்து வந்தது. ஆனால் 1996-97-ல் இந்திய மாநில பண்ணைக் கழகம் ரூ.2.98 கோடி இழப்பிற்கு உள்ளானதால் பிற பண்ணைகளிலிருந்து செங்கம், மத்திய மாநில விதைப்பண்ணைக்கு நிதி மாற்றம் செய்ய இயலாத காரணத்தாலும்

சம்பளம் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது. எனினும் நிலுவைத் தொகையை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், 17-4-1998 அன்று ஊதியம் வழங்க ரூ.5.00 இலட்சம் இப்பண்ணைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் புதுடெல்லியிலுள்ள இந்திய மாநில பண்ணைக் கழகத்தின் தலைமை நிர்வாக அலுவலர் தெரிவித்துள்ளார்.

**25. வேளாண்மைத்துறையில் 118/95ஏஏ என்ற அரசாணையில் பாதிக்கப்பட்டுள்ள வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டயதாரர்கள் 22-4-1998 அன்று சென்னையில் அறவழிக் கிளர்ச்சியில் ஈடுபட்டபோது 150 பேர் வரை கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள அதிருப்தி நிலை குறித்து**

*உறுப்பினர்:* **திரு. நா. பெரியசாமி**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்**
(வேளாண்மைத் துறை)

**அறிக்கை**

(1) வேளாண்மைத் துறையில் வயல் விளக்க அலுவலர்களாகப் பணிபுரிந்து வருபவர்களுள் தகுதியுள்ள வயல் விளக்க அலுவலர்களுக்கு 21 நாள் சிறப்புப் பயிற்சி அளித்து, அவர்கள் அனைவரையும் படிப்படியாக வேளாண்மை உதவி அலுவலர்களாகப் பதவி உயர்த்தி, வருங்காலத்தில், வயல் விளக்க அலுவலர் என்ற பதவியின்றி விரிவாக்க அடிப்படை மட்டத்தில் வேளாண்மை உதவி அலுவலர் என்ற பதவி மட்டுமே இருக்கும் வகையில் அரசு கொள்கை முடிவு எடுத்து, அதன்படி செயல்பட அரசு ஆணை எண் 457, வேளாண்மைத் துறை (வே.நி.5) நாள் 28-7-1993-ல் உத்திரவிட்டது.

1-10-1992-ல் அரசு நிதித் துறைச் செயலரால் நடத்தப்பட்ட வேளாண்மைத்துறை ஜி-பேக் (Ze-bag) ஆய்வுக் கூட்டத்தில், விவசாயப் பெருமக்களுக்கு துறை தொழில் நுட்பங்கள் நன்கு தெரிந்துள்ளதால், துறையின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 16,615 என்பதனைக் குறிப்பிட்டுள்ள காலக்கெடுவுக்குள் 10,000 ஆகக் குறைக்க முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் தொடர்பாக வேளாண்மைத் துறையில் அடிப்படை விரிவாக்கப் பணியாளர் பணி வேளாண்மை உதவி அலுவலராக இருக்க வேண்டுமென முடிவெடுத்து, வயல் விளக்க அலுவலர்களையும் சிறப்புப் பயிற்சிக்கு அனுப்பி வேளாண்மை உதவி



அலுவலராக மேல்நிலைப்படுத்த வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து, இரு பதவிகளிலும் ஒருங்கிணைந்த உடன் வேளாண்மை உதவி அலுவலர் பதவியின் எண்ணிக்கை 4,500 என வரும்வரை காலிப் பணியிடங்களை நிரப்பக் கூடாது என முடிவு மேற்கொள்ளப்பட்டது.

3. உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் வயல் விளக்க அலுவலர்களின் ஒருங்கிணைந்த பதவிகளின் எண்ணிக்கையை 6,295-லிருந்து 4,500 ஆகக் குறைக்க 1-10-1992 அன்று நிதிச் செயலர் அவர்களால் கூட்டப்பட்ட கூட்டத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதனால் வேளாண்மை விரிவாக்கப் பணிகட்கு 3,700 உதவி வேளாண்மை அலுவலர்களும், பண்ணை பராமரிப்புப் பணிகட்கு 800 உதவி வேளாண்மை அலுவலர்கள் எனவும், 4,500 உதவி வேளாண்மை அலுவலர்கட்கு மிகாமல் பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

4. மேற்காணும் ஆய்வுக்கூட்டத்தில். மேற்கொண்ட முடிவுகளைத் தொடர்ந்து அரசு ஆணை 457, வேளாண்மைத் துறை, நாள் 28-7-1993 வெளியிடும் பொழுது கீழ்க்காணும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டன:-

(1) வயல் விளக்க அலுவலர் பதவிக்கு இனி வருங்காலத்தில் நியமனம் எதுவும் கிடையாது.

(2) தற்போது உள்ள வயல் விளக்க அலுவலர்கள் அனைவரும் வேளாண்மை உதவி அலுவலர்களாகப் பதவி உயர்த்தப்பட்ட பிறகு வேளாண்மை உதவி அலுவல்களின் மொத்தப் துறையில் உள்ள வேளாண்மை இயக்குநர் பணியிடங்கள் 4,500-ஆக மட்டுமே உள்ளதை வேளாண்மை இயக்குநர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

ஆனால், ஏற்கெனவே தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்கச் சார்புப் பணிக்கான சிறப்பு விதிகளில் இவ்வாறு வயல் விளக்க அலுவலர்களை வேளாண்மை உதவி அலுவலர்களாக பதவி உயர்த்த வழிவகை இல்லாமையாலும், தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாய வழக்கு எண்.ஓ.ஏ.எண்.5237/93-ல் வழங்கப்பட்ட நெறிமுறையின் அடிப்படையில் அரசு ஆணை எண் 118, வேளாண்மைத் துறை, நாள் 7-3-1995 மற்றும் அரசு ஆணை எண் 361, வேளாண்மைத் துறை, நாள் 30-6-1995-ன் மூலம் வேளாண்மை உதவி அலுவலர் பதவியினை நேரடி நியமனம் மூலம் நிரப்பலாம் என்ற விதியினை நீக்கியதுடன், வயல் விளக்க அலுவலரை வேளாண்மை உதவி அலுவலராகப் பதவி உயர்த்தவும் வழிவகை செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

[1998 மே 30

5. இச்சூழ்நிலையில் வயல் விளக்க அலுவலர் பதவிக்கு இனி வரும் காலத்தில் நியமனம் ஏதும் செய்ய இயலாது. விரிவாக்க அடிப்படை மட்டத்தில் உதவி வேளாண்மை அலுவலர் பதவி மட்டுமே இருக்கும். மேலும், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டயதாரர்களுக்கு அவர்கள் பட்டயக்கல்வி பயில்வதற்கு முன்பு அரசுத் துறையில் பணி வழங்கப்படும் என்ற உத்தரவாதம் எதுவும் வழங்கப்படவில்லை. எனினும், அரசாணை நிலை எண் 118, வேளாண்மை, நாள் 7-3-1995-ன்படி புதிய பதவிகள் நியமிக்க வாய்ப்பில்லை. இது பற்றி அரசு பரிசீலிக்கும்.

**26. தருமபுரி ஒன்றியத்தில் 1992-ல் நிலத்தடி நீர் குறைவாக உள்ளது என்று அப்பகுதியை 'டார்க் ஏரியா' என்று அரசு அறிவித்து, அதன்பின் 5 ஆண்டுகள் ஆகியும், மீண்டும் மறு ஆய்வு செய்யாததால், அப்பகுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள விவசாயிகள் ஊராட்சி மூலம் வழங்கும் இலவச கிணறுகள் (ஜீவன்தாரா கிணறு திட்டம்) பெற முடியாமல் இருக்கும் அவலம் குறித்து**

*உறுப்பினர்:* **திரு. கு. மனோகரன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. துரைமுருகன்**
(பொதுப்பணித் துறை)

**அறிக்கை**

தருமபுரி ஒன்றியத்தில் 1992 நிலநீர் இருப்பு, எடுப்பு கணக்கீட்டுப்படி கருமை நிறப் பகுதியாக உள்ளது. கருமை நிறப் பகுதியில் விரிவான ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. தருமபுரி ஒன்றியத்தில் சில அறிக்கைகள் நபார்டு (NABARD) ஒப்புதலுக்கு 3-3-1997-ல் அனுப்பப்பட்டு, குறிப்புரைகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கிடையில் மத்திய அரசின் நீர்வளத் துறை, நிலநீர் கணக்கீடு செய்ய 1997ஆம் ஆண்டு இறுதியில் ஒரு குழு அமைத்து அதன் பரிந்துரையின்படி புதிய மாதிரி நிலநீர் கணக்கீடு செய்யப்பட்டு வருகிறது. புதிய முறையில் மாதிரி நிலநீர் கணக்கீடுகளை ஐந்து ஒன்றியங்களுக்குச் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த மாதிரிக் கணக்கீடுகளை இத்துறையும், மத்திய அரசின் நிலநீர் வாரியமும் (C.G.W.B.) இணைந்து செய்து வருகின்றன. இந்த மாதிரிக் கணக்கீடுகள் மத்திய அரசின் நிலநீர் வாரியத்தின் மூலம் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும். மத்திய அரசின் ஒப்புதலின் பேரில் தமிழகத்தில் உள்ள மற்ற அனைத்து ஒன்றியங்களுக்கும் புதிய கணக்கீடுகள் முறையில்



1998 மே 30]

நிலநீர் இருப்பு, எடுப்பு அறிக்கைகள் தயார்செய்யப்படும். ஜீவன்தாரா கிணறு திட்டமானது ஆதிதிராவிடர்களுக்கு மானிய முறையில் கிணறு வெட்ட நடைபெறும் திட்டமாகும். இப்பணிக்கு ஏற்படும் காலதாமதத்தைக் கருத்தில் கொண்டு தற்சமயம் பழைய கணக்கீடுகள் முறையில் அனைத்து ஒன்றியங்களுக்கும் 31-12-1996-ன் படி நிலநீர் இருப்பு, எடுப்பு கணக்கீடுகள் செய்து நபார்டுக்கு (NABARD) அனுப்பிவைக்கப்பட்டு, நபார்டு ஒப்புதலின்பேரில் ஒன்றியங்கள் கருமை, சாம்பல், வெள்ளை பகுதிகளாக வகைப்படுத்தப்படும். இப்பணி மார்ச் மாதம் 1999-ல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தருமபுரி ஒன்றியப்பகுதியில் இப்பணி முடிக்கப்பட்டு கருமைப் பகுதியானது சாம்பல் அல்லது வெண்மைப் பகுதியாக மாற்றமடைந்து உள்ளதா என அறியப்படும்.

**27. வேலூர் மாவட்டத்தில் காவேரிப்பாக்கம் ஏரி, சதுப்பேரி தூர் வாரும் பணி செய்யப்படாததால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.**

*உறுப்பினர்:* **திரு. சி. ஞானசேகரன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. துரைமுருகன்**
(பொதுப்பணித் துறை)

**அறிக்கை**

வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டத்திலுள்ள காவேரிப்பாக்கம் ஏரி மற்றும் இணைப்புக் கால்வாயைச் சீரமைக்கும் பணிக்கு, உலக வங்கியின் நிதியுதவி பெற்று, ரூ. 68.50 இலட்சத்தில் பணியை மேற்கொள்ள அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டபின் விரைவில் பணி மேற்கொள்ளப்படும்.

2. வேலூர் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள சதுப்பேரி ஏரியை தூர் வாருவதற்கு ரூ.10 இலட்சம் செலவில் பணியை மேற்கொள்ள அரசின் நிர்வாக ஒப்புதல் 9-9-1997-ல் வழங்கப்பட்டுள்ளது. பணியை மேற்கொள்ள வேண்டிய ஒப்பந்ததாரரும் முடிவு செய்யப்பட்டுவிட்டது. தற்போது ஏரியில் தண்ணீர் உள்ளதால் பணியை மேற்கொள்ள இயலவில்லை. ஏரியில் தண்ணீர் குறைந்ததும் தூர் வாரும் பணி மேற்கொள்ளப்படும்.

[1998 மே 30

**28. வேலூர் தொகுதி, வேலூரிலிருந்து காட்பாடிக்குச் செல்ல புதிய பாலம் அமைக்கக் கோரி மக்கள் போராடி வருவதால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து**

*உறுப்பினர்:* **திரு. சி. ஞானசேகரன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்**
(நெடுஞ்சாலைத் துறை)

**அறிக்கை**

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள பாலம் கடலூர்-சித்தூர் சாலை கி.மீ. 192/0-6-ல் அமைந்துள்ளது. 1996 வரை பாலாற்றின் இப்பாலத்தில் மேல்படுகையில் அமைந்திருந்த செங்கல் வளைவு பாலத்தின் வழியே மெதுவாகச் செல்லும் வாகனங்களும், இலகுரக வாகனங்களும் சென்று கொண்டு வந்திருந்தன. 1996-ல் ஏற்பட்ட பெருமழை, வெள்ளத்தினால் இச்செங்கல் வளைவுப்பாலம் சீரமைக்க இயலாத அளவிற்கு மிகவும் பழுதடைந்து விட்டது. எனவே இப்பாலத்தில் சென்று கொண்டு இருந்த அனைத்து வாகனப் போக்குவரத்தும் தற்போதும் இப்பாலத்தின் வழியாகவே சென்று கொண்டு வந்திருப்பதால் மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இச்சாலையிலான போக்குவரத்துச் செறிவை கணக்கிட்டு இப்பாலத்தில் இருபுறமும் உள்ள சாலைப்பகுதிகள் தற்போது நான்கு வழித்தலமாக அகலப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விடத்தில் புதிய பாலம் ஒன்று அமைப்பதற்கு அணுகு சாலையை அமைத்தல், நிலம் கையகப்படுத்துதல் உட்பட தோராயமாக ரூ.2,500 இலட்சம் தேவைப்படும்.

இப்பணி அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. ஏற்கெனவே இவ்விடத்தில் அமைந்துள்ள பாலம் நல்ல நிலையில் உள்ளதாலும் அரசின் நிதிப் பற்றாக்குறை காரணமாக இப்பணியினை அண்மைக்காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகளோ அவசியமோ இல்லை.



1998 மே 30]

**29. நாகப்பட்டினம், செல்லூரில் சிக்கல் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நஞ்சை நிலத்தை அரசு விதைப் பண்ணை என்ற பெயரால் குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்யாமல் தரிசாகக் கிடக்கும் நிலங்களை நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கக் கேட்டல் குறித்து**

*உறுப்பினர்:* **திரு. டி. மணி**

*அமைச்சர்:* **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்**
(தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை)

**அறிக்கை**

நாகை மாவட்டம் மற்றும் வட்டம் சிக்கல் அருள்மிகு நவநீதேசுவரசாமி கோயில் ஒரு முதல்நிலை திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிர்வாகம், செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு நாகை வட்டம், செல்லூர் கிராமத்தில் 268.10 ஏக்கர் நஞ்சை நிலமும், 23.48 ஏக்கர் புஞ்சை நிலமும் உள்ளது. இந்நிலங்கள் அரசு ஆணை 3553 நாள் 21-12-1963-ன்படியும், ஆணையர் ந.க. 15216/78/ஜி2 நாள் 5-7-1978-ன்படியும் மாநில பண்ணைக் கழகத்திடம் குத்தகை சாகுபடிக்கு ஒப்படைக்கப்பட்டு, பிறகு மாநில பண்ணை கழகம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி நிலங்கள் தமிழ்நாடு அரசு விதைப் பண்ணையிடம் மாநில பண்ணைக் கழகம் மூலமாக நேரடியாக ஒப்படைக்கப்பட்டு, பசலி 1392 முதல் குத்தகையில் தொடர்ந்து இருந்து வருகிறது. 1405ஆம் பசலி முடிவில் குத்தகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

குத்தகை விபரம்

நஞ்சை ஏக்கர் 1-க்கு ரொக்கம் ரூ.125

நஞ்சை ஏக்கர் 1-க்கு நெல் குவி.1.11

புஞ்சை ஏக்கர் 23.48-க்கு ரொக்கம் ரூ.2000

மேற்படி நிலத்தின் குத்தகை காலம் 1406ஆம் பசலியுடன் (30-6-1997 முடிய) முடிவடைந்ததால், 1407ஆம் பசலி முதல் 1411ஆம் பசலி முடிய குத்தகை காலத்தை நீட்டிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மஞ்சக்கொள்ளை கிளை 29-4-1998 அன்று விளை நிலங்களை தரிசாகப்

மேபாடும் நிர்வாகத்தைக் கண்டிப்பதாகக் கூறி, சிக்கல் திருக்கோயில் முன்பு உண்ணாவிரதம் இருந்துள்ளனர். உண்ணாவிரதம் எவ்வித அசம்பாவிதமும் இன்றி அன்று மாலை 5.30 மணிக்கு முடிவுற்றுள்ளது. திருக்கோயிலுக்குச் சொந்தமான மேற்கண்ட நிலங்கள் அரசு விதைப் பண்ணையிடம் ஒப்படைக்கப்பட்டு, குத்தகை காலத்தை 1407ஆம் பசலி முதல் 1411ஆம் பசலி முடிய நீட்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில், தற்போது மாற்று ஏற்பாடு செய்ய இயலாத நிலையுள்ளது.

**30 கடலூர் கூட்டுறவு மத்திய வங்கி ஊழியர்களில் தகுதியற்றவர்களுக்கு சீனியாரிட்டி தந்து பதவி உயர்வு அளித்ததால் பாதிக்கப்பட்ட ஊழியர் போராடி வருவது குறித்து**

உறுப்பினர்: **திரு. சி. ஞானசேகரன்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. கா.நா. நேரு**
(உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை)

**அறிக்கை**

கடலூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் பணியாளர்களின் பணிமூப்பு பட்டியல் திருத்தப்பட வேண்டும் என வங்கியின் ஊழியர் மன்றம் சென்னை தொழில் தீர்ப்பாயத்தில் வங்கிக்கு எதிராக வழக்கு (என். ஐ. டி. 46/82) தொடுத்திருந்தது. இவ்வழக்கில் 19-5-1997-ல் தொழில் தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்கியுள்ளது. தொழில் தீர்ப்பாயத் தீர்ப்பில் குறிப்பாக முதுநிலை உதவியாளர் நிலையில் பிரத்தியேக முக்கியத்துவம் கொடுத்து குறைகளைக் களைந்து 1-7-1996-ல் முதுநிலைப் பட்டியல் தயாரித்து பணியாளர் சங்கங்களுக்கு வழங்கிட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வாறு தயாரித்து வழங்கப்பட்ட பட்டியலில் குறைகள் ஏதும் இருப்பின் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தின் மூலம் தக்க நிவாரணம் பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இத்தீர்ப்பின் அடிப்படையில் அனைத்துப் பணியாளர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளையும் வங்கி நிருவாகம் அழைத்துப் பேசியது. பணியில் சேர்ந்த நாளினைக் கருத்தில் கொள்ளாமல் ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட பணிமூப்பு பட்டியலை முறையாகத் தயாரிக்கும் பொருட்டு பணியில் சேர்ந்த நாளை அடிப்படையாகக் கொண்டு முதுநிலைப் பட்டியல் தயாரிப்பது போல், வங்கியிலும் பணியாளர்கள்





பணியில் சேர்ந்த தேதியை அடிப்படையாகக் கொண்டும், தொழிலாளர் தீர்ப்பாயம் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளவைகளைக் கருத்திற் கொண்டும் அதன் அடிப்படையில் ஏற்கெனவே உள்ள முதுநிலைப் பட்டியல்களில் உள்ள குறையை நிவர்த்தி செய்து 1-7-1996-ல் புதிதாக முதுநிலைப் பட்டியல் தயாரித்து அதனை வங்கியின் அனைத்து பணியாளர் சங்கங்களுக்கும் 21-11-1997-ல் வழங்கப்பட்டது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட பணிமூப்பு பட்டியலின் அடிப்படையில் தகுதிவாய்ந்த பணியாளர்களுக்கு 21-11-1997-ல் வங்கி நிருவாகம் பதவி உயர்வு அளித்துள்ளது. வங்கிப் பணியாளர்களில் பணிமூப்பு பட்டியல் தொழிற் தீர்ப்பாயத்தின் தீர்ப்பில் கூறப்பட்டவைகளைக் கருத்தில் கொண்டு குறைகளைக் களைந்து சரியாகத் தயாரிக்கப்பட்டது. இந்த பணிமூப்பு பட்டியலின் அடிப்படையில் பதவி உயர்வு அளிக்கப்பட்டதில் தவறு ஏதும் இல்லை.

**31 தற்போது ஏற்பட்டுள்ள நெல் கொள்முதல் விலை குறைவால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள அவலம், பதட்டம் குறித்து**

உறுப்பினர்: **திரு. ஜி.கே. மணி**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. கா. நா. நேரு**
(உணவு, பொது விநியோகம், மற்றும் கூட்டுறவுத் துறை)

**அறிக்கை**

இந்த ஆண்டில் விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு சாதாரண ரக நெல்லிற்கு குவிண்டாலுக்கு ரூ.415-ம், 'A' Grade எனப்படும் உயர்ந்த ரக நெல்லிற்கு குவிண்டாலுக்கு ரூ.445-ம் விலை நிர்ணயம் செய்துள்ளது. இது அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும். ஆனால், தமிழக அரசு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களின் இடைநிகழ்வுச் செலவுகளை ஈடுகட்ட குவிண்டாலுக்கு ரூ.35 அதிகமாக வழங்கி வருகிறது. இதனால் சாதாரண ரக நெல்லிற்கு குவிண்டாலுக்கு ரூ.450-ம், 'A' Grade எனப்படும் உயர்ந்த ரக நெல்லிற்கு குவிண்டாலுக்கு ரூ.480-ம் வழங்கி வருகிறது. இணைக் கொள்முதல் திட்டத்தின்படி, வியாபாரிகளும் விவசாயிகளிடம் நெல்லை நேரடியாக வாங்கலாம் என்று அரசு அறிவித்திருந்தாலும், விவசாயிகள் அரசு நடத்தும் நேரடி கொள்முதல் நிலையங்களில் நெல்லை அதிக அளவில் விற்க முன்வந்துள்ளனர். கடந்த குறுவைப் பருவத்தில் எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு 7 இலட்சம் டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டது ஒரு சாதனையாகும். அதே

போல நடப்பு சம்பா பருவத்தில் இணைக் கொள்முதல் திட்டத்தில் 31-3-1998 வரை 10 இலட்சம் டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதும் ஒரு சாதனையாகும். விவசாயிகளின் நலன் கருதி காவிரி பாசனப் பகுதிகள் அல்லாத மாவட்டங்களில்கூட நேரடிக் கொள்முதல் நிலையங்கள் முதன்முறையாக இயங்கி வருகின்றன. காவிரி பாசனப் பகுதிகளில் 926 நேரடிக் கொள்முதல் நிலையங்களும், காவிரிப் பாசனப் பகுதி அல்லாத பிற பகுதிகளில் 71 நேரடிக் கொள்முதல் மையங்களும், ஆக மொத்தம் 997 நேரடிக் கொள்முதல் மையங்கள், இதற்கு முன் சம்பா பருவத்தில் எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு, தமிழகம் முழுவதும் இயங்குகின்றன. மேலும், நுகர்பொருள் வாணிபக் கழக வட்டக் கிட்டங்கிகளிலும் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.

காவிரிப் பாசனப் பகுதி அல்லாத கடலூர் மாவட்டத்தில் சென்ற ஆண்டு 36,866 டன்கள் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு 90,360 டன்கள் இதுவரை கொள்முதல் ஆகி உள்ளது. அதே போல புதுக்கோட்டை மாவட்டத்தில் சென்ற ஆண்டு 25,350 டன்கள் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு, இதுவரை 51,557 டன்கள் கொள்முதல் ஆகியுள்ளது. எனவே, சென்ற ஆண்டைவிட 2 மடங்கிற்கும் அதிகமாக நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் 24,000 டன்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் 15,000 டன்கள், மதுரை மாவட்டத்தில் 14,000 டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் மத்தியில், அரசின் நெல் கொள்முதல் மையங்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது என இதிலிருந்து தெளிவாகிறது. இவ்வாறு பல பகுதிகளில் அரசு நெல் கொள்முதல் செய்வதால், வியாபாரிகளும், விவசாயிகளுக்குக் கூடுதலாக விலை கொடுக்க முன்வந்துள்ளனர்.

நடப்பு சம்பா பருவத்தில் 1-4-1998 முடிய காவிரி பாசனப் பகுதிகளில் விவசாயிகளிடமிருந்து 3,77,145 டன்கள் சாதாரண ரக நெல்லும், 5,80,587 டன்கள் கிரேடு, 'ஏ' ரக நெல்லும், ஆக மொத்தம் 9,57,732 டன்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இதன் மொத்த மதிப்பு ரூ.414,87,63,900 ஆகும். காவிரி பாசனப் பகுதி அல்லாத பிற பகுதிகளில் 13,241 டன்கள் சாதாரண ரக நெல்லும், 71,385 டன்கள் கிரேடு 'ஏ' ரக நெல்லும், ஆக மொத்தம் 84,626 டன்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இதன் மொத்த மதிப்பு ரூ.37,26,13,400 ஆகும். இடைநிகழ் செலவுக்கென அரசால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள தொகை மொத்தம் ரூ.36,48,25,300 ஆகும்.



மேலும், கொள்முதலுக்கென கல்கத்தாவிலுள்ள மத்திய சணல் கழகத்திடமிருந்து 1,01,46,250 புதிய சாக்குகளும், தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து 10,23,157 இரண்டாம் தர சாக்குகளும் வாங்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

எந்த ஆண்டிலும் இல்லாதவகையில் கொள்முதலில் சாதனை படைத்துள்ளதே, விவசாயிகள் தங்கள் நெல்லுக்கு நல்லவிலை பெற்றுள்ளனர் என்பதற்குச் சான்று பகரும். வெளிச்சந்தை விலையைவிட அரசு கொள்முதல் மூலம் அவர்கள் அதிக வருவாய் பெற்றுள்ளனர் என்பதே உண்மை.

**32 ஈரோடு மாவட்டம் குன்னத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கியதாக ஏமாற்றப்பட்ட விவசாயிகளின் சொத்துக்களை ஜப்தி செய்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கையால், அப்பகுதி விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ள அச்சம் மற்றும் பதட்ட நிலை குறித்து**

உறுப்பினர்: **திரு. நா. பெரியசாமி**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. கா. நா. நேரு**
(உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை)

**அறிக்கை**

ஈரோடு மாவட்டத்திலுள்ள குன்னத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் 1990-91 ஆம் ஆண்டில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக 1983 ஆம் வருட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 81-ன்கீழ் விசாரணையின்படி ரூ.4,74,043.25 மதிப்பிற்கு வங்கிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. வங்கிக்கு ஏற்பட்ட நிதியிழப்பு தொடர்பாக வங்கியின் செயலாளர் மற்றும் மேலாளர் ஆகியோர்கள் மீது தண்ட வசூல் ஆணை ஈரோடு சரக துணைப் பதிவாளரால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. முறைகேடு இனங்களின் தொடர்பான தொகை ரூ.60,616.75, 16-11-1994-ல் வசூலிக்கப்பட்டுள்ளது. முறைகேடாக வழங்கப்பட்ட கடன்களுக்கு வழங்கப்பட்ட அரசு மானியக் தொகை ரூ.21,348.25 தொடர்பாக வங்கியின் செயலாளரது சொத்துக்கள் தீர்ப்பிற்கு முன்னர் ஜப்தி செய்யப்பட்டு, நிறைவேற்று மனு நடவடிக்கையில் உள்ளது. முறைகேடுகள் தொடர்பாக வங்கியின் செயலாளர் நிரந்தர பணி நீக்கம் செய்யப்பட்டும், வங்கியின் மேலாளருக்கு ஒரு ஆண்டு ஊதிய உயர்வு திரண்ட பயனுடன் நிறுத்தி வைத்தும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

[1998 மே 30

மேலும், இம்மோசடிகளில் 30 விவசாயிகள் சம்பந்தப்படுத்தப்பட்டு உள்ளனர். அதாவது இவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கடன் தொகையை விடக் குறைவான கடன் தொகையினை வங்கியும், உறுப்பினர்கள் செலுத்திய தொகைக்கு பாஸ் புத்தகத்தில் மட்டும் பதிவு செய்து கொடுத்து விட்டு, உறுப்பினர்களுக்கு ரசீது வழங்காமலும் வங்கியின் கணக்கிற்கு கொண்டு வராமலும், மோசடி செய்த வகையிலும் விவசாயிகள் ஏமாற்றப்பட்டு உள்ளனர். இவ்வாறு ஏமாற்றப்பட்ட விவசாயிகள் யார், யார் என்பதைப் பிரிவு 81-ன் கீழான விசாரணை அறிக்கையில் கண்டறியப்பட்டு மேற்படி வங்கிக்கும் தொடர்புறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி வங்கியின் உறுப்பினர்களிடமிருந்து வர வேண்டிய தவணை தவறிய தொகை ரூ.29.90 லட்சம் வசூலிக்க ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ள 1995-ம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது கீழ் பவானி விவசாயிகள் சங்கம் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனு எண் 5717/95-ல் மேற்கூறிய சங்க உறுப்பினர்கள் ஏமாற்றப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டு ஜப்தி நடவடிக்கையினைத் தடை செய்ய வேண்டுமென்று கோரி விண்ணப்பம் செய்திருந்தது. மேற்குறித்த நீதிப் பேராணை மனு நாளது வரையிலும் முடிவு செய்யப்படாமல் உள்ளது. 1995-ல் 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 81-ன் கீழான விசாரணை முற்றுப் பெறாமல் இருந்த நிலையில் மத்தியக் கூட்டுறவு வங்கியும் இவ்விவசாயிகளிடமிருந்து கடனை வசூலிக்க எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. தற்பொழுது ஈரோடு சரகத் துணைப் பதிவாளர் ஏமாற்றப்பட்ட விவசாயிகளின் பட்டியல்களை மத்தியக் கூட்டுறவு வங்கிக்கும் தொடர்புடைய சங்கத்திற்கும் தெரிவித்துவிட்ட நிலையில் உண்மையாகவே கடன் பெற்ற, அதிலும் குறிப்பாக அவர்களுடைய நிலங்களை அடமானம் வைத்து கடன் பெற்ற உறுப்பினர்கள் சிலர் ஏமாற்றப்பட்ட விவசாயிகளின் போர்வையில் கடனைத் திருப்பிச் செலுத்தாமல் இருப்பதைக் கருத்தில் கொண்டும், அப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு மீண்டும் கடன் வழங்கும் நல்ல எண்ணத்திலும் அரசு அங்கீகாரம் அளித்துள்ள கீழ்க்கண்ட 6 வகைக் கடன்தாரர்கள் பட்டியலில் இடம் பெற்றவர்களிடமிருந்து மட்டும் கடன் வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது:—

(அ) 5 ஏக்கரும், அதற்கு மேலும் நிலம் உள்ள நிலச்சுவான்தாரர்கள்;

(ஆ) டிராக்டர் மற்றும் இதர வேளாண்மை துணைக் கருவிகளை வாங்க கடன் பெற்றவர்கள்/பண்ணை சாராக் கடன் பெற்றவர்கள்;



1998 மே 30]

(இ) டாக்டர், வழக்கறிஞர், பொறியாளர் போன்ற தொழில் செய்பவர்கள் மற்றும் வணிகர்கள், அரிசி அரவை ஆலை வைத்திருப்பவர்கள், திரை அரங்கு வைத்திருப்பவர்கள் போன்ற இதர வருமானம் உள்ளவர்கள்;

(ஈ) அடமானம் வைக்கப்பட்ட நிலத்தை விற்றுவிட்டவர்கள்/விற்றுவிட முயற்சிப்பவர்கள்;

(உ) கடன் தொகையைப் பெற்ற காரியத்திற்குப் பயன்படுத்தாமல் இதர காரியத்திற்குப் பயன்படுத்தியவர்கள்; மற்றும்

(ஊ) கூட்டுறவு வங்கிகளில் ரூ.10,000/-க்கு மேல் கடன் நிலுவை வைத்திருப்பவர்கள்.

இந்நிலையில் மீண்டும் கீழ்பவானி விவசாயிகள் சங்கம் தர்ணா நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதைக் கருத்தில்கொண்டு கடன் வசூலிக்கச் செல்லவில்லை.

தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு இருக்கும் நிலையில் அப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்குத் தொடர்ந்து கடன் வழங்க வேண்டுமென்றால் ஏற்கெனவே கடன் வழங்கப்பட்ட தொகையில் 10% கடனாவது வசூல் செய்யப்பட வேண்டும். இருப்பினும் அப்பகுதியில் உள்ள விவசாயிகளின் மீது நிலுவையில் உள்ள நிறைவேற்று மனுக்களின் மீது ஜப்தி செய்வது போன்று மத்திய வங்கி அளவில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

## 33 திண்டுக்கல் மாவட்டம் நுகர்வோர் நீதிமன்ற நீதிபதி நியமிக்கப்படாததால் ஏற்பட்டுள்ள வழக்கு தேக்கம் குறித்து

உறுப்பினர்: **திரு. கே. சுப்பராயன்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. கா.நா. நேரு**

(உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை)

### அறிக்கை

இம்மாநிலத்தில் 24 மாவட்ட நுகர்வோர் குறைதீர் அமைப்புகள் செயல்படுகின்றன. இவற்றில் சில அமைப்புகள் தனியாகவும், சில அமைப்புகள் 2 மாவட்டங்கள் அடங்கிய கூட்டமைப்புகளாகவும் செயல்படுகின்றன. இத்தகைய கூட்டமைப்புகளுள் திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களுக்கான கூட்டமைப்பும் ஒன்றாகும். ஒவ்வொரு அமைப்பிற்கும் ஒரு தலைவரும், இரண்டு உறுப்பினர்களும் உள்ளனர். இதில் ஒருவர் பெண் உறுப்பினர் ஆவர்.

[1998 மே 30

2) திண்டுக்கல் மாவட்ட குறைதீர் அமைப்புத் தலைவர் திரு. அப்துல் கனி என்பவர், தமிழ்நாடு மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினராகச் சேரும் பொருட்டு 30-4-1997 அன்று தம் பொறுப்புகளை அம்மாவட்ட குறைதீர் அமைப்பின் உறுப்பினரிடம் ஒப்படைப்பதற்கு அனுமதி கோரினார். இது குறித்து பரிசீலனை செய்யப்பட்டது. சாதாரணமாக மாவட்ட குறைதீர் அமைப்புகளுக்கு ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதிகளையே தலைவர்களாக நியமிப்பது வழக்கம். இதற்கென, ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதிகள் பட்டியல் அவ்வப்பொழுது சென்னை உயர்நீதி மன்றத்திலிருந்து பெறப்படுகிறது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் 10(1) பிரிவின்படி, மாவட்ட குறைதீர் அமைப்புகளின் தலைவர் மற்றும் உறுப்பினர்களைத் தேர்வு செய்வதெற்கென, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தலைவரை, தலைவராகக் கொண்டும், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலரையும், சட்டத் துறைச் செயலரையும் உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு குழு தகுதி வாய்ந்த நபரைத் தேர்வு செய்து, அவர்களை நியமிக்க அரசுக்குப் பரிந்துரை செய்யும். இவ்வடிப்படையில் திண்டுக்கல் மாவட்ட குறைதீர் அமைப்பின் தலைவரையும் மேற்கூறிய குழு வெறும் பணிமூப்பு அடிப்படையில் அல்லாத, முற்றிலும் தகுதி அடிப்படையில் உரிய நபரை தலைவராகத் தேர்வு செய்து தகுதியுடையவர் பட்டியல் ஒன்றினைப் பெற்று பரிசீலனை மேற்கொண்டது இக்குழுவால் தேர்வு செய்யப்பட்ட திரு. டி செந்திவேலு என்பவர் மாவட்ட நீதிபதியாகப் பணி புரிந்து ஓய்வு பெற்றவர். இவரை திண்டுக்கல் மாவட்ட குறைதீர் அமைப்பின் தலைவராக நியமிக்க குழு பரிந்துரை செய்தது. அரசும் இப்பரிந்துரையை ஏற்று திரு. டி. செந்திவேலு என்ற ஓய்வு பெற்ற நீதிபதியை திண்டுக்கல் மாவட்ட குறைதீர் அமைப்பின் தலைவராக நியமித்து 9-4-1998 அன்று ஆணைகள் வெளியிட்டுள்ளது. இதற்கிடையே திண்டுக்கல் மாவட்ட குறைதீர் அமைப்பில் அன்றாடம் பெறப்படும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திற்கு பட்டாததாயின் தள்ளுபடி செய்யப்படுகின்றன. சட்டக் குறைபாடுகள் இருப்பவை சம்பந்தப்பட்டவர்களுக்குத் திருப்பியனுப்படுகின்றன.

3) தற்பொழுது இம்மாவட்ட குறைதீர் அமைப்பில் நிலுவையில் உள்ள வழக்குகள் சுமார் 200 மட்டுமே. புதிதாக நியமிக்கப்பட்ட இக்குறைதீர் அமைப்பின் தலைவர் இவ்வழக்குகளை விரைந்து விசாரணை செய்து, தீர்வு காண்பதில் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளார்.



1998 மே 30]

## 34 கந்திலி கிராமக் கூட்டுறவு வேளாண்மை வங்கியில் பணம் கடன் பெறாதவர்களின் பெயர்களைத் தாங்களாகப் பயன்படுத்தி கடன் பெற்றுள்ள அதிகாரிகள் பற்றிய உண்மை நிலை அறிவது குறித்து

உறுப்பினர்: **திரு. லா. சந்தானம்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. கா.நா. நேரு**

(உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை)

### அறிக்கை

கந்திலி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் நிகழ்ந்துள்ள முறைகேடுகள் தொடர்பாக வேலூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் நிர்வாக அலுவலர் மற்றும் திருப்பத்தூர் சரகத் துணைப்பதிவாளர் ஆகிய இருவரும் வேலூர் மண்டல இணைப்பதிவாளர் அறிவுரைப்படி கந்திலி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியை 3-4-1998-ல் நேரில் பார்வையிட்டு, வங்கி உறுப்பினர்களை விசாரணை செய்தபோது 14 உறுப்பினர்கள் மீதுள்ள கடன் தொகை ரூ.2,26,490/-ஐ தானே செலுத்தி விடுவதாக மேற்படி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவருக்கு 10-1-1998 அன்று மேற்படி வங்கியின் செயலாளர் திரு. குப்புசாமி கடிதம் எழுதிக் கொடுத்துள்ளார். 10 உறுப்பினர்கள் பேரில் எடுத்துக்கொண்ட 17 கடன்களுக்கு அசலுக்காக ரூ.92,459/-ம், வட்டிக்காக ரூ.52,918/-ம் செலுத்தியுள்ளார். கந்திலி தொர்டக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிச் செயலாளர் திரு. குப்புசாமி வங்கியில் முறைகேடுகள் புரிந்தது உறுதியானதால் இவர் 22-5-1998 அன்று முதல் தற்காலிகப் பணிநீக்கத்தில் வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வங்கியில் நடைபெற்ற முறைகேடுகளுக்குத் தொடர்புடைய வங்கியில் இன்னொரு பணியாளரான திரு. மீரான்ஷெரீப் என்பவர் 31-3-1998 முதல் தற்காலிகப் பணிநீக்கத்தில் வைக்கப்பட்டுள்ளார். இவ்வாணையை எதிர்த்து இவர் திருப்பத்தூரிலுள்ள உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண் ஓ.எஸ்.214-ல் 21-4-1998-ல் வழக்கு தொடர்ந்து விசாரணையில் இருந்து வருகிறது.

கந்திலி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் பயிர்க் கடன்கள் வழங்கியதில் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள முறைகேடுகள் குறித்து தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 81-ன்கீழ் கந்திலி கூட்டுறவு விரிவாக்க அலுவலரால் விசாரணை

மேற்கொள்ளப்பட்டு இவ்வறிக்கை திருப்பத்தூர் சரகத் துணைப்பதிவாளரின் பரிசீலனையில் உள்ளது. விசாரணை முடிவுகளின் அடிப்படையில் முறைகேடுகளுக்குப் பொறுப்பானவர்கள் மீது குற்றவியல் வழக்கு மற்றும் தண்டத் தீர்வை வழக்கு மற்றும் ஒழுங்கு நடவடிக்கை திருப்பத்தூர் சரகத் துணைப்பதிவாளரால் மேற்கொள்ளப்படும்.

### 35 சென்னை நுங்கம்பாக்கத்தில் குடியிருக்கும் சுமார் 200 குடிவாசிகளை முன்னறிவிப்பின்றி மாநகராட்சியும், காவல்துறையும் சேர்ந்து அகற்றியதால் அப்பகுதி மக்கள் பாதிப்பு குறித்து

*உறுப்பினர்:* **திரு. டி. மணி**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. க. சுந்தரம்,**
*(பால்வளத் துறை)*

**அறிக்கை**

சென்னை ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதி மாநகராட்சி வட்ட எண் 107-இல் அமைந்துள்ள புஷ்பா நகர் திட்டப் பகுதியில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 1,024 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் (30 பிளாக்குகள்) கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகளில் குடியிருந்து வரும் குடியிருப்புதாரர்கள் பலர் தத்தம் குடியிருப்புகளை விற்றுவிட்டு அல்லது மேல் வாடகைக்குப் பிறருக்கு விட்டு, திட்டப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சாலைப் பகுதிகளில் மற்றும் கட்டடங்களுக்கு இடையேயுள்ள வெற்று இடங்களை ஆக்கிரமித்து சுமார் 200 குடிசைகள் அமைத்து குடியிருந்து வந்தனர். இதுபோன்ற ஆக்கிரமிப்புகளால் பெருமளவில் தீ விபத்து ஏற்படுவதுடன், சுகாதாரக் கேடுகளும் ஏற்பட்டன. அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பராமரிப்புப் பணிகளுக்குப் பெரிதும் இடையூறு ஏற்பட்டதுடன் சமூக விரோதச் செயல்களும் நடைபெற்று வந்தன.

2. இதுபோன்ற ஆக்கிரமிப்புகளால் குடியிருப்புகளுக்குப் போதிய காற்றோட்டமும், வெளிச்சமும் மற்றும் மேல்தள குடியிருப்புகளுக்குச் செல்லும் வழிகளும் பெருமளவில் தடுக்கப்பட்டன. மேலும் இத்தகைய ஆக்கிரமிப்புகள் போக்குவரத்திற்குப் பெரிதும் இடையூறாக அமைந்ததோடு மட்டுமின்றி, திட்டப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர்க் கால்வாய், கழிவுநீர்க் குழாய்கள், குடிநீர்க் குழாய்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் ஆகியவற்றின் மீது ஆக்கிரமிப்புகள் இருந்த காரணத்தால், மேற்குறிப்பிட்ட அடிப்படை வசதிகள்



இயங்குதலுக்கும் மற்றும் பழுதடையும்போது அவற்றைச் சரி செய்வதற்கும் இயலாமல் இருந்தது.

3. இத்திட்டப் பகுதியில் இந்த ஆக்கிரமிப்புகளால் ஏற்படுத்தப்பட்ட பெருமளவு சுகாதாரச் சீர்கேடுகளைக் களையவும், தீ விபத்துக்களைத் தடுக்கவும் திட்டப் பகுதிகளில் அமைக்கப்பட்ட குடிநீர் குழாய்கள், கழிவு நீரமைப்புகள் மற்றும் மழைநீர் கால்வாய்கள் சரிவர இயங்கும் பொருட்டும், இடையூறற்ற போக்குவரத்தினை ஏற்படுத்தி சாலை விபத்துக்களைத் தடுக்கவும், திட்டப் பகுதியைச் சுத்தமாகவும், அழகாகவும் பராமரிக்கும் பொருட்டும், பெரும்பான்மையான குடியிருப்புதாரர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மேற்குறிப்பிட்ட ஆக்கிரமிப்புகள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் சென்னை மாநகராட்சி மற்றும் மாநகரக் காவல்துறையினரின் உதவியுடன் கடந்த 4-4-1998 அன்று அகற்றப்பட்டன.

### 36 தமிழகத்தில் பீடித் தொழிலாளர்களுக்கு சட்டப்படி உள்ள சலுகைகளை கூட அமல்படுத்தாமல், தொழிலாளர்கள் பாதிப்பு குறித்து

*உறுப்பினர் :* **திரு. டி. மணி**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்**
*(தொழிலாளர் நலத் துறை)*

**அறிக்கை**

பீடித் தொழிலில் கான்டிராக்டர் முறை என்பது மத்திய அரசால் சட்டப்படி அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, அதனை நீக்குதல் என்பது இத்துறையால், மாநில அரசால் இயலாது. கான்டிராக்டர் பீடி தயாரிக்கும் இடத்திற்கு உரிமம் பெறப்பட வேண்டும் என்பதில் இத்துறை அமலாக்க ஆய்வர்கள் தங்கள் ஆய்வுகளின் போது தீவிர கவனம் செலுத்தி, உரிமம் பெறாமல் இருந்தால் அந்த கான்டிராக்டர்கள் மீது உரிய வழக்குத் தொடர் நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

மேலும், தமிழகத்தில் பீடித் தொழிலாளர்களுக்குச் சட்டப்படியான சலுகைகள் கூட அமல்படுத்தப்படவில்லை என்று கூறுவது ஏற்புடையதல்ல. பீடித் தொழிலாளர்களின் நலனில் அரசு/இத்துறை மிகுந்த அக்கறை கொண்டு, பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்களுக்கு என பிரத்தியேகமாக உள்ள 1966-ம் வருடத்திய பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம் மற்றும் தொடர்புடைய

ஏனைய தொழிலாளர்கள் நலச் சட்டங்களும் அவர்களுக்காகத் தீவிரமாக அமல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வகையில் 1997-ம் ஆண்டில் பீடித் தொழில் நிறுவனங்களில் சட்ட விதிகள் அமலாக்கம் பற்றிய புள்ளி விவரங்கள் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகின்றன:

| | | | |
|---|---|---|---|
| 1) | தொழிலாளர் உதவி ஆய்வர்களால் மேற்கொள்ளப்பட்ட முறையான ஆய்வுகள் | .. | 3798 |
| 2) | தொழிலாளர் ஆய்வர்களால் மேற்கொள்ளப்பட்ட சோதனை ஆய்வுகள் | .. | 889 |
| 3) | காணப்பட்ட முரண்பாடுகளுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் எண்ணிக்கை | .. | 412 |
| 4) | நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட அபராதத் தொகை | .. | ரூ.80,,055 |

மேலும், 1998-ம் ஆண்டில் பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம் மற்றும் அதன் விதிகள் மற்றும் ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்களைத் தீவிரமாக அமல்படுத்தும்படி தெரிவித்து, அதன்படி 1-3-1998 முதல் 7-3-1998 வரை தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்கள் செறிந்துள்ள அனைத்து மாவட்டங்களிலும், மாநிலம் தழுவிய கூட்டாய்வு இத்துறை ஆய்வர்களால் முதன் முறையாக நடத்தப்பட்டது. அதன்படி 462 பீடி நிறுவனங்களில் இக்கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டு, அவ்வமயம் சட்ட விதிகளின்கீழ் 458 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, இம்முரண்பாடுகளுக்காக சம்பந்தப்பட்ட வேலை அளிப்பவர் மீது வழக்குத் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பீடித் தொழிலாளர்களுக்கு சட்டப்படி வழங்கப்பட வேண்டிய புத்தகங்களில் வழங்கப்பட்ட எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட வேண்டிய எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது:—

| வ.எண் | புத்தகம் | வழங்கப்பட்டது | வழங்கப்பட வேண்டியது |
|---|---|---|---|
| 1. | வீட்டுத் தொழிலாளர்களுக்கான லாக் புத்தகம் | 2,06,954 | 6,040 |
| 2. | சர்வீஸ் கார்டுகள் | 2,01,456 | 20,148 |
| 3. | விடுப்பு புத்தகம் | 1,93,920 | 21,174 |





சர்வீஸ் கார்டைப் பொறுத்தவரையில் வேலூர், திருச்சி, சென்னை மாவட்டங்களில் உள்ள பீடித் தயாரிப்பாளர்கள் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து தடை உத்திரவு பெற்றுள்ளதால், அவ்விடங்களில் சர்வீஸ் புத்தகம் அதிக அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது. உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள ரிட் மனுக்களை முடிவிற்குக் கொண்டுவர உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பீடித் தொழிலாளர்களுக்கான அடையாள அட்டை மத்திய அரசால் அமல்படுத்தப்பட்டு வரும் 1978 ஆம் வருடத்திய பீடித் தொழிலாளர்கள் நலநிதி விதிகளின்படி வேலையளிப்பவரால் வழங்கப்பட வேண்டும். ஆனால், பீடித் தொழிலாளர்களின நலனில் மிகுந்த அக்கறை கொண்டு மத்திய அரசுக்கு ஒத்துழைப்பாக மாநில அரசும் அமலாக்கத்தைச் சிறப்பாக செய்து, இத்துறை அமலாக்க ஆய்வர்கள் மூலம் சுமார் 60,000 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. புள்ளிவிவரங்கள் பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 1. | திருநெல்வேலி மண்டலம் | .. | 53,120 |
| 2. | சென்னை மண்டலம் | .. | 2,776 |
| 3. | காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு | .. | 1,634 |
| 4. | சேலம் மாவட்டம் | .. | 1,300 |
| 5. | தர்மபுரி மாவட்டம் | .. | 200 |
| 6. | ஈரோடு மாவட்டம் | .. | 1,100 |
| 7. | விருதுநகர் | .. | 15 |
| | மொத்தம் | .. | **60,145** |

இன்னும், திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் சுமார் 9,000 பீடித் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட வேண்டியுள்ளது. இதற்கான அச்சிட்ட அடையாள அட்டைகள் பிரதிகளை வழங்கக் கோரி மதுரையில் உள்ள மத்திய அரசின் உதவி நல ஆணையரிடம் கோரப்பட்டுள்ளது. அச்சிட்ட பிரதிகள் பெறப்பட்டதும், இவர்களுக்கும் அடையாள அட்டை வழங்கி முடிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம் சட்டப்படி

உள்ள சலுகைகள் யாவும் பீடித் தொழிலாளர்கள் மத்தியில் அமல்படுத்தப்படுவதைக் கண்காணிக்கப் பெரிதும் உதவுமாதலால் பீடித் தொழிலாளர்கள் நலச் சட்டம் தீவிர செயலாக்கம் பெறும்.

## 37 சென்னை, திருவொற்றியூரில் ராயல் என்பீல்டு (எய்ச்சர்) நிறுவனம் கடந்த 6-2-1998 முதல் சட்ட விரோதமாகக் கதவடைப்பு செய்துள்ளதால் தொழிலாளர்கள் பாதிப்பு குறித்து

உறுப்பினர்கள்: **திரு. கே. சுப்பராயன்**
**திரு. டி. மணி:**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
(தொழிலாளர் நலத் துறை)

### அறிக்கை

சென்னை, திருவொற்றியூரிலுள்ள ராயல் என்பீல்டு மோட்டார்ஸ் நிர்வாகத்திற்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையே ஊதிய உயர்வு, போனஸ் மற்றும் பொதுக் கோரிக்கைகள் குறித்து ஒப்பந்தம் 31-12-1996 தேதியுடன் முடிவடைந்த பின்னர் தொழிற்சங்கம் ஊதிய உயர்வு உள்ளிட்ட 82 கோரிக்கைகளை தனது 17-2-1997 நாளிட்ட கடிதத்தில் நிர்வாகத்திடம் எழுப்பியதை முன்னிட்டு இரு தரப்பினரிடையேயும் நேரிடை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இதற்கிடையே 1996-97 ஆம் ஆண்டிற்கான போனஸ் குறித்து பேச்சுவார்த்தைகள் இருதரப்பினரிடையே நடைபெற்றன. நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வரும்போதே தொழிற்சங்கம் தனது 6-1-1998 நாளிட்ட கடிதம் மூலம் போனஸ் தொகையை வழங்காததை முன்னிட்டும், போனஸ் வழங்கும் வரையும் தொழிலாளர்கள் தங்களது வேலை நேரம் முடிந்த பின்னும் தொழிற்சாலைகளுக்குள்ளேயே தொடர்ந்து இருக்கப் போவதாகத் தெரிவித்தனர். மேலும், நிர்வாகம் ஏர் கம்ப்ரஷனை நிறுத்திவிட்டதால் ஜேஐடி லைன் அசெம்பிளி, பெயிண்ட் ஷாப், கியர் அசெம்பிளி, இன்ஜின் அசெம்பிளி மற்றும் இயந்திரப் பகுதிகளில் சில இடங்களிலும் தொழிலாளர்கள் வேலை செய்ய இயலாத சூழ்நிலையை நிர்வாகமே ஏற்படுத்தி விட்டதாகவும் தெரிவித்தது.

2) இதற்கிடையில் நிர்வாகம் தனது 6-2-1998 நாளிட்ட அறிவிப்பின் மூலம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதை முன்னிட்டு 6-2-1998 முதல் நிறுவனத்தைக் கதவடைப்பு செய்ததாகத் தெரிவித்தனர்.



3) இதைத் தொடர்ந்து கதவடைப்பு சம்பந்தமாகவும், தொழிற் சங்கத்தின் ஊதிய உயர்வு உள்ளிட்ட பொது கோரிக்கைகளைக் குறித்தும் 1996-97 ஆம் ஆண்டுக்கான போனஸ் குறித்தும், சென்னை, தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்னிலையில் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

4) இந்தப் பிரச்சினைகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தைகளின்போது வழங்கப்பட்ட அறிவுரைகளை இருதரப்பினரும் ஏற்றுக் கொள்ளாத நிலையிலும், இருதரப்பினரும் தத்தம் நிலையையே வற்புறுத்தியதாலும் சமரசப் பேச்சு வார்த்தைகளில் ஓர் சுமூக முடிவு ஏற்பட வாய்ப்பில்லாமல் போனதாலும், சென்னை தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(4) இன் கீழ் தனது சமரச முறிவறிக்கையை அரசுக்கு அனுப்பினார்.

5) சென்னை தொழிலாளர் இணை ஆணையரின் (சமரசம்) சமரச முறிவறிக்கை மற்றும் அவற்றின் மீதான தொழிலாளர் ஆணையரின் பரிந்துரைகள் ஆகியவற்றை அரசு கவனமுடன் ஆராய்ந்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 31-3-1998 நாளிட்ட அரசாணை (டி) எண்.231, 232 மற்றும் 233 மூலம் 6-2-1998 முதல் நிர்வாகம் கதவடைப்பு செய்தது, தொழிற் சங்கம் எழுப்பிய 82 கோரிக்கைகளில் பேச்சுவார்த்தையின்போது சங்கம் வலியுறுத்திய 11 கோரிக்கைகள், மற்றும் ஏற்கெனவே தொழிலாளர்கள் அனுபவித்து வந்த 10 சலுகைகளை தற்போது நிர்வாகம் விலக்கிக் கொள்வதாக அறிவித்தது ஆகியவற்றை சென்னை தொழில் தீர்ப்பாயத்தின் விசாரணைக்கு அனுப்ப அரசு ஆணையிட்டது. மேலும் 31-3-1998 நாளிட்ட அரசாணை (டி) எண் 235-இன் மூலம் நிர்வாகத்தின் கதவடைப்பைத் தடை செய்தும் ஆணையிட்டது.

6) அவ்வாறு கதவடைப்பைத் தடை செய்து பிறப்பிக்கப்பட்ட அரசாணையை ஏற்றுக் கொண்டு நிர்வாகம் 4-4-1998 முதல் தொழிற்சாலையை மீண்டும் திறந்துள்ளது.

**38 செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் தொழிலாளர்கள் கோரிக்கை மீது தொழிலாளர் நல அதிகாரிகளின் அறிவுரையை ஆலை நிர்வாகம் ஏற்க மறுத்து வருவதால், தொழிலாளர்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து**

*உறுப்பினர்கள்:* **திரு. நா. பெரியசாமி,**
**திரு. வை. சிவபுண்ணியம், திரு. கே. தங்கமணி:**

*அமைச்சர் :* **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்**
*(தொழிலாளர் நலத் துறை)*

**அறிக்கை**

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டத்திலுள்ள செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில், 218 என்.எம்.ஆர். தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். வாரத்தில் 6 நாட்கள் வேலை பார்த்து வந்த அவர்களை, கடந்த 31-12-1997 முதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி, வேலை நாட்களை நிர்வாகம் குறைத்தது. இதனைத் தொழிலாளர்கள் ஆட்சேபித்து, நிர்வாகத்தின் உத்தரவினை மறுபரிசீலனை செய்ய வலியுறுத்தினர். தொழிலாளர்கள் ஆலைக்குள் வீண் தகராறுகள் செய்ததாகவும், அதிகாரிகளைத் தாக்க முயன்றதாகவும் கூறி, நிர்வாகம் காவல்துறையில் புகார் செய்ததைத் தொடர்ந்து 175 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டனர். இப்பிரச்சினை தொடர்பாக கடலூர், தொழிலாளர் அலுவலர் முன்னர் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. சமரசப் பேச்சுவார்த்தையின் போது, 18 தொழிலாளர்கள் தவிர மற்றவர்கள் அனைவரும் வேலைக்கு அனுமதிக்கப்படுவர் என்றும், மேற்படி 18 தொழிலாளர்களை 1 மாதத்தில் படிப்படியாக வேலைக்கு எடுத்துக் கொள்வதாக நிர்வாகம் அளித்த வாக்குறுதியின்பேரில், தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பினர்.

2. நிர்வாகம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாததால், இந் நிறுவனத்தில் இயங்கும் செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைப் பணியாளர்கள் முன்னேற்ற சங்கம், 18-1-1998 ஆம் தேதியில் வேலை நிறுத்த அறிவிப்பு வழங்கியது. இவ்வறிவிப்பின் மீது, கடலூர், தொழிலாளர் அலுவலர் முன்பு மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. வேலை நீக்கம் செய்யப்பட்ட 18 தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென தொழிலாளர் அலுவலரால் நிர்வாகத்திற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன. இவ்வறிவுரையை நிர்வாகம் ஏற்காததால், தொழிலாளர்கள் 30-3-1998 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இவ்வேலை நிறுத்தம்





தொடர்பாக கடலூர், தொழிலாளர் அலுவலர் முன்பு பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

**39 சேத்தியா தோப்பு, அமரர் எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை, என்.எம்.ஆர். தொழிலாளர்கள் அடிப்படைச் சம்பளத்தை அதிகரித்துத்தர வேண்டுமென்ற தொழிலாளர் கோரிக்கை குறித்து**

*உறுப்பினர்:* **திரு. ஐ. கணேசன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்**
*(தொழிலாளர் நலத் துறை)*

**அறிக்கை**

கடலூர் மாவட்டம், சேத்தியா தோப்பு, எம்.ஆர்.கே கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பணிபுரியும் என்.எம்.ஆர். (தொழிலாளர்கள் கூலி உயர்வு) மற்றும் இதர கோரிக்கைகளை வலியுறுத்தி, 24-3-1998 முதல் 29-3-1998 முடிய உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியுள்ளனர். இத்தாவா தொடர்பாக, கடலூர், தொழிலாளர் அலுவலர் முன்னர் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதனிடையே, இருதரப்பினரும் நேரடியாக பேசியதன் விளைவாக கீழ்க்கண்டவாறு தினக்கூலி உயர்வில் உடன்பாடு ஏற்பட்டது.

(1) தொழில் நுட்பத் திறன் கொண்டிராத தொழிலாளர்களுக்கு தினக்கூலியை ரூ.40/-லிருந்து ரூ.56/-ஆக உயர்த்துவது:

(2) தொழில் நுட்பத் திறன் கொண்டவர்களுக்கு ரூ.45/-லிருந்து ரூ.61/-ஆக உயர்த்துவது.

இதனை ஏற்று தொழிலாளர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை 30-3-1998 அன்று முடித்துக் கொண்டு, 31-3-1998 முதல் வேலைக்குத் திரும்பினர்.

**40 நாகர்கோவிலில் வடசேரியில் டர்க்கி டவல் உற்பத்தி செய்யும் கைத்தறித் தொழிலாளர்கள் போனஸ், கூலி உயர்வு போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி வருவது குறித்து**

*உறுப்பினர்:* **திரு. டி. மணி**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்**
*(தொழிலாளர் நலத் துறை)*

[1998 மே 30

## அறிக்கை

நாகர்கோவிலில் உள்ள வடசேரி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் 22 தனி நபர் கைத்தறி உற்பத்தியாளர்கள் ஒவ்வொருவரும் சராசரி 10 தறிகளை வைத்துக் கொண்டு பல்வேறு அளவுகளில் டர்க்கி டவல் உற்பத்தி செய்து கொண்டு வருகிறார்கள். இத்தொழிலில் சுமார் 2000 ஆண், பெண் தொழிலாளர்கள் வேலை செய்து வருவதாக அறியப்படுகிறது. இவர்களில் 80% பெண் தொழிலாளர்கள் ஆவார்கள். உற்பத்தியாளர்கள் 22 நபர்களில் 21 நபர்கள் தங்களுக்கென வடசேரி ஜவுளி உற்பத்தியாளர் சங்கம் என்ற அமைப்பின் கீழ் பல ஆண்டுகளாக உற்பத்தி நடத்தி வருகிறார்கள். டர்க்கி டவல் உற்பத்தியில் 18"x28" அளவு கொண்ட டர்க்கி டவல்கள் அதிக அளவில் உற்பத்தி செய்து வருகிறார்கள். அவ்வாறு உற்பத்தி செய்து வரும் டர்க்கி டவல்கள் இத்தொழிலில் இருந்துவரும் வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்பட்டு, அவர்களால் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது என தெரிய வருகிறது.

தற்போது நடைமுறையில் டர்க்கி டவல் நெய்வதற்கு இந்த அளவுக்கு தொழிலாளர்களுக்கு ஒரு டஜனுக்கு ரூ.8.40 வழங்கப்பட்டு வருகிறது.

இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு சி.ஐ.டி.யு. உடன் இணைக்கப்பட்ட ஐக்கிய கைத்தறி நெசவுத்தொழிலாளர் சங்கம் என்ற ஒரு சங்கம் மட்டுமே இயங்கி வருவதாகவும் அதேபோல் உற்பத்தியாளர்களுக்கென வடசேரி கைத்தறி உற்பத்தியாளர் சங்கம் என்ற ஒரு சங்கமே இயங்கி வருவதாகவும் அறியப்படுகிறது.

1997-ஆம் ஆண்டுக்கு முன்னால் உற்பத்தியாளர்கள் மற்றும் உற்பத்தி செய்த பொருட்களை வாங்கும் வியாபாரிகள் இருதரப்பினரும் சேர்ந்து தொழிலாளர்களுடன் நேரடியாகப் பேசி கூலி நிர்ணயம் செய்யும் முறை நடைமுறையில் இருந்து வந்ததாகவும், 1997-இல் சி.ஐ.டி.யு. ஐக்கிய கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கி கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் ஊதிய உயர்வு மற்றும் போனஸ் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தியும் பலன் ஏதும் ஏற்படாத நிலையில், வேலைநிறுத்தம் செய்ததில், 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளுக்கு 17% போனஸ் மற்றும் 1997 ஆண்டுக்கு மட்டும் 10% ஊதிய உயர்வு ஆகிய சலுகைகளை "Memorandum of Understanding" ஏற்படுத்தியதாகவும் தெரிய வருகிறது. 1998 ஆம் ஆண்டிற்கான 17% போனஸ் நிலுவையில்



1998 மே 30]

உள்ளது. இதைத் தவிர ஊதிய உயர்வு பற்றிய ஒப்பந்தம் ஏதும் நிலுவையில் உள்ளதாக தெரியவில்லை.

தற்போது கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்வைத்து மொத்தமுள்ள 2000 தொழிலாளர்களில் 480 தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட சி.ஐ.டி.யு. தொழிற்சங்கம் 15-4-1998 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகவும், இந்த வேலை நிறுத்தத்தில் 480 தொழிலாளர்கள் கலந்து கொண்டுள்ளதாகவும், மீதமுள்ள தொழிலாளர்களும் வேலைக்குச் செல்லவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

### கோரிக்கைகள் விவரங்கள்

தொழிலாளர்கள் தற்போதைய ஊதியத்தில் 50% ஊதிய விகிதம் உயர்த்தி அளிக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கப்படும் ஊதிய உயர்வை 1-5-1998 முதல் அமல்படுத்த வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி 15-4-1998 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இக்கோரிக்கைகள் சம்பந்தமாக நாகர்கோவில், தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்) 21-4-1998 அன்று இருதரப்பினரையும் பேச்சு வார்த்தைக்கு அழைத்துள்ளார். ஆனால் இரு தரப்பினரும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவில்லை. பின்னர் 29-4-1998 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தையில் இருதரப்பினரும் கலந்து கொண்டனர். தொழிலாளர் உதவி ஆணையர் வேலை நிறுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வரும் பொருட்டு,

1. வேலை நிறுத்தம் உடனே வாபஸ் பெறப்பட வேண்டும்

2. தற்போதைய ஊதியத்தில் 10% கூடுதலாக உயர்த்தி அளிக்க வேண்டும்

3. அவ்வாறு கொடுக்கப்படும் ஊதிய உயர்வு 1-6-1998 முதல் அமலுக்கு வரும் என்ற யோசனைகளை தெரிவித்துள்ளார்.

மேற்சொன்ன யோசனைகளை தொழிற்சங்கம் ஏற்றுக் கொள்ள வில்லையாயினும் ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என தெரிய வருகிறது. ஆனால் உற்பத்தியாளர்கள் தற்சமயம் 5% ஊதிய உயர்வினை உடனே அளிப்பதற்கு தயாராக உள்ளதாகவும், 10% ஊதிய உயர்வு அளிக்க வேண்டுமென்பது குறித்து ஆலோசிக்க 10 நாட்கள் அவகாசம் கோரினர் எனவும், அவ்வாறு 10% ஊதிய உயர்வு அளிக்கும் பட்சத்தில்

அதனை 1-8-1998 முதல் அமல்படுத்த இயலும் என்றும் தெரிவித்துள்ளதாக தொழிலாளர் உதவி ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் அடுத்த பேச்சுவார்த்தை நாகர்கோவில் தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்) முன்பு 4-5-1998 அன்று நடைபெற உள்ளது.

## 41 கள்ளக்குறிச்சி, ஆற்காடு டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் 11-5-1998 முதல் சட்டவிரோதமாக கதவடைப்பு செய்துள்ளது குறித்து

உறுப்பினர்: **திரு. கே. சுப்பராயன்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்**
(தொழிலாளர் நலத் துறை)

### அறிக்கை

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் உள்ள ஆற்காடு டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் லிமிடெட் என்ற ஆலையில் 305 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர்.

2. இவ்வாலையின் தொழிலாளர்களுக்கு சம்பளம் உரிய தேதியில் வழங்கப்படாமல் தாமதமாகவே வழங்கப்பட்டு வந்துள்ளது எனவும், இவ்வாறு கால தாமதமாக சம்பளம் வழங்கப்பட்டு வந்ததை ஆட்சேபித்து, தொழிலாளர்கள் 21-4-1998 முதல் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் எனவும், இத்தொழிலாளர்களுக்கு மார்ச் 1998 சம்பளம் இன்னமும் வழங்கப்படவில்லை எனவும் அறியப்படுகிறது.

3. இவ்வேலை நிறுத்தம் குறித்து, கடலூர் தொழிலாளர் அலுவலர் முன்பு சமரச பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. நிர்வாகத்தினர், தொழிலாளர்கள் முன்னறிவிப்பின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டது சட்ட விரோதமானது என்பதால் 8 நாட்கள் சம்பளப் பிடித்தம் செய்யப்படும் என 21-4-1998 ஆம் தேதியிட்ட அறிவிப்பில் அறிவித்தனர். இருப்பினும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தினை கைவிடவில்லை. மாறாக தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தினை விலக்கிக் கொண்டு, 30-4-1998 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

4. 5-5-1998 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, தொழிலாளர் அலுவலரின் அறிவுரையின்படி, மார்ச் 1998 சம்பளத்தினை 6-5-1998 அன்று வழங்கிட நிர்வாகம் முன்வந்தது. அதனை ஏற்றுக் கொண்டு தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தினை விலக்கிக் கொள்ள தொழிற்சங்கங்கள் ஒப்புக் கொண்டன. ஆனால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தினை கைவிடாமல் தொடர்ந்து வந்தனர்.





5. இப்பிரச்சினையில், சென்னை, 2-ம் தொழிலாளர் துணை ஆணையர் தலையிட்டு, 12-5-1998 அன்று பேச்சுவார்த்தைக்கு இருதரப்பினரையும் அழைத்துள்ளார். ஆனால், இதற்கிடையில், தொழிலாளர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி, 8-5-1998 அன்று ஆலை வாயிலில் சாலை மறியலில் ஈடுபடப் போவதாக அறிவித்தனர். நிர்வாகம், தனது 11-5-1998 ஆம் நாளிட்ட அறிவிப்பில், 8-5-1998 அன்று ஆலையில் சங்கு ஊதப்பட்ட போது தொழிலாளர்கள் கேட்டை நோக்கி ஆவேசமாக ஓடிவந்து சங்கை நிறுத்த வேண்டும் எனவும், ஆலை நிர்வாகி வந்த பின்னரே சங்கு ஊத வேண்டும் என தெரிவித்தனர் எனவும், இதனால், பாதுகாப்பு அலுவலர் சங்கை ஊதவில்லை எனவும், மேலும் சில வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள், தொழிலாளர்களை வன்முறையை தூண்டிவிடும் அளவில் பேசியுள்ளனர் எனவும், இதனால் ஆலையின் அலுவலர்கள் மற்றும் ஆலையின் பாதுகாப்பு கருதி நிர்வாகத்தினர் 11-5-1998 முதல் கதவடைப்பு அறிவித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

6. சென்னை, 2-ம் தொழிலாளர் துணை ஆணையர் முன்பு, 12-5-1998 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, நிர்வாகத் தரப்பில், தொழிலாளர்கள் 8-5-1998 அன்று சாலை மறியலில் ஈடுபட்டதாகவும், இதனால் ஆலைக்கு ஏற்படும் இன்னல்களைத் தவிர்க்கும் பொருட்டு, 11-5-1998 முதல் ஆலையை கதவடைப்பு செய்ததாக நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது எனவும், மார்ச் 1998 சம்பளத்தினை உடனடியாக வழங்கிவிடவும், ஏப்ரல் 1998 சம்பளத்தினை கதவடைப்பினை விலக்கிக் கொண்ட 20 நாட்களுக்குள் அளிக்கவும் நிர்வாகத்தினர் ஒப்புக் கொண்டனர் எனவும், தொழிற்சங்கத் தரப்பில் கதவடைப்பினை விலக்கிக் கொண்ட 8 நாட்களுக்குள் ஏப்ரல் 1998 சம்பளத்தினை வழங்க வேண்டும் என கோரியதாகவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் வெளியே சென்று அதற்குண்டான பணம் வந்த பின்னர் சம்பளம் அளிக்க குறைந்தபட்சம் 20 நாட்கள் ஆகும் என நிர்வாகத்தினர் பதில் அளித்ததாகவும் தொழிலாளர் துணை ஆணையர் தெரிவித்துள்ளார்.

7. இப்பிரச்சினை குறித்து, சென்னை, 2-ம் தொழிலாளர் துணை ஆணையர் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். அடுத்த கட்ட பேச்சுவார்த்தைகள் 19-5-1998 அன்று நடைபெறவுள்ளது. நிலைமை உன்னிப்பாக கவனிக்கப்பட்டு வருகிறது.

[1998 மே 30

**42 நெல்லை மாவட்டம் சங்கரன் கோவிலில் கீதாஞ்சலி நூற்பு ஆலையில் சுமார் 4 மாதங்களாக தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு தராமலும், ஊதியமும் வழங்காமல் இருப்பதால் சுமார் 400 தொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டது குறித்து**

*உறுப்பினர்:* **திரு. சொ. கருப்பசாமி**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்**
(தொழிலாளர் நலத் துறை)

**அறிக்கை**

நெல்லை மாவட்டம் சங்கரன் கோவிலில் உள்ள கீதாஞ்சலி நூற்பாலையில் மொத்தம் 228 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இவர்களில் 144 நிரந்தரத் தொழிலாளர்களும், 75 தற்காலிகத் தொழிலாளர்களும், 9 பழகுனர்களும் (Trainees) அடங்குவர். இவ்வாலையில் கதிர்களின் எண்ணிக்கை 13,946 என தெரியவருகிறது. இத்தொழிற்சாலையில் ஐ.என்.டி.யு.சி. தொழிற்சங்கம் இயங்கி வருகிறது.

இவ்வாலை இயங்காமல் இருப்பதற்கான முக்கிய காரணம் நிதிப்பற்றாக்குறையே. நிர்வாகஸ்தர்களின் குடும்பத்தினரிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை காரணமாக ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி காரணமாக இவ்வாலை இயங்காமல் உள்ளது. இவ்வாலை தொழிலாளர்களுக்கு டிசம்பர் 1997 வரையில் பணி வழங்கியுள்ளது. ஜனவரி 1998 முதல் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்படவில்லை.

நிர்வாகம் ஆலையை இயக்க யூனியன் பாங்க் ஆப் இந்தியா, ராஜபாளையம் கிளையில் ரூபாய் ஒரு கோடி கடன் கேட்டுள்ளதாகவும் வங்கி ரூ.55,00,000 வழங்க ஒப்புதல் அளித்து மும்பை அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளது எனவும், இக்கடன் 20 அல்லது 30 நாள்களில் கிடைத்துவிடும் என்பதால் பண நெருக்கடி தீர்ந்து ஆலையை விரைவில் இயக்க வாய்ப்புள்ளதாக தெரியவருகிறது.

இப்பிரச்சினை மீது நடவடிக்கை எடுக்குமாறு திருநெல்வேலி தொழிலாளர் துணை ஆணையருக்கு தொழிலாளர் ஆணையர் அறிவுரை வழங்கியுள்ளார். இதன் மீது திருநெல்வேலி தொழிலாளர் துணை ஆணையர் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டு வருகிறார். அடுத்த கட்ட பேச்சுவார்த்தை 5-6-1998 அன்று நடைபெற உள்ளது



1998 மே 30]

தொழிலாளர்களுக்கு 1997 அக்டோபர் முதல் டிசம்பர் 1997 முடிய பணிபுரிந்தமைக்கு சம்பளம் வழங்க வேண்டும் எனவும் ஜனவரி 1998 முதல் ஆலை இயங்காததற்கு லே-ஆப் ஊதியம் வழங்கவேண்டும் எனவும் தொழிற்சங்கம் கோரியுள்ளது. இது குறித்தும் திருநெல்வேலி தொழிலாளர் துணை ஆணையர் பேச்சுவார்த்தை மேற்கொண்டு வருகிறார்.

**43 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் தேக்கமடைந்து கிடப்பதால், வேலை இழப்பு ஏற்பட்டு நெசவாளர்கள் பாதிக்கப்பட்டது குறித்து**

*உறுப்பினர்:* **திரு. நா. பெரியசாமி**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி**
(கைத்தறித் துறை)

**அறிக்கை**

அகில இந்திய அளவில் பொதுவாக, துணி விற்பனை மந்தமடைந்துள்ள நிலையில் தமிழ் நாட்டிலும், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறித் துணை விற்பனையிலும் தொய்வு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், அரசு கைத்தறித் துணி விற்பனைக்கு ஆண்டு முழுவதும் (365 நாட்களுக்கும்) 20% தள்ளுபடி அளித்து விற்பனை செய்ய செப்டம்பர் 1997 முதல் அனுமதி வழங்கியது. இதன் காரண்மாக 1-4-1997 முதல் 31-08-1997 வரை முதல் ஐந்து மாதங்களில் ரூ. 147.00 கோடியாக இருந்த விற்பனை, அடுத்த ஆறு மாதங்களில், ரூ.235.00 கோடியாக உயர்ந்துள்ளது. மேலும், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில், ஓராண்டு மற்றும் இரண்டாண்டுகளுக்கு மேற்பட்ட பட்டு ரகங்களும் 10% மற்றும் 20% சிறப்பு சங்க கழிவு அளித்து விற்பனை செய்யவும், பருத்தி ரகங்களுக்கு 5% சிறப்பு சங்க கழிவு அளித்து விற்பனை செய்யவும் அனுமதி வழங்கியுள்ள நிலையில், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சரக்கு இருப்பு விற்பனை செய்யப்பட்டு சங்கங்களின் நிதிநிலை சீராகவுள்ளது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இருப்பாக உள்ள பட்டு மற்றும் பருத்தி ரக கைத்தறித் துணிகளை ரூ.16.00 கோடி அளவிற்கு, உடன் நிவாரண கொள்முதல் செய்வதற்கு கோ.-ஆப்டெக்ஸ் நிறுவனம் அனைத்து நடவடிக்கைகளும் எடுத்து வருகிறது. மேலும், வரும்

மாதங்களில், கணிசமான கொள்முதல் மேற்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் எடுக்கப்படும்.

மேலும், ஏப்ரல், மே 1998 திங்களில் மாவட்ட அளவிலான அகில இந்திய கைத்தறிக் கண்காட்சி நடத்துவதன் மூலம், கைத்தறித் துணி விற்பனையை அதிகரிக்கச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கைத்தறி விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு, கோ-ஆப்டெக்ஸ் வளாகத்தில் ஒரு விற்பனை வளாகம் அமைக்கப்பட்டு, அவ்வளாகம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 27-10-1997 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இவ்வளாகத்தில், 38 பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால், 34 காட்சியறைகளிலும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால், 3 அங்காடிகளிலும், சாதாரண துண்டு முதல் விலையுயர்ந்த பட்டு சேலைகள் வரை அனைத்துக் கைத்தறி ரகங்களும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மேலும், சென்னையில் அண்ணா நகர், அண்ணா சாலை ஆகிய இடங்களிலும், கோவை, மதுரை, தருமபுரி மற்றும் பாண்டிச்சேரி ஆகிய முக்கிய நகரங்களிலும் கைத்தறி விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு விற்பனை நடந்து வருகிறது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பளித்து ஊதியம் பெறுவதற்கு அரசு உடனுக்குடன் தக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

1998-99-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை சட்டமன்றத்தில் தாக்கல் செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, கைத்தறி நெசவாளர்களின் பிரசினைகளை ஆராய, அரசு அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நெசவாளர்கள் கூட்டுறவு சங்கப் பிரதிநிகள் அடங்கிய குழு ஒன்று அமைத்து அரசு ஆணை (நிலை) எண்.59. கைத்தறிகள், கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதா (டி 2) துறை, நாள் 27-3-1998-ல் ஆணையிடப்பட்டுள்ளது. முக்கியமாக, கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்ற காரணத்தால், உருவாகிய பிரச்சினைகளை ஆராய்ந்து, 1998 மே திங்கள் முதல் தேதிக்குள் அரசுக்கு அறிக்கையினை சமர்ப்பிக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

குழுவின் அறிக்கை பெறப்பட்டவுடன், அதன் மீது, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.





**44 தமிழகத்தில் உள்ள மூடப்பட்டுள்ள கூட்டுறவு நூற்பாலைகளை திறக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்தும் பல நூற்பாலைகள் மூடப்பட்டுள்ள நிலை குறித்து**

உறுப்பினர்: **திரு. சி. ஞானசேகரன்:**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி**
(கைத்தறித் துறை)

**அறிக்கை**

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் 1958 முதல் 1985 வரை 18 கூட்டுறவு நூற்பாலைகள் தொடங்கப்பட்டன. இந்த பதினெட்டு ஆலைகளிலும் 471 இலட்சம் கதிர்கள் நிறுவப்பட்டுள்ளன. இவைகளில் மொத்தமாக செலுத்தப்பட்ட முதலீடான ரூ.47.6 கோடியில், அரசு செலுத்திய தொகை ரூ.44.2 கோடி (93 விழுக்காடு) ஆகும். இந்த நூற்பாலைகளுக்கு 31-03-1997 வரை ரூ.221.3 கோடி மொத்த நட்டம் ஏற்பட்டுள்ளது. இதனால், இவ்வாலைகளின் மொத்த மூலதனப் பங்குத் தொகையும் காலியாகிவிட்டது. எல்லா கூட்டுறவு நூற்பாலைகளையும் அரசு 1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு இடருதவி நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின் கீழ் " இடருதவி நிறுவனங்களாக" அறிவித்துள்ளது. கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இந்தக் கூட்டுறவு நூற்பாலைகள் பதிவு செய்யப்பட்டு இருந்தால் அவை BIFR-இன் கீழ் கொண்டு வரப்படலாம். அனைத்து நூற்பாலைகளுக்கும் வழிவகை முன்பணமாக அரசு 1997 ஆம் ஆண்டு ரூ.12 கோடி வழங்கியது.

அறந்தாங்கியில் புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை 01-01-1985 இல் தொடங்கப்பட்டது. இதில் 25,080 கதிர்கள் நிறுவப்பட்டு செயல்பட்டு வந்தது. இந்த நூற்பாலையில் 11 நிர்வாக ஊழியர்களும் 484 தொழிலாளர்களும் பணிபுரிந்து வந்தனர். பல்வேறு காரணங்களால் துவக்கத்திலிருந்தே இந்த நூற்பாலை நட்டம் அடைந்து வந்தது. 31-3-1998 அன்றைய நிலவரப்படி இந்த நூற்பாலையின் மொத்த நட்டம் ரூ.1455.44 இலட்சம் ஆகும். நிதி நெருக்கடி காரணமாக நிதி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கடன்களை இந்த ஆலையால் செலுத்த இயலவில்லை. எனவே, நிதி நிறுவனங்கள் சார்பாக மும்பை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. நடைமுறை மூலதனமின்மை காரணமாக கச்சாப் பொருட்களை வாங்க இயலாமையால் 12-06-1994 முதல் ஒரு பகுதி தொழிலாளர்களுக்கு வேலை அளிக்க இயலவில்லை. தவிர, மத்திய கூட்டுறவு வங்கி

காசுக்கடன் வழங்கவில்லை. மேலும், வணிகவரி அதிகாரிகள் விற்பனை வரி பாக்கி தொடர்பாக ஆலைகளின் சொத்துக்களின் மீது கைப்பற்றுகை ஆணை பெற நடவடிக்கை மேற்கொண்டனர். இந்த நெருக்கடிகளினால் 21-06-1994-இல் இருந்து ஆலை இயங்காமல் போய்விட்டது.

வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை வேலூர் மாவட்டம் அரியூரில் 01-11-1965இல் நிறுவப்பட்டது. இதில் 30,240 கதிர்கள் நிறுவப்பட்டன. இந்த நூற்பாலையில் 9 தொழில்நுட்ப ஊழியர்களும், 43 நிர்வாக ஊழியர்களும், 726 தொழிலாளர்களுமாக மொத்தம் 778 பேர் பணிபுரிந்து வந்தனர். இந்நூற்பாலை நிதி நிலை பற்றாக்குறை காலத்திலேயும் தொழிலாளர்களின் நலன் மற்றும் அவர்களின் குடும்பங்களின் நலன்களில் அக்கறை கொண்டு, இந்நூற்பாலை இயங்குவதற்குத் தேவையான அத்தனை முயற்சிகளையும் மேற்கொண்டு 30-11-1997 வரை இயக்கப்பட்டது. நூற்பாலைக்கு பஞ்சு வாங்கியதால் ஏற்பட்ட கடன், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி, தொழிலாளர் காப்பீட்டுறுதித் திட்டம் மற்றும் இதர சட்ட ரீதியாக செலுத்தப்பட வேண்டிய தொகைகள் ஆகியவை சேர்த்து மொத்தம் ரூ.1726.81 இலட்சம் நூற்பாலையின் மூலம் பட்டுவாடா செய்யப்படாமல் உள்ளது. மேலும் நூற்பாலையில் நட்டம் ஏற்பட்டதால் பஞ்சு கொள்முதல் செய்யப்பட்டதற்குப் பணப் பட்டுவாடா உடனுக்குடன் செய்ய முடியவில்லை. ஆதலால் பஞ்சு கொடுப்பதற்கு எவரும் முன்வரவில்லை. மேலும், நிதி நிறுவனங்கள் வாங்கிய கடனில் நிலுவையிலுள்ள தொகை அனைத்தும் தவணை கடந்து அவைகளை உடன் செலுத்தக் கோரி நீதி மன்றங்களில் வழக்கு தொடர்ந்துள்ளனர். வணிகவரித் துறையினரும், தொழிலாளர் காப்பீட்டுறுதித் திட்ட அலுவலர்களும் தங்களது நிலுவையை உடனடியாக செலுத்த வேண்டி ஆலை இயந்திரங்களை ஜப்தி செய்துள்ளனர். அனைத்து வங்கி கணக்குகளையும் முடக்கம் செய்துள்ளனர். மேலும், மின் கட்டணம் செலுத்த இயலாத நிலையில் மின்சாரம் முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வாலை 01-12-1997 முதல் செயல்படவில்லை.

அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாடுகள் குறித்து இட்காட் நிறுவனமும், திரு. எஸ்.வி.எஸ். ராகவன் தலைமையிலான நிபுணர்கள் குழுவும் தனித்தனியாக ஆராய்ந்து அறிக்கைகள் சமர்ப்பித்தனர். அவர்களின் பரிந்துரைகள் ஒரே மாதிரியானவை. இந்த நூற்பாலைகளின் நிதி ஆதாரம், தொழில்நுட்பம் மற்றும் செயல்திறன் போன்றவற்றின் அடிப்படையில் ராகவன் குழு இந்த 18



நூற்பாலைகளையும் தரம் வாரியாக வரிசைப்படுத்தியுள்ளது. அவ்வரிசைப்படி, புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை 18-வது இடத்தையும் வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை 17-வது இடத்தையும்தான் பெற முடிந்தது. இந்த அறிக்கைகளை 18-03-1998 அன்று ஆய்வு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூடப்பட்டுள்ள இந்த இரண்டு நூற்பாலைகளையும் திறந்து நடத்த ஏற்பாடு செய்யும்படி உத்தரவிட்டுள்ளார்கள். தவிர, நூற்பாலைகளுக்குத் தேவையான உதவிகளை வழங்கிட ஒரு அலுவலர் குழுவை நியமிக்குமாறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவுக்கு இணங்க நடவடிக்கை துவக்கப்பட்டு மூடப்பட்டுள்ள நூற்பாலைகளைத் திறந்து நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**45 திருப்பத்தூரில் உள்ள வனத்துறைக்கு உட்பட்ட சந்தனமரக் கிடங்குகளில் சந்தன கட்டை எரிந்தது சம்பந்தமாக தமிழக அரசு பூரண விசாரணை நடத்த வேண்டும் என ஜனாதிபதி அண்மையில் தமிழக அரசுக்கு கடிதம் எழுதியது குறித்து**

உறுப்பினர்கள்: **திரு. இரா. தாமரைக்கனி,**
**திரு. சி. ஞானசேகரன்,**
**திரு. ப. ரங்கநாதன்,**
**திரு. பி.ஆர். சுந்தரம்**
**திரு. சொ. கருப்பசாமி**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி**
(வனம் மற்றும் அச்சுத் துறை)

**அறிக்கை**

வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரிலுள்ள கூடுதல் சந்தனமரக் கிடங்கில் 16-3-1997 பிற்பகலில் மிகப்பெரிய தீ விபத்து ஏற்பட்டது வனப்பகுதியிலிருந்து களைந்து எடுத்து வரப்பட்ட சுத்தகரிக்கப்படாத சந்தனமரங்களும், வனக்குற்ற வழக்குகளில் கைப்பற்றப்பட்ட சுத்தகரிக்கப்படாத சந்தனக் கட்டைகளும் ஆக மொத்தம் சுமார் 1,375 டன்கள் எடை அளவுள்ள சந்தன மரங்கள் இந்த தீ விபத்தில் எரிந்துபோயின. இதன் மதிப்பு ரூ.61.85 கோடியாகும். சுமார் 3300 டன்கள் எடை அளவு கொண்ட சந்தன மர வெள்ளைகளும் எரிந்து போயின. இதன் மதிப்பு சுமார் 6.60 கோடியாகும். இந்த தீ விபத்தினால் மொத்தம் ரூ.68.45 கோடி மதிப்புள்ள சந்தன மரங்களும், சந்தன வெள்ளைகளும் எரிந்து போயின.

[1998 மே 30

2. அரசு இந்த தீ விபத்து வழக்கை மாநிலக் குற்றப்புலனாய்வுக் காவல் பிரிவிடம் புலனாய்விற்கு ஒப்படைத்தது. காவல் துறையினர் புலனாய்வு செய்து அத்துறையினர் வனத்துறையினைச் சார்ந்த 7 பணியாளர்களுடன் அவர்களது இரண்டு உறவினர்களையும் கைது செய்து 29-3-1997 அன்று திருப்பத்தூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்-1ல் ஆஜர் செய்து அன்றே வேலூர் சிறையில் அவர்கள் வைக்கப்பட்டனர்.

3. அதன்பின் தமிழக அரசு இந்த தீ விபத்து குறித்து விரிவான விசாரணை செய்ய அரசாணை (நிலை) எண் 118 சுற்றுப்புறம் மற்றும் வனத் (வனம் 4) துறை, நாள் 3-4-1997-ல் ஒரு நபர் விசாரணைக் குழுவை சென்னை உயர்நீதிமன்றத்தின் அமர்வு நீதிபதி திரு. ஏ. ராமன் தலைமையில் அமைத்தது. இந்த விசாரணைக் குழு கீழ்க்கண்டவற்றை விசாரணை செய்து அறிக்கை தர கோரப்பட்டது:-

(அ) திருப்பத்தூர் கூடுதல் சந்தனமரக் கிடங்கில் 16-3-1997 அன்று மாலை 4.45 மணியளவில் ஏற்பட்ட பெரிய தீ விபத்திற்கான மூல காரணம்.

(ஆ) இந்த தீ விபத்து தவிர்த்திருக்கக் கூடிய ஒன்றா?

(இ) இந்த தீ விபத்தில் உரிய நேரத்தில் சீரிய நடவடிக்கை மேற்கொண்டு உடனடியாக தீ தடுக்கப்பட்டுள்ளதா?

(ஈ) இந்த விபத்தினை ஆய்வு செய்து அதற்கு பொறுப்பான நபர்களை கண்டறிதல்

(உ) இனிவரும் காலங்களில் இது போன்ற வனக் கிடங்குகளை தீ விபத்திலிருந்து காப்பாற்ற போதுமான வழிவகைகளைக் கூறுதல்.

இந்த விசாரணைக் குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விசாரணைக் குழுவின் பதவிக் காலம் குழு கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஜூலை 1998 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

4. அப்போதைய மாவட்ட வன அலுவலர் திரு. உபாத்யாய், முதன்மை வனத்துறைத் தலைவருக்கு அனுப்பிய அறிக்கையில் எரிந்து போன சந்தனக் கட்டை மற்றும் சந்தனவெள்ளை ஆகியவைகளின் மதிப்பு ரூ.68.45 கோடி எனத் தெரிவித்துள்ளார். "தினமலர்" செய்தித் தாளில் இது தொடர்பாக ரூ. 283 கோடி மதிப்பு என மாவட்ட வன



1998 மே 30]

அலுவலர் அரசுக்கு அறிக்கை அனுப்பினார் என்பது முற்றிலும் தவறானது.

5. தற்போது சுத்தம் செய்யப்பட்ட சந்தனக் கட்டைகள் மட்டும் மாவட்ட வன அலுவலர்களால் காப்பீடு செய்யப்படுகிறது. அனைத்து சந்தன மரங்களையும் காப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் 20-4-1998 "தினமலர்" தமிழ் நாளிதழில் சில காப்பீடு நிறுவனங்களால் எரிந்து போன கிடங்கில் உள்ள இருப்பின் மதிப்பு ரூ.1250 கோடி எனக் கூறப்பட்டுள்ளது முற்றிலும் தவறானது ஆகும்.

6. திரு. எஸ். காளஹஸ்திரி என்பவர் குடியரசு தலைவருக்கு திருப்பத்தூர் தீ விபத்துக் குறித்து மைய மாநில அரசுகளையும் அதிகாரிகளையும் குறைகூறி கடிதம் எழுதியுள்ளார். இக்கடிதம் குடியரசுத் தலைவர் அலுவலகத்திலிருந்து தமிழ்நாடு அரசுக்கு "உரிய நடவடிக்கைக்கு " எனக் குறிப்பிட்டு அனுப்பப்பட்டுள்ளது. ஏற்கெனவே, இப்பொருள் குறித்து நீதி விசாரணை நடத்தப்பட்டு வருவதால் இந்தக் கடிதம் திருப்பத்தூர் தீ விபத்து குறித்து விசாரித்து வரும் நீதிபதி திரு. ராமன் விசாரணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 46 நீலகிரி மாவட்டம் முதுமலை வனவிலங்கு சரணாலயம் அருகே உள்ள காட்டில் யானை வேட்டைக்காரர்களுக்கும் வனத் துறையினருக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சூட்டில் வனக்காவலர் ஒருவர் பலியாகியுள்ளது குறித்து

உறுப்பினர்கள்: **திரு. டி. மணி,**<br>**திரு. லா. சந்தானம்,**<br>**திரு. சி. ஞானசேகரன்**<br>**மற்றும் திரு. இரா. தாமரைக்கனி**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி**<br>(வனம் மற்றும் அச்சுத் துறை)

**அறிக்கை**

முதுமலை வன உயிரின உய்விடத்தில் சமீபத்தில் இரண்டு ஆண் யானைகள் சுட்டுக்கொள்ளப்பட்டு அவற்றின் தந்தங்கள் திருடப்பட்டுள்ளன. கண்காணிப்புப் பணி தீவிரப்படுத்தப்பட்டதில், 12-5-1998 அன்று இரவு சுமார் 8.00 மணி அளவில் முதுமலை வனச் சரணாலயப் பகுதியில் யானை வேட்டையாடும் கும்பல் நடமாட்டம்

தென்படுவதாகவும் 7.00 மணி அளவில் துப்பாக்கிக் குண்டு வெடித்த சத்தம் கேட்டதாகவும் திருட்டு வேட்டைத் தடுப்பு பணியாளர்கள் அளித்த தகவலின்பேரில் வன உயிரினக்காப்பாளர் தன்னுடன் சேர்த்து 19 வனப்பணியாளர்கள் மற்றும் 1 ஓட்டுநர் அடங்கிய 21 நபர் குழுவினருடன் 'கேம்ப் ஹெட்' பகுதிக்கு விரைந்து சென்றார். அங்கு குழுவினர் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஆறு வேட்டை தடுப்புப் பணியாளர்கள் மற்றும் ஒரு சரக குழுவினருக்கு உணவு சமைக்க நிறுத்தி வைக்கப்பட்டனர். இரவு சுமார் 12.30 மணி அளவில் ஒரு தீ எழுந்த பகுதி கண்டுபிடிக்கப்பட்டு அங்கு நான்கைந்து நபர்கள் இருப்பார்கள் என சந்தேகிக்கப்பட்டது. எனவே இப்பகுதியை அடைந்த அவர்களைப் பிடிப்பதற்குத் திட்டமிடப்பட்டு ஒரு வனச்சரகர், இரு வனவர்கள் ஒரு வனக்காப்பாளர் மற்றும் நான்கு வனக்காவலாளிகள் அடங்கிய குழு மூன்று துப்பாக்கிகளுடன் அனுப்பப்பட்டனர். இவர்களின் வருகையைக் கண்டவுடன் வேட்டைக் கும்பலைச் சேர்ந்த ஒரு நபர் குழுவினரை நோக்கித் துப்பாக்கியால் சுட்டார். இதன் பின்னர் வனச்சரகர் வானை நோக்கி இரண்டு முறை சுட்டு குழுவினரை ஆயுதங்களுடன் சரணடையுமாறு எச்சரித்தார். எனினும் வேட்டைக் கும்பலிலுள்ள நபர்கள் தொடர்ந்து வரைமுறையற்ற முறையில் சுட்டதால் குழுவினரை விரட்ட அவர்களை நோக்கி துப்பாக்கிகளால் சுடுமாறு வனச்சரகர் ஆணையிட்டுள்ளார், துப்பாக்கிகள் ஏந்திய வனச்சரகர் ஐந்து முறையும், இரு வனவர்கள் முறையே ஐந்து மற்றும் மூன்று முறையும் துப்பாக்கிக் குண்டுகளால் சுட்டுள்ளனர். வேட்டைக் கும்பல் ஓடிவிட்டனர் என்று தெரியவந்தவுடன், தங்கள் பின்னால் வலது பக்கம் இருந்த வனக்காவலாளி திரு. கே. மன்பன், இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடப்பது தெரியவந்தது. அனைத்துப் பணியாளர்களும் ஓடிவந்து அவரைச் சுயநினைவுக்குக் கொண்டுவர முயற்சித்தனர். வேறுசில பணியாளர்கள் சுற்றுப் பகுதியைத் தணிக்கையிட்டதில் நான்கு தந்தங்கள் அடங்கிய கோணி மற்றும் சமையல் பாத்திரங்கள், உணவு தயாரிக்கும் பொருட்கள், துப்பாக்கி குண்டு தயாரிக்கும் பவுடர் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டன. இரத்தக் காயங்களுடனிருந்த திரு. கே. மன்பனை கூடலூர் அரசு மருத்துவனைக்கு சிகிச்சைக்காக உடனடியாக எடுத்துச்சென்றபோது அவர் அதிகாலை 3.00 மணி அளவில் மரணமடைந்துவிட்டார் என அரசு மருத்துவர் தெரிவித்துள்ளார்.



2. சம்பவம் நடந்த பகுதியை மறுநாள் தணிக்கையிட்டதில் தீ எழுந்த பகுதி அருகே ஒரு நபர் இறந்து கிடப்பது தெரியவந்துள்ளது. அன்று வன உயிரினக்காப்பாளர், வன உயிரினம், மேற்கு மண்டலம், வனப்பாதுகாவலர், நீலகிரி வடக்கு மற்றும் கூடலூர் மாவட்ட வன அலுவலர்கள், கூடலூர் கோட்ட வருவாய் அலுவலர், நீலகிரி காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோர் இப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டு விசாரணை நடத்தித் திரும்பியுள்ளனர். அங்கு இறந்து கிடந்த நபரின் உடலும் பிணப் பரிசோதனைக்காக காவல் துறையினரால் கூடலூர் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. சம்பவம் நடந்த பகுதியில் கிடைத்த தடயங்களின்படி வேட்டைக் கும்பலைச் சேர்ந்த நபர்கள் கேரளா மாநிலத்தைச் சேர்ந்தவர்களென்றும் வீரப்பன் கும்பலுக்கும் இவர்களுக்கும் சம்பந்தமில்லை என்பதும் தெரியவருகின்றது. இச்சம்பவம் நடந்த தகவல் கிடைத்தவுடன் தலைமை வன உயிரினக்காப்பாளர் சம்பவம் நடந்த இடத்தில் 13-5-1998 மற்றும் 14-5-1998 முகாமிட்டு விசாரித்து வந்துள்ளார். துப்பாக்கிச் சூட்டில் இறந்த வனக்காவலாளி திரு கே. மன்பனுக்கு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து ரூ.2.00 இலட்சம் நிதிஉதவி கோரி கருத்துரு அரசுக்குத் தனியே அனுப்பபடுகிறது. அவரது குடும்பத்தினருக்குச் சேரவேண்டிய நிதிப் பயன்களை அளிக்க வன உயிரினக் காப்பாளரால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

3. துப்பாக்கி சூட்டில் இறந்த வனக்காவலாளி திரு. கே. மன்பனுக்கு மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.2.00 இலட்சம் நிதியுதவி கோரி முதன்மை வனத்துறைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ள கருத்துரு 19-5-1998 அன்று அரசிற்குக் கிடைக்கப்பட்டு அது தனியே பரிசீலனையில் உள்ளது.

4. பணியிலிருக்கும்போது வீரதீர செயல்களில் வீரமரணம் அடையும் காவல் துறையினருக்கு, கருணைத் தொகை ரூ.2.00 இலட்சங்கள் [அரசாணை (நிலை) எண். 845, உள் (காவல்-5) துறை, நாள்: 3-6-1997] வழங்கப்படுகிறது.

5. துப்பாக்கி சூடு நடந்த பகுதிகளில் பதட்ட நிலை தற்போது ஏதுமில்லை.

[1998 மே 30

**47 வாணியம்பாடி தொகுதி ஆலங்காயம்-காவனூர் பகுதிகளில் காட்டு யானைகள் திடீரென புகுந்து பயிர்களை நாசம் செய்வதை கட்டுப்படுத்துவது குறித்து.**

*உறுப்பினர்:* **திரு. ம. அப்துல் லத்தீப்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி**
*(வனம் மற்றும் அச்சுத் துறை)*

**அறிக்கை**

திருப்பத்தூர் வனக் கோட்டம், ஆலங்காயம் வனச்சரக எல்லைக்குட்பட்ட காவனூர் வனப்பகுதியில் நிரந்தரமாக யானைகள் வசிப்பதில்லை. சில நேரங்களில் வருகின்ற யானைகள் நன்னாமலை வழியாக காவனூர் பகுதியை அடைகின்றன. அங்குள்ள முருகன் கோவில் குளம் மற்றும் சித்தன் சிறை ஆகிய பகுதிகளில் நிரந்தர நீர்வளம் இருப்பதினால் அங்கு வருகின்றன. குறிப்பாக வனப்பகுதிக்கு உட்பட்ட வன ஏரி, குளம், கானாறு ஆகிய இடங்களில் நீர்வளம் வற்றினால் யானைகள் மேற்படி பகுதிகளுக்கு வருகிறது. அச்சமயம் ஓரிரு பட்டா நிலங்களில் பயிர்களை சேதப்படுத்தும் வாய்ப்பு உள்ளது. கடந்த 1997ஆம் ஆண்டில் காட்டு யானைகளால் ஏற்பட்ட பயிர் சேதம் குறித்து ஒரு அறிக்கை பெறப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் கடந்த ஏப்ரல் 1998 மாதத்தில் காவனூர் வனப்பகுதி மலைரெட்டிநீர் கிராமத்தில் யானைகள் பயிர்சேதம் ஏற்படுத்தியதாக சில மனுக்கள் தற்போது பெறப்பட்டுள்ளது. பயிர் சேதத்திற்கு ஈட்டுத்தொகை வழங்க அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இக்கோட்டத்தினை பொறுத்தமட்டில் இதுவரை யானைகளால் உயிர் சேதம் ஏதும் இல்லை.

2. யானைகள் ஊடுருவி வரும் பகுதிகளில் யானை கட்டுப்பாடு குழுக்கள் ஆம்பூர் மற்றும் காவனூர் பகுதிகளில் நியமிக்கப்பட்டுள்ளது. யானைகள் காட்டுப் பகுதியை விட்டு வெளியில் வரும் பட்சத்தில் பட்டாசு சத்தம் கிளப்புதல், தாரை தப்பட்டை சத்தம் கிளப்புதல், தீப்பந்தங்களை காட்டுதல் போன்ற வழிமுறைகளைக் கையாண்டு மீண்டும் காட்டுக்குள் துரத்திவிடப்படுகின்றன.

3. தற்போது 14-5-1998 முதல் யானை ஆய்வு அலுவலர் ஒருவரை திருப்பத்தூர் கோட்ட ஆலங்காயம் சரக காவனூர் வனப்பகுதிக்கு யானைகள் ஊடுருவுதல், வசித்தல் மற்றும் அவைகளின் கட்டுப்பாடு போன்றவைகளை ஆய்வு செய்ய தலைமை வன உயிரினக்



1998 மே 30]

காப்பாளரால் குழு நியமிக்கப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**48 தமிழகம் முழுவதும் உள்ள ஏரிகளில் 13 ஆண்டுகளுக்கு முன் வனத் துறையால் சமூக நல காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் நட்டு வளர்த்த கருவேல மரங்கள் ஏலம் விடப்படாமல் நிலுவையில் உள்ள நிலையில் மரங்கள் வெட்டி கடத்தப்படுவது குறித்து**

*உறுப்பினர்:* **திரு. சி. ஞானசேகரன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி**
*(வனம் மற்றும் அச்சுத் துறை)*

**அறிக்கை**

சமுதாயக் காடுகள் திட்டத்தின் கீழ் எழுப்பப்பட்ட தோட்டங்களில் சுமார் 20,000 எக்டேர் அளவுக்கு மேற்பட்ட கருவேல் மரங்கள் ஆண்டுதோறும் தமிழ்நாடு அளவில் அறுவடை செய்யப்படுகின்றன. இவ்வாறு 10 ஆண்டு சுழற்சியில், அறுவடை செய்யப்படும் முதிர்ச்சியடைந்த கருவேல் மரங்கள் மூலம் ஆண்டுதோறும் சுமார் 2 இலட்சம் மெட்ரிக் டன் விறகுகள் கிடைக்கிறது. மேலும் கிராம மக்களுக்கு இலவசமாக 20,000 டன் மதிப்புள்ள கழிவு விறகுகள் கிடைக்கிறது. இந்த சமுதாய நலக்காடுகள் பொது ஏலம் மூலம் ஆண்டுதோறும் விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் ரூ. 10 கோடி வரை வருவாய் கிடைக்கிறது. இந்த வருவாயிலிருந்து தொடர்புடைய பஞ்சாயத்துக்களுக்கு 60% பங்குத் தொகையாக ஆண்டுதோறும் சுமார் 6 கோடிக்கு மேல் வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு (1997-98) சமுதாயக் காடுகள் திட்டத்தின் கீழ் எழுப்பப்பட்ட சுமார் 29,000 எக்டேர் அளவுள்ள சுமார் 1,500 தோட்டங்கள் அறுவடைக்கு வந்துள்ளன. இவைகளில் கடந்த இரண்டு ஆண்டுகளாக விற்பனையாகாத நிலுவையிலுள்ள சுமார் 12,000 எக்டேர் பரப்புள்ள 600 தோட்டங்களும் அடங்கும்.

இந்த ஆண்டு இதுவரை சுமார் 225 தோட்டங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் அரசுக்கு சுமார் 4 கோடி வருமானம் கிடைத்திருக்கிறது. திருவண்ணாமலை, செங்கற்பட்டு, விழுப்புரம், வேலூர், திருப்பத்தூர், திருவள்ளூர், திருச்செந்தூர் ஆகிய கோட்டங்களில் பெருமளவு தோட்டங்கள் இன்னும் விற்பனை செய்யப்படாமல் உள்ளன.

[1998 மே 30

மேற்காண் தோட்டங்களில் விற்பனையாகாமல் இருக்கும் நிலுவை மரங்கள் வெட்டி கடத்தப்படுவதாக எந்தவித புகார் மனுவும் பொதுவாக இதுவரை பெறப்படவில்லை. மேலும் மாநில அளவில் பரவி இருக்கும் சமூகக் காடுகள் தோட்டங்கள் சுமார் நான்காயிரத்திற்கு மேற்பட்ட கிராம சமூக வன ஊழியர்கள் மூலம் திருட்டு வெட்டுகள் நடைபெறாவண்ணம் பாதுகாக்கப்படுகின்றன. மேலும் அவ்வப்போது வனவர்கள், வனச்சரகர்கள், ஊர் மக்களின் ஒத்துழைப்பால் மேற்காண் தோட்டங்களை பாதுகாத்து வருகின்றனர். கோட்ட வன அலுவலர், வனப்பாதுகாவலர் மற்றும் வனத்துறைத் தலைவர் போன்ற உயர் அதிகாரிகளால் திடீர் தணிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு சமுதாயக் காடுகள் திட்டத்தின் கீழ் எழுப்பப்பட்ட இந்த தோட்டங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

தமிழ்நாடு அளவில் பரவி இருக்கும் வனக் குத்தகைதாரர்கள் தங்களுக்குள் ஒன்று கூடி பேசி கீழ்க்காணும் கோரிக்கைகளின் அடிப்படையில் கடந்த அக்டோபர் 1996-லிருந்து மார்ச் 1997 வரை நடந்த பெரும்பாலான ஏலங்களில் கலந்து கொள்ளாமல் நிராகரித்தனர். இந்த ஆண்டு (1997-98) அக்டோபர் 1997-லிருந்து மார்ச் 1998 வரை மாநில அளவில் நடத்தப்பட்ட ஏலங்களில் விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், செங்கற்பட்டு, புதுக்கோட்டை, தர்மபுரி ஆகிய சமூகக் காடுகள் கோட்டங்களில் நடந்த ஏலங்களில் வனக் குத்தகைதாரர்கள் எவரும் பங்கு கொள்ளவில்லை.

வனக் குத்தகைதாரர்களின் கோரிக்கைகள் விவரம்:

1. தற்போது ரூ.100-ஆக உயர்ந்துள்ள படிவம் I-ன் விலையினை ரூ.10-ஆகக் குறைக்க வேண்டும்.

2. ஏலத்தொகை நியாய விலையைவிட அதிகமாக இருக்கும்பட்சத்தில் 15 நாட்களுக்குள் உறுதி செய்ய வேண்டும்.

3. குழு மூலம் உறுதி செய்யும் முறையை நீக்க வேண்டும்.

4. முந்தைய காலங்களில் இருந்தது போன்று வாய்தா காலத்தினை தொடர்புடைய ஆண்டின் ஆகஸ்டு மாதம் வரை நீட்டித்து ஆணை வழங்க வேண்டும்.

5. தற்போது ஏலம் உறுதி செய்யும் வரம்பினை உயர்த்த வேண்டும்.

மேற்படி கோரிக்கைகள் பற்றி வனத்துறைத் தலைவர் (சமூகக் காடுகள்) அவர்களால் ஆய்வு செய்து தக்க முடிவுகள் மேற்கொள்ளப்படும்.



1998 மே 30]

மேலும், சேலம், திருச்சி, மதுரை, செங்கற்பட்டு ஆகிய கோட்டங்களில் ஓரளவு தோட்டங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, திருச்செந்தூர், அய்யலூர் ஆகிய கோட்டங்களில் பெருமளவு தோட்டங்கள் பொது ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டன.

**49 சத்துணவு பணியாளர்களின் சம்பளத்தை உயர்த்தக்கோரி பணியாளர்கள் போராடுவது குறித்து.**

**உறுப்பினர்: திரு.சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. இ. பெரியசாமி**
**(ஊரகத்தொழில் மற்றும் பதிவுத் துறை)**

**அறிக்கை**

1997-98ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் "ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை மத்திய அரசு ஏற்றுக்கொண்ட பின்னர், அதையொட்டி மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதிய விகிதம் மாற்றி அமைக்கப்படும்போது சத்துணவு பணியாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றுவது குறித்து பரிசிலிக்கப்படும்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார். இது தொடர்பாக முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் 17-4-1998ஆம் நாளன்று அறிவிப்பு செய்துள்ளார்கள். அதன்படி:-

1. சத்துணவுத் திட்டங்கள் - ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், புரட்சித் தலைவர் எம்ஜிஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டங்களின் கீழ் பணியாற்றும் சத்துணவு அமைப்பாளர்களுக்கு ரூ.600-10-700-20-1100 என்ற ஊதிய விகிதத்தில் 1-1-1996-ல் புதிய அடிப்படை ஊதியம் மாதம் ரூ.760/- என்று நிர்ணயிக்கப்படும். இதன் மூலம் தற்போது அவர்கள் பெறும் மொத்த ஊதியம் ரூ.645/-லிருந்து இனி ரூ.928/-ஆக உயரும்.

2. சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையலர்களுக்கு 1-1-1996-ல் மதிப்பூதியம் ரூ.450-ஆக நிர்ணயிக்கப்படும். இதன் மூலம் தற்போது அவர்கள் பெறும் மொத்த ஊதியம் ரூ.280/- விருந்து இனி ரூ.490/-ஆக உயரும்.

3. சத்துணவு மையங்களில் பணியாற்றும் உதவியாளர்கள் பெறும் மதிப்பூதியம் 1-1-1996-ல் ரூ.400/-ஆக நிர்ணயிக்கப்படும் இதன் மூலம் தற்போது அவர்கள் பெறும் மொத்த ஊதியம் ரூ.240/-லிருந்து ரூ.440/-ஆக உயரும்.

4. மற்ற அரசு ஊழியர்களுக்கு ஊதிய நிலுவையை அளிப்பது பற்றிய முடிவு இவர்களுக்கும் பொருந்தும்.

5. சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையலர்களுக்கும் உதவியாளர்களுக்கும் ஓய்வு பெறும் வயது 55-லிருந்து 58-ஆக உயர்த்தப்படும்.

6. சிறப்பு சேம நலம் மற்றும் பணிக்கொடை திட்டம் (Special Provident Fund-*cum*-Gratuity Scheme) சத்துணவு ஊழியர் அனைவருக்கும் விரிவுபடுத்தப்படும். இதன் மூலம் அவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.20/- என 148 மாதங்களுக்கு சேமிக்க வேண்டும். அவர்கள் ஓய்வு பெறும்போது அவர்கள் சேமித்த தொகையுடன் அதற்கான வட்டி மற்றும் அரசின் பங்காக ரூ.5,000/- சேர்த்து வழங்கப்படும்.

மேற்கண்ட அறிவிப்புகளின்படி ஆணை வெளியிடப்படும்.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் சத்துணவுப் பணியாளர்களுக்கு சம்பளத்தை உயர்த்தக்கோரும் கோரிக்கை தொடர்பாக அரசு அறிவிப்பு செய்தபடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் அவர்கள் போராட்டத்திற்கு தற்போது அவசியம் எழவில்லை எனக் கருதப்படுகிறது.

## 50 அரசு பொருட்காட்சிகளை வேலூரில் நடத்தியதில் வந்த லாபத்தில் விதிப்படி வேலூர் நகராட்சிக்கு வழங்க வேண்டியது குறித்து

உறுப்பினர்: **திரு. சி. ஞானசேகரன்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்**
(செய்தி மற்றும் விளம்பரத் துறை)

**அறிக்கை**

அரசாணை (வாலாயம்) எண் 1159, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, நாள் 14-12-1984-ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி





நகராட்சிகளுக்குச் சொந்தமான இடங்களில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தும்போது, பொருட்காட்சி மூலம் கிடைக்கும் நிகர லாபத்தில் 50% நகராட்சிகளுக்கு அளிக்கப்படும். அதற்கு சம்பந்தப்பட்ட நகராட்சிகள் கீழ்க்கண்ட வசதிகளை இலவசமாக செய்து தரவேண்டும்.

1. மைதானம்;
2. குழாய்கள் அமைத்து குடிதண்ணீர் வசதி அமைத்தல்;
3. துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் கழிப்பிட வசதிகள்;
4. வாகனங்கள் நிறுத்த இடவசதி; மற்றும்
5. சொத்து வரி, பி.பி.ஆர். சட்டத்தின்கீழ் விதிவிலக்கு அளித்தல் முதலியவை.

பொருட்காட்சி நடத்துவதன் மூலம் நிகர லாபம் கிடைக்கவில்லையென்றால், நகராட்சிகளுக்கு ஏற்படும் செலவுகள் மட்டும் (குழாய் அமைத்து நீர் வழங்கல், துப்புரவுப் பணிகள் மற்றும் மைதான சீரமைப்புப் பணி) நகராட்சிக்கு வழங்கப்பட வேண்டும். மேலும் வேலூரைப் பொருத்தவரை அரசுப் பொருட்காட்சிகள் கோட்டை மைதானத்தில்தான் நடத்தப்பட்டன. இந்த மைதானம் மத்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த மைதானத்திற்கு தொல்பொருள் ஆய்வுத் துறை நிர்ணயம் செய்துள்ள வாடகைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டன. மேலும், வேலூரில் அரசுப் பொருட்காட்சிகள் நகராட்சிகளுக்குச் சொந்தமான இடங்களில் நடத்தப்படாத நிலையில் நகராட்சிக்கு லாபத் தொகையில் 50% வழங்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

[1998 மே 30

**51 பெருமுகை கிராமத்தில் உள்ள ஆதிதிராவிட நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டுமெனும் மக்கள் கோரிக்கை குறித்து.**

உறுப்பினர்: **திரு. சி. ஞானசேகரன்**

அமைச்சர்: **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு**
(ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை)

**அறிக்கை**

வேலூர் மாவட்டத்தில் வேலூர் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் வேலூரிலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்தில் பெருமுகை ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி அமைந்துள்ளது. பிரதான நெடுஞ்சாலை அருகிலேயே பள்ளி அமைந்துள்ளது. இப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாக 1987-88ஆம் கல்வி ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. பள்ளியின் மொத்த பரப்பு 1 ஏக்கர் 60 சென்ட், நில ஆர்ஜிதம் மூலம் வாங்கப்பட்ட இடத்தில் பள்ளி அமைந்துள்ளது. தளம் அமைந்த மூன்று கட்டடங்களில் 14 அறைகளைக் கொண்டதாகவும், ஒரு மங்களூர் ஓடு வேய்ந்த கட்டடமும் நல்ல நிலையில் உள்ளன.

2. பெருமுகை கிராமத்திற்குள்ளாகவே குடிநீர் வசதி, பாதை வசதி, கழிப்பறை வசதிகளுடன் பள்ளி அமைந்துள்ளது. மாணவிகளுக்கு மட்டும் தனியாக கழிப்பறை வசதி செய்து கொடுப்பது அவசியமாகிறது. மின் இணைப்பு நல்ல நிலையில் 30 விளக்குகளுடன் பொருத்தப்பட்டுள்ளன. விளையாடும் மைதானம் 60 சென்ட் நிலத்தில் பயன்படுத்தப்படுகிறது. தற்போது இப்பள்ளியில் ஒரு தலைமையாசிரியர், ஐந்து பட்டதாரி ஆசிரியர்கள், 6 இடைநிலை ஆசிரியர்கள், ஒரு உடற்கல்வி ஆசிரியர், ஒரு இளநிலை உதவியாளர், ஒரு தட்டச்சர், ஒரு ஆய்வக உதவியாளர் மற்றும் ஒரு துப்புரவுப் பணியாளர் பணிபுரிகின்றனர்.



1998 மே 30]

3. டிசம்பர் 1997 நிலவரப்படி பள்ளியில் பயிலும் மாணவ-மாணவியர் விவரம் பின்வருமாறு:-

| வகுப்பு | பட்டியல் இனத்தவர் | | பழங் குடியினர் | | பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் | | மிகப்பிற் படுத்தப்பட்ட வகுப்பினர் | | இதர வகுப்பினர் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 6 | 27 | 21 | - | - | 7 | 17 | 10 | 8 | - | - | 44 | 46 |
| 7 | 14 | 22 | 1 | - | 8 | 13 | 9 | 7 | - | - | 32 | 42 |
| 8 | 18 | 13 | - | - | 15 | 12 | 1 | 3 | - | - | 34 | 28 |
| 9 | 20 | 20 | - | - | 23 | 14 | 5 | 5 | - | - | 48 | 39 |
| 10 | 1 | 12 | - | - | 5 | 2 | 2 | 2 | 1 | - | 9 | 16 |
| மொத்தம் | 80 | 88 | 1 | - | 58 | 58 | 27 | 25 | 1 | - | 167 | 171 |

4. 328 மாணவர்கள் பயிலுகின்றனர். பத்தாம் வகுப்பு முடித்த பின்பு மேல்நிலைக்கல்வி பயில அலமேலுமங்காபுரம் பள்ளிக்குத்தான் வரவேண்டிய நிலையுள்ளது. குறைந்தபட்சம் மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு வரவேண்டும். இந்தப்பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கழகம் நல்லமுறையில் செயல்படுகிறது. இந்தப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்வதில் மிகவும் அக்கறை கொண்டுள்ளனர். நடப்பு நிதியாண்டில் இப்பள்ளிக்கு ரூ.5.3 இலட்சம் செலவில் அறிவியல் ஆய்வகம் கட்டுவதற்கு உத்திரவாகி தாட்கோ நிறுவனம் பணியைச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. அதனால், ஆய்வக வசதி அமைய வாய்ப்புள்ளது. மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தினால் ஒரு சில மாற்றங்களுடன் அமையவிருக்கும் இந்த ஆய்வகத்தையே பயன்படுத்தலாம் தேவையான வசதிகளைச் செய்துகொள்ளலாம்.

5. வேலூருக்கு மிகவும் அருகாமையில் உள்ளதால் பள்ளி மேன்மேலும் வளர்வதற்குத் தடையேதும் இல்லை. மேல்நிலைப் பள்ளிக்குப் போதிய நிலப்பரப்பு அவசியம். (குறைந்தபட்சம் 5 ஏக்கர்). அதனை இப்பள்ளியை பொறுத்தவரையில் தளர்த்தலாம். எனவே, தேசிய நெடுஞ்சாலையில் நல்ல நிலையில் அமைந்துள்ள கட்டடத்தில் இயங்கி வருவதால் பிற்காலத்தில் தேவையான கட்டடம் அமைத்துக் கொள்ளலாம். உயர்நிலைப் பள்ளியாக உள்ள இப்பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாக 1998-99-ம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ்

நிலை உயர்த்த இயக்குநர் பரிந்துரை செய்துள்ளதால் இப்பள்ளியை நிலை உயர்த்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**52. நரிக்குறவர்களை எஸ்.சி./எஸ்.டி. பிரிவில் சேர்க்காததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து**

*உறுப்பினர்:* **திரு. என்.ஆர். அழகராஜா**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு**
*(ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை)*

**அறிக்கை**

1. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவுகள் 341 மற்றும் 342ன்படி ஒரு மாநிலத்திலுள்ள இன மக்களின் கலாச்சாரம், பண்பாடு, தொழில், பொருளாதார நிலைமை மற்றும் வாழ்க்கை முறை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு ஆய்வு செய்து மாநில அரசின் பரிந்துரையின் பேரில் நாடாளுமன்ற இரு அவைகளிலும் மைய அரசு ஒப்புதல் பெற்று சட்டம் நிறைவேற்றிய பின்னர்தான் பட்டியல் வகுப்பு/ பழங்குடியினர் பட்டியல் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனியாக குடியரசுத் தலைவரால் வெளியிடப்படுகிறது. ஏற்கெனவே வெளியிடப்பட்ட பட்டியல் வகுப்பு/பழங்குடி பட்டியலுக்கு திருத்தமோ அல்லது சேர்க்கையோ செய்ய வேண்டுமானால் மேற்குறிப்பிட்ட நடைமுறைப்படி அமைய வேண்டும்.

2. தமிழ்நாட்டில் மிகவும் பிற்பட்ட வகுப்பில் உள்ள நரிக்குறவர் இனத்தைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டி ஏற்கெனவே 27-7-1982ல் இவ்வரசால் மைய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. பட்டியல் வகுப்பு / பழங்குடி இனப்பட்டியலின் விரிவான சேர்க்கை மற்றும் நீக்கம் குறித்த செயற்குறிப்பு மைய அரசின் கருத்திலுள்ளது எனவும், அதனை முடிவு செய்ய மேலும் சில காலம் ஆகும் என மைய அரசு பதிலளித்துள்ளது





**53. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரம் வீரப்பம்பாளையத்தில் வசிக்கும் அருந்ததிய சமுதாய மக்களுக்கு மனைப்பட்டா வழங்கப்படாமல் உள்ளது குறித்து**

*உறுப்பினர்:* **திரு. ஐ. கணேசன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு**
*(ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை)*

**அறிக்கை**

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சி வீரப்பம்பாளையத்தில் ச.நெ.68/4ஏ1 முதலிய நிலங்களில் 0.87.5 எக்டேர் நிலம் 1997-98 ஆம் ஆண்டில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. 46 குடும்பங்களுக்கு மனை வரைபடம் அங்கீகரித்து உடனடியாக வீட்டுமனை வழங்கப்படவுள்ளது. கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, வீரப்பம்பாளையம் கிராமத்தில் வீட்டுமனை வழங்கப்படவேண்டிய 500 அருந்ததிய குடும்பங்கள் இல்லை.

**54. வேலூர் கோட்டை அகழியில் சுற்றுலாத் துறை மூலம் படகு விடக்கோரி மக்கள் போராடி வருவது குறித்து**

*உறுப்பினர்:* **திரு. சி. ஞானசேகரன்**

*அமைச்சர்:* **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்**
*(சுற்றுலாத் துறை)*

**அறிக்கை**

வேலூரில் அமைந்துள்ள பழமையான கோட்டையும், கோட்டையைச் சுற்றி அமைந்துள்ள அகழியும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. மைய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறைதான் கோட்டையையும் அகழியையும் பராமரித்து வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வேலூர் கோட்டையைச் சுற்றியுள்ள அகழியில் படகு விட வேண்டும் என மக்கள் கோருவதாக குறிப்பிட்டுள்ளார்கள். படகு விடும் முயற்சிக்கு முன், கோட்டை சுவரை சரிவர வலுப்படுத்த வேண்டியுள்ளது. அகழியையும் தூர்வாரி ஆழப்படுத்த வேண்டியுள்ளது. இப்பணிகள் மத்திய அரசு தொல்பொருள் துறை ஆற்ற வேண்டிய பணிகள் ஆகும். இது குறித்து ஏற்கெனவே, தொல்பொருள் துறை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோருடன் சுற்றுலாத் துறை தொடர்பு கொண்டுள்ளது. இது குறித்து இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் தென் மண்டல கண்காணிப்பு தொல்பொருள் ஆய்வாளர் கடிதம் எழுதியுள்ளார்.

[1998 மே 30

இருந்தபோதிலும் கோட்டை பகுதியை பராமரித்து புதுமைப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு அரசு ஆணை எண் 49, செய்தி மற்றும் சுற்றுலா (சு1) துறை நாள் 20-03-1998 மூலம் ரூ.9.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் மாவட்ட ஆட்சித் தலைவரின் மேற்பார்வையில் பணி தொடரும். மத்திய தொல்பொருள் துறை எவ்வளவு விரைவாக அகழியை தூர் எடுத்து கோட்டையின் சுற்றுச் சுவர்களை வலுப்படுத்தி முடிக்கின்றார்களோ, அதன் தொடர்ச்சியாக அகழியில் தொடர்ந்து தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு சுற்றுலாத் துறை மூலம் படகு விடும் பிரேரணை குறித்து பரிசீலிக்கலாம்.

**55. வெளிநாட்டவர்கள் நமது எல்லையில் வந்து மத்திய அரசு அனுமதியுடன் மீன்பிடிப்பதால் நம்நாட்டு மீனவர்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து**

உறுப்பினர்: **டாக்டர் தே. குமாரதாஸ்**

அமைச்சர்: **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்**
(மீன் வளத் துறை)

**அறிக்கை**

1996 ஆம் ஆண்டு திரு. முராரி தலைமையில் ஒரு உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டு ஆழ்கடல் மீன்பிடிப்பைப் பற்றி ஆய்வு செய்து, அறிக்கை ஒன்றினை மத்திய அரசுக்கு சமர்ப்பித்தது. கப்பல் மூலம் ஆழ்கடல் சென்று மீன்பிடிப்பதற்கான உரிமத்தை புதுப்பித்தல், நீட்டிப்பு செய்தல், புது உரிமம் வழங்குதலை தடை செய்யுமாறு அவ்வறிக்கையில் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது. அந்த பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அதன்படி, தற்பொழுது வெளிநாட்டு மீன்பிடி கப்பல்களுக்கு புதியதாக மீன்பிடிக்க உரிமம் வழங்கப்படுவதில்லை. மேலும், ஏற்கெனவே உரிமம் வழங்கப்பட்ட இனங்களில் உரிமம் புதுப்பிக்கப்பட மாட்டாது. இந்நிலையில், வெளிநாட்டவர்கள் கப்பலில் நமது எல்லையில் மீன்பிடிக்க வாய்ப்பு ஏதுமில்லை. மத்திய அரசின் சட்டத்தை மீறி, திருட்டுத்தனமாக நமதுநாட்டு கடல் எல்லைகளில் மீன்பிடிக்கும் வெளிநாட்டவர்களை கண்காணித்து, அப்பாதகமானச் செயலை தடுக்கும்பொருட்டு, கடலோர காவல் படையினர் காவல் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். எனவே, மைய அரசு இப்பிரச்சினையை கண்காணித்து வருகிறது.

2. எனினும், மைய அரசு திட்டத்தின்கீழ் "கடல் மீன்பிடிச் சட்டத்தினை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தவேண்டி, ஐந்து



1998 மே 30]

சுற்றுக்காவல் படகுகளை கட்டுவதற்கு ரூ.119.95 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கி, 21-1-1998 நாளிட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்துறை, அரசாணை எண் 10-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டு, கட்டுமானப்பணி நடந்து வருகிறது. இப்பணி இவ்வருட இறுதியில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் சுற்றுக்காவல் படகுகள் மூலம், தமிழக மீனவர்களின் நலன் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் மீன்துறை மேற்கொள்ளும்.

3. மேலே குறிப்பிட்டுள்ளவாறு, மைய அரசும், தமிழக அரசும், நமது மீனவர்கள் நலன் பாதுகாக்க சீரியமுறையில், தகுந்த நடவடிக்கைகளையும், விழிப்பு நிலையில் கண்காணிப்பு பணிகளையும் செவ்வனே செய்து வருவதால், வெளிநாட்டவர் நம்நாட்டு எல்லைக்குள் மீன்பிடித்து, நம்நாட்டு மீனவர்களுக்கு நஷ்டம் விளைவிக்க வழி இல்லை.

**58. மன்னார் வளைகுடா கடலில் உள்ள குருசடைத் தீவில் காடு தீப்பிடித்து எரிந்துள்ளதால் அபூர்வ கடல்வாழ் இனங்கள் சேதமானது குறித்து**

உறுப்பினர்: **திரு. டி. மணி**

அமைச்சர்: **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்**
(மீன் வளத் துறை)

**அறிக்கை**

'குருசடைத் தீவு' மன்னார் வளைகுடா பகுதியில் உள்ளது. இதன் மொத்தப் பரப்பளவு 120 ஏக்கர் ஆகும். இத்தீவு 3.2 கி.மீ. நீளமும் 0.8 கி.மீ. அகலமும் கொண்டதாகும். இதன் மொத்த சுற்றளவு 5.3 கி.மீ. ஆகும்.

இத்தீவை சுற்றியுள்ள கடற்பகுதி அபூர்வமான மீன் மற்றும் கடல்வாழ் உயிரினங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இதன் அபூர்வமான நிலையினை கருத்தில்கொண்டு இத்தீவானது உயிரினங்கள் ஆராய்ச்சியாளர்களது சொர்க்கமாகக் கருதப்பட்டு வந்தது.

குருசடைத் தீவில் கடந்த 20-04-1998 அன்று இரண்டு எக்டேர் பரப்பளவு உள்ள சருகும் புல்லும் தீப்பற்றியதாக அறியப்படுகிறது. ஆயினும் இதனால் வனப்பரப்பில் உள்ள மரங்களுக்கோ அல்லது தீவைச் சுற்றியுள்ள கடல்வாழ் உயிரினங்களுக்கோ எந்தவித சேதமும் ஏற்படவில்லை. மேலும் இந்த தீவிபத்தால் அரசுக்கு ... ஏதும் ஏற்படவில்லை.

உஉ

220 158

**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.**

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.